padippakam

# கருவாச்சி காவியம்

வைரமுத்து



படிப்பகம்

padippakam

# கருவாச்சி காவியம்

வைரமுத்து

படிப்பகம்

padippakam



படிப்பகம்

padippakam



கருவாச்சி காவியம் / வைரமுத்து
உரிமை / டாக்டர் பொன்மணி வைரமுத்து

முதற் பதிப்பு / டிசம்பர் 2006
இரண்டாம் பதிப்பு / ஜனவரி 2007
மூன்றாம் பதிப்பு / பிப்ரவரி 2007
நான்காம் பதிப்பு / ஆகஸ்ட் 2008
ஐந்தாம் பதிப்பு / பிப்ரவரி 2009

விலை / ரூபாய் 250/-

விசா பப்ளிகேஷன்ஸ்
ப.எண் 55, பு.எண் 16, வெங்கட்நாராயணா ரோடு
தி.நகர், சென்னை - 17
Ph : 24342899

ஓவியங்கள் / மணியம்செல்வன்
அட்டைப்படம் / தேனி ஈஸ்வர்
அட்டை வடிவமைப்பு / ஜேக்கப்
நூல் வடிவமைப்பு / ஆர்.சி.மதிராஜ்
தொகுப்பு / ப.பாஸ்கரன்

Printed & Bound by : Eagle Press, Chennai - 600 013.

# காவியக்களம்


அரபிக்
கடல்
தமிழ்நாடு
இந்துப்பெருங்கடல்
ஸ்ரீலங்கா
தேனி மாவட்டம்
பெரியகுளம்
கும்பக்கரை
தேனி
வையைஆறு
உசிலம்பட்டி
ஆண்டிபட்டி
சுருளி
தேவாரம்
குச்சனூா
சின்னமனூர்
உத்தமபாளையம்
கம்பம்
சுருளி அருவி
மேற்குத் தொடர்ச்சி மலை
வையை ஆறு

padippakam

படிப்பகம்

padippakam

# பாயிரம்

புனையப்படாத நாவல்தான் வாழ்க்கை ; புனையப்பட்ட வாழ்க்கைதான் நாவல். கெட்டியான கண்ணீரும், பச்சை ரத்தமும், பெண்வேர்வையும் பிசுபிசுக்கும் வாழ்க்கை இது.

கருவாச்சி என்பாள் ஒரு கற்பனைப்பாத்திரம் அல்லள். கருவாச்சியின் முற்பகுதி வாழ்க்கை எங்கள் குடும்பங்களுக்குள் நிகழ்ந்த நிஜம். பிற்பகுதி வாழ்க்கை எங்கள் கிராம வெளிகளில் வெவ்வேறு பெண்கள் வெவ்வேறு காலங்களில் வாழ்ந்து தொலைத்த வாழ்க்கை.

இது வையைக்கரையில் வாழப்பட்ட சொல்லப்படாத வாழ்க்கை. வையை ஆற்றங்கரையில் மன்னர்களின் வாழ்வு பாடப் பெற்ற அளவுக்கு மக்கள் வாழ்வு பாடப்பெறவில்லை. வாளும் ஈட்டியும் பாடுபொருள் ஆனது போல் கடப்பாரையும் மண்வெட்டியும் கருப்பொருள் ஆகவில்லை.

கல்லைப்பிழிந்து கஞ்சி குடிக்க அவர்கள் உண்டாக்கிக் கொண்ட உலகத்திலேதான் இன்னும் காணக்கிடைக்கின்றன பழைய பண்பாட்டுப் படிமங்கள்.

டைக்ரிஸ் யூப்ரடிஸ் நதிக்கரைகளிலும், நைல்நதி தீரத்திலும், சிந்து சமவெளி ஆழத்திலும் வாழப்பட்ட மனித வாழ்க்கையைத் துழாவு துழாவென்று துளையிட்டுத் துருவுகின்ற ஆய்வாளர்கள் வையை ஆற்றங்கரையில் வாழப்பட்ட வாழ்க்கையை ஆவணப்படுத்தியதுண்டா? அப்படிப்பட்ட பண்பாட்டு ஆவணத்தின் கலை வடிவம்தான் கருவாச்சி காவியம்.

ஒரே பண்பாடு ஒரே நாகரிகம் மானுடப்பரப்பில் இதுவரை இல்லை. பூமிக்கெல்லாம் ஒரே பகலைச் சூரியன்கூடக் கொண்டுவர முடியவில்லை. கலாசாரக் கூறுகள் இனத்துக்கு இனம் மட்டுமல்ல இடத்துக்கு இடம்கூட வேறுபடுகின்றன.

மனிதன் இன்னொரு கிரகத்திற்கு இடம் பெயரும் முதல் முயற்சியில் இறங்கிவிட்டான் என்பதை மறந்துவிட முடியவில்லை. ஆயினும் பூமியில் ஆதிமனித வாழ்க்கை முற்றிலும் அற்றுப்போகவில்லை என்பதையும் மறைக்க முடியவில்லை.

படிப்பகம்

விலங்கு வாழ்க்கைக்கும் மனித வாழ்க்கைக்கும் இடைப் பட்ட ஒரு துயர வாழ்க்கையை எதிர்கொண்ட ஓர் இனக் குழுவின் கடைசிச் சுவடுகளை இதில் கவனத்தோடு சேகரித்திருக்கிறேன்.

இந்தக் கருவாச்சி காவியத்தைப் பொறுத்தவரையில் என்னை ஒரு படைப்பாளி என்று சொல்லிக்கொள்ளமாட்டேன். பங்காளி என்றே சொல்லுவேன்; உடனிருந்து உள்வலி உணர்ந்த பங்காளி. அந்த மண்ணைக் கரைத்துத் தன் ரத்தத்தில் ஊற்றிக் கொள்ளாதவனும், அந்த வட்டார மொழிவழக்கோடு வாழாதவனும் இந்தப் படைப்பின் ஒரு வரியைக்கூட எழுதமுடியாது.

அந்த வாழ்வுக்குள் இல்லாத எதையும் படைப்புக்குள் கொண்டுவரக்கூடாது என்பதில் குறியாய் இருந்தேன். வாழ்வின் இருப்பு வேறு, எதிர்பார்ப்பு வேறு. எதிர்பார்ப்பை இருப்புக்குள் திணிப்பது காலமயக்கம் என்ற கடுங்குற்றத்துக்கு ஆளாகிவிடும். வறண்ட நிலத்தின் ஒரு விவசாய வெளியில் நூற்றாண்டுகளாய் வாழப்பட்ட வாழ்க்கையைத் தானும் வாழ்ந்து கழித்தவள் கருவாச்சி. அவளைத் தீவிரப்படுத்துவதோ புரட்சிச்சாயம் பூசுவதோ சத்தியத்தின் கோடுகளைத் தாண்டுவதாகும். அவள் அவளாகவே வாழ்ந்திருக்கிறாள்; படைப்பாளிக்கு அதில் பங்கில்லை.

திணிக்கப்பட்ட யுத்தம்- கையில் கிடைத்த ஆயுதம்- காலம் விதித்த களம் என்ற வட்டத்தில் கருவாச்சியின் இயல்பான போராட்டம் மட்டுமே இதில் இயங்குகிறது.

அங்கே வாழ்ந்த வருடங்களிலும், இதை எழுதிய காலப்பொழுதுகளிலும் அந்த மண்ணோடும் மக்களோடும் கற்களோடும் முட்களோடும் கலந்துகிடந்த கணங்களை நினைவு தப்பும் நிமிடம்வரை நெஞ்சு மறக்காது. சில அத்தியாயங்கள் எழுதிவிட்டுத் தொடர்ந்து தூங்க முடியாமல் துடித்துத்துடித்து எழுந்துகொண்டது என் உடம்பு.

பிளந்த பித்தவெடிப்புக்குள் குறுங்கற்கள் புகுந்து உறுத்தும் குதிகாலோடு இன்றும் விறகு சுமந்தோடும் கருவாச்சிகளில் எத்தனைபேர் என் பாட்டிமார்களோ எத்தனைபேர் என் தாய்மார்களோ என்று தகித்திருக்கிறது என் மனசு.

இந்த வாழ்க்கையின் துயரங்களை நான் நியாயப்படுத்த வில்லை. நியாண்டர்தால் மனிதன் சகமனிதர்களின் மூளையை உணவாக உட்கொண்டான் என்பது மானிடவியல் குறிப்பேயன்றி நரமாமிச நியாயமல்ல. யமி என்ற பெண் யமன் என்ற தன் சகோதரனை உடல் உறவுக்கு அழைத்தாள் என்ற குறிப்பு ரிக் வேதத்தில் வருகிறது (ரிக்வேதம் X : 10). இது மனித இனம் கடந்துவந்த உறவுநிலைகளின் ஒரு கூறேயன்றி, பாவத்தின் பரிந்துரை அல்ல.

அவ்வண்ணமே கருவாச்சியின் வாழ்வியலோடு கலந்து வரும் கலாசாரத்தீர்ப்புகளும் நம்பிக்கைகளும் காலத்தின் குரலேயன்றி, கலைப்படைப்பின் கருதுகோள் அல்ல.

ஆணாதிக்க மரபிலிருந்து பெண் என்ற கருத்துரு மெல்ல மெல்ல விலகி வருகிறது. மாறிவரும் யுக சந்தியின் மையத்தில் நிற்கிறாள் பெண். இதுவரை பெண் என்ற தத்துவத்தைப் பெரும்பாலும் வடிவமைத்தது அவள் உடல்தான். பெண் தன் உடலைப் பின்னிழுத்துக்கொண்டு தன் உள்ளத்தை மட்டுமே முன்னிறுத்தத் தலைப்பட்டுவிட்டால், இருநூறு முந்நூறு ஆண்டுகளில் இயற்கைக்குப் புறம்பான சில கலாசார அதிர்ச்சிகளைச் சந்திக்கக்கூடும் சமூகம்.

திருமணம் என்ற உறவுமுறை சிதைந்து, குடும்பம் என்ற நிறுவனம் உடைந்து, பெண் தன் உடல்வழியே பிள்ளைபெறும் முறை குறைந்துவிடவோ மறைந்துவிடவோ கூடும்.

இவை நேர்ந்துவிடக்கூடாது என்று சமுதாயத்தின் ஒரு கூட்டம் பிரயத்தனம் அல்லது பிரார்த்தனை செய்யலாமே தவிர, இவை நேரவே நேராது என்பதற்கு உத்தரவாதம் இல்லை.

எதிர்வரும் நூற்றாண்டுகளில் பெண்ணியம் காணவிருக்கும் மாற்றங்களுக்கான காரணங்களின் ஓர் ஆவணமாகவும் கருவாச்சி காவியம் திகழும்.

பண்பாட்டு அடையாளங்களும் ஆவணங்களும் மெல்ல மெல்லத் திரிந்தோ அழிந்தோ வருகின்றன. விரைந்த நகர்மயமும் பூமியில் விழும் எரிகல் வேகத்தில் நிகழும் உலகமயமாதலும் பழைய பண்பாட்டு அடையாளங்களைச் சுவடே இல்லாமல் துடைத்தெறியப் போகின்றன. அந்த அழிமானங்களுக்கிடையில் அவற்றைப் பாதுகாக்கும் பொறுப்பும் படைப்புகளுக்குண்டு.

கருவாச்சி என்ற ஒருத்தியின் தனிவாழ்க்கை மட்டுமன்று இந்தக் காவியம். காடை பிடிக்கப்போகிற வேடன் அடர்ந்த வனாந்தரத்துக்குள் சகல ஜீவராசிகளின் சப்தங்களையும் கேட்பது மாதிரி, இந்தப்படைப்பில் அனைத்துத்தரப்பு மனிதர்களின் குரல்களும் மாறிமாறி ஒலித்துக்கொண்டேயிருக்கின்றன.

என் கிராமப் பிரபஞ்சத்தில் என் கண்ணுக்கெட்டிய வெளிகளையெல்லாம் எழுத்துக்குள் இழுத்துவைத்தேன். எனக்குத் தெரிந்ததெல்லாம் கொஞ்சம் ; கற்றுக்கொடுத்தாள் கருவாச்சி.

பிரசவம் பற்றி ஆய்ந்து தெளிய ஆசைப்பட்டேன். இதுவரை மருத்துவத்தின் மொழியில்தானே பெரும்பாலும் பிரசவம் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், பெற்றவளின் மொழியிலல்லவா அது பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்? ஆணாகப் பிறந்ததற்காக அப்போதுதான் நொந்தேன். உழைக்கும் பெண்கள் பலரோடு பேசிப் பேசி நடுக்காட்டில் 'ஒத்தை'யில் பிள்ளைபெற்ற தாய் ஒருத்தியைக் கண்டுபிடித்தேன்.

padippakam

தனியொருத்தியாய் எப்படி அவள் பிள்ளை பெற்றாள் என்பதை மண்டியிட்டுக் காட்டினாளே அந்த மாதரசி- அழுகையே வந்துவிட்டது எனக்கு.

எழுத்தறிவில்லாத தமிழர்கள் தமக்கான தொழில் நுட்பங்களைக்கூடத் தமிழ்கொண்டே இயக்கியிருக்கிறார்கள. நகை செய்யும் தொழில்நுட்பம் கற்கத் தொடங்கியபோது 8 கிராம் தங்கத்தில் 1 கிராம் செம்பு கலக்கலாம் என்று தெரிந்து கொண்டேன். ஆனால், கதை நிகழும் காலகட்டத்தில் கிராம் என்ற நிறுத்தல் அளவை வழக்கில் இல்லை. ஆதலால் கிராம் என்ற அளவு எந்தச் சொல்லால் ஆளப்பட்டது என்பதை அறிந்துகொள்ள இயலவில்லை. அந்த ஒரு சொல்லுக்காக அத்தியாயத்தையே மூன்று நாட்கள் நிறுத்தி வைத்திருந்தேன். ''அப்ப ஏது 'கிராமு?' 'குண்டுமுத்து'ன்னு சொல்லுவோம்'' என்று ஒரு மூத்த பொற்கொல்லர் அறிவுறுத்திய பிறகுதான் மூச்சுவிட்டேன்.

பிறந்த பயன்களில் ஒன்று என்றே இந்தக் காவியத்தைக் கருதுகிறேன். தமிழில் சிலப்பதிகாரமும், மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள் என்று இலக்கிய வரலாறு பேசுகிறது. 'கள்ளிக்காட்டு இதிகாசம்', 'கருவாச்சி காவியம்' இரண்டும் என்னளவில் இரட்டைக் காப்பியங்கள் என்றுதான் என் இதயம் வலித்துக் கொண்டே நினைக்கின்றது.

உடல் தேய்த்து உயிர் ஊற்றி எழுதிய இந்தப் படைப்பை என் காதல்மனைவி பொன்மணிக்குக் காணிக்கை செய்கிறேன்.

*அன்புள்ள*

**வைரமுத்து**

*சென்னை*
*13 10 2006*

படிப்பகம்

padippakam



## இதய நன்றி

என்றென்றும்
என் படைப்புகளுக்குப் பக்கபலம் வழங்கும்
முத்தமிழறிஞர் முதல்வர் கலைஞர் அவர்களுக்கும்

என் படைப்புகளுக்குப் பல பக்கம் வழங்கும்
ஆனந்தவிகடன்
திரு.எஸ்.பாலசுப்பிரமணியன் அவர்களுக்கும்

படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam



# 1

"அய்யா பெரியவங்களே! ஊர்க்காரங்களே! அதாகப்பட்டது - நம்ம சடையத்தேவர் மகன் கட்டையனுக்கும் பெரியமூக்கி மக கருவாச்சிக்கும் ஒரு வெவகாரம் இருப்பதனால நாளைக்கு எட்டுப் பட்டறையும் அரசமரத்தடியில ஒண்ணுபோல வந்து கூடணும்னு நாட்டாம சாட்டச்சொல்லீருக்காக... நாட்டாம சாட்டச்சொல்லீருக்காக...'' 'கிணிமிட்டி கிணிமிட்டி கிணிமிட்டி'ங்கிற சத்தத்தோட சாட்டிக்கிட்டே போறான் தலையாரி.

படிப்பகம்

புத்துக்குள்ள இருக்கிற பாம்புக பொசுக்குன்னு தலையத்தூக்கிப் பாக்கிறமாதிரி ஊரே அண்ணாந்துபாக்குது.

''இது என்னாங்கடி கூத்து... கல்யாணமாகி வெள்ளியோட வெள்ளி எட்டு... சனி ஒம்போது... ஞாயிறு பத்து... திங்க பதினொண்ணு... பதினோரு நாளுக்குள்ளயா புருசன் பொண்டாட்டிக்குள்ள புத்தியழிஞ்சு போகும்?''

''இது பொருந்தாத சம்பந்தமப்பா. கட்டையன் கருவாச்சியக் கொண்டு கரைசேக்கவா போறான்?. ஒரே கொடத்துக்குள்ள தவளையும் பாம்பும் தண்ணி குடிக்க முடியுமா?''.

''அப்பவே எம் புத்திக்குள்ள கவுளி கத்துச்சு. சடையத்தேவன் குடும்பத்துக்கும் பெரியமூக்கி குடும்பத்துக்கும் நாப்பது வருசப் பகையாச்சே; நல்லது கெட்டதுக்கே வாரதில்லயே; தண்ணி மண்ணி பொழங்கற தில்லையே; கட்டையன் கருவாச்சி கல்யாணத்துக்குப் பெறகாவது ரெண்டு குடும்பமும் கை நனைக்கட்டுமேன்னுதான் சாதிசனமெல்லாம் நெனச்சுச்சு; சாமி என்னா நெனைக்குதுன்னு தெரியலையே!''

தண்ணிக்கெணத்துல - அரசமரத்தடியில - ஊர்மந்தையில - ஒழவுகாட்ல - இதே பேச்சாவே இருக்கு.

●

சொக்கத்தேவன்பட்டி சொக்கத்தேவன்பட்டின்னு அந்த ஊருக்குப் பேரு. அந்த ஊரு இருந்தாலும் இல்லாமப் போனாலும் இந்தியசர்க்காருக்கு ஒரு கவலையுமில்ல.

கரையான்களாக்கூடிப் புத்துகட்டிக்கிட்ட மாதிரி சனங்களாக் கூடி ஆளுக்கொரு வீடுகட்டிக்கிட்டாக. காரவீடு - கூரவீடு - ஓட்டுவீடு - தகரவீடு - குச்சுவீடு - குடுசுவீடுன்னு எண்ணி நூத்தி இருவது வீடுக.

அதுல தேவமாரு வீடு தொண்ணூறு. பத்தோ பன்னன்டோ நாயக்கமாரு வீடு. கவுண்டரு, ஆசாரி, வளவிக்காரச் செட்டியாரு வீடுக வகைக்கு ஒவ்வொண்ணு. சலவக்காரக் குடும்பம் ஒண்ணு; சவரக்காரக் குடும்பம் ஒண்ணு. ( இந்த ரெண்டு குடும்பமும் இல்லாட்டி அந்த ஊர்ல ரொம்ப மூஞ்சிக கல்யாணம் காட்சியே கண்ட்ருக்காது பாத்துக்குங்க) ஒரு கோடாங்கி வீடு; ஒரு பூசாரி வீடு. இப்படி இன்னுஞ் சில குடும்பங்க உதிரி உதிரியா. எண்ணிக்கையில ஒரு ஐந்நூறுக்குள்ள அடங்கும் ஆணும் பொண்ணும்.

ஆடுமாடுக - நாய்க - கோழிக - பன்னிகளோட, அப்பப்ப கரட்டுலருந்து எறங்கிவந்து கெடையாட்டங்குட்டியவோ கோழிக் குஞ்சவோ துண்டாத் தூக்கிட்டு ஓடிப்போற நரிகளையுஞ் சேத்தா அந்த ஊருக்கு உரியதுன்னு முந்நூறு முந்நூத்தம்பது தேறும் சீவராசிக.

அரசமரம் ஒண்ணு - புளியமரம் ஆறு - பூவரசு நாலு - புங்கமரம் ரெண்டு - வேர்ல தேனா ஊத்துனாலும் இதுக்குமேல வளர என்னாலாகாதுன்னு அஞ்சடியிலேயே நின்னுபோன குட்டிமரத்தச் சேத்து வேப்பமரம் ஒம்போது. இதுக எல்லாம் அந்த ஊருத் தலவிருட்சங்க.

கல்லப்புழிஞ்சு கஞ்சி குடிக்கிற மக்க; மானம் மரியாதிக்குப் பயந்து பொழைக்கிற சனங்க. விவசாயந்தான்; வெள்ளாமதான்; கூலி வேலதான். பல பேருக்கு ஒரே சொத்து ஒடம்புதான்.

கெணத்த வெட்டித் தண்ணி உண்டாக்கி வெவசாயம் பாக்கிற அஞ்சாறு 'பெரு'ந்தனக்காரங்களத் தவிர மத்தபடி எல்லாம் மழையக் கும்புடுற மனுசங்க.

ஊரச்சுத்தி, மேற்குத் தொடர்ச்சி மல உண்டான மிச்சத்துல பொறந்த அஞ்சாறு கரடுக. கரடுகளச் சுத்தி வறண்டு போன வங்காடுக. எல்லா ஊர்லயும் பேஞ்சு முடிச்சு இதுக்குமேல பேய எடமில்லேன்னு தெரிஞ்சா, கடைசியா அந்த ஊருக்கு மேல வந்து கைகழுவிட்டுப் போகும் மேகம். எச்சா மிச்சா மழதண்ணி பேஞ்சா சோளம், கம்பு, சாம, குருதவல்லி வெளயும். மழை, பத்தும் பத்தாத காலத்துல கல்லுப் பயறோ கானப்பயறோ தட்டாம்பயறோ மொச்சையோ வெதைக்க வேண்டியதுதான். வெளைஞ்சா வீட்டுக்கு; வெளையாட்டி சாமிக்கு.

●

கூடிருச்சு பஞ்சாயத்து.

''ஏம்ப்பா கட்டையா! கல்யாணமாப்ள கைகட்டி நிக்கிறியே! என்னா வெவகாரம்? நெஞ்சுல பூசுன சந்தன வாசன நின்ட எடத்துல நிக்கிது. ஒங் கல்யாண வீட்ல கைநனச்ச ஈரம் காயல எங்க கையில. அதுக்குள்ள என்னா ஊரக்கூட்டி ஒப்பிக்க வந்திருக்கவன்?''

''எனக்கும் எம்பொண்டாட்டி கருவாச்சிக்கும்....''

-காளமாட்டுக்குத் தொக்கம் விழுந்து தொண்டகட்ன மாதிரி கரகரன்னு ஒரு குரல்ல கட்டையன் ஆரம்பிச்சதும்... 'நிறுத்து'ன்னு சாட பண்ணிக் கையமத்துனாரு ஊர்ப்பெருசு உருமாப் பெருமாத்தேவரு.

''கட்டையா! அஞ்சேகால்ரூவா முறிவச்சுட்டு எதாருந்தாலும் பேசப்பா''

அப்பன ஒரு பார்வ பாத்தான் கட்டையன்.

கல்லுமேல குத்தவச்சு, கைக்கம்ப நாடிக்கு அ(ட)குடுத்து, தொங்குமீசயும் பார்வையும் பூமிபாக்க ஒக்காந்திருந்த சடையத்தேவர் சட்டையத்தூக்கி, இடுப்பத்தடவி வேட்டியிலிருந்த முடிச்ச ஒரு இழு இழுத்து, இருக்குற சில்லறையில காலு அர ஒண்ணுன்னு ஒவ்வொண்ணாப் பெறக்கியெடுத்து, ஒரு தடவைக்கு ரெண்டு தடவையா எண்ணி இந்தாடா மகனேன்னு எடுத்து நீட்னாரு.

அப்பன் கையில இருந்த காச வெடுக்குன்னு புடுங்கி, இடுப்புல கட்ன துண்டச் சும்மாடு மாதிரி சுருட்டி அதையும் அஞ்சே கால்ரூவாவையும் பஞ்சாயத்தார் முன்னுக்க முறிவச்சு, வேல்கம்பு ஒண்ணு மடங்காமக் கீழவிழுந்து மடங்காம எந்திரிக்கிறமாதிரி, நெட்டுக்குத்தாக் காலுக்கு விழுந்து அப்படியே எந்திரிச்சான் கட்டையன்.

வாய்க்குள்ள கிடந்த மீசயப் பெறங்கையில ஒதுக்கிக்கிட்டே சொன்னாரு நாட்டாம:

padippakam

''இப்ப ஒப்பி''

''எனக்கும் எம்பொண்டாட்டி கருவாச்சிக்கும் ஒத்துப்போகல; அத்துவிட்ருங்க.''

சல சல சலன்னு சலம்பலாயிருந்த பஞ்சாயத்துல அரவம் அடங்கிப் போச்சு. காத்துக்கும் அரசமர எலைகளுக்கும் நடக்கிற கைகலப்பத் தவிர, வேறொண்ணுஞ் சத்தமில்ல. நாட்டாம, காவக்காரன், தலையாரியோட பெருசுகளும் உக்காந்திருக்குதுக அரசமரத்துப் பிள்ளையார்கோயில் கல்திட்டுல.

காடுகரைக்கும் வெளியூருக்கும் போன ஆளுகளத்தவிர ஊரே கூடி ஒக்காந்திருக்கு தரையில துண்டுதுணி விரிச்சும் விரிக்காமலும்.

''கல்யாணமாகிப் பத்தே நாள்ல அத்துவிட்டுற அளவுக்கு என்னப்பா குத்தம் பண்ணுனா கருவாச்சி?''

''அதையும் இதையும் கேட்டு அசிங்கப்படுத்தாதீக. சிலதைச் சொல்லலாம்; சிலதைச் சொல்ல முடியாது''.

அவன் சத்தந்தான் கொஞ்சத்துக்குக்கொஞ்சம் தணிஞ்சிருக்கே தவிர உள்ள இருக்கிற மப்பு கொறையல.

அவன் சொல்லுக்குக் கீழ உண்ம இருக்குதான்னு அவனையே உத்துஉத்துப் பாக்குறாரு நாட்டாமக்காரரு.

பெறவியிலயே ஒரு தப்பான பெறவி கட்டையன்னு பேசுவாக ஊருக்குள்ள. அவன் மூஞ்சிக்குள்ளயே ஒரு உறுப்புக்கும் இன்னொரு உறுப்புக்கும் சம்பந்தம் இருக்காது; ஒண்ணுக்கொண்ணு சண்ட புடிக்கும். பளபளபளன்னு நெத்தி பாறைமாதிரி - அந்தப் பாறைக்குக் கீழ ஒடுங்கி நிக்கிற நரிமாதிரி இடுங்கி நிக்கிற கண்ணு. சின்ன மூக்கு; துவாரம் ரெண்டும் பெருசு. முருங்கமரத்துல அடபுடிச்சு நிக்கிற கம்பளிப் பூச்சிக மாதிரி மீச. அரண்மனைப் பூட்டெடுத்து அஞ்சறப் பொட்டிக்குப் பூட்ன மாதிரி சின்ன வாய்க்குப் பெரிய உதடு. பெருங்கொண்ட மண்ட. அதுல பூரான்ங்க குடும்பத்தோட உள்ள புகுந்து சுருண்டுக்கிட்டு வெளியேறவே மாட்டோம்ன்னு வெவகாரம் பண்ற மாதிரி சுருட்ட முடி.

ரொம்ப உசரமில்ல கட்டையன். அதுக்காக அவன் குட்டையனு மில்ல. கருந்தேக்கங் கட்டைய எழச்சு எழச்சுப் பண்னமாதிரி நெஞ்சுக்கூடு. எண்ணெய அப்பிக் அப்பிக் கருங்கல்லுச் செலைக்குக் கடைசியா ஒரு நெறம் வரும் பாருங்க...அந்தக் கெட்டிக்கறுப்பு கட்டையன் கறுப்பு. காதுக்குக்கீழ எடது கழுத்துல ஓணான் ஒண்ணு தலகீழாத் தொங்குற மாதிரி ஒரு தழும்பு. பதினாறு பதினேழு வயசுல திருட்டு ஆடு பங்குபிரிச்ச தகராறுல குத்துப்பட்டது.

அவன் வேட்டிய மடிச்சுக் கட்னாத்தான் விசேசம்.நடந்துபோற தூணுக காலுக ரெண்டும். அதுல கட்டுவிரியங்குட்டிக சுருண்டு கிடக்குறமாதிரி முடிச்சு முடிச்சா முண்டுகட்டிக் கெடக்கும் நரம்புக. அவன் நடந்து போனா ஊரே அத வேடிக்கபாக்கும்; நண்டான் சுண்டான் கண்டா பயந்து ஓடி ஒளிஞ்சு போகுங்க.



படிப்பகம்

padippakam

அந்த ஊர்லயே பொதுவா யாரும் சிரிக்கிறதில்ல. அதுலயும் கட்டையன் சிரிச்சு யாரும் பாத்ததில்ல. அவன் எப்பவாச்சும் சிரிச்சிருந்தாலும் அந்தச் சிரிப்ப வாங்கி வெளிய அனுப்ப வேணுங்குற வசதியில்ல மூஞ்சியில.

''பஞ்சாயத்தக் கூட்டச் சொன்னவன் நீயி. வெவகாரம் ஒப்பிக்க வேண்டியவன் நீயி. தீர விசாரிக்காம எப்பிடித் தீர்ப்புச் சொல்றது? பிரச்சனை என்னான்னு பேசப்பா சபையில''.

''அய்யா! போனாப் போகுது - பரம்பரப் பகை தீரட்டுமேன்னுதான் கருவாச்சியக் கல்யாணம் பண்ணினேன். வாழ வந்த பெறகுதான் அவ வகிசி தெரியுது. அவ கஞ்சிகாச்சிறால்ல; செவக்கி அடுப்பெரிக்கத்தெரியல. கடலெண்ண ஊத்தித் தாளிக்கச் சொன்னா வேப்பெண்ண ஊத்தி வெளாவுற. விடிஞ்சு எந்திரிக்கிறால்ல. 'மேலு வலிக்குது மேலு வலிக்குது'ன்னு பொந்துக்குள்ள போன நண்டுமாதிரி பொத்திப் பொத்திப் படுத்துக்கிறா. எத்தன நாளைக்கிப் பொம்பள இல்லாத வீட்டுல அப்பனும் மகனுமா வாசத்தெளிக்கிறது?. இவள எப்பிடி வச்சுப்பொழச்சு வாழ்றது? தீத்துவிட்டுருங்க''.

''ஏய் கட்டையா! ஆம்பள பேசற பேச்சா இதெல்லாம்? புதுசா வந்த பொம்பள இப்படியப்படி இருக்கத்தானப்பா செய்வா. அப்பன் ஆசப்பட்டுப் பண்ண சம்பந்தம்டா. கிருத்திரியம் பண்ணிக் கெடுத்துராத''. காவக்காரச் சக்கணன் கோளாறு சொன்னாரு.

''ஆசப்பட்டுக் கொண்டாந்த எங்கப்பனுக்கு இவ என்ன பண்ணா தெரியுமா? வெந்த கறியெல்லாம் அகப்பையில மோந்து அவளாத் தின்டுபிட்டு, பல்லுப்போன ஆளுக்கு இந்தா கெழவான்னு எலும்பா அள்ளிப் போட்ருக்காப்பா. உண்டா இல்லையான்னு கெழவனையே கேளுங்க''.

கைத்தடியில ஊன்டியிருந்த நாடிய எடுக்காமலேயே இங்கிட்டும் அங்கிட்டுமாத் தலைய ஆட்டி ''ஆமா ஆமா''ன்னாரு சடையத்தேவரு.

''ஏம்ப்பா சடையத்தேவா! இதுக்குமேல கறிதின்டு நீ கல்யாணமா முடிக்கப்போற? சின்னஞ்சிறுசுகளச் சேத்துவைக்கிறத விட்டுப்புட்டு அவன்கூடவே சேந்து நீயும் அருவாத்தீட்னா எப்பிடி?'' உருமாப் பெருமாத்தேவரு உண்மையிலேயே ஒரு நீதிமான். சடையத்தேவரக் கண்டிக்கிற வயசும் யோக்யதையும் இருக்கு அவருக்கு.

''சம்பந்தம் பண்ணின நானே சொல்றேன். இது சரியா வராது; முறிச்சு விட்ருங்க''. ஏற்கெனவே தொங்கிப்போன மீசையக் கீழ்மொகமாத் தடவிக்கிட்டே சத்தமாச் சொன்னாரு சடையத்தேவர்.

பிள்ளையார் கோயிலுக்குப் பிம்பக்கம் அரசமரத்து அடிமரத்த ஒட்டி, பொம்பளைக ரெண்டு மூணு பேரு குசுகுசுன்னு பேசுற சத்தமும் ஒரு பொம்பள விசும்பறதும் விட்டுவிட்டுக் கேட்டுக்கிட்டேயிருக்கு.

''ஏ ஆத்தா பெரிய மூக்கி! சடையத்தேவன் சம்பந்தகாரி... இப்படி வாம்மா. அஞ்சேகால்ரூவா முறியக்கட்டி ஒங்கதைய நீ ஒப்பி ஓம் பங்குக்கு''.

''கருவாச்சியக் கேக்காம அவ ஆத்தாளக் கேட்டா எப்பிடி?''. நியாயமான ஒரு கேள்வியப்போட்டாரு கடப்பாரக் கவுண்டரு.



படிப்பகம்

''ஆத்தாகாரியக் கேட்டுட்டு அப்பறம் கேப்போம் மகள''.

முந்தானைய எடுத்து சர்ரு புர்ருன்னு மூக்கச் சிந்தி, அத உருட்டிச் சுருட்டி அதுலயே கண்ணையும் தொடச்சுக்கிட்டு ஓரஞ்சாரம் சரிசெஞ்சு இழுத்து இறுக்கி முந்தானைய இடுப்புல சொருகி, ஆம்பள இல்லாத வீடாப் போனதுனால அண்ணன் மகன முறிவச்சுக் காலுக்கு விழுகவச்சு, கண்ணெல்லாம் கொளம்கட்ட, பேச்சுவராம நின்னா பெரியமூக்கி. முத்தி வெடிச்சுப் போன முக்காக் கெழவி; களையெடுக்கக் குனிஞ்சு குனிஞ்சு கூன் விழுந்தவ. தலைக்கு எண்ணெ தடவாம - பக்குவம்பாக்காம - சிக்குவிழுந்து சிறுத்துச் சிறுத்துப் பாதி மண்ட கழிஞ்சு போனவ.

''ஏம் பிள்ள பச்ச மண்ணுங்க. நான் கைக்குள்ளயே வச்சு வளத்த கருத்தக்கிளி. சூதுவாது என்னான்னுகூடத் தெரியாத வெவரமில்லாத வெள்ளிந்திச் சிறுக்கி. நாப்பதுவருசப் பகை அழியட்டுமேன்னுதான் கருவாச்சியக் கட்டிக் குடுத்தேன். தட்டுல வெத்தல பாக்கு வச்சுத் தகப்பனும் மகனுமா வந்தன்னைக்குத் தட்ட முடியல. பொழச்சுக்கடி ஆத்தான்னு அனுப்பிவச்சா இன்னைக்கிப் புத்திமாறி வந்திருக்கு எம்பொண்ணு. ஆனா ஒண்ணு... அத்துக்கிட்டுப்போயி இன்னொரு பொழப்புப் பொழைக்க எங்க திரேகத்துலயும் நெஞ்சுக்கூட்லயும் சக்தி இல்ல சாமி. கையெடுத்துக் கும்புடறேன். எம்பொண்ணத் தீத்து விட்றாதீக; சேத்துவைங்க''.

''இந்தக் கெட்டசாதிப் பயலக் கெஞ்சிக் கஞ்சி குடிக்காட்டி என்னா? அவன் போக்குலயே அத்துவிட்டுட்டுப் போடி. ஆம்பளைக்கு மூஞ்சியில மீசைன்னா பொம்பளைக்கு மொழங்கால்ல மீச''. பெரியமூக்கி கும்புட்டு அழுகிறதக்காணப் பொறுக்காத வைத்தியச்சி கருவாச்சியத் தாங்கிப் பிடிச்சுக்கிட்டே கத்துறா.

''ஏ கெழவி! வாயப்பொத்தி ஒக்காரு. இல்லாட்டி ஒன்னிய அஞ்சா ஆறா மடிச்சு அடுப்புல வச்சு எரிச்சுப்புடுவோம்''. கட்டையன் கையாளுக பன்னியான் பேரன், சலம்பல்பாண்டி, ஒலக்கையன் மூணு பேரும் எந்திரிச்சுக் கத்த, மொதலக்கம்பட்டியிலிருந்து வந்திருந்த பெரியமூக்கி அண்ணன் மகன்ங்க நாலுபேரும் தவ்வி எந்திரிச்சாங்க இடுப்புல சூரியத் தடவிக்கிட்டு.

''ஏலே விருதாப் பயலுகளா! அது ஆம்பளையில்லாத வீடா யிருக்கலாம். ஆனா இது ஆம்பளையில்லாத ஊரு இல்லடா; ஒக்காருங்க''. காவக்காரச் சக்கணன் ஒரு அமட்டு அமட்டவும் மொனங்கிக்கிட்டே ஒக்காந்தாங்க ரெண்டு தரப்பும்.

''ஏம்பபா... கட்டையன் வெவகாரத்த அவன் சொல்லிட்டான். அதுக்குக் கருவாச்சி என்ன மறுவார்த்த சொல்றான்னு கேக்கணுமா இல்லையா. குக்குநோவு வந்த கோழிமாதிரி பம்மிகிட்டேயிருந்தா எப்பிடி? வரச்சொல்லுங்கப்பா''.

வைத்தியச்சியும் சோட்டுக்காரி பவளமும் கைத்தாங்கலாக் கூட்டியார ஒரு மொளப்பாரி நடந்துவாரது மாதிரி வாராய்யா கருவாச்சி. ''ஒம்பொழப்பா தாயி இப்படிப் போச்சு''ன்னு ஊரே உச்சுக்கொட்டிப்பாக்குது அவள.

கருவாச்சி ஒண்ணும் ஓங்குசாங்கான உயரம் இல்ல; குட்டச்சிதான். ஆனா எட்டூரு எல்லையில அப்படி ஒரு அம்சமான பொம்பள இல்ல.

சுத்திவச்சுத் தட்டித்தட்டி ஒப்புரவு பண்ணினதுமாதிரி நெத்தி.. கார்த்திகைமாசம் சட்டியில எண்ணெய நெப்பி தீபம் போடுவமா இல்லையா அப்படி ரெண்டு கண்ணு... மினுக்கு மினுக்குன்னு. சிறுக்கி மகளுக்கு அடிச்சுவச்ச கத்தி மாதிரி செவக்கிவச்ச மூக்கு. சும்மா மதுரை மீனாச்சிக்கு இருக்கிறமாதிரி சின்ன வாயி; செப்பு உதடு. என் உடம்புக்குத் தேவையானது போக ஒரு பொட்டுச் சத எச்சா மிச்சா எங்கயுமில்ல பாத்துக்குங்க மாதிரி வழிச்சுவிட்ட தேகம்.

நெறம் கறுப்பு. கறுப்புல பல கறுப்பு இருக்கு. அட்டக்கறுப்பு; அடிச்சட்டிக் கறுப்பு; கெட்டிக்கறுப்பு; கரிக்கறுப்பு; கார்மேகக் கறுப்பு. காக்காக் கறுப்பு, குயில் கறுப்பு... இப்படி எத்தனையோ கறுப்பு. கருவாச்சி அழகுகறுப்பு; அம்சமான கறுப்பு. நவ்வாப்பழத் தோல்ல மினுமினுமினுன்னு ஒரு மின்னலடிக்குமா இல்லையா.... அப்படிக் கண்ணுக்குக் குளுச்சியா ஒரு கறுப்பு. ஆத்தா மாதிரியே கருவாச்சியும் காது வளத்தவ. லவுக்க போடாத பொம்பள; சீலையச் சுத்தி வச்ச செப்புக் கொடம்.ஒச்சம் சொல்லணும்னா ஒண்ணே ஒண்ணு சொல்லலாம். அவ கால் ரெண்டுலயும் கட்ட வெரலும் அடுத்த வெரலும் ஒண்ண ஒண்ணு தொட்டுக்கிட்டதில்ல. இந்த சென்மத்துல ஒண்ணு சேரமாட்டோம்னு ஒண்ணு வடக்கபாத்து நிக்கும்; ஒண்ணு தெக்கபாத்து நிக்கும். ரெண்டு வெரலுக்கும் மத்தியில குருவி ஒண்ணு கூடுகட்டிக் குஞ்சும் பொரிக்கலாம்.

''கல்லு மாதிரி இருந்தவ. ஒடஞ்சு உருமாறிப்போனாளப்பா. என்னபாடு படுத்துனானோ அந்த ஈனப்பய''. பஞ்சாயத்துல அவுகவுக வாய்க்குள்ளயே பேசிப் பேசி உருகுறாக.

''ஏம்மா கருவாச்சி! ஒம் புருசன் கட்டையன் ஒன்னியப்பத்தி அதுஇதுன்னு சொல்லி அத்துவிட்ருங்கங்கறான்; ஒந்தரப்பு நியாயத்த நீ சொல்லணுமா இல்லையா... சொல்லு''.

ஒரு பேச்சும் பேசல கருவாச்சி. பொல பொல பொலன்னு அழுகுறா; பூமிபாத்து நிக்கிறா. இருதயம் வெடிச்சு வார்த்த கீர்த்த வந்துருமோன்னு முந்தானையச் சுருட்டிப் பந்தாக்கி வாய்க்குள்ள வச்சு அமுக்கிக்கிர்றா.

''என்னிய ஒரு கேள்வியும் கேக்காதீங்கங்கற அர்த்தத்துல கையெடுத்துக் கும்பிட்டுக் கண்ணத் தொடச்சுக்கிர்றா''.

ஊரே அவளப்பாத்து மனசொடிஞ்சு நிக்க சடையத்தேவரும் கட்டையனும் மட்டும் அவளக் கண்டும் காணாம ஆகாய மார்க்கமா பெராந்து கிராந்து பறக்குதான்னு பெறாக்குப் பார்த்து நிக்கிறாங்க.

''சின்னக்கழுத பாவம்; புத்திமாறி நிக்கிதப்பா. பெறகு பாத்துக்கிரலாம்; பதினஞ்சுநாள் கெடு வச்சுப் பஞ்சாயத்தக் கலைங்க''.

''கெடுவெல்லாம் எதுக்குக் கெடுவு? இன்னைக்கே தீர்ப்புச் சொல்லித் தீத்துவிட்ருங்கய்யா''.

அதுவரைக்கும் பொய்யாப் பொறுமை காத்திருந்த கட்டையன் ஆகாயத்துக்கும் பூமிக்குமாத் துண்ட ஒதறி வீசிப் பெருங்கொரல்ல பேசுறான்.

''ஏலே கட்டையா. தீத்துவிடறது லேசுப்பட்டகாரியம் இல்லப்பா. ஒரு பொம்பளயத் தள்ளிவைக்க அதுக்கு உண்டான காரணம் வேணுமா இல்லையா?''

கட்டையன் தவ்வி நாலடி தள்ளிப்போயி நின்னு கையக்கால ஆட்டிக் கத்துறான்: ''இப்பச் சொல்றேன் கேட்டுக்குங்க. பொம்பளையத் தள்ளி வைக்கக் காரணந்தான வேணும். அவ பொம்பளையே இல்ல. போதுமா?''.

''பொம்பளையா அவ இல்லாமப் போய்ட்டாளா-இல்ல ஆம்பளையா நீ இல்லாமப் போய்ட்டியாடா''

மொதலக்கம்பட்டி பெரியமூக்கி வகையறா சத்தம் விடவும் கட்டையன் கையாளுக வேட்டிய மடிச்சுக்கட்டி உள்ள தவ்வவும் வாய்ச் சண்டையும், தள்ளுமுல்லும், தகராறும், கைகலப்பும், எழுதமுடியாத சொல்லுமா புழுதிகௌம்பிருச்சு அங்க.

''எம் மக பொழப்புல மண்ணு விழுந்திருச்சே''ன்னு மாரடிச்சுப் பொலம்புறா பெரியமூக்கி. ஊருக்கு வெளிய கல்லுக்குழியில கல்லொடச்சுக் கிட்டிருந்த ஆளுகளுக்கே கேக்குது அவ கொடல்குலுங்கக் கத்துற சத்தம்.

பதினஞ்சுநாள் 'கெடுவு' வச்சுக் கலஞ்சு போகுது பஞ்சாயத்து.

''இந்த ஊர்ல இருக்கவேணாம்டா சாமி''ன்னு அரசங்கௌையில அங்கங்க இருந்த பறவைக எல்லாம் பயந்து பறந்து போயி செயமங்கலம் கம்மாக்குள்ள இருக்கிற கருவேல மரத்துல 'கப்புச்சிப்பு'ன்னு அடையுதுக.



# 2

கருவாச்சியப் பொண்ணுகேட்டு வந்தன்னைக்கு சந்தேகப்பட முடியல சடையத்தேவர.

''தங்கச்சி பெரியமூக்கி! நாப்பது வருசத்துக்கப்புறம் ஒன் வீட்டு வாசப்படி மிதிக்கிறேன் தாயி. ஓம்புருசன் - என் சொந்த மச்சினன் - உசுரோட இருந்த காலத்துல உண்டான பகை நம்ம கண்ணுள்ள காலத்துலயே இல்லாமப் போகட்டும். இன்னொரு பெறவி பெறக்கப் போறமா? சொந்தபந்தம்

padippakam

இல்லேன்னு போயிருமா? ஏதோ நீஒண்ணப் பெத்துவச்சிருக்க. நான்ஒண்ணப் பெத்து வச்சிருக்கேன். சின்னஞ் சிறுசுகள ஒண்ணுசேத்து வச்சிரலாம்னு பாக்குறேன். தட்டுல வெத்தலபாக்கு வச்சுப் பழம் தேங்காயோட சடையத்தேவன் ஒனக்கு சம்பந்தியாக வந்திருக்கேன். ஏதோ காலம்போன கடைசியில கருவாச்சி கையில கஞ்சி குடிச்சுக்கிறேன். மருகிநிக்காதே... வாம்மா வந்து தட்ட வாங்கிக்க''.

கொட்டத்துல சாணி குமிச்சு அள்ளிக்கிட்டிருந்த பெரியமூக்கி சடையத்தேவரக் கண்டதும், ''யாத்தே இது யாரு''ன்னு பதறி வெளக்க மாத்தக் கீழபோட்டு, சாணிக் கைய நெஞ்சிலடிச்சு, ஓடிப்போயிக் குளுதாணியில கையக் கழுவி ''வாண்ணே''ன்னு வாய் நெறையச் சொல்லிட்டுக் ''கே''ன்னு அழுது முந்தானையில மூஞ்சிபொத்தி ஒரலக்கட்டிப்புடிச்சு ஒக்காந்துட்டா.

கோழிக்குச் சோளம் போட்டுக்கிட்டிருந்த கருவாச்சி விசுக் குன்னு உள்ள ஓடி ஒளிஞ்சு போனா.

''நல்லதுல கூடு; இல்ல பொல்லதுல கூடுன்னு நாம நல்லதுல கூடுவோம். எம் மகன் கட்டையனுக்கு ஓம் மக கருவாச்சியப் பொண்ணு கேட்டு வந்திருக்கேன். யோசிச்சு நல்ல முடிவு சொல்லு''.

சடையத்தேவர் போயிட்டாரு; தட்டும் பழமும் இருக்கு திண்ணையிலயே.

என்னத்த யோசிக்கிறது! ஆம்பளையில்லாத வீடு. ஒத்தமாடு பூட்டி ஏர் உழுகிற மாதிரி கடுசாவே கழிஞ்சு போச்சு ஏம் பொழப்பு. நாளைக்கி ஆக்கிப்போடவும் சொந்தம் வேணும்; தூக்கிப்போடவும் சொந்தம் வேணும். ஆயிரம் பகையிருந்தாலும் ஏம் புருசனுக்கு மச்சினன்தானே சடையத்தேவரு. இந்தச் சம்பந்தம் கூடி வந்தா நாப்பது வருசப் பகை தீந்ததாவுமிருக்கும்; இந்தக் கழுதையக் கரைசேத்ததாவும் இருக்கும். அவ எங்கேயோ கண்காணாத தேசத்துல வாக்கப்பட்டுக் கண்ணக் கசக்கிறதவிட உள்ளூர்லயே இருந்தா நல்லதா இல்லையா. அவளுக்கு ஒரு கஞ்சித்தண்ணின்னா நான் இருப்பேன்; எனக்கு ஒரு சுக்குத்தண்ணின்னா அவ இருப்பா. ஒண்ணுக்கொண்ணு ஆதரவு.

என்னா ஒண்ணு.. மருமகன நெனச்சாத்தான் ''கறுச் கறுச்''சுன்னு நெஞ்சுல முள்ளுக்குத்துது. நான் பொத்திப் பொத்தி வளத்த புறாக் குஞ்சுக்கு அந்தப் பெராந்துப்பய ஒத்துவருவானா? அந்தக் கோயில்மாடு கடைசிவரைக்கும் எம் மகளுக்குக் கஞ்சி ஊத்துமா? ஏதோ சாகப்போற நாளையில சடையத்தேவருக்கு நல்ல புத்தி வந்திருச்சேன்னு நாளைக்கி மாலமாத்தி மறுவீடு போனாலும் எம் பிள்ளை கடைசிவரைக்கும் அங்க ஒக்காந்து ஒல வைக்குமா?

இப்படி அதையும் இதையும் நெனச்சு நெனச்சு நெஞ்சு வீங்கிப் போனா பெரியமூக்கி. அவ நெனச்சதுல தப்பு இல்ல; அர்த்தமிருக்கு.

பெரிய மனுசியாகி நாலு வருசமானாலும் கூருபாடு கெடையாது கருவாச்சிக்கு; சூதுவாது தெரியாத அப்பிராணி. பொதுவா யாரு கிட்டயும் கலகலன்னு பேசமாட்டா. ஆனா, மரம் மட்டை - அணில் குட்டி - குயில் குஞ்சு- ஆடுமாடுககூட அவளாப் பேசிச் சிரிச்சுக்கிருவா.

நிலா - மழைன்னா உசுரு அவளுக்கு.




படிப்பகம்

padippakam

மேச்சக்காடு போனாலும் தட்டாம்பூச்சி புடிச்சு வெளையாடிக் கிட்டே ஆடுமாடுகள வெள்ளாமக் காட்டுல விட்ருவா. காவக்காரன் கிட்ட வசவுவாங்கி வகுறுவீங்கி வீடுவந்து சேருவா.

●

அவ சின்னப் பிள்ளையா இருந்த போது ஒரு சம்பவம் ஆகிப்போச்சு.

கொளம் அழியுதுன்னு இவ சோட்டுப் பிள்ளைகளோட இவளும் மீன் புடிக்கப் போறேன்னு போனா. போனவ சேறு சகதியோட பாவாடைய நெஞ்சுவரைக்கும் சுருட்டி 'என்னையும் பாரு என் அழகையும் பாரு'ன்னு பொழுசாய வீடு வந்து சேந்தா. யாத்தா! அயிர மீனு அள்ளிட்டு வந்திருக்கேன்; சாமச்சோறு ஆக்கிக் கொழம்பு வச்சுக் குடு''ன்னு பாவாடைய அவுத்துவிட்டா தரையில. வீடெல்லாம் கொட்டிக் குமிஞ்சு போச்சு. என்னான்னு வந்து எட்டிப்பாத்து நெஞ்சில அடிச்சு அடிப் பாவி மகளேன்னு அடி விட்டா பெரியமூக்கி.

''அயிரமீன் புடிக்கப்போறேன்னு ★அரட்டாவளையாப் புடிச்சுட்டு வந்திருக்கியேடி. நீ எப்பிடித்தான் பொழைக்கப் போறியோ?''

●

அப்பப் பத்துப் பதிமூணு வயசிருக்கும் கருவாச்சிக்கு. காய் முத்திக் கனியப் போறேங்கிற பருவத்துல 'ஒதப்பழமா' இருக்குமா இல்லையா... அப்படி ஒரு பருவம். ''கெணத்துமேட்லயே இருடி... எங்கேயும் போயிராத''ன்னு ஒரு சோளக்கருதையும் ஒடிச்சுத் தின்னக் குடுத்திட்டு காஞ்ச கத்தாழ வெட்டக் கரட்டுக்குப் போயிட்டா பெரிய மூக்கி. வந்துபாத்தா கல்லுமூக்கன் மடியில ஒக்காந்து அவன் நரைச்சுப் போன தொங்குமீசையில சடைபின்னிக்கிட்டிருக்கா. அந்த எடுபட்ட அரைக்கெழவன் அவள மடியில வச்சு இங்குட்டும் அங்குட்டுமா இழுகிக்கிட்டிக்கான்; இவ சோளக்கருது ஒரு கையிலயும் அவன் மீச ஒரு கையிலயுமா வெவரமறியாம வெளையாடிக் கிட்டிருக்கா. ''ஏ நாயே! எடுபட்ட நாயே! நீயெல்லாம் ஒரு மனுசனா''ன்னு கத்தாழ மட்டைய எடுத்து வெரட்டுனவதான். ஓடியே போச்சு அந்த ஓநாயி. கெழவன ஆத்தா ஏன் வஞ்சா எதுக்கு வஞ்சான்னு இன்னக்கித் தேதிவரைக்கும் தெரியாது அந்தச் சின்னக் கழுதைக்கு .

●

மழைபேஞ்சாப் போதும், தகர வீடு ஒழுகும். ஒழுகுற எடத்துல சருவச் சட்டிய வச்சுட்டு ஒறங்கப் போனா இவ மட்டும் ஒறங்கமாட்டா. சட்டியில வந்து விழுகிற மழைக்கும் இவளுக்குமா பேச்சு வார்த்த போயிக்கிட்டேயிருக்கும்.

''ஏ மழையே நீ பூமிக்கு வாரையில அழுகிறயா சிரிக் கிறயா''ன்னு இவ கேக்க -

''பூமியில விழுந்து ஒடைஞ்சு போறனே அத நெனச்சு அழுகுறே''ன்னு மழை சொல்ல -

''அதுக்குத்தான ஒனக்கு சருவச்சட்டி எடுத்து தொட்டி(ல்) கட்டி வச்சிருக்கேன்''னு இவ சொல்ல-

---

★ அரைத்தவளை





படிப்பகம்

padippakam

இப்படி இவ ஒண்ணு பேச, மழ ஒண்ணு பேச விடிய விடிய நிக்காது வீட்டுக்குள்ள தெருக்கூத்து.

●

இவ கதை இப்படீன்னா அவன் கதை வேற. கிருத்திரியம் புடிச்சவன்; உருட்டுப் பெரட்டுலயே வண்டி ஓட்ற வல்லாளகண்டன். யாரு பேச்சும் கேக்குறதில்ல. அப்பன் பேச்சமட்டும் ஊடமாடக் கேட்டுக்கிருவான். பொறுமை நிதானமெல்லாம் பொட்டணம் என்னா வெலன்னு கேப்பான்.

ஒரு வேப்பமரத்துல பல்லுக்குச்சி ஒடிக்கணும்னு வச்சுக்குங்க... நீங்களும் நானும் என்ன பண்ணுவோம்? எட்டுன கொப்புல ஒரு குச்சிய இணுங்குவோம்; இல்லாட்டி தாந்த கொப்புல ஒரு தவ்வுத் தவ்வி, சிக்குன குச்சிய ஒடிச்சுப் பல்லு வெளக்குவோம். இவன் அப்படியாப்பட்ட ஆளில்ல. பல்லுக்குச்சி ஒடிக்கணும்னா வேப்ப மரத்துல ஏறுவான். மேல ஒரு கெளையப் புடிச்சுக்கிட்டு கீழ இருக்கிற கெளைய நங்கு நங்குன்னு மிதிப்பான். அது சரசர சரசரன்னு முறிஞ்சு கொப்பும் கொழையுமா விழுகிறவரைக்கும் மிதிச்சுக்கிட்டே யிருப்பான். ''ஏலே! என்னடா பண்ற''ன்னு யாராச்சும் கேட்டா ''பல்லுக்குச்சி ஒடிக்கிறேன்''ம்பான். ''என்னமோ யான பல்லு வெளக்கத்தான் குச்சி ஒடிக்கிறான் போலிருக்கு''ன்னு கேட்ட ஆளுக கேட்டது தப்புன்னு போயிருவாக.

●

இவன யாராச்சும் உழுகக் கூப்பிட்டா மாட்டுக்குத்தீவனம் வாங்கணும்னு மொதநாளே காச வாங்கிக் கறிவாங்கித் தின்னுரு வான். இவன் காட்டுக்கு யாராச்சும் உழுகப் போறாகன்னு வச்சுக்குங்க ''வெளஞ்சா வீடு வந்து சேரும் ஒழவு காசு''ன்னு கடன் சொல்லி அனுப்பிருவான்.

●

ஊர்ல பன்னியடிக்கணும்னா கட்டையனத்தான் கூப்பிடுவாக.

மூணு ஆளுக வேணும் ஒரு பன்னியடிக்க. பன்னிய நின்ட மேனிக்கு நிறுத்தி முன்னங்கால் ரெண்டையும் ஒரு ஆளு - பின்னங் கால் ரெண்டையும் ஒரு ஆளு ஆக ரெண்டாளு இறுக்கிப்புடிக்க, ஒலக்கையோ கடப்பாரையோ எடுத்து இன்னோர் ஆளு கழுத்துல ஓங்கி அடிக்க அந்த அடியிலயே அர உசுரு போயிரும் பன்னிக்கு. பன்னியப் பெரட்டிப்போடணும் பெறகு. அதே மாதிரி நாலு காலையும் ரெண்டு பேரும் புடிச்சுக்கிடணும். அதே கடப்பாரை இல்லாட்டி ஒலக்கைய எடுத்து சங்குல ஒரு போடு போடணும். அடுத்த அடி விழுகணும் நெஞ்சுல. மொறு மொறு மொறுன்னு நெஞ்செலும்பு நொறுங்குற சத்தம் கேக்கும். செத்தவிடத்துல உசுரு போயிரும். தலைய அட்டத்துல தொங்கப்போட்டு அதுபாட்டுக்குக் கெடக்கும். இதுதான் பன்னியடிக்க ஊர் நாட்ல ஏற்பட்டது.

ஆனா, மூணுஆளு சேந்து கொல்ல வேண்டிய பன்னிய ஒத்த ஆளாக் கொல்லுவானய்யா கட்டையன். கட்டையன் பன்னியடிக்கப் போறான்னு தெரிஞ்சா, பொண்டு பொடுசு நண்டான் சுண்டான்னு ஊரே கூடிநிக்கும் வேடிக்கைபாக்க.



படிப்பகம்

முதல்ல பன்னியக் கட்டிக்கிருவான் கல்லுக்கால்ல. பூண் போட்ட ஒலக்கைய வாங்கிச் செலம்பு சுத்துற மாதிரி ஒரு சுத்துச் சுத்தி வருவான். பீடியப் பத்தவச்சுக்கிட்டுப் பாத்துக்கிட்டேயிருப்பான் பன்னிய. கொல்லப்போறதுக்கு முன்னால குலதெய்வத்துக்கிட்ட அருளுகிருளு கேப்பானோ என்னமோ. இவன் வசதிக்குத் தக்கன, பன்னி எப்பத் திரும்பிக் குடுக்குமோ அப்பப் போடுவானய்யா கழுத்துல ஒரு போடு; ஒரே போடுதான் போடுவான். எத்தம் பெரிய பன்னியாயிருந்தாலும் மூள கலங்கித் தலசுத்தி விழுந்திரும். அதுக்குப் பெறகுதான் நடக்கும் கட்டையன் கண்காட்சி.

அடிவாங்குன பன்னி சித்தம் தெளிஞ்சு சுதாரிக்கிறதுக்குள்ள மளார்ன்னு அதுமேல பாய்வான். பாஞ்ச வேகத்துல பொரட்டியும் போட்டுருவான் பன்னிய. தன் ரெண்டு கால் கட்ட வெரலுக்கும் பெரு வெரலுக்கும் மத்தியில பன்னியோட பின்னங்கால் ரெண்டையும் பின்னிக்கிருவான். பன்னிமேல விழுந்து இடதுகைய சங்குல போட்டு ஆனமட்டும் அழுத்திக்கிருவான். கத்தவும் முடியாம மிசுங்கவும் முடியாம பண்றதப் பண்ணிக்கன்னு கெடக்கும் பன்னி. இடுப்புல வச்சிருக்கிற சூரிய எடுப்பான் இப்ப. அள்ளையில குத்துவான் அங்கிட்டும் இங்கிட்டும். பிள்ள அழுகிறமாதிரி பெருங்கொண்ட குரலெடுத்துப் பன்னிகத்தும்; சத்தம் ஈரக்கொலைய அறுக்கும். ரத்தமா ஒழுகும்; ரத்தம் வெளியேற வெளியேற உயிரும் வெளியேறும்; செத்துப் போயிரும்.

சூரிய உருவி, அதுல மண்ண அள்ளிப் போட்டு ரத்தம் போகத் துடைச்சுஎறிஞ்சிட்டு, இடுப்புல அதச் சொருகிக்கிட்டு விலாக்கறி வீடு வந்து சேரணும்ன்னு சொல்லிட்டு உருமால அவுத்து ஒடம்பத் தொடச்சுக்கிட்டே போயிருவான் கட்டையன்.

●

இப்படியாப்பட்ட கட்டையனுக்கும் கருவாச்சிக்கும் ஏணி வச்சாலும் எட்டுமா? சொந்தம் வேணும்; ஆனா கல்யாணம் வேணாம்னு சொல்லுது ஒரு புத்தி. கல்யாணம் பண்ணாம சொந்தம் கூடுமான்னு கேக்குது இன்னொரு புத்தி.

''ஒண்ணுக்கு ரெண்டா யோசன பண்ணிக்க தாயி''ன்னு கோளாறு சொல்லுது ஒரு கூட்டம்.

''கட்டையன் மாதிரி ஒரு ஆம்பள எட்டு ஊர்லயும் உண்டுமா? கருவாச்சி போற நல்ல நேரம் கட்டையன் கொணத்தையே மாத்தலாமா இல்லையா''ங்குது இன்னொரு கூட்டம்.

இப்படியெல்லாம் யோசிச்சு யோசிச்சு மண்ட காஞ்சு போன பெரியமூக்கி, எதுக்கும் பூக்கட்டிப் போட்டுப் பாத்துடறதுன்னு முடிவெடுத்தா. சூடம் சாம்பராணி கொளுத்தி, சாமிகளயெல்லாம் கும்புட்டுக் கூப்பிட்டு ''நான் பெத்த மக நல்லகதிக்கு வரணும்னா மஞ்சப் பூவக் குடு''ன்னு வெள்ளப்பூவு, மஞ்சப்பூவு ரெண்டு பூவையும் கட்டிப்போட்டா. கருவாச்சியக் கூப்பிட்டு ''ரெண்டுல ஒண்ண எடுடீ''ன்னா. அவ காலுக்கு விழுகிறேன் சாமின்னு கதவுல ஒரு முட்டுமுட்டித் தட்டுத்தடுமாறி ஒரு பூவ எடுத்தா.

பிரிச்சுப் பாத்தா -

மஞ்சப் பூவு

padippakam

சாமி வழி விட்டுருச்சு.

கல்யாணமும் முடிஞ்சுபோச்சு.

●

பஞ்சாயத்து முடிஞ்சன்னைக்கு ராத்திரி- சாணி மொழுகுன தரையில இத்த பாய விரிச்சு, வாங்குன காலத்துலயிருந்து வண்ணாரு வீடு காணாத அழுக்குச் சமக்காளத்தப் பொத்தி, அனத்திக்கிட்டே படுத்துக்கெடக்கா கருவாச்சி. தவுடு வறுத்து, ஒத்தத் துணியில குடுத்தா சூடு தாங்க மாட்டான்னு ரெட்டத் துணியில போட்டுப்புடிச்சு அவ நெத்தியில வேது குடுத்துக்கிட்டேயிருக்கா பெரியமூக்கி.

''மஞ்சப்பூவக் காமிச்சு சாமிகூட நம்மபொழப்புல சாம்பலடிச்சிருச்சே மகளே''

பெரியமூக்கி அழுது கண்ணத் தொடைக்க, கருவாச்சி லேசாப் பெரண்டு படுக்க, சீல வெலகுன எடத்துல முதுகுத்தோலு சிவீர்ன்னு வெந்து கெடக்க ''யாத்தே! இது என்னாடி''ன்னு கத்திட்டா ஆத்தா.

●

அங்க கூட்டாளிககிட்டக் கட்டையன் சொல்லிக்கிட்டிருக்கான் கருவாச்சி முதுக வேகவச்ச கதைய. தலக்கறியில கெடந்த ஒரு பட்டமொளகாய நச்சுன்னு கடிச்சு 'நறநற'ன்னு மென்னு முழுங்கி அந்த ஒறப்பு மூளையில வேல செய்யிற போதே பட்டச் சாராயத்த இன்னொரு மண்டு மண்டிட்டுப் பழிவாங்குன சேதியச் சொல்றான் பாவி.

''கல்யாணமான ரெண்டாம் நாளு கம்பங்காட்ல வேலையிருக்கு வாடீன்னேன். குட்டியாடு மாதிரி கூடவே வந்தா. நல்ல ஏறு வெயிலு. போய்ச் சேர மத்தியானமாகிப்போச்சு. காடு கரையெல்லாம் சுத்திக் காட்டிட்டு கரிச்சாம்பாறைக்குக் கூட்டி வந்திட்டேன். உச்சி வெயிலு. சும்மா கொதிக்குது பாறை. அரிசியை எறிஞ்சாப் பொரியாப் போயிரும்... அம்புட்டுச்சூடு. 'படுடீ'ன்னேன். 'வெந்துபோற வெயில்லயா மாமா'ன்னு கேட்டா. 'எல்லாம் ஒரு சாஸ்திரம் தாண்டி'ன்னேன்; 'சரி'ன்னு முந்தானைய விரிச்சுப் படுத்தா. அதையும் உருவி எறிஞ்சேன். 'முடிஞ்சு'பாத்தா வெந்துகெடக்கு அவ முதுகுத்தோலு''.

''மகன்டா.. என் மகன்டா''ன்னு மெச்சுப் போனாரு சடையத் தேவரு பல்லில்லாத வாயில வேகாத கறிய மெல்லத் தெரியாம மென்டுக்கிட்டு.

●

''அடிப் பாதகத்தி மகளே! கையில என்னாடி காயம்? ரம்பத்தைக் கொண்டு அறுத்த மாதிரி''.

''ஒண்ணுங் கேக்காதே''ன்னு 'ஓ'ன்னு அழுகுறா கருவாச்சி. ஓடத்தண்ணியா ஓடுது கண்ணீரு. கண்ணத் தொடைக்கப்போனா, கண்ணீர்விழுந்து எரியுது காயம்.

●

சுதியில கூடி, கட்டையன் கத சொல்றான் அங்க.

''மூணாம் நாளு கஞ்சி காச்சிக் கொண்டாடின்னு சொல்லிட்டு ஒத்த ஏரா உழுகப் போயிட்டேன் தெக்குத் தோட்டத்துக்கு. முதுகு வெந்து போனவ



படிப்பகம்

முக்கி முக்கி வர்றா கஞ்சி எடுத்துக்கிட்டு. ''எங்கிட்டும் போயி மேயிங்கடீ''ன்னு ஏர்மாட்டக் கழத்திவிட்டுட்டு நானா ஒக்காந்திருக்கேன் கெணத்துமேட்ல. அவ கிட்டவரவும் நான் ஒரே தவ்வாத் தவ்வித் தூக்குவாளியப் புடுங்கித் தூர எறிஞ்சுட்டு அவள உச்சுனாப்புல தூக்கி இடுப்புல இடுக்கிக்கிட்டு கமலையில தொங்கிக்கிட்டிருந்த வால்கயித்தப் புடிச்சுக்கிட்டே சரசரசரசரசரன்னு கெணத்துக்குள்ள எறங்கி சால்ல நிக்கிறேன். பயந்து கத்துன சிறுக்கி என்னையும் விடல; வால்கயித்தயும் விடல. வால்கயிறு புதுக்கயிறு... பிரிஒண்ணும் தேயல. முள்ளுமுள்ளாருக்கு. அவ கையிவேற பஞ்சுக் கையா... அறுத்து விட்ருச்சு அறுத்து. தண்ணிக்குள்ளயே அது இதெல்லாம் முடிச்சுக் கடைசியில அவ கையப்பாத்தா உள்ளங்கை ரெண்டும் மருதாணி வச்சமாதிரி கொதகொதன்னு கெடக்கு. அன்னைக்கி அழுகவிட்ருக்கேன் பாரு... மேட்லயிருந்து எங்கப்பன் சடையத்தேவன் கேட்ருக்கணும்...''

''பரம்பரைக்குண்டான பழிதீத்தடா மகனே. இனிமே நான் நல்ல சாவு சாவேன்''.- ஒரு கையால நீவி, தொங்குற மீசையைத் தூக்கி விட்டாரு சடையத்தேவரு. என் இடம் இதுதான்னு அது இருந்த எடத்துக்கே வந்து சேந்திருச்சு.

●

''முதுகுவெந்து கையுங்கிழிஞ்சு பொழப்பழிஞ்சு வந்து நிக்கிற பாதகத்தி. இம்புட்டுத்தான் நீ பட்ட காயமா? இல்ல வேறெங்கயும் தேகங்கிழிஞ்சு வந்திருக்கியாடீ? எங்க ஒந் துணிய வெலக்கு''ன்னு சொன்ன பெரியமூக்கி கருவாச்சி கட்டியிருந்த சீலய ''இழுஇழு''ன்னு இழுக்கிறா.

''யாத்தே விட்ரு! யாத்தே விட்ரு''ன்னு ரெண்டு தொடைக்கும் மத்தியில சீலயச் சுத்திச் சிக்கவச்சுக்கிட்டு உருவவிடாம மொரண்டு புடிக்கிறா கருவாச்சி.

''பெத்தவ பாக்காத பிறந்தமேனியா''ன்னு கத்திக் கதறிக் கிட்டே ஒரே உருவா உருவி எறியிறா சீலய.

''யாத்தே யாத்தே''ன்னு கெஞ்சிக் கூத்தாடி தன் ரெண்டுகையும் எடுத்துப் பிஞ்சு மார்பு பொத்தி, ஒண்ணுசேத்து மடிச்ச முழங்கால் ரெண்டையும் தூக்கி வயித்துல குத்தி, ஒரு பொம்பளப் பொட்டணமாச் சுருண்டு முண்டமாக் கெடந்தவள- தீபத்த எடுத்துத் திரியத் தூண்டி விட்டுப்பாத்தா- அவ தேகத்துல முள்ளு. அடித்தொடையில... கெண்டைக்கால் சதையில...இடுப்புல... பின்பக்கம் பிருஷ்ட பாகத்துல... ஒடிஞ்சமுள்ளு, ஒடியாதமுள்ளு, சின்னமுள்ளு, சில்லி முள்ளு. அவ கருத்தத்தோலு பொட்டுப் பொட்டா ரத்தங்கட்டிக் கெடக்கு.

''இந்தக் கொடுமையும் உண்டுமா''ன்னு கத்திக் குமுச்சு நெஞ்சுக் கூடு வத்திப்போன பெரியமூக்கி பொட்டுத்துணிகூட இல்லாமக் கெடந்த மகள மடியில தூக்கிப்போட்டு, ''நாம பெத்த செல்லம் ஓம் பொழப்பு இப்படியா ஆகணும்னு'' மதில்ல மண்டையமுட்டி அய்யோ அய்யோன்னு அழுகிறா. அப்பவும் ஒரு பேச்சும் பேசல கருவாச்சி.

●

padippakam

முள்ளுத்தச்ச கதையக் கட்டையன் சொல்லிப் பூரிச்சுப் போறான் பூரிச்சு.

''முந்தா நாளு... அதாண்டா பஞ்சாயத்துக்கு மொத நாளு 'ஒடம்பெல்லாம் புண்ணாக்கெடக்கு வலிக்குது மாமான்னு கெணத்துக்குள்ள விழுந்த குருவிக் குஞ்சுமாதிரி குறுகிக்கெடந்தா. 'வாடிபிள்ளா வைக்கப்படப்புல ஒரு வைத்தியம் இருக்கு'ன்னு கூட்டிட்டுப் போயிட்டேன். அங்கதான் அவள வேலி முள்ளுக்குள்ள தள்ளி 'வெவகாரத்த முடிச்சேன். விடியவும் தரதரன்னு இழுத்துக்கிட்டே போயி அவ வீட்டு வாசல்ல விட்டுட்டு 'ஒத்துவராதுடீ... ஒஞ்சதடீ ஆத்தா ஒனக்கும் எனக்கும் உள்ள ஒறவு'ன்னு அவ மேலய ஒரு துப்பும் துப்பிட்டுத் திரும்பப் பாக்காமத் திரும்பிட்டேன். கத்துறா; கதர்றா. காது கேக்காத மாதிரி வந்துட்டேன்.''

மகன் சொல்லி முடிச்சதும் சாமியாடிக்கு அருள்வந்ததுமாதிரி சத்தம்விட்டாரு சடையத்தேவரு. ''நாப்பது வருசத்துக்கு முன்ன எங்க வீட்டுப் பொண்ணு கத்துனாளே... எப்பிடி இருந்திருக்கும்? எங்க வம்ச வெளக்கு கையெடுத்துக் கும்பிட்டு விட்ருன்னு கதறினாளே... அது எப்பிடி இருந்திருக்கும்?. மகனே! நான் எதுக்கு உசுரக் கையில பிடிச்சு ஒக்காந்திருந்தனோ அது நடந்து போச்சுடா. இன்னிக்குத்தாண்டா நான் குடிக்கிறது கஞ்சி''.

●

பஞ்சாயத்து முடிஞ்சு எட்டு நாளாச்சு. சிறுகச் சிறுக வைத்தியம் பாத்துப் பிள்ளையத் தேத்தி வாரா பெரியமூக்கி.

அவ ஒடம்புல ஒவ்வொரு முள்ளா எடுத்து, முதுகுக்கு வேது வச்சு, உள்ளங்கையில மஞ்சப் பத்துப் போட்டு, வெந்நீர்ல முக்குன துணியப் புழிஞ்சு ஒடம்பு தொடச்சு, தலைசீவிப் பொட்டுவச்சு அவளுக்கு என்னென்ன செய்யணுமோ எல்லாம் செய்றா.

ஆனா கருவாச்சி அன்னந்தண்ணி தொடுறால்ல; வெறிச்சே பாத்துக்கிட்டிருக்கா. அவளாப் பொலம்புறா. இப்படியாகிப்போச்சே இவ பொழப்புன்னு சாதிசனங்க யாரும் விசாரிக்கவந்தா அவ கண்ணு தொறந்திருக்கு; பார்வையில 'உசுர்' இல்ல, ''புத்திமாறாட்டமாகிப் போச்சப்பா கருவாச்சிக்கு''ன்னு வந்தவளுக பொலம்பிக்கிட்டே போறாளுக. அவளாப் பேசிக்கிர்றா; பல்லக் கடிக்கிறா; திடீர்னு பாட்டுப் படிக்கிறா; 'கம்பங்காடு கம்பங்காடு'ன்னு கெனாக்கண்டவ மாதிரி பெனாத்துறா. திடீர்ன்னு ஒரு நாள் தட்டத்தூக்கி அடிச்சா. வெளக்கமாத்த எடுத்து வீசினா. சொளகு பறக்குது. ஒரே எத்தா எத்திவிட்டா ஒலக்கைய; மாராப்பப் பிச்செறிஞ்சா. முடிஞ்ச தலைய அவுத்து சாட்ட மாதிரி ஒரு சுத்துச் சுத்தவிட்டு ''என்னிய சாக்குல கட்டாத... என்னிய சாக்குல கட்டாத''ன்னு தெருவெல்லாம் கேக்குற மாதிரி கத்துறா.

''இவகொணம் இது இல்லையே, செய்வினையா... இல்ல காத்து கருப்பு வேலையக் காமிக்குதா''

பலவிதமா ஊகம் பண்ணிக் கடைசியா ஒரு முடிவுக்கு வந்து ஊரே பேசுது:

''கருவாச்சிக்குப் பேய் புடிச்சிருச்சாம்
கருவாச்சிக்குப் பேய் புடிச்சிருச்சாம்''



படிப்பகம்

padippakam

# 3



**பே**யின்னு ஒண்ணு துண்டாவா இருக்கு? இல்ல நம்ம மாதிரி கண்ணு காது மூக்கு வச்சு அங்கங்க காடு மேடு தேடி அலையுதா? அதெல்லாம் ஒண்ணுங்கெடையாது. கடவுள் மாதிரியே பேயும் மனுசனால உண்டாக்கப் பட்டது. மனசுல நல்ல மனசுதான் கடவுள்; கெட்டது பேய். கடவுளுக்கு மாதிரியே பேய்க்கும் உருவம் குடுக்கிறது அவனவன் சொந்தச்சரக்கு.

படிப்பகம்

வயித்துக்கு ஒரு செரிமான சக்தி இருக்கிறமாதிரி மனசுக்கும் ஒரு செரிமான சக்தி இருக்கு. வயிறு செரிக்கமுடியலன்னா அது வாந்தியா வந்து தொலைக்குது. மனசால செரிக்க முடியாத கவலையோ - அழுத்தமோ - வருத்தமோ பேயா சாமியா பிரமையா புத்தி மாறாட்டமா வெளியேறுது.

கிராமத்துல ரெண்டுக்கும் பண்டுதமிருக்கு. மேலு காலுக்குப் பண்டுதம் பாக்கிறவகளுக்கு வைத்தியர்ன்னு பேரு. மனசுக்குப் பண்டுதம் பாக்கிறவருக்குப் பேரு கோடாங்கி.

''ஏலே கொண்ணவாயா! புத்திமாறிப் பேய் புடிச்சுக் கெடக்காடா ஒன் சின்னத்தா. ஓடுறா ஓடு. கோடாங்கி எங்கிருந்தாலும் கூட்டியா... போ''. - பெரியமூக்கி பதறவும் பசுமாட்டுக்குக் கன்டு அவுத்துவிட்டுக்கிட்டிருந்த கொண்ணவாயன் கையிலருந்த சாட்டக்கம்போட ''தத்தக்கா பித்தக்கா''ன்னு ஒரே ஓட்டமா ஓடினான்.

நாலு வருசத்துக்கு முன்ன பத்துப் பதினோரு வயசில அந்த வீட்டுக்குப் பண்ணைக்கிருக்க வந்தவன் கொண்ணவாயன். ஆடுமாடு மேய்க்க - காடு கரையப் பாத்துக்க - கடைகண்ணிக்குப் போய்வரன்னு வந்தவன் வீட்ல ஒரு ஆளாகிப் போனான். வீட்ல உண்டான கஞ்சி.. நல்ல நாளு பொல்ல நாளைக்குத் துணிமணி... வருசத்துக்குச் சம்பளம் ரூவா அறுவது... இது பேச்சு. அந்த ரூவா அறுவதையும் பதினோராவது மாசமே வந்து பலியாக்கெடந்து, வாய்வலி வகுத்தவலின்னு வாங்கிட்டுப் போயிருவான் அவுக அப்பன்.

''கோ... கோ... கோ... கோடாங்கி... எங்க சீ... சீ... சீ... சின்னத்தாவுக்குப் பேய் புடிச்சிருச்சாம். கையோட கூட்டியாரச் சொல்லுச்சு பே.. பே... பே... பெரியத்தா''.

இருளப்பக் கோடாங்கிக்கு அந்த சில்லாவிலயே நல்ல பேரு. வருசநாட்லயிருந்து வாலாந்தூர் வரைக்கும் இருளப்பன்னாத் தெரியும் எல்லாருக்கும். அந்தாளு உடுக்குச் சத்தம் கேட்டா முனியோ பேயோ ஊர் எல்ல வரைக்கும் திரும்பப் பாக்காம ஓடிப்போகுமாம் ஓடி.

கோடாங்கி சுத்தபத்தமா இருக்கிற ஆளு; பக்தியோட தொழில் செய்ற கோடாங்கிக்கு உடுக்குன்னா உசுரு. சொவத்துல சாமி படத்துக்கு மேலதான் அதத் தொங்கவிடறது. அத அவர்தான் தொடணும்; வேறயாரும் தொடக்கூடாது. அப்படித் தப்பித்தவறி யாராச்சும் தொட்டுட்டா, பழந்தேங்கா வச்சுக் கற்பூரம் காட்டித் தீட்டுக் கழிக்காமத் தீண்டமாட்டாரு.

உடுக்குங்கிறது அவுக குடும்பத்துக்கே சாமி. ''சிவன்கிட்ட இருந்ததடா மகனே... அடுத்து இவன்கிட்ட இருக்கு''ன்னு அடிக்கொருக்கச் சொல்லுவாரு அவுகப்பன் தங்கவேல் கோடாங்கி.

இருளப்பன் மனசுக்குள்ள ஒரு ஐதீகம். உடுக்க எடுத்து ஒரு பக்கம் அடிச்சாக் கடவுளும், மறுபக்கம் அடிச்சா செத்துப்போன அவுக அப்பனும் கூடவே பேசுறதா ஒரு நெனப்பு.

இருளப்பன் உடுக்கைய உசுரா நெனக்கிறதுக்கு இன்னொரு காரணமும் இருக்கு. இந்த உடுக்க அவுக அப்பனே செஞ்சது. இவரு பத்துவயசுப் பயலா இருக்கிறப்பக் கூடவேயிருந்து பாத்தது.

padippakam

மரங்கள்ல வேங்கு, வெள்ளெருக்கு, மஞ்சனத்தி, பலா நால்ல ஒண்ணுதான் நல்லது உடுக்குச் செய்ய. வெண்கலத்துலயும் செய்வாக. அதுல சத்தம் கூட நல்லாத்தான் இருக்கும். ஆனா நாதம் அள்ளி எறியறதுல வெள்ளெருக்கங்கட்ட மாதிரி வேறொண்ணும் வராது.

வெள்ளெருக்கங்கட்டைய ஒரே கட்டையா வாங்கி, ஒரே கடைசலாக் கடைஞ்செடுத்தாரு கோடாங்கி. ஒருபக்கம் சந்திர வளையமாம்; மறுபக்கம் சூரிய வளையமாம்.

வளையங்கள மூட இப்ப சவ்வு வேணும். மாடு உரிக்கிற மந்தைக்குப் பொழுது விடியப் போயிட்டாரு தங்கவேல் கோடாங்கி. மாட்டுப் பெருங்குடல வாங்குனாரு. அதுல ஒட்டியிருந்த கறிய மட்டும் சுரண்டி எறிஞ்சிட்டு வெறும் சவ்வா வாங்கிட்டு வந்தாரு. வெது வெதுங்கிற வெந்நியில முக்கி ஊறவச்சு அதுல ஒட்டியிருந்த பிசுற எடுத்துத் துண்டாத் தூர எறியவும், கண்ணாடி மாதிரி பளபளபளன்னு மின்னுது சவ்வு.

ஊறப் போட்ட புளியங்கொட்டைய ஆட்டொரல்லபோட்டு, ''ஆட்றா மகனே''ன்னாரு. இருளப்பனுக்கு ஆட்டத் தெரியல. பள்ளிக்கூடம் பிடிக்காத பய ஓடி ஓடி வந்திற்ற மாதிரி குழியவிட்டு எந்திரிச்சு எந்திரிச்சு வந்துருது கொழவி.

''எந்திர்''றான்னு அவன ஒரே எத்தா எத்தித் தள்ளிட்டு அவரே ஒக்கார்றாரு. சும்மா மழு மழு மழுன்னு புளியவெதைய அரைச்சு, மண்சட்டியில வழிச்சுப் போட்டு, அத அடுப்புல சுடவச்சு, களிப் பதத்துல எறக்கிட்டுச் சொல்றாரு: ''இதுக்குக் கீக்கொண்டதுதாண்டா மகனே எந்தப்பசையும். திருமலநாயக்கன் தூணு ரெண்டா ஒடஞ்சு துண்டாக் கெடந்தாலும் இதைத் தடவுனா ஓடிவந்து ஒட்டிக்கிரும்டா''.

உடுக்குல பசையத்தடவி சந்திரவளையத்தையும் சூரிய வளையத்தையும் சவ்வெடுத்து மூட்டி, ரெண்டு வளையத்தையும் நூல் கயித்துல எணைச்சு எனணச்சுக் கச்சைகட்டி, ஒருபக்க உடுக்கையில குதிரைவால் ரோமங்களக் கம்பிமாதிரி இழுத்து வெறப்பாக் கண்ணிகட்டி, சுங்கம்வச்ச கடிவாளமும் சேத்து, செத்தவடம் காயவச்சு அடிச்சாரய்யா பெரிய கோடாங்கி.

சும்மா நரம்பச்சுண்டுது நாதம்; காதுவழியாக் கள்ளுக்குடிச்ச மாதிரி இருக்கு.

உடுக்கு - சாமி - அப்பன் மூணும் ஒண்ணுதான் இருளப்பக் கோடாங்கிக்கு.

தலைநெறைய உருமாக்கட்டி, நெத்திதேயப் பட்டையடிச்சு, கொழகொழன்னு சந்தனம் பூசி, அதுல ஒரு குழியும் வெட்டிக் குங்குமம் அப்பி, உத்திராட்சமால நெஞ்சுல பொரள- காவி வேட்டியும் அதுக்குமேல சரிகைத்துண்டும் கட்டி ''எங்க பொண்டு புள்ளைகளுக்கு நல்ல சொகம் குடு சாமி''ன்னு உடுக்கையைத் தொட்டுக் கும்பிட்டெடுத்து ''வாரேன் இருளப்பன் வழிவிடுங்கப்பா''ன்னு நடந்து வாராரு கோடாங்கி.



படிப்பகம்

padippakam

''கருவாச்சிக்குப் பேய் ஓட்டப் போறாகளாம்; கருவாச்சிக்குப் பேய் ஓட்டப் போறாகளாம்''. கோடாங்கி பின்னாலயே ஒரு ★அறுப்பாளு வருது.

இந்தக் கல்யாண வீடு, எழவு வீடு, காதுகுத்து வீடு, சடங்கு வீடு இங்கயெல்லாம் கண்காட்சியோட சின்னதா ஒரு பொழுதுபோக்கும் இருக்கு சனங்களுக்கு. ஒரு பொம்பளையவோ ஆம்பளையவோ இதுவரைக்கும் பாக்காத கோலத்துல பாக்கிறதுல யாருக்கும் ஒரு ஆவலாதி இருக்கத்தான் செய்யுது.

கோழிச்சண்டைக்கே கூட்டம் கூடுற ஊர்ல பேயோட்டுற வீட்ல இருக்காதா? அதுலயும் இவ சின்னவ; இப்பத்தான் கல்யாணமாகி அத்துவிடச்சொல்லிப் பஞ்சாயத்துல நின்ன பிள்ள. கூட்டத்துக்குக் கேக்கணுமா? தெருவுல- திண்ணயில- வாசல்ல- வீட்டுக்குள்ள- தொழுவுல- ஒரல்ல- சாலுமேல... முந்துனவுகளுக்கு மொத எடங்கிற கணக்குல கூடிக் குமுஞ்சு போச்சு ஆணும் பொண்ணும்.

வீட்டுக்குள்ள இருக்கிற தெறந்தவாசல்ல சாணி தொளிச்சு மொழுகி, சாக்கு பழைய துணியெல்லாம் பரப்பி அதுக்குமேல ஒரு சமுக்காளம் விரிச்சு, சூடம் கொளுத்தி, பத்தி பொருத்தி, சாம்பிராணி போட்டு, குங்குமம் சந்தனம் மல்லிகப்பூ வாங்கித் தரையில படைச்சு, தேங்கா பழத்தோட தனக்கு ஒண்ணேகால்ரூவா தட்சணையும் வாங்கிக்கிட்டு ''பிள்ளையக் கூட்டிட்டு வாங்காத்தா''ன்னு சொல்லிட்டு, பேயாடப்போற பொண்ணுக்குத் துண்டாப் பாய்போடச் சொன்னாரு கோடாங்கி.

ஊர்ப்பொம்பளைக கருவாச்சியக் கூட்டிட்டு வாராக கைத்தாங்கலா. அவளுக்கு நட, கூடி வரல. வில்லா வெறைச்சு வர்றா. பல்லுவேற கிட்டிச்சுக்கிருச்சு. தொண்டக்குழியிலருந்து என்னமோ வார்த்த வருது - வர்ற வார்த்தைய நாக்கு தட்டி விட்டுருது; கொளர்றா.

''வாழத்தண்ட அடுப்புல வச்சமாதிரி பச்சமண்ணுக்கு இப்படி ஒரு பழிபாவம் வந்திருச்சே''ன்னு பொலம்புதுக கெழடுகட்டைக.

நாடகம் போடப்போறாகங்கிற மாதிரியே கண்ணுல மனசத் தேக்கிச் சம்மணங்கால் போட்டு ஒக்காந்திருக்குதுக சின்னஞ்சிறுசுக.

செவக்கி ஒக்காரமுடியாமச் சாஞ்சு சாஞ்சு விழுந்த கருவாச்சிக்குக் கால்ரெண்டையும் மடிச்சு விட்டு முட்டிக்கால் போட்டு விடவும், அவ ''மளார்''ன்னு கவுந்து தலையத் தரையில போட, பாயே தெரியாமப் பரவிக் கெடக்கு அவ குடுமிக்காடு.

கோடாங்கி வலக்கையில உடுக்க எடுத்து எடக்கைக்கு மாத்தி, கடிவாளச் சுங்கம் தொங்க ஓசத்திப்புடிச்சு, ஆகாயத்துக்கொரு கும்புடும் பூமிக்கொரு கும்புடும் போட்டு, உடுக்கைய ஓங்கித்தட்டிக் கச்சைய ஒரு இறுக்கு இறுக்கிப்புடிச்சுச் சத்தம் கூட்டவும் ''தம்தணத்தோம் தம்தணத்தோம் தம்தணத்தோம்''ங்கிற ஓச சும்மா சொக்கத்தேவன் பட்டியையே பெரட்டிப்போடுது.

★ அறுவடைக்குச் செல்லும் பெருந்திரள்



படிப்பகம்

உடுக்குல ஆரம்பிச்சுப் பாட்டுல கூடிட்டாரு கோடாங்கி.

''மந்தை நிறைந்திட
மனம் நெறைய வா! வா! வா!
ஆணாக இருந்தாலும்
பெண்ணாக இருந்தாலும் - நீ
காத்தாக இருந்தாலும்
கறுப்பாக இருந்தாலும்
மானிடஜீவன்
மனிதநிலையானாலும்...

இந்த மங்கையைச் சீதைபோல் சிறையெடுக்க வந்திருக்கிற நீ யாரு''?

உடுக்கும் தமிழும் மாறி மாறி சலாம் வரிசைபாடியும் கீழ கெடந்த பிள்ள எந்திரிக்கல. தலைய விரிச்சுப் போட்டுத் தரையிலயே கெடக்கா.

உடுக்க இன்னும் ஓங்கியடிச்சு அடித்தொண்டையில பாட ஆரம்பிக்கிறாரு கோடாங்கி. பிசிறடிக்கிற கொரல்ல ''பிர்கா''வும் போட்டு சங்கீத உலகத்துக்குஅவராலான சவாலும் விட்டுக்கிர்றாரு.

''ஒங்களோட தங்கக்கைய
எஞ்சாமி முன்னபோடு...
எஞ்சாமி முன்னபோடு...
ஒங்க தல முடிய
எஞ்சாமி சொழட்டிப்போடு...
எஞ்சாமி சொழட்டிப்போடு...''

உடுக்கு சுதியேறி ஓங்காரநாதம் சுத்தியிருக்கிறவுக இருதயக் கூட்ட அறுக்க ஆரம்பிக்க, மண்ணுக் குத்துன சல்லிக்கட்டுக்காள மளார்னு தலையத் தூக்கினமாதிரி, ''ஏலே''ன்னு பெருங்கொண்ட குரலெடுத்து ஒரு கத்துக் கத்தி, கருவாச்சி தலைய ஒரு சுத்துச் சுத்துனா பாருங்க... சும்மா ஆயிரம் சாட்டைய எடுத்து வீசுறமாதிரி அவ குடுமி நாலாபக்கமும் தெறிச்சுவீசவும் தாங்கிப்புடிக்க வந்த பொம்பளைக ஓடிப்போனாக ஓடி..

ஆடிஆடித் தலசுத்திக் கெறங்கிக்கிறுகிறுத்துத் தலையக் கீழபோட்டு அவளா மூச்சுவாங்கி ஓயறவரைக்கும் உடுக்கடிய நிறுத்தல கோடாங்கி. அவ மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கறது அவ பொடணி ஏறி எந்திரிக்குதே அதுல தெரியுது.

அவ ஆசுவாசம் பண்ணிக்கிற அந்த இடைவெளியில லேசு லேசாப் பேச்சுக்குடுக்கிறாரு கோடாங்கி.

''யாரு நீ வந்திருக்கறது?. இந்த ஒண்ணுந்தெரியாத புள்ளையத் தொட்டுத் தொடந்து வந்திருக்கிற நீ யாரு?''

''சொல்ல மாட்டேன்'', கருவாச்சி கொரல்மட்டும் கேக்குது குடுமிக்குள்ளருந்து.

''சும்மா சொல்லு.. எங்க பிள்ளையத் தொட்ருக்கிற நீ ஆணோ பெண்ணோ... ஒன்னிய ஒரு குத்தமும் சொல்லமாட்டோம்... உண்மையச் சொல்லு...''

''சொல்லமாட்டண்டா''

''என்னது மரியாதை கொறையுது? ஏதோ வந்தது வந்துட்ட. வேணுங்கிறதக் கேட்டு வாங்கிட்டு எங்க பிள்ளைய எங்ககிட்ட ஒப்படைச்சிட்டுப் போயிரு''.

''பழிவாங்க வந்திருக்கேன். வெரட்டி வா பாக்குற''?

''பச்சமண்ண எதுக்குப் பழிவாங்கிக்கிட்டு? ஏதோ எங்க பிள்ளைக்கு -

அங்கம் பதறாம
அனல்காத்து வீசாம
முள்ளு முறியாம
முடிச்சுப் பூ வாடாம
நல்ல கதி குடுத்து
நடையக்கட்டு...''

''வந்தவேல முடியாம இந்த எடத்தவிட்டுப் போகமாட்டேன்''.

''வேண்டாத வேல செய்ய விடுவனா ஒன்னிய? ஓடிப்போ ஒங்காட்டுக்கு... இல்லாட்டி...''

''இல்லாட்டி''?

''தொறக்காத வித்துக்குள்ள ஒன்னப்போட்டுப் பூட்டிப் பாதாள கங்கையில எறிஞ்சுருவேன்''.

''கோடாங்கி! வித்தத் தொளச்சு வெளியேறி ஒன் வீட்டுக் கன்னிகளையும் புடிக்காம விடமாட்டேன்''.

''சும்மா உடுக்கதொங்கற வீட்டுல படுக்க வந்திருவியாக்கும்?'' அதெல்லாம் யாராச்சும் ஏப்பசாப்பகிட்ட வச்சுக்க. ஏங்கிட்ட வச்சுக்கிராத... ஒன்னிய ஓட்டாம விடமாட்டேன்.

''நான் முனியா பேயான்னே தெரியாம என்னிய எப்பிடி ஓட்டுவ?''

''சண்டிமுனி, சடாமுனி, மண்டிமுனி, மகாமுனி, பாண்டிமுனி, பரவைமுனி, நல்லமுனி, கெட்டமுனி, இப்படி எல்லா முனிகளையும் வரவழைச்சு முத்துப்போட்டுப்பாத்ததுல வந்திருக்கிறது முனி இல்லைன்னு தெரிஞ்சுபோச்சு. நீ பேய்தான். ஆணா பெண்ணா அதச்சொல்லு மொதல்ல''.

''வீல்''ன்னு ஒரு கத்துக்கத்தி கருவாச்சி திரும்பவும் பேயாட அவ வேகத்துக்குத் தக்கன அடிக்கிறாரு கோடாங்கி உடுக்கைய.

அந்தத் ''தம்த ததம் தம்த ததம்''ங்கிற கனசத்தம் உசுப்பேத்தவும் ஆடிக்கிட்டே கருவாச்சியும் பாட்ல கூடிட்டா.

''யண்ணே யண்ணே! - எஞ்சாமி
கோடாங்கி யண்ணே! - நான்
பெறந்தகதை ஒங்களுக்குச்
சொல்லட்டுமா - இல்ல
முடிஞ்சகதை ஒங்களுக்குச்
சொல்லட்டுமா - எஞ்சாமி
சொல்லட்டுமா?''

''வந்திருச்சு. பேய் வழிக்கு வந்திருச்சு. இந்தா இப்பச் சொல்லப் போகுது... ஊரையும் பேரையும்''.

ஊரே நிமிந்து உட்காருது.

சும்மா கோயில் மணிச்சத்தம் மாதிரி சுத்தமான குரல் கருவாச்சிக்கு. பாடுது மனப்பேயி கருவாச்சி குரலைக் கடன்வாங்கி.

''எனக்கு இட்டதொரு
எழுத்திருக்க - எஞ்சாமி
எழுத்திருக்க - நான்
கம்பங்காடு போகையிலே
ஈசன் கொஞ்சம்
கடையெழுத்த மாத்திட்டாரு
கடையெழுத்த மாத்திட்டாரு''

உடுக்குச் சத்தம் கூடக் கூட சக்கரமாச் சுத்துது அவ தல.

இந்த ஈருவல்லிக்குச்சி ஒடம்புக்குள்ள இத்தன சக்தியான்னு மூக்குமேல வெரலவச்சுக் கவலக்குறியோட பாத்து நிக்கிது சாதிசன மெல்லாம்.

தரையில மண்டிபோட்டுப் பேயாடின பொம்பள, பூமியிலருந்து சூறாவளி சுத்தி எந்திருச்சமாதிரி ''குபீர்''னு எந்திரிச்சு மொழங்கால் போட்டு முழுவேகத்துல பேயாடவும், இழுத்து இடுப்புல சொருகியிருந்த சீல ''பட்டீர்''ன்னு அவுந்திருச்சு.

சீல உருவ, மாராப்பு வெடிச்சு வெலக, லவுக்கையில்லாத தேகத்துல ஓரஞ்சாரம் தெரியவும் கருவாச்சி மேல ஓடிவந்து விழுந்து அவள ஒரே அமுக்கா அமுக்கிக்கிட்டா பவளம்.

பெரியமூக்கி உள்ள ஓடிப்போயி சோளமூட கட்டிவச்சிருந்த சரடுகள உருவிட்டு வந்தா.

கருவாச்சியத் தூக்கி நிமித்தி, சீலைய இறுக்கிச் சரி செஞ்சு, இந்தப் பக்கம் ஒரு சரடும் அந்தப்பக்கம் ஒரு சரடுமாக் கட்டி, உருவாஞ்சுருக்குப் போட்டா அவுந்தாலும் அவுந்திருமின்னு கல்லுமுடிபோட்டு 'ஆடுடீ ஆத்தா ஆடு'ன்னு சொல்லித் தள்ளிவிட்டு அழுது ஒதுங்கிட்டா.

உடுக்கு இப்பத் தீப்புடிக்குது.

''வந்திருக்கறது யாரு? வா வெளிய! ஒனக்குண்டான சாங்கியத்த வாங்கிக்கிட்டு ஒன்வழியத்தேடி நீ போயிரு. எங்க வீட்டுப் பிள்ளைக்குப் பட்டி பெருகணும்; பால் பான பொங்கணும்; அல்லியும் தாமரையும் பூத்துக் குலுங்கணும்; சொல்லு. நீ ஆம்பளையா? பொம்பளையா?'' - கோடாங்கி குரல்ல கோபக்குறி ஏறவும் வந்திருந்த பேய்க்கும் ரோசம் பொத்துக்கிருச்சு.

''வந்திருக்கிறது பொம்பளடா; பொம்பள''.

''ஊரு''?

''இதே ஊருதாண்டா... சொக்கத்தேவன்பட்டி''.

padippakam

''பேரு''?

''சொர்ணக்கிளிடா; சொர்ணக்கிளி; சடையத்தேவர் அண்ணன் மாறுகண்ணுத்தேவர் மக''.

''சொர்ணக்கிளியா? கருவாச்சியப் பேயா வந்து புடிச்சிருக்கறது என்னைக்கோ செத்துப்போன சொர்ணக்கிளியா? யாத்தே''ன்னு நெஞ்சுலடிக்கிறாக கெழவிக.

''வெளியூர்ப் பேயா இருக்குமோன்னு ஊகம் பண்ணுனா கடைசியில கருப்பு காலுக்குள்ளயே இருந்திருக்கேப்பா'' நாப்பது வருசம் மூன்னுக்கு நடந்த சம்பவத்த நெனச்சுப் பெருமூச்சு விடுதுக பெருசுக.

பாவம்! சொர்ணக்கிளி கத பெருங்கத.



படிப்பகம்



# 4

**நா**ப்பது வருசத்துக்கு முன்ன நடந்த கத; சொக்கத்தேவன்பட்டி பெறந்த காலத்துலயிருந்து மறக்கமுடியாத கத.

சடையத்தேவர் கூடப்பிறந்தவுக அண்ணந்தம்பிக ஏழு பேரு. ஏழுபேருக்கும் பிள்ளையில்ல. பிள்ள பெறக்காம இல்ல; பெறக்கும் பிள்ளைக ஒரு வாரத்துக்கு மேல தங்கல; எறந்து போகுதுக.

padippakam

என்ன விதியோ... என்ன தலையெழுத்தோ - இல்ல மூதாக்க மாரு செஞ்ச பாவமோன்னு ஏழு குடும்பமும் மனசுக்குள்ள வெந்து வெதும்பிக் கூட்டம் கும்மலுக்குக்கூட வரமுடியாமச் சங்கடப்பட்டு ஊர் வாயில விழுந்து கெடக்கிற நாளையில மாறுகண்ணுத்தேவருக்கு மகளா வந்து பெறந்தா சொர்ணக்கிளி.

ஏழு அப்பன்மார்களுக்கும் செல்லப்பிள்ளையா செல்வத்துலயும் செல்வாக்கியத்துலயும் வளர்றா. அவுக வம்சத்துலயே இல்லாத செவுப்புத்தோலு அவளுக்கு. தலைக்குச் செழிம்பா எண்ணவச்சு, அழுத்திவாரி, வெடவெடன்னு சடபோட்டு, தலச் சொமையாப் பூ வச்சு, பாவாட கட்ன குத்து வெளக்கா சொர்ணக்கிளி தெருவுல நடந்து போனா ஆணும் பொண்ணும் மாடும் கன்டும் அவளையே வெறிச்சு வெறிச்சுப் பாக்கும். அவ பளீர்ன்னு சிரிச்சு வாய்மூடினா நெலா செத்தவடம் வந்துட்டுப் போயிட்டு வாரேன்னு போயிரும்.

சொர்ணக்கிளி சொதந்திரக்கிளி. தண்ணியெடுக்கவும் போவா. காடுகரைக்கும் போய்வருவா. பெரிய மனுசியாகிப் பூத்துக் குலுங்கிப் புதுப் பாள போட்டு நிக்கிறா.

வழக்கமா அவக குடும்பத்துப் பிள்ளைகளுக்கு வாரம் ஒண்ணுல வார எமன் சொர்ணக்கிளிகிட்ட வாரானய்யா வருசம் பதினேழுல - பெரியமூக்கி வகையறா செயில்ராசு ரூவத்துல.

பெரியமூக்கி புருசன் துரைச்சாமி, சடையத்தேவருக்குச் சொந்த மச்சினன். மொதலக்கம்பட்டியில பெரியமூக்கியப் பெண்ணெடுத்துக் கூட்டிவாரப்ப வண்டிமாடு ஓட்டிட்டுக் கூடவே வந்தவன்தான் அவ அக்கா மகன் செயில்ராசு.

அவன் பெறக்கறப்ப அவன் அப்பன் செயில்ல இருந்ததுனால அவனுக்கு அந்தப் ''பட்டம்''.

சர்க்கரவள்ளிக் கெழங்கு மூட்டையில சமயத்துல சாரப்பாம்புக் குட்டியும் சேந்து வந்திருமா இல்லையா... சக்கரவள்ளிக் கெழங்கு - பெரியமூக்கி. சாரப்பாம்புக் குட்டி - செயில்ராசு.

●

ஊருக்கு வந்தன்னைக்கே செயில்ராசு ஆரம்பிச்சுட்டான் அவன் கிருத்திரியத்தை. மூணாம் நாளே ஊருபூராத் தெரிஞ்சு போனான்.

மந்தையில அரசமரத்தடியிலயே காத்தக் குடிச்சுக் கெடக்குற கெழடுகட்டைகளுக்குப் பலகாரம் மிச்சரு அல்வான்னு பொட்டணம் பொட்டணமா வாங்கிக் குடுத்து ''மகராசன் நல்லாருக்கணு''ங்கிற நல்லபேரு வாங்கிட்டான்.

பொதுக்கெணத்துல தண்ணியெடுக்க வார பொம்பளைகளுக் கெல்லாம் இவனே தண்ணியெறச்சு நெப்பி... தூக்கிவிடுற சாக்குல தொட்டும் அனுப்பினான்.

ஊருக்குள்ள யார் வீட்ல யாரிருக்கா, வீடுகள்ல என்னென்னா இருக்குன்னு சட்டையக் கழத்தி உருமாக் கட்டி நெஞ்சத்தூக்கி நடந்து தெருத்தெருவாத் திரிய ஆரம்பிச்சுட்டான்.



படிப்பகம்

பொம்பளைக ரெண்டுபேரு ஒரல்ல சோளம் போட்டு ஒலக்க குத்திக்கிட்டிருந்தாகன்னா - ஓடிப்போயி ரெண்டு பேரையும் ஒதுங்கி நிக்கச் சொல்லிட்டு, ரெண்டு கையிலயும் ரெண்டு ஒலக்கைய வாங்கி இவனே மாத்திமாத்திக் குத்திப் பொடச்சும் குடுத்திட்டுப் போயிருவான்.

யார் வீட்லயும் கூசாம நொழஞ்சு அம்மியில ஆறவச்சிருக்கிற களியில இவனாக் கொழம்ப அள்ளி ஊத்தித் தெனாவெட்டாத் தின்டுபிட்டு, உப்போ ஒறப்போ கம்மின்னும் சொல்லிப்புட்டு வேட்டியில கையத் தொடச்சு வெளியேறிருவான்.

கல்யாணமாகாத மூத்த கொமரிகள்... புருசன் வீட்லயிருந்து கோவிச்சிட்டு வந்து பெறந்தவீட்ல பேன் பாத்துக்கிட்டிருக்கிற வாழாவெட்டிகள .. 'சோங்கு' பண்றதுல இவனுக்கொரு சொகம் இருக்கு.

''ஊருக்குள்ள ஒரு தும்பு திரிச்ச மாடு துள்ளிக்கிட்டுத்திரியுதே அத லேசாத் தட்டிவைங்கப்பா''ன்னு வெடலப் பயககிட்ட ஊர்ப்பெருசுக சொல்ற அளவுக்கு அத்துமீறிப் போயிக்கிட்டிருக்கு அவன் அக்குறும்பு.

''ஏம்மா பெரியமூக்கி! சொக்கத்தேவன்பட்டிக்கு வாக்கப்பட்டு வந்தவளே! ஒன் அண்ணன் மகனக் கொஞ்சம் தட்டி வைக்கக் கூடாதா''ன்னு கேட்டதுக்கு, ''ஆம்பளப்பயன்னா அப்படித்தான் இருப்பான்''னு பெரும்போக்கா அவ சொல்லப்போக, ''அப்ப சொக்கத்தேவன்பட்டியில ஆம்பளப் பயலே இல்லேன்றியா''ன்னு சடையத்தேவர் வீட்டு ஆளுக கேக்க... அப்பவே கசமுசாவாகி அஞ்சாறு மாசமாப் பேச்சுவார்த்தை இல்ல ரெண்டு வீட்டுக்கும்.

●

ஒரு புரட்டாசி மாசம். அப்பவே அடிக்க ஆரம்பிச்சிருச்சு அடுத்த மாச மழைக்குண்டான சிறுகாத்து.

பொழுசாய நேரம்... வாரேன் வாரேங்குது இருட்டு... போறேன் போறேங்குது வெளிச்சம். மொதப்பறவை கூடு சேந்திருச்சு; கடைசிப்பறவை இந்தா வந்திட்டேங்குது.

ஊருக்கு மேற்க கரட்டடிய ஒட்டியிருக்க கம்பங்காட்டுக்குள்ள செடி செத்தையப் பரப்பி அதுக்குமேல சக்கரவள்ளிக் கெழங்க அடுக்கி, சோளத்தட்டைய மேலபோட்டுச் சுட்டுத் திங்கத் தோது பண்ணிக் கிட்டிருக்கான் செயில்ராசு.

அப்ப...

'சல்லு சல்லு சல்லு'ன்னு ஒரு சத்தம்; அந்தக் காடு கேக்காத சத்தம்; மனசக் கொழச்சு மண்ணு மிதிக்கிற சத்தம்.

'ஆள் இல்லாத அனாதிக் காட்ல இது என்னடா கொலுசுச் சத்தம்'ன்னு பாத்தா, தலையில பருத்திச் சாக்கச் சொமந்து ஒத்தையடிப் பாதையில ஒத்தையில வந்துக்கிட்டிருக்கா சொர்ணக்கிளி.

பாத்தான்.

கெழங்கு சுடறதுக்குள்ள மனசு வெந்துபோச்சு அவனுக்கு. கொடியில

சீல காயறதக் கண்டாலே 'படக்'குன்னு பார்வைய எடுக்கமுடியாத பய புத்திகொதிச்சுப்போயி நிக்கிறான்.

''ஏ சொர்ணக்கிளி! தலைச்சொமைய எறக்கிவச்சுட்டுச் சக்கரவள்ளிக் கெழங்கு தின்டுட்டுப் போறது...?''

''வேணாம் மாமா. பொழுதுபோயிருச்சு. வீடுபோயிச் சேரணும்''.

''நீ கெழங்கு தின்டுட்டுப் போறதாயிருந்தா வீட்டுவரைக்கும் ஒன் தலைச்சொமைய நான் தூக்கிட்டு வாரேன்''.

''நெசமாவா?''

''பொய்யா சொல்றேன். ஒனக்குக் கால்வலிச்சா ஒன்னையுந் தூக்கி இடுப்புல வச்சுக்கறேன்''. பாதையில போனவள முன்னுக்கு வந்து மறிச்சு அவ தலச்சொமைய வம்படியா அவனே எறக்கி வைக்கிறான்.

தொட்டும் தொடாம அவள ஓரங்கட்டி ஒதுக்குறான்.

கங்குகளத் தள்ளி வெந்தும் வேகாமக் கெடந்த கெழங்குள்ல ஒண்ண எடுத்து ''தின்னு சொர்ணம்... தின்னு''ன்னு அவ கையில திணிக்க, குருத்துவாழைஎலையில சுடுசோறு விழுந்தமாதிரி கெழங்குச் சூட்டுல உள்ளங்கை வெந்து அவ ''யாத்தே''ன்னு கத்த, இதான் சாக்குன்னு கையப்புடிச்சு 'உஸ் உஸ்'ஸுன்னு அவன் ஊதிவிட, அந்த அணுக்கத்த அனுகூலமாக்கிச் சாச்சுட்டான் அவளக் கம்பங்காட்ல.

குரங்குலருந்துதான் மனுசன் பொறந்தான்ங்கிறாங்க. ஆனா, மனுசனுக்குள்ளருந்து சிங்கம், புலி, கரடி, ஓநாய் இதெல்லாம் பூமியில நித்தம் நித்தம் பொறந்துகிட்டேயிருக்கு. பலது கண்ணுக்குத் தெரியறதில்ல; கணக்குல வாரதில்ல.

ஒரு தெய்வச்செலையக் களவாணிப்பய திருடி உருக்கி விக்கிற மாதிரி, ஆளில்லாத காட்ல ஒரு சின்னப்புள்ளையச் சீரழிக்கிறான். ஒவ்வொரு துணியா உருவி எறியிறான்; கத்திக் கதையக் கெடுத்திருவாளோன்னு அவ வாய அடைக்கிறான் தாவணியப் பந்துசுருட்டி.

ஒரு மிருகம் கூடுதய்யா மனுசப் பொம்பளைய.

காடே கதிகலங்குது. கம்பங்காட்ல வந்து அடைஞ்ச தட்டச் சிட்டுக, தானியத்த அள்ளித் தலைக்குமேல எறிஞ்சமாதிரி செதறி ஓடுதுக. காடை கதுவாளிக என்னமோ ஏதோன்னு பதறி, சொந்த பந்தங்களே சூதானம்ன்னு அடுத்தகாடு கேட்க அலறிக் கத்துதுக. அங்கங்க ஊறித் திரிஞ்ச பாம்பு பூரான் எல்லாம் சட்டுன்னு சுருண்டு பிரிமணை மாதிரி சுத்திச் செத்ததுமாதிரி கெடக்குக சத்தமில்லாம. ஈரக்கொல நடுங்கி விர்று விர்றுன்னு வீசுது காத்து.

எல்லாம் முடிஞ்சுபோச்சு.

இப்ப நல்லா வெந்திருக்கும்ன்னு கங்குகளக் கிண்டிக் கெழங்குகள எடுத்து ஊதிஊதித் தின்டுபிட்டுத் திரும்பிப் பாத்தா, அவ இன்னம் எந்திரிக்கல. காலப்புடிச்சு ஒரு ஆட்டு ஆட்றான். கொலுசு சத்தம் போடுது; அவ அசையல. வாயில அடைச்ச தாவணிய உருவுனா வாய் தொறந்தே கெடக்கு; மூடல. மூக்குல கையவச்சுப் பாக்குறான். மூச்சில்ல.

''யாத்தே! செத்துப்போனாளே!''

செத்தவடம் புத்திமாறிப்போயிப் பயந்து ஒக்காந்தவன் சுதாரிச்சு எந்திரிக்கிறான். சுத்தியும் முத்தியும் பாக்குறான். அவ சொமந்து வந்த பருத்திச்சாக்கு இருக்கு. சாக்க அவுத்தான்; பருத்திய ஒதறிவிட்டான். ஒட்டுத்துணிகூட இல்லாமக் கெடந்தவளத் தூக்கிக் குத்தவச்சமேனிக்கு ஒக்காரவச்சுச் சாக்குக்குள்ள திணிச்சான். ஏற்கெனவே பருத்திச்சாக்கக் கட்டியிருந்த கயித்தப் பதட்டத்துல எங்க எறிஞ்சானோ.. தெரியல... காணல. இடுப்புல இருந்த சூரிக்கத்திய எடுத்து அவ குடுமியவே அறுத்து, முடியக்கொண்டே முடி போட்டான் மூட்டைக்கு. 'பொணத்த எங்கயாவது பாங்கெணத்துல போட்டுட்டுக் கங்காணாத சீமைக்கு ஓடியே போகணும் ஓடி'.

காடு இருட்டுக்கட்டிப்போச்சு. மங்கலா வழி தெரியுது. பொணம் எளம் பொணம்; கனக்கல; ஆனா, மனசுமட்டும் பாறாங் கல்லாக் கனக்குதேன்னு சொல்லிக்கிட்டே பயத்தையும் சொமந்து நடக்கிறான்.

பொணத்தத் தலையில புடிச்சு உசுரக் கையில புடிச்சு இதென்னடா பொழப்புன்னு அடுத்த அடி வைக்கவும் ஆள்மொனகுற சத்தம் வருது.

'யாத்தே! யாராச்சும் பின்னாலயே வாராகளா. இல்ல காட்டுக்குள்ள காத்துகருப்பா?'

கம்பங்காடு கடந்து, ஒத்தப்பனமரப்பாதை வழியா சோளக் காட்டுக்குள்ள நொழைய ''என்னிய விட்ரு; என்னிய விட்ரு''ன்னு சத்தம் வருது.

பய பயந்து கழிஞ்சுபோனான்.

வேர்த்து விறுவிறுத்து, தலச்சொமையோட ஒரு முழுச்சுத்தும் சுத்தி, எங்கயிருந்துடா வருதுன்னு பாத்தா கடைசியில சாக்குக்குள்ளருந்து வருது சத்தம்.

'பொத்து'ன்னு மூட்டையப் போட்டுட்டு நாலடி பின்னால நகந்து நின்னு பாத்தா அவுந்துபோன மூட்டக்குள்ளருந்து குத்தவச்சு ஒக்காந்த மேனிக்குக் கும்புட்டு அழுகுறா சொர்ணக்கிளி; அவ சாகல.

ஒடம்புல ஒரு ஒட்டுத்துணியில்லாம, கூந்தல எடுத்து அங்கங்க மூடிக்கிட்டு, கும்புட்டுக்கிட்டே மார்ப மூடிக்கிட்டு ''நடந்தது நடந்துபோச்சு; என்னிய விட்ரு மாமா''ன்னு சாரைசாரையா அவ அழுகறதக் கண்டா ஓநாய் புலி பேயாயிருந்தாலும் 'போயிட்டு வா தாயி'ன்னு போயிரும்.

பேயி பிசாசு மிருகம் மனுசன்னு எதுலயும் சேக்க முடியாது இவன.

''அடியே சொர்ணம்! ஒரு வகைக்கு நீ செத்தது நல்லது. எனக்கு சாட்சியிருக்காது. இப்ப நீ பொழச்சது கெட்டது. ஒன்னிய இப்படியே விட்டா நான் காடுகடக்குமுன்ன என்னியக் காணாப் பொணமாக்கிப் பிடுவானுக ஒங்கப்பன்மாருக. அதுனால நீ செத்தது செத்ததாவே இருக்கட்டும்''.

இடுப்புல சூரியத் தேடினான்; காணோம். பதட்டத்துல எங்கேயோ விழுந்து போச்சு. வரப்புமேட்ல கெடந்துச்சு ஒரு கத்திக்கல்லு. அந்தக் கல்ல மண்ணோட பேத்தெடுத்த கொலகாரப் பாவி, கும்புட்டுக் கெடந்தவ தலையில நச்சு நச்சுன்னு குத்தி ரத்தம் ஒழுகவிட்டான்.

அவ கத்திக் கதறி ஊர்ச்சாமி பேரையெல்லாம் கூப்பிட்டு அழுதுபாத்தா; ஒரு சாமியும் வரல; உண்மையாவே செத்துப்போனா.

திரும்பவும் அவளச் சாக்குல போட்டு, பொணம் சொமந்து கருவேலங்காட்டுக்குக் கெழக்க இருக்குற பாங்கெணத்துல போட்டுட்டுப் போயிட்டான்.

ராத்திரியோட ராத்திரியா அப்பன்மாருக ஆளுக்கொரு தெசையா அலைஞ்சதும், விடிஞ்சு பொணம் கண்டுபுடிச்சு மாடுக மாதிரி கதறி அழுததும், கம்பங்காட்ல கெடந்த சூரிய வச்சு இதச் செஞ்சவன் செயில்ராசுதான்னு கண்டுபுடிச்சு அருவா வேல் கம்போட அவன ஆளாளுக்குத் தேடுனதும், இது தெரிஞ்சு அவன் சிறுமலையில மருந்து குடிச்சுச் செத்துக் கெடந்ததும், அன்னைக்கிருந்து மாறுகண்ணுத் தேவர் பேச்சு நின்னு போனதும் ஊருக்கே தெரியும். ஆனா மாறுகண்ணுத்தேவர் கடைசியாச் சொல்லிட்டுச் செத்தது சடையத்தேவருக்கு மட்டுந்தான் தெரியும்.

''அண்ணந்தம்பி ஏழுபேர் பெறந்து இப்ப நீயும் நானுந்தான் இருக்கமடா தம்பி. இப்ப நானும் போயிச் சேந்திருவேன் போலிருக்கு. ஒண்ணே ஒண்ணு சொல்லிட்டுச் சாவேன். செய்வியா?''.

''சொல்லுண்ணே...''

''நம்ம ஆசமக சொர்ணக்கிளியக் கொன்டுபுட்டான்ங்க. நம்ம வம்ச வெளக்க அழிச்ச குடும்பத்துல என்னைக்காச்சும் ஒரு ஒச்சம் உண்டாக்காட்டி செத்துச்சுடுகாடு போனாலும் என் ஆவி அடங்காதுடா தம்பி. செய்வியா?''

''செய்றண்ணே!''

இது நடந்து பதினஞ்சு வருசத்துக்கப்புறம் சடையத்தேவருக்கு மகனா வந்து பெறக்குறான் கட்டையன். அதுக்கு அங்கிட்டு அஞ்சு வருசம் கழிச்சுப் பெரியமூக்கிக்கு மகளா வந்து பெறக்குறா கருவாச்சி.

வஞ்சத்தையும் சாராயத்தையும் ஊத்தி ஊத்தி வளக்கிறாரு சடையத்தேவரு கட்டையன. பொண்ணு கேக்குற மாதிரி கேட்டு, கல்யாணம் முடிக்கிறமாதிரி முடிச்சு அவளச் சீரழிச்சுச் சின்னாபின்னமாக்கி, ''ஒஞ்சதடீ யாத்தா ஒங் கத... தீந்ததடி யாத்தா எங்க பழி''ன்னு வீட்லயே போயி விட்டுட்டு வந்துட்டான்ங்க. பஞ்சாயத்தக் கூட்டித் தீத்துக்கட்டவும் திட்டம் போட்டுட்டாங்க.

கரிச்சாம்பாறையில கருவாச்சியப் போட்டு வறுத்தெடுத்து, அவ குடுமிக்கு அடியில கையக்கோர்த்து இறுக்கிக்கிட்டு, சொர்ணக்கிளி கதையக் கட்டையன் சொல்லச் சொல்ல, பூரான் பாம்பு தேளெல்லாம் புகுந்து கொடஞ்சிருச்சு கருவாச்சி புத்திக்குள்ள.அந்தக் கொடச்சலும், ஒடம்புபட்ட ஒலச்சலும் எதையும் வெளிய சொல்லாம மனசுக்குள்ளயே போட்டு அமுக்கிவைக்கிற கொணமும் சேந்துதான் அவளப் பேயாடவச்சுப் பெருங்கூத்துப் பண்ணிருச்சு.

●

கருவாச்சி மூலியமா சொர்ணக்கிளி தன் கதையச் சொல்லச் சொல்ல, அழுது மூஞ்சி வீங்கிப்போச்சு ஆணும் பொண்ணும்.

கோடாங்கியும் இப்ப எறங்கிவந்து கேக்குறாரு.

''யம்மா சொர்ணக்கிளி! நீ வேற எங்கயும் போயி வெளையாட்டுக் காட்டாம ஏன் சொந்தக்காரப் பிள்ளையச் சுத்திட்டு அலையிற?''

''சிங்காரச் சொர்ணக்கிளி
சீதபெத்த எளையகிளி - ஒனக்குக்
குண்டுமல்லிப் பூவு வேணுமா?
கோழிக்கறிச் சாறு வேணுமா?
வேணுங்கறத வாங்கி
வெளியேறு தாயி''

''போறேன். அப்பப்ப வருவேன்''.

''இது கெட்ட பேச்சு. இனிமே எங்க பிள்ளையத் தொடப்படாது. எங்க பிள்ள வீட்லயிருந்தாலும், வெளியிலயிருந்தாலும், ஆத்தங்கரை கொளத்தங்கர வெங்காடு வெள்ளாமக்காட்டு வழி ஒத்த சத்தையில போய்வந்தாலும் இந்த மங்கையத் தொடமாட்டேன்னு சத்தியம் பண்ணி வெளியேறு. என்ன வேணுமோ எங்க சக்திக்கு உட்பட்டதக் கேளு தாரோம்''.

''பால்பணியாரம், பனநொங்கு, சுட்ட கருவாடு, அச்சு வெல்லம், உப்புக்கண்டம், புதுச்சீல குடுப்பியா?''

''ஒரு கொறையில்லாக் குடுத்திடுறோம் தாயி; வந்த வழியே போயிடுறியா?''

''போயிடுறேன்''

''ராத்திரியெல்லாம் உடுக்கடிச்சு ஓட்டி ஓட்டி விடியக்காலம் பேய் எறங்கிருச்சு''.

கைத்தாங்கலாப் புடிச்சுக் கருவாச்சிய வெளியே கூட்டியாந்து தலையில கல்லத் தூக்கி வச்சு, தலைவிரி கோலமா - ஓட்டமும் நடையுமா அவள முன்னவிட்டுப் பின்னாலயே போறாக ஊராளுக.

உடுக்குச்சத்தமும் போகுது ஊரோட சேந்து.

சுடுகாட்டுப் புளியமரத்தடி வந்ததும் ''எறிஞ்சிரு''ன்னு சொன்னதும் கல்ல 'மடார்'ன்னு கீழபோட்டா கருவாச்சி.

''கட்டையன் தலையில போட்டுருக்கணும்ன்''னான் ஒருத்தன். ''ஏன் சடையத்தேவன் தலையில போட்டா ''மாட்டேன்''னு சொல்லுமா கல்லு?''. - இது இன்னொருத்தன்.

கருவாச்சி குடுமியில ஒரு கத்தைய எடுத்து அதை ஆணியில ரெண்டு மூணு சுத்துச் சுத்தி, புளியமரத்துல அத நச்சு நச்சுன்னு அறஞ்சு, அடிக்குடுமிய அருவாளவச்சு அறுத்து அவள விடுதல பண்ணி ''போ! திரும்பிப்பாக்காமப் போ''ன்னு ஓங்கி உத்தரவு போடுறாரு கோடாங்கி. சொந்த புத்தியோ சுவாதீனமோ இல்லாம ஒறக்கத்துல நடந்து போறவ மாதிரி போறவள ஆளுக்கொரு பக்கமாத் தாங்கிப்புடிச்சுப் போறாக பொம்பளைக.

ஊர் எல்லை வந்திருச்சு.

அங்கதான் சாங்கியப்படி சடங்குபண்ணியாகணும்.

ஏழு எருக்கில-சாணிச்சட்டி- பீத்தமொறம்- பீத்த செருப்பு- பீத்த வெளக்கமாறு... இதுகளயெல்லாம் கருவாச்சி தலைய மூணு சுத்திச்சுத்தி எறிஞ்சுட்டு ஒலக்கையப் போட்டாக அவ குறுக்க.

''தாண்டி வாடியம்மா; தாண்டு''.

அவ ஒலக்கையத் தாண்டுனா.

அஞ்சு பொம்பளைக கூடி அஞ்சுபானத் தண்ணிய அவ தலையில சொத சொத சொதன்னு ஊத்துனாக.

அந்த ஊர்ல அவளுக்குமட்டும் மழபேஞ்சது மாதிரி நனஞ்சு நடந்து போறா கருவாச்சி.

வெந்நி கொதிக்கவிட்டு வேப்பங்கொழையும் மஞ்சளும் போட்டுத் தலைக்குத் தண்ணி ஊத்தி, பழைய சீலய வச்சுக் கரகரகரன்னு அவ தலையத் தொவட்டிக்கிட்டே பெரியமூக்கி பொலம்ப, பச்சரிசிய ஒரல்ல போட்டு மாவிடிச்சுக்கிட்டிருந்தாக வைத்தியச்சியும் பவளமும்.

இடிச்ச மாவ நல்லா அவிச்செடுத்து வெள்ளத்துணியில கட்டி வேது குடுக்க, எங்க தொட்டாலும் வலிக்குதுன்னு கத்துறா கருவாச்சி. இவ ஆடின பேயாட்டம் பாதி; இவ மேல இவ புருசன் ஆடின பேயாட்டம் பாதி. எப்பிடித்தான் தாங்கும் அந்த எளவாழந்தண்டு?

வேதுவைக்க அவிச்ச மாவுலயே புட்டுச்செஞ்சு அதுல நல்லெண்ணை ஊத்திக் கருப்பட்டித்தூளுப் போட்டுப் பெணஞ்சு பெணஞ்சு ஊட்றா பெரியமூக்கி மகளுக்கு. ஒருவாய் ரெண்டுவாய் தின்னதும் தட்டத் தட்டிவிட்டுட்டுப் பாயிலபோயி விழுந்து சும்மாடு மாதிரி சுருண்டு படுத்துக்கிட்டா கருவாச்சி.

மகளுக்கு அடிச்சுஊத்த ''வெடக்கோழி இருக்கா வெடக் கோழி''ன்னு தேடி நடந்துபோறா பெரியமூக்கி தெருத்தெருவா.

●

''யப்பே! பஞ்சாயத்துக் கெடு முடிய இன்னும் ரெண்டு நாள்தான் இருக்கு. நம்ம கூட வம்பிழுக்க அருவா கம்போட வாங்கடான்னு பெரியமூக்கி மொதலக்கம்பட்டிக்கு ஆள் சொல்லி விட்ருக்காளாம். அந்துாருக்காரங்க இந்துாருக்கு வந்து கம்புசுத்தி வெள்ள வேட்டியோட வீடுபோய்ச் சேரவா? நான் சும்மா இருப்பனா?''.

''நீ செய்யிறதச் செஞ்சுக்கடா மகனே! ஆனா எதுலயும் ஒரு நிதானம் இருக்கட்டும்''.

தகப்பன்கிட்ட நெலமையச் சொல்லி யோசனையும் கேட்டுக்கிட்ட கட்டையன் பன்னியான்பேரன், சலம்பல்பாண்டி, ஒலக்கையன் மூணுபேரையும் கூப்பிட்டான்.

ஆடுமாடுக அடங்கி, சனங்கள்ளாம் ஒறங்கி, காவல் நாய்கூடக் கடைசியாக் கொலச்சிட்டு கண்ணுமூடப்போன பின் சாமத்துல, பஞ்சாயத்து நடக்கப் போற அரசமரத்தடி மந்தையில அங்கங்க குழியத்தோண்டி வெட்டருவா வேல்கம்ப உள்ளவச்சுப் பொதச்சு, மண்ணத் தள்ளி மறைக்கிறாங்க கட்டையன் கையாளுக.

அரசங்கௌ இடுக்கு வழியா-

இதப் பாத்துக்கிட்டேயிருந்து பயந்து தேயுது நெலா.

padippakam



# 5

விடிஞ்சாப் பஞ்சாயத்து. ஊரே ஒறங்குது. எனக்கும் தூக்கம் வருதுன்னு சந்து பொந்துகள்ல புகுந்து சத்தமும் ஒறங்கிப்போச்சு. முழிச்சுக்கிட்டிருக்கிறது காடாவெளக்கும் கருவாச்சியும் மட்டும்தான். என்னமோ சோட்டுக்காரிகிட்ட ஒப்பிக்கிற மாதிரி காடா வெளக்கு கூடப் பேசுறா கருவாச்சி:

''எம் பொழப்பு ஏன் இப்படி ஆகிப்போச்சு காடாவெளக்கே? என்ன குத்தத்துக்கு நான் இப்படிக் குத்துயிரும் கொல உயிருமாக் கெடக்கேன்?

படிப்பகம்

என்னா பாவம் பண்ணினேன்? எவ சோத்துல மண்ணள்ளிப் போட்டேன்? கறிய மட்டும் எடுத்துக்கிட்டு நாய் எலும்பத் துப்புறமாதிரி துப்பிட்டானே என்னிய. செத்துப்போடீன்னு சொன்னவன்கிட்ட எப்பிடிச் சேந்து வாழ முடியும்? பஞ்சாயத்துல எப்பிடியும் அத்துவிட்றப் போறாக. அதுக்குப் பெறகு என்ன பண்ணலாம்? கல்யாணச் சேலயக் கழுத்துல சுத்தி நான்டுக்கிட்டுச் செத்துப் போகலாம். இல்ல அரளி வெதைய அரைச்சுக் குடிச்சுட்டுப் பழைய சீலயப் பொத்திப் படுத்துக்கிரலாம். பொம்பளைக பொதுவா இதத்தான செய்வாக! அத நானும் செய்யணுமா? செய்யமாட்டேன் காடாவெளக்கே. ஒத்தத்திரிய வச்சுக்கிட்டு ஊதக்காத்த எதுத்து நிக்கிற நீயி. சீமத்தண்ணி கடைசிச்சொட்டு வத்திப்போனாலும் திரியில ஊறியிருக்கிற மிச்சத்த வச்சு உசுர் புடிச்சு நிக்கப்பாக்குற. ஒனக்குக் கொறஞ்சவளா நானு? ஒவ்வொரு பெறவிக்கும் ஒரு காரணமிருக்கா இல்லையா? எம் பெறவிக்கு என்ன காரணம்ன்னு தெரிஞ்சுட்டுப் போயிடறேன். சாவு என்னைக்கோ ஒரு நாளைக்கு நம்மளத் தேடி வரத்தான்போவுது. அது வாரப்ப வரட்டும் பாத்திருவோம்; வான்னு கேட்டிருவோம். இதுவரைக்கும் கொழகொழன்னு இருந்த மனசு வாங்குன அடியில லேசாக் கெட்டிப்பட்டிருக்கு; எல்லாம் நல்லதுக்குத்தான். வரணுங்கிற துன்பம் வந்துதான தீரும். ஒல கொதிக்காம அரிசி வேகுமா? ஒவ்வொரு பொம்பள பொழப்பும் ஒரு ஒலதான். இப்ப என் ஒல கொதிக்குது; கொதிக்கட்டும்''.

அவ ஒரு முடிவுக்கு வந்துட்டா. இப்பக் காடாவெளக்கும் ஒறங்கிப் போச்சு; அவ மட்டும் முழிச்சிருக்கா.

●

அரசமரத்தடி மந்தையில ஊரேகூடி ஒக்காந்திருக்கு. கருவாச்சி பொழப்பு என்னாகப் போகுதோங்கிற கவலையும், பஞ்சாயத்துல கலகம் வந்து ஒண்ணுகெடக்க ஒண்ணு ஆகிப்போயிரு மோங்கிற பதட்டமும் திட்டுத்திட்டாத் தெரியுது ஊர்க்காரக மூஞ்சியில.

உருமாப்பெருமாத்தேவரு பெருங்குரலெடுத்துப் பேசுறாரு. ''இந்தா பாரப்பா கட்டையா... சொன்னதையே சொல்லிக்கிட்டிருக்காம நல்ல முடிவுக்கு வாப்பா. ஆம்பளைக்கு அருங்கேடு நெனச்சாலும் பொம்பளையப் பொறம்பேசப்படாதப்பா. நாப்பது வருசத்துக்கப்புறம் சேந்த குடும்பம் சேந்ததாவே இருக்கட்டும். ஊரே ஒண்ணுகூடிச் சொல்றோம். வச்சுப் பொழச்சுக்கப்பா அவள''.

உட்கார்ந்திருந்த கட்டையன் விசுக்குன்னு எந்திரிச்சான்.

''பெருசுக கூடி ஒரு தீர்ப்பச் சொல்லிட்டு நீங்க பாட்டுக்குப் போயிருவீக. வச்சு வாழப்போறது நானு. ஒரு ஆணுக்கும் பொண்ணுக்கும் கல்யாணம் எதுக்கு? வீடு வெளங்க. வாரிசு உண்டாக. இந்த ரெண்டுக்கும் லாயக்குப் படமாட்டா இந்த ரெண்டுங்கெட்ட சிறுக்கி. வேணாம்; வெலக்கிவிட்ருங்க''.

''இல்லாதது பொல்லாததச் சொல்லி எம் பிள்ள பொழப்பக் கெடுத்திர வேணாம்ன்னு சொல்லுங்கப்பா. அந்தாளு சொல்றத நம்பாதிக. தங்கத்தட்டு மாதிரி போயிச் சல்லடையாத் திரும்ப வந்திருக்கா எம் பொண்ணு''.

முந்தானைய ஒதறி இழுத்து இடுப்புல செருகிக்கிட்டு, தரையவிட்டுப் பந்துமாதிரி எந்திரிச்சு அழுது பேசுறா பெரியமூக்கி.

''ஆமா, பெரிய சீமையில இல்லாத பொண்ணு. மொளகு ரசம் வையிடின்னா எலிப்புழுக்கையப் அள்ளிப்போட்டு இதுதான் மொளகுங்கற பொண்ணு; 'போ'ன்னா போயிர வேண்டியதுதான....''

''ஏய்! 'வா'ன்னா வாரதுக்கும் 'போ'ன்னாப் போறதுக்கும் எங்க ஐத்தமக என்ன அவுசாரியாடா? பொண்ணுகேட்டு வந்தது நீதான?'' மொதலக்கம் பட்டியிலருந்து பஞ்சாயத்துக்கு வந்திருந்த பெரியமூக்கி அண்ணன் மகனுங்க நாலுபேரும் ஒண்ணு சொன்னாப்புல எந்திரிச்சிட்டானுக.

''தாட் பூட்''டுன்னு அவன்ங்க தவ்வவும் பல்லக்கடிச்சுக்கிட்டுக் கட்டையன் லேசாத் திரும்பிப் பாக்கிறான்.

ஆயுதம் பொதைச்ச எடத்துல அடையாளம் வச்சு ஒக்காந்திருந்த பன்னியான்பேரன், ஒலக்கையன், சலம்பல்பாண்டி மூணுபேரும் லேசாப் பள்ளம் பறிக்கிறாங்க.

''வாடா போடான்னு பேசுனா ஏடாகூடமாயிப் போயிருமப்பா. நல்லது கெட்டது பேசத்தான் நாங்க இருக்கம்ல... ஒக்காருங்க'' - காவக்காரச் சக்கணன் கையமத்தவும் தோள்ல போட்ட துண்டத் தரையில போட்டு ஒக்காந்துட்டானுங்க நாலு பேரும்.

''ஏம்ப்பா... சடையத்தேவா! நீ பெரிய மனுசன்.. நீ என்ன சொல்ற?''.

நடுவெரலையும் சுட்டுவெரலையும் ஒண்ணா வாயில வச்சு அழுத்தி, ரெண்டுக்கும் மத்தியில இருக்கிற இடைவெளியில ''புளுச்''சுன்னு எச்சிதுப்பி, எச்சிவிழுந்த எடத்த எடதுகையால மண்ணப்போட்டு மூடிக் கிட்டே சடையத்தேவர் சொன்னாரு...

''தவள தண்ணிக்கிழுக்குது ஒந்தி மேட்டுக்கிழுக்குது... பிரிச்சு விட்ருங்கப்பா''.

''சடையத்தேவா! நீ பிள்ளைக பொழப்ப நெனைக்கல. ஏதோ ஒரு மாசு இருக்கு ஒன் மனசுல. அது பரம்பரைக்கு நல்லதில்லப்பா. கடைசியாக் கருவாச்சியையும் ஒரு வார்த்த கேட்ருவோம்... கூப்பி டுங்கப்பா அந்தப் பிள்ளைய''ன்னாரு உருமாப்பெருமாத்தேவரு.

வந்தா கருவாச்சி. முன்ன இருந்த பயமில்ல அவளுக்கு. கண்ணுல ஒரு ஒளி இருக்கு. கையெடுத்துக் கும்பிட்டா.

''யம்மா கருவாச்சி! ஒம் புருசன் ஒம்மேல குத்தஞ்சொல்லி வேணாம் வெட்டிவிட்ருங்கன்னு பஞ்சாயத்துல பிராது குடுத்திருக்கான்; ஒம் பக்க நியாயத்த நீ சொல்லு தாயி''.

அவ ஒரு பேச்சும் பேசாம அரசமரத்துல அணில் பாத்துக்கிட்டிருந்தா. நான் வேற என் வாலு வேறன்னு ஒடம்பு அசங்காம வாலமட்டும் என்னா ஆட்டு ஆட்டுது அந்த அணிலு. 'புசு புசு புசு'ன்னு என்னா அழகு அந்த வாலு? யான காது கொடையணும்னா அணில் வாலுதான் லாயக்கு.

அவ என்ன சொல்லப் போறாளோன்னு சபையே அவ வாயப் பாத்திருக்க மரம் ஏறி அணில் வாலத் தொட்டுத் தரையில குதிக்குது அவ மனசு.

''எம் மேல ஒரு குத்தமும் இல்லீங்க. இது பஞ்சாயத்துக்கும் தெரியும்; நாங் கும்புடற சாமிக்குந் தெரியும். மத்தபடி கடவுளும் ஊரும் என்ன தீர்ப்புச் சொல்லுதோ கட்டுப்படறேன்''.

''சாமி அருள்வாக்குச் சொல்றமாதிரி பேசுறாய்யா கருவாச்சி. இந்த தெய்வச்செலய வச்சுப் பொழைக்காதவனும் ஒரு மனுசனா?''.

''எப்பவோ யாரோ செஞ்ச பாவத்துக்கு இப்பப் பழிவாங்கறானப்பா இந்தப் பச்ச மண்ண''.

பஞ்சாயத்தே சோகங்கட்டிக் கெடக்கு.

''ஏம்மா பெரியமூக்கி... பஞ்சாயத்து எப்பவும் பிரிக்க நெனைக்காது. சேத்துவிடத்தான் நெனைக்கும். ஆனா அந்தப் பயலோ 'அத்துவிடுங்க ஆளவிடுங்க'ன்னு புடிச்ச புடியிலயே நிக்கிறான். நீ என்னாத்தா சொல்ற''.

விக்கி விக்கி அழுதா பெரியமூக்கி. சல்லுன்னு மூக்குச்சிந்தித் தரையில எறிஞ்சிட்டு முந்தானையில மூக்கத் தொடச்சுக்கிட்டே சொல்றா:

''பிள்ள சேந்து வாழணுமேன்னு பெத்தவயிறு பத்தி எரியுது. ஆனா அனுப்பிவச்சா எம்பிள்ள என்னதில்லேன்னு போயிருமோன்னு பயமா வேற கெடக்கு. இதுக்கு மேல என்ன சொல்லப்போறேன்?. பஞ்சாயத்துக்குப் பாத்தியப்படுறேன்''.

அம்பலக்கல்லுல ஒக்காந்திருந்த பஞ்சாயத்துப் பெருசுக பெரிசா ரெண்டுமூணு பெருமூச்சு விட்டாக. யோசிச்சு ஒதடுபிதுக்கி தலைய அங்கிட்டும் இங்கிட்டுமா ஆட்டிக்கிட்டாக. பெறகு ஒருத்தருக் கொருத்தர் காது கடிச்சுக்கிட்டாக. கடைசியா அடித்தொண்டையில ஒரு கனைப்புக் கனைச்சாரு உருமாப் பெருமாத்தேவரு. அந்தக் கனைப்பு ஒண்ணும் தொண்டையில பிசிறு போறதுக்கில்ல, சலசலன்னு சலம்பல் பண்ணிக்கிட்டிருக்கிற சபையைத் தம்பக்கம் திருப்புற ஒரு சாடை.

''சரி.. வேற வழியில்ல... நெஞ்சுல கல்லக் கட்டிக்கிட்டுத்தான் தீர்ப்புச் சொல்றோம். கட்டையன் கருவாச்சி ஒறவத் தீத்துவிட்டுர்றோம். இன்னிக்கிருந்து அவுக ரெண்டுபேரும் புருசன் பெண்டாட்டி இல்ல. ரெண்டு பேருக்கும் சேர வேண்டிய பொருள ரெண்டு பேரும் வாங்கிக்கிட்டு அவுகவுக பொழப்ப அவுகவுக பாத்துக்கவேண்டியது. பிரிஞ்சாலும் நல்லாருங்க''.

தீர்ப்புச் சொன்ன உருமாப்பெருமாத்தேவரு கொரலு கடைசியாக் கரகரத்துப்போச்சு. ஊருக்கு அவரப்போல நல்ல மனுசங்க நாலுபேரு இருப்பதனாலதான் கடந்துபோற மேகம் அந்த ஊரையும் மறக்காம நனைச்சுட்டுப் போகுது.

அதுவரைக்கும் கட்டிவச்சிருந்த கண்ணீரு கயித்த அத்திருச்சு ''கே''ன்னு அழுகையில கூடிட்டா பெரியமூக்கி. ''எம்பொழப்பு பாதியில போச்சு... எம் பொண்ணு பொழப்பு ஆதியிலயே போச்சே..''

''யம்மா தங்கச்சி பெரியமூக்கி! அழுகைய நிறுத்து தாயி. இது ஊருக்கு ஊரு உண்டானதுதான. பத்துக்கு ரெண்டு பழுதாகறதில்லயா? வேணாம்ன்னு

padippakam

போறவன் விக்கிரமாதித்த மகராசனாயிருந்தாலும் நமக்கு எதுக்கு? போனாப் போயிட்டுப்போறான். நாங்கள்லாம் இல்லையா நல்லது கெட்டதுக்கு. அடுத்து ஆக வேண்டியதப் பாரு''. வளவிக்காரச் சுப்பஞ்செட்டியாரு பெரியமூக்கியத் தேத்தித் தெளிய வைக்கிறாரு.

தகப்பன் சடையத்தேவரும் மகன் கட்டையனும் ஒருத்தர ஒருத்தர் பார்த்து, மீசைக்குள்ள பெரிசு சிரிக்க, செயிச்சனா இல்லையான்னு இடுங்குன கண்ணுல அவன் ஒரு பார்வ பாக்க, ஊராளுக இந்த நாடகத்தப் பாக்கிறதுக்குள்ள தலைய வேறபக்கம் திருப்பிக்கிட்டாக ரெண்டு பேரும்.

இங்க நடக்கிற கூத்துக்கும் தனக்கும் ஒரு சம்பந்தமும் இல்லேங்கிற மாதிரி கண்ணச் சிமிட்டாம ஒக்காந்திருக்கா கருவாச்சி.

''சரி.. அவரவர் பொருளு அவரவருக்குப் போய்ச் சேந்துட்டாப் பஞ்சாயத்து முடிஞ்சிருமப்பா. அதப்பேசி முடிங்க மொதல்ல''. - அம்மைய நாயக்கரு சத்தம் போட்டுச் சொன்னதும் கலையப்போன பஞ்சாயத்து ஒக்காந்திருச்சு திரும்பவும்.

''மொதல்ல பிராது குடுத்தவன் கட்டையனா இருப்பதனால பொருளத் திருப்பத் தரவேண்டிய பொறுப்பு அவனுக்குத்தான். பெரியமூக்கி நீ சொல்லாத்தா. நீ என்னென்ன சீர் செஞ்சயோ... சொல்லித் திருப்பிவாங்கிக்க''.

அதுவரைக்கும் பொலம்பிக்கிட்டிருந்த பெரியமூக்கி வெவரமாயிட்டா. அழுகையத் தூக்கி அங்கிட்டு வச்சுட்டுச் சீர்செஞ்ச பொருளையெல்லாம் மனக்கணக்குலேயே ஓட்டிப் பாத்து ஒப்பிக்கிறா.

ஒரல் ஒண்ணு...

ஒலக்கை ஒண்ணு...

ஒரல் மூடி ஒண்ணு...

அண்டா ஒண்ணு...

தண்ணிக்கொடம் ரெண்டு...

குன்டாச்சட்டி ஒண்ணு...

கும்பா ஒண்ணு...

ஓலவட்டி ரெண்டு...

அம்மி, திருகை, அருவாமணை ஒவ்வொண்ணு...

காமாச்சி வெளக்கொண்ணு...

சொளகு ஒண்ணு...

பாய் ஒண்ணு, தலகாணி ரெண்டு...

''வெளக்கமாறும் வாங்கிவச்சேன் ஆனா அது சீர்ல சேர்றதில்லன்னு'' சத்தம் போட்டுச் சொன்னவ ''இனிமேதான் குடுக்கணும்ன்னு'' கீழ்க்கொரல்ல முனகிக்கிட்டா.

''கேட்டுக்கிட்டியாப்பா. செஞ்ச சீர்எல்லாம் ஒப்படைச்சிரு




படிப்பகம்

padippakam

பஞ்சாயத்துல'' காவக்காரச் சக்கணன் உத்தரவு போட்டாரு கட்டையனுக்கு.

''ஏன் ஒப்படைக்கணும்? கல்யாணச்செலவு நான்தான பண்ணி யிருக்கேன். கழிச்சிட்டுப்போறேன்''. கட்டையன் எகத்தாளமாச் சொல்லவும் மொதலக்கம்பட்டி ஆளுக கையக்கால ஒதறி எந்திரிச்சுட்டாக.

அவ 'வாழ்ந்த பங்கு' கேட்டாக் குடுக்கணுமா இல்லையா அதுல கழிச்சிட்டுப் போ. ''பொழுதிருக்கப் பொருள் வந்து சேராட்டிப் பொழுசாய நீ இருக்கமாட்ட''.

''யாரப்பாத்துடா கைநீட்டிப் பேசுறீக... ஆடுகளவாணிப் பயலுகளா. ஒழுங்கு மரியாதையா ஒக்காரல ஒங்க சுடுகாடு மொதலக்கம்பட்டியில இல்ல; சொக்கத்தேவன்பட்டியிலடி'' - சலம்பல்பாண்டியும் ஒலக்கையனும் வேட்டிய வரிஞ்சுகட்டி வெரசு காட்றாங்க.

பன்னியான்பேரன் பாவம்... அருவாப் பொதைச்ச எடம் அடையாளம் தெரியாம மேலயும் கீழயும் முழிக்கிறான்.

அம்பலக்கல்லுல அதுவரைக்கும் ஒக்காந்திருந்த காவக்காரச் சக்கணன் படக்குன்னு எந்திருச்சு பூண்போட்ட காவக்கம்ப அம்பலக்கல்லுல நாலுதட்டுத் தட்டி - ''ஏலே வெங்கம்பயகளா! பஞ்சாயத்த நீங்க நடத்துங்கடா. நாங்க வெளியேறிக்கிர்றோம்''ன்னு ஒரு சத்தம் விட்டு அத்தன பேரையும் அமத்திப்பிட்டு, ''சீர்செஞ்ச பொருளைச் சேத்துருங்கப்பா''ன்னு முடிவும் சொன்னாரு.

அம்மிக் குழவியிலருந்து அருவாமணை வரைக்கும் எல்லாம் வந்து எறங்கிருச்சு பஞ்சாயத்துல.

''யாத்தா எல்லாம் எண்ணிப்பாத்துக்க. நாளைக்கி நாங்க இருக்க மாட்டோம். அப்பறம் அதக்காணோம் இதக் காணோம்ன்னு இங்க வந்து பொலம்புனா அரச மரம் வாங்கித்தராது. சரி பாத்துக்க....''

''எம் பொண்ணே பொழப்பத்து வந்தபெறகு எந்தப் பொருள் வந்தா என்னா... வராட்டி என்னா...''

பெரியமூக்கி பெரும்போக்காப் பேசிட்டாலும் அரப்பார்வையிலேயே ஒரு அலசு அலசி ஒலவட்டி ரெண்டுல ஒண்ணக்காணோம்னு கண்டு புடிச்சுட்டா.

''ஓலவட்டி ரெண்டு குடுத்தேன். ஒண்ணக்காணோம். போனாப் போகுது. அண்ணந்தானே... அதுலயே கஞ்சி குடிக்கட்டும்; இல்ல... அத அடகுவச்சுக் கஞ்சி குடிச்சுக்கிரட்டும்''.

அந்தச் சொல்லோட சூடுதாங்கமாட்டாத சடையத்தேவருக்கு மீசைக்கு மேல ரோசம் பொத்துக்கிட்டு வந்திருச்சு.

''ஏலே... எங்கடா அந்த ஒலவட்டி? நாய் சம்பாரிச்ச பொருள் நம்மளுக்கெதுக்கு? எறிஞ்சிருங்கடா''.

செத்தவிடத்தல அந்த ஓலவட்டியும் வந்து சேந்திருச்சு.



படிப்பகம்

கடைசிக் கட்டத்துக்கு வந்து நிக்கிது பஞ்சாயத்து.

தொண்டைய ஒரு செருமிச் செருமி சத்தமும் கொஞ்சங்கூட்டிக் கட்டையன் ஆரம்பிக்கிறான் வெவகாரத்த.

''அவுக பொருள அவுகளுக்குக் குடுத்திட்டோமில்ல; எங்க பொருளு எங்களுக்கு வந்திரணுமில்ல?''.

''நியாயந்தானப்பா; ஓம் பொருள் ஒனக்கு வந்திரணும்''.

''அப்பக் கேட்டு வாங்கிக் குடுத்திருங்க''.

''எத?''.

''தாலிச் சரட''

தாலிச்சரடு வாங்குறதுதான் தீக்கிற பஞ்சாயத்துல கடைசிச் சம்பவம். அது முடிஞ்சா எல்லாம் முடிஞ்சு போகும்.

பஞ்சாயத்த விட்டுப் பொம்பளையக் கொஞ்சம் தள்ளி நிறுத்தி, மஞ்சத்தண்ணி தெளிச்சுத் தாலிச்சரட வாங்கிப் புருசன் கையில ஒப்படைச்சிருவாரு நாட்டாம. அந்த நிமிசத்துலயிருந்து அவனுக்கும் அவளுக்கும் ஒட்டுமில்ல ஒறவுமில்லன்னு ஆயிரும்.

தாலிச்சரடு வாங்கிறபோது பல பெருசுக இந்தப் பாவம் நம்மளச் சேரவேணாம்ன்னு சொல்லாமக் கொள்ளாமப் போயிரும்ங்க.

தாலிச்சரடுன்னா வெறும் கயிறா? ஒரு ஆம்பளைக்கும் பொம்பளைக்கும் மத்தியில ஊடாடுற உயிரு. அவுக மதிப்பு அப்படி.

''சரி! சரி! யம்மா பிள்ள கருவாச்சி. கட்டையனுக்கும் ஒனக்கும் இல்லேன்னு ஆகிப்போச்சு. நம்ம சம்பிரதாயப்படி தாலிச்சரட்டக் குடுத்திரு தாயி''.

காஞ்சுகெடந்த அரசங்குச்சிய வச்சுத் தரையில கோலம் கிழிச்சுக்கிட்டிருந்த கருவாச்சி இந்தச் சொல்லக் கேட்டாளோ இல்லையோ தீப்புடிச்சமாதிரி குபீர்னு எந்திரிச்சு நின்னா.

''பஞ்சாயத்துல ஒப்படச்ச பொருள் எதுவேணுமோ எடுத்துக்கிருங்க - இல்ல எல்லாமே வேணுமா எடுத்துக் குடுத்துருங்க. என் உசுரே போனாலும் தாலிச்சரடுமட்டும் தரமாட்டேன்; தாலிச்சரடு வேணுங்கற ஆம்பள என் தலைய அறுத்தெறிஞ்சிட்டு அப்பறம் தாலியெடுத்திட்டுப் போகட்டும்''.

இப்படி ஒரு குண்டத்தூக்கிப் போடுவா கருவாச்சின்னு யாரும் எதிர்பார்க்கல; கருவாச்சியா இப்படிப் பேசுறான்னு நம்பவும் இல்ல.

ஒரு ஈ காக்கா பேசல.

''ஏண்டி! தாலி கழுத்திலகெடந்தா என்னைக்கிருந்தாலும் ஒன் புருசன் ஒன் கவுட்டுக்குள்ள வந்திருவான்னு பாக்கிறியா?'' - கத்துறான் கட்டையன்.

''இல்ல. இந்த சென்மத்துல நீ எனக்குப் புருசனுமில்ல; இந்த பூமியில

padippakam

பெறந்த எந்த ஆம்பளையும் எனக்குப் புருசனாகப் போறதுமில்ல''.

''பொழச்சிருவியாடி இந்த பூமியில... ஆம்பள தொணை இல்லாம?''

''பொழைக்கிறேன்... பொழைச்சுக் காமிக்கிறேன்''.

''பந்தயம் போடுறியா? செயிச்சுருவியா?''

''செயிக்கிறேனோ இல்லையோ.. நான் தோக்கமாட்டேன் மாமா''.

ஊரே அருளேறி நிக்கிது. ஆம்பளைக பொம்பளைக கண்ணுல கண்ணீரா முட்டுது.

''அக்காம விடமாட்டேன்''னு கருவாச்சி மேல பாயப்போன கட்டையன நாலு எளந்தாரிக இழுத்துப்புடிக்க - ''அத்துப்பாரு''ன்னு மொதலக்கம்பட்டி ஆளுக அவளச் சுத்தி அண கட்டிநிக்க அமளி துமளியாகுது பஞ்சாயத்து.

தாலிச்சரடு தரமுடியாதுங்கிற பொம்பளைய - தந்தே ஆகணும்னு சொல்லப் பஞ்சாயத்துக்கு அதிகாரமில்லன்னு தீர்ப்புச் சொல்லிக் கலையுது பஞ்சாயத்து.

மாரடிச்சு அழுதுபோற பெரியமூக்கி பின்னாலயே கருவாச்சியும் நடந்து போறா -

நெஞ்சுல தாலியோட நெஞ்சுக்கூட்ல வைராக்கியத்தோட.



படிப்பகம்

padippakam



# 6

அத்துவிட்டுட்டு வந்த வீடு இருக்கே... அதுவும் ஒரு வகையில எழவு வீடுதான். வித்தியாசம் என்னான்னா - அங்க ஒடம்பு செத்துப் போகுது; இங்க ஒறவு செத்துப்போகுது. மத்தபடி ஆள் செத்த வீட்டுக்கு உண்டான அத்தன மரியாதைகளையும் அத்துவிட்ட வீட்டுக்கும் ஓடிவந்து செய்வாக ஊர் ஆளுக.

படிப்பகம்

padippakam

பசுமாட்டுச் சாணிகரைச்சுப் 'பசேல்'ன்னு வாசல் மொழுகி, கருவாச்சி தலையில 'சல்லுச் சல்லு'ன்னு மஞ்சத் தண்ணி அள்ளித் தெளிச்சு, மகளக் கட்டிப்புடிச்சு 'ஊரே கேளு நாடே கேளு'ன்னு நெஞ்சு வெடிச்சுவிழுக ஒப்பாரியில கூடிட்டா பெரியமூக்கி.

"கருவாச்சி கூந்தலுக்குக்
கைநெறையப் பூவுவச்சேன்
தலப்பூவு வைக்கயில
தலையெழுத்த அறியலையே

தாலிச்சரடிருக்கச்
சரஞ்சரமாப் பூவிருக்கக்
கட்டுனவன் வாழ்ந்திருக்கக்
கைம்பெண்ணா நிக்கிறாளே"

மார்மேல ஒரு அடி மகமேல ஒரு அடின்னு மாத்திமாத்தி அடிச்சுப் பெரியமூக்கி கத்திக் கதறவும் ஊர்ப்பொம்பளைக கூடித் தாய்மகளத் தனித்தனியாப் பிரிச்சுவிட்டுத் தெம்புதெறம் சொல்றாக.

"ஏய் விடுடி;! என்னமோ பிள்ள சாகக் குடுத்தவ மாதிரி ஒப்புச் சொல்லி அழுகுறவ. ஏதோ நீ செஞ்ச புண்ணியம் இந்தளவுல ஒம்பிள்ள வீடுவந்து சேந்துச்சு. இன்னம் மூணுமாசமோ ஆறுமாசமோ அந்தக் கொலகாரப் பாவியோட குடும்பம் நடத்தியிருந்தா கருவாச்சியக் கண்ல கண்டிருக்கமாட்ட. அவ கட்ன சீலயத்தான் பாத்திருப்ப. பத்தே நாள்ல விட்ருச்சு ஏழரைநாடுன்னு குலதெய்வத்தக் கும்பிட்டுத் தேங்கா ஒடைக்கறத விட்டுட்டு அழுக என்ன அழுக?"

"இழுத்து வச்சுக் கழுத்தறுத்துப்புட்டானே. இந்தூர்ல இதுக்கு அங்கிட்டு எப்பிடித்தான் பொழைக்கப்போறமோ... கட்டித் தீத்தவன் காலடிக்குள்ள".

"ஈ எறும்பு பொழைக்குது... நாய் நரி பொழைக்குது... நீயும் கருவாச்சியும் பொழைக்க முடியாதா? கண்ணத் தொடச்சுக்கிட்டுக் காரியத்தப் பாராத்தா".

உரிச்ச பலாப்பழம் மாதிரி சடைசடையாத் தோல் தொங்கிப் போன மண்டையன் கெழவி கணீர்னு பேசிப்பிட்டா.

துண்டா ஓதுனாத்தான் மந்திரமா? மாசு மருவில்லாத நல்ல மனசிலயிருந்து வயசான நாக்கு வழியா வந்துவிழுகுதா இல்லையா - அதுவும் மந்திரம்தான்.

பஞ்சாயத்துல ஒப்படச்ச பொருளையெல்லாம் எண்ணிக் கொண்டாந்து எறக்கிட்டு, சருவச்சட்டியில குடுத்த மோர ஆளுக்கொரு சொம்பு அண்ணாக்காக் குடிச்சிட்டு, போய்ட்டு வாரோம்னு சொல்லாமப் போய்ட்டாக மொதலக்கம்பட்டி ஆளுக.




படிப்பகம்

padippakam

தீத்த வீட்லயும் எழவு வீட்லயும், ஒலவைக்கிறதில்ல; ஊரே சாப்பாடு குடுக்கும் அந்த வீட்டுக்கு.

சோளச்சோறு, கேப்பக்களி, கம்பங்கஞ்சி, கத்திரிக்காக் கொழம்பு, கருவாட்டுச்சாறு, அவிச்ச கானப்பயறுன்னு ஈயச் சட்டியில, தூக்குவாளியில, பித்தளக்கும்பாவுல வந்து குமுஞ்சுபோச்சு பெரியமூக்கி வீட்டுல. கொண்ணவாயனச்சேத்து மூணாளு இருக்கிற வீட்ல இருபதாளுக்குச் சாப்பாடு. ஆனா மூணுல ஒரு ஆள் தொடணுமே - யாரும் தொடல.

●

இங்க இவுக கத இப்படியிருக்க... அங்க மேலயும் கீழயும் தவ்வுறான் கட்டையன். கருவாச்சிய விட்ட பேயி கட்டையனப் புடிச்சுக்கிருச்சு போலருக்கு. அதுலயும் இது சாராயம் குடிச்ச பேயி; சட்டையக் கிழிச்சு அலையிது.

''மந்தையில வாங்கிட்டாடா மானத்த. பொழச்சுக் காமிக்கிறேன்னு ★சம்பிராயம் போட்டுல்ல போறா. பொழச்சுப் பார்றி... பொழச்சிருவியா? பொழைக்க விட்ருவேனா?... கண்ணுக்குத் தெரியாம ஒன்னிய ஊரவிட்டே ஒதுக்குறண்டி பிள்ளா...'' - கெடுதல் புத்தி மப்பேறி நிக்கிது கட்டையனுக்கு.

மனுசங்க கூடி ஊருன்னு ஒண்ணு உண்டாக்குனதே ஒரு சவுரியத்துக்குத்தான். வாழ்வோ தாழ்வோ குடுத்து வாங்க ஒரு வசதிக்குத்தான். ஏங்கிட்ட ஒண்ணுருக்கு ஓங்கிட்ட ஒண்ணுருக்கு; ஒண்ணக் கொடுத்து ஒண்ணப் பண்டமாத்துப் பண்ணிக்கிரலாமேங்கிற கணக்குத்தான். ஊருக்கும் ஒரு தனிமனுசனுக்கும் உள்ள ஒறவு நரம்பு அந்து போச்சுன்னு வச்சுக்குங்க., ரத்தம் போய்ச்சேராது. ரத்தம் போய்ச்சேராத பாகம் செத்துப் போகுமா இல்லையா?

''ஒனக்கும் எனக்கும் உள்ள ஒறவ அத்துவிட்டமாதிரி ஊருக்கும் ஒனக்கும் உள்ள ஒறவையும் அத்துவிட்றேன்டி'' - சாராயத்துல அடிச்சுச் சத்தியம் பண்றான் கட்டையன்.

''ஏலே! ஒலக்கையா! சலம்பல்பாண்டி! தண்ணிக்கெணத்துல கருவாச்சிக்கு ஒரு பொம்பளையும் தண்ணிதூக்கிவிடப்புடாதுன்னு சொல்லுங்கடா. அந்தத் தெருவுலயோ அடுத்த தெருவுலயோ எந்தப் பொம்பளையும் அவ கூடப் பேசப்படாது... அடுப்புக்குத் தீ குடுக்கக்கூடாது... அரிசி, பருப்பு, உப்பு, புளி, மொளகா, சீரகம், எண்ணெ, சீமத்தண்ணின்னு அவளுக்கு யாரு மொறக்கடன் குடுத்தாலும் மொற கெட்டுப்போயிரும்ன்னு சொல்லிப்புடுங்கடா. அவ தர்ற வருசக்கூலி ஆறு மரக்காலுக்குப் பதிலா நாம ஏழு மரக்கா குடுத்திருவோம்; அவ வீட்ல அமுக்கெடுக்கப்படாதுன்னு சொல்லிருங்க வண்ணாத்திக்கு. அவ காடு கரைக்கு யாரும் வெதைக்கப் போகக்கூடாது; வேலைக்குப் போகக்கூடாது. அதையும் மீறி வெளைஞ்சா... வெளைஞ்ச வெள்ளாமைய யாரும் வீட்ல வந்து சேக்கப்படாது. ஏலே பன்னியாம்பேரா! மூணாம்பேரு அறியாம இதப்

---

★ பந்தயம்




படிப்பகம்

padippakam

பண்ணனும்டா. அப்பிடித் தப்பிகிப்பித் தெரிஞ்சு ஊர்ப்பெருசுக யாரும் லல்லுப்புல்லுன்னு தவ்வுன்னாங்கின்னா, பெருமாத்தேவனப் பின்னுக்கு வெட்டுங்க. சக்கணன முன்னுக்கு வெட்டுங்க. கொலக் கேச நான் பாத்துக்கிறேன். அவன் யார்ரா அவன்... கொண்ண வாயனா..? ஒடிஞ்ச ஒட்டடைக் குச்சிக்கு உருமாக் கட்ன மாதிரி.பெரியமூக்கி வீட்ல தின்டு கழியிற தேவாங்கு. அந்தப் பண்ணைக்கிருக்கிற நாயப் பத்திவிட்ரணும் மொதல்ல''.

●

சொக்கத்தேவன்பட்டியில ஒரே ஒரு பொட்டிக்கடைதான். உப்பு, புளி, மொளகா முறுக்கு, முட்டாயி, கருப்பட்டி, அவிச்ச கெழங்கு, அவிச்ச மொச்ச... காய்கறி மாதிரி அத்தியாவசியப் பொருளுகளும், பீடி,சோடா, சவக்காரக்கட்டி மாதிரி ஆடம்பரப் பொருளுகளும் அங்க கெடைக்கும். பணங்காசுக்கும் விக்கிறதுண்டு; பருத்தி தவசத்துக்கும் பண்டமாத்துப் பண்ணிக்கிறதுண்டு★. முத்துக்கருப்பு முத்துக்கருப்புன்னு ஒரு பய - பரம்பரையா வச்சிருக்கான் அந்தக் கடைய. புதுசாக் கட்டிக்கிட்டுவந்த பொண்டாட்டியக் கடையில விட்டுட்டு, சந்தைக்குப் போயிட்டான் முத்துக்கருப்பு சாமான் வாங்க. புதுப் பொண்ணு காக்கி வாடன்பட்டிக்காரி. மதமதமதன்னு ஒடம்பு; எரும மாடு வளத்து ஊருக்குப் பால் ஊத்துற அவுக அப்பன் ஒரு மாட்ட இவளுக்கே நேந்துவிட்டான் போலிருக்கு; சும்மா தளதளதளன்னு இருக்கா. தாலிக்கயித்து மஞ்சள்ல கூட இன்னம் அழுக்கு ஒட்டல. வாக்கப்பட்டு வந்த புதுசுங்கிறதனால ஊர்நாடு பத்தி ஒண்ணுந்தெரியாது அவளுக்கு.

அவ கடையில பீடிவாங்கிப் பத்தவச்சுக்கிட்டே, தொங்கவிட்ட வாழப்பழத்தார்ல காம்புகறுத்த பழமா திருகித் திருகித் தின்னுக்கிட்டிருக்கான் கட்டையன் கூட்டாளிகளோட.

அப்ப...

ஒரு கையில சாட்டக்கம்பும் ஒரு கையில ஓரணாவுமா 'தவக்' 'தவக்'குன்னு நடந்து வாரானய்யா கொண்ணவாயன். பெரியமூக்கி சொல்லிவிட்டிருக்கா ஓரணாவுக்கு வாழக்கா வாங்கிட்டு வாடான்னு.

வந்து நிக்கிறான் பய மூச்சுவாங்க.

'வாடி மாப்ள வா' வசமா மாட்டிக்கிட்டவன வம்பிழுக்க நெனைக்கிற கட்டையன், வச்சகண்ணு மாறாம அவனையே பாத்துநிக்கிறான்.

அரை ஆள்லயும் கொறையாளு கொண்ணவாயன். சில மரங்க வேர் பரவ முடியாம வருசம் பத்தானாலும் அங்கயே நின்னுபோயிரும் பாருங்க, அப்படி வாலிபத்துக்கேத்த வளத்தியில்லாமக் குரும்பையாகிப் போன பய அவன். சவட்டக்காலு... செம்பட்டத்தல... அதுல அங்கங்க கால்ரூவா அரரூவா அகலத்துக்கு ஊடுசொட்ட. கொஞ்சம் கூனு. உள்ளபோன நெஞ்சுக்கூடு, முட்டி வெளிய தள்ளிருச்சு முதுக. அவன் தோலு பெறந்த ராசிக்கு முடி மொளைக்காது மூஞ்சியில. தலையில உருமா. இன்னொரு

★ காவியம் நிகழும் காலம் இந்திய சுதந்திரத்திற்கு முன்னென்று கொள்க



படிப்பகம்

padippakam

ஆளும் உள்ள நொழஞ்சு போட்டுக்கிடலாங்கற மாதிரி தொளதொளன்னு ஒரு சட்ட. மடிச்சுக்கட்ன ஒரு காவி வேட்டி. கால்ல செருப்பு இல்லாட்டியும் பரவாயில்ல, கையில சாட்டக்கம்பு இருக்கணும் அவனுக்கு. கையில சாட்டக்கம்பு இல்லாம அவனால ஒண்ணுக்கு ரெண்டுக்குக் கூடப் போகமுடியாது; வராது.

முத்துக்கருப்புபொண்டாட்டியையும் கட்டையனையும் மாறிமாறிப் பாத்து மருகிநிக்கிறான் கொண்ணவாயன்.

'என்னாப்பா வேணும்'னு கேட்டா முத்துக்கருப்பு பொண்டாட்டி, ரெண்டு வேலசெய்ய வேண்டிய மாராப்பு ஒரு வேல மட்டும் செஞ்சு ஒதுங்கி நிக்க. வெவரம் பத்தாது அவளுக்கு; மத்தபடி வெனயம் இல்ல.

கட்டையனுக்கு பயந்து அவளையே உத்து உத்துப்பாத்துக் கிட்டிருந்த கொண்ணவாயன் உள்ளங்கை வேர்வையோட ஓரணாவ நீட்டிக் கேக்குறான்:

''ஓரணாவுக்கு வா... வா... வா...''

அவன் கொண்ணவாயங்கிறதும் வாழக்கா கேட்டு வந்தவனுக்கு வார்த்தை சிக்குதுன்னும் தெரியாத காக்கிவாடன்பட்டிக்காரி தன்ன ஓரணாவுக்கு வாடின்னு கூப்புடுறான்னு நெனச்சுக்கிட்டு'எடு தூமச்சீல 'ன்னு எந்திரிச்சு, பெரம்புத்தட்டுல அடுக்கிவச்சிருந்த கெழங்கையெல்லாம் அவன்மேல தூக்கியெறிஞ்சு, 'காச் மூச்'ன்னு கத்திக் குமிக்கிறா. 'நான் உத்தமியாக்கும் பத்தினியாக்கும்.. என்ன ஓரணாவுக்கு வா வான்னு கூப்பிடுறான் ஒரு குரங்குப் பய. சொக்கத்தேவன்பட்டிக்கு வாக்கப்பட்டுப் போகாதடி... கோயில்மாடுகளுக்குப் பதிலா அது ஆம்பளைகள நேந்துவிட்ட ஊருடின்னு சொன்னாகளே, நான் கேக்கலையே. நல்லது கேக்க இந்த ஊர்ல நாதி இல்லையா...'

எக்கச்சக்கப் பத்தினித்தனத்தக் காமிக்கிறதுக்கு இதான்டா நேரம்ன்னு அவ ஆடம்பரமா அழுகையிலகூட... கொண்ணவாய்ப் பயல ஊரவிட்டு ஓட்டறதுக்கு சாமியாக் குடுத்த சமயம் இதுதான்னு முடிவு பண்ணிட்டான் கட்டையன்.

''எலே ஏழு மாசத்துல பெறந்தவனே! நம்மள நம்பி இந்த ஊருக்கு வாக்கப்பட்டு வந்தவளையா வாடி படுக்கன்னு கூப்பிடுற. மூஞ்சிலயும் நெஞ்சிலயும் முடிமொளைக்காத பயலுக்கு அடுத்தவன் பொண்டாட்டி கேக்குதா?''.

கொண்ணவாயன் கையிலிருந்த சாட்டக்கம்பையே புடுங்கி அவனச் சாத்து சாத்துன்னு சாத்திப் பஞ்சுபறத்துறான் கட்டையன். நாய் ஒண்ணு எலும்புத்துண்டப் பெரட்டிப் பெரட்டிக் கடிக்கிற மாதிரி வெரட்டி வெரட்டி அடிக்கிறான். மின்னல்வெட்டி இடி எறங்குற மாதிரி இருக்கு பாவம் பச்சைப் பய ஒடம்புல.

''யா.. யா.. யா... யாத்தே...! யப்பே...! என்னியக் கோ... கோ... கோ... கொல்றாய்ங்க...''

சதையில்லாத ஒடம்பு; எலும்புல அடி எறங்க எறங்க, கைரெண்டையும் தூக்கிக் கும்புட்டுக் கும்புட்டுக் கத்துறான் கொண்ணவாயன்.





படிப்பகம்

padippakam

சாட்டையிலயும் வீசி வெளாசிட்டு, சாட்டக் கம்பாலயும் மொழங்கால்லயும் தோள்பட்டையிலயும் நொக்கு நொக்குன்னு நொக்கிட்டு சாட்டக்கம்பு நுனியில இருக்குற தார்முள்ளாலயும் அவன் கூன்ல ஒரு குத்துக் குத்தி ரத்தம் ஒழுக விட்டுட்டு, 'ஓடிப் போ நாயே'ன்னு ஒரு எத்து எத்துத் தள்ளி அவன் சாட்டக்கம்ப அவன்கிட்டயே குடுத்திட்டு அவன் கொண்டுவந்த ஓரணாவத் தன் கணக்குல கழிச்சுக்கன்னு கடக்காரிக்கிட்டச் சொல்லிட்டு 'ஊர்காத்த உத்தமனா'ப் போறான் கட்டையன்.

●

வாழக்கா வாங்கப் போனவன மசங்கியும் காணமேன்னு தெருவெல்லாம் தேடித் திரிஞ்சு, கடைசியில நடந்த கதையக்கேட்டு 'நாசமாப் போக'ன்னு கட்டையனுக்கு ஒரு சாபம் விட்டுட்டு ஊருக்குத் தெக்க ஒத்தப்புளியமரக் கல்கட்டுல காயத்தோட மொனகிப் படுத்திருந்த கொண்ணவாயன, 'வாடா தங்கம்'ன்னு வீட்டுக்குக் கூட்டிட்டு வந்து காயத்துக்கெல்லாம் மஞ்சப்பத்துப் போட்டுவிட்டு, கவுண்டர்வீட்ல காப்படி அரிசி மொறக்கடன் வாங்கிக் கஞ்சிகாச்சி, கானத்தண்ணியில ரசம்வச்சுக் குடுத்து, 'படுறா மகனே படு'ன்னு படுக்கவச்சுட்டா பெரியமூக்கி.

பொத்திப்படுத்தா வேட்டிபட்டுக் காயம் காந்தும்ன்னு அதையும் ஒதறிட்டு ஒறக்கம்வராமக் கெடந்த கொண்ணவாயனுக்கு ரத்தக்கசிவு நின்னுபோச்சு; கண் கசிவு நிக்கல பாவம்.

●

கரட்டடியில பெரியமூக்கி புருசன் துரைச்சாமிக்குப் பாத்தியப் பட்ட பூர்வீகக்காடு மூணு குறுக்கம் இருக்கு. வருசம் ரெண்டாச்சு, மருந்துக்குக்கூட மழை பெய்யல. வெவசாயம் காணாத பூமியில வீட்டடுப்புக்கு வெறகு வெட்டிக்கிட்டிருக்காக பெரியமூக்கியும் கருவாச்சியும்.

கருவேலமுள்ளு, எலந்தமுள்ளு, காஞ்சகள்ளி, கத்தாழமட்ட எல்லாத்தையும் பெரியமூக்கியும் கருவாச்சியும் வெட்டிப்போட, கொண்ணவாயன் கவட்டைய வச்சுக் கட்டி அடைய, ஈசானிய மூலையில ஏறிவருது மேகம். கொச்சக்கயித்த வச்சு முள்ளக்கட்டி முடிச்சுப் போடறதுக்குள்ள அண்ணாந்து பாத்தா ஆகாயத்தக் காணோம்.

மாசம் ஆடிமாசம். எந்த நேரமும் அந்து விழுந்திருவேன்னு மின்னிச்சொல்லுது மேகம். ''ஒன்னிய ஒரு அண அணச்சுக்கிறேனாத்தா''ன்னு பூமாதேவியப் பாத்து வளஞ்சு எறங்கி வருது ஆகாயம்.

''வருதுடா...

வரப்போகுதடா...

வந்துருச்சுடா...''

சட சட சடன்னு எறங்குன மழையில... காடு தெரியல, கரடு தெரியல, மல தெரியல, வழி தெரியல, வேலியோரம் இருந்த வேலாமரமும் தெரியல.



படிப்பகம்

padippakam

சும்மா சவட்டு சவட்டுன்னு சவட்டுது மழை.

ஒவ்வொரு துளியும் எத்தம் பெரிசுங்கிறீங்க! கால்ரூவா அரரூவாயாச் சில்லரை மாத்தி ஆளுகமேல எறியிறமாதிரி எறியுதய்யா மழை.

முள்ளுக்கட்ட அங்கயே போட்டுட்டு வேலாமரத்தடியில ஓடிப்போயி ஒதுங்கறதுக்குள்ள மூணுபேரும் நனைஞ்சு போனாக.

காடு நனையுது; கல்லு நனையுது. பூமிக்குள்ள வேர் நனையுது; புத்துக்குள்ள பாம்பு நனையுது. காட்டுப் புதருக்குள்ள காடமுட்டை நனையுது. பறவை ஒண்ணு எப்பவோ இட்டுப்போன எச்சத்துல பாற இடுக்குல போயி விழுந்த வெத நனையுது. நனையாம வாரது மேயப்போயி வீடுவார பசுமாட்டுக் காம்புதான்.

தறிகெட்டு ஆடுதுக தன்னால மொளச்ச காட்டு மரங்க. எல்லாம் தலைவழியாத் தண்ணிகுடிச்ச சந்தோசம்தான்.

பெருங்கொண்ட மழை; ஓடைக்காடெல்லாம் ஒடப்பு எடுத் திருச்சு. மாடு நடந்தா, தடத்துல தண்ணி ஊறுதுன்னாப் பாருங்களேன். சொக்கத்தேவன்பட்டியும் சுத்துப்பட்டு ஊர்களும் குளுந்து போச்சு குளுந்து.

விடிய... ஊரே ஏர்மாடு பூட்டி ஓடுது ஒழவுகாடு தேடி.

காடு வெதைக்கணும்... கையில துட்டில்ல. ஆடிக்காத்துல அரசஞ்சருகு மாதிரி அங்கிட்டும் இங்கிட்டுமா அலையிறா பெரியமூக்கி. பஞ்சாயத்துக்கு வந்த ஆளுகளுக்குக் கஞ்சிகாச்சி ஊத்தியே கரஞ்சுபோச்சு கையில இருந்த காசு. வெதத்தானியம் வாங்கணும்... உழுகணும்... முப்பது நாளைக்குள்ள களையெடுக்கணும். எங்க போவா துட்டுக்கு?

சீதனம் போயித் திரும்ப வந்த அண்டாவ அடகுவச்சா முத்துக்கருப்பு வீட்ல.

பத்துரூவா கேட்டதுக்கு அந்தப் பாவிப்பய ஏழுக்கு மேல ஏறிவரல.

அம்மையநாயக்கர் வீட்டுக்கு ஓடிப்போயி வெதத்தானியம் வாங்கிக்கிட்டா.

மூணு குறுக்கம் காட்டுக்கு மூணுபடி சோளம் போதும். ஊடு வெத வேணுமே! எள்ளு முக்காப்படி - மொச்சப்பயறு - கல்லுப்பயறு - பாசிப்பயறு - தட்டாம்பயறு - கானம்- தொவர - இதெல்லாம் வகைக்குக் காலரைக்காப்படி வாங்கித் துண்டுதுண்டாத் துணியில முடிஞ்சு மொத்தமாத் தோள்ல சொமந்து வீடுவீடா அலையிறா ஏர்மாடு தேடி.

வெதப்புக்கு மட்டும் ஒத்த ஏர் ஆகாது; ரெட்ட ஏர் வேணும். எவனக் கேட்டாலும், எங்க காடு உழுதுட்டு ஒங்க காடு வாரேங்கிறான்.

நாலு நாளாச்சு... அஞ்சு நாளாச்சு.. ஏர் கெடைக்கல; ஈரம் போயிக்கிட்டிருக்கு இவ காட்ல.



படிப்பகம்

padippakam

நாளைக்குப் பாப்போம் நாளன்னைக்குப் பாப்போம்னு சொல்றாங்களே தவிர உறுதி சொல்றானில்ல ஒருத்தனும்.

எப்பிடியும் ரெண்டு நாள்ல ஏர் கெடைச்சிரும்ங்கற நம்பிக்கையில இருக்காக பெரியமூக்கியும் கருவாச்சியும்.

அவுக நம்பிக்கையில நஞ்சு ஊத்தற மாதிரி,

காதோட காதா ஊருக்குள்ள கண்ணுக்குத் தெரியாத ஒரு கலவரத்த உண்டு பண்ணிக்கிட்ருக்கான் கட்டையன்:

''என்னிய மீறிக் கருவாச்சி காட்டுக்கு எவன் உழுகப்போனாலும் உழுத மாடு திரும்ப வரும்; உழுதவன் திரும்பமாட்டான்''.



படிப்பகம்



# 7

**பொ**துவா மனுசக்கூட்டத்துக்குள்ள குணமே கெட்டதுக்குப் பயப்படறதுதான்.

தெம்பு சொல்லிப் பாருங்க... அவ்வளவு சீக்கிரம் தேறமாட்டான் மனுசன். பயமுறுத்திப் பாருங்க... உடனே மெரண்டு உசுர் கொறஞ்சு போவான்.

'போறவழியில புங்க மரத்துல ஒரு கிளியிருக்கு, பாத்துட்டுப் போப்பா''ன்னு சொல்லிப் பாருங்க.

padippakam

'கிளியா... இருக்கா... நான் போறவரைக்கும் இருக்குமா... பச்சக்கிளியா... பஞ்சவர்ணக்கிளியா...'ன்னு ஆயிரங்கேள்வி கேப்பான்.

'போறவழியில ஒரு புலி இருக்கு . பாத்துப்போப்பா'ன்னு சொல்லிவிட்டுருங்க. ஒரு கேள்வியும் கேக்காம 'எங்க ஊரு அதுக்கு எதிர்த்தெசையில'ன்னு ஓடியே போவான்.

கெட்டது எப்பவுமே கேள்விகேக்கவிடாம ஒட்டிக்கிரும்.

கட்டையனுக்கும் அப்படித்தான் பயந்துபோச்சு சொக்கத் தேவன் பட்டி.

'பெரியமூக்கி பாவம் கெழண்டுபோனவ; அத்துவிட்ட கருவாச்சிவேற அத்துவானக்காட்ல நிக்கிறா. வீட்டுக்கு ஒரு ஏரு போயி உழுது குடுங்கப்பா'ன்னு சொல்லியிருந்தா ஒரு பய உழுகப்போயிருக்க மாட்டான் ஊர்ல.

'உழுகப்போனவன் வீடு திரும்பமாட்டான்; கருவாச்சி காடு உழுக எவனும் போகாத'ன்னு கட்டையன் கமுக்கமாப் பரப்பவும், 'எதுக்குடா பொல்லாப்பு'ன்னு அவனவன் இஞ்சி இறுகிட்டான். பெரியமூக்கி மேல வெறுப்பல்ல; கட்டையன் மேல பயம்.

பொண்டாட்டி தப்பான வழியில போறாங்கற சங்கதி ஊருதெரிஞ்சு, நாடுதெரிஞ்சு கடை.....சியாத்தான் புருசனுக்குத் தெரியுங்கிறமாதிரி, ஏர்மாடு தடுத்து வச்சிருக்கிறது கட்டையன் வேலதான்ங்கிறது அஞ்சாம் நாளுதான் தெரியவருது பெரியமூக்கிக்கு.

'அடப்பாவிப் பயலே'ன்னு நெஞ்சப் புடிச்சு ஒக்காந்து போனாக தாயும் மகளும்.

காடு கர பூரா ஒழவாயிருச்சு.

இந்தா இந்தான்னு ஈரம் போயிக்கிருக்கு. இன்னம் ரெண்டு நாள் விட்டா ஒழவு எறங்காது; விழுந்தவெத மொளைக்காது.

நான் என்ன பண்ணுவேன் ஏது பண்ணுவேன்னு ஆளில்லாத ஊருக்குள்ள அவ அலைய, அரசமரத்து அம்பலக்கல்லுல படுத்துக்கெடக்கான் கேப்பக்களியான்.

கட்ன வேட்டியோட - வெறும் ஒடம்போட - தலைக்கு வச்சாக் களவு போயிரும்னு துண்டச் சுருட்டித் தொடையிடுக்குல வச்சுப் படுத்திருக்கான்.

பாவம்... பெறவியிலயே வாயும்பேசாது; காதும் கேக்காது அவனுக்கு.

குடும்பம் இல்ல; ஒத்த ஆளு. ரெண்டு மாடுகளும் மூணு செம்பிலியாடுகளும்தான் சொந்த பந்தங்க. இவன் கஞ்சிக்கு அதுக பொறுப்பு; அதுக தீனிக்கு இவன் பொறுப்பு. ஒரு கெட்ட பழக்கமில்ல அவனுக்கு; ஒழச்சுப் பொழைக்கிற சந்நியாசி. ஒரு பெறவி முடிஞ்சாத்தான் இன்னொரு பெறவின்னு சாமியாருக சொல்ற மாதிரி, ஒரு வேட்டி கிழிஞ்சாத்தான் இன்னொரு வேட்டிங்கிறது அவன் பொருளாதார ஜீகம்.



படிப்பகம்

padippakam

அவனுக்கின்னு உள்ளதெல்லாம் ஒரே ஒரு ஆசதான்.

நெல்லுக்கஞ்சி.

நெல்லுக்கஞ்சின்னா உசுரு கேப்பக்களியானுக்கு. தைப்பொங்க தீவாளிக்குத்தான் நெல்லுக்கஞ்சிங்கற ஆடம்பரமெல்லாம் அப்ப. கல்யாண வீடு, கருமாதி வீடுகள்ல ரெண்டு எல வாங்கி ஒண்ணுக்கு மேல ஒண்ணு போட்டு ஒக்காந்திருவான். மேல் எலையில மொதப்பந்திச் சோத்தவாங்கித் தின்னுபுட்டு, அந்த எலைய எடுத்தெறிஞ்சிட்டு வேட்டியில கையத்தொடச்சு ரெண்டாம் எலைய விரிச்சு, ரெண்டாம்பந்திக்கு வந்த மொத ஆளுமாதிரி அங்கேயே ஒக்காந்திருவான்.

இப்ப.... மூச்சுவிடற பொணம் மாதிரி ஒறங்குறான்.

கத்திக் கத்திப் பாத்தா பெரியமூக்கி. அவன் எந்திரிக்கல. காத்து சத்தம் போட்டா கல்லு எந்திரிக்கும்? ஒரு குச்சி எடுத்து அடிச்சு எழுப்புனா.

கனாக்கண்டு எந்திரிச்சவன்மாதிரி மேலயும் கீழயும் முழிச்சவன், கொறட்டைய நிறுத்திட்டுக் கொட்டாவிய விடுறான்.

எந்த மொழியில பேசுனாலும் காசுல பேசுறமாதிரி வருமா? அதுலயும் இவன் வாய்பேசாதவன். அண்டா அடகுவச்ச ஏழு ரூவாயில விதைத்தானியத்துக்கு ரெண்டேமுக்கா ரூவா போக முடிஞ்சு வச்சிருந்த நாலேகால்ல ஒரு ஒண்ணேகால் எடுத்துக் குடுத்து 'உழுக வாப்பா'ன்னு சாடையில சொல்லவும், அவன் தலையச் சொரண்டி கர்று புர்றுன்னு மொனகுறான்.

சாமியக் கும்பிட்டு அவன் மேல பிரம்மாஸ்திரத்த எடுத்து எறிஞ்சா பெரியமூக்கி

''பச்ச நெல்லுக் குத்தி மத்தியானம் நெல்லுக்கஞ்சி உருண்ட புடிச்சுத் தாரேன்''னு சாடையில சொல்லவும், அதுவரைக்கும் கண்ல ஒட்டியிருந்த ஒறக்கம் ஓடியே போச்சு கேப்பக்களியானுக்கு.

சரின்னு தலையாட்டிட்டான்.

பாதிக்கெணறு தாண்டிட்டா பெரியமூக்கி. இன்னொரு ஏருக்கு என்னா பண்றது?

முக்குறுணி வீட்டுக்கு ஆடிக்கு விருந்தாடி வந்திருக்கான் அவ மருமகன் சவட்டையன்; பின்னத்தேவன்பட்டிப் பெறப்பு. நல்ல எளந்தாரி. மாடு மாதிரி வேல செய்வான். ஆனா சாராயமும் கஞ்சாவும் குடுத்தா வேட்டியக் கழத்திக் குடுத்திட்டு வெறும் ஆளா வீட்டுக்கு வந்திருவான். சுத்தி வளைச்சுப் பாத்தா, பெரியமூக்கிக்கு முக்குறுணி நாத்துனா மொறையில வந்து சேருவா. உழுதுமுடிச்ச அவ மாடுக ரெண்டும் தொழுவுல இருக்கு.

''யப்பா முக்குறுணி மருமகனே! சாமியாப் பாத்து ஒன்னிய அனுப்பிருக்கு ராசா. காடு உழுதுகுடுத்துட்டுப் போ''ன்னு அவ காச எடுத்து நீட்ட - விருந்தாடியா வந்திருக்கவன் வேலைக்குப் போனா மதிப்புக்



படிப்பகம்

padippakam

கம்மின்னு அவன் மரியாதிபாக்க - முந்தானையில ஒளிச்சுக் கொண்டாந்திருந்த சாராய சீசாவ எடுத்து நீட்டி ஓங்கி அடிச்சு ஒடைச்சா அவன் மரியாதைய.

சீசாவா... லேசா? அவனும் தலையாட்டிட்டான்.

சரின்னு சொன்ன சவட்டையன் இன்னொரு குண்டத்தூக்கி எறியிறான்.

''நான் வந்திருவேன் நல்லத்தா. நேத்து உழுகப்போன மயிலக்காள, பின்னங்கால்ல கொழு எடறி எந்திரிக்க மாட்டாமக் கெடக்கு. கடப்பாரைக் கவுண்டரு விடிய வந்து ஏர்க்கலப்ப வேணும்ன்னு எரவல் வாங்கிட்டுப் போயிருக்காரு. என்னிய என்ன பண்ணச் சொல்றே''ங்கறான் காசப் பையில போட்டுக்கிட்டு சீசாவையும் இறுக்கிப் புடிச்சுக்கிட்டு.

''எம் பூமியில மழ விழுக வழிகாமிச்ச சாமி, வெத விழுக வழி காமிக்கலையே''.

மருகி நின்ன பெரியமூக்கி மூஞ்சியில தீடீர்ன்னு ஒரு தெளிச்சி.

''யப்பா... சாமியா வந்த சவட்டையா. எங்க வீட்ல ஒரு ஏர்க்கலப்ப இருக்கப்பா... பூர்வீகக் கலப்ப. அத எடுத்துக்க. ஒத்த மாடு நீ வச்சிருக்க. ஒத்தப்பசு நான் வச்சிருக்கேன். அத ஏர்ல பூட்டி ஓட்டிக்க. கணக்கு சரியாப் போச்சா. காடு வந்து சேரப்பா விடிய. மனுசன் அடைக்கிற கதவ சாமி தொறக்குமடா... வாடா''.

●

விடி......ய்யக் காடுவந்து சேந்துருச்சு ரெண்டு ஏரும். இல்லாதவன் முழுசாக் கழிக்கமுடியாத கடன்கப்பி மாதிரியே இன்னம் மிச்சமிருக்கு இருட்டு.

கத்தாழம் புதருக்குள்ள காடைகளும் கதுவாலிகளும், வேப்பமரத்துல காக்காயும், ஓடசாலி மரத்துல மைனாக்களும் இன்னும் எந்திரிக்கலையா சூரியபகவானேன்னு கெழக்கக் கிண்டலடிச்சுக் கத்துதுக.

பாறையில துண்டஒதறித் தூசுதட்டி வேட்டிய அவுத்துச் சுருட்டி அதுல வச்சு, காத்துல பறந்துரும்ன்னு ஒரு கல்லையும் தூக்கி வைக்கிறானுங்க கேப்பக்களியானும் சவட்டையனும். என்னமோ அழுக்குப்பட்டுருமாம்... அதுக்குமேல அழுக்குச் சேர எந்த மூலையிலயும் எடமில்லாத வேட்டியில. வேட்டியில தூக்கிவச்ச கல்லுக புண்ணியம் பண்ணினதுக... அதுகளுக்கு மூக்கு இல்ல பாருங்க.





கிழக்கு முகமா நின்டு பூமியக் கும்பிட்டு, வெதப்பொட்டி எடுத்துட்டா பெரியமூக்கி. ரெண்டுபடி புடிக்கும் அந்த வெதப்பொட்டி. ஒரு குறுக்கத்துக்கு இன்ன அளவு தானியம்ன்னு கணக்கு இருக்கு அவளுக்கு.

ஒரு படி சோளம், காப்படி எள்ளு, கல்லுப்பயிறு, கானப்பயிறு, தட்டாம்பயிறு, மொச்ச, தொவர எல்லாம் வகைக்கு அரைக்காப்படின்னு கலந்து வெதைச்சா ஒரு குறுக்கம் வெதைச்சு முடிக்க ஒரு கை வெத மிச்சமிருக்கணும்.

படிப்பகம்

padippakam

ரெண்டு கையிலயும் வெதப் பொட்டிய எடுத்து, அத எடது மார்புல இருதயத்தோடு வச்சு எணச்சு அணச்சு, குலதெய்வத்த நெனச்சு, வலதுகையில வெதய அள்ளி வெதப்பொட்டியில ஓங்கி அடிச்சு வெதச்சுக்கிட்டே நடந்துபோறா பெரியமூக்கி. ரெண்டு பாக தூரத்துக்குச் செதறி ஓடி விழுகுதுக வெதைக.

கோயில்மணிச் சத்தமெல்லாம் சத்தமில்ல ஒரு வெவசாயிக்கு. வெதைக்கையில தானியங்க வெதப்பொட்டிய முட்டி மோதித் தெறிச்சு விழுகிற சத்தமிருக்கே... அந்தச் சத்தத்துக்குக் கீக்கொண்டதுதான் சகல சத்தமும்.

பெரியமூக்கி ஒரு குறுக்கம் வெதச்சுமுடிக்க முன்னித்தி ஏரு கேப்பக்களியானும் பின்னித்தி ஏரு சவட்டையனுமா ஒழவுல கூடிட்டாங்க. சும்மா சரபுர சரபுரன்னு சரளக் கல்லுககூடச் சண்ட புடிச்சுக்கிட்டே செம்மண்ணப் பொளந்து ★செந்துருக்கம் பூசிக் கிட்டே வெதப்பு ஒழவு போட்டுப் போகுதுக கலப்பைக.

கஞ்சிப் பொழுதுக்குள்ள ஒரு குறுக்கம் உழுது முடிச்சு, பெரியமூக்கி கரகரகரன்னு கரச்சு ஊத்துன கம்பங்கூழக் கழுவாத ரெண்டு கையிலயும் வாங்கி, சுட்ட மொளகாவத்தலச் சுரீர்ன்னு கடிச்சு மடமடன்னு குடிச்சுப்புட்டு, ஆவாரங்கொழைய உருவிக் கை தொடச்சு, இடுக்குல இருக்கிற கூழக் கோவணத்துல தடவிக்கிட்டு அடுத்த குறுக்கம் பாத்து மேழியழுத்துனாக ரெண்டு பேரும்.

இங்க இது இப்படியிருக்க... அங்க, பச்ச நெல்ல ஒரல்ல போட்டுக் குத்தியெடுத்தா கருவாச்சி. அதச் சோறாக்கிக் கொழஞ்சும் கொழையாம எறக்கி, உருண்ட புடிச்சுப் புளிச்ச தண்ணியில போட்டு ஆறாளுக்குண்டான கஞ்சிய எடுத்துக் குத்துச் சட்டியில போடுறா. ஒழவுகாட்டுல நாலு ஆளு; இவளச் சேத்து அஞ்சாளு. கஞ்சிக் கணக்குல கேப்பக்களியான் ரெண்டாளு. ஆக மொத்தம் ஆறாளு.

மறுமாத்தம் இல்ல. குத்துச் சட்டியத் தலையில வச்சு, தூக்குவாளியக் கையில புடிச்சு, முத்துக்கருப்பு கடையில மறுமாத்தத்துக்கு வெங்காயம் வாங்கி அவ முந்தானையில முடிய... 'பெரியமூக்கி காட்ல ஒழவு நடக்குதுடா'ங்கற ஒளவு போயிருச்சு கட்டையனுக்கு.

'நெல்லுக்கஞ்சி வருது... நெல்லுக்கஞ்சி வருது'ங்கிற நெனப்புலயே ரெண்டு குறுக்கத்த நெருக்கிமுடிக்க... கருவாச்சி வாரது தெரியுது கரட்டுமேட்டுல.

நெல்லுக்கஞ்சியக் கண்டதும் கேப்பக்களியான் மலந்து போனான் மலந்து. ஒரு உருண்டைக்கு ரெண்டு வெங்காயம்ன்னு வாங்கிக் கருவேலங்காயத் திங்கிற வெள்ளாடுமாதிரி 'கறுச் கறுச்'ன்னு மெல்லுறான் பாவம்.

இவுகளயெல்லாம் கஞ்சி குடிக்க விட்டுட்டு மூணாவது குறுக்கம்

---

★ குங்குமம்





படிப்பகம்

padippakam

வெதச்சு முடிச்சு, மூஞ்சி தொடச்சு வந்த பெரியமூக்கி, கடைசி உருண்ட தின்டு கைதொடைக்கறதுக்குள்ள ''எந்திரிங்கப்பா எந்திரிங்க... பொழுதிருக்க ஒழவு முடியணும்''ன்னு எல்லார் கால்லயும் வெந்நிய ஊத்துறா.

பெரியமூக்கி முள்ளுவெட்ட, கருவாச்சியும் கொண்ணவாயனும் கல்லுப் பெறக்கிப்போட மூணாங்குறுக்கத்துல ரெண்டு சால் ஓட்டி மூணாஞ்சாலுக்குள்ள முன்னித்தி ஏரு நொழைய- ''நிறுத்துங்கடா ஏர''ன்னு சத்தங்கேக்குது.

யாரு... என்னான்னு திரும்பப் பாக்கிறதுக்குள்ள ஏர் உழுகிற ஆளுகமேல சரசரசரன்னு கல்லெறி விழுகுது.

மாட்டுத் திமில் மேல விழுந்து ஒடஞ்சு செதறுதுக மண்கட்டிக. 'விர்று விர்று'ன்னு காத்தக் கிழிச்சுவந்த கைக்கம்பு ஒண்ணு கேப்பக்களியான் மாட்டுக் கொம்புல மாட்டி நிக்கிது.

என்னா நடக்குது ஏது நடக்குதுன்னு கண்ணுபாத்தது புத்திக்கு எட்றதுக்குள்ள ஏரவந்து மறிச்சுட்டானுங்க கட்டையன் ஆளுங்க.

ஒலக்கையனும் சலம்பல்பாண்டியும் பன்னியாம்பேரனும் கறிக்கஞ்சிக்கு அலையிற நாலஞ்சு காலிப்பயல்களும் ரெண்டு ஏர்மாட்டையும் சுத்தி வளையங்கட்டி நிக்கிறாங்க.

கெட்ட வார்த்த சொல்லி ★வஞ்சுக்கிட்டே ஒருத்தன் கேப்பக்களியான் உருமால அவுக்கிறான்.

அவன் 'தஸ்ஸ புஸ்ஸு'ன்னு உருமாலக் காப்பாத்தக் கைய மேலதூக்கவும் கோவணத்த உருவி எறியப்பாக்குறான் ஒருத்தன்.

''ஏய் யாரக் கேட்றா ஏரப்பூட்னீங்க? அவுத்து விடுங்கடா''.

பெரியமூக்கியும் கருவாச்சியும் பதறி நெஞ்சிலடிச்சு ஓடிவாராங்க.

ஒலக்கையனப் பாத்துக் கேப்பக்களியான் பயந்துபோனாலும் சவட்டையன் சண்ட புடிக்கிறான்.

''இந்தாப்பா காட்டுக்காரி அவ... காசு வாங்குனவன் நானு. எடையில மறிக்க நீ யாரு?''.

''நான் யாருன்னு கையில சொல்லவா... வாயில சொல்லவாடா. ஏய் நீ எந்தூர்டா?''

''பின்னத்தேவன்பட்டி''

''சொக்கத்தேவன்பட்டி சும்மாயிருக்க பின்னத்தேவன்பட்டிக்கு என்னடா பெரியதனம்?''.

இப்பக் குறுக்க வந்து விழுகுறா பெரியமூக்கி.

''ஏலே ஒலக்கையா. இது நல்லால்ல. பொம்பளபாவம் வந்தா நீ புழுத்துச் சாவடா''.

---

★ திட்டிக்கொண்டே



படிப்பகம்

padippakam

''நாங்க புழுத்துச் செத்தா நீ செத்துப் புழுக்கப்போற... போடி கெழவி. போடி''.

சலம்பல்பாண்டி புடிச்சு ஒரு தள்ளுத் தள்ளவும் மாட்டுக் கால்களுக்கு மத்தியில ஓடி விழுந்துபோனா பெரியமூக்கி.

''யாத்தே''ன்னு கத்தி, கருவாச்சி ஆத்தாளத் தூக்கப்போக, ''எலே பொண்டுகப் பயல்களா கெழவியையும் மகளையும் ஏண்டா இந்தப்பாடு படுத்திறீக?''ன்னு சவட்டையன் சத்தம் போட, நேக்கா இடுக்குல மளார்ன்னு உள்ள புகுந்து சவட்டையன் சங்கப் புடிச்சுப்புட்டான் பன்னியாம்பேரன்.

''நீ யார்றா அதக் கேக்க? கருவாச்சிய நீ வச்சிருக்கியா?''.

''ஏய்... ஏய்... இது நல்லால்ல''.

''அப்ப அவ ஆத்தாள வச்சிருக்கியா?''.

''ஏய் அவ எனக்கு நல்லத்தாடா. கருவாச்சி எனக்கு அக்கா தங்கச்சிடா''.

''ஒறவுமொறை தெரியுதுல்ல... ஊருமொறை தெரியுதா ஒனக்கு? எங்கள மீறி எவனும் இந்தக் காடு உழுகப்படாது. ஒன் மாட்ட அவுத்துட்டு ஓடிப்போயிரு''.

ஒழவுமாடுகளத் தும்புதிரிச்சுவிட்டு அதுக வாலுகள ஆளுக் கொருத்தனாக் கடிக்க, 'விட்டாப் போதுமடா சாமி'ன்னு ஓடுதுக ரெண்டும். ஒழவு காட்டு வழி; மாடுக பின்னாலயே வெரட்டிப் போறான் கேப்பக்களியான்.

''இது என்னடா இது... கேணப்பயக ஊர்ல கிறுக்குப் பய நாட்டாமையா இருக்கு''ன்னு உழுதவரைக்கும் போதும்ன்னு ஒத்தமாட்ட அவுத்துட்டு வெளியேறிட்டான் சவட்டையனும்.

வந்த சோலி முடிஞ்சுதுடா சாமின்னு தவ்வாளம்போட்டு ஓடிப்போயிட்டானுக காலிப்பயலுக.

ஆகாயத்துக்குக் கீழ அந்த அத்துவானக் காட்ல ரெண்டு பொம்பளையும் ஒரு பசுமாடும் அனாதையா நிக்கிறதப் பாத்து விக்கி விக்கி அழுகுறான் ஒண்ணும் பண்ண முடியாத கொண்ணவாயன்.

மகளக் கட்டிப்புடிச்சு ஆத்தா அழுக... ஆத்தாளத் தேத்தி மக அழுக... ''பொட்டைகள இப்படி அழுக வைக்கிற பழக்கமெல்லாம் எங்க மாட்டு சாதியில கெடையாது''ன்னு பசுமாடு பாத்தழுக... எழவு வீடாகிப்போச்சு ஒழவு காடு.

மூணாம் குறுக்கம் மூணுசாலு இன்னும் உழுகல. வெதச்ச வெத பூமியில கெடக்கு. இன்னைக்குள்ள உழுகாட்டி, சோளத்தப் புறா தின்னுட்டுப் போயிரும். மொச்சை, கல்லுப்பயிறு, தட்டாம்பயிறக் காடை கதுவாலிக முழுங்கிட்டுப்போயிரும். எள்ளு, கானப்பயிற எறும்பு இழுத்திட்டுப் போயிரும்.

படக்குன்னு எந்திரிச்சா கருவாச்சி.



படிப்பகம்

padippakam

'அழுகாத ஆத்தா'ன்னு கண்ணத்தொடச்சா; வெட்டருவாள எடுத்து நட்டுவச்சா வரப்புல.

ஏர்க்கால்ல ஒரு பக்க நேக்கால்ல ஒத்தப்பசு நிக்க, மறுபக்க நேக்காலத் தூக்குனா. பசு ஒயரத்துக்கும் தன் நெஞ்சுக்கும் நேக்கால நேர்பண்ணினா.

''அது ஒத்தமாடு; நான்தாண்டி ஆத்தா ஒன் தொத்த மாடு. ஓட்டு ஏர''ன்னா.

மூக்கச் சிந்தி எறிஞ்சு எந்திரிச்சு, ஒரே ஏர்க்கலப்பையில் ஒருபக்கம் பசுவையும் மறுபக்கம் மகளையும் பூட்டி உழுதுவாராய்யா பெரியமூக்கி. தலைக்குமேல பறந்துபோற சாயங்காலப் பறவைக இந்த பூமியில இப்படி ஒரு கூத்தும் உண்டுமான்னு வானத்துல கொஞ்சம் நேரம் நின்னுபாத்து நிதானமாப் பறக்குதுக.

அவ உழுக உழுக செம்மண்ணா ரத்தம் கசியுது பூமி.

உழுதுமுடிச்சு, மகளக் கட்டிப்புடிச்சு அவ அழுக, ''நானும் ஓம் மகதான; என்னியக் கட்டிப்புடிச்சு அழுகமாட்டியா''ன்னு பசுமாடு ஒரு பார்வ பாக்க, ரெண்டு மகள்களயும் கட்டிப்புடிச்சு 'நான் பெறந்த நேரந்தான் நல்லால்ல; நீ பெறந்த நேரமும் நிம்மதியில்லையே'ன்னு காடு தீப்புடிக்கக் கத்தி அழுகிறா பெரியமூக்கி.

இந்த வேதனையக் காணப் பொறுக்காம நெஞ்சப்புடிச்சுக் கிட்டே மலைக்குப் பின்னால போயி விழுகுது சூரியன்.





படிப்பகம்

padippakam



# 4

ஊருக்கே தெரியுது கட்டையன் ஆளுக பெரியமூக்கி ஒழவு காட்டுல ஏர்மாடுகள மறிச்சுத் தும்புதிரிச்சுவிட்டதும்; ஆத்தாளும் மகளுமா உழுது அழுது வந்ததும். பாவிப்பய இன்னும் என்னென்ன வேசங்கட்டி வெளியேறப் போறானோன்னு ஊரு பதறுது.

''இதவிடப்படாது; உருமாப்பெருமாத்தேவருகிட்டயும் சுப்பஞ் செட்டிகிட்டயும் ஒப்பிக்க வேண்டியதுதான்'' கூழ்ச்சட்டியில புடிச்ச அடிக்கறுப்ப, காக்காச் சிப்பியவச்சு 'சொர்று சொர்று'ன்னு சொரண்டிக்

படிப்பகம்

கிட்டே பெரியமூக்கி யோசிக்கறப்ப, நேத்து வெதச்ச ஒழவுகாடு பாக்கப் போயிருந்த கொண்ணவாயன் ஒருமாதிரி கலவரத்தோட ஓடிவர்றான். தவிப்படங்காமப் பேசறான் மூச்சுவாங்கிக்கிட்டே.

''பே... பே... பே... பெரியத்தா... ஊ... ஊ...ஊ... ஊர்க்காடுக எல்லாம் நெ... நெ...நெ... நெருக்கி மொளைச்சிருக்கு... நம்ம காடு மட்டும் அ.. அ...அ... அங்கொண்ணும் ... இ... இ...இ... இங்கொண்ணுமா மொளச் சிருக்கு...'' விட்டா அழுதிருவான் போலருக்கு.

'கெக்கக் கெக்கக் கெக்கே' ன்னு சிரிக்கிறா பெரியமூக்கி.

ரொம்ப நாளைக்கப்பறம் ஆத்தா சிரிக்கிறாளேன்னு அண்ணாந்து பாக்குறா கொட்டத்துல வெளக்கமாற வச்சுச் சாணியோட சண்ட புடிச்சுக்கிட்டிக்கிற கருவாச்சி. தண்ணிகுடிச்ச பசுவும் பாக்குது தலையத்தூக்கி.

பெரியமூக்கி சொல்றா: ''வெதைச்சு வீடு வந்தா விடிய்ய மொளைச்சிருமா ஒழவுகாடு? அதுக்கு ஒரு கணக்கு இருக்குடா மகனே! ஏழுநாளு ஆகும் மொச்சையும் தட்டாம்பயிறும் மொளைக்க. கல்லுப்பயிறும் சோளமும் மொளைக்க நாலுநாள் ஆகும். மூணுநாள் ஆகும் எள்ளு மொளைக்க. காணப்பயிறு ஒண்ணுதாண்டா ஒரே ராத்திரியில மண்ணுக்குள்ள மலந்து விடிய்ய மொளைச்சிருக்கும். நீ காணப்பயிறு மொளச்சத மட்டும் பாத்துட்டு வந்திருக்கடா கேணப்பயலே. போடா! போயி வேலயப் பாரு... இந்தாத்தா கருவாச்சி! கும்பாவுல கூழு ஊத்தி வச்சிருக்கேன் கொண்ண வாயனுக்கு. பாவம்... ஒரு பட்டமொளகா இருந்தாச் சுட்டுக்குடு. பெருமாத்தேவர் வீடுவரைக்கும் ஒரு எட்டுப் போயிட்டு வந்திடுறேன்''.

●

உருமாப்பெருமாத் தேவரும் சுப்பஞ்செட்டியாரும் பொடி நடையாப் பொழுசாயப் போனப்ப மேல்குளிச்சுக்கிட்டிருந்தாரு சடையத்தேவர்.

வெதுவெதுங்குற வெந்நி வெளாவி, கைக்கு வாட்டமா அண்டாவ ஒரல்ல தூக்கி வச்சு ஒசரம் பண்ணி, குளிக்கையில ஒரு அலுப்பு வந்ததுன்னா ஒக்காந்து அழுக்குத்தேய்க்க ஒரு தலப்பலகையும் வாசல்ல போட்டு, முன் அண்ணாக்கயித்துல சொருகுன கோவணத்த இழுத்துப் பின் அண்ணாக்கயித்துல சொருகிக்கிட்டே ''வாங்கப்பா'' ன்னாரு.

அவரு சொருகறதுல தப்புக்கிப்பு வந்திரக் கூடாதேன்னு சாமியக் கும்புட்டுக்கிட்டே 'வாரோம்' ன்னாங்க ரெண்டுபேரும்.

வயசான காலத்துல முக்கிமுக்கி வர்ற மூத்திரம் மாதிரி சன்னமாக் கால்வழியா வெந்நி ஊத்திப் பதம்பாத்து நிக்கிற சடையத்தேவரக் கோவணத்தோட பாத்தா... பெரியாளுக செத்துப் போனா அரைக்கம்பத்துல பறக்குமா இல்லையா கொடி... அப்படியிருக்கு.

''என்னாப்பா தெக்கும் வடக்கும் சேந்து வந்தது மாதிரி ஊர்ப்பெருசுக ரெண்டும் ஒண்ணா வந்திருக்கீக''.

திண்ணையில கெடந்த கோழிப்பீய வைக்கோல் எடுத்து வழிச் செறிஞ்சிட்டு ஒக்காந்தாக பெருசுக ரெண்டுபேரும் சடையத்தேவரு குளிக்கிற கண்காட்சியக் கண்டுக்கிட்டே.

''வேறொண்ணுமில்லப்பா... இந்த வருசம் நல்ல மழ. காடு கரையெல்லாம் வெதப்பாகிப்போச்சு....''

''இதச் சொல்லத்தான் வந்தீகளாக்கும். நான் வெளியூருக்காரன்; இன்னைக்குத்தான் புதுசா இந்த ஊருக்குக் குடிவந்துருக்கேன் பாரு...''

''அதுக்கில்லப்பா... மழ எல்லாருக்கும் பொதுவாப் பெய்ற மாதிரி நீதி நேர்மையும் எல்லாருக்கும் பொதுவாயிருக்கணும் இல்லையா...''

''நூத்துல ஒரு பேச்சு. அதுக்கு என்ன இப்ப?''

''வேறொண்ணுமில்லப்பா... அத்துவிட்ட கழுதையப் பொழச்சுப் போடீன்னு சொல்றத விட்டுப்புட்டு அவுக குடிக்கிற கூழ்ல ஏன் மண்ணள்ளிப் போடணும்?''

தொடைவழியா வெந்நி ஊத்தி அந்த சொகத்தக் கால்ல இருந்து தலைவரைக்கும் விஸ்தாரமாப் பரவவிட்டு, 'தீரப் போகுதுடா அந்த சொகம்'ங்கிறப்ப இன்னொரு கால்ல ஊத்திக்கிட்டே, ''யாரு கூழு....? யாரு மண்ணு....? புடிபடலை யேப்பா''ன்னு பிடிகுடுக்காமப் பேசுறாரு சடையத்தேவரு.

''இது என்னாப்பா கதையாயிருக்கு... பழந்தின்ட கொரங்கு கொட்டையறியாதா... ஒழவு காட்ல போயி ஏர மறிக்கிறதும் பொட்டச்சிகளப் புடிச்சுத்தள்றதும் நல்லாவா இருக்கு?''

''சாமி சத்தியமா நான் பாக்கலப்பா''

''நீ பக்கத்துல இருந்து பாத்தேன்னா சொல்றோம். நாளப்பின்ன இது நடக்கப்படாதப்பா. கட்டையனுக்கும் சொல்லிவை''.

''தலைக்கு மேல வளந்த பய... தகப்பன் பேச்சக் கேக்குறானா..? கேக்குறேன்''.

ஒடம்பு நனையத் தண்ணிஊத்தி, ஒக்காந்து கால்நீட்டி, எட்டிய பாகத்தக் கையாலயும் எட்டாத பாகத்தச் சொம்பாலயும் அழுக்குத்தேச்சு, பித்த வெடிப்புல வரிவரியாப் பொளந்துநிக்கிற குதிகால அண்டா வச்சிருந்த ஒரல் அடிவாரத்துல கரகரன்னு தேய்க்கவும், விறுவிறுவிறுன்னு வெளியேறுதுக உள்ளயிருந்த சீவராசிக.

பெருமாத்தேவரும் சுப்பஞ்செட்டியாரும் வெளியேறிட்டாக.

●

மூணுவாரமாச்சு. பாக்கப்பாக்க ஆசையாயிருக்கு பயிர் மொளைச்ச காடு. சும்மா பச்சைத் தீப்புடிச்சு எரியிறமாதிரியிருக்கு பூமி. ஒரு சாண்

padippakam

உயரத்துக்கு வளந்து தோகையைச் சொழட்டிச் சிலம்பாடி நிக்கிற சோளப்பயிரும், மொளைச்சு எந்திரிச்சுக் கொடியோடப் பாக்கிற பயத்தஞ்செடிகளும் ஒனக்கு நான் மெதமான்னு ஒண்ண ஒண்ணுபாத்துச் சிரிச்சுக்கிட்டே காத்தோட பலிஞ்சடுகுடு ஆடிப் பழகுதுக.

ஒரு சின்னத் தூத்த விழுந்தாப் போதும்; பதம் கெடைக்கும்; ஒரு வாரத்துல களையெடுத்திரலாம். என்னமோ கடனுக்கு வட்டிமாதிரி காடெல்லாம் மண்டிக்கெடக்கு களை. அறுகு - மகிழி - தொகிழி -ஊசிக்கோரை - குப்பமணி- குமிட்டிக்கீரை - தும்பை - நெருஞ்சி - ஆடுதின்னாப்பாலை- நாயுருவி எல்லாம், எங்களுக்கும்தான் இந்த பூமி சொந்தம்ன்னு ஏகத்துக்கும் மொளைச்சுக் கெடக்க, சாரணத்தி அடச்சுக்கெடக்கு சரஞ்சரமாக் கொடியோடி.

ஒரு கையில பசுமாட்டப் புடிச்சு மேய விட்டுக்கிட்டே குத்துக்கல்லு மேல ஒக்காந்து யோசிக்கிறா கருவாச்சி.

''ஆத்தா வெதமட்டுந்தான வெதச்சா... எங்கிட்டிருந்து வந்துச்சு களா? களைக்கு ஏது வெத? பூமியும் பொழப்பும் ஒண்ணுதான் போலருக்கு. நன்மையத்தான் வெதைக்கிறோம். கூடவே தீமையும் மொளைக்குது. தென வெதச்சவன் தெனைய மட்டுமே அறுக்குறதில்ல; களையையும் சேத்துத்தான். வெதச்சு மொளைக்கிறது மதி; வெதைக்காம மொளைக்கிறது விதி. களையக் கொத்தெடுத்துச் சுரண்டி எறியிறமாதிரி விதிய மதியால வெல்லலாமா இல்லையா? பாப்போம். செயிச்சா சந்தோசம்.... தோத்தா அனுபவம். பாத்திருவோம்''.

''கார்த்திகை மாசம் ஏச்சாலும் களையெடுப்பு மழை ஏய்க்காதப்பா!'' ஊர்ல சொல்லி அலையுங்க பெருசுங்க. எழுவது எம்பது வருசமா ஆகாயத்தையும் பூமியையும் பாத்துப் பாத்துப் பழகுன கண்ணுக பொய் சொல்லுமா?

பூவாளி மாதிரி சிந்திச் செதறி விழுந்திருச்சு புரட்டாசி மழை; தூர் நனைய இல்லாட்டியும் வேர் நனைய.

தோள்ல கொத்துவச்சு தூக்குச்சட்டி கையில புடிச்சு, தலையில முண்டுபோட்டு, ஊறவச்ச கம்பரிசியோ சாம அரிசியோ வாயில அள்ளிப்போட்டுக்கிட்டு ஊரமென்டுக்கிட்டு, தெசைக்கு அம்பது அறுவது ஆளாப் போறாக பொம்பளை ஆளுக.

அப்ப...

ஊருக்குள்ள காடு கரைகள்ல அங்கங்க ஊடுருவி வாரானுங்க கட்டையன் ஆளுக.

''ஏ மாயக்கா களையெடுக்க ஒனக்குச் சம்பளம் எம்புட்டு? ''

''அரரூவா''

''களையெடுக்காம இருக்கச் சம்பளம் முக்காரூவா. போகாத கருவாச்சி



படிப்பகம்

காட்டுக்கு; ஒன் ஆளுகளையும் போகவிடாத''.

மாயக்கா வெலபோயிட்டா.

''இந்தா பாரு மொண்டியம்மா. கருவாச்சி காட்டுக்குக் களையெடுக்கப் போறதாயிருந்தாப் போ.. அப்பறம் எங்க காட்டுக்கோ, எங்க பங்காளிக காட்டுக்கோ ஆயுசு பரியந்தம் வேலைக்குக் கூப்பிடமாட்டோம். யோசிச்சுக்கம்மா. மூணு குறுக்கம் முக்கியமா... முப்பது குறுக்கம் முக்கியமா...?''

மொண்டியம்மா மெரண்டு போனா.

பணம் - பயம் ரெண்டுக்குந்தான வெவரமறியாத மக்க பணிஞ்சு பாழாப் போறது.

●

விடி...ய்யப் புலம்பல்ல கூடிட்டா பெரியமூக்கி.

''களையெடுக்க நாதியில்லையே... என் காடு போச்சே... வெதச்சது போச்சே... மகள மாடாக்கி வம்பாடு பட்டு உழுத காடு, முழிச்சிருக்க முழியத் தோண்டுனமாதிரி மூளியாப் போயிரும் போலருக்கே. ஏண்டி கருவாச்சி... என்னைக்கும் இல்லாத ஒறக்கம் இன்னைக்கு என்னாடி? எங்க இருக்கவ...?''.

சுத்தியும் முத்தியும் பாத்து மகளக் காணமேன்னு நெஞ்சில அடிச்சு நிமிந்து பாத்தா, கையில கொத்தோட கால்ல செம்மண்ணோட கெறங்கிக் கிறுகிறுத்து வெளியிலருந்து வீட்டுக்குள்ள வர்றா கருவாச்சி.

''கவலப்படாத ஆத்தா... கள வெட்டியாச்சு''.

''பாதகத்தி மகளே! என்னாடி சொல்ற?''

''சுப்புலாபுரம் ஆளுகளுக்குச் சொல்லிவிட்டு, கால்ரூவா எச்சாக் குடுத்து நெலா வெளிச்சத்துல விடிய விடியக் களையெடுத்து முடிச்சிட்டுத்தான் வீட்டுக்கு வாரேன்''.

''துட்டு...?''

''பசுமாட்டுச் சாணியக் குமிச்சுக் குமிச்சு எருவாக்கி வச்சிருந்தேன்ல... அத ஆமையன் கெழவனுக்கு நாலு ரூவாய்க்கு வித்தேன்''.

''யாத்தே! நீ பொழைச்சாலும் பொழைச்சிருவ போலருக்கே...'' - மகமேல விழுந்து கட்டிப்புடிச்சு ஆச தீர அழுது பித்தேறிப்போனா பெரியமூக்கி.

அடுப்புச் சாம்பல அள்ளித் தெள்ளிப் பல்லுவெளக்கப் போனா கருவாச்சி.

ஒரு மாசமா ஒரே யோசன பெரியமூக்கிக்கு. எப்பிடிப் பொழைக்கப்

போறா எம் மக இந்த ஊர்ல? ஒழவு காட்ல ஏர மறிக்கிறான்; களையெடுக்க விடுறானில்ல; நெஞ்சுல வம்மம் வச்சு அலையிறான். இன்னம் என்னென்ன செய்யக் காத்திருக்கானோ? எத்தன நாளைக்குத்தான் ஓடி வரும் மொதலக்கம்பட்டிச் சொந்தங்க? எத்தன மொறைதான் நியாயங்கேட்டுக் குடுப்பாக உள்ளூர் ஆளுக? எங் கண்ணுள்ள காலம் வரைக்கும் எம் மகமேல துரும்பு விழுக விடமாட்டேன். நான் மண்டையக் கிண்டையப் போட்டுட்டா எப்பிடித் தப்பிக்கும் புலிக அலையிற ஊர்ல பொட்டையாட்டங்குட்டி?

இப்படிப் பல மாதிரி யோசிச்சு ஊர்ப் பெருசுகளக் கலந்து ஒரு முடிவுக்கு வந்து சாவடிப்பட்டிக்கு ஆள் சொல்லிவிட்டுட்டா பெரியமூக்கி.

●

பின்னந்தி வெயிலு. மூணு ஆம்பளைக. ரெண்டு பொம்பளைக. ஆகமொத்தம் அஞ்சு ஆளுக வாராக சொக்கத்தேவன்பட்டி எல்லையில. நல்ல காரியத்துக்கு ஒத்தப்படை எண்ணிக்கையில போகணும்ங்கறது ஊர் ஆசாரம்.

வெள்ளையுஞ் சொள்ளையுமா கழுத்துல சுத்துன அங்கவஸ் திரம் காத்துல பறக்க, விலங்குமாதிரி வெரல்கள்ல மோதிரம் போட்டு, கறுப்பு - வெள்ளை மீசைய முறுக்கி மேலேத்திவிட்டு முன்ன நடந்து வாராரு பாருங்க, அவருதான் சாவடிப்பட்டி விட்டி. மீசநரச்சாலும் எளந்தாரி ஒடம்பு. அந்த வட்டாரத்துலயே ஏறு கையான ஆளு. நெலம் பொலம், தோப்பு தொரவு, சொந்தக்கெடைன்னு தாறுமாறான சொத்து; ரெண்டு வருசமாச்சு பொண்டாட்டி செத்து. ஒரே மகளக் குள்ளப்புரத்துல கட்டிக்குடுத்திட்டாரு ஒரு பள்ளிக்கூட வாத்தியாருக்கு. பய ஒரே பய; பெறவியிலேயே புத்தி மாறாட்டமானவன் சங்கிலிகட்டிச் சாப்பாடு போடுறாக வீட்ல.

பூவு பழம் தேங்கா வச்ச மஞ்சப்பையக் கையில புடிச்சு வாரவரு அவரு தங்கச்சி புருசன்.

அய்யா மேல விழுந்தது போக மிச்ச நெழல் நெலத்துல விழுந்தாலும் விழுகலாமே தவிர, தன் மேல விழுந்திரக்கூடாதுன்னு தள்ளிக் கொடபுடிச்சு வாரான் பாருங்க... அவன் வேலக்காரன்.

கெழவி... விட்டிக்கு நல்லத்தா. மொளகாப்பழ நெறத்துல பட்டுச்சேல கட்டி வாரவ விட்டி தங்கச்சி.

''வாங்கப்பா. வாங்க... வாங்க...'' குட்டிபோட்ட பூனமாதிரி அங்கிட்டும் இங்கிட்டும் ஓடிப் பரபரப்பாகிப்போனா பெரியமூக்கி.

ஒட்டுல மணலப் போட்டுக் கடல வறுத்துக்கிட்டிருந்த கருவாச்சிக்கு வந்தவுக யாரு எதுக்கு வந்திருக்காக ஒரு வெவரமும் தெரியல. மத்தியானத்திலருந்தே அவள நல்ல சீல கட்டச் சொன்னா ஆத்தா. அவ முந்தானைய இவ மூஞ்சில போட்டு அழுத்தி அழுத்தி எண்ண தொடச்சா. கட்டச்சீப்பு வச்சுத் சீவிவாரிவிட்டா. ''போடி... போயி... பொட்டுவச்சுக்க''ன்னு தள்ளிவிட்டா.

''என்னைக்கும் இல்லாம இன்னைக்கி ஆத்தா ஏன் இந்த அழிச்சாட்டியம் பண்றா?'' எரிச்சலாயிருந்துச்சு கருவாச்சிக்கு.

மிச்சரையும் அதிரசத்தையும் பிரிச்சு, தனித்தனி ஏனம் சரியா வாய்க்காம ஒரே கும்பாவுல ரெண்டையும் போட்டுக் கொட்டி, ''போடீ போ... சொந்தக்காரங்களுக்கு நீயே போய்க் குடுடீ''ன்னு ஏவி விடுறா மகள.

அவுக ஆளுக்கொரு கை மிச்சர அள்ளி, நாலு அதிரசம் ஏழு பேருக்கு வராதுங்கற கணக்குல ஆளுக்குப் பாதி கிள்ளி, கருவாச்சிய வச்ச கண் வாங்காமப் பாக்குறாக.

பொண்ணுப் பாக்க வந்த எடத்துல கைகழுவக் கூடாதுங்கிற சாஸ்திரத்துக்குக் கட்டுப்பட்டு துண்டு - வேட்டி - சீலையில தொடச்சுக்கிறாக பலகாரம் தின்ட கைய.

கருவாச்சி பின்னாலயே போயி அவ முதுகுக்குப் பின்னால ஒக்காந்த விட்டி தங்கச்சி, மஞ்சப் பையிலயிருந்த மல்லிகப்பூவ எடுத்துக் கருவாச்சி தலையில வைக்கிறா. பூ வைக்கிற சாக்கில குடுமிய ஒரு இழு இழுக்கிறா. 'யாத்தே 'ன்னா கருவாச்சி. 'ஒட்டுமுடி இல்ல... நெச முடிதான்'னு சந்தோசப்பட்டுக்கிட்டா விட்டி தங்கச்சி; 'ஊமையில்ல பேச்சும் வருது'ன்னு உறுதி பண்ணிக்கிட்டா.

ஒக்காந்த எடத்திலேயே அவ தரம், தண்டி, நெறம், ஒயரம், காதுல கெடந்த தண்டட்டி எல்லாத்தையும் எட போட்டவ அவ கழுத்தப் பாத்ததும் 'மளார் 'ன்னு எந்திரிச்சுப் பதறிப்போயி ஓடிவந்தா.

அண்ணன்கிட்டப் போய்க் காதுகடிக்கிறா.

''யண்ணே! தாலிகட்டி அலையிறவளையா பொண்ணுப் பாக்க வந்த?''.

''அதுக்கென்ன தங்கச்சி. நான் என்ன புதுமாப்பளையா...? இந்த வீட்டு மாடு கயிறோட நிக்கிது; நம்ம வீட்டுக்கு வாங்கிட்டுப் போறப்ப, புடிகயிறு மாத்திட்டாப் போச்சு''.

அப்பத்தான் தெரியுது கருவாச்சிக்கு இது ஆத்தா நடத்துற கூத்துன்னு.

தாழ்வாரத்த விட்டுத் திண்ணைக்கு விறுவிறுவிறுவின்னு நடந்து வந்தா.

''நீங்க எல்லாம் எதுக்கு வந்திருக்கீக?''

''பொண்ணுப் பாக்கத்தான் தாயி... ஒன்னிய''.

''பெரியவுகளா வந்திருக்கீகளே மாப்பள வரலையா?''

''இவர்தான் மாப்பள''

''எங்கழுத்துல தாலி இருக்கே. பரவாயில்லையா?''

padippakam

''தெரிஞ்ச கதைதான. பரவாயில்ல''.

''கழுத்துல தாலியிருந்தாப் பரவாயில்லேன்னு சொல்றீகளே... வயித்துல பிள்ளையிருந்தாலும் பரவாயில்லைன்னு சொல்லுவீகளா?''

வந்தவுகளுக்கு மூச்சுப்பேச்சு நின்னுபோச்சு.

அலறியடிச்சு எந்திரிச்சுப் பெரியமூக்கி கத்துறா:

''என்னாடி சொல்ற... குடிகெடுக்க வந்தவளே...?''

தணிஞ்ச குரல்ல கருவாச்சி சொல்றா:

''ஆத்தா நான் முழுகாம இருக்கேன்... மூணு மாசம்...''



படிப்பகம்

padippakam



# ௧

அடிமேல அடிவிழுந்த வீட்ல இடிமேல இடிவிழுந்த மாதிரி ஆகிப்போச்சு கருவாச்சி பொழப்பு. நல்லதுன்னு நெனச்சு நல்ல மனசோட எடுத்த முடிவு கெடுதல்ல போயி முடியுது. தாமரப்பூவு இருக்கே, அது தண்ணியிலதான் பெறக்குது. எந்தத் தண்ணியில பெறந்துச்சோ அதே தண்ணியிலதான் கடைசியா அது அழுகி மெதக்குது. தாமரமொட்ட சூரியன்தான் தொட்டுத் தொறந்து விடுது. எந்தச் சூரியன் தொட்டு மலர்த்தி விட்டுச்சோ அதே சூரிய வெப்பத்துல தான் அது காஞ்சுகருகிச் சருகாப் போகுதுன்னு புலவனாருக கவிகட்டுவாக.

அந்தக் கவிக்குச் சாட்சி கருவாச்சி.

சொந்தத்துல வாழணும்னு ஆசப்பட்டா. அதே சொந்தந்தான் அவ வாழ்க்கையப் புடுங்கிக்கிட்டு வகுத்துல குடுத்து அனுப்பியிருக்கு.

படிப்பகம்

பாறையில மழைபேஞ்சா, பேய்ஞ்ச மழை தெறிச்சோடும்; பாறை அப்படியே நிக்குமா இல்லையா... கருவாச்சி நிக்கிறா கல்லுப்பாறை மாதிரி; பெரியமூக்கி செதறி ஒடைஞ்சுபோனா மழைத்தண்ணி மாதிரி.

புழிஞ்சு ஒஞ்சுபோன ஆரஞ்சுப்பழம் மாதிரி, அழுது காஞ்சுபோனா பெரியமூக்கி. நின்ட முழி நின்ட மேனிக்கு நெஞ்சப் புடிச்சு ஒக்காந்தவதான்; மொனகிக்கிட்டே இருக்காளே தவிர முழுப்பேச்சுப் பேசறா இல்ல.

பொண்ணுப்பாக்க வந்தவங்க குடிக்காமப் போன கடுங்காப்பி கெடந்துச்சு அடுப்புல. கருவாச்சி அத ஊத்தி ஊத்தி ஆத்திக் குடுக்குறா... மொறம் எடுத்து விசிறி விடுறா... ஒரு உணர்ச்சியும் இல்ல.

நதிமூலம் வத்திப்போயிருச்சு போலிருக்கு கண்ணீருக்கு.

வீட்ல மூணுமாசமா முட்டுச்சீல விழுகலங்கிற சங்கதிய அப்பத்தான் நெனச்சுப்பாக்குறா பெரியமூக்கி.

''ஏ சாமி! பொசகெட்ட சாமி... ஏம் பொழப்பக் கெடுத்த சாமி... மஞ்சப்பூவக் காமிச்சு என் நெஞ்சுல குத்துன சாமி... நாங்க என்னா பாவம் பண்ணோம்?. என்னையும் எம் பிள்ளையயும் இந்தப் பாடு படுத்தற? ஒரே ஒரு பாவம் பண்ணேன்... எம் பிள்ளைக்குக் கல்யாணம்ங்கற பாவம். அந்தப் பாவத்தத் தீக்கத்தான் அத்து விட்டேன். அத்துவிட்ட பாவம் எம் மக வகுத்துக்குள்ள ஒக்காந்துக் கிட்டு இப்ப என்ன பண்ணுவ... 'வவ்வ வவ்வ வவ்வே'ன்னு வக்கணை காட்டுதே... என்னா நியாயம்? அந்தப் பாவத்தக் கருவுலயே வச்சு வளக்கவா? இல்ல அழிக்கவா?''

●

ராத்திரியோட ராத்திரியாப் பெரியமூக்கி ஓடிவந்து வெவரம் சொல்லவும் பேச்சே வரல பெருசுகளுக்கு. பெருமூச்சு விடுறாக. தலையத் தலைய ஆட்றாக. மீசையும் சேத்து ஒதடு கடிக்கிறாக.

''என்னத்தச் சொல்ல தாயி..? ஏதோ வாய்த்தகராறு; கட்டையன் கூடக் கோவிச்சுட்டு வந்து ஒங்கூட இருக்கா கருவாச்சி; இன்னும் அவுகளுக்குள்ள ஒரு தொடுசு இருக்குன்னா கருவக் கலைக்க யோசன வராது. பிரிஞ்ச புருசன் பொண்டாட்டி, பிள்ள பெறந்தா ஒண்ணு கூடிருவாங்கன்னா கலைக்காம விடலாம் கருவ. இப்ப ரெண்டு பேருக்கும் துப்புரவா ஒட்டுமில்ல; ஒறவுமில்ல. பிள்ள பெத்து ரெண்டுபேரும் ஒண்ணுசேரப் போறதுமில்ல. இவளோ சின்னப்பிள்ள; நாளப்பின்ன வயசிருக்கு; வாழ்விருக்கு. இன்னைக்கி இல்லாட்டியும் நாளைக்கு ஒருத்தன் கையில அவளப் புடிச்சுக் குடுக்கறப்ப, பசுவும் கன்டுமாயிருந்தாப் பாக்கிறவன் என்ன நெனப்பான்? கண்ணுல கண்ட உசுரு நல்லாருக்கணும்; அதனால, கண்லகாணாத உசுரு அழிஞ்சாத் தப்பில்ல; அழிச்சிரு''.

அவ நெனச்சதையே ஊர்ப்பெருசுகளும் சொல்லவும் இன்னொரு கும்புடும் சேத்துப்போட்டு எந்திரிச்சுட்டா பெரியமூக்கி.

தள்ளிப்போடப்படாது; நாளைக்கே கலைச்சிரணும் கருவாச்சி கருவ.

பாவம்! கத்தாழங்காட்டுக்குள்ள பூத்த ஆவாரம்பூவு கருவாச்சி. நாக்குல போட்டாக் கரைஞ்சுபோற பஞ்சுமுட்டாய் மாதிரி லேசான மனசு.

padippakam

ரொம்ப நாளைக்கு முன்ன ஒரு சம்பவம்.

அழுக்குத் துணிகளஅள்ளிக் கொடம் நிறையத் திணிச்சுக்கிட்டுக் கொளத்துக்குத் தொவைக்கப்போனா, விடிய்ய. கரையில போயி நின்னவ நின்னவதான். ஒரு துணியும் தொவைக்காம வெயிலேற வீடு வந்துட்டா. கேட்டாச் சொல்றா: ''தன்ன மறந்து தண்ணி ஒறங்குது; எப்பிடி எழுப்ப?''

ஒரு நாள்... கழுத்துக் கடுக்கச் சோளம் சொமந்து போய்க் கிட்டேயிருந்தவ கத்தாழம் பொதரக்கண்டதும் நின்டது நிக்க நின்னுட்டா.

''மயிலு தோகை விரிச்சாச் சுருட்டி வச்சிருமா இல்லையா; எங்க கத்தாழையுந்தான் தோகை விரிச்சிருக்கு. விரிச்ச பெறகு என்னைக்காச்சும் சுருட்டி வச்சிருக்கா?''

''விட்டாக் கத்தாழையக் கல்யாணமே பண்ணிக்கிருவா போலிருக்கே''ன்னு சிரிச்சு விழுந்துபோனாக கூடப்போன ஆளுக.

பசுமாடு கன்டு போடுறதப் பாத்திருக்கா. ஆடு குட்டிபோடுறதப் பாத்திருக்கா. கோழி முட்டை போடுறதக்கூடப் பாத்திருக்கா. ஆனா ரொம்பநாளா அவ இருதயக்கூட்ல கட்டிவச்சிருக்கிற ஆசைக ரெண்டு இருக்கு.

மீன்குஞ்சு பொரிஞ்சு வெளியேர்றதப் பாத்திரணும்; பாம்பு சட்டை உரிக்கிறதப் பாத்திரணும்.

ஆனா - இந்தக் கேடுகெட்ட காலத்துக்கு ஆச - கருவாச்சி கரு கலஞ்சு வர்றதப் பாத்திரணும்.

வைத்தியச்சி ரங்கம்மா பெரிய்ய கெட்டியக்காரி. நாயக்கமாரு பொம்பள; தாட்டியமானவ. பேறு காலம் பாக்கிறதிலிருந்து நகச்சுத்திக்கு மருந்து கட்றது வரைக்கும் அவள அடிக்க ஆளு இல்ல எட்டூர்ல. வைத்தியமும் பாப்பா; களை கண்ணிக்கும் போவா. யாரு கூப்பிட்டாலும் ஊர் ஊருக்குப் போயி ஒப்புச்சொல்லி அழுது, அழுதகாசுக்கு அரிசிபருப்பு வாங்கிட்டு வீடு வந்திருவா. குருவிமாதிரி ஒரே கூட்லயிருந்தாப் பொழப்பு நடக்காது; பாம்பு மாதிரி பல பொந்துகள்லயும் குடியிருந்து பழகணும்னு தத்துவம் வேற வச்சிருக்கா.

மனுசனுக்கு மண்ட பூரா வலிச்சாப் பொறுத்துக்கிரலாம். ஒரு பக்கமா வலிக்கும் பாருங்க ஒத்தத் தலவலி... உசுருபோயி உசுருவரும். வட்டிக்குச் சொத்தெழுதி வாங்குனவனுக்குக் கூட வரப்படாது அது. விடிய்ய மண்டையில குத்தி, வெயில் ஏற ஏற வலியும் ஏறும் பாருங்க... மண்டைய எடுத்துத் துண்டா வச்சிரலாம்னு தோணும்.

அதுக்கும் ஒரு மருந்து வச்சிருக்கா ரங்கம்மா. புருசன்பேரு சொல்லாத பொம்பளைகமாதிரி அந்த மருந்துப்பேரையும் அவ சொல்றதில்ல.

வெளிக்கிருக்கப் போறவமாதிரி போயி, வேலிகள்ல படர்ந்திருக்கிற ஒரு கொழைய உருவி அது இன்ன கொழைன்னு யாரும் கண்டுபடிக்க முடியாத படிக்கிக் கசக்கிக்கிட்டே வீட்டுக்கு வருவா. தலவலி தாங்காம அனத்துற ஆளப் 'படு'ம்பா. எலயக் கையிலயே கசக்கிச் சாறெடுப்பா. புழிஞ்ச சாற, எடதுபக்கம் தலவலின்னா வலது காதுல விடுவா; வலதுபக்கம்





படிப்பகம்

padippakam

வலின்னா எடது காதுல விடுவா. இப்படி மூணுநாள் ஊத்துனான்னா மண்டவலி இருந்துச்சா... இல்ல, மண்டையே இருந்துச்சான்னு சந்தேகம் வந்திரும் சம்பந்தப்பட்ட ஆளுகளுக்கு.

மூட்டுவலிக்கு அவ கண்ட மருந்து இருக்கே... வெள்ளக் காரனும் கண்டுபடிக்க முடியாத வித்தைன்னு சொல்றாக ஊர் தேசத்துல.

படுத்த படுக்கையாக் கெடந்தாரு கண்டமனூரு சமீந்தாரு. கடுங்கொண்ட மூட்டுவலி. ஒண்ணுக்கு ரெண்டுக்குப் போகவும் மூணுபேரு வேணும். பண்ணாத வைத்தியமில்ல. மயில்கழுத்து எண்ணெயிலருந்து, யானச்சாணி வச்சுக் கட்டிப்பாத்தும் வலி கொறையல. ரங்கம்மா வீடு தேடி வந்து கடைசியாச் சொன்னாரு கண்டமனூர்க் கணக்குப்பிள்ள. நாலே நாள்ல ரங்கம்மா செஞ்சாய்யா ஒரு மருந்து.

வெள்ளெருக்கம் பூவு - கத்திரி மஞ்சள் - கருஞ்சீரகம் - கருமொளகு - பச்சக்கர்ப்பூரம் - அஞ்சையும் அம்மியில வச்சு நசநசநசன்னு நசுக்கி, பூப்போலப் பொடிபண்ணி அத ஒருபடி நல்லெண்ணெய்யில போட்டு மூணுநாள் ஊறவச்சா. நாலாம்நாள் எடுத்து அடுப்புக்கூட்டிப் புளிய வெறகெரிச்சு ஒருபடி நல்லெண்ணெய அரப்படியாச் சுண்டவச்சா.

சமீன்தார் மூட்டுல மூணுநாள் தடவிவிட்டுக் கரம்ப மண்ணப் போட்டுக் கழுவிவிட்டா பாருங்க... விடிய்ய, வேட்டைக்குப் போகலாங்கிற அளவுக்கு சமீந்தார் வலி ஊரவிட்டே ஓடிப்போச்சு.

ரங்கம்மா மேல காதலாகிக் கசிஞ்சு போனாரு சமீன்தாரு. அப்ப அவ வெடலப்புள்ள. பொம்பளைக்குப் பொம்பளையே ஆசப்படுற அழகு. தொட்ட சொகம் வேற ஒட்டிக்கிட்டிருக்கு. அவ கையால தடவிவிட்ட எடத்தத் தன்கையால தடவிக்கிட்டே சமீந்தார் கேட்குறாரு:

''என்ன வேணும்... கேள் தாரேன். வருசநாட்டுக் காடு வேணுமா? பெரியகொளம் தோப்பு வேணுமா? பாளையத்து நஞ்சை வேணுமா? இல்ல, என் இடப்பக்க எடம் வேணுமா?''

''இல்ல சாமி... என் வைத்தியக்கூலி காலே அரைக்காரூவாதான்; அதமட்டும் குடுங்க''ன்னு வாங்கிக்கிட்டுக் கையெடுத்துக் கும்பட்டு ஓடியே வந்துட்டா ஓடி. மானம் நியாயத்துக்குக் கட்டுப் பட்டவ ரங்கம்மா.

பெரியமூக்கி வந்து 'கலைச்சுவிட்ரு கருவாச்சி கருவ'ன்னு சொன்னதும், ''இது சரியா தப்பான்னு தெரியலயே ஆத்தா''ன்னு நெஞ்சுல கைய வச்சு அழுத்தி, கவுத்துப்போட்ட குத்துச்சட்டி மாதிரி குத்தவச்சு ஒக்காந்துபோனா ரங்கம்மா.





ரெண்டுபக்க நியாயத்தையும் அவ ஒருத்தியாவே பேசிப்பேசிக் கடைசியா முடிவெடுத்தா.

''உசுர அழிக்கிறது பாவந்தான். ஆனா இது பாவத்துல பெறந்த உசுரு. அழிச்சாப் பாவமில்ல''.

அவளுக்கேத்த நியாயத்துக்கு வந்துட்டா.

ஒரு பப்பாளிப் பழம் வாங்கி, தோல் சீவிக் கனியெடுத்து அதத் தண்ணி ஊத்திப் பெணஞ்சு பெணஞ்சு கூழ்ப்பதமாக்கி அதுல அரவீசச் சீனியும் போட்டு

படிப்பகம்

padippakam

அடிச்சுக் கையில குடுத்திட்டா ரங்கம்மா.

''இந்தாத்தா பெரியமூக்கி... கருவக் கலைக்கக் கருவாச்சி ஒத்துக்கிருவாளா. மூணுமாசம் சொல்லாம மூடிவச்சவளாச்சே. மருந்து குடுக்கறது ஏம்பாடு; குடிக்க வைக்கிறது ஒம்பாடு. குடுத்துப்பாரு... மூணே நாள்ல தீட்டு வந்திரும்; சக்கம்மா மேல சத்தியம்''.

மருந்துன்னு சொல்லிக்குடுத்தா பெரியமூக்கி. நம்ம நல்லதுக்குத்தான ஆத்தா குடுப்பாங்கிற நம்பிக்கையில கடகடன்னு குடிச்சுட்டா கருவாச்சி.

ரெண்டு நாளாச்சு... மூணு நாளாச்சு... குடுத்த மருந்து வேலைக் காகல... சீல நனையல. பப்பாளிப் பழத்தையும் தின்டுபுட்டுக் கருவக் கெட்டியாப்புடிச்சுப் படுத்துக்கெடக்கு ஒரு அசையாத 'ஆத்மா'.

ரெண்டு ரெண்டரை மாசக் கரு வரைக்கும்தான் பப்பாளி பாத்தியப்படும். அதுக்கு அங்கிட்டு அதுக்கு அதிகாரமில்ல; வேற மருந்திருக்கு.

இப்படித்தான்... எண்டப்புளி ராசம்மா மூணுமாசமா இருக்க... புருசன் செத்துப்போனான் பாம்பு கடிச்சு. கலைக்க வேண்டியதாப் போச்சு. கறுப்பு எள்ளு வறுத்து, கருப்பட்டிபோட்டு இடிச்சு வெறும் வயித்தில தின்னக் குடுக்க - மூணாம் நாளே பேறுகால வலி மாதிரி குத்திக் குடைய ஆளவிடுங்கன்னு வெளியவந்து விழுந்திருச்சு விரல்தண்டிப் பிண்டம்.

புருசன்செயில்ல இருக்க, கொழுந்தன்கிட்டப் பிள்ள வரம் வாங்கினாளா இல்லையா... குருவியப்பன்பட்டி மண்ணுத்தின்னி - இப்ப அவ இல்ல - அவளுக்கு சலாம்பூ வெதைய எடுத்துப் பொன்முறுவலா வறுத்து, ஒரல்ல போட்டு இடிச்சு, கருப்பட்டி கலந்து உருண்ட தெரட்டிக் குடுக்க வெந்நியக் குடிச்சிட்டுப் படுத்துட்டா. அப்ப அவளுக்கு மாசம் நாலு; நாலாம் நாளே வந்திருச்சு தீட்டு. அஞ்சாம் நாளு தீட்டோட தீட்டா எலிக்குஞ்சு மாதிரி தொப்பூழ்க் கொடியோட வெளியேறி வந்திருச்சு பிஞ்சுப் பிண்டம்.

ஒடம்புல ரத்தச்சத்து உள்ள பொம்பளைகளுக்குத்தான் மேற்சொன்ன ரெண்டு மருந்தும் கேக்கும். கருவாச்சி ரத்தம் செத்த பொம்பளையா இருக்கா. அதுக்குண்டான மருந்து என்னான்னு யோசிச்சா வைத்தியச்சி.

'கச்சேந்திர எலை'ன்னு ஒண்ணு கெடக்கும் காடுகள்ல. கசப்புன்னாக் கசப்பு வாயில வைக்கமுடியாத கசப்பு. ஒரு எலைய மென்னு தின்னாலே வாய் வழியா வெளிய வந்து விழுந்திரும் கொடலு. அந்த எலைய மடிநிறையக் கொண்டாந்தா ரங்கம்மா. ஒரல்ல போட்டு இடிச்சா; சாறு எடுத்தா; கால்சொம்பு சாறுக்கு அரைவீச கருப்பட்டி போட்டா; அடுப்புக்கூட்டிக் கொதிக்கவச்சா; எறக்கி ஆற வச்சா. கசாயம்னு சொல்லி, விடிய வெறும் வயித்துல குடிக்க வச்சுட்டா. பாதியக் குடிச்சிட்டுப் பாதியத் துப்பிட்டுப் படுத்துக்கிட்டா கருவாச்சி.

உள்ள யானக்குட்டியே இருந்தாலும் மூணே நால்ல முழுசா வந்திரும் வெளிய.

சொல்லி நாலு நாளாகியும் ஒண்ணும் நடக்கல; ஒருபொட்டுத் தீட்டு இல்ல.







படிப்பகம்

padippakam

ரங்கம்மா மெரண்டு போனா. அவ ஆயுசில இப்படி ஆனதில்ல.

''வைத்திய சாஸ்திரத்துக்கே விரோதமாயிருக்குடி யாத்தா இந்த வெவகாரம். கருவாச்சி வகுத்துக்குள்ள பிண்டம்ங்கற பேர்ல ஒரு பிசாசு படுத்திருக்குடி'' ரங்கம்மா பொலம்ப ''பத்துக்கொறடு போட்டாகிலும் இருக்கிற கருவ எடுத்துவிட்ரு தாயி''ன்னு பதறிச் சொல்றா பெரியமூக்கி.

''கடைசியா ஒரே ஒருவழிதான் இருக்கு.ஆனா கருவாச்சி உசுருக்கு உறுதி சொல்லமாட்டேன்''.

ரங்கம்மாவோட ரெண்டு கையையும் இழுத்து நெஞ்சுல வச்சுக்கிட்டு, கருவக் கலைச்சு மகளக் காப்பாத்துன்னு கெஞ்சுறா பெரியமூக்கி.

அவ நெஞ்சில இருந்த இரண்டு கையையும் இழுத்து, தலைக்கு மேல வச்சு சாமியக் கும்புட்டு, ''இரு வாரேன்''னு வெளிய போறா ரங்கம்மா.

ஒரு சிரட்டைய எடுத்தா. அதுல பாதி சிரட்டைக்கு வெள்ளெருக்கம் பாலப் புடிச்சா. மல்லுத்துணி மாதிரி மெல்லிசா இருக்கிற வெள்ளத் துணிகிழிச்சா; வெள்ளெருக்கம் பால்ல அந்த வெள்ளத் துணிய ஊறப்போட்டா. பச்ச எருக்கிலையில மஞ்சப்பூத்து ஓடுமே நரம்பு... அதுல ரெண்ட எடுத்தா. அந்த ரெண்டு ஈக்கிக்கு மத்தியில வெள்ளத்துணியத் திரிச்சுச் செருகுனா. ''இத இப்படியே ஆடாம அசங்காம அந்த ஜீவ துவாரத்துல செருகிவிட்டுட்டா மூணே நாள்ல வெந்து வெளிய வந்து விழுந்திரும் எப்பேர்ப்பட்ட கருவும். இத வச்சுவிடவும் பொறுமை வேணும்; மூணுநாளும் வச்சுக்கிரவும் பொறுமைவேணும். எக்குத்தப்பா இந்தத் திரி எகிறிக் கருவுக்குள்ள சிக்கிக்கிருச்சுன்னு வச்சுக்க... அப்பறம் கருவாச்சியக் கண்ல பாக்க முடியாது... சொல்லிப்பிட்டேன்''.

ஊர் ஒறங்கி ஒடுங்க எழுப்புனா மகள.

''மகளே! மாட்டேன்னு சொல்லாத. இத வச்சு விடுறேன்; வச்சுக்க''.

''இது என்னாத்தா...? எதுக்கு?''

''எல்லாம் ஒன் நல்லதுக்கு''.

'பட்டீர்'ன்னு ஒரு மின்னல் மூளையில மின்ன, எல்லாம் வெளங்கிப்போச்சு கருவாச்சிக்கு.

''ஏன் ஆத்தா கலைக்கப் பாக்குற?''

''அந்தப் பாவிப்பய மாதிரி ஒரு பிள்ள, இந்த வீட்ல வந்து பெறக்கணுமா?''

''ஏன் ? என்னமாதிரி ஒரு பிள்ள இந்த வீட்ல வந்து பெறக்கப்படாதா? ''

''நீ பெறப்போற சீவன், நான்பெத்த சீவன அழிச்சிருமோன்னு மனசு வேகுதடி மகளே! ஆத்தா சொல்றேன் கேளு. அந்தப் பாவத்த அழிச்சுவிட்ரு''.

''உசுரே போனாலும் அழிக்கமாட்டேன். என் வகுறு... என் கரு... நானே சொமக்கிறேன்... நானே பெத்துக்கிறேன். இதுல கடவுளே குறுக்க வந்தாலும் கருவாச்சி மாறமாட்டா''.

ஆத்தா கையில வச்சிருந்த குச்சிய எடதுகையில புடுங்கி எறிஞ்சா பாருங்க- பாலுக்குத் தணல் காஞ்சுக்கிட்டிருந்த அடுப்புல விழுந்து சடசடன்னு எரிஞ்சு சாம்பலாப் போச்சு வெள்ளெருக்கந் துணி.



படிப்பகம்



# 10

“ஏலே கொண்ணவாயா! ஏற்கெனவே ஒங்க வீட்ல ஒரு பசுமாடு கன்டு போட்ருக்கு... இன்னொரு பசு இப்ப செனையா இருக்காம்ல. எப்படா ஈத்தெடுக்கப்போகுது?”

மாடு மேய்க்கப்போன காட்ல கொண்ணவாயன் வாயக்கிண்டி ‘லந்து லகள’ பண்றாங்க பொறணியவே பொழுதுபோக்கா வச்சிருக்கிற சக மாட்டுக்காரங்க.

அந்தக் கேள்வியில இருக்கிற பொடியைக்கூட புரிஞ்சிக்கிராத இந்த வெவரங்கெட்ட வெள்ளந்திப்பய, ‘‘எங்க வீ... வீ...வீ... வீட்ல ஒரே ஒரு

padippakam

பசுதான் இருக்கு, எங்க சீ...சீ...சீ... சின்னத்தாதான் மா.. மா... மா...''ன்னு முக்கி நிக்கிறான்.

''ஏ...ஏ...ஏ... நிறுத்துரா. சின்னத்தா மா... மா...மா... மாசமா இருக்கான்னு நீ சொல்லி முடிக்கிறதுக்குள்ள கருவாச்சி பேறுகாலமாகிப் பிள்ள பெத்து, தொட்டில் போட்டுத் தூங்கியும் போவா''.

பொதுவாக் கிண்டலடிக்க, கிள்ளி வெளையாட முன்னவிட்டுப் பின்னப் பேச, முடிஞ்சா அள்ளையில குத்தி அழுகவிடத் தன்னவிடத் தாழ்வான ஒரு பெறவி தேடுது ஒவ்வொரு மனுச மனசும். அந்த ஊர்ல எல்லாருக்குமா அப்படி வாய்ச்ச ஒரு சீவராசி கொண்ணவாயன். ஊர்ல அவன அப்படி நெனைக்கக் காரணமிருக்கு. அவன் சம்பந்தப்பட்டு ரெண்டு மூணு கூத்து நடந்துபோச்சு ஊர்ல.

வளவிக்காரச் சுப்பஞ்செட்டியாருக்கு ரெண்டு பெண்மக்க. இப்ப வீட்ல இருக்கிறவ இளையவ பவளம். கல்யாணமாகிப் போனவ கனகாம்பரம். அவ கல்யாணத்துலதான் நடந்துச்சு கொண்ணவாயன் கூத்து.

சில்லறையாச் சேத்துவச்சு கடனஒடன வாங்கி மூத்தவளக் கரைசேக்குறாரு சுப்பஞ்செட்டியாரு. அவ காது கழுத்துல ஒண்ணு ரெண்டு தங்கத்த ஒட்டவச்சது போக, விரல்ல வைர மோதிரம் போட்டாத்தான் அவ கழுத்துல தாலி ஏறும்ன்னு தலகீழா நிக்கிறான் மாப்பிள்ளை. தேனிக்குத் தெக்க பழனிசெட்டிபட்டிக்காரன் அவன்.

கண்ணாடி விக்கிற ஆளு தங்கம் வாங்குறதென்ன லேசா, வைரமோதிரம் மட்டும் பாக்கி வச்சிட்டு இந்தா இந்தான்னு இழுத்துப் புடிச்சுக் கல்யாணம் வரைக்கும் வந்துட்டாரு சுப்பஞ்செட்டியாரு.

அடுத்த சனிக்கிழமை பொண்ணுவீட்ல நிச்சயதார்த்தம். ஞாயித்துக்கிழமை பழனிசெட்டிபட்டி மாப்ளவீட்ல கல்யாணம்.

சொந்தபந்தங்கள சனிக்கிழமை பொழுசாய நிச்சயதார்த்தத்துக்கு வரச்சொல்லி ஞாயித்துக்கிழமை கையோட கல்யாணத்துக்குக் கூட்டிட்டிப் போயி அப்படியே அனுப்பிட்டா ஒரு நேரச் சாப்பாட்டோட கத முடிஞ்சு போகும்ங்கிறது சுப்பஞ்செட்டியாரு கணக்கு.

கொண்ணவாயனக் கூப்பிட்டாரு சொந்தபந்தங்களுக்கெல்லாஞ் சொல்லிவிட.

''வாடா அய்யா கொண்ணவாயா. 'அடுத்த சனிக்கெழமை சாயங்காலம் நிச்சயம்; ஞாயித்துக்கெழமை காலையில கல்யாணம். சுப்பஞ்செட்டி சொல்லிவிட்டார்'ன்னு சொல்லிட்டு வந்திரு ராசா. 'லட்சுமிபுரம் புதுப்பட்டி, வடுகபட்டி, எண்டப்புளிபுதுப்பட்டி, கருவாட்டுநாயக்கன்பட்டி, தேவதானப்பட்டி, தெப்பம்பட்டி, குச்சனூரு'ன்னு ஏழூருப் பேரும் ஆளும்



படிப்பகம்

சொல்லி, கைநெறையச் சில்லறைய அள்ளி வலது கையிலருந்து எடதுகைக்கு ஒண்ணொண்ணாப் போட்டு எண்ணி, ரெண்டுகையும் புடிடான்னு அவன்கையில போடும்போது மறுபடியும் எண்ணி, கார்ச்செலவு கைச்செலவு ரெண்டுக்கும் கணக்கும் சொல்லி,, ''சட்டுன்னு போய்ட்டு வாடா, என் சல்லிக்கட்டுக் காளை''ன்னு ஒரு நல்ல வார்த்தைய லஞ்சமாவும் குடுத்து நாலா தெசைக்கும் அனுப்பி வச்சாரு கொண்ணவாயன.

'சனிக்கிழமை நிச்சயம்; ஞாயித்துக்கிழமை கல்யாணம்'ன்னு சொல்லிக்கிட்டே போனபய வழியில வெள்ளரிக்கா வித்த ஒரு கெழவிகிட்ட நின்னான்.

கால்ரூவாய்க்குக் கடை போட்டு, அரைக்காரூவா லாபம் பாக்க ஒக்காந்திருந்த கெழவி இன்னொரு பொம்பளைக்கு யோசன சொல்லிக்கிட்டிருக்கா.

''இந்தாடி... நாளும் கோளும் நாலுஞ் செய்யும்'ன்னு சும்மாவா சொன்னாக. மக பேறுகாலத்துக்குப் போறவ நல்லநாளு பாத்துப் போக வேணாமா? சொல்றேன் கேட்டுக்க. திங்கக் கெழமை திரும்பாப் பயணம்; அன்னைக்குப் போகாத. செவ்வாயோ வெறும்வாயோன்னு சொல்லுவாக; செவ்வாயும் வேணாம். பொன்னு கெடைச்சாலும் புதன் கெடைக்காதும்பாக; புதன் கெழமை போ.''

வெள்ளரிக்காயப் பொளந்து உப்புத் தூளையும் மொளகாத் தூளையும் அதோட ஆத்மா வரைக்கும் போய்ச் சேரணும்ன்னு அப்பிக்கிட்டிருந்த கொண்ணவாயனுக்குக் கெழவி சொன்ன சொல்லுல புத்திமாறிப் போச்சு. எல்லா ஊர்லயும் பொறுப்பாப் போயி நின்னு 'பு... பு... புதன்கிழமை நிச்சயம்; வி... வி... வியாழக்கிழமை கல்யாணம்'ன்னு அழுத்திச் சொல்லிட்டு வந்திட்டான்.

புதன்கிழமை சாயங்காலம்.

''மத்தியானம் வச்ச கத்திரிக்காக் கொழம்புல மிச்சமிருந்தா ராத்திரி சோளக்களிக்குச் சரியாப் போகும் தாயி''ன்னு சுப்பஞ்செட்டியாரு சிக்கனம் பேசிக்கிட்டிருக்க வீட்டுவாசல்ல வரிசை வரிசையா நிக்கிதுக வண்டிக வந்து.

வீட்ல கூடிக் குமிஞ்சுபோச்சு ஒரு நாடகத்துக்குண்டான கூட்டம். சிறுசு பெருசு நண்டான் சுண்டான் கெழடு கட்டைன்னு வண்டி வண்டியா வந்து இறங்குது ஏழூருச் சொந்தம். திடீர்ன்னு வெளவாலுக கூட்டங்கூட்டமா வீட்டுக்குள்ள வந்து மனுசன் மூஞ்சியில மாறி மாறி அறைஞ்சா எப்பிடியிருக்கும்? அப்படி ஆகிப்போனாரு சுப்பஞ்செட்டியாரு. தப்பு நடந்துபோச்சுன்னு சொல்லவும் முடியல; சாப்பாடு ஏற்பாடு பண்ணவும் சக்தியில்ல.

பொதுவா ஊர் ஆளுகளுக்கு ஒரு 'நல்ல' பழக்கம். கல்யாண வீட்டுக்குப் போற யாரும் சொந்தவீட்ல சாப்பிட்டுட்டுப் போறதில்ல; சில பேர்

padippakam

ரெண்டு நேரம் பட்டினி கெடந்தும் வருவாக. பொருந்தி உட்காந்து சாப்பிட்டுட்டு வரலேன்னா கல்யாண வீட்டு ஆளுக கோவிச்சுக்கிருவாகலாம்.

வேறென்ன பண்றது? கல்யாணத்துக்கு இன்னும் மூணுநாள் இருக்கு. போயிட்டு வாங்கன்னு புடிச்சுத் தள்ள முடியுமா? இல்ல கல்யாண வீட்ல கம்மஞ்சோறு போட முடியுமா?

விடிய விடிய என்ன செய்யலாம்ன்னு அவரு மலச்சு நிக்க... வந்த வண்டிமாட்டுக்கு வைக்கோல் கெடைக்குமான்னு மண்டையச் சொரண்டி நிக்கிறான் வண்டிக்காரன். 'புவ்வா'வுக்கே வழியில்லங்கறப்ப பூவு கேட்டாளாம் பொண்டாட்டிங்கற கதையாகிப் போச்சு.

கல்யாணச் செலவுக்கு முடிஞ்சுவச்ச காச அவுத்து அரிசிச் சோறும் பருப்புச் சாறுமா அழுதுக்கிட்டே போட்டுப் போட்டு மூணே நாள்ல மூழ்கிப் போனாரு சுப்பஞ்செட்டியாரு.

கொண்ணவாயனயும் தேடுனாரு; சோறு போடலாம்ன்னு இல்ல; கூறு போடலாம்ன்னு - அவன் சிக்கல.

●

இதே மாதிரி இன்னொரு கூத்தும் ஆகிப்போச்சு.

சல்லிபட்டியில கட்டிக்குடுத்திருந்தாக காவக்காரச் சக்கணன் பெரியத்தா பேத்திய. சல்லிபட்டியிலிருந்து சொக்கத்தேவன்பட்டிக்கு மறுவீடு வாரான் மாப்பிள்ளை. வண்டிப்பாதை வழிபோனா நாலுமைலு; கள்ளிக்காட்டு வழி ஒத்தையடிப்பாதையில போனா ரெண்டரை மைலு. ஒன்றரை மைல் தூரத்த மிச்சம் பண்ண ஆசப்பட்ட பய, புதுப்பொண்டாட்டிய இழுத்தலைஞ்சு போறானய்யா முள்ளுக் காட்டு வழி. ஆடிக் காத்துல பேய்பிடிச்சு ஆடுன கருவேல மரத்து முள்ளு ஒண்ணு பட்டீர்ன்னு அடிச்சிருச்சு கண்ல. 'ஆத்தே'ன்னு அலறி அங்கயே ஒக்காந்து போனான். பதறிப்போன புதுப் பொண்டாட்டி கண்ணப் பிதுக்குறா; வாய்வச்சு ஊதுறா. முந்தானையச் சுருட்டித் தன் வாய்க்குள்ள திணிச்சு அந்தக் கதகதப்புல வெது வெதுப்பான வேது குடுக்குறா; ஒண்ணும் நடக்கல.

மழை பேஞ்சா எல வழியா ஒரே சீரா ஒழுகுமா இல்லையா... அப்படித் தண்ணி தண்ணியா ஊத்துது கண்ணு. கொஞ்சநேரத்துல ஒரு கண்ணுமட்டும் வெத்தல போட்டது மாதிரி செக்கச் செவேர்ன்னு ஆகிப்போச்சு. அடிச்ச கருமுவேலமுள்ளு கண்ணுக்குள்ள எங்கேயோ முறிஞ்சுகெடக்கு. ஒத்தக் கண்ணப் பொத்திக்கிட்டே ஊருக்குள்ள வந்த மாப்பிள்ள மாமியா வீட்டுக்கு இப்படியே போனா மரியாதை இருக்காது; 'முன்னுக்க நீ போ; பின்னுக்க நான் வாரேன்'னு சொல்லிட்டு அந்தப் பக்கமா சோளத்தட்ட சொமந்து போய்க் கிட்டிருந்த கொண்ணவாயன நிறுத்தி, ''இந்த ஊர்ல முள்ளெடுக்கிறவுக



படிப்பகம்

padippakam

வீடு எது''ன்னு கேக்க, ''வா... வா... வா... வாங்க... கூ...கூ...கூ....கூட்டிட்டுப் போறே''ன்னு ஊர் எல்லையில இருக்கிற வீட்டுத் திண்ணையில ஒக்காரவச்சுட்டுப் போயிட்டான்.

ஒரு ஈ காக்கா இல்ல அந்தச் சுத்து வட்டாரத்துல.

வீடு குச்சு வீடு. களவு கிளவு போயிருமோங்கிற பயத்துல பாதுகாப்புக்கு நாதாங்கி போட்டு அதுல ஒரு குச்சி வேற செருகியிருக்கு.

மத்தியானம் ஒக்காந்தவன்தான். பொழுது போயிக்கிட்டிருக்கு. ஊத்தெடுத்து ஒழுகுது ஒத்தக் கண்ணு; வலி வேற. முள்ளெடுக்கிற ஆளுக வரல. அந்தப் பக்கம் எப்பவாச்சும் கடந்துபோற ஆளுக அவன ஒரு மாதிரியாப் பாக்குறாக. கண்ணுல தண்ணிவடியுது. பொலம்புறான் வேற. மொளகாப்பழம் மாதிரி செவந்திருக்கு முழி. ''சொக்கத் தேவன்பட்டிக்கு வந்தும் கொறையலப்பா- சல்லிபட்டியில அடிச்ச சாராயம்''ன்னு பேசிட்டுப் போறாங்க தெருவுல.

இந்தா இந்தான்னு பல்லக் கடிச்சு ஒக்காந்துபாத்தா, பொழுசாய ரெண்டு கழுதைங்க வந்து நிக்குதுக வீட்டு வாசல்ல.

'யாருப்பா இங்க ஒக்காந்திருக்கிறது'ன்னு கேக்குறா வெளுத்த பொதியோட வீடு திரும்புன வண்ணாரு வீட்டுப் பொம்பள.

''கண்ணுல முள்ளடிச்சிருச்சு; முள்ளெடுக்க ஒக்காந்திருக்கேன்''.

''அதுக்கு ஏன் இங்க ஒக்காந்திருக்கீக?''.

''முள்ளெடுக்கிறவுக வீடு இதான்னு சொல்லி ஒக்கார வச்சுட்டுப் போனானே ஒரு பய....''

''நல்ல கூத்தா இருக்கே! நாங்க வெள்ளாவிக்கு முள்ளெடுக்கிற ஆளுக. கண்ல முள் எடுக்கிறவுக வீடு அடுத்த தெருவு''.

''என்னிய வலியோட கொன்னுட்டுப் போயிட்டானே ஒரு கொலகாரப்பாவி''ன்னு கத்துனவன்தான். அதுக்குப் பெறகு பொண்டாட்டி பேறு காலத்துக்குக் கூட சொக்கத்தேவன்பட்டிக்கு வரல; வாழ்நாள்பூரா வரமாட்டேன்னே சொல்லிட்டான்.

●

கொண்ணவாயன் கெடைக்குக் காவல்காக்கப் போன கத ஒரு சோகக்கத.

தைமாச ஒழவுக்கு முன்னால காடுகரைகள்ல கெடை அமத்துறது வழக்கம். ஆயிரம் உரம் போட்டாலும் ஆட்டுப் புழுக்கையும் கோமியமும்



படிப்பகம்

நெலத்துல விழுகிற மாதிரி வருமா? கெழக்க ராமநாதபுரம் சிவகங்கையிலருந்து ஐந்நூறு ஆயிரம்ன்னு ஆடுகள ஓட்டிக்கிட்டே மேற்க வருவாக கெடையாட்டுக்காரக. வேணும்ங்கிறவங்க பத்துநாள் பதினஞ்சு நாள் அவுகவுக நெலத்துல ஆடுகள அமத்திக்கலாம். பகல்ல எங்கிட்டுப் போய் மேஞ்சாலும் பொழுசாய நெலத்துல கொண்டாந்து அத்தன ஆடுகளையும் அடைச்சுருவாக கெடையாட்டுக்காரக. களவாணிப் பயக யாரும் வந்தா கண்டு சொல்றதுக்கு உள்ளூர்ல கொறஞ்ச கூலிக்கு ஒரு ஆளு வேணும்ன்னு கொண்ணவாயனப் பேசி அமத்திக்கிட்டாக கெடையாட்டுக்காரக. வீட்டு வேலையெல்லாம் முடிச்சிட்டு, பசுவுக்குத் தீவனம் வச்சிட்டு, ஆட்டுக்குப் புல் அள்ளிப் போட்டுட்டு, சம்பளம் வாங்கிற வீட்டுலயே சாப்பிட்டுட்டு, மசங்கக் கெடைக்கு வந்து விடியிறவரைக்கும் இருக்கணும். காலே அரைக்கா ரூவா சம்பளம் மாசத்துக்கு.

இவன் வேலைக்குச் சேந்த ஏழாம்நாளு கெடையில ஒரு குரும் பாட்டங்குட்டி செத்துப்போச்சு. கொண்ணவாயன் மசங்கக் கெடைக்குப் போக, குரும்பாட்டங்குட்டிய மொத்தமாக் கொழம்பு வச்சுத் தின்னுபுட்டுச் சட்டியக் கழுவிக் கவுத்திக்கிட்டிருக்கானுங்க கெடையாட்டங்காரங்க. அவங்க கைவிரல் இடுக்குல இருந்த கொழுப்புப் பசையும் கொழம்பு மணமும் கொண்ணவாயன் கொடல்ல இருந்த பசியக் குத்திக்கௌறுது.

கொண்ணவாயன் பொழுசாய வருவானே - அவனுக்கு ஒரு இத்த எலும்பாச்சும் எடுத்து வைக்கணுமேன்னு எடுத்துவைக்கல பாவிப் பயக. அன்னைக்கின்னு கெடைய இவன்கிட்ட விட்டுட்டு, அரப்படித்தேவன் பட்டிக்கு 'வள்ளிதிருமணம்' பாக்கப் போய்ட்டாங்க எல்லாரும்.

முன்பனிக்காலம். ஈரக்கொல நடுங்குது ஈரக்காத்துல. அவங்க கூட்டிவச்ச அடுப்புல மிச்சமிருந்த நெருப்புல செடிசெத்தைகளப் போட்டுக் ★கூதக்காயிறான் கொண்ணவாயன்.

கவுத்துவச்ச சட்டிக்குள்ளயிருந்து கழுவியும் போகாத கொழம்பு வாசன மூக்கத் தொளைச்சு நாக்கத் தூக்குது. திடீர்ன்னு கொண்ண வாயனப் புடிச்சிருச்சு கறிவெறி. ஆடுகளுக்கு கொழையறுத்துப் போடுற வாங்கருவாள எடுத்தான். எந்தெந்த ஆடுக கைக்குச் சிக்குதோ அந்தந்த ஆடுகளோட காதுகள மட்டும் 'சரக் சரக் சரக்'ன்னு அறுத்தான். சில ஆடுகள்ல ரெண்டு காது; சில ஆடுகள்ல ஒரு காது. கலவரம்பண்ணி ஓடுதுக காதுகளத் தரையில போட்ட ஆடுக. கெடைக்குள்ள அஞ்சாறு புலிக புகுந்து காதுகடிக்கிற மாதிரி அமளிதுமளியாகுது மந்தை. என்னமோ தரையில கெடந்த அரச எலைகளப் பெறக்கிற மாதிரி கீழ கெடந்த காதுகள ஒண்ணுவிடாமப் பெறக்கிறான். கூதக்காய்ஞ்ச அடுப்புல மொத்தமாப் போட்டுச் சுட்டுச் சுட்டுத் திங்கிறான்; சொரண்டிச் சொரண்டித் திங்கிறான். விடிய விடியத் தின்டு பாத்தும் பத்துக்

★ குளிர்காய்தல்

padippakam

காதுகளுக்கு மேல திங்க முடியல. விடிய்ய வந்துட்டாங்க நாடகம் பாக்கப் போனவங்க. கத்திக்கிட்டே அலையுதுக காதுக இல்லாத ஆடுக. இந்தக் கூத்தப் பாத்ததும் அவங்களுக்கு அந்தக் கூத்து மறந்துபோச்சு.

கெடை உண்டான காலத்திலருந்து இதுவரைக்கும் இல்லாத சரித்திரமா இருக்கே! கெடைக்குள்ள நரிக புகுந்து காதுகளக் கடிச்சுக் கத்திரிச்சு எடுத்துக்கிட்டு ஓடிப்போச்சோ? இல்லையே; கடிச்ச மாதிரி இல்லையே. அளந்து அறுத்த மாதிரியில்ல இருக்கு. அப்ப எதிரிக வேலையா இருக்குமோ? இருக்கும். திருப்புவனம் கெடைக்காரங் களுக்கும் நமக்கும் எப்பவுமே ஏழாம் பொருத்தம்தான். அவங்க வேலையாத்தான் இருக்கும். ஆனா, அவங்க ஆடுபுடிக்கிற கூட்டமாச்சே; காதறுக்க மாட்டாங்களே... இப்படிப் பல தினுசா நெனச்சு, என்ன நடந்துச்சுன்னு கொண்ணவாயனவே கேட்டிரு வோம்னு அவனத் தேடுனா, பழைய கம்பளி பொத்திப் பம்மிப் பம்மி ஒக்காந்திருக்கான் பய. கிட்ட வர வர ஒரு கருகல் வாசன வருது. இதென்னடா புதுசா இருக்கு... எங்கயிருந்து வருது வாசனைன்னு பாத்தா, அடுப்புத் தீக் கங்குகள்லயிருந்து வருது. ஒரு குச்சியெடுத்து சரசரசரன்னு அடுப்பக் கிண்டிப்பாத்தா ''எங்க கதியப் பாத்தீகளா''ன்னு வெடச்சுக் கெடக்குதுக கருகிப்போன காதுக.

''ஏலே இது இவன் சோலிதாண்டா''ன்னு பதறிப்போய்த் திரும்பிப் பாத்தா, கம்பளிய ஒதறிட்டு ஓட்டத்துல கூடிட்டான் கொண்ணவாயன். அவன் ஒதறிஎறிஞ்ச வேகத்துல அவன் சட்டைப்பையிலிருந்து துண்டா ஓடி விழுகுதுக அஞ்சாறு காதுக. ''ஒங் காத அறுக்காம விட மாட்டோம்டி''ன்னு அவங்க வெரட்ட, இவன் ஓட... கரட்டுக்காட்ல நடக்குது ஓட்டப் பந்தயம். வெடிச்சு விழுந்த பருத்திப்பஞ்சு காத்துல பறந்துபோறது மாதிரி போறான் பய.

ஒரு சிங்கம் முயலத் துரத்துனா, சிங்கத்த விட வேகமா ஓடுமாம் முயலு. ஏன்னா, சிங்கம் துரத்துறது பசிக்காக; முயல் ஓடறது உசுருக்காக. பசிக்காக ஓடறதவிட உசுருக்காக ஓடற ஓட்டம் வேகம் குடுக்குமா இல்லையா? கொண்ணவாயன் தப்பிச்சு ஓடியே போனான். ஆனாலும், கெடைக்காரன் ஒருத்தன் வீசி எறிஞ்ச வாங்கருவா கொண்ணவாயன் காதோரமா ஒரசிக்கிட்டே போய்விழுந்ததில எலும்பில்லாத அடிக் காது ஒரு ஓரமா அந்துபோச்சு. அவனுக்கு இடது காதுல இப்பவும் இருக்கிற ஒச்சம் காதறுத்த 'ஞாபகச் சின்னம்'.

இப்படி எல்லா விசயத்திலயும் அரைக் கேணயனா இருந்த கொண்ணவாயன் ஒரே ஒரு விசயத்துல மட்டும் வெவரமா இருந்தான். தைப்பொங்க, தீவாளிக்குச் சொந்த ஊருக்குப் போகலைன்னா கிறுக்கு முத்திப்போயிரும் அவனுக்கு. பையில பலகாரம் வாங்குவான்; அப்பனுக்கு வேட்டிதுண்டு வாங்குவான்; அவனுக்கு யாரு வீட்லயாவது திங்கத் தர்ற அதிரசம் முறுக்கத் திங்காம ஒண்ணுசேப்பான்.

கடைசியா-



படிப்பகம்

சுப்பஞ்செட்டியார் வீட்டுக்குப் போயிக் கைக்கு ஏழு மேனிக்குப் பதினாலு வளவி வாங்குவான். அதைமட்டும் தனிப்பையில போட்டு முடிஞ்சு இடுப்புல சொருகிக்கிருவான்.

முடவன் கொம்புத்தேனுக்கு ஆசப்படலாமான்னு ஒரு பழமொழி சொல்லுவாக. தப்பான பழமொழி அது. முடவன் கொம்புத்தேன் எடுக்கமுடியாதுன்னு சொல்லலாம்; ஆசப்படக் கூடாதுன்னு சொல்லலாமா? ஆசப்படறதுல என்ன தப்பு? அவன் ஆசப்பட்டுட்டான்.

கொண்ணவாயனுக்கும் ஒரு காதல் இருக்கு.

padippakam



# 11

"யப்பா கட்டையா! நான் பெத்த நல்ல மகனே! கேட்டியா...? மாசமா இருக்காளாம்டா ஓம் பழைய பொண்டாட்டி. அத்து அனாதிக்காட்ல விட்டும் கழுத்துல தாலி; வகுத்துல பிள்ள. தாலியக் கழத்தவும் மாட்டாளாம்; கருவக் கலைக்கவும் மாட்டாளாம். நாளைக்கிப் பிள்ளையப் பெத்துக் கையில புடிச்சுட்டுவந்து இவந் தாண்டா ஒன் அப்பன்... இதாண்டா ஒன் சொத்துன்னு வம்பு தும்பு பண்ணா என்ன பண்ணுவ? வழிவழியா வந்த சொத்துக்கு வாரிசு வேணுமடா மகனே! இன்னொரு கல்யாணம் பண்ணிக்க. நாளைக்கி வாராக செல்லம்பட்டி ஆளுக மாப்ளவீடு பாக்க. செவக்காட்டுப் புழுதியில உழுதுவந்தவன் மாதிரி சிவீர்ன்னு வராம, குளிச்சுமுடிச்சு வெள்ளையுஞ்

படிப்பகம்

சொள்ளையுமா வாடா மகனே!''

சடையத்தேவர் வார்த்தைக்குச் சரி சொல்லிட்டான் கட்டையன்.

●

மாசமாயிருக்கிற ஒரு பொம்பளைக்குப் பத்துமாசமும் துன்பந் தானாம். அதுலயும் இந்த மொத அஞ்சுமாசமும் கடைசி ரெண்டு மாசமும் இருக்கே... வேணாமப்பா இந்தப் பொழப்புன்னு வெறுப்பே வந்திருமாம். கொமட்டலும் வாந்தியும் கொடலப் பெரட்டுமாம்; தூக்கந் தூக்கமா வருமாம்; கண்ட எடத்துல கால நீட்டிக் கட்டையச் சாய்க்கச் சொல்லுமாம். வயித்துல ஒண்ணும் இல்லேன்னாலும் வாந்தி வாந்தியா வருமாம்.

ஒரு சின்னப் பல்லு மொளைக்குது, அதுக்கே ஈறு வலிக்குதே... ஒடம்புக்குள்ள ஒரு உசுரே மொளைக்கிற போது வலிக்காமப் போகுமா ஒரு பொம்பளைக்கு.

கருவாச்சி பாவம், எல்லாத்தையும் பல்லக் கடிச்சிக்கிட்டுப் பொறுத்துக்கிட்டா. ஆனா, இந்தச் சோறு பொங்குற வாசனையும் தாளிக்கிற வாசனையும் கறிக்குழம்பு வாசனையும் வந்தாப்போதும் ஊரவிட்டே ஓடிக் கரட்டுலபோயிக் குடியிருக்கலாமான்னு தோணுது அவளுக்கு.

ஒண்ணுஞ் சாப்பிடப் புடிக்கல; ஒறப்பும் புளிப்பும் தேடிச் சப்புக்கொட்டி நிக்கிது நாக்கு. புளியங்கொழுந்த உருவிப் பச்ச மொளகா வச்சு அரச்சு யார் குடுத்தாலும் கடவுளேன்னு கால்லவிழுந்திரலாம் போல இருக்கு. சோறு செல்லல; ஆனா ஊறவச்ச அரிசின்னா உசுராயிருக்கு.

திருநீறு கெடைச்சாத் தின்னே தீக்குறா, நாயன்மார் அறுபத்திமூணு பேரும் ஆயுசு பூராக் கொழச்சுப் பூசின திருநீற அஞ்சே நாள்ல இவ தின்டுபுட்டா.

சாம்பல், சாப்பாடுன்னு ஆகிப்போச்சு; மாங்கா, தொட்டுக்கன்னு ஆகிப்போச்சு. இந்த நாலஞ்சு மாசத்துல அவ அள்ளித்தின்ன சாம்பல் இருக்கே... அதக் கரட்டுக்காட்டுக்கு ஒரமா அடிச்சிருந்தா பருத்தி வெடிச்சுப் பவுனா விழுந்திருக்கும்.

●

பான தலையில; கொடம் இடுப்புல. கெணத்துல தண்ணியெடுத்துப் பொடிநடையா வாரா கருவாச்சி.

''ஏந்தாயி! சடையத்தேவர் வீடு எங்கிட்டு இருக்கு?''

தண்ணிப் பானையத் தலையில வச்ச மேனிக்கு எல்லாரையும் நின்னு நிதானிச்சுப் பாக்குறா கருவாச்சி.ஆணும் பொண்ணுமாப் பத்துப் பதினஞ்சுபேர் கொண்ட கூட்டம் எதுக்க நிக்கிது.

padippakam

''இப்படியே இடதுகைப் பக்கம் போனீங்கன்னா சாவடி வரும்; சாவடியத் தாண்டி வேப்ப மரம். வேப்பமரத்துலயிருந்து மூணாம் வீடு''.

வந்தவுக பூரிச்சுப்போனாக. அவ வழி சொன்னதுக்கு இல்ல - நிறைகுடம் எதுக்கவந்தா நல்ல சகுனமாம்; சம்பந்தம் கூடிவருமாம் அதுக்கு.

●

அன்னைக்கே பாதிக் கல்யாண வீடாகிப்போச்சு சடையத்தேவர் வீடு. தெருவெல்லாம் ஊர்வலம் போயித் திரும்பத் திரும்ப வருது சமையல் வாசனை.

கல்யாணம் பேச வாரவகளுக்குக் கறிச்சாப்பாடு போடறதில்ல. போடறதாயிருந்தா கெடையில காணாமப் போயிருக்கும் ஏழெட்டுக் கெடா.

பொண்டாட்டி தீட்டா இருக்கிற வீட்ல மாமியாகாரி வந்து பரிமாறது மாதிரி, கறி இல்லையேங்கிற கொறைய லேசா ஈடுகட்டும் நெய்யி. அஞ்சாறு ஊர்கள்ல சொல்லிவச்சு வாங்கி உருக்கிவச்ச நெய்யிருக்கும் ஒரு மரக்கா. நெய்யில நீச்சலடிக்கலாம்யா சடையத்தேவன் வீட்லன்னு பெருமைபேசி அலையுது பெருசு.

உக்காந்து வாழைஎலையிலயும் சாப்பிடலாம்; வாழை எலையிலயே உக்காந்தும் சாப்பிடலாம்; பெருங்கொண்ட எலைக.

வாசலப் பெருக்கி வைக்கோல்போட்டு வைக்கோல்மேல சமக்காளம்போட்டு, ''சம்பந்தம் அப்பறம் பேசுவோம்; மொதல்ல சாப்பிடுங்கப்பா''ன்னு எல்லாரையும் உக்கார வைக்க, உள்ள வாராக உருமாப்பெருமாத்தேவரும், காவக்காரச் சக்கணனும், சுப்பஞ் செட்டியாரும்.

அவுக மூணுபேரையும் பாத்து மூஞ்சிசெத்துப் போன சடையத்தேவரு ''வாங்கப்பா! நீங்களும் ஒக்காருங்க பந்தியில''ன்னு சொன்னாரு ஒப்புக்கு.

''சடையத்தேவன் வீட்ல சாப்பாடு என்ன மெதமாவா இருக்கும்? சாப்பிடுவோம்; பேசிட்டுச் சாப்பிடுவோம்''.

''என்னப்பா பேச்சு ஒரு இழுவையா இருக்கு. சாப்பிட வந்தீகளா? சண்ட புடிக்க வந்தீகளா?''

''நல்ல காரியம் நடக்கட்டுமப்பா. அப்பறம் வாரோம்''.

''நீங்க வந்ததச் சொல்லலேன்னா நாங்க வெந்ததத் திங்க முடியாதப்பா. வந்த சோலியச் சொல்லுங்க''.

''பரம்பரையாப் பெரிய பொழப்புப் பொழச்சதப்பா ஒங் குடும்பம். இன்னும் பல தலைமொறைக்குப் பால் பாலா இருக்கணும்''.



படிப்பகம்

padippakam

''அதுக்கு என்ன குறை இப்ப?''

''ஒன் வீட்ல சம்பந்தம் பேச வந்திருக்காக; சரிதான். கட்டையனுக்கு இன்னொரு கல்யாணம் பண்றதும் நல்லதுதான். ஆனா நம்ம கள்ளநாட்டு ஆசாரப்படி தீத்தவ கழுத்துல தாலி இருக்க இன்னொருத்திக்குத் தாலிகட்ட முடியாது புருசன்''.

''அதுக்கு வேற வழி இருக்கா... இல்லையா?''

''இருக்கு.புதுப்பொண்ணு கழுத்துல புருசன் கட்டமுடியாது தாலிய. மொதப் பொண்டாட்டி வந்துதான் மூணுமுடிச்சுப் போடணும். அப்பத்தான் கல்யாணம் செல்லுபடியாகும் நம்ம சமூகத்துக்கான சட்டப்படி''

''ஒண்ணு அந்தச் சிறுக்கி மகளத் தாலி முடிச்ச அவுக்கச் சொல்லுங்க. இல்ல எம் புது மருமகளுக்கு முடிச்சுப் போடச் சொல்லுங்க''.

''கழுதையக் கூடக் கட்டிக்கிரட்டும்; முடிச்செல்லாம் போட முடியாதுன்னுட்டா கருவாச்சி''.

''மீறி நாங்க கல்யாணம் பண்ணினா''.

''பண்ண மாட்டப்பா. நீ பாரதம் படிச்ச ஆளு. மீறி நடந்தா என்னாகும்ன்னு ஒனக்குத் தெரியாதா? ஊரே கூடி ஒன் வீட்டுக் கூரையில வேப்பங் கொழையச் சொருகி வச்சிரும். வேப்பங் கொழையச் சொருகுன வீட்டுக்கும் ஊருக்கும் உள்ள உறவு அந்துபோகும். ஊருக்குள்ள அந்தக் குடும்பம் இருக்கும்; அந்தக் குடும்பத்தோட ஊர் இருக்காது. எங்களவிடப் புத்திமுத்தி நிக்கிற ஆளு நீ. ஒனக்குப் போயி நாங்க சொல்றோம் பாரு''.

''அவள அத்துவிட்டது தப்பு; அடிச்சே கொன்றுக்கணும்'' ஓடிப்போயி ஒலக்கைய எடுக்கிறான் கட்டையன்.

''கருவாச்சிக்கு மொதல்ல கருமாதி... அப்பறந்தான் எங்க வீட்ல கல்யாணம்''. - சோத்துச்சட்டி தூக்கிட்டு வந்த சலம்பல்பாண்டி சட்டியக் கீழபோட்டுட்டுத் தாம் தூம்ன்னு தவ்வி,சோறுவச்ச எலைக மேல சேறுமிதிச்சு ஆடிட்டான்.

விசாரிக்காமலேயே எல்லா விசயமும் புரிஞ்சுபோச்சு சம்பந்தம் பேச வந்த ஆளுகளுக்கு.

குடிக்கவச்ச தண்ணிய எடுத்து எலையிலயே கை கழுவிட்டு எந்திரிச்சுப் போயிட்டாக எல்லாரும்.

சமச்ச சோறு ஆறிப் போச்சு; கொதிச்ச மனசு ஆறல.

''ஒனக்கு இருக்குடி பிள்ளா'' கருவாச்சி மேல வம்மம் வச்சு,கட்டையன் ஒரே எத்தா எத்தித் தள்ளுனதுல திண்ணையில ஒழுகி வாசல்ல பெருகி மாட்டுக் கோமியத்துல ஓடிக்கலக்குது நெய்யி.




படிப்பகம்

padippakam

●

ஐப்பசி மாசம். புனுபுனுங்குது மழை; சொத சொதங்குது பூமி. மசங்குன மாதிரியிருக்கு மத்தியானம். வீட்டுக்குள்ள வெளிச்சம் பத்தாதுன்னு தெருவாசப்படியில உள்வீடுபாத்துக் கருவாச்சிய ஒக்கார வச்சு, அவளுக்குப் பின்னுக்க ஒரு முக்காலிபோட்டுப் பேன் பாத்துக்கிட்டிருக்கா பவளம்.

சிலபேர் சல்லிக்கட்டு மாடு புடிக்கிறதுல, சிலபேர் புலி வேட்டை ஆடுறதுல பெரிய ஆளுகளா இருக்கிற மாதிரி, பேன் பாக்குறதுல பெருங்கொண்ட பேரெடுத்தவ பவளம். அவ பேன் பாக்குற சொகத்துல சொக்கிப்போன சொக்கத்தேவன்பட்டிப் பொம்பளைக பேன் பாத்து விடுறது புண்ணியம்ன்னு அவ காதுல பூவும் வச்சு விட்டுட்டாளுக.

ஆட்டுப்பண்ணை கோழிப்பண்ணை வச்சிருக்கிற மாதிரி தலையில பேன்பண்ணை வச்சு அலையிறாக அந்த ஊர்ல பல பொம்பளைக. காடுகரைகளே கதின்னு கெடக்குற பொம்பைளைக நித்தம் சீவக்கா போட்டுச் சுத்தம் பண்ண முடியுதா? இல்ல வெள்ளி செவ்வாய்க்கு எண்ணெ தேச்சு முழுகத்தான் லாயக்கு இருக்கா?

தலையில குப்பை கூளம் சொமக்கிறது - கெடச்ச எடத்துல தலவச்சு செடி செத்தையில படுக்கிறது - வறுமைக் கொடுமையில தலசீவாமப் போறது - முடியில தூசு தும்பு சேர்றது - இதெல்லாம் பேனை வா வான்னு கூப்பிட்டுச் சோறுபோட்டுச் சொந்தம் பாராட்டி வச்சுக்கிரும் தலையில.

ஒரு பேச்சும் பேசாமத் தலையப் பவளம்கிட்ட ஒப்படைச்சிட்டு, காலநீட்டித் தலையக் கவுந்து ஒக்காந்துட்டா கருவாச்சி. மாசம் அஞ்சு வரைக்கும் வயிறு எந்திரிக்காது பொம்பளைக்கு. நாலு முடிஞ்சு அஞ்சு ஆரம்பம். எறும்பு கடிச்ச உதடு மாதிரி லேசா மேடு கட்டின வயிறு அவ இடுப்புல சரிஞ்சு கெடக்கு சந்தோஷமா.

''ஏந் தலையில யாரோ கூதக்காயுற மாதிரி அரிப்பா அரிக்குதுடீ''ங்கிறா கருவாச்சி.

''தலையா வச்சிருக்கிற தல? காளவாச வச்சாலும் எரியாத ஒந் தலையில கூதக்காயுறாங்களாம் கூத?''.

சின்னதா ஒரு செல்லக் கோபம் கோவிச்ச பவளம், சிக்கும் சிண்டுமாயிருந்த கருவாச்சி முடியப் பச்சுப் பின்னலெடுத்துப் 'பளார் பளார்'ன்னு ஒதறி, கையில வெலக்கிக் காத்தாட விட்டா.சல்லுச் சல்லுச் சல்லுன்னு அவ முடிய அடிச்சுத் தொவைச்சு அவ தோள்லயே காயப்போட்டா.அவதலையில தலப் பெரட்டுப் பண்ணப் பண்ணத் துன்பத்துல ஒரு இன்பமாயிருக்கு; இன்பத்துல ஒரு துன்பமாயிருக்கு. கெறங்கிக் கிறுகிறுத்துப் போறா கருவாச்சி.சிணுக்கறுக்கி, ஈருவல்லி, சீப்பு





படிப்பகம்

padippakam

இந்த மூணு ஆயுதமும் இல்லாம, பெண்ணாப் பெறந்தவ போகக்கூடாது பேன் வேட்டைக்கு.பவளம் சிணுக்கறுக்கி எடுத்தா; சடைபுடிச்சுக் கெடந்த கருவாச்சி குடுமியச் சன்னஞ் சன்னமாச் சிக்கெடுத்தா.அட்சரேகை பூமத்திய ரேகை போட்டுத் தலய பாகம் பரிச்சா. ஒவ்வொரு முடியா வெலக்கி உள்ள போயிப் பாத்தா, ஒனக்கும் எங்களுக்கும் பந்தயம், புடிச்சிரு பாப்பம்ன்னு சவால் விடுதுக ஆண் பேனும், பெண் பேனும்.

பேன்கள்ல ஆண்பேன் எப்பவும் சிறுசு; பெண் பேனுதான் பெருசு. சென கொண்டு அலையிறதுனால பெண் பேன் வெரசா ஓடாது; சிக்கிரும் சீக்கிரம். ஆண் பேன் அப்படியில்ல. இந்தா புடிச்சாச்சுன்னு நெனைக்கிறப்ப ஒத்தமுடிக்குள்ள ஓடிப்போயிப் பாசாங்கு பண்ணிப் பதுங்கிரும். பேன் பாக்கிறவளக் கண்ணக் கட்டிக் காட்டுல விட்டிரும்.

கருவாச்சி தலையப் பாத்துப் பயந்துபோனா பவளம். அவ ஆயுசுல பாத்ததில்ல இப்படி ஒரு பேன்காடு. பத்து வெரலையும் குடுமி வேர் வரைக்கும் செலுத்திப் பிறாண்டு பிறாண்டுன்னு பிறாண்டி விட்டா.

அவ பிறாண்டுற பிறாண்டல்ல பேனுக்குக் கிறுக்குப் புடிக்கணும்; அப்பத்தான் பேன இவ புடிக்க முடியும். வேட்டைக்குப் போறவுக டமாரம் தட்டி, பொதருக்குள்ள இருக்கிற வெலங்குகள வெளியில கெளப்புற மாதிரி இவ பிறாண்டல்ல பதுங்குகுழிய விட்டு வெளியவந்து மெதக்குதுக பேனுக.

செனப்பேனுக போதையேறிக் கெடந்த இடத்துலயே கெடக்கும்; எங்கயும் போகாதுக. மொதல்ல ஆண்பேனாப் புடிக்க ஆரம்பிச்சா. ஒவ்வொண்ணாப் புடிச்சுப் புடிச்சு ரெண்டு கட்டைவெரல் நகத்துக்கு மத்தியில வச்சு மொறுக் மொறுக்குன்னு குத்துறா; சொடக் சொடக்குன்னு சத்தம் கேக்குது.

அவ பத்துவெரலும் தலைக்குள்ள பரபரன்னு பயணம் போக, தலையெல்லாம் பூப்பூக்குற மாதிரி ஒரு கெறக்கம் உண்டாக... அவ காது கழுத்து பொடணியில வெரல்படுற சொகம் ஒரு வீணை வாசிக்க... பேன் குத்துற சத்தம் ஒரு சங்கீதம் படிக்க... தலையில அரிப்பெடுக்கிற எடத்தில நண்டுமாதிரி நடந்துபோற வெரல் சொல்லாமச் சொறிஞ்சு சுரீர்ன்னு சொகங்குடுக்க... ஐப்பசி மாச மழைத் தூத்தலும் குதுகுதுன்னு ஒரு கூதக்காத்தும் முதுகுத்தண்டு வழிபாஞ்சு மூளைக்குள்ள கிச்சுக்கிச்சுப் பண்ண... கண்மயங்கி ஒறங்கிப்போனா கருவாச்சி.

எவ தலையக் கொடுத்தாளோ அவளப் பொதுவா ஒறங்க விடமாட்டா பேன் பாக்குற பொம்பள. நான் கழுத்து வலிக்கக் கருமாயப்பட்டுப் பேன் பாக்க, நீ அந்த உல்லாசத்துல ஒறங்குறவளான்னு பேனப் புடிச்சுப் புடிச்சு ஒறங்குறவள எழுப்பிக் 'குத்துடி நீயும்'ன்னு குடுத்திருவா கையில. ஆனா, ஒறக்கம் தொலைச்சவ ஒறங்கட்டும் பாவம்ன்னு பவளம் விட்டுட்டா.



படிப்பகம்

முதுகுல தொங்குற முடிய அள்ளி அவ மூஞ்சிக்கு முன்ன போட்டுட்டு, தாலியக் கொஞ்சம் பன்னுக்கிழுத்து முதுகுல போட்டுக்கிட்டு அவ பொடணிப் பள்ளத்தக் கண்டு புடிச்சா பவளம். தோட்டம் துரவுல மேச்ச ஆடுமாடுகளக் கடைசியாத் தொழுவுல கொண்டாந்து அடைக்கிறமாதிரி, புடிச்சபேனுகள அடைச்சுவக்கிற பள்ளம் அதுதான். அவ புடிச்சுப் போடப் போட நெம்பிப் போச்சு பொடணிப்பிள்ளம். இந்தா இந்தான்னு எல்லாப் பேனையும் எடுத்தாச்சு. வெள்ளை வெள்ளையா ஈருமட்டும்தான் மிச்சமிருக்கு. பேன் வைக்கிற முட்டைதான ஈருங்கிறது. அது கைக்குச் சிக்காது கழுத. உருவுறா உருவுறா ஈருவல்லி போட்டு உருவிக்கிட்டே இருக்கா. ஒரு உருவு உருவி ஈருவல்லிய வெளிய எடுத்து ஒரு அமுக்கு அமுக்க ஈருவல்லி இடுக்குகள்ல அந்த ஈருக சடக் சடக்ன்னு ஒடையிற சத்தம் கேக்க ஏதோ கனாவுல பாட்டுக் கேக்குற மாதிரியிருக்கு கருவாச்சிக்கு.

சிக்கெடுத்த தலையத் திரும்பவும் ஒருதடவ ஒதறி, குதிரக் கயிறு மாதிரி இடதுகையில அவ குடுமியஇழுத்துப் புடிச்சு வலதுகையில சீப்பெடுத்து அழுந்தச் சீவி முடிஞ்சதடியம்மா என் வேலன்னு ஒருமுடியும் போட்டு பவளம் எந்திரிச்சுத் தன் சீலயப் ‘படீர் படீர்’ன்னு ஒதறவும், சோளக் கருது அடிச்சு முடிச்சவ சீலையிலருந்து சொங்கு விழுகிற மாதிரி ஈரும் பேனும் முடியுமா காத்துல பறக்குது. அவ வெரல் இடுக்குலயெல்லாம் பிசு பிசுங்குது பேன் குத்துன ரத்தம்.

‘‘ஏ கருவாச்சி எந்திர்றீ’’ன்னு சொல்லிட்டு வீட்டுக்குள்ள கைகழுவப் போனா பவளம்.

கவுந்த தல கவுந்தமேனிக்கு அர மயக்கத்துலயே கெடக்கா கருவாச்சி. தெருவுல நடமாட்டமில்ல; ஆள் சத்தமில்ல. வேப்ப மரத்துல கத்திக்கிட்டிருக்கு மழையில நனஞ்சு தொண்டகட்டிப் போன காக்கா. காத்துல லேசா வருது யாரு வீட்லயோ கருவாடு சுடுற வாசன. ‘ம்மா’ன்னு அடிவயித்துலிருந்து கத்துது நாயக்கர் வீட்ல நேத்து ஈன்ட பசுமாடு. ஒரு அரத்தூக்க நெனப்புலயே இதையெல்லாம் அனுமானிச்சுக் கவுந்துகெடந்த கருவாச்சி யாத்தேன்னு அலறித்துடிச்சு எந்திரிக்கிறா.

அவ கழுத்துல யாரோ கயித்தவச்சு இறுக்குறமாதிரி இருந்திச்சு.

எந்திரிச்சுப் பாத்தா, கழுத்துல கெடந்த தாலியக் காணோம்.

சேறும் சகதியுமா இருந்த தெருவுல யாரோ தடதடன்னு ஓடுற மாதிரியிருக்கு.

நடந்தது என்னான்னு நின்னு நிதானிக்க முடியல. ‘அய்யோ’ன்னு கொடல் ஜவ்வு கிழியக் கத்துனா. தண்ணிமாதிரி தரையில கெடந்தவ தண்ணிப் பாம்பு மாதிரி எந்திரிச்சா . முந்தானைய எடுத்து இழுத்துச் சுத்துனா இடுப்புல. பளீர்னு தவ்வுனா வாசலுக்கு வெளிய தெருவுல. முழங்காலுக்கு

padippakam

மேல சுருட்டித் தூக்குனா சீலய. நடக்கக்கூட லாயக்கில்லாமக் கொழ கொழன்னு சேறாக் கெடந்த தெருவுல ஓடி வாராய்யா கருவாச்சி உள்ள கெடந்த உசுரு உச்சந்தலையில முட்ட முட்ட.

''யாத்தே எந்தாலிய அத்துட்டுப் போறான்
யாத்தே எந்தாலிய அத்துட்டுப் போறான்''

அவ போட்ட சத்தத்துல தீப்புடிக்குது நனஞ்சு 'நசநச'ன்னு கெடந்த தெருவு.



படிப்பகம்

padippakam



# 12

*"அய்யோ எந் தாலி! அய்யோ எந் தாலி"*

அஞ்சுமாசம் முழுகாம இருந்த பொம்பளைக்கு அந்தத் தெம்பும் தெறமும் எங்கிட்டிருந்து வந்துச்சுன்னே தெரியல. கொழஞ்ச சோத்தக் கொட்டிவச்ச மாதிரி சும்மா சொத சொதன்னு கெடக்குற ஐப்பசிமாசத் தெருவுல வெறிகொண்டு வெரட்டிப் போறா தாலி அத்து ஓடுறவன் பின்னால.

படிப்பகம்

மின்னல் மாதிரி ஓடி நாயக்கர் வீடுதாண்டி, கருவேலமுள்ளு அடைச்ச சந்துவழியாத் தவ்வப்பாத்து, சேறு வழுக்கித் தொப்புட் டீர்ன்னு விழுந்துபோனான் தாலிஅத்தவன்; தாலியைத் தூக்கிப்பிடிச்ச கையோட மல்லாக்கக் கெடக்கான்.

தத்தக்கா பித்தக்கான்னு ஓடிவந்து அவன் கையிலிருந்த தாலியை வெடுக்குன்னு புடுங்கிக் கழுத்துல கட்டிக்கிட்டு 'நான் ஒனக்கு என்னாண்ணே பாவம் பண்ணேன்''னு கருவாச்சி கத்திக் கதறவும் வீட்டுக்குள்ளருந்த ஊரு வெளியவந்திருச்சு.

மழைத்தண்ணியோட அழுதுக்கிட்டே. ''ஒம் பொண்டாட்டி தாலி பால்பாலா இருக்கட்டும்''ன்னு அவனக் கையெடுத்துக் கும்புட்டா, வல்லூறு வேகத்துல வந்தவ பாவம் வாத்துமாதிரி திரும்பிப் போறா.

ஊரே வையிது தாலிய அத்துட்டுப் போன ஒலக்கையன் தம்பிய.

''தாலிய அத்துப் பொழைக்கிறதுக்குத் தாலிய வித்துப் பொழைக்கலாமில்ல''.

''இவன் பாவம் அம்பு; கட்டையன்தான் வில்லு''.

''சொந்தபுத்தி எங்க போச்சு? பன்னி திங்கிறதத் திம்பானா கட்டையன் திங்கச் சொன்னா...?'' காறித் தெருவுல துப்புன எச்சியில அவன் மூஞ்சியிலயும் தெறிச்சுப் போச்சு ஒண்ணு ரெண்டு.

●

ஏழு மணிக்கே நடுச்சாமம் மாதிரி ஆகிப்போச்சு ஐப்பசிமாச ராத்திரி.

''தாலியத்தவன் நாசமாப்போக''ன்னு மண்ணள்ளித் தூத்துறேன்னு சேத்தஅள்ளித் தூத்திட்டு வந்த பெரியமூக்கி, மேல்வலின்னு அனத்திப் படுத்திருக்கிற மகளுக்குக் கைகால் அமுக்கி விடுறா.

கைகால் அமுக்கிவிடுறது பெரிய கம்பசூத்திரம்; எல்லாருக்கும் வராது. பெரியமூக்கி அதுல தெள்ளக் கடைஞ்சவ. சில பேர் கைகால் அமுக்கிவிட்டா வலி வெளிய போயிரும்; சுளுக்கு உள்ள வந்திரும். பெரியமூக்கி கைகால் அமுக்கிவிட்டா அம்பத்தாறு தேசத்துக்கு அங்கிட்டுப் போயிருந்தாலும் றெக்கைகட்டிப் பறந்து வந்து கண்ணுல சம்மணங்கால் போட்டு ஒக்காந்திரும் ஒறக்கம்.

மக குடுமிக்குள்ள கைசெலுத்திக் கோலம் போட்டு, காதோரம் குருத்தெலும்புகளத் தடவிக் குடுத்து,தோள்பட்டையப் பந்து மாதிரி அமுக்கிப் புடிச்சுப் பஞ்சுமாதிரி விடுதல பண்றா; ஒடம்பவிட்டு வலி வெளியபோறதக் கண்லபாக்குறா கருவாச்சி.

புடிச்சுவிடறதுன்னா எல்லாத்துக்கும் ஒரேமாதிரி புடியா...? கெடையாது. சதையுள்ள சாராங்கத்துக்கு வேற புடி. எலும்புத் தாக்கான எடங்களுக்கு வேற புடி. பொடணிக்கு வேற; பாதத்துக்கு வேற.

அவ கைச் சதைய ரெண்டு கையிலயும் அமுக்கி விரல்கள்ல அழுத்தி உள்ளங்கைப் பள்ளத்துல கொண்டாந்து குவிச்சு, தவழ்ற பிள்ளையத் தரையில எறக்கிவிடுற மாதிரி பொத்துனாப்புல புடிச்சு விட்டா, நெத்தியில வந்து ஒக்காந்திரும் நித்திரை.

padippakam

கட்டைவெரலையும் சுட்டுவெரலையும் பொடணியில அழுத்திப் பதிச்சு ஒரு அங்குலம் சதையை ஒசக்க இழுத்து, பழுத்த வாழப்பழத்த அழுத்திப் பாக்குற மாதிரி வலிக்காம அமுக்கிவிட்டா. காச்சுப் போன அந்தக் கையில எங்கதான் மயிலிறக வச்சிருப்பாளோ? சும்மா மழை பேஞ்சு ஓஞ்ச மேகம் மாதிரி மெதக்குது ஒடம்பு. பாவிமக விரல்ல என்னதான் மந்திரம் வச்சிருக்காளோ? அவ சொன்னாச் சொன்னபடி கேக்குது சொடக்கு.

வெரலப் புடிச்சுப் பெருவிரலால நகத்த ஒரு அழுத்து அழுத்தி, சொன்னா வந்திருன்னு ஒரு சுண்டு சுண்டுவா பாருங்க சடக் சடக்குங்குற சத்தத்தோட ஒடஞ்சு வெளியேறும் சொடக்கு. இந்தக் கட்டை வெரல் நாலு மட்டும் எடக்குப் பண்ணும் சொடக்குப் போட. கட்டைவெரல் சொடக்குப் போட அவகிட்ட வேற சூத்திரம் இருக்கு. உள்ளங்கையில ஒரு கூடு பண்ணி உள்ளுக்கு இழுத்துக்கிருவா கட்டவெரல. அதத் தடவித் தன் வசமாக்கிப் படக்குன்னு இழுத்து மடக்குன்னு ஒடிப்பா; கடக்குன்னு சத்தம் கேக்கும்.

தலையிலயிருந்து ஆரம்பிச்சுக் கடைசியாப் பாதசேவைக்கு வந்து சேந்துட்டா. தூசு தும்பு பூச்சியெல்லாம் எடுக்கிறதுக்குத் தாய்க்கோழி குஞ்சுக் கோழிய மூக்கால கொத்தும் பாருங்க, அப்படிக் கருவாச்சி பாதத்த நகத்தால பட்டும் படாமக் கொத்திக் கொத்தி விடுறா பெரியமூக்கி.

ஒடம்புல அலுப்ப எடுத்து எறிஞ்சிட்டு மூளைக்குள்ள அடைப்பு எடுக்குது அந்த நகக்கொத்து. எல்லாம் முடிச்சு, அணில் முதுகுல ராமர் மூணு கோடு போட்ட மாதிரி, பாதத்துல நகத்தால மூணுகோடு போட்டுட்டா முடிஞ்சது சோலின்னு அர்த்தம். எப்பிடிப்பட்ட ஆளாயிருந்தாலும் அதுக்குள்ள கொறட்ட விட்டாகணும். ஆத்தா இத்தன பண்ணியும் ஒறக்கம் வரல கருவாச்சிக்கு அன்னைக்கு.

இவ ஆத்தாளா? அழுக்குச்சீல கட்டிவந்த கடவுளா? என்னியவிட்டா யாருமில்ல இவளுக்கு. எம் முந்தானையவிட நீளமில்ல இவ ஒலகம்.

நான் ஒறங்கிட்டதா நெனச்சுக்கிட்டு என் இடுப்ப இறுக்கிப் புடிக்குதுன்னு தளர்த்தி விடுறாளே இந்தச் சீல... இதச் செவக்கிக் கட்டச் சொல்லிக் குடுத்ததுகூட இவதானே!

பாவாடையில உருவாஞ்சுருக்குப் போடத் தெரியாமக் கல்லு முடிச்சுப் போட்டு அலைஞ்ச கேணச்சிறுக்கி நானு. இவதான் சொல்லிக் குடுத்தா சீல உடுத்த.

பதினாறு மொழப் பொடவையில ஒரு முந்தியெடுத்து இடுப்புல ஒரு சுத்துச் சுத்தி எடப்பக்கம் ஒரு சொருகு, வலப்பக்கம் ஒரு சொருகுச் சொருகி முடிஞ்சுக்கிட்டு, சின்னச் சின்னதா ஏழெட்டு விசிறி மடிப்பு மடிச்சு, சுங்கம் சேத்து அதைப் பின்பக்கம் தள்ளிக் கொசுவம்விட்டு நெஞ்சோட சேத்துத் தச்சதுமாதிரி ஒரு இறுக்கு இறுக்கி, முந்தானைய இடுப்புல சேத்து ஆப்படிச்சது மாதிரி சொருகிவிட்டுட்டுச் சொல்றா: ''பிரிட்டிஷ்காரன் பீரங்கியில சுட்டாக் கட்டுன கோட்டை விழுந்தாலும் விழுந்திரும்; கட்டுன சேல விழுந்திராது பாத்துக்க''.



படிப்பகம்

பக்கத்துலயே ஒருக்களிச்சுப் படுத்துக்கிட்டா ஆத்தா. கருவாச்சி மூஞ்சில விழுந்து ஒரசுது ஆத்தா முந்தான. இந்த முந்தானையப் பத்தி அவ சொன்னசொல்லு இன்னும் காதுலயே இருக்கு.

''பதினாறு மொழத்துல மிச்சம் விட்ருக்கேனே... இந்த ரெண்டரை மொழம் முந்தான.. இதுல இருக்குடி ஆத்தா ஒரு பொம்பள பொழப்பு. முந்தானைக்கு வேல ஒண்ணா ரெண்டா? படுக்க - ஒக்கார - முக்காடுபோட - தலையில முண்டுகட்ட - தலை தொவட்ட - சும்மாடு சுத்த - காசு முடிய - விசிறி வீச - கட்டுக்கட்ட - ஞாபக முடிபோட - பண்டபாத்திரம் சுத்தம் பண்ண-மூஞ்சி தொடைக்க - ஒலை எறக்க - அவசரத்துல புருசனுக்குப் பாய் விரிக்க... எல்லாத்துக்கும் அந்த முந்தானதான். அஞ்சரைஅடிப் பொம்பள பொழப்பு இருக்கு அந்த ரெண்டரை மொழத்துல. ''

ஆனா அவ சொன்னதெல்லாம் போக, சொல்லாத ஒரு வேலையும் செஞ்சது அவ முந்தான.

அப்ப...

பத்துப் பதினோரு வயசிருக்கும் கருவாச்சிக்கு. ஆத்தாளும் மகளுமாக் கரட்டுக்காட்டுல கூலிக்குக் களையெடுத்தாக; கண்ணுல சிக்குன காஞ்சவெறகெல்லாம் ஒண்ணுசேத்துத் தலையில கட்டிச் சொமந்தாக; பொழுதிருக்க வந்துக்கிட்டிருக்காக; புடிச்சிருச்சு மழை.

எங்க நிக்கிறது ஒதுங்க இடமில்லாத காட்ல...? நாம நனஞ்சாப் பரவாயில்ல. நனஞ்ச வெறகு எரியாதேங்கிற வருத்தத்துல வந்துக் கிட்டிருக்காக ரெண்டுபேரும்.

மேகாட்ல மழைபேஞ்சு காட்டோடையில கரையறுத்து வருது செக்கச் செவேர்ன்னு செந்தண்ணி. ஆத்தக் கடக்கணும் பாத்துவாடீன்னு சொல்லிட்டு முழங்கால் தண்ணியில முன்னுக்கப் போறா பெரியமூக்கி.

ஆத்தா முன்னுக்கப் போகட்டும். ஆழம் பாத்துப் பின்னுக்கப் போகலாம்ன்னு கரையில நிக்கிறா கருவாச்சி. பெரியமூக்கி கரையேறிட்டா.

ஆத்தாளுக்கு முழங்கால் தண்ணி இருந்தா இடுப்புத் தண்ணி இருக்கும் தனக்கு; இது கருவாச்சி கணக்கு.

வெறகுக்கட்ட ஒத்தக்கையில புடிச்சுக்கிட்டே பாவாடைய இழுத்துச் சுருட்டி இடுப்புல சொருகி இறங்கிட்டா. பாதி ஓடை கடக்க, வெறகோட சேத்து அவள யாரோ இழுக்குற மாதிரி இருந்திச்சு. என்னா ஏதுன்னு நிதானிக்குறதுக்குள்ள மேகாட்ல பேஞ்ச மழையில இடைகாட்டுத் தண்ணியெல்லாம் ஒண்ணுகூடிக் கரைமீறி வருது காட்டாறு. ஆயிரம் தண்ணிப் பாம்புக ஒண்ணுசேந்து வார மாதிரி சீறிப்பாஞ்சு வருதுக செந்தண்ணி அலைக.

கரையில ஏறி முழங்கால மடக்கிச் சீலயப் புழிஞ்சுக்கிட்டிருந்த பெரியமூக்கிக்குத் தெரிஞ்சுபோச்சு தண்ணிக்கொடம் ஒடைஞ்சு வந்த புள்ள தண்ணியில போகப் போகுதுன்னு.

''வந்திருடீ... கருவாச்சி வந்துருடீ'' கத்துறா பாவம் கரையில கெடந்து.

தண்ணிக்குள்ள தரைக்கும் காலுக்குமிருந்த பிடிமானம் போய்க்கிட்டிருக்கு... கருவாச்சி தத்தளிக்கிறா... அலைமோதுறா... தண்ணியும் குடிச்சுப்புட்டா. அப்பவும் மார்க்கண்டேயன் புடிச்ச சிவலிங்கம் மாதிரி வெறகுக்கட்டை விடமாட்டேங்கறா.

''வெறக விட்டுர்றி; கையக்கால ஒதறிக் கரைக்கு வாடீ''. - பெருங்கூச்சல் போடுறா பெரியமூக்கி.

கரையக் கொடஞ்சு கருவேலமரத்த விழுத்தாட்டி வேக வேகமா வருது வெள்ளம். சுத்தியும் முத்தியும் பாத்தா ஆத்தா. கடவுள் மாதிரி கெடந்துச்சு கரையில ஒரு கல்லு. என்ன வேகத்துல எடுத்தா... என்ன வேகத்துல அத முந்தானையில முடிஞ்சா.. என்ன வேகத்துல அதத் தண்ணியில எறிஞ்சா... இன்ன வரைக்கும் அதை அறியமாட்டா பெரியமூக்கி. கல்லோட வந்து தண்ணியில தொப்புன்னு விழுந்த முந்தானையக் கருவாச்சி கெட்டியாப் புடிக்க... இழு இழுன்னு அவள இழுத்துக் கரையில சேத்துட்டுத் தான்கால்பதிச்சு நின்னுருந்த கரை ஒடையவும் ஆத்துல விழுந்துபோனா பெரியமூக்கி. ஆத்தா இப்ப ஆத்தோட போக ''யாத்தே யாத்தே''ன்னு கருவாச்சி கரையிலிருந்து கத்த... வெள்ளத்தோட மெதந்துவந்த மாட்டுவாலப் புடிச்சு ஒரு பர்லாங்தள்ளிக் கரையேர்றா பெரியமூக்கி. மக ஓடிப்போயி ஆத்தாளத் தூக்கிவிடவும் ''என் தண்ணிக்கொடம் ஒடஞ்சு ஒரு பெறப்பு; இன்னிக்குத் தண்ணியில ஒனக்கு மறுபெறப்பு மகளே''ன்னு காட்டோடைக் கரையில பாட்டுப் படிக்க ஆரம்பிச்சுட்டா. உசுரு பொழச்ச சந்தோசத்தவிட வெறகுபோன வருத்தத்துல வீடுவந்து சேந்தாக தாயும் மகளும்.

மூஞ்சியோரம் கெடந்த முந்தானைய எடுத்து மோந்து பாத்தா கருவாச்சி. ஆத்தா வாசன அடிச்சுச்சு அதுல. ஆத்தாள நெனச்சா ஊத்தா ஊத்துது கண்ணீரு. தொடச்சுக்கிட்டே எந்திரிச்சு ஆத்தாளுக்குக் கால் அமுக்கிவிடுறா கருவாச்சி.

காடுகரடு கடந்த காலு; என்னியத் தூக்கிக் கல்லுலயும் முள்ளுலயும் நடந்த காலு; தேஞ்சு சிறுத்துப் போனாலும் ஓஞ்சுபோகாத காலு.

இந்தா படுத்திருக்காளே ஆத்தா! இதே எடந்தான். எனக்கு அப்ப ஏழெட்டு வயசிருக்கும். அம்மை பாத்துக் கெடக்கேன். எள்ளு விழுக எடமில்லாம ஒடம்பெல்லாம் அம்மை போட்டு நெறபூட்டுப் பூட்டியிருக்கா மாரியாத்தா. வாழ இலைய விரிச்சு என்னப் பெறந்த மேனியா உரிச்சுப் படுக்க வச்சிருக்கா ஆத்தா. ஒடம்பெல்லாம் முத்துப் போட்டிருக்கு; அசைய முடியல. நாக்குலயும் கொப்புளம் போட்டிருக்கு; முழுங்க முடியல. இமைக்கு மேல ரெண்டு மூணு அம்மை; ஒறங்க முடியல.

அம்மை பாத்த வீட்டுக்கு ஆளுக யாரும் வாரதில்ல; போறதில்ல. அந்த இருவத்தோரு நாளும் ஆத்தா பெரியமூக்கி பட்டிருக்கா பாரு ஒரு பாடு... அதை நெனச்சாப் போதும் நெஞ்சுக்குழியில முட்டிக் கண்ணுவழியா எட்டிப்பாக்கும் கண்ணீரு.

தலமாட்டுல எப்பவும் எளநி வெட்டிவச்சு, வேப்பங்கொழை ஒடிச்சு விடாம நீவிவிட்டு, மஞ்சள், வேப்பங்கொழுந்து, அருகம்புல்லு, ஆமணக்கு

வித்து நாலையும் அம்மியிலவச்சு, கல் இல்லாத களிமண்மாதிரி அரைச்சு ''இதாண்டி அம்மன் காப்பு''ன்னு திரேகமெல்லாம் பூசிவிட்டு இருவத்தோரு நாளும் கண்ணுறங்காம- கண்ணுக்கெட்டின தூரத்துலயே இருந்தாளே... அதுகூடப் பெருசில்ல.. ஒடம்பு முழுக்கப் போட்டிருக்கிற அம்மையில ஒவ்வொரு முத்தா ஒடஞ்சு, அதுல ஒழுகுன தண்ணி அடிவாழ இலையில ஓடி ஆறாப் பெருகி, வீடே வீச்சமெடுத்துக்கெடக்க, அம்மனப் பழிக்கப்படாது அத வெளக்கமாத்துல பெருக்கவும் படாதுன்னு ரெண்டு கையும் குமிச்சு அத வாரி எடுத்து மஞ்சத் தண்ணியோட வீதியில எறிஞ்சாளே... கடவுளாயிருந்தாலும் போதுமடி பிள்ளைன்னு போயிருமா இல்லையா... ஆத்தா போனாளா?... இல்லையே!. எல்லாக் கடவுளுக்கும் பிள்ளை இருக்கோ இல்லையோ.. எல்லாப் பிள்ளைக்கும் கடவுள் இருக்கு- ஆத்தா ரூபத்துல.

நம்மூர்ல காலங்காலமாப் பொம்பளைக்குன்னு வந்ததெல்லாம் ஆத்தா வழிவந்த அறிவுதான். கோலம் போடச் சொல்லிக் குடுத்தவ ஆத்தா. குழம்பு கூட்டிப்போடச் சொல்லிக் குடுத்தவ ஆத்தா. ரசம் வைக்கயில அது இளங்கொதி கொதிச்சு அடங்க நுனி நகத்துல இத்துனூண்டு வெல்லங்கிள்ளி அதுல சுண்டிவிட்டு, எறக்கணும்னு சொல்லிக் குடுத்தவ ஆத்தா.

ஆத்து மீனும் கொளத்துமீனும் பெரிய மீனாயிருந்தா சுத்தம் பண்றது லேசு. உரசு உரசுன்னு உரசி அதுக வாயில இருக்குற பாசி தூசியக்கூட விரலவிட்டு எடுத்து வெளியில எறிஞ்சிரலாம். அயிரமீனுக சின்னது. அதுக வாயில மண்ணு இருக்கும்; எடுக்கவராது. அதுக்கும் ஒரு வழி சொல்லிக் குடுத்தவ ஆத்தா. உசுருள்ள அயிர மீனாத்தான் வாங்குவா. தண்ணி ஊத்தி நல்லாஅலசிட்டு மீனுக மேல பால ஊத்திவிட்ருவா. பாலு ஒண்ணு மட்டும் ஒவ்வாது அயிர மீனுக்கு. வாயிலிருக்கிற மண்ணுகளக் கக்கிப்புடும் கக்கி. அயிரமீனு நாத்தமும் போயிரும்; மீனும் சுத்தமாயிரும்.

இன்னொண்ணும் சொல்லிக் குடுத்தா ஆத்தா. அப்பப் புரியல அது; இப்பப் புரியது. ''ஒறங்கப் போகையில பாவாடையத் தெரட்டிப் பந்து சுருட்டித் தொடை இடுக்குல வச்சுத் தூங்குடீ''ன்னு சொல்லிக் குடுத்தா. ஏன் எதுக்குன்னு கேட்டதுக்குச் சொன்னா: ''தூங்கப் போகையில யான தும்பிக்கையச் சுருட்டி வாய்க்குள்ள வைச்சுக் கிரும்டீ... இல்லேன்னா புழுப் பூச்சிக உள்ள போயிருமா இல்லயா''அவ சொன்னது பெரியவளாகிப் புரியறப்ப வெக்கம் வெக்கமா வந்துச்சு; பின்னாடி நெனச்சாச் சிரிப்புச் சிரிப்பா வந்துச்சு.

கருவாச்சி இப்பவும் அதை நெனச்சுப் பல்லுத்தெரியாமச் சிரிக்கிறா; பல்லி கத்துறமாதிரி சிரிக்கிறா; விட்டுவிட்டுச் சிரிக்கிறா; பட்டும் படாமச் சிரிக்கிறா. ஆனா, அப்படியாப்பட்ட ஆத்தாளுக்கு அதுதான் கடைசி ராத்திரின்னு தெரிஞ்சிருந்தா இந்தச்சிரி சிரிச்சிருக்கமாட்டா பாவம்.

padippakam



# 13

**சொ**க்கத்தேவன்பட்டியே சோகமாகிப் போச்சு.

வெதச்ச வெள்ளாமக் காடு குறுக்கொடிஞ்சுநிக்குது. பதினாறு வயசுப் பொண்ணுக எண்ணெ வச்சுத் தல பின்னி நிக்கிறமாதிரி தளதளதளன்னு இருந்த காடுகளுக்குள்ள வெள்ளக்காரன் படையெடுத்து வந்தது மாதிரி வெட்டுக்கிளிக கூட்டம் கூட்டமா வந்து குமுஞ்சிருச்சுக. ரம்பத்த வச்சு அறுத்த மாதிரி எளங்குருத்துகளக் கத்திரிச்சுக் கத்திரிச்சு அதுக தின்னுட்டுப் போனதுல பொணங்கள நின்டமேனிக்கு நிறுத்தி வச்சமாதிரி சுடுகாடுகளா நிக்கிதுக

படிப்பகம்

சோளக் காடுக. கையில இருந்த காசுகளயெல்லாம் காடுகரைகள்ல போட்டுட்டு 'உள்ளதும் போச்சே'ன்னு நிக்கிது ஊரு.

வெவசாயம் அழிஞ்சு போனா வேலவெட்டி ஏது?

பெரியமூக்கியும் கருவாச்சியும் பித்துப் புடிச்சு நிக்கிறாக. வெளையாமப் போச்சு காடு. மடி வத்திப்போச்சு மாடு; குலுக்கையில இருந்த கம்பும் கேப்பையும் கொறைஞ்சுக்கிட்டே வருது. அடகு வைக்கப் பொருளிருந்தாலும் அடகுவாங்க ஆள் இல்ல ஊர்ல. மொசப்புடிக்கப் பம்முற வேட்டை நாய் மாதிரி எப்ப வேண்ணாலும் பாஞ்சிருவேன்னு, ஊர் எல்லையில பதுங்கி நிக்கிது பஞ்சம்.

அஞ்சாறு நாளாவே ஆத்தா பெரியமூக்கி தலவலி காய்ச்சல்ன்னு படுத்தே கெடக்கா. சுக்குத் தண்ணியக் குடிச்சுக் குடிச்சு ஒட்டிக் கெடக்குற உசுர அப்பப்ப ஊறவச்சுக்கிறா. அவளுக்கு நெல்லுக்கஞ்சியும் மொளகுரசமும் வச்சுத்தரலாம்னா காப்படி அரிசி வாங்கக் காசில்ல கருவாச்சி கையில.

அப்பத்தான் அன்னஞ்சியில காளையன் கெழவன் செத்துப்போனான்னு சேதிவருது. கூலிக்கு மாரடிக்க ஆள் கூப்பிட ஆள் வந்திருக்கு.

கல்யாணத்துலயும் சாவுலயும் தெரிஞ்சுபோகும் ஒரு மனுசன் இந்த பூமியில பொழச்ச பொழப்பு.

காசுகுடுத்துக் கூப்பிட்டுப் போனாலொழிய காளையன் கெழவனுக்கு அழுகுறதுக்கு ஆள் இல்ல அன்னஞ்சியில. கண்ணுல வெங்காயத்தப் புழிஞ்சுவிட்டாலும் கண்ணீர் வராது யாருக்கும். அழுகுறதுக்கு முகாந்திரமோ லாயக்கோ இல்லாத சாவு கெழவன் சாவு.

காளையன் கெழவன் மாதிரி கஞ்சப்பய சில்லாவுலயே இல்லேன்னு செல்லம்பட்டிப் பட்டயத்துல தைரியமா எழுதிப் போடலாம். 'செத்தா, தன்னக் கேக்காமச் செலவழிச்சுப் புடுவாங் களேன்னுதான் தொண்ணூத்தஞ்சு வயசுல உசுரக் கையில புடிச்சு உக்காந்திருக்கான் கெழவன்'னு ஊர்ல பேசுவாக.

சொத்து விரிய விரிய மனசு சுருங்கிப் போச்சு கெழவனுக்கு. ஒரு மனுசன் கஞ்சப்பயலா இருக்கறதுனால பணக்காரனாகிறானா...? பணத்தைக் காப்பாத்தக் கஞ்சப்பயலாகிறானா? முந்துனது முட்டையா கோழியாங்கிற மாதிரி பதிலுக்குச் சிக்காத கேள்வி இது.

காளையன் கெழவன் அப்பப்ப ஊருக்குள்ள மூக்குப் பொடி கடன் குடுக்குறதும் உண்டு. ஒரே ஒரு நிபந்தனைதான்.பொடிய அவர்தான் குடுப்பாரு. திருப்பி அவரேதான் எடுத்துக்குவாரு. அதுல ஒரு சூட்சுமம் வச்சிருந்தாரு.

இடுப்பு வேட்டியில முடிஞ்சு வச்சிருப்பாரு பொடி டப்பாவ. யாராச்சும் கடன்கேட்டா இடுப்புலயிருந்து கிட்னியவே எடுக்குற மாதிரி நிதானமா எடுப்பாரு. சுட்டு வெரல டப்பாவுக்குள்ள செலுத்தி, சுட்டுவிரல் நகத்துல

padippakam

என்ன வருதோ அத அப்படியே எடுத்து எதிராளிக்குக் குடுத்திட்டு, விரல்ல ஒட்டியிருக்கிற மிச்சப்பொடியத் தன் மூக்குல மாத்தி மாத்திச் செலுத்திச் சந்து பொந்தெல்லாம் இழுகிக்கிடுவாரு. கடன் குடுத்த பொடிய அப்பறம் வசூலிப்பாரு பாருங்க. அங்க தான் இருக்கு கெழவனோட கெட்டியத்தனம். இவரு பொடியக் கடன் குடுக்கறது சுட்டுவிரல் நகத்துல; வசூலிக்கிறது கட்டவெரல் நகத்துல. அதுக்குன்னே கட்டவிரல் நகத்தக் கெடா கொம்புவளத்தமாதிரி வளத்து வச்சிருப்பாரு. வாழை மட்டையிலயோ டப்பாவுலயோ கட்டை வெரல் நகத்த நொழைச்சு ஒரு எம்பு எம்பி அள்ளுனாருனுன்னா, சல்லிக்கட்டுக்காள கொம்புல மண்ணக் குத்தி ஒரு நெம்பு நெம்புமா இல்லையா அப்படி அள்ளிப்புடும் அள்ளி. அது பொடிக்கு அவர் வசூலிக்கிற ஒரு 'பொடி' வட்டி.

அப்படித்தான் உள்ளூர்ல ஒரு எழவு வீட்டுக்குப் போயிருந்தாரு காளையன் கெழவன். போனவரு பொணத்து நெத்தியில இருந்த கால்ரூவாயப் பாத்துட்டு, 'அதக் கொண்டாங்கப்பா, இந்தா அரரூவா இதை வைங்க'ன்னாரு. எழவு வீடே எந்திரிச்சு உக்காந்திருச்சு. 'இதென்னப்பா இது கூத்தாயிருக்கு? சாயம்போகாதுன்னு சொல்லி வெள்ள வேட்டிய வித்துப்புடற வினயமான ஆளு. கால்ரூவா எடுத்துட்டு அரைரூவாயத் தர்ராறே. இன்னக்கிப் பொளந்துகட்டப் போகுதுடா மழை'ன்னு வந்தசனம் பேசுது.

எங்கிட்டிருந்து மழை பெய்யும்? ஒரு செல்லாத அரைரூபாயப் பொணத்துக்கு வித்து அதிலயும் ஒரு கால்ரூபா லாபம் பாத்த காளையன் கெழவனக் கண்டு இறங்கி வந்த மேகம் திரும்பப் போயிருமா இல்லையா?

எட்டூரும் மறக்காது காளையன் கெழவன் ★சாலு இரவல் குடுத்த கதையை.

''எலே தொரக்கண்ணு... இந்தாடா சாலு; எடுத்துக்க. என் ஆயுசுல யாருக்கும் சாலு தோலு இரவல் குடுத்ததில்லப்பா; ஒனக்குக் குடுக்குறேன்; ஓட்டகீட்ட ஒண்ணும் கெடையாது பாத்துக்க; கன்னிப்பொண்ணு மாதிரி வச்சிருக்கேன். சேதமில்லாமத் திருப்பித் தந்தா வாங்கிக்கிறேன். ஒரு புள்ளி விழுந்தாக்கூடப் புதுச்சால் தரணும்டா. எடுத்துட்டுப் போ''.

மறுநாள் சாலு திரும்பி வந்தப்ப உருட்டி உருட்டிப் பாத்து ஒரு ஓட்டையக் கண்டுபிடிச்சிட்டாரு காளையன் கெழவன். புதுச்சாலு தந்தாலே ஆச்சுன்னு தகராறு பண்ண ஆரம்பிச்சுட்டாரு. துரைக் கண்ணு தலைகீழா நின்னுபாத்தான்; நடக்கல. புதுச்சாலு வாங்கிக்கிட்டுத்தான் கழுத்துல போட்ட துண்ட எடுத்தாரு. ஏற்கெனவே அது ஓட்ட விழுந்த சாலுங்கறதும், களிமண்ணும் புளியும் வச்சு அடைச்சுக் குடுத்த ஓட்டைங்கறதும் காளையன் கெழவனுக்கும் கடவுளுக்கும்தான் தெரியும். காளையன்கெழவன் உண்மை சொல்றதில்ல; கடவுள் பேசுறதேயில்ல.

---

★ கமலையில் நீர் இறைக்கும் தகரத்தாழி





படிப்பகம்

இப்படியாப்பட்ட ஆள் செத்துப்போனா எவன்கண்ல தண்ணி வரும்? மகனே அழுகல; மகன் பிள்ள பேரன் பேத்திகளும் அழுகல.

சொக்கத்தேவன்பட்டிக்கு ஆள்வந்திருக்கு, கூலிக்கு மாரடிக்கிற பொம்பளைகளக் கூட்டிட்டுப் போக. தொழில் கெடைச்சுப் போச்சுங்கிற சந்தோஷத்துல வைத்தியச்சி ரங்கம்மா, முக்குறுணி, இருளாயி மூணு பேரும் சீலய அவுத்து ஒதறி இழுத்துக்கட்டி அவுந்த குடுமிய அள்ளி முடிஞ்சு அன்னஞ்சிக்குப் புறப்பட, ஒங்ககூட நானும் வாரேன்னு ஓடிவந்து ஒட்டிக்கிட்டா கருவாச்சி.

''ஏய் வகுத்துப் புள்ளக்காரி வரக்கூடாதுடீ எழவுக்கு''. மூணு பேரும் ஒண்ணு சொன்னாப்புல தடுத்தாக.

''என் சிய்யான் கிய்யான் செத்துப் போனா வராம இருப்பனா. அப்படி நெனச்சுக்குங்க. வகுத்துல இருக்கிற பிள்ளையையும் காப்பாத்தணும்; வகுத்துல சொமந்த ஆத்தாளயும் காப்பாத்தணும்; கூட்டிட்டுப் போங்க. ஆத்தாளுக்கு மட்டும் சொல்லாதீக.''

கூலிக்கு மாரடிச்சு வர்ற வருமானத்துல ரங்கம்மாவுக்குப் பாதிப்பங்கு; மிச்சப்பாதியில மூணு பொம்பளைகளுக்கும் மூணுபங்கு; இப்படி ஒரு ஒப்பந்தம் பேசி முடிச்சு ஒத்தையடிப் பாதையில நடையில கூடிட்டாக நாலுபேருமா.

மசங்கலாயிருக்கு மத்தியானமே. இருட்டுக்கட்டியிருக்கு பூமி. காது வழியா நொழைஞ்சு நெஞ்சுக்குழியில உக்காந்து ஈரக் கொலைய அறுக்குது காத்து. தூசிகீசி விழுந்திருச்சோ என்னமோ... கண்ணக் கசக்கி நிக்கிது ஆகாயம்.

முந்தானைய எடுத்து இறுக்கி முக்காடு போட்டுக்கிட்டு ஒண்ணுக்குப் பின்னால ஒண்ணா ரயில்பெட்டி மாதிரி போறாக நாலு பொம்பளைகளும்.

அவிச்சு மடியில போட்டிருந்த கல்லுப்பயறை ஆளுக்கு ஒரு கை அள்ளிக் குடுத்து நாலு பேர்ல நாந்தான் பணக்காரின்னு நெஞ்ச நிமித்தி முன்னுக்க நடந்துபோறா முக்குறுணி. சுளீர் சுளீர்ன்னு அடிச்ச காத்து இப்பச் சொழட்டிச் சொழட்டி அடிக்குது.

நடந்து நடந்து தொண்ட காஞ்சு போச்சு கருவாச்சிக்கு. நாக்கும் மீனும் ஒண்ணோ என்னமோ... தண்ணி இல்லாட்டி ரெண்டுமே செத்துப் போயிரும் போலருக்கு. கஞ்சப்பய பிச்சைபோடுற மாதிரி சில்லரை சில்லரையா விழுகிற மழைத்துளியில நாக்க வெளிய நீட்டி நனைச்சுக்கிர்றா கருவாச்சி. இதப் பாத்துட்டா பின்னுக்கு வந்த வைத்தியச்சி. நில்லுங்கடின்னு எல்லாரையும் நிறுத்திட்டு போற வழியில பொதர்ல இருந்த ஒரு கள்ளிச்செடிமேல முந்தானைய விசுக்குன்னு வீசி, பொத்துனாப்புல இழுத்துக் காம்போட திருகி எடுத்தா ஒரு கள்ளிப்பழத்தை. சும்மா நீலமும் செவப்பும் பூத்து நிக்கிது அது. பாறையில போட்டு ஒரு மீன உரசுறமாதிரி முள்ள ஒரசுனா. குல்லாய எடுத்துத்

துண்டா வைக்கிறமாதிரி மேல்தோல உச்சுனாப்புல பிச்சுட்டு, 'தின்னுடி ஆத்தா'ன்னு திங்கக் குடுத்தா. தின்னவும் வெத்தல போட்ட மாதிரி ஆகிப்போச்சு கருவாச்சி வாயி.

'தவிக்கிற வாய்க்கு அங்கங்க தண்ணி வச்சிருக்குடி கடவுளு'ன்னு சொல்லிக்கிட்டே நடந்தாக மேற்கொண்டு நாலுபேரும்.

வெள்ளக்காரனக் கட்டபொம்மு வெரட்டி வெரட்டி அடிச்ச மாதிரி கூடிவந்த மேகங்களக் கலைச்சுக் கலைச்சு வீசுது காத்து. திடீர்ன்னு எறங்கிவந்து மூஞ்சியில படீர்ன்னு அடிச்சுட்டு ஒரே ஓட்டமா ஓடி ஒளிஞ்சு போகுது மழை.

வெட்ட வெளியில ஆதிக்கஞ்செலுத்தி நிக்கிது ஒரு கனத்த வேப்பமரம். அதுலபோயி ஒதுங்குனாக.

''ஏண்டி இருளாயி! குத்துக் கல்லுமாதிரி பேசாம வாரதுக்குக் கூதலுக்கு ஒரு கதை சொல்றது...?''

''வெறுங்கதை எதுக்கு? விடுகதை சொல்றேன். விடுவி பாப்போம்.''

''சொல்லு''

கத்திபோல் எலையிருக்கும்
கவரிமான் பூப்பூக்கும்
திங்கப் பழம் பழுக்கும்
திங்காத காய் காய்க்கும்

-அது என்னா?.

''தெரியாதாக்கும். கருவாச்சிக்குப் புடுங்கிக்குடுத்தனே கள்ளிப்பழம் ... அதானே?''

''இல்ல''

''ஆலமரம்''

''பொத்தாம் பொதுவாச் சொல்லாத ஆத்தா... புத்தியைச் செலவழி''.

கடைசியாக் கருவாச்சி சொன்னா: ''நாம ஒதுங்கி நிக்கிறமே... வேப்பமரம் அதுதான?''

''அப்படிப்போடு; தலையெல்லாம் மூளையடியம்மா கருவாச்சிக்கு''.

ஆள் செத்த அடையாளமே இல்ல அன்னஞ்சிக்குள்ள. பொணத்த நாற்காலியில உக்காரவச்சிட்டு ரெண்டு ஊதுவத்தியும் கொளுத்தி வச்சிட்டு, சண்டைக்காரங்க மாதிரி ஒருத்தர ஒருத்தர் பாக்காம உக்காந்திருந்தாங்க பத்துப் பதினைஞ்சு ஆளுக.

எழவு வீட்டுக்குன்னு ஒரு மூஞ்சி இருக்கா இல்லையா. அத மறக்காம எடுத்து மாட்டியிருந்தாக எல்லாரும். ஏழெட்டுக் கெழவிகளோட புலம்பல் வேற; கண்ணுல ஈரப்பசையே இல்லாம.

padippakam

உலகத்துலேயே பெரிய சோகம் கண்ணீர் வராம அழுகிறதுதான். அந்தக் கெழவிக அழுக முடியாம அழுகுறதப் பாத்தா... அழுகையே வந்துரும் அழுதறியாத ஆளுக்கும்.

காளையன்கெழவன் கடைசி மக - கோம்பையில வாக்கப்பட்டவ -''என்னப் பெத்த அப்பே!''ன்னு தலைய விரிச்சுப்போட்டு நெஞ்சில அடிச்சு அழுதுவர்றா. 'செயிக்கிறசீட்டு வந்து சேரலையே'ன்னு பெருங்கொண்ட சோகத்திலிருந்த காளையன்கெழவன்மகன் சீட்டை எறிஞ்சிட்டுத் திண்ணையவிட்டு மளார்ன்னு எந்திரிச்சு, ''நாசமாப் போகன்னு அப்பன மண்ணவாரித் தூத்திட்டுப் போன கழுத... இப்ப என்ன நெஞ்சில அடிச்சு நீலிமாதிரி அழுது வாரவ?''ன்னு சொல்லி... விட்டான் ஒரு அறை. ஒப்புச் சொல்லி அழுதுவந்த ஒரே ஒருத்தியும் ஒஞ்சுபோனா.

''ஏ சொக்கத்தேவன்பட்டிப் பொம்பளைகளா. நீங்க மட்டும் அழுங்களா''. ஒரு சாராயச் சத்தம் போட்டு சீட்டு வெளையாடப் போயிட்டான்.

''காக்கா பறக்காத
கள்ளிக்காட்டு பூமியில
கர்ணன் வந்து பெறந்தீரே
காளையனார் ரூபத்துல''

''ஊரெல்லாம் அன்னமிட்டு
உறவுக்குக் காசுதந்து
எமனுக்குத் தானமிட
ஏறிட்டீரோ பூந்தேரு?''

ரங்கம்மா இட்டுக்கட்டி மொதவரி பாட... முக்குறுணி ரெண்டாம் வரியில கூட... இருளாயி கருவாச்சி ரெண்டுபேரும் பின்பாட்டுல சேந்து பின்னி எடுக்குறாக. இல்லாத கீர்த்தியெல்லாம் பாட்டுல கேக்கக் கேக்க 'சாவு ஆசை' வருது கேட்டுக்கிட்டிருந்த கெழடுகளுக்கு.

பொழுதிருக்கப் பொணந் தூக்கியாச்சு. நாலு பொம்பளைகளுக்கும் சேத்துஆறுரூபா குடுத்தாக அழுத கூலி. பன்னாடை மாதிரி ஆளுக்கொரு நூல் சீலையும் தந்தாக. மாரடிச்ச பொம்பளைகளுக்கு இம்புட்டுக் கூலியாகும்னு தெரிஞ்சிருந்தா மண்டையப் போட்டிருக்கமாட்டாரு கெழவன். செத்துப் போனதனால இப்பத் தெரியவும் போறதில்ல; தெரிஞ்சா வேகாம வெறச்சே கெடந்திருக்கும் நெஞ்சுக்கூடு.

பொழுதோட பொழுதா ஊருபோய்ச் சேந்திரலாம்னு பொம்பளைக நாலுபேரும் புறப்பட்டா - ஆலமரத்தத் தூக்கி அங்கிட்டு வைக்கிற மாதிரி அடிக்குது காத்து. காத்துன்னாக் காத்து கடுங் காத்து. கல்லுகளப் பேத்து ஆளுக மேல எறியிற காத்து. ''இந்தக் காத்துல போனா ஊரு போய்ச் சேரமாட்டீக. இருந்து விடியப் போங்க''ன்னு சொல்லீட்டாக எழவுவீட்டு ஆளுக.



படிப்பகம்

padippakam

சோளச்சோறும் மொச்சப் புளிக்குழம்பும் பசிக்கு ருசியா இருந்துச்சு. ''ஆத்தாகிட்டச் சொல்லாம வந்துட்டமே'' நெனப்பு நெஞ்சுக்குழிய அறுக்க ராத்திரியெல்லாம் கண்ணு மூடாமக் கெடந்தா கருவாச்சி.

விடிய விடிய அடிச்ச காத்து விடிய்...ய ஒஞ்சுபோச்சு.

நடந்தா-

ஒத்தையடிப் பாதை மண்ணுமூடிக் கெடக்கு. வாரப்ப மழைக்கு ஒதுங்குன வேப்பமரம் என்னிய அடையாளம் தெரியலையான்னு குறுக்கொடிஞ்சு நிக்கிது. பாதிக்கெணறு மேடாகிப் போச்சு கெணத்துமேடு சரிஞ்சு. கடுங்காத்து தூக்கி எறிஞ்சதுல தோல்மாதிரி தொங்கிக் கெடக்கு வேலி முள்ளுமேல ஒரு வெள்ளாட்டங்குட்டி. குச்சி குச்சியா நின்ன வெள்ளாமக் காடு அறுத்துப் போட்டமாதிரி தரையில கெடக்கு.

சொக்கத்தேவன்பட்டிக்குள்ள வந்தா -

வீடு தெருவுக்கு வந்துட்ட மாதிரியும் தெருவு வீட்டுக்குள்ள வந்துட்ட மாதிரியும் உருமாறிக் கெடக்கு ஊரு. முள்முருங்கை மரமெல்லாம் நட்ட எடத்தைவிட்டு நாலடி தள்ளிக் கெடக்கு. தலையத் தரையில போட்டுக் கெடக்கு புன்னமரம் ரெண்டு. ஒரலு அம்மிக்கல்லத் தூக்கிக் குண்டுவெளையாடிட்டுப் போயிருக்கு காத்து.

அலுப்பும் மயக்கமுமா வந்த கருவாச்சி அதிர்ச்சியாகிப் போனா. வீடு தொறந்துகெடக்கு; வீட்ல யாருமில்ல.'ம்மா'ன்னு கத்திக் கத்திக் கயித்த இழுத்து இழுத்து அக்கப் பாத்ததுல கழுத்து புண்ணாகி நிக்கிதுக பசுவும் கன்டும்.

உள்வீடு ஏன் வெளிச்சமாயிருக்கு?<br>
ஓடிப்போயிப் பாத்தா -

தலைக்கு மேல இருந்த ரெண்டு தகரத்தக்காணோம். மேல வச்சிருந்த கல்லத் தள்ளிவிட்டுட்டுத் தகரத்தத் துண்டாத் தூக்கி எறிஞ்சிட்டுப் போயிருச்சு காத்து. கொண்ணவாயனக் காணோம். ஆத்தா எங்க போனா? தகரம் தேடிப் போயிருப்பாளோ?

வீட்டத் தாண்டி விழுந்து கெடக்குற படல்களத்தாண்டி- சரிஞ்சு கெடக்குற படப்புகளத் தாண்டி- தரையில கொட்டிக் கெடக்குற கூரைகளத் தாண்டிப் போனா சீமக்கருவேலம் புதர்மேல தெரியுது ஒரு தகரம்.

ஆகா! ஏழேழு கடல்தாண்டிப் போனாலும் திரும்பி வந்திருமாமில்ல ஏலேலசிங்கன் பொருளு...? ஆத்தா தண்டட்டிய வித்துப் போட்ட தகரம். எங்க போயிரும்?

ஆளுக்கொரு பக்கம் புடிச்சுக் கருவாச்சியும் வைத்தியச்சியும் தகரத்தத் தூக்கிப் பாத்தா-

உள்ளுக்க...



படிப்பகம்

padippakam

கழுத்தறுந்து செத்துக் கெடக்கா பெரியமூக்கி. வெட்டருவாளக் கையில புடிச்சு வெறகுக்கு முள்ளுவெட்ட வந்தவள, காத்துல பறந்து வந்த தகரம் கழுத்த அறுத்திருக்கு. ஒறஞ்ச ரத்தம் குங்குமக்கட்டி மாதிரி-ஒட்டியிருக்கு. பாதிக்கண்ணு தெறந்தே கெடக்கு.

'யாத்தே'ன்னு கத்துனா பாருங்க கருவாச்சி...கர்ப்பம் கலங்கிருமோன்னு கையப் புடிச்சு இழுத்து அவள நெஞ்சில போட்டுக்கிட்டா வைத்தியச்சி.

'வந்துட்டியா மகளே வா... கடைசியா ஒன்னியப் பாத்துட்டுப் போகலாம்ன்னுதான் கண்ணு முழுசா மூடாமக் காத்துக்கெடக்கேன்... வா!'

பெரியமூக்கி பொணம் பேசுற மாதிரியே இருக்கு.




படிப்பகம்

padippakam



# 14

ஆடுமாடு செத்துப்போனாலே ஆள்செத்த மாதிரி அழுது பொலம்புற ஊரு அது. காத்துல பறந்துவந்த தகரத்துல கழுத்தறுபட்டுச் செத்துப்போனா பெரியமூக்கின்னு கேள்விப்பட்டதும் எடுத்த பொருள நின்ட எடத்துல போட்டுட்டு ஓடிவந்து குமுஞ்சுபோச்சு ஊரு.

பெரியமூக்கி வீட்டுப் பசு அடிவயிறு ரெண்டாக்கிழிய 'ம்மா'ன்னு ஒரு கத்துக் கத்துச்சு பாருங்க... ஊரே ஒறஞ்சு உசுர்வத்திப்போச்சு. சாவுக்குன்னே கத்துறதுக்கு வேற வேற சத்தம் வச்சிருக்குதுக சகல சீவராசிகளும்.



படிப்பகம்

padippakam

''பெ...பெ...பெரியத்தா...போ...போ... போயிட்டியா''ன்னு பொலம்பிக்கிட்டே கையில இருக்கிற சாட்டைக்கம்புல தன் மண்டையிலயே மாறிமாறி அடிச்சு நெத்தியிலயும் புருவத்துலயும் ரத்தம் ஒழுகி நிக்கிறான் கொண்ணவாயன்.

''இந்தக் கடவுளுக்கும் கருவாச்சிக்கும் அப்படி என்னதான் சண்டையோ...? அவ குடுமியப் புடிச்சு இந்த ஆட்டு ஆட்டுதே...''

''ஆத்தாளுக்கு ஆத்தாளா அப்பனுக்கு அப்பனா இருந்த ஒருத்தியும் போயிட்டா. கருவாச்சி பொழப்ப இன்னும் என்னென்ன சூறாவளி சுத்தப் போகுதோ?''

இருளப்பக் கோடாங்கி, கடப்பாரைக் கவுண்டரு, அம்மையநாயக்கரு, முக்குறுணி, பவளம், இருளாயி எல்லாரும் வாயிலயும் வயித்துலயும் அடிச்சுக்கிட்டே வந்து கூடிட்டாக; அழுகாத சனம் பாக்கியில்ல.

கருவாச்சி மட்டும் அழுகல. எந்த எடத்துல ஆத்தாளப் பொணமாப் பாத்தாளோ அந்த எடத்துலயே புத்தியப் போக்கடிச்சவ மாதிரி மூளையில முள்ளடிச்சு உக்காந்துபோனா. அவளுக்கு நெறம் தெரியுது; உருவம் ஏறல கண்ணுல. சத்தம் கேக்குது; சொல்லு விழுகல காதுல.

நடைமாறிப்போன உருமாப் பெருமாத்தேவரு ''போய்ச் சேந்துட்டியா ஆத்தா''ன்னு பொலம்பிக்கிட்டே எழவு வீட்டுல வந்து நெஞ்சப் புடிச்சு ஒக்காந்திட்டாரு.

அடிச்ச காத்து ஒடிச்சுக் கெணத்துக்குள்ள போட்டுப் போன கமலைய வால்கயிறு கட்டி இழுத்துக்கிட்டிருந்த காவக்காரச் சக்கணன் தகவல் தெரிஞ்சு, ஊரடித்தோட்டத்தவிட்டு ஓடிவாராரு ஒத்த வரப்புல.

காத்துலயும் கவலையிலயும் நெறங் கொலைஞ்சு போன வீட்ட ஓடிஓடி ஒழங்குபண்ணுதுக பெருசுக.

''ஏலே சின்னமாயி! அந்தக் கூரைத் தகரத்தப் போட்டுவிடப்பா. வீடே வீதிமாதிரி கெடக்கு''.

படபடன்னு ரெண்டு பேரு ஏறுனாங்க. ஓரம் சாரம் பாத்து ஒழுங்காத் தகரம் சொருகி எச்சா ரெண்டு கல்லையும் தூக்கி வச்சாங்க.

''யப்பா! அழகர் நாயக்கர் மகனே! நரியடிச்ச கோழி மாதிரி பொணம் கெடக்கு தரையில. ஒழுங்கு பண்ணிப் பொணத்த உக்கார வையப்பா''.

விறுவிறுன்னு வேலபாத்தாக ரெண்டு மூணு எளந்தாரிக.

அந்த ஊர்லயே மொத்தம் மூணுபேரு வீட்லதான் நாற்காலி யிருக்கு. அதுல ரெண்டு வீட்ல எழவுக்குத் தாரதில்ல. மூணாம் வீட்டு நாற்காலிய வாங்கிட்டு வந்து பெரியமூக்கி பொணத்தத் தாங்கிப் புடிச்சு உக்காரவைக்க, கைகால் நிக்கிது; கழுத்து நிக்கல.

ஒரு கிழிஞ்ச துண்டெடுத்தாக; காயம் மறைய அவ கழுத்துல சுத்துனாக. ஒரு சரடு எடுத்தாக; ரெண்டு மூணு சுத்துச் சுத்திக் கழுத்த நிமித்திப் பின்



படிப்பகம்

நாற்காலியில முடிச்சுப் போட தலை நிமிந்திருச்சு பொணத்துக்கு. இப்பக் கட்ன கயிறு கண்ணுக்குத் தெரியுது. அவ குடுமியை எடுத்து உதறிப் பரப்பிக் கயித்த மூடுனாக. தொடையை நெருக்குனாக. கால் கட்டவெரல் ரெண்டையும் ஒட்டிக் கட்டிவச்சாக ஒண்ணு சொன்னாப்ல; கைரெண்டையும் நாற்காலியோட சேத்துக் கட்டவும் அம்சம் வந்திருச்சு பொணத்துக்கு.

பொணத்துக்குப் பக்கத்துல நெறைமரக்கால்ல நெல்லுவச்சு, ஊதுவத்தி கொளுத்திவச்சு ஒடையாத தேங்கா ரெண்டும் கண்தெறக் காத வாழப்பழம் அஞ்சும் வைக்கவும் பூரணமாகிப்போச்சு பொணவீடு.

அழுகை அடங்கல. பொணமாக் கெடக்கிறவளப் போட்டுட்டு உசுரோட இருக்கிற கருவாச்சியப் பாத்துத்தான் ஊரே உச்சுக் கொட்டுது.

''மாசமா இருக்கவளுக்கு மயக்கம் வந்திரப் போகுது, புளிச்ச தண்ணியில கூழக் கரைச்சுக் குடுங்கடி'' பல்லில்லாத கெழவிக பதறிச் சொல்றாக.

உக்காந்தாப் புடிச்சு எந்திரிக்கத் தோதான எடம்பாத்து உக்காந்திருச்சுக வெளிவாசல்ல பெருசுக.

''ய்ப்பா! இது ஆம்பளையில்லாத வீடு. அதுலயும் அத்துவிட்ட பிள்ள ஒத்தையில நிக்கிறா. தவிரவும் ஈருசுரா வேற இருக்கா. தோட்டிக்குத் துட்டுத்தரணும். எழவு சொல்லப்போறவனுக்குச் செலவு இருக்கு. பூக்காரன், சலவைக்காரன், சவரக்காரன், சாங்கியம் சம்பிரதாயம்ன்னு இந்தா இந்தான்னு இழுத்திரும். பாவம் எங்க போவா காசுக்கு இடுப்பொடிஞ்ச பிள்ள... ஆகையினால பொதுவுல பணம் போட்டுப் பொணம் தூக்கறதுன்னு முடிவு பண்ணியிருக்கோம். நீங்க என்ன சொல்றீக''.

''பெருசு சொன்னாச் சரிதானப்பா''.

அவுகவுக சக்திக்கு உட்பட்டு காலு அரை ஒண்ணுன்னு வந்து விழுந்ததுல இழுத்துக்க பறிச்சுக்கன்னு பத்தேகால்ரூவா சேந்து போச்சு.

''இந்தாங்கப்பா... எம் பங்கு ரெண்டுரூவா. என்னாயிருந்தாலும் அவ என் பழைய சம்பந்திகாரியில்லயா..?'' எழவுக்கு சடையத்தேவர் வந்ததுமில்லாம ரூவா ரெண்டும் எடுத்து நீட்னதும் பேச்சு மூச்சு இல்லாமப் போச்சு ஊரு.

''தானாடாவிட்டாலும் சதையாடும்ன்னு சொல்லுவாகளேப்பா... சும்மாவா?''. இப்படிக் குளுந்து பேசுது ஒரு கூட்டம். ''சோழியன்குடுமி சும்மா ஆடுமா? என்னமோ சூட்சமம் இருக்கப்பா''.இப்படி இழுத்துப் பேசுது இன்னொரு கூட்டம்.

எழவு வீட்டுக்கு விருந்தாடி வந்ததுமாதிரி வெள்ளையுஞ் சொள்ளையுமா ஒரு ஓரமா நிக்கிறான் அப்பன் கூட வந்த கட்டையன்.

அவன் கூட நிக்கிறான் ஒரு பரட்டைப்பய கண்ணுமட்டும் செவப்பா. அவன் யாருன்னா... பெரியமூக்கி புருசன் துரைச்சாமிக்கு அண்ணன் மகன். கருவாச்சிக்கு ஒண்ணுவிட்ட அண்ணன். 'வாத்துமாயி'ன்னு பேரு அவனுக்கு.

சொக்கத்தேவன்பட்டியில அவன் பங்குக்கு விழுந்த வீட்ட வித்துட்டு அஞ்சாறு வருசத்துக் முதல்லயே 'பச்சக்கோமாச்சிமலை'க்குப் போயிட்டான். அங்க அவனுக்குக் கஞ்சா வெவசாயம். அதனால கட்டையனுக்கும் அவனுக்கும் நல்ல ராசி. கட்டையன் அவன் காதுக்குள்ள ஏதோ சொல்லச் சொல்ல, நிறுத்தாமத் தலையாட்டிக்கிட்டேயிருக்கான் வாத்துமாயி.

''யப்பா இந்தச் சாவு தன் சாவு இல்ல; அசம்பாவிதமான சாவு. ஆகையினால பொதைக்கப்படாது; எரிச்சாகணும். ரெண்டாவது - பொணம் புதுப்பொணமில்ல; நேத்துப்பொணம். இன்னிக்கி மத்தியானமே எடுத்தாகணும்''.

ஒரு ஆளும் மறுத்துப்பேசல; ஒத்துக்கிட்டாக.

எத்தன பாடை கட்ன கையோ!... ஆரம்பிச்சிட்டான் தோட்டி அவன் வேலைய.

ஆறு ஆறரை அடி நீளத்துல ரெண்டு பச்சை மூங்கில் வாங்கிட்டு வந்தான். இரண்டு அடி நீளத்துல ஊடுகுச்சி ஆறு. கொச்சக்கயிறு வச்சு ஏணி மாதிரி இறுக்கிக்கட்டிட்டான். கட்ன மூங்கி மரத்துல பச்சைத் தென்னங்கிடுக வச்சான். அதுமேல பசபசபசன்னு வைக்கோலப் பரப்புனான். தலைமாட்டுல ஒரு கயிறு விட்டான், போற பொணம் போறேன் போறேன்னு தலையாட்டிட்டே போகாமக் கழுத்துல சேத்துக் கட்டுறதுக்கு. சலவைக் காரவீட்ல ஒரு பழைய சீலய வாங்கி, வைக்கோல் மேல போட்டுப் பொத்திப் பஞ்சு மெத்தையாக்கிட்டான் பாடையை.

பாடைகட்டி முடிக்க...

தெரு முனையிலிருந்து அழுகையில கூடி மொது மொதுன்னு வந்து சேந்துட்டாக மொதலக்கம்பட்டி ஆளுக. பிறந்தவீட்டு ஆசாரப்படி ★பச்ச கொண்டுவந்து, பொணத்துக்குப் பக்கத்துல நட்டிருந்த கொடிக்கள்ளிமேல கோடி சாத்தி அழுதாக.

வந்தவுக கட்டிப்புடிச்சு அழுதும் கருவாச்சி அழுகல.

நீர்மால முடிஞ்சிருச்சு; நேரம் நெருங்கிருச்சு. இப்பவோ பெறகோன்னு மேகம் வேற நெறமாசக்காரி மாதிரி நிக்கிது.

''எடுங்கப்பா எடுங்கப்பா''ன்னு வெளியே ஒரு சத்தம் கேக்கவும் - தோட்டி உள்ள ஓடிவந்து ''ஆத்தா மேல போத்திக் கொண்டுபோக ஒரு சீல இருக்கா''ன்னு கேட்டான். அதுவரைக்கும் கல்லு மாதிரி உக்காந்திருந்த கருவாச்சி தீ விழுந்த பட்டாசுமாதிரி திடீர்ன்னு வெடிச்சு எந்திரிச்சா. நேத்து மாரடிக்கப் போயிக் கூலியா வாங்கிட்டு வந்த சீலைய ஆத்தா மேல போட்டு ''எம் மொதச் சம்பாத்தியமே உன் கடைசிச் சீலயாப் போச்சே ஆத்தா''ன்னு அழுதா பாருங்க... வந்திருந்த சனத்துக்கெல்லாம் நெஞ்சுக்கறி வெந்து போச்சு.

---

★ நவதானியங்கள் நிறைந்த மரக்கால்

padippakam

பொணந்தூக்க வந்த இரண்டு எளந்தாரிப்பயல்களத் தூக்கித் துண்டா எறிஞ்சுட்டு ஆத்தா காலடியில மண்டிபோட்டு உக்காந்து அவ திரேகத்தையே வச்ச கண்ணு வாங்காமப் பாக்குறா கருவாச்சி.

நரம்புதெரியப் பிரம்பு மாதிரி சுருங்கிக்கெடக்கு எனக்குக் கைகால் புடிச்சுவிட்ட கையி... நட்டுவச்ச குச்சியா வெறைச்சுப்போய் நிக்கிது காடுவெளியெல்லாம் கல்லுக்குத்தி முள்ளுத்தச்ச காலு... ஈ உக்காந்து உக்காந்து ஈரப்பசையில்லாமக் கெடக்கு எனக்கு முத்தங்கொடுத்த வாயி... புழிஞ்சு காயப் போட்ட தோல்மாதிரி தொங்கிக் கெடக்கு நான் முட்டிமுட்டிப் பால்குடிச்ச மொல...ஆனா எங்கடியாத்தா ஓடிஒளிஞ்சு போச்சு கருவாச்சின்னு என்னிய வாய்நெறையக் கூப்பிட்ட சொல்லு?

ரெண்டு கையாலயும் தன் மூஞ்சியில தானே சப்புச்சப்புன்னு அறஞ்சு அறஞ்சு அழுகிறா கருமாயப்பட்ட கருவாச்சி.

அவ அழுது ஓயட்டும்ன்னு கொஞ்சம் ஒதுங்கி நிக்கிறாக பொணம் தூக்க வந்த ஆளுக.

''போகாத ஆத்தா போகாத. புத்தியில்லாதவ நானு; பொழைக்கத் தெரியாத சிறுக்கி. ஒன் சுண்டுவெரலப் புடிச்சே சுத்திவந்தவ. இப்பப் பொழச்சுப் பாருடின்னு சொல்லி என்னிய ஒத்தையில விட்டுட்டுப் போறியே...ஒனக்கே இது நல்லாருக்கா? அப்பன் இல்லாமப் பொழைக்கிறது எப்பிடின்னு சொல்லிக் குடுத்தியே... ஆத்தா இல்லாமப் பொழைக்கிறது எப்பிடின்னு சொல்லிக் குடுத்தியா? நீ போயிட்டா எனக்கு நாதியிருக்கா? ஒன்னியத் தூக்கவிடமாட்டேன்; தூக்கவிடமாட்டேன்''

''ஏலே! பொட்டச்சி அப்படித்தான் பொலம்புவா. ஆத்தாங்கிறதுக்காக உள்ளயே வச்சுப் பொணத்த ஊறுகாயா போட முடியும்? தூக்கிட்டு வாங்கடா''.

வெளியயிருந்து பெருசுக வெரசு காட்டவும், நாற்காலியோட பொணத்த உச்சுனாப்புல தூக்கிட்டு ஓடிவந்தாங்க ரெண்டு எளந்தாரிப்பயக.

தரையை விட்டு ஆத்தாளத் தலைக்குமேல தூக்கினவுடனே ''யாத்தே''ன்னு அலறித் தரையிலவிழுந்து ★தம்பாயமிழந்து போனா கருவாச்சி.

கொள்ளிக்கொடம் ஒடைக்க ஊர் மந்தை வரைக்கும் வந்தாகணும் அவ. மூஞ்சியில தண்ணி தெளிச்சு, ''புள்ளத்தாச்சிடி... பாத்து''ன்னு பொத்துனாப்புல எழுப்பித் தாங்கிப் புடிச்சுக் கூடவே போறாக பொம்பளைக.

அன்னைக்குச் சனிக்கெழமை. சனிப்பொணம் தனியாப் போகாதாம். ஒருகோழிக் குஞ்ச அடிச்சுப் பாடையில கட்டித் தொங்கவிட்டாக. தகரம் கொன்டுபுடுச்சு பெரியமூக்கிய; சாஸ்திரம் கொன்டுபுடிச்சு கோழிக்குஞ்ச.

பெருங்கொண்ட கூட்டம் பின்னாலயே போகுது. முச்சந்தியில நிறுத்துனாக பாடைய. இடவலமா மூணு சுத்துச் சுத்துனாக; எறக்கி வச்சாக.

★ சுய உணர்வு



படிப்பகம்

padippakam

''கொடம் ஒடைக்கிற பிள்ளையக் கூப்பிடுங்கப்பா''.

தலையவிரிச்சுப்போட்டு அழுதுக்கிட்டே எடது தோள்ல கொடம் சுமந்து இடவலமாப் பொணம் சுத்தி வர்றா கருவாச்சி.

ஒவ்வொரு சுத்துமுடிய அருவாமூக்குல தோட்டி ஒரு தொளபோட தன்பங்குக்குப் பெருங்கண்ணீர் வடிக்குது மண்கொடம்.

மூணாவது சுத்து முடிய ''போடு... போடு... போட்ரு''ன்னு அஞ்சாறு பேரு கத்த - ஆத்தா கால்மாட்ல அவ கொடம் ஒடைக்க - அவ பொழைப்பு மாதிரியே மண்கொடமும் செதறிச் செதறிச் சில்லுசில்லாக - ''திரும்பிப்பாக்காம வந்திரு''ன்னு சொல்லிக்கிட்டே அவ தலையில ஒரு கோடிச்சேலயப் போட்டுக் கோழிய அமுக்குற மாதிரி அமுக்கிக் கூட்டிக்கிட்டே போயிட்டாக கூடவந்த பொம்பளையாளுக.

பாடையத் தூக்கி அதேமாதிரி மூணுசுத்து எதிர்த்திசையில சுத்தி மந்தையிலருந்து சுடுகாட்டுப் பாதையில கூடிட்டாக எல்லாரும்.

கொட்டுக்காரன் முன்னுக்கக் கொட்டடிச்சுப் போக - மாட்டுச்செவந்தியையும் அரளிப்பூவையும் பூக்காரன் ரெண்டு பக்கம் பிச்சு ஒதறிவர - கடுகும் பொரியும் அள்ளித் தெளிச்சுக்கிட்டே தோட்டி பின்னுக்கத் தொடர்ந்துவர -போகுது பெரியமூக்கி பொணம் கடைசிக்காடு தேடி.

கூட்டத்துல கட்டையன் வாத்துமாயி ரெண்டுபேரும் ஒரு எடத்துலயும் வெலகல; ஒண்ணாவே போறாக. அவன் பேச இவன் தலையாட்ட பின்னால கொண்ணவாயன் கூடவே வாரான்கிற கூருபாடு கூட இல்லாமக் குசுகுசுன்னு பேசுறாக.

''ஒனக்கு வாழ்வு வந்திருச்சுடா வாத்துமாயி. குண்டக்க மண்டக்க எதையாவது பண்ணிக் குடியக் கெடுத்திராத. துரைச்சாமித்தேவர் வகையறாவுக்கே நீ ஒருத்தன்தான் ஆம்பளை வாரிசு. மொட்டபோட்டுப் பெரியமூக்கிக்கு நீ கொள்ளிமட்டும் வச்சிரு. மிச்சத்த நாங்க பாத்துக்கிர்றோம். கொள்ளிவச்ச ஆளுக்குத் தான் சொத்து சொந்தம். அப்பறம் பெரியமூக்கி வீடு கருவாச்சிக்கில்ல; ஒனக்கு. இன்னிக்கு ஆத்தா ஊருக்கு வடக்க வந்துட்டா. நாளைக்கு மக தெக்கபோக வேண்டியதுதான் மொதலக்கம்பட்டிக்கு. என்னடா ஒழுங்கா மொட்டையடிப்பியா?''.

''வீடு வருதில்ல மாமா; மசுரு போனாப் போயிட்டுப்போகுது. மொளைக்க மொளைக்க அடிக்கச் சொன்னாலும் அடிக்கிறேன்''.

இதக் கேட்டதும் புத்தியில பாம்பு கொத்திருச்சு கொண்ண வாயனுக்கு. பொணத்த முன்னுக்க விட்டுட்டு அவன் பின்னுக்கு வந்துட்டான். சுடுகாட்டுக்கு நடக்கமாட்டாம இழவு வீட்லயே உக்காந்திருந்த உருமாப்பெருமாத்தேவருகிட்டப் போயி ஒப்பிக்கவும் அவர் பதறிப்போனாரு. ஆத்தாளுக்கு மோட்ச வௌக்குப் போட்டு அழுதுக்கிட்டிருந்த கருவாச்சிய எழுப்பி அவ காதுல ரெண்டு கோளாறு சொல்லி, ''போ தாயி போ!''ன்னு அஞ்சாறு பொம்பளைகளையும் சேத்து அனுப்பிவிட்டாரு.





படிப்பகம்

padippakam

சுடுகாட்டுல வெறகு பரப்பி - அதுமேல எருவடுக்கி - எருமேல பொணந்தூக்கி வச்சு- வாய்க்கரிசியும் போட்டு முடிச்சு - வைக்கோலப்போட்டு மூடி - சாந்து கொழைச்சு மூடுறதுக்கு முன்னால தோட்டி கேக்குறான்: ''அய்யா! கொள்ளி வைக்கப் போறது யாரு?''

வேற யாரும் பதில் சொல்றதுக்குள்ள சடையத்தேவர் முந்தி முன்ன வாராரு.

''யப்பா! ஆம்பள இல்லாத வீட்டுல வாரிசுன்னு இருக்கிறவன் வாத்துமாயி ஒருத்தன்தானப்பா. அவந்தான் வைக்கணும் கொள்ளி''ன்னு சொல்லிட்டு எவன் பதிலையும் எதிர்பார்க்காம, ''எலே! போடா! போயித் தலையச் சிரைச்சிட்டு வாடா!''ன்னு அவனுக்கொரு உத்தரவும் போட்டுட்டு சுடுகாட்டு வேப்பமரத்த முதுகுக்கு முட்டுக்குடுத்து ஓரமா உக்காந்திட்டாரு சடையத்தேவரு.

வேட்டிசட்டைய அவுத்துத் துண்டமட்டும் இடுப்புல கட்டித் தரையில உக்காரவச்சு வாத்துமாயி தலையில தண்ணி தெளிச்சுக் கத்திய எடுத்துப் பட்டையக் கையில புடிச்சு சவரக்காரன் 'சரக் சரக்கு'ன்னு தீட்டவும் - இந்தா வந்துட்டேன்னு பொம்பளைகளோட வந்து எறங்கிட்டா கருவாச்சி.

ஆம்பள ஆளுகளுக்கு ஒண்ணும் புரியல; ஒரே பரபரப்பாகிப் போச்சு; சுர்றுன்னு உசுரு வந்திருச்சு சுடுகாட்டுக்கு.

''இந்தாப்பா சவரக்காரா! ஆத்தா என் ஆத்தா. நாந்தான் கொள்ளி வப்பேன். பொம்பள கொள்ளி வைக்கணுமின்னா தலை சிரைக்க வேண்டியதில்ல; புறங்கையச் சிரைச்சாப் போதும்; சிரைச்சு விடு''.

''அடேயப்பா! வெறுங்கிறுக்கின்னு நெனச்சபிள்ள வெவரமான சிறுக்கி ஆகிட்டாளேப்பா''

ஊர்ல யாரும் ஒரு பேச்சு மறுபேச்சுப் பேசல.

தவ்வித் தடுக்க வந்த கட்டையன 'ஏமாந்துபோனமடா; போடா'ன்னு கையமத்துனாரு சடையத்தேவரு.

கருவாச்சி கைய நீட்னா. முடிமொளைக்காத புறங்கைய சாஸ்திரத்துக்குச் சிரைச்சுவிட்டான் சவரக்காரன்.

கொடத்துலயிருந்த தண்ணியத் தூக்கிக் கடகடகடன்னு தலையில ஊத்துனா.

பொம்பளைப்புலி மாதிரி கூட்டத்த வெலக்கிச் சுடுகாட்டு மேடைக்குப் போனா.

''கொண்டாடா கொள்ளிய''.

வேப்பங்கட்டையில பத்தவச்ச கொள்ளிக்குச்சியை எடுத்து நீட்டினான் தோட்டி.

எடுத்தா கொள்ளிய; செலுத்துனா தலைமாட்டுல தோட்டி போட்டிருந்த துவாரத்துல.





படிப்பகம்

padippakam

பெத்த உசுரு பத்தி எரியுது.

ஒரு கையில கொள்ளிய வச்சுக்கிட்டு மறுகையில மார்லயும் வயித்துலயும் மாறிமாறி அடிச்சுச் சொல்றா:

''இவ என்னப் பெத்த ஆத்தா; நான் கொள்ளி வைக்கிறேன். இவ வாழ்ந்த வீடு எங்கப்பன் கட்டன வீடு. அது எங்க ஆத்தாளுக்கும் சொந்தமில்ல; எனக்கும் சொந்தமில்ல. வேற யாருக்குச் சொந்தம்ங்கறீகளா? வைராக்கியமா உசுரக் கையில புடிச்சு வயித்துக்குள்ளே வளருதே! இந்தப் பிள்ளைக்குத்தான் சொந்தம்''

''ஆமா தாயி! ஆமா!'' ங்குது - 'சொட சொட சொட'ன்னு எந்திரிச்சு எரியிற சுடுகாட்டு நெருப்பு.



படிப்பகம்



# 15

**சா**வுன்னு வந்துட்டா 'அய்யோ பாவமே குய்யோ முறையே!'ன்னு அழுக ஆரம்பிச்சிருது ஊரு.

ஊரு ஒலகம் பாக்குறது சாவோட ஒரு மூஞ்சிய மட்டும்தான்; ஆனா அஞ்சாறு மூஞ்சி இருக்கு சாவுக்கு.

சில சாவுகள்ல குடும்பமே ஒஞ்சு உக்காந்து போகும்; சில சாவுகள்ல உக்காந்த குடும்பம் எந்திரிச்சிரும். சில வீடுகள்ல சாவுங்கிறது பிரச்சினைய உண்டு பண்ணிட்டு ஓடிப்போயிரும்; சில வீடுகள்ல சாவு பிரச்சினைகளையெல்லாம் ஓச்சிட்டு 'சுபம்'ன்னு சொல்லிட்டுப் போயிரும். சில வீடுகள்ல சாவுங்கிறது நிர்க்கதி; சில வீடுகள்ல சாவுங்கிறது நிம்மதி; சில வீடுகள்ல சாவுங்கிறது செலவு; சில வீடுகள்ல வரவு.

வாழ்க்கையில திருப்பம்ங்கற சக்கரங்களச் சுத்திவிட்டுட்டுப் போறது சாவுதான்.

பெரியமூக்கி சாவு, கருவாச்சியோட பொழப்பு - மனசு ரெண்டையும் பொரட்டிப் போட்டுட்டுப் போயிருச்சு. ஆத்தாளோட சேந்து செத்துப்போனா என்னன்னு மருகினது மொதநாளு; ஆத்தா இம்புட்டுச் சீக்கிரம் செத்திருக்க வேணாமின்னு உருகுனது ரெண்டாம் நாளு; ஆத்தாளுக்கும் சேத்துப் பொழைக்கணுமேன்னு வைராக்கியப் பட்டது மூணாம் நாளு.

கண்ணீரு வருத்தமா ஒறைஞ்சு, வருத்தம் வைராக்கியமா முத்துனாத்தான இத்துப்போன மனசு எந்திரிச்சு உக்காரும்?

எந்திரிச்சு உக்காந்துட்டா கருவாச்சி.

●

மாசம் அஞ்சு.

அரைப்பிள்ள இருக்கு வகுத்துல; முழுவாழ்க்கை இருக்கு முன்னுக்க.

முதுகச் சுவத்துல போட்டு, ஒரு காலத் தரையில நீட்டி, ஒரு கால ஊன்டி மடக்கி உக்காந்திருக்கா கருவாச்சி.

ஊர்ப்பெருசுக... மொதலக்கம்பட்டிச் சொந்தங்களெல்லாம் கோழிக்கு அள்ளியெறிஞ்ச சோளம் மாதிரி அங்கங்க உக்காந்திருக்காக.

வெத்தல எச்சியத் துப்பிட்டு, துண்ட எடுத்து வாயத் தொடச்சுக்கிட்டு உருமாப் பெருமாத்தேவரு ஆரம்பிக்கிறாரு தொண்டையச் செருமிக்கிட்டு. ''யம்மா கருவாச்சி! நீயும் எம் மகதான் தாயி. கண்ணுக்கு எட்ன மட்டுக்கும் ஆதரவு இல்லையேன்னு அலபாஞ்சு நிக்காத. என் வீட்ல வந்து இரு. என் கண்ணுள்ள காலம் வரைக்கும் கஞ்சி ஊத்துறேன். ஒரு காலத்துல ஒங்கப்பன் ஓடிவந்து செஞ்ச உதவிக்கு நான் கடமைப்பட்டிருக்கேன். கனமழை பேஞ்சு போச்சு ஒரு ஆடி மாசத்துல. பொட்டப் பிள்ளைகளாப் பெத்துக்குடுத்த எம் பொம்பளைஆளு வேற செத்துப்போனா, ஊரே ஓடி ஓடி உழுது வெதைக்குது, நான் கால்ல கட்டி வந்து காய்ச்சலோட படுத்திருக்கேன். அன்னைக்கித் தன் காட்டை விட்டுட்டு என் காட்டை உழுது குடுத்தவனம்மா ஒந் தகப்பன். வீண் போகுமா தகப்பன் செஞ்ச தர்மம்.? வா.. வந்து என் வீட்ல இரு''.

அவ ஒண்ணும் பேசல. கண்ணத் தொடச்ச முந்தானைய வாயில சுருட்டி வச்சுத் தணிஞ்சு தரை பாத்திருந்தா.

இப்பச் சுப்பஞ்செட்டியார் பேசுறாரு: ''எனக்குப் பொட்டப் புள்ளைக ரெண்டு இல்ல; மூணுன்னு நெனச்சுக்கிறேன் தாயி. இது ஒனக்குத் தாய் வீடு; என் வீடு தகப்பன் வீடுன்னு நெனச்சுக்க. இப்பச் சொல்றேன்... எல்லாரும் கேட்டுக்குங்க. என் மூத்தமக கழுத்துல கெடக்கே மூணுபவுன் சங்கிலி... அது என் தங்கச்சி பெரியமூக்கி மொறக்கடனாக் குடுத்தது. அந்தச் சங்கிலி கழுத்துல ஏறலன்னா எம் மக கழுத்துல தாலி ஏறியிருக்காது. கருவாச்சி கல்யாணத்துக்கு வந்து பெரியமூக்கி சங்கிலியத் திருப்பிக் கேட்டா. சங்கிலி எறங்கினா அவ கழுத்துல தாலியும் எறங்கிரும் தாயின்னு கையெடுத்துக் கும்புட்டேன். பொழைச்சுக் கெடந்தாக் குடுங்கன்னு போயிட்டா. அந்தத் தர்மசீலி பெத்த மகள நாங்க தவிக்க விட்ருவோமா. என் நெஞ்சுக்கூட்ல உசுரு இருக்க வரைக்கும் நெல்லுச் சோறாப் போடறேன்... வாம்மா''

இதுக்கும் அவ ஒண்ணும் பேசல. ஆத்தா பெருமை சொல்லவும் கட கட கடன்னு கொட்டுது கண்ணீரு.

அதுக்குமேல பொறுக்க முடியல மொதலக்கம்பட்டி ஆளுகளுக்கு.

''ஆளாளுக்கு ஒண்ணு சொன்னா எப்பிடி? நடக்கற கதையைப் பேசுங்கப்பா. தாய்வழிச் சொந்தம்ன்னு நாங்க குத்துக்கல்லுமாதிரி குத்த வச்சிருக்க அவ ஒங்க வீட்ல வந்து இருந்தா ஊர் ஒப்புமா? ஒண்ணு அவ இதே வீட்ல இருந்து பொழைக்கணும். இல்ல எங்க வீட்ல வந்து இருக்கணும். அதான் மொற''. - மொதலக்கம்பட்டி ஆளுக கோபமாச் சொன்னாலும் நியாயமா இருந்துச்சு.

முந்தானையில ஒரு முடிச்சுப் போடறது; அவுக்கிறது; இன்னொரு முடிச்சுப் போடறது; அவுக்கிறது. இப்படி முடிச்சுப் போடுறதும் அவுக்கிறதுமா இருந்த கருவாச்சி ஒரு முடிவுக்கு வந்துட்டா.

''ஒரு தகப்பனும் ஒரு தாயும் செத்துப் போனதுக்கு நீங்க இத்தன தகப்பனும் தாயுமா எனக்கு இருக்கீக. நீங்க தெம்பு தெறம் சொல்லச்சொல்ல எனக்கு அழுகையா வருது. ஆத்தா சொல்லுவா... 'பறக்கப் பல காடு; இருக்க ஒரு கூடு'ன்னு. இந்த வீடுதான் அந்தக் கூடு. இந்த வீட்ட விட்டு எப்பிடி நான் வெளியேற முடியும்? ஆத்தா வாசன இந்த வீடெல்லாம் நெறைஞ்சு நிக்கிது. எங்க தொட்டாலும் அவ சத்தமா வருது. இந்த வீடு இருக்கிற வரைக்கும் ஆத்தா சாகல. அவ இந்த வீட்டுக்குள்ள இருக்கா. அவ கூட நான் இருக்கப் போறேன். தவிரவும் நான் இந்த வீட்ட விட்டு வெளியேறிட்டேன்னு வச்சுக்குங்க... கரையான் கட்ன வீட்டுல கருநாகம் புகுந்திரும்; வால உள்ள சுருட்டி வச்சு வாசல்ல நின்னு படமெடுக்கும். வீட்டக் காப்பாத்த நான் வீட்லதான் இருந்தாகணும். ஒட்டப்பந்தயம் மாதிரி இருக்கு பொழப்பு. ஓடிப்பாக்குறேன். அங்கங்க விழுந்தா ஆளும் பேருமா வந்து கைதூக்கிவிடுங்க''. - கும்புட்டு அழுதா பாவம் குமுறிக் குமுறி.

வந்தவுக போனவுக 'போடுபணம்' போட்டுப் போனத எண்ணிப் பாத்தா ஒரு இருபத்திநாலேகால் தேறுச்சு. ரெண்டு மூணு மாசத்துக்கு வேணுங்கிற தானியங்களும் உப்புப் புளி மொளகாயும் வாங்கி உள்வீட்டுல வச்சிட்டு மொதலக்கம்பட்டிச் சொந்தமும் போயிருச்சு.

வைத்தியச்சியும் முக்குறுணியும் பவளமும் ஆள்மாத்தி ஆள்வந்து தொணைக்குப் படுத்துக்கிட்டாக.

●

அஞ்சு முடிஞ்சு மாசம் ஆறு.

இப்பத்தானய்யா பொம்பளைக்கு வகுறு தெரியுது. அஞ்சுமாசம் வரைக்கும் பூசுனாப்புல இருந்த வகுறு பூத்து எந்திரிச்சு நிக்கிது. அவ இழுத்து மறைச்சு சீமையில இல்லாத சீலக்கட்டு கட்டுனாலும் நெறஞ்ச வகுறு தெரிஞ்சுபோகுது.

பசியாப் பசிக்குது கருவாச்சிக்கு. மண்ணும் சாம்பலுமாத் தின்னு தீத்த வாயி இப்ப சகலமும் கேக்குது.

கேப்பக்கூழு - சோளக்கூழு - புளிச்ச தண்ணியில கெடந்த பழைய கஞ்சி எது கெடைச்சாலும் அள்ளி அள்ளித் திங்க ஆசையாயிருக்கு.

நெல்லுக்கஞ்சி காய்ச்சி நெய்மீன் கருவாடு வறுத்துக் குடுத்தா வைத்தியச்சி.

''இதெல்லாம் இருக்கட்டுமாத்தா. ஊசிப்போன பருப்புச் சாறு இருந்தா ஒரு கிண்ணம் ஊத்திக் கொண்டா''ன்னு வெக்கப்படாமக் கேட்டுச் சின்னதா ஒரு சிரிப்பும் சிரிச்சுக்கிறா.

வயித்துச் சுவத்துக்குள்ள புள்ள முணுமுணுங்குது. உள்ள எறும்பு ஊர்ற மாதிரி சொகஞ்சொகமா ஒரு தொந்தரவு தெரியுது.

மூங்கிக் குச்சி மாதிரி நெடுநெடுன்னு இருந்த பொம்பள தூருகட்ன தென்னமரமாக் கனத்துப்போனா. வீட்ல சும்மா இருப்பாளா? அப்பப்ப வேல வெட்டிக்கும் போயிக்கிறா.

ஆறு முடிஞ்சு மாசம் ஏழு.

''ஏ பெரியத்தா! இங்க ஓடியா... ஓடியா... ஓடியா... எம் பிள்ள என் வகுத்துக்குள்ள சிலம்பு சுத்துது; என்னான்னு கேளு''

மீன் குழம்புக்குக் கூட்டிப்போட்டு அடுப்புல வெறகுதள்ளிக் கிட்டிருந்த வைத்தியச்சி விசுக்குன்னு ஓடிவந்தா.

''தொட்டுப்பாரு... தொட்டுப்பாரு...''

தொட்டுப்பாத்தா வகுத்துக்குள்ள பிள்ள ஒருபக்கம் ஒதறுது; ஒரு பக்கம் முண்டுது.

''ஒதர்றபக்கம் காலு... முண்டுறபக்கம் தல... ஏண்டியாத்தா வகுத்துல புலிக்குட்டி வளக்குறியா? இந்தத் துள்ளு துள்ளுது''.

''ஒன்னியப் பாத்துத் தானத்தா இந்த ஒத ஒதைக்குது. நீதான அழிக்கப்பாத்தவ''.

''போடீய்... ஏ போடீ...'' செல்லமா அவ கொமட்டுல ஒரு குத்துக் குத்துனவ, ''தாய் வகுத்துல பசை கொறைஞ்சாத்தானடி புள்ள முண்டும். அழுத பிள்ளைக்குப் பாலு; முண்டுன பிள்ளைக்குச் சோறு; இந்தா! இதைத் தின்டுகிட்டே இரு''ன்னு அவிச்ச கடலைய அள்ளி அவ மடியில போட்டுட்டு அடுப்பாங்கரைக்குப் போயிட்டா.

பிள்ளத்தாய்ச்சி வகுறு அரிப்பா அரிக்குது கருவாச்சிக்கு. வகுத்துல தடிப்புத் தடிப்பா விழுந்திருச்சு பத்து வெரல் நகத்துலயும் பிறாண்டிப் பிறாண்டி. அப்பப்ப சீப்ப எடுத்து வலிக்காம வருடி வருடிக் குடுத்துக்கிட்டேயிருக்கா வகுத்துல.

முக்குறுணி சொல்றா: ''வகுத்துல இருக்கிற பிள்ளைக்கு மயிர்க்கட்டு நெறையா இருந்தாத்தான் பிள்ளத்தாச்சிக்கு அரிப்பெடுக்குமடி மகளே. பொழுதுக்கும் சொரண்டாத; புண்ணாப் போயிரும் வகுறு''.

கடைசிவரைக்கும் ஓடியாடி வேலை செய்யிற பொம்பளைக்குப் பேறுகாலம் லேசு. படுத்தே கெடக்கிறவளுக்குக் கடுசு.

ஏழுமாசத்துலயும் கருவாச்சி களகண்ணிக்குப் போறா; கொழையறுக்கப் போறா; வேணுங்கிற பொம்பளைகளுக்கு ஒலக்க புடிச்சுச் சோளம் குத்திக் குடுத்து அரிசியும் தவிடும் வாங்கி வீடு வந்து சேர்றா.

தவிட்ட வறுத்து, வெல்லம் போட்டு இடிச்சு உருண்ட புடிச்சுக் கொண்ணவாயனுக்கு ரெண்டுகுடுத்துட்டுத் தானும் ரெண்டு தின்டு தண்ணிகுடிச்சுப் படுத்துக்கிற்றா.

படுக்கிற பக்குவம் சொல்லிக்குடுத்தா புள்ளத்தாய்ச்சிக்கு வைத்தியச்சி.

''மகளே! மல்லாக்கப் படுத்திராத. ஓரமா வகுத்த ஒதுங்கப் போட்டு ஒருக்கழிச்சுப்படு. பெரண்டு படுக்கணும்னு வச்சுக்க - ஒரு கைய ஊன்டி எந்திரி; ஒக்காரு. ஒரு பூமாலயக் கழட்டிப்போடறமாதிரி பொத்துனாப்புல வயித்தத் தூக்கி மறுபக்கம் போட்டு மறுபடியும் ஒருக்கழிச்சுப்படுத்துக்க. அப்படியில்லாம மல்லாக்கப் படுத்துக் கடக்கு மடக்குன்னு புரண்டேன்னு வச்சுக்க... வயித்துல இருக்கிற பிள்ள நெரிஞ்சாலும் நெரிஞ்சு போயிரும்''

padippakam

தாய் தகப்பன் இல்லாத பிள்ளைத்தாச்சியாப் போனதனால தயிர்ச்சோறும் புளிச்சோறும் தந்து ஊரே அவள ஊட்டி வளக்குது.

●

ஏழுமுடிஞ்சு மாசம் எட்டு.

இப்ப ஊன்டி உக்கார முடியுது; லேசுல எந்திரிக்க முடியல. கீழகெடந்த வகுறு ஏறி நெஞ்சுல முட்டி நிக்குது. அவ செவக்கிக் கட்டாமச் சீல வெலகி உக்காந்திருந்தா, வகுத்துக்குள்ள பிள்ள முண்டி வெளையாடுறது எதுக்க இருக்க ஆளுக்கு அலை அலையாத் தெரியது; வகுத்துல ஒரு ஊமப்படம் ஓடுது.

வைத்தியச்சிக்கும் முக்குறுணிக்கும் ஒரு கவல வந்திருச்சு.

''ஏண்டியாத்தா இப்படி சாலுமாதிரி வகுறுவச்சு உக்காந்தி ருக்காளே... சுகப்பேறுகாலம் ஆகுமா இவளுக்கு. எட்டு ஒம்பது மாசம் வரைக்கும் புருசன் சேந்துபடுத்துச் செல்ல விளையாட்டு வெளையாடிக்கிட்டேயிருந்தா புள்ள வெளிய வார வழி பூப்போல மலந்து கெடக்கும். 'மொழுக்'குன்னு புள்ள 'கடக்'குன்னு வந்திரும். இவ கதவு அடைச்சது அடைச்சதுதான்; அதுக்குப் பெறகு தெறக்கவே இல்லையே''.

''ஏ ரெங்கம்மா. அது ஒருவழிக்கு நல்லதுன்னு நெனச்சுக்க. அந்தக் கட்டையன் இப்ப இவ கூட இருந்தான்னு வச்சுக்க. கருத்தக்கண்ணி கதையாகிப் போகும் கருவாச்சி கத''.

''எந்தக் கருத்தக்கண்ணி...?''.

''நம்ம முத்தணம்பட்டிக் கருத்தக்கண்ணி. அவளுக்கு எட்டு மாசம் முடிஞ்சு ஒம்போது பெறக்க அவ புருசன் ஊமச்சாமி சாராயம் குடிச்சுட்டுச் சாமியாடிட்டே வந்து எக்குத்தப்பாப் புடிச்சு அமுக்கி எடக்கு மடக்காப் பண்ணப் போக, வகுத்துல கெடந்த பிள்ள 'குபுக்'குன்னு நெஞ்சில ஏறிச் சம்மணங்கால் போட்டு உக்காந்திருச்சு. மூச்சுப் போயிச் செத்துப் போனாளா இல்லையா? சுடுகாட்டுல தோட்டியும் சவரக்காரனும் சேந்துதான் நெஞ்சக் கீறிப் பிள்ளையை எடுத்து, தாய் பிள்ளையை ஒண்ணு மேல ஒண்ணு வச்சு எரிச்சாங்க. கட்டையன் இன்னைக்கிக் கூடயிருந்தா அந்தக் கூத்தாயிப்போயிரும் கருவாச்சிக்கு. புண்ணியம் பண்ணுனவ பொழச்சா''.

இன்னும் கருவாச்சிதான் வாசத்தொளிக்கிறா. தனியாப் போயிப் தண்ணிப்பான சொமந்து வாரா. அவளாக் கஞ்சி காச்சிக் கொண்ண வாயனுக்கும் தூக்குச்சட்டியில குடுத்து விடுறா. அத்தக் கூலிக்கும் அப்பப்பப் போயிட்டு வர்றா.

●

எட்டு முடிஞ்சு மாசம் ஒம்போது.



படிப்பகம்

padippakam

பிள்ள பெறப் போற ஒரு பிள்ளத்தாச்சி, பாவாட கட்டத்தெரியாத பள்ளிக்கூடத்துப் பிள்ள மாதிரி கேக்குறா. ''சொல்லு ஆத்தா. எனக்கு ஆம்பளப்பிள்ள பொறக்குமா? பொம்பளப்பிள்ள பொறக்குமா?''

''எந்தப் பிள்ள பெறந்தாலும் ஒன் சொந்தப்பிள்ளதான். ஆனாலும் சொல்றேன்... ஒனக்கு ஆம்பளப் பிள்ளதான் பொறக்கும்''

''எதவச்சுச் சொல்ற?''

''உக்காந்த ஒரு பிள்ளத்தாச்சி எப்பவும் வலதுகைய ஊன்டி எந்திரிச்சான்னா அவளுக்கு ஆம்பளப்பிள்ள. எடதுகைய ஊன்டி எந்திரிச்சான்னானாப் பொம்பளைப்பிள்ள. நான் பாத்த அளவுல நீ வலது கைய ஊன்டித்தான் எந்திரிக்கிறவ. சக்கம்மா மேல சத்தியமாச் சொல்றேன் கருவாச்சி கருவுல சொமக்கிறது ஆம்பளப் பிள்ளதான்டி அம்மா''.

ஏழே நாள்ல நெஞ்சுல முட்டிநின்ன வயிறு ரெண்டு பக்கமும் சன்னஞ்சன்னமாச் சரிஞ்சு போச்சு; தொப்புள் மலந்து போச்சு.

பாத்தவுடன சொல்லிட்டாளுக பெரிய பொம்பளைக ரெண்டு பேரும்.

''ஒரு வாரமோ பத்துநாளோ பெத்துருவடியம்மா பிள்ள. அந்த அங்காளஈஸ்வரியும் ஆத்தா பெரிய மூக்கியும் ஒங்கூடவேயிருப்பாக. கொறவராது''

●

பங்குனி கடைசி.

வரப்போற சித்திரை வறுத்தெடுக்கிறதுக்கு முன்னால பூமிகுளிர ஒரு போடு போட்டுட்டுப் போயிடறேன்னு கூடிநிக்கிது கோடை மேகம்.

பிள்ள பெற இன்னும் பத்து நாள் இருக்குங்கிற நம்பிக்கையில, அகமலையில விறகெடுத்துத் தலையில சொமந்து வறட்டாறு தாண்டி வந்துக்கிட்டிருக்கா நெறமாசக்காரி.

எங்கிட்டிருந்தாலும் ஒரு சாரக்காத்து வந்து லேசா ஒரு தட்டுத்தட்டினா ஒடைஞ்சு ஒழுகிரும் மேகம்.

அதுக்கான அறிகுறி கண்டதும் ஓடி ஒளிஞ்சு போச்சு ஆடுமாடு மேய்க்கிற கூட்டம்.

கண்ணுக்கெட்டின மட்டும் காக்கா, குருவி, கழுகு தவிர எதும் தட்டுப்படல.

மேல ஆகாயம்; கீழபூமி. தலையில வெறகு; வகுத்துல பிள்ள.




படிப்பகம்

padippakam

இடிக்கப் போறேங்குது மேகம்.

அடிக்கப் போறேங்குது மழை.

கிழிச்சும் தைப்பேன்; தச்சும் கிழிப்பேன்னு கிறுக்குப்புடிச்சு அலையுது மின்னலு.

சூராம் புதருக்குள்ள ஒரு சூறாவளி சுத்தி, வேரோட புடுங்க ஒரு இத்துப்போன மரமிருக்கான்னு விசில் அடிச்சு விசாரிச்சுக்கிட்டே வருது ஒரு கடுங்காத்து.

ஒத்தையில நிக்கிறா கருவாச்சி அத்துவானக் காட்டுல.

என்னத்தச் சொல்ல..?

எடுத்திருச்சய்யா இடுப்பு வலி.



படிப்பகம்



# 16

**கா**டு நடுக்காடு.

காலம் சாயங்காலம்.

ஆகாயத்துல சூரியனையுங் காணோம்; அக்கம் பக்கம் ஆளுகளையும் காணோம்.

என்ன பண்ணுவா பாவம் இடுப்புவலி எடுத்தவ?

''யாத்தே! என்னியக் காப்பாத்துங்க''ன்னு உசர் கிழிய ஓங்கிக் கத்துனாலும் அந்த ஓசை கேக்குற ஒலிவட்டத்துக்குள்ள உசுருக ஏதும் இல்ல.

padippakam

வெலாப்பக்கம் மின்னல் 'சுளீர்' 'சுளீர்'ன்னு வெட்டி வெட்டிச் சுண்டுது. இடுப்புக்குள்ள யாரோ குடியிருந்துக்கிட்டே கோடாலி எடுத்து வெட்டுற மாதிரியிருக்கு.

'தடால்'ன்னு தூக்கித் தரையில எறிஞ்சா வெறக.

பிள்ள பெறக்க ஒரு வாரம் பத்துநாள் ஆகும்ன்னு கெழவிக சொன்னது தப்பாப் போச்சே. இந்த வலி பொய் வலியாத் தெரியலையே. உசுரக் கிண்டிக் கெழங்கெடுக்கிற வலியாத் தெரியுதே!.

''கடவுளே என்னியக் காப்பாத்திரு. தாயும் பிள்ளையும் தனித் தனின்னு ஆக்கிரு''.

எங்க போயி விழுகிறது?

நிக்கிற பூமி நெருஞ்சிக்காடு. கெழக்க வறட்டாறு; மேற்க அகமலை; வடக்க இண்டம்புதர்க்காடு; தெக்க ஒரு கெணத்து மேடு. அங்க தெரியுது ஒரு காவக் குடிசை. ஒரு முந்நூறு அடி தூரந்தான் இருக்கும் ... முந்நூறு மைலாத் தெரியுது இடுப்புவலிக்காரிக்கு.

இடுப்புல கைய வச்சு அழுத்தி, வகுத்துல சிலுவை சொமந்து, ஒரு பக்கமா ஒருக்களிச்சு ஒரஞ்சாஞ்சு நெருஞ்சி முள்ளு வழி நடந்து, காவக் குடிசைக்குள்ள போயி விழுந்துபோனா.

சின்னக் குடிசை. குட்டையன்கூட அதுல குனிஞ்சுதான் போகணும். அகத்திக் கம்புகள ஊடுமரமா வச்சுத் தென்னங்கீத்துகள்ல கட்டிவச்ச குடிசை. சாமைவைக்கோலப் பரப்பியிருக்கு தரையில; இத்த சாக்கு ஒண்ணு விரிச்சுக்கெடக்கு அதுக்கு மேல. மறுகு கருது அறுத்துவச்ச கம்பங்கருது மூடைக ரெண்டு ஒரத்துல. பச்சைப் பிள்ளக்காரி பிள்ளைய அட்டத்துல போட்டுப் படுத்திருக்கமாதிரி கம்பங்கருதுச் சாக்குகளுக்கு அங்கிட்டு ஒண்ணும் இங்கிட்டு ஒண்ணுமா ரெண்டு பூசணிக்கா. குடிசைக் கூரைக்கு மத்தியில கயிறுகட்டிச் சுக்காக் காஞ்சு தொங்குது சொரக்குடுக்க ஒண்ணு.

இடுப்பப்புடிச்சு 'யப்பே! யாத்தே'ன்னு கத்திக்கதறிச் சாஞ்சு விழுந்து சரிஞ்சு கெடக்கா கம்பங்கருது மூட்டையில கருவாச்சி.

''கடவுளே! ஒத்தையில பிள்ளபெறுன்னு என் நெத்தியில எழுதிட்டியா? இந்த ஒலகத்துல மொதல் பிள்ள பெத்த பொம்பளைக்கு எவ பிரசவம் பாத்தது? அப்படி ஆகிப்போச்சா இந்தக் கருவாச்சி கத?''

முண்டித் தவிக்குது பிள்ள; முட்டித் தெறிக்குது வலி. இந்தப் பொழப்புக்குச் செத்தே போகலாம் போலிருக்கே! பேறுகால வலியில துடிக்கிற எல்லாப் பொம்பளைகளும் ஒரு தடவையாவது போயிட்டுவார முடிவுக்கு அவளும் போயிட்டு வந்துட்டா.

முன்னப்பின்னப் பிள்ளை பெத்தவ இல்லையே... யாத்தே நான் என்ன பண்ணுவேன்?



படிப்பகம்

ஆளுக யாராச்சும் கூட இருந்தா நாம மல்லாக்கக் கெடக்கலாம்; வேலைய அவுக பாப்பாக. இப்ப நானேதான் பிள்ளத்தாச்சி; நானேதான் மருத்துவச்சி. மல்லாக்காக் கெடந்து எடக்கு மடக்காகிப் போனா எந்திரிக்க முடியுமா?

அனத்திக்கிட்டே ஒரு கையத் தரையில ஊன்டி ஒருக்கழிச்சு எந்திரிச்சா. சரசரசரன்னு சீலயத் தெரைச்சுத் தொடைக்குமேல சுருட்டி இடுப்புக்கு மேல ஏத்திவிட்டா.பல்லக் கடிச்சு முனகிக்கிட்டே முன்னுக்க சாக்க இழுத்துப் போட்டு அதுமேல முட்டிக்கால் போட்டா. ரெண்டு பக்கமும் ரெண்டு கையத் தரையில அழுத்தி ஊன்டிக்கிட்டு ஆனமட்டும் தொடைரெண்டையும் அகலப்படுத்திக் கிட்டா. தலைய முன்னுக்க இழுத்து லேசாக் குனிஞ்சு பாத்தா - சும்மா செஞ்சாந்தக் கரைச்சு விட்டமாதிரி செக்கச் செவேர்ன்னு ஒழுகுது தீட்டு.

வெளிய அடங்கிருச்சு மேகம்; இருட்டிருச்சு பூமி. என்னமோ ஆகாயத்திலிருந்து ஆதிசேசன் எறங்கி வாரமாதிரி 'உஸ்ஸு உஸ்ஸு'ங்குது ஊதக்காத்து.

மின்னலவிட்டு ஒரு தாக்கல் சொல்லி, இடிய அனுப்பி ஒரு தண்டோரா போட்டு, 'வரப்போறேன் வரப்போறன்'னு சொல்லி விடுது மழை.

'சடபுட சடபுட'ன்னு ஓலக்குடிச மேல விட்டுவிட்டுத் தாளம் போட்டுட்டுப் போகுது தூறல்.

முட்டிக்கால் போட்டவ முக்குறா. சும்மா கருப்புத் தந்தம் மாதிரி கெடக்குற தொடையில கையவச்சு ஆனமட்டும் அழுத்திப்பாக்குறா.

கடவுளே! பிள்ள பெக்குறதுன்னா என்னா? நீயே வெளிய எடுக்கிறதா? தாயே வெளிய தள்றதா?

தலைக்குமேல தொங்குன சொரக்குடுக்கைய இறுக்கிப் புடிச்சுக்கிட்டா - மரம்விட்டு மரம்தாவுற குரங்கு கழுத்தக் குட்டி புடிச்சுக்கிட்டமாதிரி.

'ம்...ம்...ம்'... ன்னு மொனகுறா. 'யப்பே யாத்தே'ன்னு பொலம்புறா. எலும்புக்கும் சதைக்கும் மத்தியில ஊசியச் செலுத்திச் செலுத்தி உருவுது ஒரு வலி; இடுப்புல ஒரு பக்கம் நொழைஞ்சு மறுபக்கமா வெட்டி வெளியேறுது ஒரு மின்னலு.

'அய்யோ'ன்னு சொரக்குடுக்கைய இறுக்கிப் புடிச்சு இழுத்தவதான். அது அந்து தெறிச்சு அங்கிட்டு ஓடி விழுந்து போச்சு. சொரக்குடுக்க ஓடி வெளியபோயி விழுக, படீர்ன்னு ஒடஞ்சதய்யா உள்ளயிருந்த பனிக்கொடம்.

இப்பத் தீட்டு நின்னுபோச்சு. வழவழவழன்னு வடிகஞ்சியா ஒழுகுது பனிக்கொடம் ஒடைஞ்ச தண்ணி. பசபசபசன்னு பசையப் பாத்தவுடன வலியில துடிக்கிறவளுக்கு வந்திருச்சு ஒரு நம்பிக்கை.

''சாமி! எம் பிள்ள வலிக்காம வழுக்கி வழுக்கி வர்றதுக்குத்தான் இந்த வசதிபண்ணி வச்சிருக்கிறியா? கையெடுத்துக் கும்புடணும் ஒன்னிய. ஆனா கைதூக்க முடியலையே''.

padippakam

பனிக்கொடம் ஒடைஞ்சா அதுல நீந்திவந்திரும் பிள்ளங்கிறது நெசந்தான். ஆனா வலி குறைஞ்சிரும்கிறது தப்பு. அதுக்குப் பெறகு எடுக்கும் பாருங்க ஒரு இடுப்பு வலி...ஓடிக் கெணத்துல விழுந்து செத்துப் போகலாமான்னு தோணுமாம் பொம்பளைகளுக்கு.

இப்ப ஒடைஞ்ச பனிக்கொடத்துக்குள்ள ஊர் சுத்துது பிள்ள; அப்படித்தான் ரெண்டு நாலு சுத்துச் சுத்தி அழிச்சாட்டியம் பண்ணுமாம். அது எதுக்குன்னா வெளி வாசல் தேடித்தேடி அலையுதாம் கண்ணு தெரியாத புள்ள கருவுக்குள்ள.

கண்ணமூடிக்கிட்டே வழி கண்டுபுடிக்குது கருவுக்குள்ள புள்ள; பெறந்து வெளியேறிக் கண்ணத் தொறந்தும் வழிகண்டுபடிக்க முடியல மனுசப்பயபுள்ள. இதத்தான ஈசன் எழுத்துன்னு சொல்லி அலையுதுக பெருசுக.

முக்குறா, மொனகுறா. மார்புக்கூட்டுல மூச்சத்தேக்கி ''தம்'' கட்டி நிக்கிறா. வலியடக்கப் பல்லக் கடிக்கிறேன்னு ஒதட்டையும் நாக்கையும் ஒரு ஓரமாக் கடிச்சு ரத்தம் கசிய அனத்துறா.

முதல் சுத்துச் சுத்துது பிள்ள வகுத்துக்குள்ள. அந்த ஒரே சுத்துல மேல இருந்த பிள்ள கடக்குன்னு கீழ எறங்கிருச்சு. எறங்குன பாரமெல்லாம் ஏந்தித் தாங்குனதுல இடுப்போட சேத்து இப்ப முட்டிக்காலும் வலிக்குது. ''யாத்தே''ன்னு கத்துறா. வெளியவிழுந்த ஒரு இடியும் அவளோட சேந்து கதறுது.

இப்ப ரெண்டாம் சுத்துச் சுத்துது பிள்ள. நெஞ்சுக்கு நேர தலையும் வயித்துக்குள்ள காலுமா நிமிந்திருச்சு இப்பக் கவுந்து கெடந்த பிள்ள.வலியில உசுரு ஒடம்பவிட்டுக் கொஞ்சம் வெளிய போகுது; உள்ள வருது; கொஞ்சம் வெளிய போகுது; உள்ள வருது. முதுகுக்குப் பின்னால கெடந்த சாக்க அழுத்தி அமுக்குனதுல கயிறு அவுந்து பிதுங்கி வழியுது கம்பங் கருது.

நட்டுக்குத்தலா நின்ன பிள்ள இப்ப மூணாம் சுத்துச் சுத்தி வருது. எங்க? எங்க? நான் பத்துமாசமாக் குடியிருந்த வீட்டுக்கு வெளிவாசல் எங்க? கையையும் காலையும் ஒதறி ஒதறித் தேடுது. பிள்ள வெளிய வந்திருமா இல்ல என் உசுரு வெளிய போயிருமா? ''நான் செத்தாச் சாகுறேன்; சாகப்படாது எம் பிள்ள'' - அவ நெனவுல வந்துபோற எல்லாச் சாமிகளையும் நெஞ்சில நிறுத்திக் கும்படுறா.

இப்ப நாலாம் சுத்துச் சுத்தி வருதய்யா வகுத்துக்குள்ள பிள்ள. ஆகாயம் பாக்க மல்லாக்கக் கெடந்த பிள்ள, கழுக்குன்னு ஒரு திருகுத் திருகிக் கவுந்து, பனிக்குடத்தண்ணியில மொழுக்கு மொழுக்குன்னு வழுக்கி மெதந்து, பெறப்பு வாசல்ல தலையவச்சுப் பொருந்தி உக்காந்திருச்சு.

வலி பொறுக்காம அவ வெறைச்சு வீசுன கையிலபட்டு பூசணிக்கா ஒண்ணு தெறிச்சு உருண்டு விழுந்தோடிப் போச்சு குடிசைக்குள்ள ஒரு மூலையில.

''என் வாசல்ல தலவச்சுப் படுத்திருக்கிற வைராக்கியப் பயபுள்ள... நீ முண்டி வெளிய வாரியா? நான் முக்கி வெளிய வாரியா?''



படிப்பகம்

''ஒரு வேலைய ரெண்டு பேரு செய்யிற மாதிரி வருமா? தாயும் முக்கணும்; பிள்ளையும் முண்டணும். அப்பத்தான பெற முடியும் பிள்ள''.

எப்பவோ யார் கூடவோ சண்ட போட்டன்னைக்கி ஆத்தா பெரியமூக்கி அடிச்சுப் பேசுன சொல்லு அவ காதுக்குப் பக்கத்துல பட்டாம்பூச்சிக மாதிரி பறக்குது இப்ப.

மொத முக்கு முக்குறா; அசையமாட்டேங்குது கருவுல வளந்த கல்லு.

ரெண்டாவது முக்கு ஓங்கி முக்குறா; பிள்ள லேசாப் பிதுங்குது.

''யாத்தே! வருது போலிருக்கே! வந்திரும் போலிருக்கே!''

முட்டிபோட்ட கால இன்னும் ஆனமட்டும் அகலப்படுத்திக் கிட்டு பெறங்கை ரெண்டையும் பின்னால ஊனி எம்புட்டு மூச்சிழுக்க முடியுமோ அம்புட்டு மூச்சிழுத்து, காத்த நெஞ்சில தேக்கி நிறுத்திக்கிட்டு அவ மூணாவது முக்கு... முக்க... தளுக்குன்னு வெளிய வந்திருச்சு தல.

முட்டிபோட்டு ஒக்காந்தமேனிக்கு முதுக லேசா முன்னுக் கிழுத்து ரெண்டு தொடை இடுக்கு மத்தியில எட்டிப்பாக்குறா... வழுவழுங்கிற தண்ணியில வழுக்கி வந்து நிக்குது மொழு மொழுங்கிற தல.

''ஏ பக்கிப் பய புள்ள! எம்புட்டு முடி?''

பின்னிச் சடைபோட்டுப் பிச்சுப் பூ வச்சுவிட்றலாம் போலிருக்கே பெறந்த அன்னைக்கே.

''கழுக்கு''ன்னு இன்னொரு முக்கு முக்க... கழுத்து வந்திருச்சு வெளியில. அவளுக்கு இடுப்பும் வலிக்குது; உறுப்பும் வலிக்குது இப்ப. தலையும் கழுத்தும் வெளியேறச் சின்ன வழி போதும். தோள்பட்டை வரணும்னா வாய் அகலமாகி வழிவிடணும். குயில் வராத சந்துவழி ரயில் வாரது மாதிரி இது அதிசயமான சோலியாச்சே! வருமா? வந்திருமா?

பிள்ளையத் துப்பி எறியத் தாய் உறுப்பு தவிக்குது.

கருவறைய எட்டி ஒதைச்சு வெளிய தவ்வப் பிள்ளையும் முட்டிப்பாக்குது.

இவளும் ஒரு முக்கு முக்க, பிள்ளையும் ஒரு முண்டு முண்ட, இறுகிக்கெடந்த வழி எளக்கங் குடுக்கத் தோள்பட்டை பிதுங்கின வேகத்துல இடுப்பு வரைக்கும் வந்திருச்சு பிள்ள.

வெளிய... சலசலசலன்னு அடிச்ச சாரல் இப்ப மளமளமளன்னு மழையாகிப் போச்சு. குடிசை மேல யாரோ மணலவாரி எறைக்கிற மாதிரி மடமடன்னு சத்தம் கேக்குது.

தாய் வகுத்துல பாதிப்புள்ள; தரைமேல பாதிப்புள்ள. எம் புள்ள மூஞ்சி பாக்க இன்னும் எம்புட்டு நேரமாகுமோ கடவுளே! என்ன பண்றது ஏது பண்றதுன்னு தெரியாமப் பின் பக்கமாச் சரிஞ்சு, முட்டிபோட்ட ரெண்டு கால்ல ஒரு கால ஒசக்கத் தூக்கி அங்கிட்டும் இங்கிட்டும் லேசா ஆட்டி, முழுமூச்ச உள்ள இழுத்து ஒரு முக்கு முக்கினா பாருங்க...

padippakam

தொப்பூழ்க்கொடியோட 'மொழுக்'ன்னு தரைபாத்து வெளிய வந்து விழுந்த பிள்ள அட்டஞ்சாச்சுப் பெரண்டு மல்லாக்க விழுந்திருச்சு சாம வைக்கோல் மேல.

''யாத்தே''ன்னு விட்ட பெருமூச்சில வலிய வெளிய அனுப்புனவ, ஒரு எக்கு எக்கி எட்டிப்பாத்தா:

ஏம் பிள்ள உசுரோட இருக்கா? இருக்கு; கைகால் அசையுது.

ஆணா? பொண்ணா? ஆம்பளைப்பிள்ளதான்! கன்னங் கரேல்ன்னு குரவைமீன் மாதிரி அடையாளமிருக்கு. 'அத'த் தொட்டும் பாத்து மகுந்து மலந்து குளுந்து போனா குளுந்து.

''சாவோட தலமாடு வரைக்கும் கூட்டிட்டுப்போயி, வகுத்துல இருந்த பிள்ளையக் கையில குடுத்திட்டுப் போயிட்டியே காளியாத்தா! ஒனக்குக் கெடா வெட்டுறேன்''.

பிள்ள தரையில கெடந்தாலும், தொப்பூழ்க்கொடிக்கும் தாய்க்கும் தொடுப்பு அறுபடல; ஆனா உள்ள இருக்க நஞ்சுப்பை மட்டும் வெளிய வந்து விழுகல.

வாந்தியெடுக்கிறவ மாதிரி ஒரு செருமிச்செருமி அடி வகுத்துல அழுத்தம் குடுத்து ஓங்கி ஒரு இருமு இருமினா. பொசுக்குன்னு வெளிய வந்தோடி விழுந்துபோச்சு நொரை நொரையா நஞ்சுப்பையி.

''மகனே! கருணக்கெழங்கு மாதிரி கருகருன்னு தரையில கெடக்குற என் மகனே! ஒனக்கு ஒரே ஒரு தாய்தாண்டா; அது ஒலகத்துல உண்டானது. எனக்கு நீ ஒரே மகன்தான்டா; இது நான் உண்டாக்கிக்கிட்டது''.

வலியில தெரியல; இப்பத்தெரியுது - இடுப்புலயே சொருகி வச்சிருந்த பண்ணருவா. எடுத்தா; தொப்பூழ்க் கொடிய அறுத்தா. ஒழுகிச்சு ரத்தம்; முடிபோட்டா. சாமவைக்கோல வெலக்குனா; பண்ணருவா மூக்குலயே பள்ளந்தோண்டுனா. மாசு மருவை யெல்லாம் அதுலயே போட்டுப்பொதைச்சா. கசகசங்கிற ஒடம்போட பிசுபிசுங்கற சீலையோட எந்திரிச்சா.

தூக்குனா பிள்ளய. முந்தானையில தொட்டில் கட்டி முடிஞ்சுக் கிட்டா கழுத்துல. செதறிக்கிடந்த சொரக்குடுக்க பூசணிக்காயை யெல்லாம் ஒருகால்லயே தள்ளி ஒதுங்க வச்சா.

வெளியவந்தா.

நனைஞ்சு கெடந்த வெறகுக்கட்ட நிமித்தித் தலையை முட்டுக் குடுத்துத் தாங்கிச் சொமந்தா.

கருவேலங்காட்டு ஒத்தையடிப் பாதையில நடையில கூடிட்டா.

''இந்தா போறா பாரு இவதாண்டா பொம்பள''ன்னு 'கடபுட கடபுட'ன்னு கைதட்டுது ஆகாயம்.

''வாடா ராசா வாடா''ன்னு புதுப்பயலுக்கு ஒரு சரவெளக்க ஏத்தி எறியுது மேகம்.



படிப்பகம்



17

"ஏலே! கடைசியில செயிச்சது யாரு? கருவாச்சிதான? அத்துவிட்டாக; அழிச்சாட்டியம் பண்ணியும் பாத்தாக. நேத்து காட்ல பொதையலெடுத்த மாதிரி கையில பிள்ளையோட வந்துட்டாளா இல்லையா? ஆதியிலேயே அப்பன் இல்ல; இப்ப ஆத்தாளுமில்ல. உள்ளங்கையில அடுப்புக்கூட்டி ஒருத்தியாக் கஞ்சி காச்சிறமாதிரி, ஒத்தையில பிள்ளபெத்து ஒண்ணும் நடக்காத மாதிரி நடந்து வந்துட்டாளப்பா. கட்டையன் கட்டின தாலி கழுத்துல; கட்டையன் குடுத்த பிள்ள இடுப்புல. இன்னைக்கிச் சொல்றேன் எழுதிக்க; என்னைக்கிருந்தாலும் சடையத்தேவன் தேடிவச்ச சொத்தக் கட்டியாளப் போறது யாரு? கருவாச்சி மகன்தானப்பா''.

padippakam

கட்டையன் மூஞ்சியில கரும்புள்ளி செம்புள்ளி குத்தாத குறைதான். அவன் காதுபடவே பேசுது கடந்துபோற சனம். காஞ்ச மொளகாயில வெதைகள்லாம் ஓடிவந்து மொளகா மூக்குல சேர்றமாதிரி, அவன் ஒடம்புல இருக்கிற கோபமெல்லாம் ஒண்ணு கூடித் தெரண்டு மூக்குநுனியில வந்து ஒக்காந்திருச்சு மூட்டமுடிச்சோட. தீக்குச்சியெல்லாம் தேவையில்ல; அவன் மூக்குமேல பத்தங்குல தூரத்துல வச்சாலும் பத்திக்கிரும் பீடி. அவன் சின்ன மூக்கு வெடைக்கிறப்ப துவாரம் ரெண்டும் விரிஞ்சு விரிஞ்சு ரெண்டு கொட்டாவி விடுது.

''சொத்துக் கேப்பாளாமில்ல சொத்து...? அவ பிள்ளையக் கண்டந்துண்டமாப் பிச்சுப் பிச்சுக் காக்காய்க்குப் போட்டுட்டா...? எங்கூடப் படுத்துப் பெற முடியுமா இன்னொரு பிள்ள.? ஏலே! நரி நண்டத் தூக்குறமாதிரி துண்டாத் தூக்கிட்டு வாங்கடா அவ பெத்து வச்சிருக்கிற பிண்டத்த''.

எரிஞ்சுக்கிட்டிருந்த பீடியத் தீயோட வாய்க்குள்ள தள்ளிக் 'கறிச் கறிச்'சுன்னு மென்னு தின்னு, நாக்கப் பல்லுல நற நறன்னு வழிச்சுக் கரேர்ன்னு காறித்துப்புறான் கட்டையன்.

வீட்டு வாசல்ல கெடந்த வெளிக் கல்லுல ஒக்காந்து வெத்தல தட்டிக்கிட்டிருக்காரு சடையத்தேவரு. இடிச்ச கூலிக்கு எனக்கொரு பங்குன்னு எவனும் கேட்டுரக் கூடாதுங்கிறதுக்காக அவரா இடிச்சு அவராப் போட்டுக்கிறதுதான் அவரோட வெகுநாளைய வெத்தலக் கொள்கை.

விழுகட்டும் அவர் காதுலன்னு வேணும்னே பேசிட்டுப் போறாக வெவகாரம் புடிச்ச ரெண்டு மூணு ஆளுக.

''கருவாச்சி புள்ள கருப்பா? செவப்பா?''

''குங்குமப்பூவப் பால்ல போட்டுக் கொடங்கொடமாக் குடிச்சாலும் சிவீர்ன்னா இருக்கும் கட்டையனுக்கும் கருவாச்சிக்கும் பெறந்த பிள்ள? அவுக வம்ச நெறந்தான்... கருப்பு''.

''பிள்ள யார் மாதிரி இருக்கு...? அவுக அப்பன் மாதிரியா? ஆத்தா மாதிரியா?''.

''ரெண்டு கழுதைக மாதிரியும் இல்லையாம்''

''பெறகு?''

''அவுக தாத்தன் சடையத்தேவர் சாடையாம்''.

காலம் முறுக்கிப்புழிஞ்ச முதுகுத் தண்டுக்குள்ள 'சிலீர்'ன்னு ஒரு மின்னல் ஓடி மறைஞ்சதுல சிலுத்துப் போகுது கெழவனுக்கு.

வெத்தல ஒரல்ல தாளம் தப்புது.



படிப்பகம்

ஒத்தையில பிள்ளையெடுத்து வந்தவள ஊரே வேடிக்கை பாத்துட்டுப்போக, வீட்டு வெளிக்கதவச் சாத்திக்கிட்டு நடுவாசல்ல தயிர்ப் பலகையைப் போட்டு, கருவாச்சி ஒடம்பெல்லாம் மஞ்சப்பூசி அவள ஒட்டுத்துணியில்லாம ஒக்காரவச்சு, எளம் வெந்நிய சொம்புல மோந்து எட்டி நின்னுக்கிட்டு அவ மேல சல்லு சல்லுன்னு வீசியடிக்கிறா ரங்கம்மா.

சும்மா மஞ்சள் மழை பேஞ்ச மாதிரி ஒழுகி வருது தண்ணி ஒடம்பெல்லாம்.

''போதுமாத்தா போதுமாத்தா'' கையில தண்ணியத் தடுத்துக் கத்துறா கருவாச்சி.

''ஏய்! சும்மா இர்றீ. பிள்ள பெத்த பச்ச ஒடம்புல பிசுக்குப் போகணுமா இல்லையா?''.

கிட்ட வந்து மூஞ்சிதேச்சு, முதுகுதேச்சு, முன்மார்பு கழுவிவிட்டவ, தண்ணி ஊத்திக்கிட்டே வகுத்தப்புடிச்சு வலிக்காம ஒரு எளங்கசக்குக் கசக்கிவிடுறா; கச கச கசன்னு வெளியேறுது கழிவு கசடெல்லாம்.

ஒடம்புல ஒழுகுற மஞ்சத் தண்ணியும் உறுப்புல ஒழுகுற செந்தண்ணியும் சேந்து புதுநெறம் குடுத்துப் போகுது வாசல்வழி.

பேறு காலம் ஆன பொம்பளைக்கு முப்பது நாளைக்கு இருக்கும் தீட்டு. சில பொம்பளைகள மூணுமாசம் வரைக்கும் தீட்டிப்புடும் போட்டு.

கருவாச்சியக் 'கரகரகர'ன்னு தேச்சுக் கழுவி வந்தவ 'யாத்தே'ன்னு அலறிட்டா... அவ உயிர்த்தலத்த உத்துப்பாத்ததும்.

''அடி பாதகத்தி மகளே! பூவா இருக்க வேண்டிய எடத்தப் புண்ணா வச்சிருக்கிறியே!''

'புண்பட்ட எடத்தப் புகையவிட்டு ஆத்து'ன்னு அதுக்கொரு வைத்தியம் ஆரம்பிச்சுட்டா ரங்கம்மா.

ஒரு மஞ்சட்டியில அடுப்புக் கங்குகள அள்ளிக் கொட்னா. அதுல சாம்பிராணிய அள்ளிஎறிஞ்சா. அதுமேல ஆவாரங்குழை பரப்பி அதுக்குமேல வேப்பங்குழைய வச்சா. சட்டியில இருந்த சந்துகள்ல வெள்ளப்பூடுத் தொலியையும் அள்ளிப்போட்டா. ''சுவத்தப் புடிச்சு நின்னுக்கிட்டுக் கால்ரெண்டையும் அகட்டிவையிடி ஆத்தா''ன்னு அதட்டுனா.

சீலயத் தெரட்டிச் சுருட்டி ரெண்டு காலையும் அவ அகட்டிநிக்க காலுக்கு மத்தியில மஞ்சட்டிய நீட்டி இவ புகை மூட்டம் போட, கவுட்டுவழி போகுதய்யா புகைமண்டலம் புண்பட்ட எடம் தேடி. ஆவிபுடிச்ச பொம்ளைய ஆதரவா அணச்சுப் பாயில படுக்கவச்சாக.

padippakam

தோலெல்லாம் திட்டுத்திட்டா ரத்தம்கட்டிப் பிசுக்குஒட்டிக் கெடந்த பெறந்த பிள்ளையத் தூக்கி உடம்பெல்லாம் நசநசநசன்னு நல்லெண்ணெயத் தடவி கம்மாக் கரம்பையத் தேச்சுக் கழுவி விடவும், சும்மா பளபளன்னு கண்ணாடி மாதிரி ஆகிப்போனான் கருவாச்சி மகன்.

குளிப்பாட்ன பிள்ளைக்கு லேசா சாம்பராணிகாட்டி ஆத்தாளோட சேத்துவிடவும் அது மொதல் மொதலா வாய்பொருத்துது மொலையில.

சப்புது பிள்ள; தாய்ப்பால் இல்ல.

பேறுகாலம் பாக்க ஆத்தா இல்லையேங்கற வருத்தத்தில கடைசிப் பத்து நாளா அன்னந் தண்ணி இல்லாம அழுதுக்கிட்டேயிருந்தவளுக்கு, குழாயத் திருகிவிட்ட மாதிரி கொட்டவா போகுது பாலு?

''ஏலே கொண்ணவாயா! வெள்ளாட்டம்பால் இருந்தாப் பீச்சி வெரசாக் கொண்டாடா''.

எங்கபோயிப் புடிச்சானோ ... எத்தன ஆட்டுல பீச்சினானோ? கா(ல்) மணி நேரத்துல ஓடிவந்துட்டான் அரைக்காச்சொம்புப் பாலோட.

ஆட்டுரோமம் பால்ல கெடந்தா மாட்டிக்கிரும் பிள்ளைக்குன்னு வெறும் துணியில வடிகட்டிச் சங்குல ஊத்துனா பால. பண்ணருவா எடுத்தா; அத உள்ளடுப்புல போட்டு ஓரம்சுடவச்சா. சுட்டபண்ணருவா மூக்க சங்குல செலுத்த சுரீர்ன்னு சத்தம் போட்டுச் 'சுட்டுட்டே'ன்னு சொல்லுச்சு பாலு; புகட்டிட்டா வைத்தியச்சி.

தாயில்லாத பிள்ளைகளுக்கும் தாய்ப்பால் இல்லாத பிள்ளைகளுக்கும் ஆடும் மாடும்தான ஆத்தா.

தேனிச்சந்தைக்குப் போயி, திருக்கை மீன் கருவாடும் நெத்திலியும் வாங்கிட்டு வரணும். அதுல பச்சப்பூடு போட்டுக் கொழம்புவச்சுக் குடுத்தாப் பால்கட்டும் பச்ச ஒடம்புக்காரிக்கு.

''நாலு ஆளுக கம்புசுத்தி என்னிய வளச்சு வளச்சு அடிச்சமாதிரி மேலுகாலு வலிக்குது. பேய்ப்பசி பசிக்குது. இப்ப என்ன குடுத்தாலும் திம்பேன். எதாகிலும் குடுங்க''. - வைத்தியச்சியையும் பவளத்தையும் கெஞ்சிக் கேக்குறா கருவாச்சி.

''இந்தாத்தா! வகுத்துப்புள்ளக்காரி எதையும் திங்கலாம்; கைப்புள்ளக்காரி கண்டதையும் திங்கப்படாது. பிள்ளைக்கு ஆகாது. வாயக்கட்னவ பிள்ள வளப்பா; வயித்தக் கட்னவ புருசன் வளப்பா-ன்னு சும்மாவா சொன்னாக?''

விடிய்ய, அடுப்புல தண்ணிப்பான வச்சு அதுல புளிய எலைய அமுக்கிக் கொதிக்கவச்சு இடுப்புக்குத் தண்ணி ஊத்தி, சுக்குக்களிகிண்டிச் சூடு



படிப்பகம்

ஆறும்முன்ன நல்லெண்ணைய ஊத்தி நறுக்காக் கருப்பட்டி போட்டு அவ ரெண்டு வாய் திங்க... ''என் பேரன் எங்க''ன்னு கேட்டு வந்துட்டாரு சுப்பஞ்செட்டியாரு.

பாயில கெடந்த பயல மடியில தூக்கி வச்சுக் கொஞ்சிட்டு, சட்டைக்கு உள்கூட்ல கையவிட்டுத் தங்கச்சங்கிலிய எடுத்துப் பிள்ள கழுத்துல போட்டு, ''கைக்காசுபோட்டுச் செய்முறை செய்ய வக்கில்லைன்னாலும் கடனத் திருப்பிக்கட்டத் தெம்பு இருக்கு தாயி. எம் மகளுக்கு ஒன் ஆத்தா போட்ட சங்கிலிய ஒம் மகனுக்கு நான் திருப்பிப் போட்ருக்கேன்''னு சொல்லி வயசான கண்ல அழுதாரு.

களிதின்டுக்கிட்டிருந்தவ தன்னையறியாம எச்சிக் கையெடுத்துக் கும்பிட்டா பெரியவர.

கோழியடிச்சுக் கும்பா நெறையக் கொழம்புவச்சு நல்லெண்ண ஊத்தி எலும்பில்லாத கறியா எடுத்துத் ''தின்னு மகளே தின்னு''ன்னு திங்க வச்சு அவ ஒடம்பத் தேத்த, மூணாம் நாளே கண்ணுகசிய ஆரம்பிச்சிருச்சு காம்பு. மொதல்ல மஞ்சளா வருது சீம்பாலு.

முட்டி முட்டி முண்டுது பிள்ள.

''யப்பே! ஒக்காந்துக்கிட்டே பறக்கிறமாதிரியில்ல இருக்கு பயபுள்ள பால்குடிக்கிறது! கடவுளே இதுல யார் சொகம் பெருசு? குடுக்கிற தாய்க்கா? இல்ல குடிக்கிற பிள்ளைக்கா?''

இதுல ரெண்டு சொகம் எங்கயிருக்கு? பிள்ள சொகமும் சேந்து தாய்க்கு; தாய் சொகமும் சேந்து பிள்ளைக்கு.

●

மூணாம் நாளு வந்து குமுஞ்சுபோனாக மொதலக்கம்பட்டி ஆளுக.

அரிசி ஒரு பையில; ★பேறுகாலச்செலவு ஒரு பையில; நாலஞ்சு வெடக்கோழிக் குஞ்சுக கையில. ஆணும் பொண்ணுமாப் பத்துப் பன்னெண்டு பேர் வந்து பிள்ள இடுப்புல ஒரு வெள்ளி அருணாக்கயிறையும் கட்டிவிட்டுட்டு, 'பெறந்து வந்துட்டாண்டா பீமமகராசாசா'ன்னு பெருமையும் பேசிக்கிட்டாக.

பேறுகாலமான வீடு தீட்டு வீடுன்னு சொல்லுவாக. ஒம்போது நாள் தீட்டுக் கழியாம அங்க யாரும் தங்குறதுமில்ல; உங்குறதுமில்ல. செய் மொறையச் செஞ்சுபுட்டு, போயிட்டு வாரோம்ன்னு பொழுதிருக்கப் போயிட்டாக.

தாயும் பிள்ளையும் படுத்திருக்கிற பாயச்சுத்தி வட்டமா ஒரு சாம்பல்கோடு போட்டு விடுவாக. அப்பிடிச் செஞ்சாப் பேய் பிசாசு

★ பிள்ளை ஈன்றவளுக்கான நாட்டுமருந்துப் பொருள்கள்

padippakam

அண்டாதுங்கிறது நம்பிக்கை. ஆனா ஈ எறும்பு தாண்டாதுங்கிறதுதான் எதார்த்தம்.

அந்தச் சாம்பல் வட்டத்துக்குள்ள படுத்திருக்கா கருவாச்சி. பல்லு மொளைக்காத பிள்ள வாயில கட்ட வெரல வச்சுக் ''கடிகடி''ங்கிறா. இளம் ஈறு அழுத்த அழுத்த என்னென்னமோ ஆகுது பிள்ள பெத்த ஒடம்புக்குள்ள.

''இப்பப் பாயில கெடக்குற நீயா மகனே. பத்துமாசம் படுத்திருந்த என் வகுத்துக்குள்ள? ஒன்னிய நான் காப்பாத்தப் போறனா? என்னிய நீ காப்பாத்தப் போறயா? பெறந்து மண்ணுல விழுந்ததுலயிருந்து நீ அழுகவே இல்லையே மகனே. ஒனக்கும் சேத்து அழுதுட்டா ஆத்தா அதே போதும்ன்னு நெனைக்கிறியா? நீ வகுத்துக்குள்ள வளந்து வரல மகனே; என் வைராக்கியத்துல வளந்து வந்திருக்க. பொழைச்சுக் காமிக்கணுமடா இந்த பூமியில. அஞ்சாம் நாளே காஞ்சு விழுந்து போச்சப்பா ஒந் தொப்பூழ்க்கொடி. ஆனா எந்த நாள்லயும் விழுந்திரக் கூடாதுடா ஒன் வைராக்கியம். முள்ளுல கெடக்குடா மகனே ஆத்தா முந்தான; வளந்து ஆளாகி வந்து எடுத்துவிடு''

கையக் கால ஒதறிக் காடாவெளக்கு வெளிச்சத்துல சிரிக்குது பிள்ள.

மொதலக்கம்பட்டி ஆளுக குடுத்த பேறுகாலச்செலவுலயிருந்து 'காயங்கருப்பட்டி' சேக்குறாக ரங்கம்மாவும் பவளமும்.

மஞ்சள் - கடுகு - சுக்கு - மௌகு - திப்பிலி - தேசாவதாரம் - ஓமம் - சதகுப்ப- சித்தரத்த - வசம்பு - பெருங்காயம் - வால்மௌகு எல்லாத்தையும் வறட்டோட்டுல போட்டு வறுத்தாக. ஒரல்ல போட்டு நொறுங்க இடிச்சாக. ஒரு சிரட்டை மேல எளந்துணி போட்டு அதுல இடிச்சதப் போட்டுச் சலிச்சாக. அரை வீச வெள்ளப்பூட எடுத்துப் பல்லு பல்லா உரிச்சு எளஞ்சூட்ல நல்லெண்ணெ விட்டு அரைவேக்காடா வதக்குனாக. இடிச்ச பொடிய அதுல கொட்டி ஒடைச்ச கருப்பட்டிய உள்ள போட்டு, பெரட்டு பெரட்டுன்னு பெரட்டியெடுத்தாக, ஒரு பஞ்சாமிர்தப் பதத்துக்கு வந்ததும் மாமியாளுக்கு மருமக ஊத்துற மாதிரி பட்டும் படாம நெய்விட்டு விளாவி, ஒரே பதமா எறக்கி உறியிலதூக்கி வச்சுட்டாக. உறியில வச்சுட்டா எறும்பு கிறும்பு ஏறாது; நாய் பூன நக்காது. எப்பப்ப வேணுமோ அப்பப்பப் பிள்ளபெத்தவ எடுத்துத் தின்னுக் கிட்டேயிருக்க வேண்டியதுதான். அத்தன சக்தி அந்தக் காயங் கருப்பட்டிக்கு. ஊறாத பாலையும் இழுத்து ஊத்திப்படும் ஊத்தி.

●

யாரும் நெனைக்கல. அஞ்சாம் நாளு குளுர் காய்ச்சல் வந்திருச்சு பிள்ளைக்கு. மழையில நனைஞ்ச பிள்ளைக்கு மார்ச்சளி புடிச் சிருந்துச்சு; அதான் காய்ச்சல் வந்திருச்சு. இன்னிக்கி நாளைக்குள்ள எறங்கிரணும்



படிப்பகம்

காய்ச்சல். இல்லாட்டி ஜன்னி வந்தாலும் வந்திரும். பிள்ளைக்கு இப்பவே 'பத்து'ப் போட்டாகணும்.

அடுப்புல வறட்டோட்ட வச்சு அளவாக் கேப்ப மாவ வச்சா. வேணுங்கிற தண்ணிவிட்டுக் கெட்டிப்படாமக் கிண்டுனா. களிப்பதத்துக்கு அது கூடிவாரப்ப ஒரு சிட்டிகை குங்குமத்தப் போட்டுக் கொழ கொழன்னு எறக்குனா. ராமர் அணிலுக்குக் கோடுபோட்டார்ன்னு சொல்றமாதிரி, அதை எடுத்து, பிள்ள உச்சந்தலையில மூணுவெரலு இழுகிவிட்டா; நெத்தியில பத்துப் போட்டா; அடிக் காது வரைக்கும் இழுத்து இழுகிவிட்டா. ரெண்டு நாளா சூடு கொஞ்சம் கொறையுதே தவிர அடங்கல. ''எம்பிள்ளைக்கு ஒண்ணும் ஆகிராதே...?'' பெத்த வகுறு நடுங்குது கருவாச்சிக்கு.

பிள்ளைக்கு ஒண்ணும் ஆகல; அவளுக்குத்தான் ஒண்ணு ஆகிப்போச்சு.

காய்ச்ச வந்த பிள்ள தாய்மார்புல வாய்வைக்காதில்லையா... ரெண்டு நாளாப் பிள்ள குடிக்காததுனால கட்டிப்போச்சு மார்பு கருவாச்சிக்கு. நெஞ்சு நெறபெருக்கா இருப்பதனால விண்ணு விண்ணுன்னு தெறிக்குது விட்டு விட்டு.

பொதுவாப் பேறுகாலம் ஆன பொம்பளைகளுக்கு ரெண்டு வலி வரும். வகுத்துல சுண்டு வலி; மாருல நெஞ்சு வலி.

சுண்டுவலி வரல கருவாச்சிக்கு; நெஞ்சுவலி வந்திருச்சு இப்ப. சொல்லிவிட்டதும் கையில இருந்த கஞ்சித் தட்டத் தரையில வச்சுட்டுக் கூடவே ஓடிவந்துட்டா மருத்துவச்சி சீலையம்மா. எத்தன மார்புக்கு எடுத்துவிட்டவ? இது அவளுக்கு லேசு.

''அஞ்சாத; பயப்படாத; செத்தவெடத்துல சொடக்கெடுத்த வெரலுமாதிரி சொகப்படுத்திடறேன் தாயி''.

பாதி கிழிஞ்ச பழைய சீலய எடுத்தா. எளம் வெந்நியில நனைச்சா. முறுக்கிப் புழிஞ்சா. கருவாச்சிய மண்டிபோட்டு ஒக்காரவச்சா. கனத்தமார்பு ரெண்டையும் துணிக்குள்ள அள்ளிப் போட்டுக்கட்டிப் பின்பக்கம் முதுகுல ஒருசுத்துச் சுத்தி முடிச்சுப் போட்டா. மார்பு தரைபாக்கக் குனின்னா; குனிஞ்சா. இப்ப மொழங்கால அவ முதுகுல அழுத்தி இறுக்குறா சீலய. ஈரத்துணி வழியா சாரை சாரையா ஒழுகுதய்யா பாலு.

தாய்ப்பாலே சுத்தம்; இது வடிகட்ன தாய்ப்பாலு.

மருத்துவச்சி கசக்காமக் கசக்குறா. அழுத்தாம அழுத்துறா. காம்பு வழியா வீசம்படி பால் வெளியேறுது. பாலுக்குப் பின்னாலயே வாரேன் வாரேன்னு வலியும் வெளியேறுது.

padippakam

''இப்ப எப்பிடி இருக்கு தாயி?''

''வகுத்துலயிருந்து ஒரு பிள்ளைய எறக்கிவச்சமாதிரி இப்ப நெஞ்சிலருந்து ஒரு பிள்ளைய எறக்கிவைக்கிற மாதிரியிருக்கு''.

ரெண்டுபேரும் முதுகக்காட்டிக்கிட்டு சுவத்துப்பக்கம் நின்னு வைத்தியம்பாத்து முடிச்சாக... திரும்பிப்பாத்தா -

பிள்ளையப் போட்டுவச்ச பாய் கெடக்கு;

பாயில போட்டுவச்ச பிள்ளையக் காணோம்.



படிப்பகம்



# 18

கருவாச்சிக்குத் தெரியாமப் பிள்ளையத் தூக்கிட்டுப்போன சுப்பஞ்செட்டியாரு நேர வந்து நின்னாரு சடையத்தேவர் வீட்டு வாசல்ல.

''யப்பா! சடையத் தேவா! பெரியமனுசா! எங்கையில இருக்கறது யாருன்னு கண்ணக்கொண்டு பாரப்பா. ஒன் வம்ச வாரிசு வந்திருக்கப்பா; ஒங் குலக் கொழுந்து. ஒன்னியவே உரிச்சு வச்சிருக்கான் பாரு களவாணிப்பய. ஒங்கிட்ட சொத்துக் கேட்டு வரலப்பா; முத்தங்கேட்டு வந்திருக்கான். ஏலே பயலே! முழிச்சு பார்ரா ஒன் தாத்தன... உரிமை இல்லேன்னு போயிருமா? எங்க... ஒரு எத்து எத்தி எச்சியத் துப்பு கெழவன் மேல. வம்பு புடிச்சவன்டா ஒன் தாத்தன்; அவன் வைராக்கியத்துல எட்டி ஒரு மிதி மிதி!''

''ஆடுறா ராமா ஆடுறா''ன்னு குரங்கக் குட்டிக்கரணம் போட வைப்பானா இல்லையா குரங்காட்டி- அந்த மாதிரி... கையில பிள்ளைய வச்சுக்கிட்டே சகல வித்தையும் பண்ணிப் பாக்குறாரு சுப்பஞ்செட்டியாரு; சாயல சடையத் தேவரு.

padippakam

மேனகை பிள்ளையத் தூக்கிட்டு வந்து காமிக்க, விசுவாமித்திரர் வச்சிருந்தாரு பாருங்க ஒரு மூஞ்சி... அந்த மூஞ்சிய இன்னைக்கு மட்டும் குடுங்கன்னு இரவல் வாங்கி மாட்டிக்கிட்டு, கடைவாய்ப் பல்லுல சிக்குன கறிய வெளக்கமாத்துக்குச்சி ஒடிச்சுப் பல்லுக் குத்திக்கிட்டே பெறாக்குப் பாத்துக்கிட்டிருக்காரு சடையத்தேவரு .

''பேரு வையப்பா பேரனுக்கு'' கடைசியா ஒரு அம்ப விட்டுப்பாத்தாரு சுப்பஞ்செட்டியாரு.

பார்வை பிள்ளபக்கம் விழுந்திருமோன்னு வலிய முயற்சி பண்ணி மூஞ்சிய முதுகுப் பக்கம் வச்சுக்கிட்டு இன்னிக்கி மழைகிழ வருமான்னு அண்ணாந்து ஆகாயம் பாத்துக்கிட்டே சாவகாசமாச் சொல்றாரு சடையத் தேவரு: ''நாயி பேயி பன்னிக்கெல்லாம் நான் பேரு வைக்கிறதில்லப்பா!''

சுண்டிச் சூம்பிக் கறுத்துப் போச்சு சுப்பஞ்செட்டியாரு மூஞ்சி. சீ! இந்தாள மனுசக் கணக்குல சேக்க முடியாதுன்னு நெனச்சுக்கிட்டாரு மனசுக்குள்ள.

''பிள்ளையக் காட்டிக் கருவாச்சிக்கு நல்லது பண்ணிப்புடலாம்ன்னு நெனச்ச நெனப்புல மண்ணடிச்சுட்டானே மனுசன். சாகப்போற கெழட்டு மாட்டுக்கே இம்புட்டு வீம்பு இருந்தா சல்லிக்கட்டுக் காள ஒனக்கு எம்புட்டு வீம்பு இருக்கும்? ஒருநாளைக்கு ஒன்னியத்தேடி வருவான்டா கெழவன். அன்னிக்கு ஒண்ணுக்கடி ஒந் தாத்தன் மடியில''

பிள்ளையத் தூக்கிக்கிட்டு விறுவிறுவிறுன்னு வெளியேறிட்டாரு சுப்பஞ் செட்டியாரு.

சுப்பஞ்செட்டியார் பிள்ளையத் தூக்கி நடக்க, முதுகுல வச்சிருந்த மூஞ்சியத் திருப்பி, பேரன் மூஞ்சியில தன்சாடை தெரியுதா பாத்திரலாம்ன்னு சடையத்தேவர் நெனைக்க, சுப்பஞ்செட்டியார் முதுகுதான் தெரியுது; பிள்ள மூஞ்சி தெரியல; போய்ட்டாரு மனுசன்.

அதுக்குள்ள பிள்ளையக் காணோமேன்னு கதறி, நெஞ்சு வெந்து, அடிவகுத்துக் குடலு அந்து வந்துக்கிட்டிருக்காக கருவாச்சியும் வைத்தியச்சியும்.

''உசுரு போயி உசுரு வந்துருச்சு எங்களுக்கு. காய்ச்ச அடிக்கிற பிள்ளய எங்க தூக்கிட்டுப் போயிட்டீக எங்களக் கேக்காம?''

''வேறொண்ணுமில்ல ஆத்தா... ★தப்பையை வச்சுக் கட்டி நாய்வால நிமித்தலாம்ன்னு நெனச்சேன். தப்பையே வளஞ்சுபோச்சு; வந்துட்டேன்''.




''என்ன சொல்றீக?''

''ஒடஞ்சு போன குடும்பத்த இந்தப் பச்சமண்ண வச்சு ஒட்ட வைக்கலாம்ன்னு பாத்தேன்; நடக்கல. பேரு வைக்கக் கூட யோக்யதை இல்ல. பெரிய மனுசனாம்; பெரிய மனுசன்''.

''மதியாத வாசப்படி மிதிக்க வச்சுட்டீகளே எம் பிள்ளைய. பெத்துத் தரையில விழுந்தன்னைக்கே பேரும் வச்சிட்டனே எம் பிள்ளைக்கு''.

★ பட்டை

படிப்பகம்

padippakam

''என்ன பேரு தாயி?''

''அழகுசிங்கம்''.

''போடு; அப்படிப் போடு. அடிச்சுக் கௌப்புடா தங்கம் அழகுசிங்கம்''.

பிள்ளையத் தலைக்கு மேல தூக்கி ரெண்டுசுத்துச் சுத்தி ஆனந்தக் கூத்தாடி மகிந்து மலந்துபோனாரு சுப்பஞ்செட்டியாரு. அவரு போட்டுவிட்ட தங்கச் சங்கிலிய வாயில கவ்விச் சப்பிச் சப்புக் கொட்டுது சவலப்பிள்ள. அந்தத் தங்கச் சங்கிலிதான் அவர் பொழச்ச பொழப்பையே பொரட்டிப் போடப் போகுதுன்னு அப்பத் தெரியாது பாவம் அவருக்கு.

''யப்பா! அக்கா வந்திருக்கா ஊருலயிருந்து''

உச்சியிலிருந்த பிள்ளைய உச்சுனாப்புல எறக்கிக் கருவாச்சி கையில குடுத்துட்டுத் தகவல் சொல்ல வந்த எளையமகளப் பாத்துக் கேக்குறாரு சுப்பஞ்செட்டியாரு ''தனியா வந்திருக்காளா? தொணையா வந்திருக்காளா?''

''தனியாத்தான் வந்திருக்கா''.

சொன்னது சொல்லு இல்ல; காதுல தச்ச முள்ளு.

'மூத்தமக என்னா வேசங்கட்டி வந்திருக்காளோ' நெஞ்சப் புடிச்சுக்கிட்டே கெழட்டு நடை நடந்துபோறாரு சுப்பஞ்செட்டியாரு.

●

ஏறு வெயிலு. முள்முருங்கை மரத்து நெழல்ல பள்ளம் பறிச்சுப் படுத்திருக்கு கோழி. நல்லவகளப் பாத்தாலும், கெட்டவகளப் பாத்தாலும் 'உர்ரு'ன்னு ஒரே மாதிரி உறுமிட்டுத் திரும்பவும் கண்ணமூடி அனத்திக்கிட்டே படுத்துக் கெடக்கு சொகமில்லாத ஒரு சொறி நாயி.

காத்து இல்லாத சித்திரை மாத்தையில மேலயும் கீழயும் ஆடி அடங்குது காக்கா உக்காந்துபோன வேப்பங்கொப்பு.

பூனக்குட்டி ஒண்ணு உக்காந்திருக்கு ★வளவிப் பொதியப் பொத்திவச்ச கம்பளி மேல.

வீட்டுக்குள்ள நொழையிறாக தகப்பனும் மகளும்.

''மகளே கனகம்! என்னாத்தா இது? மூஞ்சி வீங்கிப் போயி வந்திருக்கவ?''

''அது ஒண்ணும் வேற வீக்கமில்லப்பா... 'பொன்'னுக்கு வீங்கி''. -தேங்காய்க்கு ஒரு கல்லெறிய மாங்காய் விழுகிற மாதிரி, மூத்தவளக் கேள்வி கேட்டா எளையவ பட்டுன்னு பட்டாசு வெடிக்குறா.

புளிச்சதண்ணிப் பானையில ஊறிக் கெடக்கற சோளக்கஞ்சிக்கு மறுமாத்தமா-பச்சமொளகா வெங்காயம் வதக்கி உப்புக் கருவாடு வறுக்க அடுப்புப் பத்தவைக்க ஆரம்பிச்சுட்டா பவளம்.

''ஒத்தையா வந்திருக்கியேம்மா''.

''ஒத்தையில வந்ததுனாலதான் ஒத்தஉருண்ட சோளச்சோற வச்சு ஒப்பேறுது பொழப்பு. அக்காவோட மாமனும் சேந்து வந்திருந்தா நித்தம் எங்கபோறது நெல்லுச் சோத்துக்கு?''

---

★ வளையல்







படிப்பகம்

padippakam

அடுப்பு இன்னும் பத்தல; அவளாப் பத்தி எரியிறா பவளம்.

எந்தக் கேள்வி கேட்டாலும் ரெண்டே பதில்தான் வச்சிருக்கா கனகாம்பரம். ஒண்ணு கண்ணீரு இன்னொண்ணு - விசும்பல்.

தெரியும் - தெரியாதுங்கிற ரெண்டே வார்த்தையில எல்லாக் கேள்விக்கும் பதில் சொல்ல முடியுமா இல்லையா, அப்படி.

மகள உத்துப் பாத்ததுல பகீர்ன்னு பதறிப் போனாரு சுப்பஞ் செட்டியாரு.

''இதென்னம்மா இது புருவத்துல காயம்?'' -இந்தக் கேள்விக்கும் அடுப்புப் புகைக்குள்ளயிருந்து அசரீரி மாதிரி வருது பதிலு.

''கழுத்துல கெடந்த சங்கிலியையும் புடுங்கிட்டுப் போயிட் டான்; வைரமோதிரம் போடச் சொன்னா ஒங்கப்பன் வளவி போட்டு விட்ருவான் போலிருக்கேன்னு நாழிய எடுத்து எறிஞ்சாப் புருவம் கிழியாம என்ன பண்ணும்? அந்தாளுக்குப் புத்தி கலங்கிப்போச்சு; இவளுக்குப் புருவம் கலங்கிப்போச்சு''.

கிட்ட வந்தாரு சுப்பஞ்செட்டியாரு. மக புருவத்த ஒத்த வெரல்ல பட்டும் படாமத் தொட்டுத் தடவுனாரு. அவ தலையில கைவச்சு ஆதரவா ஒரு செல்ல அழுத்து அழுத்திச் சொல்றாரு:

''ஏஞ் செல்லங்களா, ஒங்க ஆத்தா ஒங்கள வகுத்துல சொமந்து பெத்துப்போட்டுட்டுப் போயிட்டா. நான் தோள்ல வளவி சொமந்து ஒங்கள வளத்தெடுத்தனம்மா. அப்பன் வச்சுக்கிட்டு வஞ்சகம் பண்ணுவேனா? முந்திமாதிரி செமக்க முடியல. ஊருஊரா அலைய முடியல. அதான் நான் கும்புடுற சாமிமேல குட்டிப் பூன உக்காந்திருக்கு''.

''சீ போ கழுத அங்கிட்டு''ன்னு பூனக்குட்டிய வெரட்டுனவரு ரெண்டு கையையும்அடியில கோத்து ஏந்தி வளவிப்பொதியத் தூக்குனாரு.

க்ளங்... க்ளுங்... களுங்... கிணுங்...

அந்தச் சங்கீதச் சத்தம் வெரட்டோ வெரட்டுன்னு வெரட்டி அடிச்சிருச்சு அங்கிருந்த வெறுமைய; ஒரு நாதம் கசிஞ்சு வழிஞ்சு நனச்செடுக்குது வீட்ட.

தலையில ஒட்டி இறுக்கி உருமாக்கட்டி, வளைவிக சொருகி வச்ச ஜம்பைத் திண்டுகள அடுக்கிவச்ச பைகளத் தோள்ல போட்டு, அதுக்கு மேல பக்கத்துக்குப் பத்துத்தோடா மேனிக்கு எடப்பக்கத் துலயும் வலப்பக்கத் துலயும் நூல்கயித்துல கோத்துவச்ச இருவது தோடா வளையலச் சொமந்துக் கிட்டு அதுக்குமேல கம்பளியும் போட்டுப் பொத்திப் பெருஞ்செருப்பெடுத்து மாட்டி ஒரு கறுப்புக் கொடைய நீட்டிச் சுப்பஞ்செட்டியார் நடந்து போனா ஆம்பளைகளே ஆசைப்படணும் அவர்கிட்ட வந்து வளவி போட.

எந்த ஊருக்குள்ள போனாலும் அந்த ஊர ஒரு சுத்துச் சுத்தி வந்து ''வளையல்... வளையல்''ன்னு ஒரு சத்தம் விடுவாரு. ஆயிரம் வளைவிக ஒண்ணுகூடி மொத்தமாச் சத்தமாச் சொல்றமாதிரி இருக்கும் அவர் வளையல்ன்னு ஆசையோடு விடுற ஓசை. ''வந்திருக்கேன் வளவிக்கார''ன்னு அறிவிச்சிட்டு ஊரு மந்தையிலயோ கோவில்லயோ கம்பளி விரிச்சுக் கடை போட்ருவாரு.



படிப்பகம்

'கல கல கல'ன்னு வளவி பேசுறது பாதி; 'சல சல சல'ன்னு அவர் வாய்பேசுறது பாதி. வளவிச் சத்தத்துல நீட்டிருவாக பொம்பளைக கைய; வாய்த் தாட்டியத்துலயே இவரு மாட்டிருவாரு வளவிய.

நூல்கயித்துல கோத்திருக்கிற இருபதுதோடா வளையலயும் ரெண்டு திருகுத் திருகி ஒரு முறுக்கு முறுக்கி எறக்கிவப்பாரு பாருங்க... ராசா வீட்டுப் பிள்ளைய வேலக்காரன் தரையில எறக்கி விடுறமாதிரி அம்புட்டுப் பக்குவமா எறக்கிவப்பாரு. அவரு ஆயுசில ஒத்த வளவி ஒடஞ்சதில்ல.

கடைவிரிச்சு ஊரக்கூட்டி வர்ணிப்பாரு பாருங்க வளவிய; சும்மா கெறக்கம் வந்திரும் கெழவிகளுக்கும்.

''யம்மா! நீங்க வானவில்லப் பாத்திருப்பீக. அது ஏழு நெறம் .அதுக்கு மேக் கொண்டதம்மா என் வளவி; இது ஒம்போது நெறம். இந்தா அடுக்கி வச்சிருக்கேன்; எண்ணிப் பாத்துக்குங்க''.

பச்சை - செவப்பு - ஆரஞ்சு - மஞ்சள் - காப்பி - நீலம் - செந்தூரம் - வெள்ள - ஊதா சும்மா கண்ணப்பறிச்சு மின்னும் கண்ணாடி வளையல். என்னிய எடுத்துக்கிர்ரியா... என்னிய எடுத்துக் கிர்ரியா...ன்னு எல்லா நெறமும் கூப்பிடும்.

எந்தப் பொம்பள கண்ணு எந்த நெறத்துல நெலகுத்தி நிக்கிதோ அந்த வளையல எடுத்து, ''சும்மா போட்டுப்பாரு தாயி!''ன்னு மாட்டிவிடுவாரு.

ஒரு பொம்பள கைபெறந்த ராசியப் பாத்தவுடனயே அது என்னா அளவுன்னு அவரு கண்ணு சொல்லிப்படும். வளவிக்கு நெறம் ஒம்போதுங்கிற மாதிரியே வளவி போடுற பொம்பளைக கை அளவும் ஊர்தேசம் பூரா சுத்துனாலும் ஒம்போதுக்குள்ளதான் அடங்குது.

அரையரைக்கா - முக்கா - முக்காலேயரைக்கா - ஒண்ணே காலரைக்கா - ஒண்ணரை - ரெண்டு - ரெண்டேயரைக்கா - ரெண்டேகால் - ரெண்டேகாலரைக்கா - இதுதான் பொதுவா பொம்பளைக கைகளுக்குன்னு ஒலகத்துல உண்டான அளவு.

'என்னமோ தொட்டிலை ஆட்டுற கையி தொல்லுலகை ஆள்ற கையி'ன்னு பாட்டுக்கட்டிப் பாடுறாகளே... ஒலகத்துல எந்தக் கையா இருந்தாலும் இந்த ஒம்போதுக்குள்ள அடக்கம். சிலதுக யானைக் காலக் கையின்னு வச்சுப் பொறந்திருக்கும்; அதுகள்லாம் கணக்குல சேராது. சுப்பஞ்செட்டியாரு ஒரு பொம்பளைக்கு வளவி மாட்டிவிட்டாருன்னா அந்தப் பொம்பள வேற ஊருக்கு வாக்கப்பட்டுப் போனாலும் சுப்பஞ்செட்டியார் அந்த ஊருக்கு வார வரைக்கும் வேற யாருகிட்டயும் வளவி போடமாட்டா.

வளவி போட வார எல்லாப் பொம்பளையையும் மக மாதிரிதான் பாப்பாரு மகராசன்.அவர் வளவிபோடுற சோங்கும் பாங்கும் வேற யாருக்கும் சொல்லிக் குடுத்தெல்லாம் வராது.

வளவி போடுற பிள்ள கைய நீட்னவுடன அத வாங்கி வசதிபண்ணி லேசா ஒரு சொடக்கெடுத்து விடுவாரு. கொஞ்சம் மோட்டுக் கையி முரட்டுக்கையா இருந்தா எடதுகையில ஏந்தி வலதுகையால மணிக்கட்ட ஒரு எளம் நசுக்கு நசுக்கி விடுவாரு. அவருக்குத் தெரியும் எந்தமேடு வளவிய வழி மறிக்கும்ன்னு. மெல்லுசா சல்லுசா அந்த மேடு கோடு தட்டி விடுவாரு.

padippakam

வளவி என்னதான் எடக்குப் பண்ணாலும் எக்காரணத்தக் கொண்டும் எண்ணபோட்டுத் தள்ளுறதில்ல; தொழிலுக்கு அது இழுக்காம். ''நான் வளவிக்காரச் செட்டியாருதான் தாயி; எண்ணக்காரச் செட்டியார் இல்லே''ம்பாரு சிரிச்சுக்கிட்டே.

வலதுகையில பதிமூணு; எடதுகையில பன்னெண்டு. மொத்த வளவியக் கூட்டனா ஓத்தப்படையில வரணும். இதான் ஊர் நாட்ல உண்டானது.

ஒண்ணேமுக்கால் ரூவாய்க்கு வித்தா, கால்ரூவா லாபங்கிறது கணக்கு.

இதுல சிலபேர் குடுப்பாக. சிலபேர் நவதான்யம் வாங்கிட்டுப் போறீகளாம்பாக. சிலபேர் நடையா நடக்க விடுவாக. வளவி விக்கப்போன எடத்துல குள்ளப்பக்கவுண்டன்பட்டியில ஒரு கூத்தாகிப் போச்சு.

வழியில போயிக்கிட்டிருந்த வளவிக்காரரை வான்னு கூப்பிட்டான் வெள்ளையுஞ் சொள்ளையுமா இருந்த ஒரு எளந்தாரி. அவனப் பாத்தாச் சிரிப்பா இருந்துச்சு, உள்ள போட்டிருக்கிற முண்டா பனியன் வெள்ளையா வெளிய தெரியிற மாதிரி மெல்லுசா ஒரு சட்ட. உள் கால்சட்டப் பட்டைக பளீர்னு வெளிய தெரியற மாதிரி ஒரு மல்லுவேட்டி. பாவம் வேட்டிக்கும் சட்டைக்கும் வீணாச் செலவழிச்ச பய.

''எஞ் சொந்தபந்தம் எல்லாத்துக்கும் வளவி போடு''ன்னான்.

சும்மா ரேசனுக்கு அரிசி வாங்குறமாதிரி வரிசையா வந்து நின்னுட்டாக பொம்பளைக.

''இன்னைக்கி நரி முகத்துல முழிச்சமடா சாமி''ன்னு வந்தவுக போனவுகளுக்கெல்லாம் வளவி போட்டு முடிக்க, ''நான் வெள்ளிக்கெழமை யாருக்கும் துட்டுத் தாரதில்ல; நாளைக்கு வந்து வாங்கிட்டுப் போ''ன்னுட்டான் அந்த ஆளு. சனிக்கெழமை போயிக் கேட்டா, அவன் ஊர்லயே இல்ல. மாமன் பெருமையை மச்சினிகளுக்குக் காமிக்கிறேன்னு காமிச்சுட்டு வளையல அங்க மாட்டி விட்டுட்டு இவரு காதுல பூமாட்டிவிட்டுட்டு ஓடியே போனான் புதுமாப்பள. சல்லிக் காசு கூட வரல; போனது போனதுதான்.

அப்படிக் காத்துலயும் வெயில்லயும் மழையிலயும் குளுர்லயும் ஊர் ஊரா அலைஞ்சு எச்சிய முழுங்கிக்கிட்டே எட்டணா ஒரு ரூவான்னு சேத்துவச்சு ஒருமகளக் கரைசேத்துட்டோம்ன்னு நெனச்சா, கரைசேந்தவ திருப்பத் தண்ணியில விழுந்து கெடக்கா. இப்ப இருக்கிறவளக் கரை சேக்குறதா? வந்தவளக் கரை சேக்குறதா?

''கண்ணாடி வளவிக சத்தம்போடும்; ரப்பர் வளவிக சத்தம் போடாது. நான் பெத்த மகளுகளா நீங்க கண்ணாடி வளவிக. சத்தம் போடுறீக. அப்பன் ரப்பர் வளவி; என்னத்தப் பேசுவேன்? ஆனா ஒண்ணு. ஒங்க ரெண்டு பேரையும் கரை சேக்காம என் கட்டை வேகாது''

'தான் ஒண்ணு நெனச்சா தெய்வம் ஒண்ணு நெனைக்கும்''ன்னு சொல்லுவாக.ஆனா செத்துச் சீலப்பேனாகிப் போன சுப்பஞ் செட்டியார் கதையக் கேட்டா தெய்வம் ஏதொண்ணும் நெனைக்கலன்னு தான் சொல்லத் தோணும், ஏன்னா.. அப்படியெல்லாம் ஒரு கருமாயத்தக் கற்பனை பண்ணி நெனைக்க தெய்வத்துக்கே தெரியாது.



படிப்பகம்



# 19

"அடியே கருவாச்சி! எனக்கும் ஒனக்கும் சின்ன வயசிலிருந்தே வித்தியாசம்டி. நீ கறுப்பு; நான் செவப்பு. நீமாடுமேய்க்கப் போன; நான் பள்ளிக்கூடம் போனேன். ஒனக்குத் தாய் இருந்திச்சு; தகப்பன் இல்ல. எனக்குத் தகப்பன் இருக்கத் தாயில்ல. எனக்கு வெளியூர்ல கல்யாணம்; ஒனக்கு உள்ளூர்ல கல்யாணம். ஒனக்குப் பிள்ளை இருக்கு; புருசன் இல்ல. எனக்குப் புருசன் இருக்கப் பிள்ளை இல்ல''.

கருவாச்சி மகன் அழகுசிங்கத்த வாங்கி மடியில போட்டுக்கிட்டு சோகத்த மறந்து கெக்கக்- கெக்கக் கெக்கேன்னு சிரிக்கிறா கனகம்.

துன்பம்ங்கிறது விருந்தாடி மாதிரிதான்; எப்பவாச்சும் வந்தாத்தான் மரியாதை. நித்தம் நித்தம் துன்பம் வந்தா மனசு மரத்துப் போகுதா இல்லையா? அப்படி மரத்து மறந்து போனாக பொம்பளைக ரெண்டுபேரும்.

padippakam

''யம்மா கனகாம்பரம்! வீட்டுக்குப் போ தாயி; ஒரு விசேசம் வந்திருக்கு'' போறபோக்குல சொல்லிட்டுப் போனாரு அம்மைய நாயக்கரு. என்னமோ ஏதோன்னு லொங்கு லொங்கு லொங்குன்னு ஓடுறா கனகாம்பரம் ஓடம்பத் தூக்கிக்கிட்டு. வீட்டுக்கு வந்து பாத்தவ நெலப்படிய ஒரு கையிலயும் நெஞ்ச ஒரு கையிலயும் புடிச்சு நின்னே போனா.

பவளத்துக்குச் சொக்குப்பொடி போட்டு சோங்கு பண்ணிக் கிட்டிருக்கான் கனகம் புருசன் முத்துக்காமு.

''ஏ பவளம்... இங்க வா பிள்ள வா. ஒன்னிய நான் கடிச்சா தின்னுபிடப் போறேன்? என்னமோ சொல்றாகளே ஊரெல்லாம். நீ பேன் பாக்குறதுல பெருங்கொண்ட கையின்னு. ஒங்க அக்கா கூடப் படுத்துப் படுத்து எந் தலையில ஏறிக்கெடக்கு ஏகப்பட்ட பேனு. வா கண்ணு வா; மண்ட காயுதுடி மாமனுக்கு. வந்து பேன் பாரு வா''.

மச்சினிச்சிக்காக வெல்லப்பாகு மாதிரி எளகி ஓடுன மூஞ்சி, பொண்டாட்டியப் பாத்ததும் கருப்பட்டி மாதிரி இறுகிப் போச்சு.

''ஏண்டி புருசன் வீட்லயிருந்து ஓடிவந்தவ அப்பன் வீட்லயும் தங்குறதில்லையா? எங்கடி போயிட்டு வாரவ?''

நியாயப்படி கேள்விகேக்க பாத்தியப் பட்டவளும் பாதிக்கப் பட்டவளும் அவதான். ஆனா, அவ கேள்வி கேக்குறதுக்கு ஒரு சந்துவிடாம முந்திக்கிட்டு மூஞ்சியில எள்ளு வெடிக்கிறான் முத்துக்காமு.

நிலைப்படி கொள்ளாம நிக்கிறவளத் திரும்பவும் ஒரு அமட்டு அமட்டுறான்: ''சொல்லுடி எங்கடி போயிருந்த?''

உடம்பு அலுங்காம உதடு மட்டும் அசைய அவ சொல்றா: ''மாப்ள பாக்க''.

''பாப்படி பாப்ப. ரெண்டு கையிலயும் வளவிபோடுறவன் மகதான? கைக்கொரு புருசன் கேப்ப''.

கையிலஇருந்த மோர்ச் செம்ப எடுத்து எறியப்போனவன ஓடிவந்து தடுத்து உள்ள விழுந்த பவளம் மோர்ச் செம்பப் புடுங்கித் துண்டாத் தூர எறிஞ்சிட்டுச் சொல்றா:

''அவ ஒரு வெனயம் கெட்ட சிறுக்கி; நீ ஒரு வெவரங்கெட்ட மாமன். கருவாச்சி மகனப் பாக்கப் போனாளா... அவனத்தான் மாப்ளைங்கிறா. அவள நாத்துனா ஒறவு சொல்லித்தான் நாங்க வளந்திருக்கோம். ஆமா... எடுத்ததுக்கெல்லாம் கைநீட்றது என்ன பழக்கம் மாமா?''

மச்சினிச்சி தொட்டதுல சன்னஞ் சன்னமா சாமி எறங்கிப் போனான் முத்துக்காமு.

●

முத்துக்காமு ஒரு சவங்கப்பய. அவன் இழுத்த இழுவைக்குத் தான் ஊருலகம் வந்து சேரணும்ன்னு நெனைப்பானே தவிர ஊருலகம் இழுக்கிற இழுவைக்கு அவன் போக மாட்டான்.




படிப்பகம்

padippakam

நித்தம் காசு சம்பாதிக்கணும்; நித்தம் கறி திங்கணும். இந்த ரெண்டையும் தவிர, பெறவிக்கு அர்த்தம் பெருசா என்ன இருக்குன்னு நெனைக்கிறவன் முத்துக்காமு.

ஆள் செத்த வீட்ல ★கவிச்சி பொழங்கக் கூடாதுங்கிறது ஐதீகம். அப்பிடிச் சொந்தபந்தத்துல ஆள் செத்துப் போனா, பொணம் தூக்குறவரைக்கும் பொறுமையா இருப்பான். பொணம் தூக்குனதும் கால்ல தண்ணி ஊத்திக்கிட்டே ஈரங்காயுமுன்ன கறிக்கடைக்குப் போயிருவான். வீடு, வாச, சொந்தம், பந்தம், பொண்டாட்டி, பொட்டிக்கடை, ஊரு, உலகம் எல்லாம் காசு பண்ணவும் கறி திங்கவும் கடவுள் அவனுக்குச் செஞ்சுகுடுத்த ஏற்பாடுங்கறது அவன் தீர்மானமான முடிவு. அன்னிக்கி ஒண்ணும் வழியில்லையா, உப்புக் கருவாடாச்சும் சுட்டு வைக்கலேன்னா பொண்டாட்டிய அடிக்கிற அடியில வீடு வீங்கிப்போகும்.

சில பேருக்கு மூக்குல மச்சமிருக்கிற மாதிரி இவன் மூக்குல கோவம் எப்பவும் ஒட்டிக்கிட்டேயிருக்கும். ரெண்டு கொணம், ரெண்டு பேச்சு இருக்கு அவன்கிட்ட. இவனுக்குக் காசு தரவேண்டிய ஆளுககிட்ட வழுவழுன்னு பேசுவான்.இவன் காசு குடுக்க வேண்டிய ஆளுககிட்டக் கடுகடுன்னு பேசுவான். கொடுக்கும் - காம்பும் ஒரே எடத்துல இருக்கிற பிராணிய நீங்க பாத்திருக்கீகளா? அவன்தான் அது. கொடுக்கு எப்பக் கொட்டும்; காம்பு எப்பச் சொட்டும்...? அதுக் கெல்லாம் காலதேச வர்த்தமானத்துல கணக்கெல்லாம் ஒண்ணும் கெடையாது.

அப்பன் அவன்கிட்ட ஒப்படைச்சிட்டுச் செத்தது அவன் ஆத்தாளையும் ஒரு பொட்டிக் கடையையும். ஆத்தாள செலவு கணக்குல சேத்துட்டான்; பொட்டிக் கடையை வரவு வச்சுக்கிட்டான்.

அவன் அப்பன் ஒரு சத்தியவந்தன். ''பொருளு வித்துப் பொழைக்கலாம்; புத்திய வித்துப் பொழைக்கலாம். நேர்மைய வித்துப் பொழைக்கக் கூடாதுடா மகனே''ன்னு சொல்லிட்டுச் செத்தாரு. அவரு பொணத்தோட சேத்து அவர் புத்திமதியையும் புதைச்சிட்டான் முத்துக்காமு.

போதுமடா அப்பன் பொழைச்ச பொழப்புன்னு பொட்டிக் கடையில களவாணிப் பொருள் வாங்கி விக்க ஆரம்பிச்சான். கெழங்கு,வாழத்தாரு, முட்டை, நெலக்கடலையெல்லாம் கள வாண்டு வர்ற ஆளுகளுக்குப் பத்துக்கு ஒரு வெல குடுத்தாப் போதும்; குடுத்தத வாங்கிக்கிட்டுக் கும்பிட்டுப் போயிருவாக. அதுல அடிப்பானய்யா முத்துக்காமு லாபம். ஒண்ணுக்கு அஞ்சா வெலசொல்லி, ஒண்ணுக்கு மூணா வித்திருவான். அப்பிடிச் சம்பாரிச்சுக் கல்லாவும் ஆளும் கனத்துப் போனான்; அதுலதான் வந்து சேந்துச்சு ஒரு ஆபத்து.

அவுக ஆத்தா செத்து ஆறுமாசமிருக்கும். விடிய்ய... கடை தெறக்க ஒரு அம்பது திருட்டுத் தேங்காயத் தலைச் சொமையாச் சொமந்து கடையில கொண்டுவந்து எறக்கிட்டான் பொத்தக்காதன்; திருட்டு ஆளாயிருந்தாலும் மொரட்டு ஆளு. ஒரு தேங்காய்க்கு ஒரணா மேனிக்கு வாங்கிட்டு, ''போயிட்டு வாரனப்பா''ன்னு போயிட்டான். போனவன் மறுநாள் திரும்பி வந்து,

---

★அசைவம்





படிப்பகம்

''காளியம்மன் கோயிலுக்குச் செதறுதேங்கா போடணுமப்பா... ரெண்டு தேங்கா குடு''ன்னு கேட்டிருக்கான். ''ஆறணா எடுத்து வையி. ஒரு தேங்கா மூணு அணா''ன்னான் முத்துக்காமு. ''இதென்னப்பா கூத்தாயிருக்கு. ஒனக்கு ஒரணாவுக்கு நான் வித்த காயை எனக்கே மூணுஅணாவுக்கு விக்கிறியே இது நியாயமா?''ன்னு பொத்தக்காதன் கேக்க, ''ஊரான் பொருளுக்கு நான் ஒரணாக் குடுத்தனே... என் பொருளுக்கு நீ மூணு அணாக் குடுத்தா என்ன?''ன்னு முத்துக்காமு கேக்க, காசக் குடுத்துட்டுப் பேசாம வாங்கிட்டுப் போயிட்டான் பொத்தக்காதன்.

கோயில்ல போயி ஒடைச்சுப் பாத்தா - ரெண்டும் அழுகுன தேங்கா. கெட்ட கோவத்தோட புத்தி மாறி வாரான் பொத்தக்காதன்.

''ஏண்டா... ஆறணா வாங்குனதுமில்லாம அழுகுன தேங்காயா குடுத்துவிட்ட? மாத்துத் தேங்கா குடுக்கல... மரியாதை கெட்டுப்போகும்''.

''அதெல்லாம் குடுக்க முடியாது. ஒன் நேரம் நல்லாயில்லைன்னா நான் என்னா பண்ணுவேன்''.

''என்நேரமா நல்லால்ல... ஒன் நேரந்தான் நல்லா இல்லடீ''.

சும்மா தேங்காக் கடையில யான புகுந்தமாதிரி அடிச்சு ஒடச்சு மிதிச்சு அப்பளம் பண்ணிப் பொருள்கள எடுத்து வீதியில எறிஞ்சு பொட்டிக் கடையை இழுத்துத் தரையிலபோட்டு சாச்சுத் தேச்சு வீட்டுக்குள்ள புகுந்து அதுவரைக்கும் அவன் சன்னஞ் சன்னமாச் சேத்துவச்சிருந்த சம்பாத்தியத்தையும் எடுத்துக்கிட்டு, போடி மெட்டுமேல ஏறி மூணாறுல ஓடி ஒளிஞ்சுபோனான் பொத்தக்காதன்.

சோளம் அடிச்ச களம் மாதிரி சிந்திச் செதறி நொறுங்கிக் கெடக்குற பலகையும் தகரமும் கூரையும் கொஞ்ச நேரத்துக்கு முன்னால எங்க பேரு பொட்டிக் கடைன்னு முழியா முழிக்குதுக. முத்துக்காமு பாவம்! மூக்குல இருந்த கோபத்தையும் காணோம்; மூக்கையும் காணோம்.

''விழுந்த கடையை நிமித்திக் குடுத்திருங்க; ஒரு வைரமோதிரம் போட்ருங்க; கண்கலங்காம வச்சுக்கிறேன் கனகாம்பரத்த''.

பொண்ணுவீடு பாக்க வந்தப்ப அவன் கேட்டது இந்த ரெண்டே ரெண்டுதான். நியாயமாத்தான் தெரியுதுன்னு சரி சொல்லிட்டாரு சுப்பஞ்செட்டியாரு.

''மாப்ள! குருவி மாதிரி சேத்த காசவச்சுப் போட்டுக் குடுத் திடறேன் பொட்டிக் கடையை. தங்கச்சங்கிலி ஒண்ணு எரவல் தாரேங்கிறா பெரியமூக்கி. பொண்ணு கழுத்துல போட்டு அனுப்புறேன்; வைரமோதிரம் குடுத்துட்டு வாங்கிக்கிறேன்''.

முடிஞ்சுபோச்சு கல்யாணம்; முடியல பிரச்சனை. நாலு வருசமா அவளுக்குப் பிள்ளையுமில்ல; வைரமோதிரமும் வரல.

ஒரே எடத்துல ஒக்காந்து ஒக்காந்து, முள்ளங்கி மாதிரி சிக்குன்னு இருந்த கனகம் ரெண்டே வருசத்துல சொரைக்காமாதிரி பெருத்துப்போனா. ஒடம்பு சொகம் கொறையக் கொறைய குத்தங்கொறைக பெருசாத் தெரியுமா இல்லையா...? புதுசாப் போட்ட பொட்டிக் கடையில ஏவாரமும் கம்மி.

ரெண்டு காதுலயும் பூரான் புகுந்தமாதிரி ''வைரமோதிரம் வைரமோதிரம்''ன்னு அவளக் குத்திக் கொடஞ்சுக்கிட்டேயிருக்கான்.

எங்கப்பன் வச்சுக்கிட்டு ஒண்ணும் வஞ்சகம் பண்ணலேன்னு இவளும் சொல்லிச் சொல்லிப்பாத்தா. கொடுக்கும் காம்பும் உள்ள பிராணின்னு அவனச் சொன்னமா இல்லையா... இப்பக் காம்பக் கழத்தி வச்சுட்டுக் கொடுக்குமட்டும் வச்சு அவளக் கொட்டிக் கிட்டேயிருக்கு அந்தப் பிராணி.

பழனிசெட்டிப்பட்டிக்கு அவ அப்பனும் வாரதில்ல; சொக்கத் தேவன்பட்டிக்கு இவளும் போறதில்ல. வைர மோதிரத்துக்கு என்னடா வழின்னு யோசிச்சுக் கணக்குப் போட்டுக் காய் நகத்துறான் பய.

அவ சோறு போட்டு வச்சுட்டு அந்தப்பக்கம் திரும்பி ரசத்துல கரண்டி போடுறதுக்குள்ள, ஒரு கை உப்பஅள்ளிக் குழம்புல போட்டுட்டு ''கைக்கிது கைக்கிது''ன்னு கத்திக் கெடுக்கிறான்.

அவன் பண்ணின இந்த மொதக் கூத்துலயே மூச்சுப் பேச்சில்லாமப் போனா அவ. அது தெளியுமுன்ன ரெண்டாவது கூத்த ஆரம்பிச்சுட்டான்.

ஆடு உரிக்க உரிக்கக் கடையிலயே கால்கடுக்க நின்னு கறியும் ஈரலுமா வாங்கிட்டு வந்தான். அரைவேக்காட்டுல கொழம்பு மொதல்கொதி கொதிக்க அகப்பைய விட்டு ஈரல மட்டும் எடுத்து வாயில போட்டுத் தின்டுபுட்டு ''ஈரலக் காணம்... ஈரலக் காணம்''ன்னு கத்திக் கெடுத்து ஊரக்கூட்டி அவளக் கிறுக்குப் புடிக்க வச்சுப்புட்டான்.

இத்தன எடக்குமடக்குப் பண்ணி எடஞ்சல் பண்ணியும் அழுகுறாளே தவிர அவ அசையிறா இல்ல. கடைசியா அவளச் சண்டபோட்டு வெளியேத்த சாமியத் தொணைக்கிழுத்துக்கிட்டான். பண்ணக் கூடாத ஒரு காரியம் பண்ணினான் பாவி.

வீட்டுக்குள்ள அவன் வேட்டி சட்டை போட்டு வைக்கிற கொடியில, அவ மூலையில சுருட்டிவச்சிருந்த முட்டுச்சீலையக் கலந்து தொங்கவிட்டுட்டான்.

''அய்யோ அநியாயமே! இந்த அசிங்கத்தப் பாத்தீகளா...? கட்டற வேட்டியோட சேத்து முட்டுச் சீலையக் கொண்டாந்து முட்ட விட்ருக்காளே முண்டச்சி மக. இப்படித் தீட்டுப்பட்ட வீட்ல தெய்வமிருக்குமா? தெய்வம் இல்லாத வீட்ல பிள்ள பெறக்குமா?''

அது இதச் சொல்லி அவள நொக்கு நொக்குன்னு நொக்கி நிம்மதியில்லாமப் பண்ணிப்புட்டான்.

நாலு வருசம் வாழ்ந்ததுக்குள்ளயே நடுமுதுகுல ஏறிமிதிக்கிறான்... இவன் கூடக் காலமெல்லாம் எப்பிடிக் காலந்தள்றது? அவன் நெனச்ச மாதிரியே நான் போறேன் எங்க அப்பன் வீட்டுக்குன்னு புறப்பட்டுட்டா.

''போடீ போ. நான் இல்லாத நேரத்துல தங்கச் சங்கிலியையும் அவுத்திட்டுப் போயிட்டான் ஒங்கப்பன். வந்தா வைரமோதிரத்தோட வா; இல்ல வளவிக்காரன் வீட்லயே விழுந்து சா''.

அன்னைக்கி வந்தவதான் அவ; ஒருமாசம் கழிச்சு இன்னைக்குத்தான் வந்திருக்கான் இவன்.

padippakam

கறி கெடைக்கலேன்னா நாக்கக் கடிச்சுத் திங்கிற மாப்பிள்ளைக்கு எலும்பாச்சும் போடணும்ன்னு அம்மாபட்டிக் கறிக்கடையில கடன் சொல்லி ஆட்டுத் தலையும் எலும்புக்கறியும் வாங்கி ரத்தம்சொட்டச் சொட்ட மஞ்சப் பையில புடிச்சுட்டு வந்தாரு சுப்பஞ்செட்டியாரு.

தலைக்கறி வறுத்து, எலும்புக் கொழம்பு வச்சுக் குடுக்கவும், சட்டியிலருந்த மொத்தச் சோத்தையும் தட்டுல கவுத்து சோறு தெரியாமக் கொழம்புஊத்தி ஒருமுங்கு முங்குறான் முத்துக்காமு. அந்த வீட்ல இன்னம் ரெண்டு எள உசுரும் ஒருகெழட்டு உசுரும் கெடக்கேன்னு நெஞ்சுல ஒரு ஒரத்துலகூட நெனைக்காம எலும்புக்குள்ள இருக்கிற வெந்தரத்தம் வெளிய வரட்டுமேன்னு அத வாயில வச்சு உறியோ உறின்னு உறியிறான் ''உஸ்ஸு உஸ்ஸு''ன்னு. இருந்தாத்தானே... அது சுப்பஞ்செட்டியாருகிட்டயிருந்து வைர மோதிரம் மாதிரி வரவே மாட்டேங்குது.

ரெண்டுகன்னமும் உப்ப உப்ப சோத்த அள்ளி வாயில அடைச்சுக்கிட்டுக் கேக்குறான்: ''நல்ல சாப்பாடு சாப்பிட்டு நாளாச்சு. சொல்லுங்க மாமு... எப்ப அனுப்பப்போறீங்க எங்கூட எம் பொண்டாட்டிய?''

''வந்தா இப்பக் கூடக் கூட்டிட்டுப் போங்க மாப்ள''.

''அது கழுதை வந்திரும்; தரையில தவ்வுற மீனு தண்ணிக்கு வான்னா வராமலா போகும்? வர வேண்டியது வருதாங்கிறேன்''. சாப்பாட்டுக்குள்ள இருந்த எச்சிக் கைய வெளியில எடுத்து மோதிர வெரல மட்டும் ஒரு ஆட்டு ஆட்டுறான்.

''மாப்ள... ஒங்களுக்கு நான் கடன்பட்ருக்கேன்; இல்லேங்கல. வளவி ஏவாரம் படுத்திருச்சு; வளஞ்சும் போச்சு முதுகு. வாழ்ந்த பொண்ணு வாழாவெட்டியா இருக்கா. வளந்த பொண்ணு வீட்ல இருக்கா. நான் வைரமோதிரம் போடுவேனா? வளந்தவளக் கரைசேப்பனா?''

''ரெண்டும் ஒரே வேலையாப் போச்சுன்னா?''

''என்ன சொல்றீக மாப்ள?''

''எளையவளயும் கட்டிக்கிட்டு மூத்தவளயும் கூட்டிட்டுப் போயிடறேங்கிறேன். வைரமோதிரம் மட்டும் போட்டு விட்டுருங்க. மூத்தவளக் கரசேத்ததாவும் இருக்கும். எளையவ எனக்கொரு பிள்ளபெத்துக் குடுத்ததாவும் இருக்கும். என்ன நான் சொல்றது?''

மூணுபேருக்கும் நெஞ்சுக்கூட்டுச் சத்தம் நின்னு போச்சு; மூச்சுப் பேச்சும் நின்னுபோச்சு. கத்துற காக்கா - உறுமுற நாயி - ஒலக்கைச் சத்தம் - சகலமும் நின்னு போச்சு.

அவன் எலும்பு கடிக்கிற சத்தம் மட்டும் கேட்டுக் கிட்டேயிருக்கு.




படிப்பகம்



# 20

நகச்சுத்தி வந்தாலும் வீக்கம் வெரலுக்குத்தான...?

கனகாம்பரமும் பவளமும் நெஞ்சுக்கூடு ஒடஞ்சு வந்து அடைமழையா அழுகவும் கண்ணுமுழி கலங்கிப்போனா கருவாச்சி. ஒடைஞ்ச மனச ஒண்ணு சேத்துக்கிட்டு அக்கா தங்கச்சிக ரெண்டு பேருக்கும் நல்லவார்த்தையா நாலுவார்த்த சொல்றா:

''மூத்தவளுக்குப் பிள்ளையில்ல; இளையவளக் கட்டிக் குடுன்னு கேக்குறாரு அந்த ஆளு. பொண்ணுக் கேக்குற ஆள ரெண்டு மூணு கேள்வி கேளுங்கடி''.

padippakam

''வருசம் நாலுதான் ஆச்சு; அதுக்குள்ள மலடின்னா எப்பிடி? கல்யாணமாகிப் பத்து வருசம் கழிச்சும் பிள்ளையெடுக்கிறவ இருக்காளா, இல்லையா?

இன்னொண்ணும் கேக்கணும். பிள்ளையில்லாததுக்குக் காரணம் மலடியா? மலனடா? அதை எதை வச்சு அளக்குறது?

சரி. ஒன் புருசன் வீரியக்காரன்னே வச்சுக்க... கட்டிட்டுப் போன ஒந் தங்கச்சிக்கும் பிள்ளையில்லாமப் போச்சுன்னா அதுக்குமேல கட்டிக்குடுக்க ஒனக்குத் தங்கச்சியில்ல. மூணாவது பொண்டாட்டி கட்ட வேற யாரு தங்கச்சியத் தேடுவான்?

இருக்கட்டும்; பொண்டாட்டி ரெண்டுன்னு ஆன பெறகு, பொட்டைப்பய அவன்தான்னு முடிவாகிப் போச்சுன்னு வச்சுக்க... ஒருமலட்டுப் பயலுக்கு ரெண்டு பொண்டாட்டின்னு ஆகிப்போகுமே, நியாயமா?

மூக்குல குத்துறமாதிரி இன்னொரு கேள்வியும் கேளுங்கடி:

தண்டியும் தரமும் கொப்பும் குலையுமா அக்கா இருக்க ஏன் கேட்டு வாரான் எளையவளை? வாரிசுக்கா? அவ வயசுக்கா? இல்ல, வைரமோதிரத்துக்கா?''

- கருவாச்சி பேசப்பேச அவ வாயையே பாத்து வாயடைச்சு நிக்கிறாக கனகாம்பரமும் பவளமும்.

''ஏண்டி கருவாச்சி, எங்கிட்டிருந்துடி வந்துச்சு இத்தந்தண்டி அறிவு? பல்லாங்குழியில புளியவெதைய எண்ணிப்போடக்கூடப் புத்தியில்லாம இருந்தவ - சொட்டாங்கல் வெளையாடறப்ப ஒத்தைக் கல்ல ஒழுங்கா எடுத்துட்டு ரெட்டைக்கல் எடுக்கக் குட்டிக்கரணம் போடுறவ- அயிரை மீனப் புடிக்கப் போறேன்னு போயி அரட்டாவளைய அள்ளிட்டு வந்து ஆத்தாகிட்ட நொக்குப்பெத்தவ- ஒன்னைக்கிடி வந்துச்சு ஒனக்கு இம்புட்டுப் புத்தி?''

ஒரு பக்க உதட்டுல ஓரமாச் சிரிச்சுக்கிட்டா கருவாச்சி; ஒண்ணும் பேசல.





பால்குடிக்கிற பிள்ளைக்கு ஒரு பக்க முந்தானைய ஒதுக்கிக் குடுத்துட்டு, பிள்ள முண்டிமுண்டி முட்டுற சொகத்தக் கண்ணுமூடி அனுபவிச்சுக்கிட்டே 'சீ கடிக்குது பாரு கழுதை'ன்னு பிள்ள தலையில ஒரு செல்லத் தட்டுத்தட்டிட்டுக் கருவாச்சி சொல்றா:

''புத்தி யாருக்கு இல்ல? எல்லாருக்கும் இருக்குடி. என்னா ஒண்ணு... எல்லாப் புத்தியும் அடைச்சுக் கெடக்கு. கையில ஒரு சுத்தி வச்சு அலைஞ்சுக்கிட்டேயிருக்கு காலம். அப்பப்ப புத்தியில பொட்டு பொட்டுன்னு

படிப்பகம்

padippakam

போட்டுப் போயிக்கிட்டேயிருக்கு. போடுற போட்டுல சில புத்தி தெறந்திருது; இதுக்கெல்லாம் அசந்திருவனான்னு சிலது அடைச்சே கெடக்கு. இருக்கட்டும்; பெருசு என்ன சொல்றாரு?''

''புத்தி மாறி உக்காந்திருக்காரு எங்கப்பன். மானம் மரியாதிக்கு அஞ்சி இஞ்சிக் கெடக்கறோம் நாங்க''.

''ஒரு ஆறுமாசம் ஆற விடுங்கடி. மனுசன் கேக்குற கேள்விக்கு மாசம் பதில் சொல்லுமடி. 'ஆள் செய்யாததை நாள் செய்யும்'ன்னு சும்மாவா சொன்னாக?''

●

யோசிக்கிறா கருவாச்சி. அவளுக்கு அவளே பேசிக்கிறா.

காடு இருக்கு; உழுக மாடு இல்ல.

வீடு இருக்கு; ஆள் இல்ல.

பிள்ள இருக்கு; புருசன் இல்ல.

கைகாலு இருக்கு; காசில்ல.

மண்ட வலி காய்ச்சல்ன்னு விழுந்தாலும் -

ஒரு சுக்குத் தண்ணி வச்சுக்குடுக்கச் சொந்தபந்தம் இல்ல.

''செயிக்கிறனோ இல்லையோ; தோத்துப் போகமாட்டேன் மாமா''. பஞ்சாயத்துல சொன்ன சொல்லு மட்டுந்தான் நெஞ்சாங்குலையப் புடிச்சு நிமிண்டிக்கிட்டேயிருக்கு.

பொழைச்சுக் காமிக்கணும்.

பொழைக்கிறது முக்கியமில்ல; மானத்தோட பொழைக்கணும்.

நெல்ல வெதைக்கிறோம். உள்ள அரிசியிருக்கு; வெளிய உமி இருக்கு. அரிசிதான் மொளைக்கிது. ஆனா உமி இல்லாம அரிசியை மட்டும் வெதைச்சா மொளைக்குமா? மொளைக்காது. அரிசிதான் பொழப்பு; உமிதான் மானம்.உமியில்லாத அரிசி மொளைக்காது; மானமில்லாத பொழைப்புக்கு மதிப்பேது?

சொல்லிக் குடுக்கல யாரும்; அவ புத்திக்குள்ள புதுசு புதுசா முட்டுது என்னென்னமோ.

ஒடம்பு நோக ஒழைக்கணும். 'பாடுபட்ட மேனி பவுனு; படாத மேனி புண்ணு'. ஒரே வேல செஞ்சு ஒண்ணுக்கும் ஆகாது; சகல வேலையும்





படிப்பகம்

padippakam

பழகணும். தண்ணியில விட்டாலும் இருக்குமாம்; தரையில விட்டாலும் பொழைக்குமாம்; தவள மாதிரி இருக்கணும்.

அண்ணந் தம்பி ஒறவுன்னாலும் தள்ளிநின்னே பழகணும்; சொலவம் சொல்லுதா இல்லையா...? ''மெத்தப் பழகுனாப் பித்தாளையும் பீ நாறும்?''

என் வாய் உண்டது - வகுறு கொண்டது போக மிச்சத்தக் கஞ்சியில்லாமக் கெடக்குற உசுருகளுக்கும் கைகால் வெளங்காத கெழடு கெட்டைகளுக்கும் ஆடு மாட்டுக்கும் காக்கா குருவிக்கும் குடுக்கணும்; அள்ளிக் குடுக்கவேன்னாலும் கிள்ளிக் குடுக்கணும்.

பிள்ள பெத்த மேனி; ஆம்பள சொகம் என்னான்னு அறிஞ்ச ஒடம்பு; மூடி மூடி வச்சாலும் உள்ளுக்குள்ள என்னமோ முணு முணுங்கிற பருவம். ஆசைகள எரிச்சு அந்தச் சாம்பல அள்ளிப் பூசாட்டி அந்த ஆசை என்னிய எரிச்சுப்புடும். பிள்ளையப் பெத்த குடிசைக்குள்ள மாசு பொதைச்ச பள்ளத்திலயே என் ஆசையையும் பொதைச்சுப் புட்டேன். பொதைச்ச ஆச மொளைக்காமப் பாத்துக்க ஆத்தா; ஒன்னியக் கையெடுத்துக் கும்புடறேன் காளியாத்தா.

நரி நாட்டாம பண்ற ஊர்ல தாய்க்கோழி இல்லாத குஞ்சாத் தனிச்சு நிக்கிறேன். நரிஅடிக்க வந்தா, திருப்பி அடிக்கத் திராணிவேணாம் சாமி; தப்பிச்சு ஓடி ஒளிய சந்து பொந்து காமி.

●

மானத்துக்குப் பங்கமில்லாத எந்த வேலையும் செய்யலாம்ன்னு முடிவெடுத்துட்டா கருவாச்சி.

பூமி - வானம் பாத்த பூமி;

மனுசங்க - பூமி பாத்த மனுசங்க.

வேறென்ன தொழில் இருக்கு விவசாயத்த விட்டா?

களையெடுத்தா;

கருதறுத்தா;

குழையறுக்கப் போனா;

கரட்டுக்குப் போயி வெறகெடுத்து வித்தா.

ஒரு நாள் மலையடிய ஒட்டியிருக்கிற கம்பங்காட்டுக்கு மறுகுகருது பெறக்கப் போனா. மறுகுகருதுங்கிறது வேறொண்ணு மில்ல. கம்பங்காட்ல தலக்கருது வெளைய விலாச் சிம்புகள்ல வெடிச்சு வெளியேறும் இன்னொரு



படிப்பகம்

padippakam

கருது. தலக்கருது அறுத்து முடிச்ச இருபதாம்நாளு அதையும் அறுக்கலாம். பொதுவா அந்தக் கருதுக சக்கையாத்தான் இருக்கும்; சாவியாத்தான் கெடக்கும். அதனால காட்டுக்காரக அத அறுக்கறதில்ல. வந்தசனம் போறசனம் அறுத்திட்டுப் போகட்டும்ன்னு விட்ருவாக.

தோள்ல தொட்டிகட்டிப் பிள்ளையப் போட்டுக்கிட்டு அதுக்கொரு சீனிமுட்டாயி வாங்கிக்குடுத்து அழுகைய அமத்திட்டு மசங்கறவரைக்கும் மறுகுகருது அறுத்துப்பாத்தும் குட்டிச்சாக்குல முக்காச் சாக்கு நெறையல.

பிள்ளைய இடுப்புல சொமந்து கருதுச் சாக்கத் தலையில சொமந்து மொட்டக் கெணத்துப் பொலி வழியா நடந்து வாரப்ப எதுக்கவந்து நில்லுன்னு நிறுத்துனான் பன்னியான் பேரன்.

''எங்கருந்து கருதறுத்து வாரவ?''

''நாயக்கர் வீட்டுக் காட்ல''.

''அது அப்ப; இப்ப எங்கண்ணன் கட்டையன் குத்தகைக்கு எடுத்த காடு''

''அறுக்கிறப்ப யாரும் தடுக்கல; அறுத்த பெறகு ஏம்ப்பா மறிக்கிற?''

''தீத்துட்டுப் போன சிறுக்கிக்குப் பேச்சென்ன பேச்சு?''

அவ தலையிலிருந்த கருதுச் சாக்க விசுக்குன்னு புடுங்கி வீசியெறிஞ்சான் மொட்டுக் கெணத்துல.

கருதுச்சாக்கு கெணத்துக்குள்ள விழுந்தசத்தம் அடங்குமுன்ன அவன் கம்பங்காட்ல ஓடிக் காணாமப் போனான்.

''இருங்கடா... தெய்வம் கேக்குமடா ஒங்கள...''

ஆத்தாளுக்கு என்னமோ ஆகிப்போச்சுன்னு பிள்ள 'வீல்'ன்னு கத்துன கத்துல கெணத்துக்குள்ளிருந்து ஆகாயத்துல யாரோ அம்புதொடுத்த மாதிரி சிவ்வுன்னு பயந்து பறந்துவருதுக அப்பத்தான் போய் அடைஞ்ச நெய்க்குருவிக.

ஒரு வாய் கூழ்கூட இல்லாம ஏறுவெயில்ல கருதறுத்து அதையும் பறிகுடுத்திட்டு, கண்ணெல்லாம் பஞ்சடைஞ்சு கைப்பிள்ள சொமந்து போறா கருமாயப்பட்ட கருவாச்சி.

●

கொண்ணவாயன நெனச்சாத்தான் கும்பிளரிஞ்சுபோகுது கருவாச்சிக்கு.

யாரு பெத்த பிள்ளையோ? கஞ்சியில்லாத வீட்டுக்கு நீதாண்டா ராசான்னு ஈசன் இவன் தலையில எழுதிருச்சோ? கட்டைவேகிற




படிப்பகம்

காலம்வரைக்கும் காலடி நிழல்லயே கெடக்கப் போற ஒரே சொந்தம் இந்தக் கிறுக்குப் பயலாத்தான் இருப்பான் போலிருக்கு. தான் கொலபட்டினியாக் கெடந்தாலும் அவன் கும்பாவப் பழையகஞ்சி ஊத்தியாச்சும் நெப்பிவிட்றணும். இப்படியெல்லாம் நெனச்சுக் கெடந்தவ நெஞ்சிலயும் நெருப்பு விழுகுது லேசு லேசா.

அவன் முன்னமாதிரி இல்ல.

விடிஞ்சும் ஒறங்குறான்; வெறிச்சு விட்டம்பாக்கிறான்; கூடையில அள்ள வேண்டிய சாணியச் சட்டியில அள்ளுறான். அழகு சிங்கத்தத் திண்ணையில விட்டுட்டுத் தெருவுக்கு ஓடிப்போறான்.

ஒண்ணும் புடிபடல அவன் போற போக்கு.

சடையத்தேவர் வீட்டு ஆளுக செய்வினை செஞ்சிருப்பாகளோ? பாப்பம்.

●

பொழைக்க ஒரு புதுவழி பாக்கணுமே!

கருவாச்சி பெரிய மனுசியான ★அணுசுல ஆத்தா பெரியமூக்கி அவளுக்குப் பருத்திப் பால் பாயாசம் வச்சுக் குடுத்திருக்கா. அந்தமாதிரி ஆயுசுல குடிச்சதில்லன்னு சொல்லியிருக்காக அத ருசிகண்டவுக. பருத்திப் பால் பாயாசம் செய்யிற கம்பசூத்திரம் தெரியும் கருவாச்சிக்கு. பாயாசம் போட்டு ஊருக்குள்ள வித்தா என்னன்னு யோசிச்சா; மறுநாள் செஞ்சேபுட்டா.

அன்னக்கி ராத்திரி அரைவீச பருத்தி வெதையத் துண்டா ஊறப்போட்டா. அரைப்படி பச்சரிசி- கொஞ்சம் உளுந்து - இத்துணூண்டு வெந்தயம் - மூணும் கலந்து மொத்தமா ஊறவச்சா. அரைக்காப்படி பாசிப்பயறைப் போட்டு இன்னொரு ஏனத்துல தண்ணிஊத்தி வச்சா. ஊறவச்ச பருத்திவெதையோட இஞ்சியும் ஏலக்காயும் கலந்து ஒரல்ல போட்டு,கோழி கூப்பிடக் கொண்ண வாயன எழுப்பி ''ஆட்றா மகனே ஆட்றா''ன்னா. அவன் ஒறங்கி விழுந்துக்கிட்டே ஒரல ஆட்றான். சக்கைப் பதம் வரவும் அதுல தண்ணி ஊத்திப் பருத்திப்பாலப் புழிஞ்சா பாத்திரத்துல. அப்படி மூணு ஆட்டு ஆட்டி மூணு புழி புழிஞ்சா. ஊறப்போட்ட பச்சரிசியக் குருணப் பதத்துக்கு ஆட்டி அள்ளி வச்சுக்கிட்டா. ரெண்டுவீச கருப்பட்டிய நுணுக்கி வச்சுக்கிட்டா; அரைத் தேங்காயத் துருவி வச்சுக்கிட்டா.

இப்பப் பத்துப்படி தண்ணிய ஒரு அடுப்புக் கூட்டிக் கொதி கொதின்னு கொதிக்கவிட்டா. ஊத்துனா அதுல பருத்திப்பால. கிண்டிக்கிட்டே முழுப் பாசிப் பயற உள்ள அள்ளிக் கொட்னா. அது முக்காப் பதம் வேக்காடு கண்டதும் பச்சரிசி மாவ உள்ள கொட்டிக் கலக்கோ கலக்குன்னு கலக்குனா. கொதிபதம் வந்ததும் கருப்பட்டித்தூளை வெதச்சு தேங்காத் துருவலைத் தெளிச்சு

★ அண்மை

padippakam

எறக்கிவச்சா.

'நான் இங்க இருக்கேன்'னு தெருவுல போற ஆளுக்கெல்லாம் தகவல் சொல்லுது பாயாசம். ஒரு போணி ஓரணான்னு அவ விக்க ஆரம்பிச்சதும் கஞ்சிப் பொழுதுக்குள்ள காணாமப் போயிருச்சு பாயாசம்.

பத்தே நாள்ல கருவாச்சி பாயாசத்துக்குக் கிறுக்குப் புடிச்சுப் போயிருச்சு ஊரு. விடிய்ய பல்லு வெளக்காமப் பாயாசம் குடிச்சுப் பழகிருச்சு சொக்கத்தேவன்பட்டி. செலவெல்லாம் போக அவ கையில நித்தம் நிக்கிது ஒண்ணேமுக்கா.

கட்டையன் பதறிப்போனான்.

''ஏய்! இப்படியே விட்டா ஈரு பேனாகிப்போகும்; பேனு பெருமாளாகிப் போகும். அவ பாயாசச் சட்டியில பல்லியடிச்சுப் போடுங்கடா''

''நீ சும்மா இருண்ணே... அவ பொழப்புல ஆப்படிக்கிறதுக்கு இன்னொரு வழி வச்சிருக்கேன்''.

மறு நாள் பாயாசப் பானையத் தலையில சொமந்து கோழி கூப்புடக் கருவாச்சி தெருவுல எறங்கி நடக்க அதுக்கு முன்ன பாயாசம் வாங்கிக் குடிச்சுக்கிட்டிருக்கு ஒரு கூட்டம்.

அதே மாதிரி ஈயக்குண்டா, அதேமாதிரி போணி வச்சு ஓரணாவுக்கு ரெண்டு போணின்னு ஊருக்கே ஊத்திக்கிட்டிருக்கா கன்னியம்மா. ஊர்ல 'ஒரு மாதிரி'யான பொம்பள அவ. முப்பது முப்பத்தஞ்சு வயசிருந்தாலும் சும்மா செவ்வாழத்தாரு மாதிரி சிலுப்பி நிக்கிறவ. அவளுக்கும் வேற பொம்பளைகளுக்கும் தெருவுல சண்டகிண்ட வந்து ''தெரியாதா ஒன்னிய... அவனத்தான நீ வச்சிருக்க''ன்னு கேட்டுட்டா... ''ஒனக்குத் தெரிஞ்சு அவன் ஒருத்தன்தான்டி.. எனக்குத்தான தெரியும் என்னிய வச்சிருக்கிற நாலுபேர்ல ஒம்புருசனும் ஒரு ஆளுன்னு'' இப்படிப் பதில் சொல்ற ஏடா கூடமான பொம்பள.

அவளுக்குக் கட்டையன் ஆளுக துட்டக் குடுத்துத் தட்டேத்தி விடவும் ஓரணாவுக்கு ஒரு போணின்னு விக்கிற பாயாசத்த இவ ஓராணவுக்கு ரெண்டு போணின்னு வித்து கருவாச்சி பொழப்பக் காலி பண்ணிப்புட்டா.

ஏவாரம் அத்துப்போச்சு;

கைக்காசு கொறஞ்சு போச்சு;

செனமாடு தீவனமில்லாமக் கெடக்கு;

சதசதசதன்னு ஈரமிருந்தும் உழுகாமக் கெடக்குகாடு.

காய்ச்ச(ல்) தடுமன்னு பத்துப்போட்டுக் கெடக்கு பெத்தபுள்ள.

இந்த வருசச் சம்பளம் வேற குடுக்கல கொண்ணவாயனுக்கு.



படிப்பகம்

padippakam

கொட்டத்துல சாணியள்ளி, தூக்குச் சட்டியில கூழ் ஊத்தி வச்சுக்கிட்டு ''மேய்ச்சலுக்கு ஓட்டிட்டுப் போடா மகனே பசுமாட்ட''ன்னு கொண்ணவாயனக் கூப்பிட்டா-

அவன் சாட்டக்கம்பத் திண்ணையில போட்டுட்டு ஒடிஞ்ச ஒடம்பு வளைஞ்சு நின்னு சொல்றான்:

''சி... சி...சின்னத்தா... நான் ஊர்ல போயிக் க...க...க... கல்யாணம் பண்ணிக் கு...கு...கு... குடும்பம் நடத்தப் போறேன். ச...ச...ச... சம்பளத்தக் குடுத்திட்டா... நான் வே...வே...வே... வேலைய விட்டு நின்னுக்கிறேன்''.

அவன்கிட்ட எதிர்பாக்கல அவ அந்த வார்த்தைய.

காதுக்குள்ள பாஞ்ச முள்ளு கண்ணுக்குள்ள எட்டிப்பாக்குற மாதிரி அவ கண்ணவிட்டுத் தவ்விருச்சு கண்ணீர்த்துளி ரெண்டு.

செத்தவடம் நெஞ்சப்புடிச்சு ஒக்காந்து போனவ நொட்டாங் கையில ரெண்டு கண்ணையும் தொடச்சுக்கிட்டா.

''போடா! ஏலே போடா. எல்லாம் அந்து போயி என் இத்த வேருக்குக் கீழ ஒட்டிக்கிட்டிருந்த ஒத்தவேரு நீயும் அத்துக்கிட்டுப் போறயா? போ! ஒத்தையில பிள்ள பெத்தவளுக்கு ஒத்தையில சாகத் தெரியாதா? போங்கடா போறவனெல்லாம் போங்கடா! ''

அழுகை நிக்கல பாவம் - அழுகப் பெறந்தவளுக்கு.



படிப்பகம்



# 21

**சொ**க்கத்தேவன்பட்டியைக் கடக்கிறவரைக்கும் மாருல கல்லக் கட்டி நடந்த மாதிரி மனசு கனத்துத்தான் கெடந்துச்சு கொண்ண வாயனுக்கு.

கஞ்சி ஊத்துன வீட்ட விட்டுப் போறமே, காத்தா அலஞ்சு திரிஞ்ச காட்ட விட்டுப் போறமே, தீனிக்கு ஏங்குற செனமாட்ட விட்டுட்டுப் போறமேங்குற வருத்தம் ஒரு பக்கமிருக்க, நாம போனா ஊடும் பாடும் ஒத்தாச பண்றதுக்குச் சின்னத்தாவுக்கு நாதி இல்லையே; அழகுசிங்கத்தத் தூக்க ஆளில்லையேங்கிற கவலதான் குறுக்குல குத்துது கொண்ணவாயன.

●

ஊருகடந்து ஒத்தையடிப்பாதையில வந்துசேர, நெஞ்சில இருந்த பாரம் கொஞ்சமா எறங்க, பையிலஇருந்த பாரம் கனக்குது லேசா.

பையத்தாண்டி எண்ணெய்ப் பசையக் கசியவிட்டு நான் இங்க இருக்கேங்குது உள்ளுக்கிருக்கிற அதிரசம். முறுக்கும், சீடையும் ஒண்ணுக் கொண்ணு முட்டிக் குட்டிக் கலாட்டாப் பண்ணி வருதுக.

என்னியக் கட்டப் போறவ பேரென்ன பேரென்னன்னு பையிக்கு வெளிய பிதுங்கி நாக்கத் தொங்கப் போட்டுக் கேக்குது தேனிச் சந்தையில வாங்கித் திணிச்ச மஞ்சச் சீல.

'அவ பேரு அய்யக்கா; அவ பேரு அய்யக்கா'ன்னு 'க்ளிங்' மொழி பேசுதுக காயிதத்துல சுத்தி வச்ச கண்ணாடி வளவிக.

அவுந்த வேட்டியக் கட்ட அவன் கையத்தூக்கவும் எதேச்சையா மேல வந்த பையி மூக்குல ஒரு முட்டி முட்டிப் போனதுல, அடிக்குது பைக்குள்ள அய்யக்கா வாசம்.

●

இன்னைக்கி நேத்துப் பழக்கமா அவனுக்கும் அய்யக்காவுக்கும். பத்துப் பதினோரு வயசுல ஊர்மாடு மேய்க்கப் போனவன் இவன். ஊர்மாட்டுக்குப் பின்னாலயே சாணி பெறக்க வந்தவ அவ. சாட்டைக்கம்புக்குக் கால்சட்டை போட்டுவிட்ட மாதிரி இவன்; முருங்கக் காய்க்கு முந்தான சுத்துனமாதிரி அவ. இவனவிட மூணுமாசம் அவ பெரியவதான்; ஆனா பெரிய வித்தியாசமில்ல உருவத்துல.

கொண்ணவாயன் அப்பன் ஒரு குடிகாரன்; அய்யக்கா அவுக ஆத்தா ஒரு ஓடுகாலி. பொழச்சாப் பொழைங்க; செத்தாச் சாங்கன்னு ரெண்டுபேரையும் தெருவுல விட்டுட்டாக அவன் அப்பனும் இவ ஆத்தாளும்.

மாடுதான் சொந்தபந்தம்ன்னு ஆகிப்போச்சு இவனுக்கு; சாணிதான் கஞ்சின்னு ஆகிப்போச்சு அவளுக்கு.

கஞ்சிப் பொழுதுக்கு ஊர்மாடு ஓட்டிக் கெளம்பிடுவான் கொண்ண வாயன். நாப்பது அம்பது மாடுகள முன்னுக்கவிட்டு இவன் பின்னுக்குப் போக - கூடையத் தூக்கிக்கிட்டுக் கூடவே வருவாக சாணி பெறக்கிற அஞ்சாறு பொம்பளைக. அந்தப் பொம்பளைக போடுவாளுகய்யா ஒரு சண்ட, சும்மா பானிப்பட்டு யுத்தம் மாதிரி ஒரு சாணிப்பட்டு யுத்தம்.

எந்த ஒரு மாடும் சாணிபோடுறதுக்கு முன்ன மொதல்ல வாலத் தூக்கும். தூண்டிக்காரன் தக்கையிலயே கண்ணுவச்சிருக்கிற மாதிரி வால்லயே கண்ணுவச்சிருப்பாளுக சாணி பெறக்கிற பொம்பளைக. எந்த மாடு வாலத் தூக்குதுன்னு கண்டுபுடிச்சு ''ஏஞ்சாணி ஏஞ் சாணி''ன்னு எவ மொதல்ல கத்துறாளோ அவளுக்குதான் சட்டப்படி பாத்தியப்படும் சாணி.

padippakam

அய்யக்காவுக்கு ஒரு காலு இழுவை; வெரசா நடக்கமாட்டா. சாணியப் பாத்தாக் கூடைய விட்டுருவா; கூடையப் பாத்தா சாணிய விட்டுருவா. எத்தனையோ நாள் ஏமாந்து போயி வெறுங்கூடையோட வீடு சேந்திருக்கா.

அவளப்பாக்கப் பாக்கக் கொண்ணவாயன் மனசு ஓரமா உருகுது. எப்பிடியும் அவ கூடைய நெப்பி அனுப்பணுங்கற ஒரு நெனப்பு நெஞ்சுக்குழியப் பிறாண்டுது.

இவனே ஒரு ஏற்பாடு பண்ணுனான். எந்தமாடு நேத்து வயிறு நெறையக் குழை தின்டுச்சோ, எந்த மாட்டுக்குச் சாணிச் சத்து அதிகமோ அந்த மாடுகள எடது பக்கமா நிறுத்தி ஓட்டி அய்யக்காவ அதேபக்கம் முன்னுக்கவிட்டு இவன் பின்னுக்கப் போறான்.

மாடு வாலத்தூக்க ஒரு எம்பு எம்ப இவன் அய்யக்கா தோளத் தடவுவான். அதுக்குள்ள அவ ''ஏஞ்சாணி ஏஞ்சாணி''ன்னு கத்திருவா. இப்பவெல்லாம் நித்தம் நித்தம் நெறஞ்சு போகுது கூடை.

இப்படியே அஞ்சாறுமாசம் அவுக காலம் நடக்குது.

வரவர கூடையில சாணியும் மனசுல காதலும் பெரும்கனம் கனக்குது.

நித்தம் கூடைய நெப்பிக் குடுக்கிற 'சாணீ'ஸ்வரனுக்கு அச்சுவெல்லம், பணியாரம், அவிச்ச மொச்சையெல்லாம் கொண்டு வந்து குடுக்க ஆரம்பிச்சுட்டா.

இப்பிடிச் சேந்த கூட்டுக்கிளிக ரெண்டும் கூட்டுஏவாரம் பண்ணப் பழகிருச்சுக. அதாவது - சாணிதட்டி விக்கிதுக.

சாணியில மாட்டுச்சாணி கொஞ்சம் கெட்டி; எருமச்சாணி கொஞ்சம் கூழு. ரெண்டையும் சேத்துப் போட்டுக் கொழச்சாத்தான் கெடைக்கும் எருத்தட்ட ஏத்தபதம். அய்யக்காவுக்கு நல்லாப் புடிபட்டிருக்கு சாணிய எருவாக்குற சங்கதி.

உமிக்கருக்கு, புளியஞ்சருகு, நெல்லுச்சண்டு மூணையும் போட்டு ரெண்டு சாணியிலயும் கலப்பா. என்னமோ மண்டவெல்லம் புடிக்கிறமாதிரி ஆசை ஆசையா உருண்டபுடிப்பா. உருண்டைய எடுத்துத் திரும்பவும் உமியில வச்சு ஓங்கித்தட்ட அது சப்பட்டையாப் போகும். அத அப்படியே எடுத்துப் புளியமரத்துலயோ சுவத்திலயோ அடிச்சு ஒரு வாரம் காயவிடுவா; எருவாயிரும்.

உற்பத்தி அய்யக்கா; ஏவாரம் கொண்ணவாயன்.

ஆப்பக்கடை ராசம்மாவுக்கும் தோட்டி துடியாண்டிக்கும் எருவ வித்து வடையும் கெழங்கும் வாங்கித்தின்ட காலம், கரையாத அச்சுவெல்லக் கட்டியா இனிச்சுக் கெடக்கு மனசுக்குள்ள இன்னும்.



படிப்பகம்

padippakam

அய்யக்காவ நெஞ்சுல சொமந்து வெயில்ல நடந்து வேர்த்து வந்தவன் எருத்தட்டுற புளியமரத்து நெழல்ல ஒதுங்குனான். புல்லரிக்குது தேகம் பூரா. 'அய்யக்கா' 'அய்யக்கா'ன்னு கத்துது புளியமரத்துல ஒரு காக்கா. புளியமரத்து அடித்தண்டுல எருத்தட்டுன பழைய தடத்துல போயிப்படுத்துக்கிட்டு ''இன்னிக்கி எந்திரிக்கிறாப்பல இல்லே''ங்குது இருதயக்கூடு.

●

வெவரம் தெரியாத வயசுல மனுச மனசுல பச்ச குத்துது பாருங்க ஒரு பழைய நெனப்பு... அழியிறதில்ல அது ஆயுசு பரியந்தம்.

புளியமரம் கடந்து கிளியாம்பாறை எறங்குனா வந்திரும் பாம்பாறு. பாம்பாத்துல எறங்கி நின்னானோ இல்லையோ ஒடம்பெல்லாம் அவனுக்குப் பாயாசம் பாயுது.

உள்ளங்கால் நனைக்கிற தண்ணியில நின்னு ஓடவிடுறான் மனச பழையகாலத்துமேல.

அன்னைக்கி ஓடுன தண்ணி இன்னைக்கி இல்ல; அந்தப் பழைய மணலுமில்ல ஆத்துல.

அன்னைக்கி இச்சி மரத்துல நின்னு எங்கள வேடிக்கபாத்த கொக்கும் குருவியும் செத்தே போயிருக்கும் இந்நேரம்.

அவளையும் என்னையும் அல்லாடவிட்டு அழகுபாத்த அந்த நாளு, காலசமுத்திரத்துல விழுந்த ஒத்த மழைத்துளியா உருவழிஞ்சு போயிருக்கும்.

ஆனா ஞாபகம் சாகுமா? சாகாது.

அந்தா! அந்த எடந்தான் அவ விடுகதை போட்டது.

இந்தா! இந்த எடந்தான் நான் மீன்சுட்டுக் குடுத்தது.

●

உச்சிப்பொழுது.

கம்முன்னு இருக்கு காடு. இல தழை ஆடல. காசுகுடுங்க, இல்லாட்டிக் ★காயிதம் போடுங்க அப்பத்தான் வருவேங்குது காத்து. எல்லாக் கைகளையும் தூக்கி ஆகாயத்தக் கும்பிட்டு ஆடாம அசையாம மழைவரம் கேக்குதுக மரங்க.

வடைச்சட்டியில போட்டு ஈரல வறுத்தெடுக்கிற மாதிரி, வெயில் சட்டியில போட்டு பூமிய வறுத்தெடுக்குது சித்திரைமாசம். தரிசுக்காடு மேஞ்சு வந்த மாடுக தாகத்துக்கு எறங்குதுக ஆத்துக்குள்ள. ஆத்துக்குத் தேமல் விழுந்தமாதிரி அங்கங்க திட்டுத் திட்டாக் கெடக்கு தண்ணி.

மூங்கிமரத்து நெழல்ல சரிஞ்சு சாஞ்சாக கொண்ணவாயனும் அய்யக்காவும்.

---

★ கடிதம்



படிப்பகம்

எருவு வாங்குனதுக்குத் துட்டுக்குப் பதிலா சுடுகாட்டுப் பொரியும் தேங்காச் சில்லும் குடுத்திருந்தான் தோட்டி துடியாண்டி.

ஒரு வாய் பொரி, ஒரு கடி தேங்காயுமா மாத்திமாத்தித் தின்டுக்கிட்டுக் கத பேசுதுக ரெண்டும்.

''எ... எ... எ... எங்க வீட்டுக்கு வா... வா... வா... வாக்கப்பட்டு வாரப்ப எ... எ... எ... என்ன கொண்டு வருவ?''

''மொறையா வந்து பெண்ணுக் கேளு; மொற செய்யிறத அப்பறம் பாக்கலாம்''.

''எங்கப்பன் சொ... சொ... சொ... சொல்லிருச்சில்ல. எங்க வீட்டுக்கு நீ மொ... மொ... மொ... மொறப்பொண்ணாம்... மூ... மூ... மூணு முடிச்சில மூக்கணாங்கயிறு போ... போ... போட்டுற மாட்டேன்?''

''மூணு முடிச்சு அப்பறம்; மொதல்ல மூணு கதை சொல்றேன்; அத விடுவி பாப்பம்''.

''சொ... சொ... சொ... சொல்லு. கே... கே... கேப்பம்''.

வாயில கெடந்த பொரிய ஒரு கடவாப் பல்லுலயிருந்து மறு கடவாப் பல்லுக்குத் தள்ளி மென்னு அரைச்சு ஒரே முழுங்கா முழுங்கி உள்ள தள்ளிட்டுச் சொல்றா அய்யக்கா.

''பொட்டு வைக்காத சாமி ஒரு சாமி
பொச்சுக் கழுவாத சாமி ஒரு சாமி
ஒட்டுத்துணி கட்டாத சாமி ஒரு சாமி
மொத்தம் மூணு சாமி என்ன சாமி?''

''சொ... சொ... சொல்லிப்பிட்டா?''

அவளுக்குத் தெரியாதா? அவன் தலையைத் தரையில ஊன்டி மருதவரைக்கும் போனாலும் இந்த மூணு சாமியும் சொல்றதுக்கு அவனுக்கு மூளை இல்லைன்னு... அந்த தைரியத்துல சொல்றா.

''கோழியடிச்சுக் கொழம்புவச்சு உள்ளங்கையில சோறாக்கிப் போடுறேன் ஒனக்கு . சொல்லாட்டி...''

''சொ... சொ... சொ... சொல்லாட்டி... இ... இ...இ... இங்கயே மீன் சுட்டுத்தாரேன்''.

''அதையும் பாப்பம்''

அவன் முக்குறான்; மொனகுறான்; உருமால அவுக்குறான்; உள்ள முடியிலயும் ஒண்ணு ரெண்டு கொட்டிப்போகத் தலையச் சொறியிறான்.

padippakam

என்னமோ ரெண்டுகைகளுக்கு மத்தியில தேங்காய வச்சு ஒரே அமுக்குல அமுக்கி ஒடைக்கிறவன் மாதிரி ஒண்ணு மில்லாத உள்ளங்கைய நசநசநசன்னு நசுக்கிறான். வாய்க்கு வந்த வார்த்தையெல்லாம் கொண்ணிக் கொண்ணிச் சொல்லிப் பாக்குறான்; ஒண்ணும் கதையாகல.

''நீ... நீ... நீ... நீயே சொல்லு''

ஒண்ணுஞ் சொல்ல முடியாமத் தோத்துப்போன தொத்தப்பய அவ குதிகால எடுத்து உள்ளங்கையில போட்டு உருவோ உருவுன்னு உருவவும், மண்ணாங்கட்டிமேல மழைபேஞ்ச மாதிரி அவ கரைஞ்சு போனா கரைஞ்சு.

'கேட்டுக்க கேண'ன்னு வாய்க்குள்ளயே மொனகிக்கிட்டு, அவ போட்ட கதைய அவளே விடுவிக்கிறா.

''வருணபகவான்னு கும்புடுறமா இல்லையா தண்ணிய... அதுல பொட்டு வச்சா நிக்குமா? அதான் பொட்டு வைக்காத சாமி. கோமாதான்னு கும்புடறமா இல்லையா பசுவ... அது சாணி போட்டாக் கால் கழுவுதா? அதான் பொச்சுக் கழுவாத சாமி. அக்கினிபகவான்னு கும்புடறமா இல்லையா தீய... அது துணி கட்டுமா? அதான் ஒட்டுத்துணி கட்டாத சாமி''.

அவ சொல்லச் சொல்ல அவன் கண்ணும் வாயும் விரிஞ்சது பாருங்க..

''ஒனக்கு ரொம்பப் பெ... பெ... பெ... பெருசுடியாத்தா மூ... மூ... மூ... மூள''.

அவ சொன்ன கதைக்கு அவளே பதிலைச் சொல்லிட்டா. அவன் சொன்ன வேலைய அவன் செய்யணுமா இல்லையா?

செஞ்சான்.

ஆத்தோரமா இருந்த கோரைக்குள்ள கையவிட்டு ரெண்டு மூணு குரவமீனப் புடிச்சான். சொறிக் கல்லுல ஒரசிக் கொதிக்கிற ஓடை மணலுக்குள்ள குழிதோண்டிப் புதைச்சான். அந்த வேக்காட்ல வெந்து தணிஞ்சிருச்சு மீனு. எடுத்தான்; முள்ளிருக்கக் கறிய மட்டும் உருவி உருவி ஊட்டிவிட்டான்.





ஓடிமுடிஞ்சு போச்சு காலம்; ஆனா ஆத்துக்குள்ள சுத்திக் கிட்டேயிருக்கே மீன் வாசம்.

●

அதுக்குப் பெறகு குடிகாரத் தகப்பன் துட்டுக்கு ஆசப்பட்டு அவனச் சொக்கத்தேவன்பட்டியில பண்ணைக்கிருக்க வச்சதும்- திருவிழா தீவாளிக்கு வாரப்பவெல்லாம் வளவியும் பலகாரமும் வாங்கியாந்து குடுத்து ஓடையில ஒளிச்சுத்தின்னதும் - ஆடுமாடுகளோட அய்யக்கா நெனப்பையும் சேத்து மேச்சதும் - ஈசானிய மூலையிலருந்து மழை எறங்கி வந்தா ''அ...அ...

படிப்பகம்

padippakam

அய்யக்கா எருவ ந...ந...நனச்சிராத''ன்னு ஆகாயத்தச் சாட்டக்கம்ப வச்சு அடிக்கப் போனதும் - அவளுக்குத் தாலித்தங்கம் வாங்க எச்சியக் குடிச்சுக் கிட்டே காச மிச்சம் பண்ணுனதும் - இந்தா - இப்ப மஞ்சச் சீலையோட, கருவாச்சி குடுத்த காசோட, புதுமாப்ள முறுக்கோட ஊர் திரும்புறதும் நெனச்சாக் கனாக் கண்ட மாதிரியிருக்கு; கிள்ளிப்பாத்தா வலிக்குது; நெசந்தான்.

●

ஆறு தாண்டி, மேடு ஏறி இறங்கி, ஒத்த ஆலமரம் கடந்தா ஊரு வந்திரும்.

அந்திமசங்க இந்த ஆகாயம் என்னென்னா கூத்துக் கட்டி ஆடுது?

புதுசா மருதாணி போடுது; ''புளிச் புளிச்''சுன்னு வெத்தல போட்டுத் துப்புது; மார்லயும் மூஞ்சியிலயும் மஞ்சப்பூசிக் குளிக்குது; எத்தன நிறமடா சாமின்னு ஒண்ணு ரெண்டு மூணு எண்ணி முடிக்கு முன்ன கரேர்னு கருப்புத்தார் பூசி அத்தன நெறத்தையும் அழிச்சிட்டுப் போயிருது.

வந்திருச்சு ஊரு. எருக்குழி தாண்டி எடப்பக்கம் திரும்புனா அவன் தெருவு.

அடுத்த சந்து அய்யக்காவீடு.

●

கோழி கூப்பிட சாணியக் கரச்சுச் சட்டியில எடுத்துக்கிட்டு வாசத் தொளிக்க வந்த கருவாச்சி பலகைக் கல்லுல படுத்திருந்த உருவத்தக் கண்டதும் பயந்து போனா. கதவு தொறந்த சத்தம் கேட்டதும் பளிச்சுன்னு முழிச்சு, கருவாச்சி கால்ல மளார்ன்னு விழுந்து உருண்டு உருண்டு அழுகிறான் கொண்ணவாயன்; புடிச்சகால விடாமப் பெரண்டு பெரண்டு அழுகிறான்.

''ஏய் என்னடா இது ...? எந்திர்றா...'' அவ சாணிச் சட்டியக் கீழ போட்டுட்டுப் பதறிப் போனா.

நல்ல நாள்லயே சொல்லு சொந்தமில்ல அவனுக்கு. நெஞ்சில முள்ளுத்தச்சு நெலகொலஞ்சு அழுகிறவன் என்னத்தச் சொல்லப் போறான் பாவம்.

''ஏலே! கால விடுறா; கண்ணத் தொடச்சுக்கடா; எந்திர்றா; என்னாச்சுன்னு சொல்றா''.

மண்ணுல மூஞ்சியத் தேச்சுக்கிட்டே அழுது சொல்லுது அந்த அரைப் பெறவி.

''அவுக ஆ... ஆ... ஆத்தா பட்ட கடனுக்கு அய்யக்காவக் க...க...க... கல்யாணம் பண்ணிக்கிட்டான் எ... எ... எ... எங்கப்பன். எனக்கு




படிப்பகம்

padippakam

சா...சா...சாக தைரியம் இல்ல ஆத்தா ஓ...ஓ...ஓடியாந் துட்டேன். என் கட்ட வேகுமட்டும் ஒங் காலடியவிட்டுப் போ... போ... போ... போக மாட்டனத்தா! இ...இ...இ... இருந்தாச் சோறு. செ... செ... செத்தா வாய்க்கரிசி போடுவியா?''

ஆத்தா செத்தன்னைக்கிக் கூட அழுகாத கருவாச்சி அன்னைக்கி அழுதா.

கொட்டிக் கெடந்தவனக் குனிஞ்சு அள்ளுனா.

''நீதான்டா எம் மூத்த மகன். காலமெல்லாம் ஒனக்குக் கஞ்சி ஊத்துறண்டா! நான் செத்தா நீ தூக்கிப் போடு; நீ செத்தா நான் தூக்கிப் போடுறேன்; அழுகாதடா''

அவன் கொண்டு வந்த பை மேல கோழி ஒண்ணு தவ்விப் போனதுல 'க்ளிங் க்ளிங்' ன்னு சத்தம் போடுது ஒடைஞ்சு போன ஒரு வளவி.

என்னிய எடுத்துக் கண்ணத் தொடச்சுக்கன்னு எட்டிப்பாக்குது பைக்குவெளிய மூஞ்சியத் தொங்கப்போட்ட மஞ்சச் சீல.

வாசத் தொளிக்கிற வரைக்கும் காத்திருக்குமா? விடிஞ்சிருச்சு பொழுது.



படிப்பகம்

padippakam



# 22

‘‘சீ...சீ... சீ... சின்னத்தா... கெ...கெ...கெ... கெடைய் விட்டு ஓ...ஓ...ஓ... ஒதுங்கி வந்துருச்சு... ஒரு கெ... கெ... கெ... கெடாக்குட்டி. வீ... வீ... வீ... வீட்டுக்கு எடுத்துட்டு வந்துட்டேன்’’.

பிள்ளையத் தூக்கிவச்சிருக்கிற தாய்மாதிரி நெஞ்சுல சொமந்து கொண்டாந்த செம்பிலி ஆட்டங்குட்டியக் கொண்ணவாயன் தாங்கித் தரையில எறக்கி விடவும் புது எடத்தச் செத்தவடம் வெறிச்சு வெறிச்சுப் பாத்த குட்டி மளார்ன்னு ஒரு தவ்வுத் தவ்வி மான் குட்டி மாதிரி ஓடுது.

பிள்ளைக்கு ஒருபக்க மார ஒதுக்கிப் பால் குடுத்துக்கிட்டிருந்த கருவாச்சி, பிள்ளையப் பிரிச்சு மாரை ஒழுங்குபண்ணிக்கிட்டே ‘புடி புடி புடி’ன்னு ஓடிவாரா பிள்ளையத் தூக்கிக்கிட்டே.

படிப்பகம்

padippakam

தவ்வி ஓடிக் காடிக்குள்ள விழுந்துபோன கெடாக்குட்டியக் கொண்ண வாயன் புடிச்சுத் தூக்கி வரவும், புடிக்கி அடங்காம அவன் கையவிட்டு ஒழுகுது கழுத. கைத்தாங்கலாக் கருவாச்சிகிட்ட எறக்கிவிட்டுட்டுப் பின்னங்கால் ரெண்டையும் புடிச்சு உக்கார்றான் கொண்ணவாயன்.

குட்டியத் தொட்டுத் தொட்டுப் பாக்குறா கருவாச்சி. தலையத் தடவுறா; தாடைய உருவுறா; எளங்காது ரெண்டையும் வருடி வருடிப் பாக்குறா. வெள்ள வெளேர்ன்னு இருக்கு தோலு. பளிங்காங் குண்டுக மாதிரி மினுக் மினுக்குன்னு மின்னுதுக கண்ணுக ரெண்டும். ரெண்டுநாளோ மூணு நாளோதான் இருக்கும் குட்டி பெறந்து. பெறந்த பிள்ளையக் கழுவித் தொடச்சு வெயில்ல காயவச்சமாதிரியே இருக்கு குட்டி.

நீங்க வேணும்னா பாருங்க... எல்லா மனுசங்களையும் உத்துப்பாத்தா ஒரு மிருகமூஞ்சி தெரியும்; எல்லா மிருகங்களையும் உத்துப்பாத்தா ஒரு மனுசமூஞ்சி தெரியும்.

கருவாச்சி குட்டிய நேராப் பாத்தா ஆடாத் தெரியுது ; அட்டத்துல பாத்தா ஒரு ஆளாத் தெரியுது. உத்துப்பாத்தா உள்...ளுக்கத் தெரியுது ஒரு சொந்தக்காரமூஞ்சி.

''புடிடா பிள்ளைய''ன்னு அழகுசிங்கத்த அவன் கையில குடுத்துட்டு ஆட்டுக்குட்டியத் தூக்கி மடியில போட்டு மாரோட அழுத்திக்கிட்டா. அவ அழுத்துன அழுத்தத்துல பிதுக்குன்னுப் பிதுங்கிப் பீச்சியடிச்சு முந்தானைய நனச்சுட்டுப் போகுது ரெண்டுமூணு சொட்டுத் தாய்ப்பாலு.

கெடாக்குட்டிக்கு முத்தங்குடுத்து மோந்துபாத்துக்கிட்டே சொல்றா...

''இது காட்ல வந்த பொருள் இல்லடா கொண்ணவாயா. கடவுளாப்பாத்துக் குடுத்தது. ஒத்தையில பிள்ளப் பெத்தன்னக்கே தாயும் பிள்ளையும் தனித் தனியா ஆக்கிட்டா ஒனக்குக் கெடா வெட்டுறேன் தாயின்னு காளியாத்தாவுக்கு நேந்துக்கிட்டேன். என்னைக்கி வெட்டுறது? பொழைச்சுக் கெடந்தன்னைக்கி வெட்டிக் கிரலாம்ன்னு புத்தி சொல்லிச்சு. நீ என்னக்கிப் பொழைக்கிறது.. என்னைக்கி எனக்கு வெட்டுறது... இந்தா வளத்து வெட்டிக்கன்னு கெடாகுட்டியக் குடுத்துருக்கா காளியாத்தா. தெய்வம் தந்த பொருள தெய்வத்துக்கே சேக்கணுமடா''

''ஆட்டுக்குட்டிக்கு ஒரு பே...பே...பே... பேருவைக்கணும் சின்னத்தா''.

''இது செம்பிலி ஆடு இல்லடா செம்புலிடா. பூலித்தேவன்னு வைடா''.

பூ... பூ... பூ... பூலித்தேவா ஒ...ஒ...ஒ... ஒனக்குப் புல்லு வைக்கிறேன் வா''.

வச்சு முடிச்சவுடனயே ஒரு திக்கு வாய் மூலமாப் பேரு தொலங்க ஆரம்பிச்சுருச்சு.

பிள்ளப் பெத்த வீடு; தானியம் அடிச்ச வீடு, வயசுப் பொண்ணு கொலுசுமாட்டி அங்கிட்டும் இங்கிட்டும் அலையற வீடு; கல்யாணம் நிச்சயமான வீடு; மாடு கன்டு போட்ட வீடு. இதெல்லாம் எப்பவும் கலகலப்பாயிருக்கும் பாத்துக்குங்க. இதுல கெடையில கெடாக்குட்டி கெடச்ச வீட்டையும் சேத்துக்கிரலாம் இப்ப.



படிப்பகம்

padippakam

அழுத பிள்ளைக்குப் பால் குடுத்தமாங்கிறதும் ஆட்டுக் குட்டிக்குத் தண்ணிவச்சமாங்கிறதும் ஒண்ணாகிப் போச்சு கருவாச்சிக்கு.

அருகம்புல்லுல எளம்புல்லாப் புடுங்கிக் கூடையில போட்டு வச்சா குட்டி கடிக்க.

புளிச்ச தண்ணியில உப்புபோட்டுக் கலக்கிச் சருவச் சட்டியில தூக்கிவச்சா குட்டி குடிக்க.

அகத்திக் கீரையில எளந்தழையா வாங்கி, கடிக்க ஏதுவான எடத்துல கட்டிவிட்டா.

குட்டியக் கயிறுபோட்டுக் கட்டிவச்சா இழுக்கிற இழுப்புல கழுத்து புண்ணாகிப் போகுமா இல்லையா... அதுக்காகக் கொண்ணவாயனவிட்டுக் கொட்டத்துலக் குச்சிகட்டச் சொல்லி ஒரு படலும் போட்டுவிட்டு இந்த எல்லைக்குள்ள நீ தவ்விக்க வெளையாடிக்க செல்லச்சேட்டை பண்ணிக்கன்னு விட்டுட்டா குட்டிய.

மிருகங்க மரங்களப் பொறுத்துப் பொதுவா ஒரு விதி வச்சிருக்கு இயற்கை. பூமியில நெடுங்காலம் இருந்து வாழப்போறதெல்லாம் நின்னு நிதானமா வளரும். ஆயுசு அற்பமானதெல்லாம் பட்டுன்னு வளந்து பொட்டுன்னு போயிரும். விறு விறுன்னு வளந்து பூத்துக் காஞ்சு ஒஞ்சு போகுது முருங்கமரம். நூறு வருசம் எரநூறு வருசம் நிக்கிற புளியமரம் நான் வாரபோதுதான் வருவேன்னு பையத்தான் வருது. பதினஞ்சு பதினாறு வருசந்தான் ஒரு கெடாய்க்கு ஆயுசு. ஆனா அது வளர்ற வேகம் ஒங்க வீட்டு வேகம் எங்க வீட்டு வேகம் இல்ல. கையில புடிச்சுப் பாத்துக்கிட்டேயிருந்தாலே கண்ணுக்குத் தெரியும் அது வளர்றது.

ரெண்டே மாசத்துல ஒரு கெடாய்க்கான லட்சணத்தோட நின்னு நிமிந்து போச்சு குட்டி.

''ஏலே கொண்ணவாயா! அழகுசிங்கம் நான் பெத்த பிள்ளடா. பூலித்தேவன் என் தத்துப் பிள்ளைடா''. சொல்லிச் சொல்லிக் குளுந்துபோனா கருவாச்சி.

சொன்னதுமட்டுமில்லாம செய்யிறா.

அழகுசிங்கத்துக்குப் பாலு; பூலித்தேவனுக்குப் புளிச்சதண்ணி.

அழகுசிங்கத்துக்குப் பருப்புச்சோறு; பூலித்தேவனுக்குப் பழைய கஞ்சி.

அழகுசிங்கத்துக்கு முட்டாயி; பூலித்தேவனுக்கு ஆமணக்கங் கொழ.

அழகுசிங்கத்துக்குத் தொட்டிலு; பூலித்தேவனுக்குத் திண்ணை.

அழகுசிங்கம் வயித்துக்கு வேப்பெண்ணெய்; பூலித்தேவன் வயித்துக்கு உப்பு.

பிள்ளைக வயித்துல புழுவுக பூச்சிக இருந்தாப் பசி குடுக்காது; தவிரவும் குடுக்கிற பால புழுப் பூச்சிக குடிச்சுட்டுப் போயிரும். அதுக்குத்தான் வேப்பெண்ணெயச் சுடவச்சு எளஞ்சூட்ல புகட்டிவிட்டா பிள்ளைக்கு.

அகத்திக் கொழ அந்தக்கொழ இந்தக் கொழன்னு திங்கிறதுல பூலித்தேவன் வகுத்துக்குள்ளயும் புழுப் பூச்சிக வருமா இல்லையா...



படிப்பகம்

padippakam

அதுக்கொரு வைத்தியம் பண்ணுனா கருவாச்சி... கையில அஞ்சாறு உப்புக்கல்ல எடுத்தா; பூலித்தேவன் வாயத்தெறந்து உப்புக்கல்ல உள்ள போட்டு அலசோ அலசுன்னு அலசிவிட்டா. நாக்குல ஒரு சொர சொரப்புத் தட்டுப்படற வரைக்கும் தேய் தேய்ன்னு தேய்ச்சுவிட்டுத் தூக்கியெறிஞ்சா கொளத்துல நடுத் தண்ணிக்குள்ள. உப்புத் தின்னவன் தண்ணி குடிச்சாகணுமா இல்லையா? தண்ணியக் குடிச்சுக் குடிச்சு வாயில இருந்த உப்ப உள்ள முழுங்கிட்டு, ஒரே நீச்சுல கரைக்கு நீந்தி வந்து கருவாச்சி காலடியில எந்திரிச்சு ஒரு சிலுப்புச் சிலுப்புது பாருங்க... என்னமோ அங்கமட்டும் மழைபெய்யற மாதிரி சிலு சிலு சிலுன்னு தெறிக்குது தண்ணி.

நீச்சுத்தண்ணி- மொச்சத்தோலு- துவரம் பொட்டு- புண்ணாக்குத் தண்ணி - அகத்திக்கீர- ஆமணக்குஎல- வேப்பங்கொழ- கம்பங்கூழு- பாலாட்டாங்கொழ எல்லாம் மாத்தி மாத்திக் குடுக்க ஆறேமாசத்துல பூசுனாப்புல வடிவம் குடுத்து நிக்கிது பூலித்தேவன். பின்பக்கத் தொடையில வயித்த ஒட்டி அழுத்துனா கொழ கொழன்னு புடிபடுது கொழுப்பு. காட்டுல அடிச்ச மின்னல்ல காளான் முட்டுற மாதிரி லேசா முட்டி மொளைச்சு வருது கொம்பு ரெண்டும்.

காவக்காரச் சக்கணன் ஆடு வளக்குறதுல ஒரு வல்லாளகண்டன். ஆடு இருமுனா என்னா அர்த்தம், செருமுனா என்னா அர்த்தம், செனையாடு எத்தன குட்டிபோடும்... அதுல எத்தன கெடா, எத்தன மருக்க... எல்லாம் சொல்வாரு. அவரு ஆட்டுக்குன்னே பெறந்தவரா இல்ல ஆட்டுக்கே பெறந்தவராங்கிறகொழப்பம் ரொம்ப நாளா இருக்கு ஊருக்குள்ள; தீந்த பாடு இல்ல. அவரு தான் சொல்லிக்குடுத்தாரு:

கெடாய்க்கு மட்டும் அப்படியே விட்டுரக் கூடாதாம் மொதல்ல மொளைக்கிற கொம்ப; வெரசா வளராதாம்; வளந்தாலும் பலமிருக்காதாம். நாளப் பின்ன முட்டுக்கெடா எதாச்சம் முட்டவந்தா அடிதாங்காம முறிஞ்சு போயிருமாம். கொம்பு ஒடிஞ்சா ஒடிஞ்ச எடம் புண்ணுவச்சிருமாம்; புண்ணுவச்ச எடம் புழுவு வச்சிருமாம். அதனால புடுங்கி எறிஞ்சிரணுமாம் மொதல்ல மொளைக்கிற கொம்ப. சக்கணன் சொன்னாச் சரியாயிருக்கும்.

கெடாய்க்குக் கொம்பு புடுங்குறா கருவாச்சி.

பிள்ளையத் தூக்கிப் போடுற மாதிரி கெடாயத் தூக்கி மடியில போட்டுக்கிட்டா. செல்லமாக் கொஞ்சித் தாடையத் தடவிக் குடுத்துக் கொம்ப இழுத்துப்பாத்தா; வரல. ஆனமட்டும் திருகிப் பாத்தா; அசையல. கல்லெடுத்து ரெண்டு போடு போடலாமான்னு யோசிச்சா. மொளைச்ச கொம்பு வாரதுக்குப் பதிலா மூள வெளிய வந்துட்டா? வேணாஞ்சாமின்னு விட்டுட்டா. படக்குன்னு குனிஞ்சு வாயில கவ்விக் கடவாப்பல்லுல அணச்சுக் கடக்குன்னு ஒரு கடி கடிச்சா கொம்ப. களக்குன்னு கழண்டு துண்டா வந்திருச்சு கொம்போட கூடு.

கூடு கழண்டோடி விழுந்ததுல குருத்துலயிருந்து கொப்புளிக்குது ரத்தம். கசியிற ரத்தத்துமேல அடுப்புச் சாம்பல அள்ளிச் ‘சப்’புன்னு அடிக்கவும் ‘சட்’டுன்னு நின்னுபோச்சு ரத்தம். அதுக்குப் பெறகு ஆறேமாசத்துல சும்மா திருகிவளந்து திமிறி நிக்குது கொம்பு. ‘கருவாச்சி கெடாக் கொம்பு வருசநாட்டு யானையக் கூட வகுந்துபுடும் வகுந்து’ன்னு பேசுது ஊரு.



படிப்பகம்

பூலித்தேவன்னு என்னா நேரத்துல பேருவச்சாளோ வேங்கப் புலி மாதிரி படர்ந்து நிக்கிது பதினெட்டுமாசத்துல.

ஊருக்கெல்லாம் புலியாத் தெரியிற கெடா அவகிட்ட மட்டும் குட்டிபோட்ட பூனையாக் காலுக்குள்ளயே சுத்திவருது. ஆட்டுமொழி அவளுக்குப் புரியுது. அவமொழி ஆட்டுக்குப் புரியுது.

அவ ஒரு வார்த்தையும் சொல்லாம உதட்டுல 'பிர்ரு'ன்னு ஒலியெழுப்புனா, எக்கால் போட்டு அது எம்புட்டு ஒசரத்துல மேஞ்சுக்கிட்டிருந்தாலும் இந்தா வாரேன்னு ஓடி வந்துருது.

'கெச் கெச் கெச்'ன்னு பல்லி கத்துனமாதிரி கத்துனா, தப்பான பாதையவிட்டுச் சரியான பாதையில கூடிருது.

பூலித்தேவன முன்னுக்கவிட்டு இவ முள்ளுக் கிள்ளு தச்சு உக்காந்து போனா கருவாச்சி வாசனையக் காணமேன்னு முன்னுக்கப் போன கெடா ஓடிவந்து இவ மூஞ்சிய மோந்து பாத்துக் கூட்டிக்கிட்டுப் போகுது.

ஒரு நாள் பூலித்தேவனக் கையில புடிச்சுக் கொளத்தங்கரைமேல வந்துக்கிட்டிருக்கா ஒத்தையில. அலத்தண்ணி அடிச்சு அடிச்சு கரையில ஒரு கல்லு கழண்டு இருந்திருக்கு. கல்லுமேல காலு வச்சவ 'யாத்தே'ன்னு அலறிக் கல்லோட கொளத்துல விழுந்துபோனா. திரும்பிப் பாத்துச்சோ இல்லையோ பூலித்தேவன் மளார்ன்னு தானும் தவ்விருச்சு தண்ணியில. கருவாச்சிய முதுகுல ஏத்திக்கிட்டுக் கசக்கு புசக்குன்னு நீச்சலடிச்சுக் கரையேறிருச்சு . அவளும் கொம்பு ரெண்டையும் கெட்டியாப் புடிச்சுக்கிட்டு, புலிமேல ஏறிவர்ற அய்யப்பன் மாதிரி பூலித்தேவன் மேல ஏறிக் கரைசேந்துட்டா. கரைசேந்தவ பூலித்தேவனக் கட்டிப்புடிச்சு அழுதிருக்கா பாருங்க; ஆத்தா ஞாபகம் வந்திருச்சு.

ஆத்தோட போகத் தெரிஞ்சவளக் காப்பாத்துனா ஆத்தா; கொளத்துல விழுந்தவளக் காப்பாத்துச்சு ஏம்பிள்ள. பெத்தவ என்னியக் காப்பாத்துனது பெரிசில்ல; வளத்தவளக் காப்பாத்திடுச்சே நான் வளத்த புள்ள; இதான் பெருசு. அன்னைக்கிருந்து பூலித்தேவன நெனச்சாக் கண்ணு கலங்குது கருவாச்சிக்கு.

பிள்ளைக்குப் பால் குடுத்துக்கிட்டே கும்பாவுல சோறு போட்டுத் திம்பா; அப்பவெல்லாம் ஒருவாய் தான் தின்னுக்கிட்டு ஒருவாய் ஊட்டிவிடுவா பூலித்தேவனுக்கு.

முன் திண்ணையில பாய்போட்டு, பாயில பிள்ளையப்போட்டுப் படுத்திருப்பா ஒரு ஓரத்துல; அதே திண்ணையில பூலித்தேவனும் படுத்திருக்கும் கொஞ்ச தூரத்துல. அந்த இடைவெளிய நெரப்புமய்யா பூலித்தேவன்கிட்டயிருந்து வர்ற கோமியவாசம். அந்த வாசன தூக்கத்தத் தூக்கியாந்து அவ கண்ல உக்கார வச்சிட்டு ஓடிப்போயிரும். எல்லாருக்கும் புடிச்சிராது அந்த வாசம். சில பேருக்கு அந்த வாசன கொடலப் புடுங்கிக் கூடையில போட்டுட்டுப் போயிரும். மத்தவகளுக்கு அது நாத்தம்; அவளுக்கு அது வாசம்.

ஒரு கதையிருக்கா இல்லையா, மீன்காரிக அஞ்சாறு பேரு சேந்து மீன் விக்கப்போயிருக்காக பக்கத்து ஊருக்கு. வித்துட்டு வெறுங்கூடையத்

padippakam

தலையில கவுத்து வீடு வாரப்ப மழை புடிச்சிருச்சு, அனாதிக்காடு; ஒதுங்க எடமில்ல. சுத்திமுத்தியும் பாத்தா ஒரே ஒரு ஓல வீடு தெரியுது. ஓடிப்போயிஒதுங்குறாக.

அது ஒரு பூக்காரி வீடு.

''விடிய விடிய விடாது மழை, உள்ள வந்து படுங்க''ன்னா பூக்காரி. மீன்கூடைய வெளிய கவுத்து வச்சிட்டு உள்ள போயிப்படுத்தாக; ஒருத்திக்கும் ஒறக்கம் வரல. மீன்வாசத்துலயே பழகிப்போன பொம்பளைகளுக்கு 'நாத்தம்' பொறுக்க முடியல. பெரண்டு படுக்கிறாக; மூக்கப் பொத்திப் படுக்கிறாக; கவுந்து படுக்கிறாக; கதைக்கு ஆகலை; கண்ணு மூடல. பூ வாசத்துல மூச்சுப் போகுது பொம்பளைகளுக்கு. கடைசியா என்னபண்ணாக தெரியும்ல... வெளிய கவுத்து வச்சிருந்த மீன்கூடைய எடுத்து வந்து தலைக்கு வச்சுப் படுத்தாக.

பூநாத்தம் போயி மீன்வாசம் வந்துருச்சா, ஊர்சுத்தப் போயிருந்த ஒறக்கம் ஓடிவந்திருச்சு ஓடி.

வாசமா நாத்தமாங்கிறது யாருக்குத் தெரியும்? அந்தந்த மூக்குதான அறியும்! அப்படித்தான் பூலித்தேவனோட சாணிவாசம் சந்தன வாசம் ஆகிப்போச்சு கருவாச்சிக்கு.

பொடிய எடுத்து மூக்குக்குள்ள இழுக்கிக்கிற ஆளுகளுக்கு ஒரு கிறுக்குப் புடிக்கிற சொகம் இருக்கிறமாதிரி பூலித்தேவன் தோல்ல அடிக்கிற கவிச்சி வாசத்துல ஒரு பித்தேறிப்போச்சு கருவாச்சிக்கு.

பாசத்தக் குடுத்து வாங்க ஆளில்லாமப் போற மனுச மனசு, ஏதாவது ஒரு பிராணி கெடச்சாலும் ஓடிப் போயி ஒட்டிக்கிருது. பூலித்தேவன் மேல பாசமாகிப் போன கருவாச்சி அது நேந்து விட்ட கெடாங்கிற நெனப்பழிஞ்சு போனா.

''யம்மா கருவாச்சி! காளியாத்தாளுக்கு நேந்துவிட்ட கெடாங்கிற. காலா காலத்துல வெட்னாத்தானத்தா காளியாத்தாளுக்கும் சந்தோசம்; கறிதிங்கிற ஆளுக்கும் சந்தோசம். ஒன்றரையிலேந்து ரெண்டரை வயசுதான் கெடாவெட்டுற பதம். கறி 'தீங்கறி'யாயிருக்கும், என்னப்போல பல்லுப்போன ஆளுகளும் தின்னுக்கிறலாம் ரெண்டு துண்டு. ரெண்டரை வயசுக்கு மேல போச்சுன்னு வச்சுக்க வெளங்காது கறி. சவசவன்னு ஆகிப்போகும். பல்லில்லாதவன் ரப்பர் செருப்ப வேகவச்சுத்திங்கிறமாதிரி ஆகிப்போகும் கறி திங்கிறவன் கதை. கெடா பெருங்கெடா, முத்திப் போறதுக்குள்ள வெட்டிப்புடு தாயி பங்குனிப் பொங்கலுக்கு''.

உருமாப் பெருமாத்தேவரு சொல்லிட்டுப்போன சொல்லக் கேட்டதும் ஒறக்கம் வரல கருவாச்சிக்கு. ஊத்தெடுத்து ஒழுகுது கண்ணீரு. நெசந்தான்; இத நான் ஆடா வளந்திருந்தா பலி குடுத்திருப்பேன். பிள்ளையாவில்ல வளத்திருக்கேன். எப்பிடிப் பலிகுடுக்க?

விடிய்ய... அழகுசிங்கத்த இடுப்புல வச்சு பூலித்தேவனக் கையில புடிச்சுக் கருவாச்சி நடந்துட்டா காளியம்மன் கோயிலுக்கு, சாமி கூடச் சண்டை புடிக்க.



படிப்பகம்

padippakam



# 23

“ஆத்தா! காளியாத்தா! நெஞ்சில வஞ்சகமில்ல; கண்ணுல கபடமில்ல. ஒங்கிட்ட ஒப்பிக்க வந்திருக்கேன்; கேட்டுக்க. ஒனக்குக் கெடா வெட்டுறேன்னு நான் நேந்துக்கிட்டது நெசந்தான். இந்தாடியாத்தா வளத்து வெட்டிக்கன்னு கெடாக்குட்டி குடுத்தவளும் நீதான். ஒம்மேல சத்தியமாச் சொல்றேன்; கெடாவ ஒனக்குன்னுதான் வளத்தேன். அதுக்குப் புல்லு வச்சதும் ஒனக்காகத்தான்; புளிச்சதண்ணி வச்சதும் ஒனக்காகத்தான். போகப் போக எனக்குப் புத்தி மாறிப் போச்சு. புல்லுத் திங்க வந்தது புள்ளையாப்போச்சு. ஆடா வந்தது ஆளாப்போச்சு; கைவளப்பு வளத்தேன்; காலுக்குள்ளயே கெடக்கு. ஏங்கூட அது பேசுது; அது கூட நான் பேசுறேன். என் சிணுக்குப்



படிப்பகம்

padippakam

புடிச்ச சீலவாசன அதுக்குப் புடிச்சுப் போச்சு. அந்த மேல்குளியாத தோல்வாசம் எனக்குப் புடிச்சுப் போச்சு. இப்ப எப்பிடி வெட்றது? இந்தா... முழிச்சு முழிச்சு மூக்கொழுகி நிக்கிறானே நான் பெத்த பிள்ள... இவன் பெறப்புக்குத்தான் ஆடு வெட்டறதா நேந்துக் கிட்டேன். பெத்த பிள்ளைக்காகத் தத்துப்பிள்ள தலய வெட்டலாமா? நீயே சொல்லு; நியாயமா? ஆத்தா ஒன் நேத்திக்கடன நான் இல்லேங்கல. தெரிஞ்சதப் பாருன்னு சொல்லிட்டுத் திரும்பிப்போக வரல. எம் பொழப்பு தழப்பு நல்லாருந்தா சந்தையில ஒரு கெடாய வெலைக்கு வாங்கி வெட்றேன். அதுக்கும் எனக்கும் விதியில்லையா... நான் வளத்த பூலித்தேவன் தன்சாவு வந்து செத்தா ஒன் வாசல்ல குழியெடுத்துப் பொதைச்சுக் கும்பிட்டுப் போயிடறேன். என்ன நான் சொல்றது?''

சொல்றதச் சொல்லிப்பிட்டேன்; செய்யிறதச் செஞ்சுக்கன்னு நெனச்சுக்கிட்டு பூலித்தேவன ஒரு கையிலயும் பிள்ளைய ஒரு கையிலேயும் புடிச்சு விறுவிறுன்னு கருவாச்சி வெளியேறிட்டா கோயில விட்டு.

●

சுத்துவட்டாரமெல்லாம் பூலித்தேவன்... பூலித்தேவன்னு... பெரும் பேராகிப்போச்சு. அது வீட்ட விட்டு வெளியேறி வீதிக்கு வந்து, கட கடகடன்னு தலையாட்டிக் கொம்ப ஒரு சிலுப்புச் சிலுப்பி ரெண்டுபக்கமும் அண்ணாந்து பாக்கிற அழகப் பாக்கவே வேலவெட்டியப் போட்டுட்டு வெளிய நிக்கிது ஊருசனம். ''புலிக்கும் பூலித்தேவனுக்கும் சண்ட வந்தா, புலியப் போட்டுத் தள்ளிருமப்பா பூலித்தேவன்''னு பேசுது ஊரு. அஞ்சாறு ஊருக்குப் பொலிகடா அதுதான். அப்பப்பப் போயி வம்சவிருத்தி வேற பண்ணிட்டு வருது.

''பூலித்தேவன் கொம்பத் தொட்டுப்புட்டா ஒரு ரூவா'' பல பேரு பந்தயம் போட்டுத் தொடப்போயி, துண்டக்காணோம் துணியக் காணோம்ன்னு ஓடி விழுந்து ஒளிஞ்சிருக்காக.

மந்தையில இருந்த ஒரு செந்நாயி எப்பவும் இதப்பாத்து உர்று உர்றுன்னு உறுமிக்கிட்டேயிருந்துச்சு. பூலித்தேவன் தலையெடுத்த பெறகு தன் பதவி போச்சேன்னு ★காமாரம் அதுக்கு.

பூலித்தேவன் பதவிய அது பறிக்க முடியலைன்னாக் கூட நானும் இருக்கேன்னு அப்பப்ப உறுமி அறிக்க விட்டுக்கிட்டேயிருந்துச்சு.

அந்தப் பல்லுச்செத்த நாயி தன்னப் பாத்துப் பம்மிப் பம்மிக் குலைக்கிறத, கொஞ்சநாளாவே அட்டஞ்சாச்சுப் பாத்துக்கிட்டே யிருந்துச்சு பூலித்தேவன்.

ஒரு நாள் 'வள்'ளுன்னு அது வாயத் தெறக்கவும் தலையத் தரையில சாச்சுக் கொம்புக்கு மத்தியில கோத்து எடுத்து, ஓங்கி ஒரு சுத்துச் சுத்தி

★ பொறாமை




படிப்பகம்

padippakam

வீசியெறிஞ்சதுல வேலியோரத்துல போயி விழுந்து போச்சு நாயி. முள்ளுமேல விழுந்த வாழப்பழத் தோலு மாதிரி மூஞ்சிதொங்கிக் கெடக்கு பாவம்.

ஒடிஞ்ச ஒரு காலத் தூக்கிக்கிட்டு, இனி ஒன் வம்புக்கே வரல சாமின்னு மூணுகால்ல நடந்துபோனதுதான். அப்பறம் கண்ணுள்ளவுக யாரும் அந்த நாய ஊருக்குள்ள பாத்ததா ஒரு தகவலும் இல்ல.

''கருவாச்சி ஒரு கெடா வளக்குறாளாமப்பா காளமாடு மாதிரி'' முத்தணம்பட்டி, மொதலக்கம்பட்டி, கரட்டுப்பட்டி, பிராதுக்காரன் பட்டி இங்கயெல்லாம் இதே பேச்சாகிப் போச்சு.

பொறுக்குமா கட்டையன் வகையறாவுக்கு?

கட்டையன் ஏற்கெனவே கொம்பு கூரான ஆளு. இதுல கொம்பு சீவி விடவும் ஒரு கூட்டம் கூடவேயிருக்கு. ''நான் சும்மாயிருக்கேன் சும்மாயிருக்கேன்''னு மரம் சொன்னாலும் காத்து ஒறங்கவிடுதா?

''யண்ணே! கட்டையண்ணே! ஒனக்குத் தொழுவெல்லாம் மாடு இருக்கு. என்னா புண்ணியம்? மந்தைமந்தையா ஆடு இருக்கு. எவனும் எட்டியாச்சும் பாத்ததுண்டா? ஒத்த ஆட்ட வச்சுக்கிட்டு 'ஊரே பாரு...நாடே பாருன்'னு கண்காட்சி காட்டிக்கிட்டிருக்காளே கருவாச்சி''

''அவளே ஆம்பளையில்லாத வீட்டுக்கு அவசரத்துக்கு ஆகும்ன்னு ஆட்டுக்கெடா வளத்துக்கிட்டிருக்கா. விடுங்கடா ஏலே விடுங்கடா.''

''அதுக்கில்லண்ணே; அவ என்ன சொல்லி அலையிறா தெரியுமா? என்கெடாய ஒரு கெடா முட்ட வந்துச்சு; என் கெடா அடிச்ச அடியில அது தோல்கிழிஞ்சு தொங்கிப் போச்சு. என் கெடாக் கொம்புல ஒரு நாய் சிக்குச்சு. இது ஒரே தூக்காத் தூக்கி எறிஞ்சதுல அது ஊர விட்டே ஓடிப் போச்சு. என் கெடாக் கொம்புல கட்டையன் மட்டும் மாட்டட்டும். பெறகு, பொதைக்கப் பொணம் கெடைக்காதுன்னு சொல்றாளாமில்ல''

''அப்படியா சொன்னா''

''அதான் கேள்வி''.

''தீர மாட்டேங்குதே திமிரு அத்து விட்டும் பெத்து அலையிற கழுதைக்கு. ஏலே, அவள வழிமறிச்சு வம்புக்கு இழுங்கடா''.

''வேணாம்ண்ணே நல்லால்ல...'' உலகத்துல இன்னம் மிச்ச மிருக்குற நல்லவங்கள்ல ஒருத்தன் சொடக்கெடுக்கிற மாதிரி சொல்லிப்பாத்தான். அவன ஆளுக்கொரு சாத்துச் சாத்திக் கும்மி நொறுக்கிக் கூடையில அள்ளிட்டானுங்க. அவன ஆசதீர அடிச்சுக்கிட்டான் பொண்டாட்டிகிட்ட நித்தம் மிதி வாங்குற ஒருத்தன்.

''போறோம்... ஆடு மாட்டுதா அவ மாட்றாளான்னு பாக்குறம்ண்ணே...''

●





படிப்பகம்

padippakam

அடுப்பெரிக்க ஆகுமேன்னு கவுண்டர்வீட்டு அழிவுகாட்ல பருத்திமாரு புடுங்கிச் சொமந்து வாராக கருவாச்சியும் கனகாம்பரமும்.

சிறுத்த பொம்பளையாயிருந்தாலும் கனத்த கட்டு கருவாச்சி கட்டு. கனத்த பொம்பளையாயிருந்தாலும் கட்டு சின்னக் கட்டு கனகாம்பரத்துக்கு. காடு மேடு ஓடி வம்பாடு படாத பொம்பளைங்கறதனால கனகட்டு சொமந்தாக் கழுத்துச் செத்துப் போகும்ன்னு சிறுகட்டு சொமந்துவாரா கனகாம்பரம். முன்னுக்க போறா கனகாம்பரம்; பின்னுக்க வாரா கருவாச்சி. மூஞ்சிக்கு முன்னால பறக்கிற ஈயோட மல்லுக்கட்டித் தலையத் தலைய ஆட்டிக்கிட்டு இவங்க ரெண்டு பேரையும் தொடுத்து வருது பூலித்தேவன்.

பாதையில கெடந்த கருவேலமுள்ளு ஒண்ணு, போயிக்கிட்டிருந்த கருவாச்சியப் போட்டுப் பாத்துருச்சு. முள்ளுத்தச்ச கால மேல தூக்கிக் கட்டுமேல இருந்த கையக் கீழ எறக்கி, தச்ச முள்ள அவ எடுக்கவும், வாரேன்னு ஒரு பாதி முள்ளு வெளிய வந்திருச்சு; போறேன்னு ஒரு பாதி உள்ள போயிருச்சு.

அதுக்கே கலங்கிப்போனா கனகாம்பரம்: ''அய்யய்யோ முள்ளா?''

''பொழப்பே முள்ளுக்குள்ள கெடக்கு. இதுல உள்ளங்கால்ல முள்ளுத்தச்சா உசுரா போயிரும்?''

முறிஞ்ச முள்ளத் தூக்கி எறிஞ்சா கருவாச்சி.

''நீயாச்சும் முள்ளுக்கு வாக்கப்பட்டு முறிச்சுப் போட்டுட்ட... முள்ளோடதான என் பொழப்பே போய்க்கிட்டிருக்கு''.

''இப்ப என்ன சொல்றான் ஓம்புருசன்?''

''கட்னா மச்சினிச்சியக் கட்டுவேன்... இல்லாட்டிக் காவி கட்டுவேங்கிறாரு''.

''மச்சினிச்சிக்கும் பிள்ள பெறக்கலேன்னு வச்சுக்க... காவிதான் கட்டியாகணும் கடைசியில. மூணு வருசமா ஒன்னிய வாழாவெட்டியாவே விட்டுட்டான்பாரு, பாறாங்கல்லுக்குப் பெறந்த பய. அவன் ஒன்னையும் நெனைக்கல; சாகப்போற நாளையில ஒங்கப்பனையும் நெனைக்கலையே''.

''அந்த ஆளுக்கு எங்க மூணுபேருமேலயும் ஆசை இல்ல கருவாச்சி; ஒரே நோக்கம் மோதிரத்து மேலதான்''.

''இதென்னடி கூத்தா இருக்கு. மோதிரமா பிள்ள பெறப்போகுது முழுகாம இருந்து? எனக்கு எங்க ஆத்தாள நெனச்சாலும் கண்ணீர் வருது. ஒங்கப்பன நெனச்சாலும் கண்ணீர் வருது. ஒங்களக் கரைசேப்பாரோ இல்ல கரை சேந்துருவாரோ தெரியலையே. ஒண்ணா மண்ணாக் கெடந்து ஒண்ணா மண்ணா வளந்த நம்ம ரெண்டு பேரு பொழப்பும் இப்படி ஆகிப் போச்சே! எனக்கு அப்பப்ப ஒரு ஏக்கம் வரும் கனகு''.

''என்னா ஏக்கம்?''



படிப்பகம்

padippakam

''பொம்பளப்பிள்ளைக வயசு பத்துப் பன்னண்டோட நின்டுபோகக் கூடாதா? அந்த ஓடை மண்ணு, நெலாவெளிச்சம், கிளித்தட்டு வெளையாட்டு, அவிச்ச மொச்ச, அச்சு வெல்லம், ஆத்தா கிட்ட ஒரு அடி, அப்பன்கிட்ட ஒரு வசவு, தாத்தன்பாட்டி மடியில பொதைஞ்சு ஆத்தா அடிச்சுப்புட்டான்னு அழுகுற சொகம், வெவர மில்லாத மனசு; வெள்ளிந்தி வயசு, அது அப்படியே இருந்திருக்கப் படாதா? பெரிய மனுசியாகாமலே கெழவியாகி, போதும் பொழப்புங்கிறப்பப் போய்ச் சேந்திரக் கூடாதா?''

பொழப்பு சலிச்சுப்போறபோதோ, சிக்கலுக்குச் சிக்கெடுக்க முடியாமப் போற போதோ, இதுக்கு மேல என்னாலானாது ஏதுமில்லேன்னு நடை செத்துப் போகும்போதோ மனுசக்கூட்டம் இயற்கைக்கு விரோதமாக் கற்பன செஞ்சு பாத்துக்கிருது. அந்தக் கற்பன இந்தா இந்தா இந்தான்னு இழுத்துக் கடவுள்கிட்டப்போய் முடிஞ்சிருது.

இதுக்குமேல ஈசன் தலையெழுத்து என்னான்னு பாப்போம்ங்கிற முடிவோட பருத்திமாரு சொமந்து போகுதுக பாவப்பட்டதுக ரெண்டும்.

●

பொழுதுபோற நேரம்.

ஊர் எல்லையில அரசமரத்தடிக் கல்திட்டுமேல சீட்டு வெளை யாடிக்கிட்டிருக்காக அஞ்சாறு வெடலப் பயக. மொளகாப் பழமாயிருக்கு கண்ணுல செவப்பு; முழுச் சாராய மப்பு.

அரச மரத்த ஒரு ஒரசு ஒரசித்தான் போகுது ஒத்தையடிப்பாதை. கனகாம்பரம் கருவாச்சி பூலித்தேவன் மூணு உருப்படிகளும் அவுகளக் கடந்துதான் போகணும்னு தெரிஞ்சுபோச்சு சீட்டு வெளையாட்டு ஆளுகளுக்கு.

கட்டையன் வீட்ல கஞ்சாவும் கஞ்சியும் குடிக்கிற மூணு பயக வம்பிழுக்க முடிவு பண்ணிட்டானுக.

பத்தடிதூரத்துல வந்துக்கிட்டிருக்காக பருத்திமாருக்காரிக. கையில இருந்த சீட்டக் கவுத்துப் போட்டுட்டு, தகரத்தொண்டையில பேச ஆரம்பிச்சான் ஒருத்தன்.

''ஏய்! அங்க பாருங்கடா! ரெண்டு மாருல எந்த மாரு பெருசு...? முன்மாரா? பின் மாரா?''

''பின்னுக்க வாரது கட்டு நல்லாருக்கு; மாரு சிறுசாஇருக்கு. முன்னுக்க வாரது கட்டு நல்லால்ல; மாரு பெருசாஇருக்கு''.

பருத்திமாரப் பேசறமாதிரி சாடை பேசுறாக சண்டாளப் பயகன்னு தெரிஞ்சுபோச்சு கருவாச்சிக்கு.

நின்னா. நான் பாத்தா நீங்க எரிஞ்சுபோயிடுவீங்கடான்னு ஒரு மொற மொறச்சா; நடந்துட்டா.




படிப்பகம்

padippakam

''போயிட்டாளே! வம்பு இழுத்தாலும் வராது போலிருக்கே ''வம்புக்கு அடுத்த அம்பு போட்டான் அக்கா தங்கச்சிகூடப் பெறக்காத அயோக்கியப் பய.

''மாரு... வீட்டுக்குப் போறதா? வெலைக்குத் தாரதா?''

மூணு எட்டு முன்னபோனவ படார்ன்னு திரும்பி அந்தத் தறுதலப்பய தலையில துக்கி எறிஞ்சா பருத்தி மார. மப்புல கெடந்த பயக குப்புன்னு எந்திரிச்சானுக.

ஆத்தாளுக்கு என்னமோ ஆகப் போகுதுன்னு புரிஞ்சு போச்சு பூலித்தேவனுக்கு;

தலைய மடக்கிக் கொம்ப முன்னால நீட்டிக்கிட்டே ஒரே தவ்வாத் தவ்வி ஏறுச்சு கல் திட்டுமேல.

நாப்பது நாப்பத்தஞ்சு வீசை எடையுள்ள கெடா மொத்தமா ஆளுகமேல முழுசா வந்து விழுந்ததுல இன்னதுதான் நடக்குதுங்கிற சேதி முதுகுத்தண்டு வழியா மூளைக்குப் போகல ஒருத்தனுக்கும்.

காலுக்குக் கீழ ரெண்டுபேரப் போட்டு மிசுங்கவிடாம மிதிச்சுக்கிட்டுக் குத்தி எறியுது கொம்புல சிக்குன ஒருத்தன.

அவன் 'யாத்தே'ன்னு அலறி, தாடை கிழிஞ்சு தனியாப் போயி விழுகிறான்.

கெடா நடத்துற வெறிக்கூத்தப்பாத்து ஓடி ஒளிஞ்சு போனானுங்க ரெண்டு மூணு பேரு.

காலுக்குக் கீழ கெடந்தவன்கள்ல ஒருத்தன் இடுப்புல இருக்கிற சூரிய எடுக்க எக்கி எக்கிப் பாத்தான். அதைக் கண்டுபுடுச்சு பூலித்தேவன். ஒரு அடி பின் எட்டு வச்சு, உழுகுற கலப்பை மாதிரி தலைய பூமியில சாச்சு, அவன் வகுத்துல ஆரம்பிச்சுத் தொண்டக்குழி வரைக்கும் நூல் புடிச்ச மாதிரி கொம்புலயே ஒரு கோடு கிழிச்சிருச்சு.

இன்னும் வெறியடங்காமத் தவ்வித் தாண்டி ஓடுது; கட்டையனுக்குச் சாயங்காலச் சாராயம் வாங்கப் போனவன முட்டிச் சாய்ச்சதில அவன் தள்ளி ஓடி விழுந்துபோனான் சாணிக்குழியில.

பூலித்தேவன் தானாத்தான் அடங்கணும் இனி தனக்கு அடங்காதுன்னு ஒரு ஓரமா ஒதுங்கிட்டா கருவாச்சி.

''கொம்புல குத்துப் பட்டவனுக்கு ஒண்ணும் ஆயிரப்படாது; பொழைக்க வச்சிரு சாமி''.

குலதெய்வத்தையும் கும்புட்டுக்கிட்டா.

சேதி போயிருச்சு கடலக் காட்டுல உடும்புக்கறி உரிச்சுக்கிட்டி ருந்த கட்டையனுக்கு.

●



படிப்பகம்

padippakam

அடுத்த நாள் அந்தக் கூத்து நடக்கும்ன்னு ஈ,காக்கா, குருவிகூட நெனச்சிருக்காது.

உச்சிவெயில்ல வெள்ளக்கரட்டுல புல்லுக் கடிச்சுக்கிட்டிருந்த பூலித்தேவன அஞ்சாறு கெடாப்பயலுக சேந்து உச்சுனாப்புல தூக்கிக் கொண்டுவந்துட்டானுக பளிங்கான் பாறைக்கு.

''ஒன்னியக் காயடிக்காம வளத்துட்டாளா கருவாச்சி? அதான் கொம்புல குத்திக் கொல்லப்பாக்குறியா? ஆளத் தேடிவந்து அள்ளையில குத்துறியா? இன்னிக்கு ஓயப் போகுதுடி ஒங்கதை'' பூலித்தேவனுக்குக் ★காயடிக்கத் தயாராகிட்டான் கட்டையன்.

முரட்டாளுக நாலுபேரு வேணும் ஒரு கெடாயக் காயடிக்க.

கொம்பு ரெண்டையும் அழுத்தி அமுக்கிக்கிட்டான் ஒருத்தன். மிசுங்கவிடாம முன்னங்கால் ரெண்டையும் உக்காந்து புடிச்சுக்கிட்டான் ஒருத்தன். பூலித்தேவன் பின்னங்கால் ரெண்டையும் அகட்டி வசதிபண்ணி அசங்காமப் புடிச்சுக்கிட்டான் ஒருத்தன். கல்லுமேல சாக்கப்போட்டு, பூலித்தேவன ஒரு தினுசா உக்காரவச்சு அதோட கனத்த காயில துணியச் சுத்தினான் கட்டையன்.

காயின்னா பெருங்காயி; கைக் கடங்காத காயி. உள்ளங்கை ரெண்டும் ஒண்ணு சேந்து மூடுனாலும் மூடமுடியாத பெரும் பொருளு.

பூலித்தேவன் காயை இறுக்கிப்புடிச்சான் கட்டையன்; தொங்கு சவ்வுல சரடு கட்டி இறுக்கி ஒரு முடிபோட்டான். காய ஒரு கையில புடிச்சுக்கிட்டு மறுகையில நெரி நெரின்னு நெரிச்சான்; கும்மு கும்முன்னு கும்முனான். ஒரு சின்னக் கல்ஒலக்கைய எடுத்து ஒரு பக்கமா நச்சு நச்சுன்னு குத்தினான்.

பை இருக்க, படக்படக்குன்னு ஒடையுது உட்சவ்வு. உசுரு போற வலியில கத்திக் கதறுது பாவம் வாயில்லாத சீவாத்தி.

மறுகாயும் அடிச்சான்; உட்சவ்வு ஒடைச்சான். கல்ஒலக்கைய வச்சுக் காயில பொய்க்குத்தாக் குத்திக் கெட்டியா இருந்த காயப் பிதுக்கிப் பிதுக்கி நசுக்கி நசுக்கிக் குறுண குறுணையா ஆக்கிக் கூழாக்கிட்டான்.

கூழ் தண்ணி தண்ணியா ஆகுறவரைக்கும் கசகச கசன்னு கசக்குறான். ''என்னிய விட்டுருங்க என்னிய விட்ருங்க''ன்னு ஆட்டு மொழியில கத்துது ஆவி துடிக்கிற சீவன்.

கட்டியாயிருந்த காயி தண்ணிப்பையாத் தொங்க ஆரம்பிச்சதும் அடிப்பாகத்துல தேங்குன தண்ணிய மேல ஏத்தி முடிச்சுப் போட்டு விட்டுட்டு; தண்ணிய அள்ளி, சப்புச் சப்புச் சப்புன்னு அடிச்சான் குத்திக் குத்திக் கூழாப் போன காய்மேல.

---

★ ஆண்மையழித்தல்



படிப்பகம்

padippakam

''இப்ப விட்ருங்கடா''

எல்லாரும் விட்டு விலகிட்டாங்க.

''புலியாமில்ல புலி... காயடிச்சு விட்டுட்டேண்டி; இன்னைக்கிருந்து நீ பூன''.

எந்திரிக்கத் தெம்பில்லாம விழுந்து கெடக்குற பூலித்தேவன் அவன வெறிச்சு ஒரு பார்வ பாக்குது.

அந்தக் கண்ணுலருந்து கண்ணீரும் ஆண்மையும் ஒண்ணு சேந்து வடிஞ்சு ஒழுகிற மாதிரியே இருக்கு.

மசுங்குன இருட்டுல ஓடியாந்த கொண்ணவாயன், தலையிலயும் நெஞ்சுலயும் அடிச்சுக்கிட்டுக் கட்டிப்புடிச்சு அழுகிறான் காயடிச்ச கெடாய.





படிப்பகம்



# 24

மூணுநாளைக்கு எரையெடுக்காது காயடிச்ச கெடா. புல்ல மோந்தும் பாக்காது; புளிச்ச தண்ணியில வாயும் வைக்காது.

பூலித்தேவன் கொம்புல தலையச் சாச்சு, தாடையத் தடவிக்கிட்டே அது அழுகிறதப் பாத்து அழுகிறா கருவாச்சி. ''மானங் கெட்ட பயலுகளாச் சேந்து ஒன்னிய ஊனப்படுத்திட்டாங்களே பூலித்தேவா'' அவ அழுக, ஆடு அழுக,

padippakam

என்னமோ ஏதோன்னு பிள்ளையும் சேந்தழுக, கொண்ணவாயனும் கூடவே அழுக, பாதி எழவு வீடாகிப் போச்சு கருவாச்சி வீடு.

காயடிக்கிறது ஒண்ணும் புதுசில்ல; ஊர்நாட்ல உள்ளதுதான். கெடா வர்க்கத்துக்கு மனுசன் வழிவழியாச் செஞ்சு வந்த துரோகந்தான். ஆனா, அதுக்கும் ஒரு கணக்கு இருக்கு.

ஆறே மாசத்துல வயசுக்கு வந்திருது கெடா. காலும் தலையும் மத்ததும் நீண்டு நிமிந்திருது. ★பொலிச்சல் நெனப்பு வந்துட்டா அப்புறம் அதப் புடிக்கமுடியாது கையில. திமிரும்; தெனவெடுத்து அலையும்; முத்தங்குடுக்க வந்தாலும் முட்டவரும்; பொலிச்சல் போடக் கிறுக்குப் புடிச்சு அலையும். பொட்டைய நோங்கிட்டாப் புல்லுக் கடிக்காது. 'அதே' நோக்கமா அலைபாயும். மேய்ச்சல மறந்து 'மேய' அலையிறதுனால நீத்துப்போகும் ஒடம்பு. எலும்புல கறி சேராது; கறியில கொழுப்புச் சேராது. கறிதிங்க ஆடு வளக்கிறவன் சும்மா இருப்பானா? கனத்த வெதைய நசுக்கிக் காயடிச்சு விட்டுர்றான். காயடிச்ச பெறகுதான் மேல பாத்த கெடா கீழ பாக்கும். ஒழுங்காப் புல்லுக் கடிக்கும்; தவிச்ச நேரம் தண்ணி குடிக்கும்; ஆட்டம் பாட்டம் அடங்கிரும்; வீரமெல்லாம் வத்திப்போகும். ஒரு கைப்பிள்ள கூப்பிட்டாலும் 'வாரேஞ்சாமி'ன்னு வந்திரும். பொட்டை வர்க்கம்ன்னு ஒண்ணு இருக்கிறதே அதுக்கு மறந்துபோகும். காயடிச்ச மூணே மாசத்துல அது புதுச்சதை போடும் பாருங்க... சும்மா காஞ்சு கெடந்த கம்மா கார்த்திக மாசம் பெருகுறமாதிரி கட கட கடன்னு கறிகட்டும்.

ஆனா, நேந்துவிட்ட கெடாய யாரும் காயடிக்கிறதில்ல. ''ஆத்தா கெடாயாவது... அப்பன் கெடாயாவது...'' காயடிச்சு விட்டுட்டான் கட்டையன்.

காளியாத்தா கோயிலுக்கு வந்து கண்ணுரெண்டுலயும் அடைமழை கட்டி அழுகுறா கருவாச்சி. ''நேர்த்திக்கடன முறிச்சிட்டேன்னா என் நெத்தியில அடிச்சுட்ட ஆத்தா? கோவம் எம்மேலன்னா என் ரெண்டுகண்ணுல ஒரு கண்ண எடுத்திருக்கலாம். ஆனா என் ரெண்டு பிள்ளையில ஒரு பிள்ளையத் தண்டம் வாங்கிட்டியே! அதுசரி! நேத்திக்கடன் கட்டாதவள நெஞ்சுலஏறி மிதிச்சுட்டியே. ஒன் பொருள ஒச்சம் பண்ணுன ஆளுகள இன்னம் மிச்சம் வச்சிருக்கியே. எப்பத் தண்டம் வாங்கப்போற?''

ஆத்தாகிட்ட ஒப்பிச்சுட்டு அவ அழுதுபோறா. கஞ்சி ஊத்துறவ பின்னாலயே ஒரு நொண்டி நாய்க்குட்டி அண்டிப்போற மாதிரி, வீரம் கொறஞ்சு வீரியம் கொறஞ்சு அவ கொசுவம் பாத்துக் கூடவே போகுது பூலித்தேவன்.

●

ஊரே வையுது கட்டையன.

''கருவாச்சிமேல இருக்கிற கோவத்துல கெடாயப் பொட்டையாக்கி

★ கலவி



படிப்பகம்

விட்டுட்டானே பொண்டுகப்பய?''

''எதுத்துக் கேக்க ஆளு இல்ல. மொள்ளமாறிப் பயலுகளை எல்லாம் கஞ்சா வாங்கிக் குடுத்துக் கையில போட்டுக்கிட்டான். இப்படியேவா போயிரும் இவன்காலம்? எளைச்சவன வலுத்தவன் அடிச்சா வலுத்தவன வல்லூறு அடிக்காதா?''

காத்துவழி வருது எல்லாம் கட்டையன் காதுக்கு. சிரிச்சுக்கிர் றான்; அவன் சிரிச்சா நல்லால்ல; நரி சிரிச்சா நல்லாவா இருக்கும்?

●

கொளத்தங்கரையில அன்னைக்கி அப்படி ஒரு சம்பவமாகிப் போகும்னு கட்டையனும் நெனைக்கல; ஆடுகளும் நெனைக்கல.

களையெடுத்து முடிச்ச சோளக்காட்டப் பாத்துட்டு ஒத்தையில கரைவழியா வாரான் கட்டையன். வந்தவன் கரையிலயே ஒரு கிளுவம் புதரோரம் உக்காந்துட்டான் ஒண்ணுக்கிருக்க. கரைவழியா வந்த செம்பிலி மந்தைகள அவன் கவனிக்கல பாவம். உக்காந்தவன் தன்னமறந்து தன் நாமம் கெட்டு அந்த இளம் சோகத்துல கரைஞ்சு கண்ணமூடி இருக்க, செம்பிலி ஆடுக ஒண்ணொண்ணாக் கடந்து போகுதுக அவன் முதுக ஒரசிக்கிட்டு; அவன் எந்திரிக்கல.

அவனுக்கு என்னா நம்பிக்கைன்னா சொக்கத்தேவன்பட்டி சுத்து வட்டாரத்துல தன்ன முன்னுக்கப் பாத்தாலும் பின்னுக்கப் பாத்தாலும் ஆடுமாடு முதற்கொண்டு அத்தன சீவராசிகளுக்கும் அடையாளம் தெரியும். தான் ஒண்ணுக்கிருக்கிறதப் பாத்தா ஆனையே ஒதுங்கிப் போகுமே, ஆடா ஒதுங்கிப் போகாது? கட்டையன் நம்பிக்கை வீண் போகல. அவனக் கண்டு ஏதோ ஒரு கெட்ட ஆவி உக்காந்திருக்குன்னு எல்லா ஆடுகளும் ஒதுக்கித்தான் போச்சுக ஒரு ஓரமா.

மந்தையில மையத்துல வருது பூலித்தேவன். அது கொம்பு நீளம்; உடம்பு பெருசு; கரை வேற சிறுசு. அது கொஞ்சம் ஒதுங்கிப் போனாலும் கொளத்துல விழுந்திரும். அதனால சித்தம் போக்கு சிவம் போக்குன்னு தன்போக்குல போகுது. அப்பத்தான் அந்தக்கதையாகிப் போச்சு.

கட்டையன அது கடக்க... அந்த நேரம் பாத்து அது மூக்குமேல ஒரு முள்ளு ஒரச... அந்த அதிர்ச்சியில அது கொம்ப அங்கிட்டும் இங்கிட்டும் ஒருஆட்டு ஆட்ட... அது அவன் முதுகுல குத்திச் சட்டையக் கிழிக்க... அவன் என்னமோ ஏதோன்னு எந்திரிச்சுத் திரும்ப... அப்பக் கடந்து போன கனத்த வகுறு அவன எம்பி ஒரு தள்ளுத் தள்ள... நெலகுலஞ்சு பள்ளத்துல சரிஞ்சு உருண்டு கத்தாழம் பொதர் ஓரமா காயாத நரகல் மேல விழுந்து போனான் கட்டையன்.

சீ! வேட்டியெல்லாம் ஆகிப்போச்சே வெளிக்கிருந்த பொருள்ன்னு அருவருப்பாகி உருண்டு பெரண்டு தடால்னு எந்திரிக்க இடுப்புல குத்தி இழுக்குது இண்டம்புதரு.

padippakam

முள்ளப்புடுங்கி எறிஞ்சிட்டு மூக்குவெடைக்கிற கோபத்துல கரை மேல கண்ணச் செலுத்திப் பாக்குறான் கட்டையன், இந்தச் சம்பவத்துக்கும் எனக்கும் ஒரு சம்பந்தமும்இல்லசாமின்னு போயிக்கிட்டேயிருக்கு பூலித்தேவன்.

●

அஞ்சாறு நாளாவே சொகமில்ல பிள்ளைக்கு. அழுதுக்கிட்டே யிருக்கான் அழகுசிங்கம். ரவ்வும் பகலும் ஒறங்கல; சோறுதண்ணி செல்லல; இருட்டப்பாத்தா அலறி எந்திரிக்குது பிள்ள. வெளிச்சத்தப் பாத்தாலும் வீல்ன்னு கத்துது. சுட்டுக் கெடக்கு நெத்தி; குளுந்து கெடக்கு வகுறு.

ஊர்ப்பட்ட மருந்து குடுத்துப் பாத்தா வைத்தியச்சி; ஒண்ணும் ஆகல.

''இருளடிச்சிருக்கு; பிள்ள பயந்து போயிருக்கு. இனிமே மருந்து மாயம் கேக்காது ஆத்தா; மந்திரிச்சாத்தான் கேக்கும்.''

வைத்தியச்சியே இப்பிடிச் சொன்னதுக்கு அப்பறம் அவளுக்கு மறுபேச்சு இருக்கா? பிள்ளையத் தூக்கி நடந்துட்டா வடவீர நாயக்கன்பட்டிக்கு.

வடவீர நாயக்கன்பட்டி நாயக்கரு மந்திரிக்கிறதுல மன்னன். வேப்பங்கொழ நாயக்கருன்னுதான் சொல்றது அவர. சொந்தப்பேரு மறந்து போற அளவுக்குத் தொழில் பெருத்த கையி. வத்திப் போனாலும் கரையெல்லாம் பச்சைகட்டி நிக்கிற ஆத்தாங்கர மாதிரி, வயசானாலும் லட்சணம் மாறாத ஆளு.

பச்ச உருமா; செவப்புக் கடுக்கன்; கரும்புச் சக்கை மாதிரி கனத்த மீச. கழண்டு விழுந்திற்றமாதிரி ரெண்டு கண்ணு; ஈரக்கொலைய இழுத்து இறுக்கிப் புடிக்கிற பார்வை.

கனத்த கம்பளிய விரிச்சு உட்காந்தாரு; தாய்மடியில பிள்ளைய உக்கார வச்சாரு. பொங்கப் பானையில புதுத்தண்ணி ஊத்தி ஒடிச்ச வேப்பங்கொழைய ஊறப்போட்டாரு. கண்ணமூடி முணு முணு முணுன்னு ஏதோ மந்திரம் சொன்னாரு. வேப்பங்கொழையச் சட்டுன்னு எடுத்து, பிள்ள மூஞ்சியில தண்ணி தெறிக்க அடிச்சு மந்திரிச்சாரு. வேப்பங்கொழத்தண்ணிய 'நீ குடி மொதல்ல'ன்னு தாய் குடிக்க வச்சாரு; 'பிள்ளைக்கும் குடு'ன்னு குடுத்தாரு.





அழுகை அடங்கிப் போச்சு அழகுசிங்கத்துக்கு.

நாயக்கரு மந்திரிச்சதும் 'குணக்குறி தெரியுதே'ன்னு குளுந்துபோனா கருவாச்சி; மந்திரம்போட்டு மந்திரிச்சதுல புடிச்ச பீடை விட்டுப்போச்சுங்கறது அவ கணக்கு. ஆனா அது இல்ல காரணம்.

குண்டாச்சட்டியத் தலையில கவுத்த மாதிரி நாயக்கரு கட்டியிருந்த உருமா- சிவீர்ன்னு கண்ணுல அடிக்கிற கடுக்கன், வாயமூடித் தாடையத் தடவுற மீச, 'அழுதேன்னா கொன்னே புடுவேன்'னு கண்டிப்பாச் சொல்ற

படிப்பகம்

கண்ணு... இதுகளையெல்லாம் பாத்துப் பாத்து இந்தப் புதுபயத்துல பழைய பயத்த மறந்து போனான் பய.

இந்த 'நெசம்' நாயக்கருக்கும் சின்னப்பயலுக்கும் மட்டும்தான் தெரியும்.

இது தெரியாததனால கண்ணீர் முட்டுது கருவாச்சிக்கு.

இன்னதுதான் காணிக்கைங்கிறது இல்ல; குடுத்தத வாங்கிக்கிட்டுக் கும்பிட்டு அனுப்பிருவாரு நாயக்கரு.

''ஏதோ என்னால ஆனது''ன்னு காலே அரைக்காரூவா காணிக்கை வச்சா; பிள்ளையத் தூக்கிட்டுப் புறப்பட்டு வந்துட்டா.

●

வெள்ளையாங்கரட்டுல வெயில் தாந்திருச்சு.கரடுகள்ல ஆடு மாடு மேய்க்க வந்த ஆணும் பொண்ணும் நக்கிலிச்சாம் பாறையில மொது மொதுன்னு வந்து குமுஞ்சு போச்சுக.

''பாறைக்கறி போடுறாகளாம்...

பாறைக்கறி போடுறாகளாம்...''

ரொம்பநாளாக் கவுச்சி காணாத நாக்குல எல்லாம் எச்சி ஊறி ஒழுகுது.

தின்டுபாத்த ஆளுகளுக்குத்தான் தெரியும் - பாறைக் கறி மாதிரி ருசியான கறி அம்பத்தாறு தேசத்துலயும் இருக்க முடியாதுன்னு.

அடுப்புங்கெடையாது; சட்டியுங்கெடையாது; ஆனாலுங்கறி திங்கலாம்.

என்ன பண்ணுவாக தெரியுமா?

ஒரு பாறையில தண்ணி ஊத்திக் கசகசன்னு கழுவி விடுவாக; சுத்தமாயிரும் பாறை. பாறையக் காயவிட்டு அது மேல கட்டையப் போடுவாக. கட்டையில தீ மூட்டி எரிய விடுவாக. கட்டை எரிய எரியச் சுட்டுப் போகும் பாறை. கட்டை எரியும் போதே, உப்பும் மொளகாத்தூளும் போட்டுப் பச்சைக்கறியப் பெரட்டு பெரட்டுன்னு பெரட்டி வச்சுக்கிரணும். கட்டை எரிஞ்சு ஒஞ்சதும் சாக்க எடுத்து ரெண்டு வீசு வீசுனா சாம்பல் பறந்திரும். கொதிச்சுக் கெடக்குமய்யா பாறை; வெரல் தொட்டா நகம் வெந்து போகும். பெரட்டி வச்ச கறிய அதுல அள்ளி எறியணும். சும்மா 'சொய்ங் சொய்ங்'கிற சத்தத்தோட சுருங்கிவேகும் கறி. எண்ணெயெல்லாம் எதுக்கு? எல்லாக் கறித் துண்டுகள்லயும் உருகுற கொழுப்பு ஓடி ஓடிச் சேரும். வெந்ததும் உள்ளங் கையில எடுத்து ஊதி ஊதி வாயில போட்டா- தேவாமிர்தம் தேவாமிர்தம்ங் கிறாகளே அதுகூட இம்புட்டுச் சூடா இருக்குமான்னு தகவல் இல்ல; இது இருக்கும்.

அன்னைக்குப் பாறைக்கறி போட ஆள் சேத்தான் கட்டையன். சுட்டுக்கிட்டிருக்கு பாறை; உரிக்கப் போறாங்க ஆட்டை.

padippakam

''ஏ பக்கிகளா! ஓடிப் போறீகளா இல்ல ஒங்களயும் பாறைக்கறி போட்டுப் பங்குபோடவா?''

ஒரு அமட்டு அமட்டவும், ஆடு மாடு மேய்க்கிற கூட்டம் ஒரே ஓட்டமா ஓடி எட்டி நின்னு வேடிக்கை பாக்குது.

பாறைக்கறிபோடக் கொண்டாந்த ஆட்ட சடார்ன்னு சாய்க்குறாக தரையில. அது மிசுங்காம இருக்க, பின்னங்கால் ரெண்டையும் பின்னிக் கொளம்போட கொளம்பு மூட்டி மாட்டிட்டாக.

முன்னங்கால் ரெண்டுல ஒருகால ஒதறவிட்டு, ஒருகால மட்டும் அமுக்கிக்கிட்டு, பெருவிரல வச்சுக் கழுத்துல ஒரு அழுத்து அழுத்திச் சங்க லேசா ஒதுக்கிட்டு, சங்குக்குக் கீழ கத்திவச்சான் சலம்பல் பாண்டி.

ஆடு அறுக்கவே பெறந்தவன் அவன். ஆத்தா தொப்பூழ்க் கொடியக்கூட அவ அறுக்குமுன்ன இவன் அறுத்துட்டு வந்தவன்னு பேசுவாக ஊர்ல.

அழுத்துன கத்தி அறுத்ததுமே பீச்சியடிக்குது ரத்தம். அமுக்குன ஆளுகளத் தூக்கித் தூக்கிப் போட்டுத் துடிக்குது ஆவிபோற ஆடு.

பரம்பரையா ஆடு அறுக்கிறவன் மொத்த ரத்தத்தையும் கத்தி முனையிலேயே வடிய விடுவான்; அப்படித்தான் வடியவிட்டான் அவனும். நெம்பிப்போச்சு சருவச்சட்டி. பீச்சியடிச்ச ரத்தவரத்து கம்மியானதும் அறுத்த சங்க மடக்குன்னு ஒடிக்க அது 'படக்கு'ங்கிற சத்தத்தோட மிச்சமிருந்த ரத்தத்தையும் துப்பிருச்சு துப்பி.

அறுபடுற எல்லா ஆட்டுக்கும் மொதல்ல ரத்தம் போயிரும்; அப்பறம் சிறுநீர் பிரியும்; சிறுநீர் பிரிய உயிரும் போயிரும்.

''உசுர் போயிருச்சு... உசுர் போயிருச்சு...''

எட்டிநின்னு கத்திக் கைதட்டுது ஆடு மாடு மேய்க்கிற கூட்டம்.

''அந்தா பாரு தோல உரிக்கிறாக...''

பின்னங்கால் சப்பையில ஆரம்பிச்சுத் தொடைவழி புகுந்து சும்மா ஆகாயத்துல அம்புபோற மாதிரி பரபர பரன்னு பரவுது கத்தி.

அதே மாதிரி மறு தொடையிலயும் கத்திவச்சுக் கீறிக் கிழிச்சு, கருவேலங்கிளையில தலைகீழாத் தொங்கவிட்டு என்னமோ வாழப்பழத்த உரிக்கிற மாதிரி மேலயிருந்து உரிச்சுவாரான் தோல.

பெருவிரல சதையில பதிச்சு அழுத்தி அழுத்தி இழுத்தா சரசரன்னு வந்திரும் தோலு. ஆனா ரெண்டே ரெண்டு எடத்துல மட்டும் வரமாட்டேன்னு வம்பு பண்ணும். ஒண்ணு 'காயை'க் கடக்கும் போது; ரெண்டு நெஞ்சத் தாண்டும் போது. அந்த ரெண்டு எடத்துல மட்டும் லேசாக் கத்திபோட்டு ஓட்டை விழுகாம உரிக்க ணும். ரெண்டு எடத்துலயும் முத்தம் வைக்கிற மாதிரி கத்தி வச்சு லேசா உருவணும். வெடலப்புள்ள மொதல்மொதல்ல கட்டின சீல



படிப்பகம்

padippakam

அள்ளையில குத்துனா அவுந்திரும் பாருங்க... அப்படிக் கழண்டு துண்டா வந்து விழுந்து போகும் தோலு.

பெருங்கனம் கனக்குது தோலு; தோல்மட்டும் பத்துவீச இருக்கும் போலருக்கு.

சும்மா வெண்ணெயப் பூசிவச்ச மாதிரி வெண்சவ்வும் செங்கறியுமாத் தொங்குற ஆட்ட உயிர்த்தலத்துல இருந்து நெஞ்சுவரைக்கும் ஒரு கீறுக் கீறி, அட்டத்துல ரெண்டுபக்கமும் ரெண்டுகீறு கீறவும் ‘குபுக்’குன்னு வெளியவந்திருச்சு கொடலு.

பெருங்கொடலச் சுத்திக் கொழுப்போ கொழுப்பு! கொழுப்புல ஒரு கீத்த அறுத்து வாயில போட்டுத் தேங்காச்சில்லு மாதிரி நறுச் நறுச்ன்னு தின்னும் பாத்துக்கிட்டான் சலம்பல் பாண்டி.

கொடலு, ஈரலு, நுரையீரலு மூணையும் எடுத்துத் தனிச் சட்டியில துண்டாப் போட்டுட்டு, கழுத்துக்கறி, முன்சப்பைக்கறி, நெஞ்சுக்கறி மூணையும் அறுத்தறுத்துச் சுடுபாறையில எறியிறான் சலம்பல் பாண்டி.

சதை சதையா வந்துவிழுகவும் சங்கீதம் படிக்குது பாறை. ‘கறிகறிப்ரியா’ ராகமோ என்னமோ?

‘‘அண்ணனுக்கு மொதல்ல ஈரலச் சுட்டுக் குடுங்கடா’’

‘‘தின்னும் போதே ரத்தம் ஊறுதடா’’ன்னு வெறியேறிப் பேசுறான் கட்டையன்.

அப்புறம் என்ன சொல்ல! காடே கறி மணக்குது; சாராயத்த ஊத்தித் தாளிச்சுப்பிட்டாங்க தாளிச்சு.

●

வடவீர நாயக்கன்பட்டியில மந்திரிச்சு, பொடிநடையாப் பொழுசாய வீடு வந்து சேந்த கருவாச்சி பிள்ளையப் படுக்கப்போட்டுட்டு அடுப்புக் கூட்ட ஆரம்பிச்சா.

நெய் மாதிரி லேசாச் சீமத்தண்ணி தெளிச்சுப் பருத்திமாரப் பத்தவச்சா.

மேயப்போன தொழுமாடுகளும் மந்தையாடுகளும் ஊருக்குள்ள வந்திருச்சுக.

மாட்டுமணிச் சத்தத்துல அந்தச் சாயங்காலமே நெம்பி வழியுது, இவ வீட்டு மாடுகன்டு மட்டும் காங்கல; பூலித்தேவனும் வரல; கொண்ணவாயனும் வந்து சேரல.

புல்லுகில்லு சேத்துப் பொழுதுபோயி வருவான்னு இருந்தவளுக்கு நேரம் ஆக ஆக நெஞ்சு பதறுது.

வாசலப்பாக்குறா; வாசலத் தாண்டித் தெருவுக்கு ஓடிவாரா. தெருவுக்கு வந்து வந்து திரும்பித் திரும்பிப் போறா.





படிப்பகம்

padippakam

வரல; வர்ற அறிகுறியும் தெரியல. நல்லா இருட்டிருச்சு.

தண்ணியக் கூடப் பத்தவச்சிரலாம் என்னியப் பத்தவைக்க முடியாதுன்னு முரண்டுபண்ற காடா வெளக்கத் திரியத் திரிச்சுவிட்டு, அடுப்புல கெடந்த நெருப்பெடுத்து அவ பத்த வைக்க...

தெறந்தவாசல்ல 'தொப்புட்டீர்'ன்னு விழுந்துச்சு என்னமோ.

என்னாது அது? நனஞ்ச சீலமாதிரி என்னமோ விழுந்து கெடக்கே.

கையில புடிச்ச வெளக்கோட ஓடிவந்து பாத்தா.

நெளி நெளி நெளின்னு கெடக்கு ஒரு பொருள் தரையில.

தொட்டுப் பாத்தா;

தோலு.

எடுத்துப் பாத்தா;

ஆட்டுத்தோலு.

மோந்து பாத்தா;

''பூலித்தேவா!''

உசுர்கிழியக் கத்துனவ தோல்மேல மயக்கம் போட்டு விழுந்துட்டா மல்லாக்கா.

விளக்கவிட்டு வெளிய குதிச்சு வாயிலயும் வயித்துலயும் அடிச்சுத் துடிச்சுத் துடிச்சு எரியுது திரியில இருந்த தீபக்கொழுந்து.



படிப்பகம்

padippakam



## 25

''குய்யோ முறையோ''ன்னு ஊரே கூடிநிக்குது கட்டையன் வீட்டு வாசல்ல. தகவல் தெரிஞ்சு மொதலக்கம்பட்டி ஆளுகவேற சாமியாடி வந்துட்டாக சண்டபுடிக்க.

''பொறுமையா இருங்கப்பா''ன்னு சொல்லிப்பாக்குதுக உள்ளூர்ப் பெருசுக.

படிப்பகம்

padippakam

''பொறுமை என்னய்யா பொறுமை? இன்னைக்கி ஆட்டக் கடிச்சான்; நாளைக்கி மாட்டக் கடிச்சு மனுசனக் கடிப்பான். பாத்துக்கிட்டே பல்லாங்குழி ஆடச் சொல்றீகளா?''

''பதறாதீகப்பா. பஞ்சாயத்துல பேசிக்கிருவோம்''.

''பஞ்சாயத்தென்னய்யா பஞ்சாயத்து? ஒலக்கையக் களவாண்டு புட்டான்னு பிராது குடுத்தா, துரும்பு அபராதம்ன்னு தீர்ப்புச் சொல்ற பஞ்சாயத்து. விடுங்கய்யா, தகப்பனையும் மகனையும் சேத்துப் பாறைக் கறிபோட்டு, காக்கா நீ தின்னு கழுகு நீ தின்னுன்னு பரசிவிட்டுப்போயிர்றோம் பரசி''.

இம்புட்டுச் சலம்பல் நடக்குது. தகப்பனும் மகனும் வீட்டுக்குள்ள இருக்காங்களே தவிர வெளிய வந்த பாடக் காணம்.

''ஏ கூப்பிடுங்கடா அவன, இல்ல உள்ள வந்து கொல்லுவோம்''.

''ஏம்ப்பா இந்தத் தவ்வுத் தவ்வுறீகளே, கொலக்குத்தமா ஆகிப்போச்சு?''

''ஒன்வீட்டு ஆட்ட நீ வெட்டிக்கிட்டா அது கொலை இல்ல; என் வீட்டு ஆட்ட நீ வெட்னா அது கொலதான்''.

'கிறீச்'ன்னு தொறக்குது தலவாசக் கதவு.

என்னமோ விருந்துக்கு வந்தவுகள விசாரிக்க வந்த மாதிரி சத்தமில்லாம நடந்து வாராரு சடையத்தேவரு. அவர் வழக்கமா வெத்தல இடிக்கிற கல்லுமேல தன்ன இடுப்புக்குக் கீழ கொஞ்சங் கொஞ்சமா எறக்கி வச்சு உக்காந்துக்கிட்டாரு.

பையில இருந்த பாக்க எடுத்து வெத்தல ஒரல்ல போட்டு 'டொக்கு டொக்கு'ன்னு தட்டிக்கிட்டே கேக்குறாரு: ''ஆடு சுட்டுத் தின்டவன் என் மகன்தான்னு சாட்சி இருக்கா?''

''சாட்சி வேணுமா சாட்சி... வரச்சொல்லு ஒம் மகன; வகுத்த வகுந்து உள்ளயிருக்குற ஈரல எடுத்து இந்தான்னு காமிக்கிறோம்.''

''இருக்கலாம்... ஈரல் கூட இருக்கலாம். அது ஒங்க வீட்டு ஆடுன்னு எழுதியிருக்குமா ஈரல் மேல.''

''யப்பா சடையத்தேவா! நீ வாய் பெருத்த ஆளு; வக்கீல் மாதிரி பேசுவ. சாட்சி இல்லாம நியாயம் கேக்க வர மாட்டமப்பா''- உருமாப் பெருமாத்தேவரு பொறுப்பா பதில் சொல்ல, ''என்ன சாட்சி''ன்னு சாணியில விழுந்த மறுமாத்தத்த எடுக்கிறமாதிரி சடையத்தேவரு அலட்சியமாக் கேட்கவும் கடுப்பாகிப் போனாரு காவக்கார சக்கணன்.

''கொண்ணவாயன அடிச்சு உப்பந்தரிசு ஓடையில போட்டது, மாடுகளப் புடிச்சு ஓடசாலி மரத்துல கட்டி வச்சது, கருவாச்சி கெடாய நக்கிலிச்சான் பாறையில வெட்டிப் பாறைக்கறி போட்டது எல்லாத்துக்கும் கண்ல பாத்த சாட்சி இருக்கு. என்னமோ நாங்கள்லாம் கேணப் பயகமாதிரி கிறுக்குக் குத்தாத பெருசு. ''



படிப்பகம்

padippakam

''இப்ப எல்லாரும் கூடி எதுக்கு வந்திருக்கீக?''

'தண்டம் வாங்க வந்திருக்கோம்''- உள்ளூர்ப் பெருசு நிதானமாச் சொல்ல, ''தண்டத்த நீங்க வாங்கிக்கங்க,அவன் தலைய நாங்க வாங்கிக்கிறோம்''ன்னு மொதலக்கம்பட்டி ஆளுகள்ல ஒருத்தன் எருமைத் தொண்டையில கரகரன்னு பேச, ''எவன் தலையடா வாங்குவீக''ன்னு வீச்சரிவாளோட வெளிய தவ்வி வந்துட்டான் கட்டையன்.

அதுக்குள்ள அவன் கைத்தடிகளுக்குத் தகவல் போயி வேல்கம்பு வெட்டரிவாளோட வந்து குமுஞ்சுபோனாக.

அவன் ஒண்ணு சொல்ல, இவுக ஒண்ணு சொல்ல, அவன் அரிவாள எடுக்க, இவுக சூரிய எடுக்க ''வேணாம்டா வெட்டுப்பலி குத்துப்பலி ஆகிப்போச்சுன்னா ஏழு தலமொறைக்கும் எந்திரிக்க முடியாதடா''ன்னு பெருசுக சத்தம் போட்டு அமத்த, கடைசியில 'பதிமூணே கால்ரூவா' தண்டத்தோட முடிஞ்சு போச்சு பஞ்சாயத்து.

●

காளியம்மன் கோயில் வாசல்ல மொனையில்லாத மம்பட்டி, மூக்கில்லாத கடப்பாரைய வச்சுக் கண்ணீரு ஒழுக ஒழுகக் குழி தோண்டிக்கிட்டிருக்கா கருவாச்சி.

கால்சட்ட வழியா ஒண்ணுக்குப் போயிக்கிட்டு மூக்கு ஒழுக அழுது நிக்கிறான் சின்னப்பய அழகுசிங்கம்.

பொணங் கெடக்குற மாதிரி அட்டத்துலேயே கெடக்கு பூலித்தேவன் தோலு.

''நான் ஒன்னிய ஏய்க்க நெனைக்கல; நீ என்னிய ஏச்சுப்பட்டியே ஆத்தா. வளத்த பாசத்துல புத்தி மாறிட்டேன்; வெட்ட மாட்டேன் விட்ருன்னேன். வெட்ட வச்சுட்டியே. ஒன் வாசல்ல வந்து கெடா அறுத்திருந்தா ரத்தம் ஒனக்கு; கறி எங்களுக்கு. இப்ப ஒனக்குக் காணிக்கை செலுத்த நான் புடிச்சு வளத்த பூலித்தேவன் தோல் தானாத்தா இருக்கு; இந்தா ஏத்துக்க.''

தோலத்தூக்கிக் கடைசியா ஒருதடவ மோந்து பாத்துட்டு அதுல மஞ்சத் தண்ணி தெளிச்சுக் கும்புட்டுப் போட்டா குழியில; அழுதா. ''வாடா மகனே''ன்னு அவன இழுத்துப் பெறங்கையில மண்ணுத் தள்ள வச்சா. மிச்ச மண்ண மம்பட்டி வச்சு இழுத்தா; குழிய மூடுனா. மம்பட்டிய எறிஞ்சிட்டு தலைப்பிள்ளையப் புதைச்சவ மாதிரி தலையில அடிச்சு அடிச்சு ஒப்புச்சொல்லி அழுதா.

''பெத்தெடுத்து நான்வளத்த
பெரியமகன் மண்ணுத்தள்ள
தத்தெடுத்து நான் வளத்த
தங்கமகன் காங்கலையே!
புல்லு மணம் மாறலையே!
புழுக்கை இன்னும் காயலையே!
காயடிச்ச பிள்ளையப்போய்
நாயடிச்சுத் தின்னுருச்சே!





படிப்பகம்

பெறவின்னு ஒண்ணிருந்தா
பிள்ளையாக நீ வாடா!
ஆடாகப் பெறந்தாலும்
அடிவயித்தில் சுமப்பனடா!''

குழிமேல விழுந்து அழுது கெடந்தவளப் பதறிப்போயித் தூக்குனாக பஞ்சாயத்துக்குப் போயி வந்த ஆளுக.

''ஆத்தா செத்தே பொழச்சுக் காமிக்கிறவ - ஆடு செத்தாப் பொழைக்க மாட்டியா? எந்திரி தாயி எந்திரி.''

அவ கையில குடுத்த தண்டப்பணம் பதிமூணேகால் ரூவாயையும் காளியம்மன் கோயில் உண்டியல்ல போட்டுக் கண்ணத் தொடைச்சுக்கிட்டா கருவாச்சி.

''பிள்ளைக்கும் சொகமில்ல; ஒன் ஒடம்பும் சுடுது. வா எங்க வீட்டுல வந்து ரெண்டுநா இரு; வா.''

கனகாம்பரமும் பவளமும் கருவாச்சியக் கூட்டிட்டுப் போறாக கையோட.

''அழுகாதடா மகனே!'' அழகுசிங்கத்தத் தூக்கித் தோள்ல வச்சுக்கிட்டான் மொதலக்கம்பட்டி அன்னக்கொடி; கருவாச்சியக் கட்டிக்கிற வேண்டிய மொறமாமன்.

மொதலக்கம்பட்டி அன்னக்கொடி நல்ல வளத்தி. ஆள் கறுப்புன்னாலும் அம்சமான அழகன். சின்ன வயசுல ஊளமூக்கு ஒழுக கருவாச்சிய மொதலக்கம்பட்டிக்குத் தூக்கிட்டுப் போறப்பவெல்லாம் ''அந்தா பணியாரம் கேட்டு ஆத்தாகிட்ட அழுதுக்கிட்டிருக்கான் பாரு அவன்தான்டி ஒம் புருசன்''னு அன்னக்கொடியக் காமிப்பா பெரிய மூக்கி. குடும்பம் இடையில நொந்து நொடிச்சுப் போச்சு; பஞ்சம் பொழைக்க வடக்க கண்காணாத தேசத்துக்குப் போயித் தகவல் அத்துப் போச்சு. உண்மையா ஒழச்சு, நேர்மையாப் பொழைச்சு முறுக்குச் சுட்டு வித்து நிமிந்திருச்சு குடும்பம். காலுக்குச் செருப்பு, கைக்குக் கடிகாரம்ன்னு ஏகத் தடபுடலாகி சொந்த ஊருக்குத் திரும்பி நெலபுலம் வாங்கி வட்டிவாசிக்கெல்லாம் குடுத்து, வாழ்வு பெருத்துப் போனாலும், பழைய பந்தம் பாசம் உறவு மட்டும் கரையாத கல்லா நெஞ்சுக் குழியிலயே கெடக்கு.

சுப்பஞ்செட்டியார் வீட்டு உள் திண்ணையில உக்காந்து அழகுசிங்கத்தை இழுத்து மடியில உக்காரவச்சுக்கிட்டு ''முட்டாயி வாங்கிக்கடா மகனே முட்டாயி''ன்னு உள்பையில கையவிட்டு எட்டணாவ எடுத்து நீட்னான் அன்னக்கொடி.

வாங்கக் கைய நீட்டிட்டு அன்னக்கொடிய ஒரு பார்வை ஆத்தாள ஒரு பார்வை மாத்திமாத்திப் பாத்தான் அழகுசிங்கம்.

''நாங்க அசலாள் இல்லப்பா. ஒன் சித்தப்பன்தான்; வாங்கிக்கடா ராசா வாங்கிக்க.''

காசை அவன் சட்டைப் பையில போட்டுவிட்டுக் கண்ணையும் தொடச்சுவிட்டான்.

''அழுகப் பெறந்த வம்சமாடா, நீயும் ஒங்க ஆத்தாளும்? ஆம்பள இல்லாத வீடுன்னுதானடா ஆட்டப் புலி அடிச்சுப்புடுச்சு. ஒன் சித்தப்பன் ஒன்கூடவே இருக்கேன்னு வச்சுக்க... இது நடந்திருக்குமா? ஒங்க வீட்டுச் சாணியிலயாச்சும் ஈ ஒட்டியிருக்குமா?''

கதவுல முதுகுசாச்சுக் கால்நீட்டி உள்வீட்டுல ஒக்காந்திருந்த கருவாச்சிக்குத் துணுக்குன்னுச்சு.

அவன் இன்னும் சத்தம் கூட்டிப் பேசுறான் காதுகேக்கட்டும் கருவாச்சிக்குன்னு.

''எச்சிபட்டுப் பண்டம் பழுதாகிப் போச்சுன்னு நான் நெனைக்கலப்பா; பொதைச்சு வச்சு எடுத்தாலும் தங்கம் தங்கந்தானடா மகனே. ஏங்கூடவே இருந்திர்றியா?''

பையில போட்ட துட்ட எடுத்துத் தொட்டுத் தொட்டுப் பாத்துக்கிட்டு ஆகட்டும்ன்னு தலையாட்டினான் அழகுசிங்கம்.

உள்ளயிருந்து கத்திச் சொன்னா கருவாச்சி, ''துட்டத் திருப்பிச் சித்தப்பன் பையிலயே போட்டுர்றா செல்லம்''

அவன் போடல; கையில வச்சுக்கிட்டுக் கனாக் கண்டுக்கிட்டே யிருக்கான்.

''நீ வெவரமாயிருக்க. ஆத்தாளுக்குத்தான் பத்தாது... சின்ன வயசுலயே மனசுல முடிச்சுப்போட்டு விட்டாகளா... அவுத்தாலும் அவுக்க முடியல; அத்தாலும் அக்க முடியல. மனசு மறுகுதடா மகனே. வசதி இருக்குடா சித்தப்பனுக்கு; வந்திரு. அப்பன் நானிருக்க நீங்க அனாதை ஆகலாமாடா? நாளப்பின்னப் பள்ளிக்கூடத்துல போயிச் சேரப் போறன்னு வச்சுக்க; ஒம் பேரு என்னான்னு கேட்டா என்ன சொல்லுவ?''

எழுத்துக் கூட்டி எழுத்துக்கூட்டி அந்தச் சின்னப்பய சொன்னான்; 'அ...ல...கு... சி... ங்...க...ம்''

''சரி.. என்னா அழகுசிங்கம்னா என்ன சொல்லுவ?'' பய மேலயும் கீழயும் முழிச்சான்.

உள்ளயிருந்து ஆத்தாகாரி கத்துனா; ''க.அழகுசிங்கம்! ''

இதெல்லாம் கேட்டுக்கிட்டேயிருந்த பவளம் இப்ப உள்ள புகுந்தா. ''இன்னும் பழச மறக்கல போலருக்கு. க... கட்டையன் தானே....?''

''இல்ல; கருவாச்சி.''

கொஞ்சநேரம் அது ஆளில்லாத வீடா அமைதியாகிப் போச்சு.

''குடுத்த துட்ட சித்தப்பன் பையில போடுறா''ன்னு போடச் சொல்லிட்டு அவன அடிச்சு இழுத்துத் தூக்கி உள்ள ஓடிப்போனா கருவாச்சி.

padippakam

சொக்கத்தேவன்பட்டியக் கடக்கிறவரைக்கும் அன்னக்கொடி குனிஞ்சதல நிமிரல.

கண்ணுல விழுந்த தூசியத் கொடைக்கிறவன் மாதிரி கண்ணீரையும் தொடைச்சுக்கிட்டான் தலையில கட்டுன துண்ட அவுத்து. அவ பொழப்புக்குள்ள வந்த ஒரு நல்ல ஆத்மாவும் வேட்டிய மடிச்சுக்கட்டிக்கிட்டுப் பொடி நடையாப் போயிருச்சு.

●

ரெண்டாம் நாளு கருவாச்சி லேசாப் பேச்சு குடுத்தா: ''ஓம் புருசன் இங்க வாரதே இல்லையா கனகம்?

''வருவாக. வாழப்பழச் சீப்பு ஒண்ணத் தோள்ல போட்டு முறுக்கு மிச்சரு சிலேபின்னு வாங்கி ஒண்ணாச் சரடு சுத்தி ஒரே பையில போட்டு எப்பவுமே சாயங்காலம் வருவாக. என் பொண்டாட்டிய விடிஞ்சு கூட்டிட்டுப் போறேன்னு 'ராத்'தங்கல் தங்குவாக. 'சோலி' முடிஞ்சதும் சொல்லாமப் போயிருவாக.''

''இது என்னாடி பொழப்பு...? வாழவும் வாழாம; தீக்கவும் தீக்காம...? எதுக்கும் ஒரு முடிவு இருக்கு. இதுக்கு இருக்கா இல்லையா?''

''நான் ஒரு முடிவுக்கு வந்துட்டனக்கா. காஞ்ச கத்தாழ நாராப் போயிட்டாரு எங்கப்பன். ஒரு மகளக் கட்டிக் குடுத்தும் வாழல; ஒரு மகளக் கட்டிக் குடுக்கவே முடியல. நான் மண்டையக் கிண்டயப் போட்டுட்டாப் பொம்பளப் பிள்ளைக ரெண்டும் அனாதிக்காட்ல அலைஞ்சிருமேன்னு பொலம்பிப் பொலம்பி இத்துப் போனாரு. பொழப்புதான் நல்ல பொழப்பா இல்லாமப் போச்சு அவருக்கு. சாவாவது நல்ல சாவு சாகட்டுமேன்னு அக்கா தங்கச்சிக கூடி ஒரு முடிவு பண்ணிட்டோம்.''

''என்னா முடிவு பண்ணீக?''

''என் புருசனுக்குக் கழுத்து நீட்ட என் தங்கச்சியச் சம்மதிக்க வச்சுப்புட்டேன்.''

கருவாச்சி ஒரு பேச்சும் பேசல.

''ஒனக்கு அது புடிக்காத முடிவா இருக்கலாம். ஓம் பொழப்புலயும் எம் பொழப்புலயும் நம்மளுக்குப் புடிச்சதா நடந்துக்கிட்டிருக்கு?''

''இது ஒங்க அப்பனுக்குத் தெரியுமா?''

''தெரியும்''

''என்ன சொன்னாரு?''

''ஓட்டச் சட்டின்னாலும் கொழுக்கட்ட வெந்தாப் போதும்ன்னு பெருசா இழுத்துப் பெருமூச்சு விட்டுச்சு பெருசு.''

பொம்பளைக ரெண்டு பேரும் போயிட்டா இந்தக் கெழவன் கதி என்னான்னு யோசிச்சு யோசிச்சு மண்ட காஞ்சு போனா கருவாச்சி.



படிப்பகம்

padippakam

மறுநாள் பொழுசாய வந்துட்டானய்யா முத்துக் காமு, காடுமேடு மேஞ்ச ஆடு மாடு வீடு சேர.

இந்த மொற வாழப்பழச்சீப்பையும் முறுக்கையும் காணோம்.

செக்குல தலையக் குடுத்தவன்மாதிரி தலையில எண்ணை ஒழுக வந்தவன், கையில மஞ்சமசேர்ன்னு ஒரு மஞ்சப்பைய வச்சிருக்கான்.

பிரிச்சுப் பாத்தா அரவீசை ஆட்டுக்கறி - எலும்பு கிலும்பு இல்லாம.

''குழம்பு வை பாதிய; வறுத்திரு பாதிய''ன்னு சொல்லிப்புட்டு வாசம் புடிக்க உக்காந்துட்டான் வாசல்லயே.

''யண்ணே! எப்பக் கூட்டிட்டுப் போகப் போற எங்க கனகத்த?'' கருவாச்சி லேசா அவன அசைச்சுப் பாக்குறா.

''நானா மாட்டேங்குறன்...? ஒருத்திக்கு ரெண்டுபேரையும் வச்சுப் பொழைக்கிறேங்கறேன். மாமனுக்கும் மனசு இல்ல; மச்சினிச்சிக்கும் மனசில்ல.''

சுவர்ல பூச்சிபுடிக்கிற பல்லிய வேடிக்கை பாத்துக்கிட்டிருந்த சுப்பஞ்செட்டியாரு, பல்லியப் பூச்சி முழுங்கினதும் பார்வையத் திருப்பனாரு.

''மனசக் கல்லாக்கிக்கிட்டுச் சொல்றேன் தாயி. கல்யாணம் பண்ணி அவளையும் கூட்டிட்டுப் போகச் சொல்லு''. இத்துப்போன போர்வையை இழுத்துப் பொத்தி இருமிக்கிட்டே சொன்னாரு சுப்பஞ்செட்டியார்.

''பழைய பாக்கியக் கழிச்சி விட்ருங்க. பவளத்தையும் கூட்டிட்டுப் போயிடறேன்.''

''பழைய பாக்கின்னா?''

''வளவியிலேயே பொழங்கிப் பொழங்கி மாமனுக்கு வைரமோதிரம்ங்கிறது மறந்தே போச்சே.''

''ஒரு ஈயச் சொம்பு வாங்கக் கூட வக்கில்லாமக் கெடக்கேன். வைரமோதிரத்துக்கு எங்க போவேன் மாப்பிள்ள?''

செத்தவடம் அங்க சத்தம் செத்துப்போச்சு; யாரும் பேசல. தட்டுல வச்ச சோளக்களியில ஈ ஒண்ணு மாட்டிக்கிட்டு முழிக்கிறதப் பாத்துக்கிட்டே கழுத்துல கெடந்த தங்கச் சங்கிலியச் சப்பிக்கிட்டு நிக்கிறான் அழகுசிங்கம். அவன உத்து உத்துப் பாத்தா கருவாச்சி. அந்த மூணு பவுன் சங்கலியக் படக்குன்னு கழத்துனா. அழுத பிள்ளைய அணச்சு வாயப் பொத்துனா.

''இந்தாங்க; இத வைங்க. நான் நகை போடப்போறதில்ல. நகை போட்டு அழகுபாக்க எனக்குப் பொம்பளப் பிள்ளையும் இல்ல. இத உருக்கி ஒரு மோதிரம் செஞ்சு குடுத்திருங்க. என் தங்கச்சிக பொழப்பு கரையேறட்டும், இவளுக போனாப் போறாளுக. ஒங்களுக்கு என்னைக்கும் கூட இருக்கப் போற மக நாந்தான்.''





படிப்பகம்

padippakam

படுத்துக் கெடந்த மனுசன் படார்ன்னு எந்திரிச்சு அவ கையப்புடிச்சு மூஞ்சியில வச்சுக்கிட்டு மாடுமாதிரி அழுதாரு.

அக்காதங்கச்சிக ரெண்டுபேரும் நெஞ்சுல கை வச்சு நின்னுபோனாக.

''எங்களுக்குக் குடுத்துட்டு நீ என்ன செய்வ தாயி? என்ன செய்வ?''

பொத்தல் விழுந்த போர்வைய எடுத்துக் கண்ணத் தொடச்சுக்கிட்டே கதற்றாரு சுப்பஞ்செட்டியாரு.

''எனக்கு என்னய்யா இருக்கு? ஒரு முழக் குச்சுன்னாலும் ஒழுகாத குச்சு; கால் வயித்துக் கஞ்சின்னாலும் கடனில்லாத கஞ்சி.''

இந்தக் குழப்பத்துல இன்னும் கறித்தண்ணி வைக்கலையேங்கிற கவலையில, காதுல இருந்த அரைப்பீடி பத்தவச்சு, புண்பட்ட நெஞ்சப் புகையவிட்டு ஆத்துன்னு ஆத்திக்கிட்டிருக்கான் முத்துக்காமு.





படிப்பகம்

padippakam



# 26

''கேட்டுக்க மாமு...'' ஆரம்பிச்சான் முத்துக்காமு.

''ஆனி இருவத்தேழு நாளு நல்லாருக்கு. அதுதான் கடைசி முகூர்த்தம். அதவிட்டா ஆடி வந்துரும். நாளைக்கு ஒரே நாள்தான் ஊட இருக்கு. ஒன்னிய நானு கொட்டுக்காரனக் கூப்பிடச் சொல்லல; கூத்துக் காமிக்கச் சொல்லல; பந்தல்போடச் சொல்லல; பந்தி வைக்கச் சொல்லல; ஒத்தமோதிரம் போட்டு ஒட்டிவிட்ரு கழுதைகள எங்கூடங்கறேன். ஆனி இருவத்தேழும் போயிருச்

படிப்பகம்

padippakam

சுன்னு வச்சுக்க, நான் போயிருவேன். அப்பொறம் ஒன் விக்காத வளவிக மாதிரி அவளுகள வீட்லயே வச்சுக்க; நான் எவளையோ வச்சுக்கிர்றேன்.''

வீடே கேக்க வீரவசனம் பேசிட்டு, ''வார வழியில பாத்தேன். அன்னஞ்சியில ஆடு உரிக்கிறாக இன்னைக்கின்னு'' தணிஞ்ச குரல்ல சொன்னான்.

விடியுது.

சுப்பஞ்செட்டியார் ஆணியில தொங்குன சட்டைய எடுத்தாரு; உள்ள கைய விட்டுப் பெரட்டித் தலை வழியாப் போட்டாரு. கழுத்தத் தாண்டி எறங்குறப்ப ஒரு இழு இழுத்தாரு பாருங்க... தோள்பட்டத் தையல்மூட்டு பிரிஞ்சு இதுக்குமேல என்னியக் கொல்லாத சாமின்னு சர்ரு புர்ருன்னு சத்தம் போட்டுருச்சு. தொத்தக் கொடையக் கையில எடுத்தாரு; இத்த செருப்ப மாட்டிக்கிட்டாரு. சில வருசமாவே சீக்காக் கெடக்குற செருப்புக; ஊசி குத்தாத எடம் ஒரு எடம் பாக்கியில்ல. ''காதறுந்தும் ஒங்க பேச்சக் கேக்கறது நாங்க மட்டுந்தான்'' இளிச்சுக் கிட்டே சோகமாச் சொல்லுதுக செருப்புக.

''போயிட்டு வாரேன் கண்ணுகளா... பொழுதிருக்க வந்திடறேன். உருமாப் பெருமாத் தேவருகிட்டச் சொல்லிருக்கேன். நாளைக்கி வீட்டளவுல விசேசம் வச்சுக்கிரலாம். கவுண்டர் வீட்டுல ஒரு கோழிக் குஞ்சு கடன் கேட்ருக்கேன்; புடிச்சமாதிரி செஞ்சு குடுங்க புதுமாப்பிளைக்கு. நாளைக்கி ஒரு பொழுது மட்டும் பொறுத்துக்கச் சொல்லுங்க; கல்யாண வீட்டுல கவிச்சி ஆகாது.'' பொடிநடையாப் புறப்பட்டாரு சுப்பஞ்செட்டியாரு.

●

பொன்னாசாரிக பெருத்த ஊரு நிலக்கோட்டை. முப்பது மைல் சுத்தளவுக்கு அங்கதான் எல்லாரும் நகை செய்ய வருவாக. அந்த ஊர் ஆசாரிககிட்ட தொழில்சுத்தமும் இருக்கும்; நேர்மையும் இருக்கும்.

உமி ஒட்டுல ஊதி ஊதிக் கரியக் கங்காக்கிக்கிட்டிருந்த அங்காசாரி சுப்பஞ்செட்டியாரப் பாத்ததும் ''வாய்யா, வாய்யா, வாய்யா''ன்னாரு வாய் நெறைய.

''கடவுளா நெனச்சு வந்திருக்கேன் கைவிட்றாதய்யா.'' பையில கையவிட்டு எடுத்து நீட்டினாரு கருவாச்சி குடுத்த தங்கச் சங்கிலிய.

''என்ன பண்ணுவீகளோ, ஏது பண்ணுவீகளோ தெரியாது. இன்னைக்கிப் பொழுதுக்குள்ள ஒரு வைரமோதிரம் வேணும். கூலி குடுக்கச் சத்தில்ல; குறுக்கொடிஞ்சு நிக்கிறேன். செய்கூலி சேதாரம் இதுலயே கழிச்சுக்கிட்டு உள்ளதுக்குச் செஞ்சுகுடுங்க ஒரு ஒத்தக்கல்லு மோதிரம்.''

உள்ளங்கையில விழுந்த சங்கிலிய ஒரு புடிச்சபுடி புடிச்சுப் பாத்தாரு அங்காசாரி;



படிப்பகம்

உள்ளங்கைய மூடிக்கிட்டுக் கண்ணையும் தெறக்காமச் சொல்றாரு:

''செட்டியாரய்யா ஒங்க சங்கிலி மூணுபவுன நெருங்கும்; உருக்குனாச் சுருங்கும்.''

பொன்னாசாரிக அப்பப்ப தமிழ்லயும் கொஞ்சம் விளையாடிக் கிருவாக. அரிசியில சிற்பம் செய்யிறமாதிரி பொன்னத்தட்டிப் பூ வேல செய்யிற மனசா இல்லையா?

''ஏனய்யா நகை சுருங்குது''ன்னு எதார்த்தமாக் கேட்டாரு சுப்பஞ் செட்டியாரு.

''அம்பில்லாத வில்லும் செம்பில்லாத பொன்னும் வேலைக்காகாது செட்டியாரய்யா. உருக்க உருக்க செம்பு ஒதுங்கிருமா இல்லையா...? சொக்கத்தங்கம் மட்டும் இதுல ரெண்டரை தேறும்; இப்பப்பாருங்க.''

நான் பத்திக்கிட்டேன்னு செவப்புமுழி முழிச்சுக் காமிக்குது கரிக்கங்கு. ஆசாரி ஒரு ★மங்கொகைய எடுத்தாரு. சங்கிலிய அதுல போட்டாரு. ஒரு ஒலகொறடு எடுத்து மங்கொகையப் புடிச்சு நடு அடுப்புல வச்சாரு; ஊதுறாரு. உயிர் மூச்ச உள்ள ஊதுறாரு. குடுத்தா மட்டும் சிரிக்கிற மனுசப் பயக மாதிரி காத்துவந்தா மட்டும் கண்ணச் சிமிட்டுது கங்கு. முதுகத் தூக்கிச் சுவத்தில போட்டுட்டு மனசத்தூக்கி உமிஓட்டுல போட்டுட்டு 'தங்க வேடிக்க' பாக்கத் தயாராயிட்டாரு செட்டியாரு.

கால் மணி நேரத்துல உருகி உருகித் தண்ணியா ஓடுதய்யா தங்கம். தங்கம் தண்ணியாப் போனதும் பதறிப்போனாரு சுப்பஞ் செட்டியார். ''நெருப்புல போட்டாத் தங்கமே உருவழிஞ்சு தண்ணியா ஓடிப்போயிருது. இந்தச் சொத்த எலும்பும், சுருங்குன தசையும் என்னத்துக்காகும்?'' சுப்பஞ்செட்டியாரு சொல்லிப்பாத்துக்கிட்டாரு மனசுக்குள்ள; சொல்லல வெளியில.

உருகுன தங்கத்தண்ணியில நவச்சாரத் தூள அள்ளி எறிஞ்சாரு ஆசாரி. பொண்ணு மாப்ளைய ஒண்ணு சேத்து வச்சுட்டு, கதவுக்கு வெளிய காணாமப் போற தாய்க்கெழவிமாதிரி, உருகுன தங்கத்த ஒண்ணுசேத்து விட்டுட்டு ஆவியாப் போயிருச்சு நவச்சாரம்.

மங்கொகையில உருகுன தங்கத்த மாத்தி ஊத்த ஏனம் வேணுமா இல்லையா? உள்ளங்கை அகலத்துல இருந்த இரும்புப்பாளம் எடுத்தாரு. அதுல ஊத்துனவுடன எட்டுத் தெசையும் ஏந்தெசைதான்னு அங்கிட்டும் இங்கிட்டுமா ஓடுது கழுத. ஓடுன தங்கத் தண்ணிய ஒரு பக்கமா அணகட்டி நிறுத்த அதுல உமியக் கொட்டினாரு.

இதப்பாத்ததும் சுளீர்ன்னு யாரோ சவுக்க எடுத்து அடிச்ச மாதிரி யிருந்துச்சு சுப்பஞ்செட்டியாருக்கு. ''ஒன்னியத் தங்கத்துக்கு வாங்குனாக;

★ மண்குகை - மண் சுட்டி (அல்லது) மண் அகல்

padippakam

என்னிய மட்டும் தவிட்டுக்கு வாங்குனாகளான்னு கேக்குறானே மனுசன், என்னமோ தங்கம் பெருசு தவிடு சிறுசுன்னு... இங்க வந்து பாருங்கடா ஏலேய்! இங்க தவிடுதானடா தங்கத்துக்கே அணகட்டுது. ஏத்தமும் இறக்கமும் இடம் பொறுத்துத்தானடா.''

தங்கத்துல தத்துவார்த்தம் பாத்ததுல தன்னைத்தானே மெச்சிக்கிட்டு உக்காந்திருக்காரு சுப்பஞ்செட்டியாரு.

சூடு ஆறவும் இரும்புப் பாளத்துல ஊத்திவச்ச தங்கத்தண்ணி செத்தவடத்துல கெட்டியாகிப் போச்சு; அப்பறம் கெட்டி கட்டியாகிப் போச்சு.

இப்பத் தொழில் ரகசியம் சொல்றாரு ஆசாரி.

''அய்யா செட்டியாரய்யா! நகையா இருக்கறபோது தங்கம் ஒவ்வொரு அங்குலத்துலயும் வேற வேற தரத்துல இருக்கும். உருக்கி ஒண்ணுசேத்தா ஒரே தரத்துக்கு வந்திருது.''

''நெசந்தானய்யா. சொத்து சாதிய வச்சு சிறுசு பெருசுன்னு அலையிற மனுசப்பய சுடுகாட்ல சுட்டதும் ஒண்ணாயிடுறானா இல்லையா... அப்படித்தான் இது. இப்பச் சுட்டு எடுத்த தங்கந்தான் சொக்கத்தங்கமா?''

''இல்லய்யா. இதுல மாசு மருவு கலந்திருக்கு. இதச் சொக்கத் தங்கமாக்க இன்னும் ரெண்டு வேல பாக்கியிருக்கு. இந்தாங்க. காப்பித்தண்ணி குடிங்க. பாத்துக்கிட்டேயிருங்க''

திரும்பவும் தங்கக்கட்டியச் சுட்டுப் பட்டறையில வச்சாரு. எடுத்தாரு சுத்தியல. அடிச்சாரு தங்கத்த. அது எங்க எளக்கம் குடுக்குது - எங்க இறுக்கம் குடுக்குதுன்னு விரல் வழியா மூளைக்குச் சொல்லிக்கிட்டேயிருக்கு சுத்தியலு. இறுக்கம் குடுத்த தங்கத்த எடுத்தாரு; இளஞ்சூடு காமிச்சாரு; பொறிகாரத்துல போட்டுப் பெரட்டி எடுத்தாரு; உலையில தூக்கி வச்சாரு; உருகும்பதம் கண்டதும் உமியடிச்சாரு; தண்ணிக்குள்ள முக்கினாரு; சூடு அமத்திட்டாரு. ஆறிப் போன தங்கத்த அடிச்சு அடிச்சு, தங்கக்கட்டியத் தகடா மாத்திப்பிட்டாரு. என்னமோ அருவாமணையில வெண்டக் காயக் குடுத்து வெட்டி எடுக்கிற மாதிரி நீண்டு போன தங்கத்த அங்குல அங்குலமா வெட்னாரு; அடுக்கியும் வச்சுக்கிட்டாரு. இப்பத்தான் புடம் போடப் போறாரு. சலிச்செடுத்தாரு செம்மண்ண; அதுல கரைச்சு ஊத்துனாரு புளிய; உள்ள போட்டாரு உப்ப. மூணையும் கொழ கொழன்னு கொழச்சாரு. களிப்பதம் வந்ததும் தங்கத்துண்டுகள்ல தடவிட்டாரு.

காப்பித் தண்ணியக் குடிச்சுக்கிட்டே கடைவாய்க்குள்ள சிரிச்சுக் கிட்டாரு சுப்பஞ்செட்டியாரு.

''ஏ பவுனு! நாந்தான் தங்கம்ன்னு மேனா மினுக்கியா அலஞ்சியே! ஒங்கதியப் பாத்தியா? எங்க மனுசப் பொம்பளை யெல்லாம் மஞ்சப் பூசிக்



படிப்பகம்

குளிக்கிறாக. நீ பாவம்! மண்ணைப் பூசித்தானக் குளிக்கிற. ஒன் ★வகிசி தெரிஞ்சு போச்சுடி பிள்ளா; இனி வாயத் தெறக்காத. ''

என்னமோ காலங்காலமாத் தங்கம் இவருகூட குடுமிப்பிடிச் சண்ட போட்டதாகவும் இன்னக்கி அது கொட்டத்த இவரு அடக்கிட்டதாகவும் ஏழக்கெழவனுக்கு ஒரு ராசசந்தோசம்.

மண்கொழச்சு அப்புன தங்கத்தகடுகள ஓட்டுல போட்டு ஓலமூடி வச்சு மூடி, அடியில எருக் கூட்டி எரிக்க ஆரம்பிச்சாரு ஆசாரி. சோறு வெந்துருச்சா கொழஞ்சிருச்சாங்கிறத குழவியில தொவையல் அரைச்சுக்கிட்டே சொல்ற கெழவிகமாதிரி, புடம்போட்ட தங்கம் வேக்காடு குடுத்துருச்சா இல்லையாங்கிறத அனுபவம் சொல்லுது ஆசாரிக்கு. ஓலமூடி தொறந்து பாத்தா தடவுன உப்பு, புளி, மண்ணு ஒண்ணையுங்காணோம். அத்தனையும் பஸ்பமாகி ஆவியாப் போக, சொத சொதன்னு கெடக்கு சொக்கத் தங்கம். ஆறவச்சு எடை போடுறாரு ஆசாரி.

''கை அளக்காததையா தராசு அளக்கப் போகுது? சொன்னது சொன்னதுதானய்யா. ரெண்டரைப் பவுனு.''

''ஒங்க செய்கூலிக்குச் சேர வேண்டியத எடுத்துக்கிட்டு மிச்சத்துக்கு ஒரு வைர மோதிரம் செஞ்சா கணக்கு என்னா வரும்ன்னு சொல்லுங்க காதாரக் கேட்டுக்கிர்றேன்.''

கண்ணமூடி வாய்க்குள்ளயே முணு முணுத்து அவரா ஒரு கணக்குப் போட்டாரு ஆசாரி.

''அய்யா, காப்பவுனு செய்கூலி; முக்காப்பவுன் மதிப்புக்கு ஒரு வைரக்கல்லு.. போக ஒன்றரைப் பவுன்ல மோதிரம் செய்யலாம்.''

''செய்யுங்கய்யா. பொழுதிருக்கக் குடுத்திட்டாப் புண்ணியமாப் போகுமய்யா.''

ரெண்டு மூணு வைரக்கல்ல எடுத்து கரும்புள்ளி இருக்கான்னு நீரோட்டம் பாத்து ஒரு கல்ல ஆசாரி ஒதுக்கி வைக்க, பட்டிவீரன்பட்டியிலருந்து வந்துட்டான் ஒருத்தன் எழவு சொல்ல.

அவுந்த வேட்டியக் கூட ஒழுங்காக் கட்டாம அலறிப்பதறி எந்திரிச்சிட்டாரு ஆசாரி.

''அய்யா! பட்டிவீரன்பட்டி மருதாசாரி அடியாகிப் போனாரு. அவரு எனக்குச் சித்தப்பன் மட்டுமில்ல. கொறடு புடிக்கச் சொல்லிக்குடுத்த குரு. ஒரு நாள் பொறுத்துக்குங்க. காரியம் முடியட்டும் வைரமோதிரத்தக் கையில குடுத்துடறேன்.''

---

★ பெருமை

padippakam

கனிஞ்சு எரிஞ்சுக்கிட்டிருந்த உமி ஓட்டுல விழுந்து எந்திரிச்சு வந்துச்சு சுப்பஞ்செட்டியாரு உசுரு.

''அய்யா ஆசாரி அய்யா. கைவிட்றாதீக. விடிஞ்சாக் கல்யாணம். வைரமோதிரத்தோட நான் போகல எங்க வீட்லயும் ஏதாகிலும் ஒண்ணு ஆகிப்போகும். பெரியமனசு பண்ணுங்கய்யா.''

ஆசாரி யோசிச்சாரு. அங்கிட்டும் இங்கிட்டும் தலையாட்டுனாரு. ஆழமா ஒரு மூச்சு இழுத்து நீளமா வெளிய விட்டாரு. வீடும் பட்டறையும் ஒண்ணு அவருக்கு. பின்பக்கக் கதவு வழியா உள்ளபோயி மேல்சட்ட போடாத பட்டுவேட்டிமட்டும் கட்ன ஒரு வாலிபப்பயலக் கையோட கூட்டியாந்தாரு.

''அய்யா செட்டியாரய்யா. இந்தப் பையன் என் புதுமாப்ள. பரம்பரையாப் பொன்னாசாரிக இவுக குடும்பம். திருமலநாயக்கருக்கு செவப்புக் கடுக்கன் செஞ்சுக்குடுத்த வகையறா. மோதிரம் செய்யறதுல மன்னன். எல்லா வெவரமும் சொல்லிருக்கேன். இருந்து வாங்கிட்டுப் போயிருங்க.''

சுப்பஞ்செட்டியார் கையெடுத்துக் கும்பிடறதக் கூடக் கவனிக்காம வைரக்கல்ல மாப்பிள்ள கையில வச்சுட்டு அவசரமாப் போயிட்டாரு ஆசாரி.

வேட்டிய மடிச்சுக்கட்டி ஒழுங்காத்தான் உக்காந்தான் மாப்ள உலை முன்னுக்க. தக்காளிக்குத் தங்க முலாம் பூசுனமாதிரி தளதளன்னு இருந்தான் ஆளு.

ஒரு செப்புக்கம்பிய எடுத்தான்; வளைச்சான். மோதிரத்துக்கு மாதிரி அளவெடுத்தான். தங்கக்கட்டி ரெண்டரையில ஒன்றரைய மட்டும் சதுரிச்சு எடுத்து ஒரு பவுனுக்கு ஒரு குண்டுமுத்து மேனிக்கு ஒன்றரைக் குண்டுமுத்து செம்பு கலந்தான். தங்கத்தத் தட்டித்தட்டி வளைச்சு வளைச்சு அடிச்சு அளவுக்குத் தக்கன வளையம் பண்ணுனான். மோதிர வளையம் இருபத்திரண்டு கேரட்டோ முன்னப் பின்னவோ இருக்கலாம். ஆனா வைரத்த உக்கார வைக்கிற மேல்தட்டு இருபத்துநாலு கேரட்டாத்தான் இருக்கணும். அந்தச் சொக்கத் தங்கத்துல சித்துளி செலுத்தி, வைரம் ஒக்கார ஒரு தங்கப்பள்ளம் இழைக்க ஆரம்பிச்சானோ இல்லையோ வீட்டுக்குள்ளருந்து 'ஜல் ஜல்... ஜல் ஜல்...'ன்னு சாடைபேசுது ஒரு சங்கீதச் சத்தம். குழியெடுக்க ஒக்காந்தவனக் கூப்பிடுது கொலுசுச் சத்தம். செதறுது கவனம் பயலுக்கு. தங்கத்து மேல தப்பாட்டம் ஆடுது சித்துளி. வேட்டி மனசு ரெண்டையும் இறுக்கிப்புடிச்சு ஒக்காந்தான். 'ஜல் ஜல்... ஜல் ஜல்...' திரும்பவும் கூப்பிடுதய்யா கொல்லப் பெறந்த கொலுசு. இத்து விழுந்து நொறுங்குது இறுக்கிப்புடிச்ச மனசு. போட்டது போட்டபடி கெடக்க பொண்டாட்டிகிட்ட ஓடிப்போனான் புதுமாப்பிள.

மத்தியானச் சாப்பாடும் இல்லாத சுப்பஞ் செட்டியாரு பகவானக்



படிப்பகம்

கும்புட்டுப் பலியாக் கெடக்காரு. புதுமாப்ள இல்லையா... போனவன், போனவன்தான். உலை ஓட்டுல சிவப்பா எரிஞ்ச கங்கு, வெள்ளை பூத்துப் போன பெறகு வெளிய வாரான் பய. நெருப்புக்கு முன்னால உக்காந்தும் வேர்க்காதவன் உள்ளபோயி வேர்த்து வாரான். அவன் ஏற்கெனவே உக்காந்தபோது உள்கால் சட்டை பாத்ததா செட்டியாருக்கு ஞாபகம்; இப்ப அது இல்ல.

தங்கத்தகட்டுல உருண்டஅரம் போட்டுக் கொஞ்சமாக் குழியெடுத்துட்டுப் போன பய இப்ப ஆழந்தேடிப் போயி அரக்கிறான். வைரக்கல்லோட கனபரிமாணத்துக்குத் தக்கன குழியளவு சரியான்னு வச்சு வச்சு எடுக்கிறான் வைரத்த. கல்லுப் பதிச்ச பள்ளத்துக்கும் கல்லுக்கும் மத்தியில ஒரு சன்னமான நூலு ஊடாட முடிஞ்ச அளவுக்குத்தான் சந்து இருக்கணும். இப்ப எடுத்த குழியில சந்து பெருஞ்சந்தாகிப் போச்சு. அதனால 'போவரை' உளியெடுத்துத் தங்கத்தச் செல்லமாச் செதுக்கி எளசா ஒரு இழையெடுத்துக் கல்லுக்கு ஆதரவா 'அணவு' பண்ணணும்னு முடிவு பண்ணுணான். சித்துளி எடுத்து வைரக் கல்லச் சுத்தித் தங்கத்துல அடிச்சுக்கிட்டே வந்தா, தங்கம் ஒரு இத்துனூண்டு தகடா எந்திரிக்கும். சித்துளி எடுத்து அவன் மொதத்தட்டு தட்டவும் 'க்ளிங் க்ளிங்' 'க்ளிங் க்ளிங்' 'வந்துட்டுப் போ ராசா'ன்னு வளவி கூப்பிடுது. காலால கூப்பிட்ட சத்தத்துக்கே கரைஞ்சுபோயிப் போன பய, கைகூப்பிட்ட சத்தத்துக்குப் போகாம இருப்பானா? போயிட்டான்.

''யாத்தே! திரும்பியும் போயிட்டானே'' உருமால அவுத்து மடியில போட்டுப் பெருமாளக் கும்பிட்டுக் கண்ண மூடிக்கிட்டாரு சுப்பஞ்செட்டியார்.

நேரஞ்சென்டு திரும்பவந்தப்ப வேட்டியப் பெரட்டிக் கட்டியிருந்தான் பய. மேல் சட்டையில்லாத மேனி வேறயா, அவன் தொப்பூழ்ப் பள்ளத்துக்குள்ள தலயக் குடுத்துப் பச்சக்காம்ப மட்டும் வெளிய நீட்டிக்கிட்டிருக்கு மல்லியப்பூவு ஒண்ணு.

''பொழுதிருக்கப் போகணுமப்பா. தயவு பண்ணு ராசா''

''இருங்க பெருசு; இப்பக் குடுத்திடறேன்.''

கல் பதிக்கிறதுல முக்கியமான வேல 'மசை' அடிக்கிறது. கல்லச் சுத்தி இருக்கிற தங்கத்த இழைச்சு எழுப்பி, மெருகுவலை வச்சு உருட்டி ஒரு துளித் தண்ணியும் உள்ள எறங்காத அளவுக்கு நெருக்கி அணைச்சு விடுறதுதான் மசையடிக்கிறது.

புதுப்பொண்டாட்டி சோங்கு... போயிட்டுப் போயிட்டு வந்த சொகம்... கண்ணு தங்கத்துல இருந்தாலும் கவனம் அவ மடியில இருந்த மயக்கம்... எல்லாம் சேந்து சரியா மசையடிக்காம மோதிரத்தத் தூக்கிக் கையில குடுத்துட்டான் பாவிப்பய.

padippakam

அவன் குடுத்த மோதிரத்தக் கும்பிட்டு வாங்கி மடியில கட்டிப் புறப்பட்டாரு சுப்பஞ்செட்டியாரு.

அந்த வைரக்கல்லு 'அணவு' பத்தாம 'லொடக்கு லொடக்கு லொடக்கு லொடக்கு'ன்னு சன்னமாச் சத்தம்போட்டுக்கிட்டே போகுது.

'இது சத்தமில்ல சாமி. ரெண்டு உசுருக்கு அடிக்கிற சங்குன்னு வழியெல்லாம் சொல்லிக்கிட்டே போகுது அந்த 'லொடக்கு, லொடக்கு'.



படிப்பகம்

padippakam



# 27

**கெ**ட்டி ராத்திரி. நிலா இன்னும் எழும்பல. அழுகுணி வெளிச்சம் அடிச்சுக்கிட்டிருக்குக அங்கங்க மொளைச்ச வெள்ளிக. இடைகாட்டுப் பாதைவழி விழுந்து போறாரு சுப்பஞ் செட்டியாரு.

''கடவுளே! என்னியப் பொழுதோட சேத்திரு; எம் பொருளோட சேத்திரு.'' - ஆகாயம் பாத்துப் பெருமாளுக்குப் போட்டாரு ஒரு பெருங் கும்பிடு. ''அந்து கிந்து என்னிய அநாதிக் காட்ல விட்றாத.'' கீழ குனிஞ்சு செருப்புக்கும் போட்டாரு ஒரு சின்னக் கும்பிடு.



படிப்பகம்

padippakam

நிலக்கோட்டையிலயிருந்து கோட்டப்பட்டி மார்க்கமா குள்ளப்புரம் புடிச்சு, மெட்டூரு சாவடிப்பட்டி வழியா சொக்கத்தேவன் பட்டி எல்லைய மிதிக்க, தலைக்கோழி கூவிருச்சு.

அக்காதங்கச்சிக ரெண்டுபேருக்கும் ஒரு சொட்டு ஒறக்கமில்ல. சாகப்போற நாளையில அப்பன்படுற பாட்ட நெனச்சு அழுது கண்ணு வீங்கிப் போனதுல முன் ஜாம ஒறக்கமில்ல. உள் திண்ணையில வெலகுன வேட்டி தெரியாம, கால் ரெண்டையும் அகட்டிப் படுத்துக்கெடக்குற முத்துக்காமு விட்டான் பாருங்க கூரையைப் பரிக்கிற ஒரு கொறட்ட - அந்தப் பெருங்கொண்ட ஓசையில பின் சாமத்துல ஒறக்கமில்ல.

சுப்பஞ்செட்டியாரு செருப்புச்சத்தம் கேட்டு எந்திருச்சு உக்காந்திருச்சு மொத்த வீடும்.

''வைரமோதிரம் வந்திருச்சா?'' - மூஞ்சி கழுவாத முத்துக்காமு கண்ணுல ஏறித்துடிக்குது இருதயம்.

உள்பையில கையவிட்டு உசுரையே வெளிய எடுக்கிற மாதிரி, பொத்துனாப்புல எடுக்கிறாரு செட்டியாரு பொத்திக் கொண்டுவந்த மோதிரத்த.

லாந்தர் வெளக்கு வெளிச்சத்துல, மோதிரம் சுத்திவச்ச கருஞ்செவப்புக் காகிதத்த அவரு லேசா உரிச்சுக் காமிக்கவும், அவர் குடுக்கிறவரைக்கும் பொறுமையில்லாத பய வெடுக்குன்னு புடிங்கிப்புட்டான் மோதிரத்த.

தொட்டுத் தொட்டுப் பாக்கிறான்; தடவித் தடவிப் பாக்கிறான்; கிட்ட வச்சுப் பாக்குறான்; எட்ட வச்சுப் பாக்குறான்; மூக்குக் கிட்டக் கொண்டாந்து மோந்து மோந்தும் பாக்குறான்.

மோதிரவிரல்ல போட்டுப் பாத்து மூஞ்சி மலந்து போனவன் ஒவ்வொரு விரலாப் போட்டு உருவி உருவி எடுக்கிறான்.

ஒத்த வாழப்பழத்தக் கைப்பத்துன கொரங்கு, கூட்டத்துல சேட்ட பண்ணிக் கும்மாளமடிக்குமா இல்லையா... அப்படியிருக்கு அவன் கூத்து.

''இந்த முத்துக்காமு சொன்ன சொல்லு மாறமாட்டேன் மாமா; கட்றேன் தாலிய. ''

''குடு மாப்ள; எங் கையால நானே மாட்டிவிடுறேன் மோதிரத்த.''

அதவாங்கி அவன் இடதுகை மோதிரவெரல்ல அவரு மாட்டவும், மூக்குமேல கோவம் தவ்விருச்சு முத்துக்காமுக்கு.

''எங்க வம்சத்துல யாரும் போட்டதில்ல வைரமோதிரம். கடைசியில குண்டி கழுவுற கையில மாட்டிக் குடியக் கெடுத்துப்புட்டியே...?'' அவர மடார்ன்னு தள்ளி மோதிரத்தப் படார்ன்னு உருவி வலதுகை மோதிர வெரல்ல அவனா மாட்டிக்கிட்டு அழகு பாக்குறான் முத்துக்காமு.



படிப்பகம்

கிறுக்குப் புடிச்ச புள்ள கிலுகிலுப்பை வச்சு வெளையாடுறதப் பாத்திருக்கீகளா...? அதப் பாக்கலேன்னா நீங்க இதப்பாக்கலாம்.

●

இது ரெண்டாம் கல்யாணம். ஊரே வா நாடே வான்னு ஓல விடமுடியுமா? பழைய சோத்த உலையில கொதிக்கவச்சுப் பந்திவச்ச கதையாப் போயிரும். அளந்து அஞ்சுபேரக் கூப்பிட்டாரு சுப்பஞ்செட்டியாரு.

உருமாப் பெருமாத் தேவரு, காவக்காரச் சக்கணன், சடையத் தேவரு, அம்மைய நாயக்கரு, கடப்பாரக் கவுண்டரு அஞ்சுபேரும் மொத்தமா வந்துட்டாக கெழக்கு வெளுக்க. மத்த நாலுபேரும் மனசால பெரிய மனுசக் கணக்குல வந்து சேந்துர்றாக; வயசால பெரியமனுசக் கணக்குல சேந்துர்றாரு சடையத்தேவரு.

மரிக்கொழுந்துக்குஞ்சம்வச்ச ரெண்டு மல்லியப்பூமால; மஞ்சக் கெழங்கு முடிஞ்ச ஒரு மஞ்சக்கயித்துத் தாலி; ஓலக்கொட்டான் ஒண்ணு; உப்பு ரெண்டுபடி- இதானய்யா கல்யாணத்துக்கு அன்னைக்கித் தேதிக்கு உண்டானது.

குறுணிக் கேப்பமாவு; அரைப்படிப் பச்சரிசிக் குறுண; மூஞ்சி செத்த கத்திரிக்கா ஒரு வீச; முத்திப்போன முருங்கக்கா ஆறு; அரைப்படித் துவரம்பருப்பு; அரைக்காப்படி பசுமாட்டு நெய்யி; பந்தியில விரிக்க இருளப்பக் கோடாங்கி இணுங்கிக் கொண்டாந்த ஆமணக்கு எல பதினாறு. இதான் கல்யாணப்பந்திக்கு உண்டான கணக்கு.

கருவாச்சி, ரங்கம்மா, முக்குறுணி, மூணுபேரும் மொடாவுல தண்ணிகாயவச்சுக் கேப்பமாவ உள்ளபோட்டுக் கிண்டோ கிண்டுன்னு கிண்டுறாக.

''பொழுது ஏறுபொழுதாயிட்டிருக்கப்பா; எடுங்க மாலைய; கட்டுங்க தாலிய.''

புதுச்சேல சுத்திப் பூவும் பொட்டும் வச்சுத் தங்கச்சியக் கூட்டிட்டு வாரா அக்காகாரி. தோழிப் பொண்ணுக்குத் தொணப் பொண்ணா வாரா கருவாச்சி.

''மாத்திக்குங்க மாலைய. ''

மாத்திக்கிட்டாக.

''ஓலக் கொட்டான்ல இருக்கிற உப்புல வலதுகால வச்சுக் கட்டப்பா தாலிய. ''

கட்டிட்டான் தாலிய.

ஒரு முடிச்ச அவன் போட்டான்; மிச்ச ரெண்டு முடிச்ச மூத்தபொண்டாட்டி வந்து முடிஞ்சு விட்டா.

கருவாச்சிக்கு மட்டும் தெரியிற மாதிரி அவளக் கையெடுத்துக் கும்புட்டாரு சுப்பஞ்செட்டியாரு; ஒடஞ்ச கண்ணுல ஒழுகுது தண்ணி.

padippakam

வந்திருக்கிற ஆளுகளுக்கெல்லாம் வைரமோதிரம் தெரியட் டும்ன்னு அரிக்காத மூக்க அடிக்கடி சொறிஞ்சு நிக்கிறான் முத்துக்காமு.

''பெரிய மனுசங்க வாங்கப்பா. வாழப் போற வாழக்குருத்துகளுக்கு விபூதி வச்சு விடுங்கப்பா.''

அழுக்குத் துண்டெடுத்து அழுத கண்ணத் தொடச்சுக்கிட்டே கூப்பிட்டாரு சுப்பஞ்செட்டியாரு.

உருமாப் பெருமாத்தேவரும் சக்கணனும் அம்மைய நாயக்கரும் கடப்பாரக் கவுண்டரும் விபூதி வச்சுவிட்டு, கால்ல விழுந்தவுக கையில ரெண்டு, ஒண்ணே கால், ஒண்ணுன்னு செய்மொறை செய்ய, 'நல்லா இருங்க'ன்னு உக்காந்த எடத்துலயே சொல்லிட்டு ஒதுங்கி ஓரமாகி, செருப்புமாட்டிக் கௌம்பிட்டாரு சடையத்தேவரு.

விரிச்ச ஆமணக்கு எலையில கேப்பக் களிய அகப்பையில அள்ளி மொத்த மொத்தமா மோந்து போடவும் அவுகவுக பருப்புச் சாம்பாருக்குப் பள்ளம் பறிச்சுக்கிட்டாக நடுவுல.

கேப்பக் களிச் சூட்டுல உருகி ஓடுது உள்ள போட்ட நெய்யி. யார் யாருக்கு ஜாதகத்துல அந்த வருசம் சுக்கிரதெசைன்னு போட்ருக்கோ அவுகளுக்கு மட்டும் விழுகுது முருங்கக்காத்துண்டும், கத்தரிக்காக் கீத்தும்.

இதப் பாத்ததும் கெட்டகிறுக்கு வந்திருச்சு முத்துக்காமுக்கு.

'கல்யாணத்துக்கே நெல்லுக்கஞ்சி ஊத்த வக்கில்லாத மாமன், பொண்ணு எதுக்குப் பெத்த பொண்ணு?''

பித்துப் புடிச்ச கொரங்குமாதிரி பிச்சு எறிஞ்சான் மாலைய. அது ஓடி விழுந்து போச்சு களிக்கிண்டி வச்ச அடுப்புல.

''எந்திரிங்கடி போகலாம். எங்கூருக்குப் போயாச்சும் நெல்லுச் சோறு திம்போம்.''

''ஒத்தப் பொண்ணக் கொடுத்தன்னைக்கே மனசுக்கு ஒத்தத் தாப்பாப் போட்டுக்கிட்டேன்; இப்ப ரெட்டப் பொண்ணும் குடுத்ததனால ரெட்டத் தாப்பாப் போட்டுக்கிர வேண்டியதுதான்.'' நெனச்சாரு; சொல்லல. இருதயத்துக்குள்ள உடைஞ்சுபோன சில்லுகளுக்கு மத்தியில சொல்லுகளும் மாட்டிக்கிருச்சு சுப்பஞ்செட்டியாருக்கு.''

மால மாத்துன பொம்பளையச் சீலமாத்த விடல. அழுத்தித் தலவார விடல; அழுது சொகங்காண விடல; பொருந்தி உக்காந்து பொண்டாட்டிக ரெண்டு பேரையும் களி திங்க விடல. பட்டியில மாடுகளக் கௌப்புற மாதிரி பொண்டாட்டிக ரெண்டு பேரையும் முத்துக்காமு பத்திட்டான் பத்தி.



படிப்பகம்

padippakam

நெத்தி நெலப்படியில இடிக்க ★சாமிவீட்டுக்குள்ள புகுந்த சுப்பஞ்செட்டியாரு இத்துப்போன பழைய தகரப் பொட்டியத் தெறந்தாரு. அந்தப் பொட்டியப் பாத்தாக் களவாணிப் பயலுக்கும் கண்ணீர்வந்திரும். வந்தவன் கையில ஒண்ணு ரெண்டு இருந்தா அவன் போட்டுட்டுப் போயிருவான்.அந்தப் பொட்டி அடியில கெடந்த பழைய காகிதப் பொட்டலம் ஒண்ண எடுத்துப் பிரிச்சுக்கிட்டே, ''இந்தா மகளே! இதுல காதோலையும் முருகுத்தட்டுமிருக்கு. ஆத்தா செத்தன்னைக்கி ஒம்பங்குக் குன்னு அப்பன் எடுத்து வச்சது.''

பசுமாடு செத்த வீட்ல கன்னுக்குட்டிகதர்றமாதிரி 'ஓ'ன்னு கதறி அழுது உசுர் வத்திப் போனா பவளம்; அப்பன் சீதனம்தரச் சேத்து வச்சிருந்த பழைய குடத்தையும் வாங்கிக்கிட்டா.

ஏறு வெயில்ல கொடபுடிச்சு முத்துக்காமு முன்னப் போக, பொண்டாட்டிக ரெண்டுபேரும் ஆளுக்கொரு சுமை சொமந்து அவன் பின்னால போக, ஊர் எல்லையில ஓடக்கரைக் கருவேல மரத்தடியில கருவாச்சி கட்டிப்புடிச்சு அழுகுறா அக்காதங்கச்சிக ரெண்டுபேரையும் அணச்சு.

''ஒரு ஊர்ல பெறந்தோம்; ஒண்ணாவே வளந்தோம். எந் துன்பம் கேட்டழுக நீங்க இருந்தீக; ஒங்க துன்பம் கேட்டழுக நான் இருந்தேன்; இன்னைக்கித்தாண்டி நான் நாதியில்லாம நிக்கிறேன் நடுத்தெருவுல. என்னிய மறந்துராதீங்கடீ. அப்பன் இல்லாத காலத்துலயும் நம்பி வாங்கடி நம்மூருக்கு; கருவாச்சி இருக்கேன் கஞ்சி ஊத்த.''

மூணு பொம்பளைகளுக்கும் ஒண்ணு சொன்னாப்புல ஊத்துது கண்ணீரு. அதுக்கு மேல ஒரு பேச்சும் பேச முடியல; உள்கூடு வேகுது.

''என்னமோ ராச்சியத்த எழந்து வார ராணிக மாதிரி இந்த ஏங்கு ஏங்குறீக. வாங்கடி ஏலா... வாங்கடி...''

புருசன் சத்தம் விடவும் கடைசியாக் கண்ணத் தொடச்சுப் பொறப்புடப் போன பொம்பளைக, ஒத்தக்கையில அவுந்த வேட்டியப்புடிச்சுக்கிட்டே அப்பன் ஓடிவாரதப் பாத்து, நின்ட எடத்துல நின்டு போனாளுக.

''மாப்ள! கேப்பக்களி போட்டுட்டான் மாமன்னு கேவலமா நெனச்சிராதீக. வீடுபோய்ச் சேந்ததும் மொதவேலையா இத அடிச்சுக் கொழம்புவச்சு ஆசையாக் குடிங்க... இந்தாங்க.''

'கெக்கக் கெக்க கெக்க'ன்னு கத்துற சேவலக் கால்ல சரடுகட்டிக் கொண்டாந்து நீட்டி மாப்பிள்ளைக்குச் சீர் செய்யிறாரு மாமனாரு.

---

★ பூசை அறை





படிப்பகம்

padippakam

சேவலப் பாத்ததும் கல்லு சிரிக்கிறமாதிரி சிரிக்குது இறுகிப் போன முத்துக்காமு மூஞ்சி. வலது கையில புடிச்ச குடைய மாத்தாம எடது கையில சேவல வாங்கி எடை போட்ட பய, ஒரு வீசைக்கு மேல ஒண்ணேகாலுக்குள்ளன்னு முணுமுணுத்துக்கிட்டான் எச்சி ஊறுற வாயில.

திடீர்ன்னு அவன் மூஞ்சிமாறுது; மேலுதட்டுல பெறந்த சிரிப்பு கீழுதட்டுல செத்துப்போகுது.

''சேவல் இருக்கட்டும் மாமு. செய்முறைக்காச எவகிட்டக் குடுத்த? மூத்தவகிட்டயா? இளையவகிட்டயா? ''

''மூத்தவகிட்டத்தான்.''

செத்துப்போன ராமர்படை சஞ்சீவி மலை வந்தவுடன எந்திரிச்சமாதிரி, அவன் உதட்டுல செத்துக் கெடந்த சிரிப்புக்கு உசுர் வந்திருச்சு திரும்பி.

●

பழனிசெட்டிபட்டி வந்து சேந்தப்ப கெடைமாடுக வீடுவார நேரமாகிப்போச்சு.

வீடு தெறந்து உள்ள போனவுடன தங்கச்சிய வெளக்கேத்தச் சொன்னா அக்கா; திரியில கற்பூரம் வச்சுத் திரிச்சும் விட்டா.

''இந்தாங்கடி பசி உசுர்போகுது. பச்சநெல்லக் குத்திக் கஞ்சி காச்சுங்க. நான் சேவல அடிச்சுப் பறிச்சு உரிச்சுக் குடுக்குறேன்.'' சொன்ன வேகத்துல முத்துக்காமு அருவாமணையில வச்சுக் கரகரகரன்னு கழுத்தறுத்தான் சேவல. ஒழுகுன ரத்தத்தைக் கரண்டியில புடிச்சு அதுல ரெண்டு மூணு உப்புக்கல்லும் போட்டு ஓரமா வச்சான். சேவலப் பறிச்சு வாட்டி அறுத்துக்குடுத்திட்டு கரண்டியில இருந்த கோழி ரத்தத்த அவனாப் பொரிச்சு அவனாத் தின்டுபுட்டான்.

''ஒங்க அப்பன் மாதிரியே சேவலும் கொஞ்சம் முத்தலா யிருக்குதடியம்மா. ஒரு அடுப்பு சேத்தே எரிங்க''ன்னு சொல்லிப்பிட்டு வைரமோதிரத்தப் பட்டிதொட்டியெல்லாம் காட்டிப் பகுமானம் பண்ண மந்தைக்குக்கௌம்பிட்டான் முத்துக்காமு.

பச்ச நெல்ல ஒரல்ல கொட்டி, மாத்திமாத்தி ஒலக்க போடுறாக அக்காதங்கச்சிக ரெண்டுபேரும். புழுங்க நெல்லா இருந்தாப் போடுபோடுன்னு போடலாம்; இது பச்ச நெல்லு. ஓங்கி ஒலக்க போட்டாக் குறுணையாப் போகும்ன்னு தாங்கி ஒலக்க போடுறாக. ஒரல்ல குத்துனத அள்ளிப் பொடச்சதுல ஒன்றரைப்படி அரிசிதேறுது. அக்கா வச்ச ஒலையில சோறு கொதிக்க... தங்கச்சி வச்ச அடுப்புல கொழம்பு கொதிக்க... வந்துட்டானய்யா மகராசன்.

முக்காக் கும்பாவுக்குச் சோத்த அமுக்கி, முழுக் கும்பாவுக்கும் கொழம்ப ஊத்தி, கறியையும் சோத்தையும் பெணைஞ்சு பெணைஞ்சு சாப்பாடு



படிப்பகம்

padippakam

கூடச் சண்ட புடிக்கிறானய்யா முத்துக்காமு. சுடு சோத்துக்கு ஒடம்பெல்லாம் வேர்த்து ஊத்துது. ஒறச்ச கொழம்புக்குக் கண்ணெல்லாம் தண்ணி வடியுது; மூக்கெல்லாம் நீர் ஒழுகுது.

கால்சப்பைக் கறிய ஒரே கடியில கடைவாய்ப்பல்லுல கடிச்சு இழுத்து, சொர சொர சொரன்னு சோத்த மெல்லவும் கடுக்குன்னு கடிபட்டுச்சு பல்லுல ஒரு கல்லு.

கடிக்கிறத நிறுத்திட்டுக் கண்ண மூடிக்கிட்டு யோசிச்சான். கல்லத் துப்புனாக் கறியும் சேந்து விழுந்திரும். கறியோட சேத்துக் கடிச்ச கல்லையும் முழுங்கிப்புட்டான்.

''அடியே பொண்டுகளா! நீங்க அரிசியில கல்லக்கொட்டிச் சோறாக்கிப் போட்டாலுஞ்சரி; இல்ல கல்லையே கொட்டிச் சோறாக்கிப் போட்டாலுஞ் சரி; முழுசாச் செமிக்காம விடமாட்டான் இந்த முத்துக்காமு.''

கையக் கழுவி வாய் கொப்புளிச்சுட்டுப் பவளத்தைப் பாத்துக் கண்ணடிச்சு உத்தரவு போட்டுட்டு, உள்ள படுக்கப் போயிட்டான் முத்துக்காமு.

தன் சோத்தையும் தன் பங்குக் கறியையும் தங்கச்சியச் சாப்பிடவச்சு, சுடவச்ச பாலச் சொம்புல குடுத்துத் 'தாராளமாப் போயிட்டு வாடீ'ன்னா தங்கச்சிய அக்கா.

பாயப் பகிர்ந்து கொடுத்தவ பாய் இல்லாமத் தலகாணிமட்டும் போட்டுப் படுத்துக்கிட்டா வெளியில.

மனசிலயும் ஒடம்புலயும் அலுப்பு; கன்னத்துல ஒழுகின கண்ணீர்ல உப்பு ஒறையுமுன்ன ஒறங்கிப்போனா.

●

''யக்கா! மோசம் போயிட்டோம் யக்கா! ''

விடிஞ்சும் விடியுமுன்ன பழனிசெட்டிபட்டியவே பொரட்டிப் போட்ட சத்தம் கேட்டுக் கலைஞ்ச சீலையையும் ஒடைஞ்ச உசுரையும் ஒண்ணுசேத்து எந்திரிச்சு உக்காந்தா கனகம்.

''என்னாடி? அடியே என்னாடி?''

உள்ள ஓடிப்போயிப் பாத்தா யானைசெத்துக் கெடக்கிறமாதிரி பாயில பொணமாக் கெடக்கான் முத்துக்காமு.

''அய்யோ அய்யோ''ன்னு சுவர்ல முட்டி முட்டி அழுகுறா பவளம்.

''மாமா''ன்னு பொணத்தோட மார்ல விழுந்து கதர்றா கனகம்.



படிப்பகம்

padippakam

அவன் நெத்திதடவி, மூஞ்சிதடவி, மாரத்தழுவி, தோளத் தடவி, கையத்தடவிக் கடைசியில பாத்தா - அவன் வலதுகையில மோதிரமிருக்கு; வைரக்கல்லக் காணோம்.

சோத்துல கெடந்த கல்லுன்னு நெனச்சு வைரமோதிரத்திலிருந்து உதிந்து விழுந்த வைரக்கல்லக் கடிச்சும் கடிக்காம முழுங்கிருக்கான் பாவிப்பய. அது கொடல அறுத்துக் கொன்டுபுடிச்சு.

இந்த இழவுச் சேதி போச்சோ இல்லையோ, கிழிஞ்ச சட்டைக்கு ஊசிநூல் தச்சுக்கிட்டிருந்த சுப்பஞ்செட்டியாரு ''எம் மக்கா''ன்னு கத்துனாரு; வளவிப்பொதிமேல சுருண்டு விழுந்து செத்தேபோனாரு.

பெறந்துவாரது மட்டும் தானய்யா ஒரே வழி; சாவுக்குப் பல வழி.





படிப்பகம்



# 28

**கா**லம் இருக்கே காலம் - அது ரெண்டு கையிலயும் புழுதியும் விபூதியும் புடிச்சு உக்காந்திருக்கு. எவ்வளவு பெரிய வெற்றியா இருக்கட்டும்! 'சீ! மறைஞ்சு போ'ன்னு புழுதியடிச்சு வெற்றிய மறைச்சு விட்டுப் போயிருது. எவ்வளவு பெரிய துன்பமாயிருக்கட்டும்! 'சூ! மறந்து போ'ன்னு விபூதியடிச்சுத் துன்பத்த மறக்கடிச்சிட்டுப் போயிருது.

காலத்துக்குன்னு மாறாம இருக்கிற கொணம் இது ஒண்ணுதான்.

padippakam

இன்னொண்ணும் கவனிக்கணும் நீங்க. காலம் செய்யிற வேலை என்ன தெரியுமா? மனுசப்பயலச் சன்னஞ்சன்னமாத் தடவிக்குடுத்து அவனச் சாவுக்குத் தயாரிக்கிறதுதான்.

ஒரே நாள்ல சாவு வந்தா பயந்து கழிஞ்சிருவான் மனுசன்னு தெரியும் காலத்துக்கு. தோல்வி; கண்ணீரு- சிக்கல்; சீக்கு - ஏமாற்றம்; பிரிவு - உள்சாவு; வெளிச்சாவு - இடி; மழை - பூகம்பம்; காத்து இதுகளக் காட்டிக்காட்டி மனுசனச் சின்னச் சின்னதாச் சாக வச்சு, கால்மாகாணி உசுரை மட்டும் விட்டு வச்சிருக்கு கடைசிச் சாவுக்கு.

ஒவ்வொரு பிறப்பும் இந்த பூமிக்கு ஒரு படிப்புப் படிச்சுட்டுப் போக வருது; ஒவ்வொரு இறப்பும் இந்த பூமிக்கு ஒரு பாடம் சொல்லிட்டுப் போகுது. யாரு பெறந்தாலும் ஆகாயத்துல வெள்ளி மொளைக்கிறது மில்ல; யாரு செத்தாலும் சூரியன் நெஞ்சப் புடிச்சு நின்டு போறதுமில்ல.

காலம்தான் ஞானம்; காலத்தைப் போல மனசு வச்சிருக்கிறவன் ஞானி.

●

காலம் வீசியடிச்ச விபூதியில ஆறே மாசத்துக்குள்ள அழுத கண்ணு காஞ்சுபோச்சு கனகத்துக்கும் பவளத்துக்கும்.

கல்லு விழுந்த மோதிரத்தக் கருவாச்சிக்கே அவுக திருப்பிக்குடுக்க, அவ அதை வித்து சொக்கத்தேவன்பட்டியிலயே பொட்டிக்கடை போட்டுக் குடுத்தா கைம்பொண்டாட்டிக ரெண்டுபேருக்கும்.

அந்த வருசம் காடுவெளஞ்சுபோச்சு கருவாச்சிக்கு.

வரவு வந்தா செலவும் சேந்துவருமா இல்லையா... வந்திருச்சு.

அழகுசிங்கத்தப் பள்ளிக்கூடம் சேக்கிறேன்னு ஆடம்பரம் பண்ணி அதிரி புதிரி பண்ணிப்புட்டா.

சாணி மொழுகின மூங்கில் மொறத்துல ஒரு சீப்பு வாழப்பழம் வச்சு, ஒரு செரட்டையில குங்குமம் நெப்பி, ஒரு செரட்டையில சந்தனம் கொழச்சு, அச்சுவெல்லம் பரப்பி, வெத்தல பாக்கு மேல தச்சண வச்சா ஒண்ணே கால் ரூவாய.

''எங் குலதெய்வமா நெனச்சுக் கும்புடறேன் சாமி; உருப்படி பண்ணிவிட்ரு என் ஒத்தமகன'' கண்ணெல்லாம் தண்ணி தவ்வக் கைபுடிச்சுக் குடுத்தா கண்ணாடி வாத்தியார்கிட்ட.

வாத்தியாரப் பாத்தவுடன பயந்துபோனான் பய. கண்ணாடி போட்ட சிங்கம் கையில பெரம்பு வச்சு நிக்கிற மாதிரியே இருக்கு அவரப் பாக்கையில அவனுக்கு. பாவப்பட்ட மொசக்குட்டிகளாத் தெரியிறாங்க பள்ளிக்கூடப் பயக.



படிப்பகம்

padippakam

''ஒம் பேர் சொல்லப்பா ''

தன்பேரு தனக்கு மறந்துபோனவன் மாதிரி ரொம்பநேரம் யோசிச்சு அழக முழுங்கிட்டுச் 'சிங்கத்'தத் துப்பினான்.

''வயசு என்னம்மா பிள்ளைக்கு?''

''அஞ்சு முடிஞ்சிருச்சு; பங்குனியோட ஆறு ஆரம்பம்.''

பயல உத்து உத்துப் பாத்தாரு வாத்தியாரு.

சின்னக் கண்ணு; மொக்க மூக்கு; பட்ட நெத்தி; பணியாரக் கன்னம்; அழுத்தமான உதடு; ஆத்தா நெறம்; கல்லு ஒடம்பு; கனத்த நெஞ்சுக்கூடு. சும்மா சொல்லக் கூடாது பஞ்சமில்லாமக் கஞ்சி ஊத்தி வஞ்சகமில்லாமத்தான் வளத்திருக்கா கருவாச்சி.

''அழகுசிங்கம்... சோத்தாங்கையத் தூக்கித் தலையச் சுத்தி மறுகாதத் தொடு.''

செய்யமாட்டேன்னு மொதல்ல கூனிக் குறுகிக் குன்னிப்போன பய அப்பறம் என்ன நெனச்சானோ ஏது நெனச்சானோ எக்கி எக்கித் தொட்டேபுட்டான்.

''நீ சொன்னது சரிதான். அஞ்சு வயசு ஆகாத கையி தலையச் சுத்திக் காது தொடாது தாயி; நீ போயிட்டு வா. போப்பா... போயி உக்காரு.''

உடம்புக்கு வெளிய புடைச்சு நிக்கிற புதுச்சட்டமாதிரியே பொருந்தாமப் போயி உக்காந்தான் பாவம்.

அடிச்சு வளக்க அப்பனும் அணச்சு வளக்க ஆத்தாளும் இல்லாத பிள்ளைக பெரும்பாலும் புத்தியழிஞ்சு பொழப்பத்துப் போயிருதுக. அப்பன் இல்லாம ஆத்தாளோ ஆத்தா இல்லாம அப்பனோ பிள்ள வளக்கிறது ஒத்தக் கையில தயிர் கடைஞ்ச கததான். வெண்ணெயும் தெரளாது; வெளங்கவும் விளங்காது.

தகப்பன் இல்லாத பிள்ளைன்னு தாங்கித் தாங்கி வளத்ததுல அழகுசிங்கம் அடிமாறிப் போறதக் கண்டுபுடிக்கமாட்டாமப்போனா கருவாச்சி. மொளைச்ச முள்ள மொளையிலயே கிள்ளாம, அவன் குத்தங்களக்கூட அவ கொண்டாட ஆரம்பிச்சது தப்பாப் போச்சு.

பசுமாட்டுல பால் பீச்சிகிட்டேயிருப்பா கருவாச்சி; பாத்துக் கிட்டேயிருப்பான் அழகுசிங்கம். சீலயத் தெரட்டி ஏத்திக்கிட்டு ரெண்டுகால் இடுக்குல பித்தளச் செம்ப வச்சு, சொர சொரன்னு இருக்கிற காம்புல வெண்ணெயத் தடவி நீவிவிட்டு அவ 'சர்ரு சர்ரு'ன்னு பீச்சுற சத்தமிருக்கே, சரஸ்வதி வீணை வாசிச்சா அத நிறுத்திட்டு இங்க வந்து இதக் கேக்கணும்.





படிப்பகம்

செம்பு நெறையுதோ நெறையலயோ மூணுகாம்பு எனக்கு; ஒரு காம்பு ஒங் 'கன்டு'க்குன்னு ஒதுக்கிவிட்டு எந்திரிச்சிருவா. 'கன்ட அவுத்துவிடு கண்ணு அழகுசிங்கம்'ன்னு சொல்லிட்டு அவ வேலயப் பாக்க அடுப்படிக்குப் போயிருவா. கொண்ணவாயன் அந்த நேரம் 'கூலம்' புடுங்கப் போயிருவான்.

ரெண்டு மாசமாச்சு... மூணு மாசமாச்சு. தோலு மாதிரி சுருங்கிக்கிட்டே போகுது கன்டுக்குட்டி. சாலு மாதிரி விரிஞ்சுக்கிட்டே வாரான் அழுகுசிங்கம். என்னா ஏதுன்னு கடைசியில கண்டுபுடிச்சா... கன்டுக்குட்டியக் கொலபட்னியாப் போட்டுப்புட்டு, உள்ள தலையச் செலுத்தி ஒத்தக்காம்புப்பால இவனா உறிஞ்சுக் குடிச்சிருக்கானய்யா இத்தனநாளா.

'ஏண்டா நீ கருவாச்சிக்குப் பொறந்தியா காராம் பசுவுக்குப் பொறந்தியா'ன்னு அவனப் பாவப்பட்ட ஒரு பார்வை பாக்குது கன்னுக்குட்டி.

''எப்பிடிடா மகனே பசுமாட்டுக் கவுட்டுக்குள்ள பயப்படாமப் பாலு குடிக்கிற வித்தை படிச்ச?'' விரல்தடம் பதிய அடிச்சிருக்க வேண்டிய காரியத்துக்கு, கன்னத்துல உதடு பதிய முத்தம் குடுத்து உச்சி குளுந்து போனா கருவாச்சி.

தப்ப மெச்சிக்கிட்டேயிருந்தா அதுவே தர்மமாயிருதா இல்லையா? அந்தக் கணக்காகிப் போச்சு அழகுசிங்கம் கத.

முந்தானையில முடிஞ்சுவச்ச காச ஆத்தா அவுக்கிற வரைக்கும் பொறுமையில்ல; அறுத்துப்புடறான் அறுத்து. அடுப்புல கூட்டிவச்ச கறி வேகிறவரைக்கும் பொறுமையில்ல; அகப்பைய அளாவி அரிச்சுப்புடறான் அரிச்சு. ஒடைச்ச தேங்காயில சில்லெடுக்கிற வரைக்கும் பொறுமையில்ல; சிரட்டையோட சேத்துக் கடிச்சுப்புடறான் கடிச்சு.

வீட்ல வளக்குற புலி பம்முறதும் பாயறதும் செல்லச்சேட்ட பண்றதும் குட்டியா இருக்கிறப்ப கொண்டாட்டமாத்தான் இருக்கும். மீசையும் நகமும் வளந்திருச்சுன்னா அப்பறம் அதப் பாயில போட்டுப் பக்கத்துலயா போயிப் படுக்க முடியும்?

கருவாச்சி ஒண்ணு நெனைக்கக் காலம் என்னமோ நெனைக்குது. விளையும் பயிர் மட்டுமா - களையுந்தான் தெரிஞ்சுபோகும் மொளையிலயே.

●

''அடே அழகுசிங்கம்! வாடா இப்படி... 'அ'னா எழுதச் சொல்லித்தர்றேன்.'' வாஞ்சையாத்தான் கூப்பிட்டாரு வாத்தியாரு.

வேப்பமரத்து நெழலு; வெள்ள மணலு. ஆனாலும் ஆணிமேல உக்காந்தவன் மாதிரிதான் உக்காந்தான் அழகு சிங்கம்.

''நல்லாப் பாத்துக்க.'' உள்ளங் கையில மெழுகி மணலச் சமம் பண்ணி நிதானமா 'அ'ன்னு எழுதுனாரு; எழுதி எழுதி அழிச்சாரு. அழிச்சு அழிச்சு

padippakam

எழுதுனாரு. கடைசியா எழுதுனத அழிச்சாரு. ''இப்ப நீயே உன்கையால 'அ'னா எழுதி அந்த எழுத்துமேல இத அடுக்குடா''ன்னு புளிய வெதைகள அள்ளிப் போட்டாரு.

எழுதுறான் பய எழுதுறான்; விரல் வணங்கல. அ வுக்கு ஆரம்பச் சுழியான அந்த வட்டமே வருவனாங்குது. இந்த அ வுக்குள்ளயே ஆயுசு முடிஞ்சாலும் முடிஞ்சிரும்ன்னு நெனைக்கிறான் பய. எல்லாப் பயலுகளும் அரைகுறையா எழுதிட்டானுக. புளிய வெதையையும் எண்ணம் போல அடுக்கிட்டானுக. இவன் பொழப்பு சுழியிலயே மாட்டிக்கிட்டுச் சுத்துது.

ரெட்டக்குழல் துப்பாக்கி மாதிரி அவனையே குறிவைக்குது கண்ணாடிக்குள்ள இருக்கிற வாத்தியார் கண்ணு. முரட்டுப்பயதான்; அன்னைக்கித்தான் மொதமொதலா வேர்த்துச்சு பாவம் அவனுக்கு.

கையப் புடிச்சுப் புடிச்சு எழுதிக்காட்டியும் கதை ஆகல; கடைசியில வச்சாரு ஒரு குட்டு. தலைக்குள்ளயிருந்த ஒண்ணு பாக்கியில்லாம எல்லாம் செதறிச் சின்னாபின்னமாகி திரேகத்துக்குள்ள அங்கங்கபோயி ஒதுங்கிட்ட மாதிரி பொறிகலங்கிப் போச்சு.

வலி தெரிஞ்சதும் அவன் வம்சத்துக்குண்டான கோவம் உள்ளுக் கிருந்து எந்திரிச்சுருச்சு. வாத்தியார் அங்கிட்டுத் திரும்பவும் புளிய வெதைகள அள்ளி ரெண்டு கால் சட்டைப் பைகளுக்குள்ளயும் போட்டுக்கிட்டு விறு விறு விறுன்னு வீட்டுக்கு வந்துட்டான்.

கொண்ணவாயன விட்டுப் புளிய வெதைய வறுத்து ஊறவச்சான். விடிய்ய ஆத்தாகிட்டக் குடுத்து அவிச்சு அவனே தின்டுபுட்டான். அப்பறம்தான் தெரிஞ்சது அவன் அவிச்சுத்தின்னது பள்ளிக்கூடத்துப் புளிய வெதைன்னு.

பெறகு என்ன பண்றது?

கூலிக்கு வந்த புளியம்பழத்தையெல்லாம் வாசல்ல போட்டு ஒரே தட்டாத் தட்டி ஓடெடுத்துப் பழத்தக் கோணிஊசியில குத்திக்குத்தி வெத பிதுக்கியெடுத்து அரப்படி வெத சேத்து வாத்தியாருக்குக் குடுத்துக் கெஞ்சிக் கூத்தாடிப் பிள்ளைய மறுபடியும் சேத்துவிட்டா கருவாச்சி.

ஆனா விதி விட்டுச்சா? எழுத்துல தீந்த பகை எண்ணுல வந்து முட்டிக்கிருச்சு.

ஒண்ணு ரெண்டு மூணு சொல்லிக் குடுத்தாரு வாத்தியாரு. இவரு சொல்லச் சொல்ல பயக ஒரே குரல்ல மொத்தமாத் திருப்பிச் சொல்லணும். மொத்தமாச் சொல்றதுல ஒரு வசதி. சரியாச் சொல்லத் தெரியாத பயக கூட்டத்தோட கூட்டமா - தப்ப நசுக்கிச் சத்தத்துல தேச்சு விட்ரலாம்.



படிப்பகம்

padippakam

வாத்தியாரும் சின்னப்பிள்ளையில அப்படித் தேச்சுவிட்ட ஆள்தான...?

''இப்பத் தனித் தனியாச் சொல்லுங்க''ன்னாரு; அங்க மாட்னான் அழகுசிங்கம்.

ஒண்ணு ரெண்டு மூணு சொல்லி வந்ததுல இருவத்தி ஓம்போது வரைக்கும் ஆண்டவன் அருள் அவன் பக்கந்தான் இருந்துச்சு. முப்பது வந்தவுடன கடவுளே அவனக் கைவிட்டுருச்சு.

முப்பதுன்னு சொல்லத்தான் அவன் நெஞ்சு நெனைக்குது. ஆனா நுப்பதுன்னுதான் நாக்குல வருது.

''நுப்பது இல்லடா முப்பது ''

''நுப்பது''

''மு...மு...மு... சொல்லு''

''மு...மு...மு...''

''வந்திருச்சு; இப்பச் சொல்லு. மு...மு...மு...முப்பது''

''மு..மு..மு.. நுப்பது''

சில பொம்பளைக ஒழுங்காத்தான் தோச போடுவாக; பெரட்டிப் போடத் தெரியாமப் பிச்செடுத்துருவாக. அந்த மாதிரி இந்தப்பய எழுத்துல ஒழுங்கா இருக்கான்; வார்த்தையில ஒலப்பிடுறானே!

அவன் பாவம் வச்சுக்கிட்டா வஞ்சகம் பண்றான்? வரல.

''இன்னைக்கு ஒனக்காச்சு எனக்காச்சுடா மகனே. பாத்திருவோம்.'' மனசுக்குள்ள வேட்டிய மடிச்சுக் கட்டி ஒரு மல்யுத்தத்துக்குத் தயாராயிட்டாரு வாத்தியாரு.

''இப்பச் சொல்றா மு...மு...மு... முப்பது''

''மு...மு...மு... நுப்பது''

என் முப்பத்தோரு வருச அனுபவத்தையும் இவன் வம்புக்கிழுக்கிறானே!




தோல உரிச்சுக்க. நாக்கத் துண்டா அறுத்துட்டுப் போயி விடிய விடிய வீட்ல வச்சுச் சொல்லிக்குடு. வரவே வராதுங்கிறான் பய. அவன் கண்ணுரெண்டும் கம்மாயாப் போச்சு.

பொத்திப் பொத்தி வச்சிருந்த பொறுமை ஒடைஞ்சு வேர்வையா ஓடுது வாத்தியாருக்கு.கொதிக்கிற வெயில்ல குறுமணல்ல கடைசிமணி அடிக்கிற வரைக்கும் அவன முட்டிக்கால் போட வச்சிட்டாரு.

படிப்பகம்

முழங்கால்ல முள்ளுத் தச்சமாதிரி வலி. பள்ளிக்கூடத்துப் பயக நாப்பத்திரண்டு பேரும் கேவலமாப் பாக்கிறாங்களேங்கிற ★உள்ளிங்கம்.நம்ம நல்லதுக்குத்தான வாத்தியாரு செஞ்சாருன்னு நெனைக்காம, பழிவாங்குற எண்ணம் பதிபோட்டு உக்காந்திருச்சு அவன் மனசுல.

ஒவ்வொரு வகுப்பையும் ரெண்டுரெண்டு வருசமாத் தாண்டி வந்ததுல அஞ்சாவது முடிக்குமுன்ன பதினாலு வயசாகிப்போச்சு அழகுசிங்கத்துக்கு.

பதினாலு வயசுலேயே முக்கா ஆம்பளைக்கும் முழு ஆம்பளைக்கும் மத்தியில தெரண்டு நிக்கிறான். கூடப் படிக்கிற பயலுக அவனப் பாத்துப் பயப்படறாங்க. வாத்தியாரப் பழி வாங்கணுங்கிற எண்ணம் மட்டும் தண்ணிக்குள்ள கெடக்கிற கல்லுமாதிரி அப்படியே கெடக்கு மனசுக்குள்ள.

●

காப்பரிச்சை லீவு. ஊருக்குப்போகலாம்ன்னு அன்னஞ்சியில நிக்கிறாரு வாத்தியாரு. ஒரு நாளைக்கு ஒரே ஒரு பஸ்ஸு தான் அன்னஞ்சிக்குள்ள வந்து போகும்; அத விட்டா அடுத்த நாளுதான்.

பொட்டிக்கடையில கூட்டாளிகளோட கடல உருண்ட வாங்கித் தின்னுக்கிட்டு வாத்தியாரையே பாக்குறான் அழகுசிங்கம்.

''இன்னைக்குப் பழிதீத்திரவேண்டியதுதான்''

வந்திருச்சு பஸ்ஸு.

ஒரு கையில பொட்டியும் மறு கையில வாழத்தாரும் புடிச்சு அவரு ஏறப்போக - மளார்ன்னு தவ்வி ஓடி வந்து வாத்தியார் காலக் கெட்டியாப் புடிச்சுக்கிட்டு, ''என்னிய! மன்னிச்சிருங்கய்யா... என்னிய மன்னிச்சிருங் கய்யா''ன்னு கத்திக் குமிச்சுக் கதறி அழுகிறான் அழகுசிங்கம்.

''ஏய் விடப்பா. ஏய் விடப்பா.''

''விடமாட்டேன்ய்யா... ஒங்க கால எங் கண்ணீர்ல கழுவுனாத்தான் எம் பாவம் போகும்.''

புடிச்ச உடும்புப்பிடி இறுகிக்கிட்டே போகுது. தவறி விழுந்த பொட்டி தொறந்திருச்சு; வாழத்தார்ல அஞ்சாறு காயி உதிந்திருச்சு. கண்டக்டர் பொறுத்துப் பொறுத்துப் பாத்தான். வாத்தியார் வாராப்பல இல்ல; பையன் விடுறாப்பல இல்ல. ''போலாம் ரைட்''டுன்னு போயிட்டான் பாவம். பஸ்ஸு போகவும் ஒண்ணுமே நடக்காதது மாதிரி அவன்பாட்ல போயிட்டான் அழகுசிங்கம். அனாதிக்காட்ல நின்ன வாத்தியாரு அடுத்த நாள் வரைக்கும் காத்திருந்தாரு அடுத்த வண்டிக்கு.

---

★ அவமானம்

padippakam

இந்தச் சம்பவம் பட்டிதொட்டியெல்லாம் பரவிப் போச்சு.

''யப்பா சடையத்தேவா! வம்சக்கூரோட பெறந்து வளந்திருக்கானப்பா ஓம் பேரன். குடும்பி பிடிக்காம விட மாட்டானப்பா ஒன் குடும்பத்த. சரிதான்! கரட்டுக்காட்டுக்கு மொரட்டு மம்பட்டி; இனி என்னென்னா கூத்து நடத்தப் போறானோ... பாப்பம்...''

காலம் ஒரு ★ தார்முள்ளத் தயார்பண்ணிருச்சு சடையத்தேவரு கூன்ல அழுத்திக் குத்துறதுக்கு.

★ சாட்டைக் கம்பின் நுனியில் பதிக்கப்பெற்ற குறுங்கூராணி



படிப்பகம்



# 29

மேலுதட்டுல சாம்பல்பூத்தமாதிரி சன்னமா இருந்த மீச' கருகருன்னு கறுப்படிக்க அஞ்சாவது முடிச்சிட்டான் அழகுசிங்கம். கைக்குச் சிக்காத காத்துமாதிரி வசத்துக்கு வராத ஆளா வளந்து நிக்கிறான் பய.

அவனுக்குக் காசு ஒண்ணுதான் கடவுள்; தின்பண்டம் வாங்கித் தார ஆளு தெய்வம்.

அன்னாக்கயிறுங்கிறது அவனுக்கு வெறும் கோவணந்தாங்கின்னு நெனச்சீகளா? இல்ல... ஓட்டை முக்காத்துட்டக் கோர்த்து வைக்கிற உண்டியல்.

padippakam

அவனுக்குப் புடிச்சது பணியாரம்; புடிக்காதது பள்ளிக்கூட வாத்தியார்.

அவனளவுல ஆத்தா நல்லவதான் பாவம்; ஆனா உப்புக் கல்லுக்கு ஆகாதவ.

அவனுக்குப் புடிச்ச பொழுதுபோக்கு கால்சட்டையக் கழத்தி இது என்னதில்லன்னு எறிஞ்சிட்டு முண்டமாக் கொளத்துல தவ்வி முங்கு நீச்சல் அடிக்கிறது.

ஒரு பெரிய கெட்ட கொணம் இருக்கு அவன் பெறவியிலேயே. ஒரு ஆள மொத மொதலா மூஞ்சி பாக்குறப்ப அவனுக்கு என்ன தோணுதோ அத மண்டையப் போடறவரைக்கும் மாத்திக்கிர மாட்டான்.

ஒரு நல்ல கொணமும் இருக்கு. ஒரு காரியத்துக்குச் சரின்னு தலையாட்டிட்டான்னா ஆட்டுன தலைய அடகுவச்சாகிலும் அத முடிக்காம விடமாட்டான்.

அகமலையில ஒரு ஆளுகிட்டக் கஞ்சா வாங்கி, அல்லிநகரத்துல கொண்டாந்து ஒரு வீட்ல சேத்துட்டா, கால்ரூவா கூலிங்கிறது பேச்சு.

அகமலக்காரன் குடுத்த கஞ்சாவப் பழைய துணியில பரப்பி, அத இடுப்பச் சுத்தி இறுக்கிக் கட்டி முடிபோட்டு, ஏத்துன சட்டைய இறக்கிவிட்டு, நான்தான் காந்தி மகாத்மான்னு ஒண்ணுந் தெரியாதவன் மாதிரி ஒத்தையடிப் பாதையப் புடிச்சு அல்லிநகரம் வந்து சேந்தான் அழகுசிங்கம்.

இடுப்புக் கஞ்சாவ அவுத்து நிறுத்துப் பாத்தான் அல்லிநகரத்து ஆளு. பாத்துட்டு 'இந்தாடா' காசுன்னு குடுத்தான். எண்ணிப்பாத்தா - முக்காலணா.

''கணக்குப்படி கால்ரூவா தரணுமே... என்னப்பா இது முக்காலணா...?'' அவன் அப்பன் மாதிரியே மூக்குமேல கோபம் முட்டிநிக்குது அழகுசிங்கத்துக்கு.

''கஞ்சா முழுவீச இல்லப்பா. நிறுத்தா முக்கா வீச தான் வருது.''

''கொறைஞ்சா நானா பொறுப்பு...? குடுத்தவனக் கேளு. ''

''கொறையுதே கால்வீசக் கஞ்சா. அதக் குடுத்துட்டுக் காச வாங்கிட்டுப் போ.''

''அகமலையில குடுத்தத அல்லிநகரத்துல சேத்துட்டேன். நான் எதையும் எடுக்கல''

''சத்தியமா எடுக்கல?''

''எங்க ஆத்தா மேல சத்தியமா நான் எடுக்கல.''

''பெறகென்ன அப்பன அறியாத நாயி... ஆத்தா மேலதான் சத்தியம் பண்ணுவ''

அம்புட்டுத்தான். அழகுசிங்கத்துக்குள்ள இருந்த இத்துனூண்டு மனுசனும் நான் போயிட்டு வாரேன்னு போயிர ஒறங்கிக்கிட்டிருந்த முக்கா மிருகம் முழிச்சிருச்சு.



படிப்பகம்

padippakam

முட்டுக்கெடா மாதிரி தலையக்கவுந்து கஞ்சாக்காரன் நெஞ்சில முட்டித் தலைய விசுக்குன்னு தூக்கி அவன் தாடையில தட்டி மோவாயப் பேத்துட்டு இன்னது நடக்குதுன்னு தெளியுமுன்ன அவன் சில்லி மூக்க ஒடச்சு, எடதுகையத் தூக்கிப் புலியடிச்சதுமாதிரி அடிச்சான் பாருங்க... உதடு வெடிச்சு ஒழுகுது ரத்தம்.

அந்த முக்காலணாவ எறிஞ்சிட்டுக் கால்ரூவாய எடுத்துக்கிட்டு, புடிங்கடா... புடிங்கடா...ங்கிற சத்தம் அடங்குறதுக்குள்ள விசுக் குன்னு ஏறி வேலி தவ்விச் சோளக்காட்டு வழி ஓடிவந்துட்டான் சொக்கத்தேவன்பட்டிக்கு.

அப்பன் இல்லாதபயன்னு முதுகுக்குப் பின்னால லேசுபாசா பேசுவாகளே தவிர இப்படி மூஞ்சியில குத்துனமாதிரி ஒருபய சொன்னதில்ல. பருத்திக் கெடங்குல தீவிழுந்த மாதிரி பத்திக்கிருச்சு இன்னைக்கு. அருள் வந்த கோடங்கிமாதிரி ஆவேசமா வாரான் ஊருக்குள்ள.

களையெடுத்த காசுக்குச் சோளஅரிசியும் சூத்தக் கத்தரிக்காயும் வாங்கி வீட்ல வச்சுட்டுக் கனகம் வீட்டுக்குப் போயிக் கரண்டியில எரவல் தீ வாங்கிட்டு எதுக்க வர்றா கருவாச்சி.

ஊரே வேடிக்கபாக்க நடுத்தெருவுல ஆத்தாள வழிமறிக்கிறான் அழகுசிங்கம்.

என்னைக்குமில்லாம அன்னைக்கி அந்த வேசம் கட்டி வந்தவனப் பாத்து, கையில இருக்கிற நெருப்பு வயித்துலயும் எரிய நிக்கிறா கருவாச்சி.

''ஆத்தா! நீ நல்லவதான? ''

''அய்யா அழகுசிங்கம்! ஒனக்கு என்னய்யா ஆச்சு?''

''இந்த ஆச்சு போச்சுங்கிற பேச்ச விட்ரு; சொல்லு. என்னிய நீ எவனுக்குப் பெத்த? ''

''நீ என் மகன்டா ராசா.'' ஈரக்கொல நடுங்குது அவளுக்கு.

''ஆமா. பொட்டச்சி நீயே பெத்துக்கிட்டியாக்கும். இந்த நெருப்பு மேல சத்தியம் பண்ணு. என்னிய நீ யாருக்குப் பெத்த?''

வில்லடிபட்ட மண்பான கடகடகடன்னு ஒழுகிற மாதிரி சொல்லடிபட்ட பொம்பள சொத சொத சொதன்னு அழுகுறா.

''சடையத்தேவரு மகன் கட்டையனுக்குத்தாண்டா மகனே ஒன்னிய ஒங்காத்தா பெத்தா.''

''அவனுக்குத்தான் என்னியப் பெத்தேன்னு நீ சொல்ற. அவனுக் குத்தான் நான் பெறந்தேன்னு அவன் சொல்றானா?''

ஒரு பதினஞ்சு வயசுப்பய அப்பன அவன் இவன்னு சொல்லக் கேட்டு நெஞ்சப் புடிச்சு நின்னு தெருவே வேடிக்க பாக்குது.

''சொல்லு. அவனுக்குத்தான் என்னியப் பெத்தேன்னு நீ சொல்ற.





படிப்பகம்

padippakam

அவனுக்குத்தான் நான் பெறந்தேன்னு அவன் சொல்றானா?''

''இன்னைக்கிவரைக்கும் சொல்லல.''

''சொல்லவைக்கிறேன். நாந்தாண்டா ஒந் தகப்பன்னு சொல்ல வைக்கிறேன். சொல்ல வச்சுட்டு நான் இல்லடா ஒம் மகன்னு சொல்லிட்டும் வந்திடறேன். ''

''அய்யா ராசா வேணாம்டா. அவனுங்க பழிபாவத்துக்கு அஞ்சாத பாவிகடா. ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணுன்னு ஒன்ன வச்சிருக்கேன். கண்ணப் புடுங்கிக் காக்காய்க்குப் போட்ருவாங்கடா.''

''ஆத்தா! நீ சிங்கம்ன்னு பேருவச்சுப் பன்னிக் குட்டிக்கா பால் குடுத்து வளத்த? சடையத்தேவனச் சந்திக்கு இழுத்துக் கட்டையத் தேவன அவன் ஆத்தா குடுத்த பாலக் கக்க வைக்கல... நான் எங்க ஆத்தாளுக்குப் பெறந்தவன் இல்ல. இது இந்தத் தீ மேல சத்தியம்.''

ரெண்டு கையிலயும் இறுக்கிப் புடிச்சான் எரியிற தீக்கரண்டிய.

கையி வெந்து போச்சு;

கனல் அணஞ்சு போச்சு.

●

காத்திகமாசம் பேத்திக்குக் காதுகுத்து வச்சாரு சக்கணன்.

காதுகுத்துங்கிறதுக்கு ரெண்டு மூணு கணக்கு இருக்கு ஊர் நாட்ல.

காதுகுத்திட்டா ஒரு ஒச்சமாகிப் போகுமாம் பிள்ளைகளுக்கு. ஒச்சமான பிள்ளைகள எமன் ஏறெடுத்தும் பாக்கமாட்டானாம். காதுகுத்துக்கு இது ஒரு சாமி கணக்கு.

காதுல ஓட்ட போட்டதும் சல சல சலன்னு ஒழுகுதா இல்லையா ரத்தம்... ரத்தம் ஒழுங்கு மொறையா இருந்தா செத்தவெடத்துல ஒறையணும். அப்படி ஒறையற சக்தி இருக்கா இல்லையான்னு சோதிக்கிறதுதான் காதுகுத்தாம்; இது ஒரு வைத்தியக் கணக்கு.

ரெண்டுமில்லப்பா! அப்பன் சொத்துல பங்கு இல்லாத பொம்பள... பெத்த பிள்ளையச் சாக்கு வச்சு, தனக்கு உண்டானதுல ஒரு பங்கத் தாய்மாமன் மூலமா தண்டம் போட்டு வசூல் பண்றதுதானப்பா காது குத்து. இது காசுபணக்கணக்கு.

எந்தக் கணக்கா இருந்தா எங்களுக்கென்ன... எழுதற மொய்யிக்கு நெஞ்சுமுட்ட நெல்லுச் சோறு திங்கலாமில்ல; இது சொந்தபந்தம் போடுற சோத்துக் கணக்கு.

தாய்மாமன் ஊரு கெங்குவார்பட்டி; பசப்பும் பசையும் உள்ள ஊர் அது. தண்ணி செழிச்ச பூமி.

பதினோரு மரக்கா பச்ச நெல்லு, வாழப்பழத்தாரு, வகை வகையாச் சீரு. அய்யம்பாளையம் தேங்கா, பிறந்தவளுக்குச் சீல துணிமணி,



படிப்பகம்

மருமகளுக்குக் கொலுசுமணி எல்லாம் சொமந்து சொக்கத் தேவன் பட்டியையே ஒரு சுத்துச்சுத்தி ‘சாதிசனமே பாத்துக்க... ஆடு மாடே பாத்துக்க... கோழி குருமானே பாத்துக்க’ன்னு தாம்பாளத் தட்டத் தலமேல சொமந்து வாராக தாய்மாமன் வீட்டு ஆளுக.

மொட்டையடிச்ச தலையில சந்தனம் அப்பி, பகுமானமாப் பட்டுப்பாவாட சட்டை போட்டுத் தாய்மாமன் மடியில உக்காரவச்சு, பொன்னாசாரி கடுக்கன எடுத்துத் திருகாணி கழத்தவும் கண்ணுல தண்ணி தவ்வ ஆரம்பிச்சிருச்சு காதுகுத்துற பிள்ளைக்கு.

மாங்கொழுந்துமாதிரி இருக்குற பிஞ்சுக் காதுமடல்ல குத்தாணி எடுத்துச் சுருக்குன்னு குத்தவும் கொதக்குன்னு குதிச்சிருச்சு ஒரு சொட்டு ரத்தம்.

‘வீல்’ன்னு சங்கூதுற மாதிரி கத்தி அழுகுது சின்னப் புள்ள.

ரத்தத்துல தண்ணியடிச்சு, குத்துவாயில சந்தனம் தொட்டு வச்சும் அடங்கல பிள்ளைக்கு அழுக.

‘‘ஏய் கத்துன... ஒன்னியக் கடிச்சுக் கொன்டேபுடுவேன்.’’ அந்தப் பிள்ள அழுத கட்டைக்கு அடுத்த கட்டையில அமட்டுறான் தாய்மாமன்.

‘‘இன்னொரு காதுலயும் குத்திருங்க பொறுத்துக்கிர்றேன் - இந்த ஆளமட்டும் அமட்டாம இருக்கச் சொல்லுங்க’’ன்னு அதுக்கு மேல கத்துது பிள்ள.

முடிஞ்சது.

எல்லாரும் நின்ட எடத்துலயே அங்கங்க ஒக்காந்தாக. எல தெரியாமச் சோறு வாங்கிச் சாப்பிட்டாக. இப்பத் திண்ணையோரமா ஆளுக்குப் பின்னால ஆளுகளா நிக்கிறாக மொய்யெழுத.

இங்கதானய்யா சடையத்தேவர் மொதமொதலா மூஞ்சி பாக்குறாரு பேரன. அப்பப்ப எட்டத்துல பாத்தது. கிட்டத்துல பாக்கப் போறது இன்னைக்குத்தான். மொய்யெழுத முன்னுக்க நிக்கிது பெருசு; பின்னுக்க நிக்கிறான் பேரன்.

‘‘செல்லாண்டித் தேவர் மகன் சடையத்தேவர்... முழுரூபா ஒண்ணு; எழுதப்பா ’’

அவன் தன் பேரத்தான் எழுதறானான்னு எழுத்துக் கூட்டிப் படிச்சுக்கிட்டே சடையத்தேவரு நெஞ்சுக் கூட்டு உள்பையில கைவிட்டு, சில்லறைக்கு மத்தியில முழுரூபாயத் தடவித் தடுமாற... பின்னுக்கிருந்து ஒரு கொரல் கேக்குது:

‘‘கட்டையத்தேவர் மகன் அழகுசிங்கம் ஒண்ணேகால்... எழுதப்பா.’’

தடவுன ரூபாய நழுவ விட்டுட்டு, கிழட்டு யானமாதிரி முழு ஒடம்பு திருப்பி எவண்டா அவன்னு பாத்தா அடிச்சுவச்ச கல்லுச் செல மாதிரி கையில ஒண்ணேகால்ரூவாயப் புடிச்சுக் கெழவன ஒரு ஒரசு ஒரசி நிக்கிறான் அழகுசிங்கம்.

padippakam

தன்னையும் மகனையும் பெணைஞ்சு பெணைஞ்சு செஞ்ச பெறவின்னு ஒரே பார்வையில தெரிஞ்சு போகுது கெழவனுக்கு. அவன் கண்ணுலயும் மூக்குலயும் அப்படியே அப்பன அப்பி வச்சிருக்க, நெத்தி காது இத்தியாதிகள்ல தன் அடையாளம் பாத்து மனசுல ஒரு இருட்டு மூலையில சந்தோசப் பட்டுக்கிருது கெழட்டு உசுரு.

இருந்தாலும் வைராக்கியத்த விடுமா வங்கெழடு?

மொய் எழுதுறவன் மூலமா எகத்தாளத்துக்கு எசப்பாட்டுக் கட்ட ஆரம்பிக்கிறாரு சடையத்தேவரு.

''காத்துவாக்குல யாரோ கட்டையத்தேவன் மகன்னு சொன்ன மாதிரி இருந்துச்சு. அது எந்தக் கட்டையத் தேவன்னு கேளுங்கப்பா.''

படிக்காத சடையத்தேவனுக்கே இந்த லந்துலகள இருந்துச்சுன்னா... அஞ்சாவது பத்துவருசம் படிச்சவனுக்கு எம்புட்டு இருக்கும்? அடிச்சான் திருப்பி அழகுசிங்கம். ''இந்த ஊர்லயே சத்துக் கெட்டுப்போன சடையத்தேவர்ன்னு ஒரு ஆளு இருக்காரில்ல... அந்தச் சடையத்தேவன் மகன் கட்டையன்தான் எங்கப்பன்னு எழுதுங்கப்பா.''

''சீலப்பேனு செந்தட்டி சொல்றதயெல்லாம் நம்பி எழுதாதீக. தம் மகன் யாருன்னு எம் மகன்தான் சொல்லணுமப்பா.''

''கட்டையன்தான் எங்கப்பன்னு நான் சொல்றனப்பா''

''இப்படித்தான் அனாதிக அஞ்சாறு ஊர்ல சொல்லி அலையுதுகப்பா.''

''எங்க ஆத்தாளத் தள்ளி வச்சிட்டாலும் அப்பன் இல்லேன்னு போயிராதப்பா''

''அப்பன் வேணும்ன்னு ஆசப்படற பயலுகளயெல்லாம் ஆத்தாளுக்கு இன்னொரு கல்யாணம் பண்ணி வைக்கச் சொல்லுங்கப்பா.''

''கெழவா! ஒன்னியக் கொல்லாம விடமாட்டேன்.'' தத்துப்பித்துன்னு தவ்விட்டான் அழகுசிங்கம்.

''போடா! போடா! பொடிப்பயலே. சோத்துல கெடக்குற கல்லப் பெறக்க முடியாதவன் சொக்கநாதர் கோயில் கல்லப் பெரட்டப் போறானாம்.'' கிண்டல் பண்ணுது கெழடு.

கெழவனும் பேரனும் மொதமொதலா முட்டிக்கிட்டு நிக்கிறதப் பாத்ததும் பந்தியில இருந்த பாதிசனம் எந்திருச்சு வந்திருச்சு.

உருமாப்பெருமாத்தேவரு உள்ள வந்து விழுகிறாரு.

''ஏம்ப்பா சடையத்தேவா! இதென்னப்பா சின்னப்பிள்ளைத் தனமா இருக்கு. அவன் ஒன் பேரன்தான்னு ஊருக்கே தெரியுமில்ல. உரிமை இல்லேன்னாலும் ஒறவு இல்லேன்னு போயிருமா?''

''அடப் போப்பா... வாந்தியெடுத்த பொருளத்தூக்கி வாய்க்குள்ள போட்டுக்கிர முடியுமா? விட்டா வெறும்பய வீட்டுக்குள்ள வந்திருவான் போலிருக்கே!''



படிப்பகம்

padippakam

''வரமாட்டேன்னு நெனைக்கிறியா? வாரேன்... விடிய்ய வாரேன்.''

முறுக்கி நிக்கிற பேரனையும் மூக்கு வெடைக்கிற தாத்தனையும் பக்குவமாப் பிரிச்சுவிட்டுட்டுப் பந்தியில போய் ஒக்காந்திருச்சு ஊரு.

●

''வேணாமடா மகனே! குடிக்கிற கூழுக்கும் குடியிருக்கிற வீட்டுக்கும் கேடு வந்திருமடா. பொறுமையாயிருந்து பொழைச்சுக் காமிக்கணுமடா'' ராத்திரியெல்லாம் மகனக் கட்டிப்புடிச்சு அழுது கோழி கூப்புட ஒறங்கிப் போனா கருவாச்சி.

விடிய்ய... செங்கமங்கலா இருக்கிறப்பவே சடையத்தேவன் வீட்டுக் கதவ ஓங்கி ஒரு எத்து எத்தி உள்ள புகுந்துட்டான் அழகுசிங்கம்.

''ஏய் சடையத்தேவன் கெழவா... மகன் கூப்பிடுறான்னு எங்க அப்பன எழுப்புய்யா.''

காத்திகமாசக் குளிருக்குப் பயந்து கம்பளிக்குக் கீழ கெடக்கான் கெழவன்; ஒண்ணும் பதிலக் காணோம்.

அம்மி மேல படுத்துக் கெடந்த நாய் மட்டும் உர்ருன்னுச்சு. திருகக் கல்லத் தூக்கி நாய்மேல போட்டான். வால் மட்டும் அந்து - 'வள்வள்'ன்னு கத்திக்கிட்டுத் தப்பிச்சு ஓடிருச்சு நாயி. திருகக்கல் விழுந்ததுல ரெண்டா ஒடைஞ்சு துண்டா விழுந்திருச்சு அம்மி.

''இன்னைக்கு அம்மிக்கல்லு. நாளைக்கு ஒங்க தல.'' சொல்லிட்டு வெளியேறிருச்சு சூறாவளி.

சீ! வெளையாட்டுப் பயன்னு நெனச்சது வெனையாப் போச்சே. ''ஏலே... எந்த ஊர்ல எந்தத் தேவடியா வீட்ல கெடக்கானோ? தூக்கிட்டு வாங்கடா கட்டையன.''

●

மசங்க வந்து சேந்தான் கட்டையன்.

''மகனே! மொத மொதலா அப்பனுக்கு அச்சம் வருதடா. பொழைச்ச பொழப்பெல்லாம் போயிரும் போலருக்குடா. மண்புழுவுன்னு நெனச்சபய காலச்சுத்துற கட்டுவிரியனாகிப் போனாண்டா. என்னடா பண்ணப் போற?''

''அவனக் கண்டதுண்டமா வெட்டிக் கத்திரிக்காச் சாக்குல அள்ளி வருசநாட்டுச் சொனையில சொமந்து போட்டுட்டு வந்திரட்டுமா?''

''நீ செய்வ. அப்பறம் நீயும் நானும் இந்த ஊர்ல இருக்கணுமா இல்லையா...? மகனே சொல்றேன் கேளு. எம்பொழப்பு இன்னைக்கோ நாளைக்கோ. நீ ஊருக்கொரு பொம்பள வச்சு அலையிற. வீட்டுக்கொரு பொம்பள வேணாமா? வம்சத்துக்கொரு வாரிசு வேணாமா? ஒனக்கொண்ணும் வயசு போகல; நாப்பத்தஞ்சுதான். இந்த ஊரே ஒண்ணு திரண்டு எதுத்தாலும் சரி - கல்யாணம் பண்ணி வைக்கிறேன்; கட்டிக்க. வருசத்துக்கொரு பிள்ளைன்னு வாரிசு குடு. நாலு தலமொறையாக்



படிப்பகம்

padippakam

கட்டிக்காத்த சொத்துல ஒரு நாய் வந்து வாய்வைக்கிறதா? நம்ம பொழச்ச பொழப்பு நாறிப்போகாதா? சரி சொல்றா மகனே!''

கட்னவனுக்கு ஒரு பொண்டாட்டி; கட்டாதவனுக்குப் பல பொண்டாட்டின்னு திரிஞ்ச கட்டையன் கடைசியில சரி சொல்லிட்டான்.

தை பெறக்க...

வந்துட்டாளய்யா கட்டையன் கட்ன புதுப்பொண்டாட்டி - எடதுகாலத் தூக்கி எட்டுவச்சு.



படிப்பகம்



# 30

*“ஏய் அங்க பார்ரா... கட்டையன் கட்ன புதுப் பொண்டாட்டிய... ”*

ஏரநூறு முந்நூறு வருசமிருக்கலாம் சொக்கத்தேவன்பட்டிங்கிற ஊரு உண்டாகி. அது ஆயுசுக்கும் பாத்ததில்ல அப்படி ஒரு பொம்பளைய.

நாந்தான் சூரியன், பொம்பளவேசம்கட்டி பூமிக்கு வந்திருக்கேங்கிற மாதிரி அவ தெருவழியா நடந்து போறதப் பாத்ததும் சொக்கத் தேவன்பட்டியே உத்துஉத்துப் பாத்து சும்மா சொக்கிப்போச்சு சொக்கி.

மஞ்சக்குளிச்ச மாங்கொழுந்து மாதிரி ஒரு நெறம்; வளந்து மலந்து நிக்கிற திரேகம்; வசதியான ஒயரம்; உருண்டை மூஞ்சி; ஓயாமச் சிமிட்டுற கண்ணு; அவ ஒதட்டுல வெத்தல புடிச்சிருக்கா இல்ல வெத்தலைய ஒதடு புடிச்சிருக்காங்கிற வெவகாரம் தீராத செவப்பு. நான் சண்டைக்குப் போற சாதிக்குதிரைன்னு போறா 'டக் டக்'குன்னு எட்டுவச்சு.

'ஊருக்குள்ள ஒரு பொம்பள புதுசா வாரேன்'னு தண்டோராப் போட்டுக்கிட்டே போகுது அவ தண்டைமணி. சீலக்கட்டு கெண்டைக் காலுக்குமேல அரையரைக்கா அடி ஏறிநிக்க பளீர்ன்னு வந்து பச்சப் பாம்பு மாதிரி கண்ணக் கொத்திப்போகுது பச்சநரம்பு.

எத்தன பவுன் நகை போட்டு வந்திருக்கான்னு இவளக் கேக்காதீக; இடுப்புமட்டும் இருபது பவுனுன்னு கூப்பிட்டுக் கூப்பிட்டுச் சொல்லுது கொசுவம்.

தூக்கணாங்குருவிக் கூட்ட நிமித்தித் தூக்கிகட்னமாதிரி இருக்கிற அவ கொண்டை என்னையும் சேத்துத்தான் இவ ஒயரத்த அளக்கணும்ன்னு கூத்தடிக்குது கூத்து.

கட்டையன் பொண்டாட்டி ஊருக்குள்ள வந்ததுல ஒரு சரித்திரச் சம்பவம் என்னான்னா, லவுக்கபோட்டு ஒரு பொம்பள ஊருக்குள்ள வந்தது அதான் மொதத் தடவை. அந்தக் கிளிப்பச்சை லவுக்க அவ திரேகத்த இந்த இறுக்கு இறுக்குதே... துணிய மேனியில போட்டு ஒட்டித் தச்சுக்கிட்டாளா? இல்ல லவுக்கக்குள்ள திரேகத்த நொழச்சுக் கிட்டாளா...? கிண்டல்பழுத்த பெருமூச்சுல கேக்குறாளுக கெழவிக. போறபோக்குல வகுத்துக்குள்ள வெரலவிட்டு, இறுக்கிப்புடிச்ச லவுக்கப்பட்டைய அவ ஒரு சுண்டு சுண்டுறதுல இடிதாக்கி நொறுங்கிக் கெறங்குதுக இளவட்டங்க. அவ வாளிப்பு முப்பதுன்னு மதிக்கச் சொன்னாலும் வயசு என்னமோ இருபத்தேழுதான்.

தங்கமூக்கு, தாம்பாளக்கன்னம், மூக்குத்தி, பொட்டுமணி, தண்டட்டி, தாலி. எந்தச் செயில்ல போட்டு என்னிய எப்பிடிக் கட்டி வச்சாலும் தப்பிச்சே தீருவேன்னு தவ்வப்பாக்குது தனம்.

பேச்சத் தொலச்சிட்டுப் பித்துப் புடிச்சு, வெத்தலைய ஒரல்ல போட்டுட்டு வெளிய குத்துதுக பெருசுக. அவல நெனச்சு ஒரல இடிச்சமாதிரி இவள நெனச்சு வெளிய இடிச்ச கதையாகிப் போச்சு.

அவ அம்சத்தையும் அழகையும் பொறுக்க முடியாத ஒரு பொம்பள சொல்றா: ''எத்தன நாளைக்கி இந்த அலங்காரத்தோட இவ அலையப்போறா? கோடிச்சீல ஒரு ★வெள்ளையோட சரி; கொமரிப் பிள்ள ஒரு பிள்ளையோட சரி.''

பின்னத்தேவன்பட்டிக்கு அவுக பெரியத்தா வீட்டுக்கு விருந்தாளியா வந்தவளாம்; ஈரவேட்டிய வீசிக் கோழிய அமுக்கிற மாதிரி அமுக்கிக் கூட்டிட்டே வந்துட்டானாம்

''சரியான கட்டையத்தான் புடிச்சுட்டு வந்திருக்கான் கட்டையன்.''

★ சலவை

''இது வெறுங்கட்டை இல்லடா... திம்சுக்கட்டை''

அவ சொந்தப் பேரு என்னான்னு யாருக்கும் தெரியாது; ஆனா அன்னைக்கு வச்சபேரு தொலங்கிருச்சு-

'திம்சு'

பாதிக் கெழவனான பிறகு கல்யாணம் பண்ணிருக்கான்... கட்டுப்பாடு வேணாம்ன்னு விட்ருச்சு ஊரு. இருந்தாலும், சேத்துல விழுந்த காசுலயும் சகதி ஒட்டுற மாதிரி அந்தக் குடும்பத்துமேல இருந்த வெறுப்பு வந்தவ மேலயும் ஒட்டிக்கிருச்சு.

ஆனா நடந்த கதையே வேற. வந்தவ இருக்காளே... வல்லாளகண்டி. கால்வீச பாகக்காயில அரைவீச சக்கரப்பாகு எடுத்து ஒருவீச அல்வாக் கிண்டுறவ.

வந்தவ வீடுபெருக்கி விளக்கேத்தி வச்சுட்டு ஊர ஒரு நோட்டம் விட்டா. அந்த ஊர்ல மண்ணுக்கு என்ன மணம் மனுசங்களுக்கு என்ன குணம்ன்னு ரெண்டேநாள்ல மோப்பம் புடிச்சா. வாக்கப்பட்டு வந்த குடும்பத்துக்கும் ஊருக்கும் எதனால ஏழாம் பொருத்தம்ன்னு வெலாவாரியா விசாரிச்சா.

விடிய விடிய யோசிச்சு விடிய்...யக் காய் நகத்திட்டா.

மொத வேலையா வீட்டுக்குள்ள இருந்த ஒரலத் தூக்கித் தெருவுல போட்டா. புதுசா வாங்குன அம்மி திருகை ரெண்டையும் வெளித் திண்ணையில போட்டுவச்சா.

''எங்க வீட்டு ஒரலு அம்மி திருகை ஊருக்குப் பொது. யாரும் வந்து அரச்சுக்கிரலாம்; யாரும் வந்து இடிச்சுக்கிரலாம்.'' சொல்லிட்டு சொளகுல சோளம் பொடைச்சு வாசல்லயே ஒக்காந்துட்டா. ஒருத்தி வரல; ஊரே இறுகி உள்தாப்பாப் போட்டுக்கிருச்சு.

பொழுசாய...

குறுணிச்சோளத்தக் கூடையில போட்டு எட்டுமேல எட்டுவச்சு வந்தா இடுப்புச் செத்த கெழவி ஒருத்தி. உரல்ல சோளம் கொட்டி ஒலக்கைய எடுத்தா. ஓங்கிப் போடச் சத்து இல்ல பாவம் அவளுக்கு. முக்கி முக்கிப் பாக்குறா... ஒண்ணும் வேலைக்காகல. பாத்தா திம்சு. முந்தானைய இழுத்து இடுப்புல செருகிக்கிட்டு, கொண்டா ஒலக்கையன்னு வாங்கிப் போடறாளய்யா பெரும்போடு.

கண்ணாடி வளவிச்சத்தம் தெருவையே தெரட்டியடிக்க - சும்மா 'ணங்கு... ணங்கு... ணங்கு...'ன்னு எறங்குற ஒலக்க ஒரலுக்குள்ள புகுந்து கல்வாத்தியம் வாசிக்க - ஏறி ஏறி எறங்குற அவ மார்பு ரெண்டும் மனுசப் பொழப்பும் இப்படித்தாண்டான்னு தன்னால தத்துவம் பேச - வெறும் விரல்கடை அளவு மட்டுமே தெரிஞ்ச அவ இடுப்பு, இப்பக் கையளவு தெரிஞ்சு கண்காட்சி காட்ட ஓங்கி ஓங்கி ஒலக்க போட்டா; சொங்க விட்டுச் சோளஅரிசி எட்டிப்பாக்குற மாதிரி வீட்டவிட்டுவந்து வெளிய எட்டிப்பாக்குது ஊரு.

padippakam

''யாரு பெத்த மகராசியோ?'' குத்தவச்ச கெழவி கும்புட்டு உக்காந்திருக்கா ஒரு ஓரமா.

இருங்கச்சோளம்மட்டும் குத்தியெடுத்தாப் பத்தாது. அரிசியத் தொவைக்கணும்; இல்லாட்டி வெளங்காது. ஒரல்ல குத்துன சோளத்தை அவளே அள்ளுனா; பொடச்சா. அரிசிமேல லேசாத் தண்ணி தெளிச்சு பழையபடி ஒரல்லபோட்டுப் பொய்க்குத்தாக் குத்தித் தும்பப்பூ மாதிரி தொவைச்சும் குடுத்திட்டா. அவளக் கும்பிட்டு வாங்கி அழுதுபோறா கெழவி.

''திம்சு நல்ல குணவதி போலிருக்கே.''

ஊருக்குள்ள சின்னச் சின்னதா சின்னச் சின்னதா நல்ல பேரு பரவுது அவளுக்கு.

நல்லதுக்கு றெக்கை கட்டி விடுறதும் கெட்டதுக்குக் கொம்பு சீவி விடுறதும் ஊருக்குள்ள மூணே மூணு பேருதான்.

ஒண்ணு- சலவைக்காரன்-

ரெண்டு- சவரக்காரன்-

மூணு- ஊர்மாடு மேய்க்கிறவன்.

மூணுபேரையும் கூப்பிட்டா.

''யப்பா எல்லா வீட்டுக்கும் ஏனம் எடுத்து அலையாதீக. இன்னைக்கிருந்து நான் திங்கிற சுடுசோத்துல சரிசோறு உங்களுக்கு; காயோ கறித்துண்டோ எங்க வீட்டுக் குழம்புல எனக்கில்லைன்னாலும் ஒங்க சட்டியில ஒங்களுக்கு விழுகுமப்பா.''

சொக்கத்தேவன்பட்டிய மூணாப்பிரிச்சு மூணுபேருக்கும் பட்டாப் போட்டுக் குடுத்தமாதிரி கெறங்கிக் கிறுகிறுத்துப் போனாக மூணுபேரும்.

சடையத்தேவரப் பெரியமாமுன்னு கூப்பிட்டுப் பழகிட்டா; கட்டையன மாமுன்னு கூப்பிட்டுப் பழகிட்டா திம்சு.

''பெரியமாமு! கொடியில கெடக்கே... கிழிஞ்சு போன பழைய வேட்டிசட்ட... என்ன பண்ணப் போறீக?''

''என்னத்தப் பண்றது? அழிஞ்சுபோற வரைக்கும் அங்கேயே கெடக்கும் தாயி''

''நான் எடுத்துக்கிரட்டுமா?''

''எடுத்துக்க''

கிழிஞ்சுபோன வேட்டி சட்டைகள எல்லாம் கூப்பிட்டுவச்சுக் குடுக்கவும் நொண்டி நோஞ்சானெல்லாம் திடும்னு விழுந்திருச்சுக திம்சு கால்ல.

''குடுக்கச் சொன்னது பெரியமாமு. அவரு கால்ல விழுங்க''

உள்ள கூட்டிட்டுப்போயி சடையத்தேவர் கால்ல 'மளார் மளார்'ன்னு அவ விழுக வைக்கவும் முதுகுத்தண்டுல மழைவிழுந்து கும்பிகுளுந்து போச்சு கெழவனுக்கு.



படிப்பகம்

சடையத்தேவர் அந்த மொத மயக்கத்தவிட்டு முழுசாத் தெளியுமுன்ன ரெண்டாம் வைத்தியம் ஆரம்பிச்சுட்டா திம்சு.

சடையத்தேவருக்கு முடிவெட்டச் சொன்னா சவரக்காரனக் கூப்பிட்டு.

பொத்தக்கள்ளி மூஞ்சி;

நெருஞ்சி முள்ளு ரோமம்;

வேலாம்பட்டத் தோலு.

பாறைக்கெல்லாம் சவரம் பண்ணாதீங்கப்பான்னு படபடக்குது கத்தி.

முடிஞ்சது.

கோவணத்தக் கட்டிவிட்டு ஒரு ஓரமா உக்காரவச்சா கெழவன. நல்லெண்ணெய ஊத்துனா கரண்டியில. பட்டமொளகா ஒண்ணு, வெள்ளப்பூடு ரெண்டு பல்லு, கருமொளகு மூணு, மூணையும் உள்ள போட்டு எண்ணெயச் சுடவச்சா. ஒரு எளம் வெதும்பல்ல எடுத்தா; தொங்குற சீலயச் சுருட்டித் தொடையிடுக்குல செருகிக்கிட்டா. ‘கர கர கர’ன்னு தேச்சா பெரிய மாமன் தலையில.

மண்டையில கொஞ்சங் கொஞ்சமாக் கொறைஞ்சுக்கிட்டிருந்த உசுரு ஊறி வருது கெழவனுக்கு. பொறிபறக்குது நெத்தியில. ‘நீ என்ன சொன்னாலும் சரி தாயி’ன்னு ஆடுது தல அதுபாட்டுல.

எளஞ்சூட்டு எண்ணெய இருகாதுலயும் ஊத்திப் பருத்திப்பஞ்ச வச்சு அடைச்சா; மூஞ்சியில எண்ணெ வச்சு நெத்தி தடவுனா; இரு கட்டவிரல்லயும் இருபுருவம் நீவிவிட்டா; கண்ணுல வெரல விட்டுப் பீழை பிதுக்கியெடுத்தா; தேஞ்ச கழுத்தெலும்ப எண்ணெவிட்டு வழிச்செடுத்து இழுகிவிட்டா; சொறிபுடிச்சுச் சொரசொரன்னு போன முதுகப் பிஞ்சுநகம் வச்சுச் சொரண்டிச் சுத்தப்படுத்தினா; வத்திப்போன நெஞ்சுக்கூட்ல வழியவழிய எண்ணதடவி, நரைமுடியச் சிக்கெடுத்தா; சதையில்லாத தொடையெலும்ப அழுத்தாம அழுத்தி ஆதரவுபண்ணுனா; கெண்டக்கால் சதையப் பச்சப்புள்ள கன்னத்தப் புடிச்சு விடுறமாதிரி பதறாம நசுக்கிவிட்டா; பத்துவெரல்லயும் சொகமாச் சொடக்கெடுத்தா; நகக்கண்ணுல அழுக்கெடுத்தா; சீவராசிக கூடுகட்டிக் குடியிருக்கிற குதிகால் பித்தவெடிப்புல வேப்பங்கொழுந்தும் மஞ்சளும் ஆமணக்குவித்தும் அரச்சுப் பூசுனா. சொந்தமக மாதிரி வந்த மருமக சேவை பண்ணி விடவும் நாப்பது வருசமாத் தொலஞ்சுபோன பொழப்ப ஒரே நாள்ல பொழச்சு முடிச்சிட்டதாக் கிறுக்கு புடிச்சுப்போச்சு கெழவனுக்கு. பொல பொல பொலன்னு தண்ணி ஒழுகுது புருவம் நரைச்ச கண்ணுல.

கரம்ப மண்ணப் போட்டுத் தேச்சுத் தலையில வெது வெது வெதுன்னு வெந்நி விடவும், ‘யாரு பெத்த மகளோ, நீ நல்லாரு’ன்னு சொல்லிக் கண்ணு ரெண்டையும் இறுக்க மூடிக் கோவணத்தோட உக்காந்து கும்புடறாரு கெழவன்.

இப்படி ரெண்டு மூணு தண்ணி ஊத்தி விட்டா; பல்லுப்போன கெழவனுக்குப் பஞ்சுமாதிரி சுட்டுக் குடுத்தா ஆட்டுஈரல. இந்த

padippakam

சொகத்துலயும் சோங்குலயும் சொக்கிப்போன சடையத்தேவரு ''எங்கிட்ட இருந்தா என்ன... ஒங்கிட்ட இருந்தா என்ன... இந்தா தாயி! இத நீயே வச்சுக்க''ன்னு எடுத்துக் குடுத்துட்டாரு சாமி படத்துக்குப் பின்னால இருந்த சாவிய.

புருசன்காரன அவ போட்ட போடு இருக்கே... பொறி கலங்கிப் போச்சு அவனுக்கு. குலதெய்வத்த ஒரு ஓரமா ஒதுக்கிவச்சுட்டு இவளக் கும்புட ஆரம்பிச்சுட்டான்.

சாயங்காலமானாச் சட்டை வேட்டி மாத்தி வெளிய கௌம்புறதும் நடுச்சாமத்துல வந்து கதவு தட்றதுமா இருந்தான் கட்டையன்.

ஒரு நாள் வெள்ளையுஞ் சொள்ளையுமா அவன் வெளிய கௌம்ப, ''செத்தவடம் உள்ளவந்துட்டுப் போ மாமூ''ன்னா.

உள்ள போனா-

மோர் மொளகா சுட்டுவச்சு, முட்டை வறுத்துவச்சு, ஊறுகாயும் எடுத்துவச்சிருந்தா ஒரு ஓரமா. உறியில துண்டாத் தொங்கவிட்டிருந்த ஈயத் தூக்குவாளிய எடுத்தா; தெறந்தா. சும்மா பட்டையக் கௌப்புது பட்டச்சாராய வாசன.

'ஒக்காரு மாமூ'ன்னா; உக்காந்தான்.

''மாமூ! கூத்துப் பாக்கிறதாயிருந்தாக் கூட்டத்தோட பாக்கணும்; குடிக்கிறதாயிருந்தா ஒத்தையில குடிக்கணும். ஒனக்கு என்னா சரக்கு வேணும் சொல்லு. தாண்டிக்குடிமல தாண்டிக்கூட வாங்கிட்டு வந்து தாரேன். இங்கேயே குடி. என்னாடா இது இளைய குடியாளா வந்தவ இருக்கிற குடியக் கெடுத்துருவா போலருக்கேன்னு நெனைக்கிறியா? நெனைக்காத. இதுவரைக்கும் நீயி எப்பிடி இருந்தியோ அப்படியே இருந்துக்க. ஒனக்கு மட்டுந்தான் நான் பொண்டாட்டி. எனக்கு மட்டுமே நீ புருசன் இல்ல; நீ போற வழியில போய்க்க. எங்கபோற எதுக்குப் போறன்னு கேட்டா- செருப்ப எடுத்துக்க. ஆனா எப்ப வருவன்னு மட்டும் கேப்பேன். எதுக்குன்னா, ஒனக்கு நான் வெடக்கோழி அடிச்சு வெள்ளச் சீசா வாங்கி வைக்கணுமே அதுக்கு.''

அன்னைக்கி விழுந்தவன்தான் கட்டையன். விழுந்த பள்ளம் அவனுக்கு வேண்டிய பள்ளமாயிருந்துச்சு. எந்திரிக்க மனசே வரல; எந்திரிக்கல.

●

அடுத்து அழகுசிங்கம் மேல எந்த அம்பத் தொடுக்கலாம்னு அவ மண்டகாஞ்சு நிக்க... காலமே கொண்டாந்து அவ காலடியில சேக்குது அவன.

கட்டையன் வீட்டுக்குள்ள புகுந்து ஒரு கெடாயப் புடிச்சுக் காளியாத்தாளுக்கு வெட்னாத்தான் பலியும் பழியும் ஒரே நேரத்துல தீரும்னு முடிவு பண்ணுனான் அழகுசிங்கம்.

'கெடாயும் புடிக்கணும்; யாரோ புதுசா வந்திருக்காளாமில்ல ஒரு பொறம்போக்குச் சிறுக்கி... அவளையும் ஒரு ஒச்சம் பண்ணிட்டு வந்திரணும்' சிறுகச் சிறுகத் திட்டம் போட்டான்.



படிப்பகம்

கட்டையன் வீட்டுக்குள்ளதான் கெடா கட்டிக் கெடக்குங்கிறத் துப்பறிஞ்சு ஒரு நாள் பொழுதிருக்கப் புகுந்துட்டான் அந்த வீட்டுக்குள்ள.

அன்னைக்கின்னு பாத்து சடையத்தேவர் வீட்ல இல்ல; கட்டையன் ஊர்ல இல்ல.

போனவன் ஓட்டு வழியா ஏறி உள்ள குதிக்கவும், சடார்ன்னு அவன் கால்ல சரிஞ்சிருச்சு கட்டத் தூணு. கணுக்கால் எலும்பு நசுங்கிச் சப்பழிஞ்சுபோச்சு.

''யாத்தே''ன்னு கத்தி அவன் சாணியில கெடக்க, சத்தங் கேட்டுத் திமுதிமுன்னு ஓடிவந்தா திம்சு.

வந்தவன் அழகுசிங்கம்தான்னு அனுமானிச்சுக்கிட்டு அவன மளார்ன்னு தூக்கி மடியில போட்டுக்கிட்டா. முந்தானையக் கிழிச்சுக் குளுதாணியில நனச்சுக் காயத்துல கட்டுப் போட்டு ரத்தத்த நிறுத்திப்புட்டா.

லோகிதாசன மடியில போட்டு சந்திரமதி மயானகண்டத்துல அழுகிறமாதிரி 'குய்யோ முறையோ'ன்னு அழுகையில கூடிட்டா.

ஆடு களவாண வந்தவன் ஆடிப்போயிட்டான்.

''இந்த வீட்ட அரசாள வேண்டிய ராசா நீ அடிபட்டுக் கெடக் குறியே.'' அவன் தலைய நெஞ்சுல தாங்கி நடந்து திண்ணையில உக்காரவச்சுத் தண்ணி குடுத்தா.

''தண்ணி குடுக்கிறியா தண்ணி...'' செம்போட தூக்கி விட்டத்துல விட்டெறிஞ்சான்.

''அய்யா மகனே! அழகுசிங்கம்! ஊரே எம்மேல வெறுப்பேறி நிக்கிது; காறித்துப்புது. ஒம் பங்குக்கு நீயும் எத்தி மிதிக்கிறியா... எத்து. ஒங்க பொழப்பக் கெடுக்கவா நான் வந்தேன்...? எங்க அக்கா கருவாச்சி போட்ட மடிப்பிச்சதான் இந்தப் பொழப்புன்னு எனக்குத் தெரியாதா? தாயும் மகனும் பாத்து நீ ''இரு''ன்னா இருக்கேன்; ''போ''ன்னாப் போயிர்றேன். நான் இங்க வீட்டுக்காரி இல்லடா மகனே. ஒங்க சொத்து பத்து சிந்தாமச் சிதறாமக் கட்டிக் காக்க வந்த காவக்காரி.''

அவன் கால்ரெண்டையும் கட்டிப்புடிச்சுக் காயத்த அழுத்தாம அவ அழுது பொலம்பவும் அழகுசிங்கத்துக்கே அழுக வந்திருச்சு.

''சரி சரி எந்திரி... கால விடு.''

''நீ சின்னத்தான்னு சொல்றவரைக்கும் புடிச்சபுடி விட மாட்டண்டா மகனே.''

கொஞ்சநேரம் யோசிச்சான்.

''சரி எந்திரி சின்னத்தா.''

எந்திரிச்சுக் கண்ணத்தொடச்சு முந்தானைய அவுத்து முழுரூவா ஒரு ரூவா குடுத்தா. மொதல்ல வெறுப்பா வெறிச்சு வெறிச்சுப் பாத்த பய கடைசியாக் கை நீட்டிட்டான்.

''நாம நெனச்சது தப்பு. நல்லவதான் போலிருக்கே.''

அவன் நொண்டி நொண்டிப் போறதையே வச்ச கண்ணு வாங்காமப் பாத்து நிக்கிறா திம்சு.

இப்படி...

வெந்நியில சாச்சுட்டா கெழவன;

தண்ணியில சாச்சுட்டா புருசன;

கண்ணீர்ல சாச்சுட்டா மகன.



# 31

இன்பம் துன்பங்கிற ரெண்டும் துண்டு துண்டாவா இருக்கு?

கெடையாது; அடுத்தடுத்த வீடு.

இன்பத்தைப் பெரட்டிப் போட்டாத் துன்பம்;

துன்பத்தப் பெரட்டிப்போட்டா இன்பம்.

பூமி இன்பம்; பூகம்பம் துன்பம்.

காத்து இன்பம்; புயல் துன்பம்.

padippakam

மழை இன்பம்; வெள்ளம் துன்பம்.

தீபம் இன்பம்; தீப்புடிச்சாத் துன்பம்.

ஆகாயம் இன்பம்; இடி துன்பம்.

ஒடம்பு இன்பம்; நோய் துன்பம்.

சொல்லப்போனா சீவராசிகளும் மனுசப்பயகளும் உண்டான காலத்துலயிருந்து துன்பங்கிறதுதான் இயற்கை; இன்பங்கிறது ஏற்பாடு; மனுசனாப் பாத்து உண்டாக்கிக்கிட்டது.

இயற்கைக்கு எதிரா மனுசனால உண்டாக்கப்பட்டது நிக்குமா? அதான் பொட் பொட் பொட்டுன்னு விழுந்திருது.

துன்பங்கிற நெருப்ப எடுத்துக் கையில வச்சுக்கிட்டே அலையுது காலம். தட்டுப்படுற ஆளுக தலையிலயெல்லாம் வச்சு வச்சுப் பாக்குது.

''நீ சருகாயிருந்தாக் கருகிக் காணாமப் போயிருவ.

தங்கமாயிருந்தா மெருகாகிப் போயிருவ.

நீ சருகா தங்கமான்னு சோதிக்கிறேன் ''

தீயவச்சிட்டுக் கண்ணச் சிமிட்டிச் சிமிட்டிச் சிரிக்குது காலம்.

கல்லுமேலயே நடந்து நடந்து பாதம் கெட்டிப்பட்டுப் போற மாதிரி, சள்ளப்பட்டு மொள்ளப்பட்டே மனசும் மரத்துப் போச்சு கருவாச்சிக்கு.

''சாமி! எம்மேல கல்லெறியிறதே ஒனக்கொரு வெளையாட்டாப் போச்சு. இன்னம் எத்தன கல்லு எறியப்போறயோ எறி. கடைசியில கணக்குப் பாப்பம்; ஒடையறது என் எலும்பா நீ எறிஞ்ச கல்லான்னு.''

கருவாச்சி சொன்னது சாமிக்குக் காது கேட்டிருச்சு போலருக்கு. இதுவரைக்கும் சல்லிக்கல்ல எறிஞ்ச சாமி, இப்ப ஒரு பாறையவே உருட்டிவிடுது.

பொழைச்ச பொழப்புக்கு ஒரே மிச்சம்ன்னு எந்த மகன நெனச்சாளோ -

செஞ்ச சத்தியத்த செயிச்சுக்காட்ட மலபோல வந்துட்டான்னு எந்த மகன நம்புனாளோ -

அந்த மகனுக்குப் புத்தி கோணிப் போச்சு; போக்கு மாறிப் போச்சு.

வாக்கப்பட்டு வந்த ரெண்டே வருசத்துல முக்காத் துட்டெடுத்து முந்தானையில முடியிற மாதிரி திம்சு அவன முடிஞ்சுபுட்டா முடிஞ்சு.

கைநெறையச் செலவுக்குத் துட்டு - பைநெறைய நொறுக்குத் தீனி - தூக்குவாளி மூடமுடியலேன்னு முணுமுணுக்குற அளவுக்குக் கறிச்சோறுன்னு குடுத்துக் குடுத்து வேல வெட்டியில்லாத வெடலப் பயல மார்லபோட்டுத் தாலாட்டித் தாலாட்டித் தலக்கிறுக்குப் புடிக்க வச்சுட்டா திம்சு.

''ஆத்தா ஒரு அவத்தச் சிறுக்கி. நல்லத்தா நீதானத்தா நல்ல ஆத்தா.''



படிப்பகம்

அவன் வாயாலயே ஆத்தாள வைய வச்சு வீட்டுக்குப் போகாம அவன் வெளித்தங்கல் பண்ற மாதிரி பண்ணிப்புட்டா.

''மகனே அழகுசிங்கம்... நீ ஒங்க அப்பன் வீட்டுக்கு வரக் கூடாது. அப்பனுக்கு ஒன்னியக்கண்டா ஆகாது. ஒங்க ஆத்தா வீட்டுக்கும் நான் எதையும் குடுத்துவிட முடியாது; ஒங்க ஆத்தாளுக்கும் ஆகாது. அதனால காசோ கறிக்கொழம்போ நான் பவுனு வீட்ல குடுத்திடறேன். அவகிட்ட வாங்கிக்கடா மகனே. ''

மூக்குல ஈ ஒட்டுன ஆட்டுக்கெடா மாதிரி அவன் அங்கிட்டும் இங்கிட்டும் தலையாட்டிச் சரின்னுட்டான், ஆத்தா கூடக் 'காய்' விட்டுட்டு, திம்சு கூடப் 'பழம்' ஆகிட்டான்.

தாய் மீனுக்குக் குஞ்சுமேல ஆச; குஞ்சு மீனுக்குப் புழுமேல ஆச. என்ன பண்றது?

●

ஆத்துக்கு மீன் புடிக்கவும் போவான் அழகுசிங்கம். தூண்டி போட்டா மீன் சேராது. வல போட்டாலும் மீன் மாட்டும்ன்னு சொல்ல முடியாது. வேட்டைக்குப் போனா வெறுங்கைய வீசியா வீடு வாரது? மீன் புடிக்க ஒரு குறுக்கு வழியக் கண்டு புடிச்சான் அழகுசிங்கம்.

ஆத்த மறிச்சான்; மணலக் குமுச்சுக் குமுச்சு, மேல ஒரு அண கட்னான்; கீழ ஒரு அண கட்னான். அண ஒடையாம இருக்க ஓரமா ஒருபக்கம் வழி ஒதுக்கிவிட்டான். இப்ப ரெண்டு அணைக்கும் மத்தியில தேங்குன தண்ணியில வெட்டி வெட்டி அமுக்குறானய்யா கொடிக்கள்ளிய.

இந்தக் கொடிக்கள்ளி இருக்கே கெட்ட கழுத. கொடிக்கள்ளிப்பால் வெசம். கொடிக்கள்ளிய அமுக்கித் தண்ணிக்கு நஞ்சூட்டிவிட்டுட்டான் நாசமாப் போற பய. செத்தவடத்துல கொடிக்கள்ளி நெடி தாங்காமச் செத்து மெதக்குதுக பொடி மீனெல்லாம்; தண்ணிக்குமேல வந்து அரை மயக்கத்துல அல்லாடுதுக பெரிய மீனெல்லாம். பாத்துக்கிட்டேயிருக்க, தண்ணி தெரியாம மீனா மெதக்குது. அம்புட்டுத்தான்; வேட்டிய விரிச்சு அரிச்சுப்புட்டான் அரிச்சு.

ஆனா புடிச்ச மீன்ல பாதிதான் கருவாச்சி வீட்டுக்குப்போச்சு. மிச்சம் எங்க போச்சுன்னு தெரியல.

●

மொச வேட்டைக்கும் போய்ப் பழகிட்டான் அழகு சிங்கம். அந்த வருசம் நல்ல மழை. பொதரெல்லாம் மண்டி மதாலிச்சுக் கெடக்குதுக காமக்காபட்டிக்கரடெல்லாம். ஈச பறக்குற மாதிரி மொச பறக்குதுன்னு கேள்வி.

நீட்டமா ஒரு நூல்கயிறு வாங்குனான் அழகுசிங்கம். அதுல ஒரு முப்பது சுருக்குப் போட்டு நூல்வளையம் பின்னிப் பின்னி ஒரு மொசக்கண்ணி பண்ணிமுடிச்சான்.

கரட்டுக்குப் போனான் மசங்க. காரா முள்ளும் எலந்த முள்ளுமா வெட்டி வெட்டி, மொசக்கூட்டம் மேய வார வழியில வேலி கட்டிப்புட்டான். மொசக் கண்ணிய விரிச்சான் வேலியோரமா.

வேலியும் தாண்டாதாம்; வெட்டுக் கெணத்துத் தண்ணியும் குடிக்காதாம் மொச!

தலக்கோழி கூப்புடப் போயிப் பாத்தா முப்பது வளையத்துல ஏழு மொச விழுந்து கழுத்துல சுருக்குப்பட்டுக் காலுசுராக் கெடக்குதுக.

விழுந்த ஏழு மொசல்ல மூணு தான் வீடு வந்து சேந்துச்சு; நாலக் காணோம்.

அப்பத்தான் ஒரு சேதி அரசபுரசலா வருது கருவாச்சி காதுக்கு.

''பய பவுனு வீட்லயே கெடக்கானே என்னா ஏதுன்னு பாரு''ன்னா பவளம்.

''பவுனுன்னு பேரு வச்சாப் பவுனாயிருமா? பித்தளையாக்கூட இருக்கும். கருப்பட்டியிலயும் கல்லிருக்குமாத்தா... என்னான்னு பாரு.'' தலவலிச்சாக் காதுவழியா மருந்து ஊத்துறமாதிரி சுத்தி வளைச்சுப் பேசுனா வைத்தியச்சி.

தெப்பத்துப்பட்டியில வாக்கப்பட்டுத் தீத்துட்டு ஆறு மாசக் கைப்பிள்ளையோட வீட்ல வந்து இருக்கிறவ பவுனு. அப்பன் ஆத்தா கெடையாது. அப்பத்தா மட்டுந்தான். அவளும் சீக்காளி. கட்டில அவ விடமாட்டேங்கிறா; கட்டிலு அவள விட மாட்டேங்குது. அழகு சிங்கத்துக்குத் திம்சு சொல்லிவிடறது அந்த வீட்டுக்குத்தான்.

பவுனு நெறம் பவுனு இல்லேன்னாலும் அம்சமான எளங்கறுப்பு. அவ கண்ணச் சிமிட்டாமப் பாத்தான்னா கலவரமாகிப் போகும் மீச தொங்கிப்போன கெழவனுக்கும். ஊடமாடப் போயி வந்த பய அங்கயே கெடையாக் கெடக்க ஆரம்பிச்சுட்டான். அவ கைப்பிள்ளையக் கக்கத்துல வச்சுக்கிட்டே திரிக்கிறது மாவாட்டறது ஒரல்லபோட்டு ஒலக்ககுத்திக்குடுக்கறதுன்னு ஆரம்பிச்சுட்டான்.

கைப்பிள்ளையக் குடுக்கவும் வாங்கவுமா இருக்கிறப்ப, தெரிஞ்சு பட்டுச்சோ, தெரியாமப் பட்டுச்சோ, அதுல ஒரு பொறி பறந்துச்சு. திரும்ப அந்தப் பொறி வேணுமேன்னு அவனுக்கு மனசு தீயா எரியுது. அவனக் காங்கலேன்னா அவளுக்கும் புத்திக்குள்ள பூரான் ஊருது. மீன வெண்டக்காயா நெனச்சு அறுக்கிறா; வெண்டைக்காய மீனா நெனச்சு ஒரசுறா. அவகளுக்குள்ள வெறும் வெளையாட்டுத் தானா வேற வெனையும் இருக்கான்னு ஒண்ணும் துப்புக் காண முடியல. தண்ணியில இருக்கிற மீனு குடிச்சதக் கண்டதுயாரு? குடியாததக் கண்டது யாரு...? வெளங்கல.

ஒரு முடிவுக்கு வந்துட்டா கருவாச்சி.

சமஞ்ச பிள்ள - சமைச்ச சோறு

வெளைஞ்ச கருது - கறந்த பாலு

செத்த பொணம் - பட்ட கடன்

இதுகளயெல்லாம் சட்டுன்னு சோலிய முடிச்சுப்புடணும்;

தள்ளிப்போட்டாத் தப்பாப் போயிரும்.

ஆத்தா பெரியமூக்கி எப்பவோ சொன்னது மூளையில மொளகா வச்சதுமாதிரி இப்ப ஒறைக்குது.

மொதலக்கம் பட்டிக்குத் தன் அண்ணந்தம்பி வகையறாவுக்கு ஆள் சொல்லிவிட்டுப் பொண்ணும் பாத்துட்டா.

மொதலக்கம்பட்டியில அவ சித்தப்பன் மகன் பேத்தி ஒருத்தி இருக்கா. செந்துருக்கம் செந்துருக்கம்ன்னு பேரு அவளுக்கு. வயசுக்கு வந்துட்டாலும் இடுப்பெலும்பு முத்தாத எளம் பொண்ணு. ஆனா சும்மா சொல்லக் கூடாது. சூட்டிகையான பிள்ள. எம்பது ஆடுகள அவளாப் பத்தி அவளா மேச்சு அவளாத் தொழுவுல அடைக்கிறவ.

அந்த ஊர்லயே பெரும்படிப்பு படிச்சதும் அவதான். மூணாவது முடிச்சவ. அது வேறொண்ணுமில்ல. பள்ளிக்கூடத்துல சேக்கலாமா வேணாமான்னு அவுக அப்பன் யோசிச்சுக்கிட்டே இருந்ததுல, வயசு ஒம்போது ஆகிப் போச்சு பிள்ளைக்கு. என்னொண்ணுக்கும் போயிட்டு வரட்டும்ன்னு ஒண்ணாவதுல சேத்தாக ஒம்போது வயசுல. ரெண்ட முடிக்க வயசு பன்னெண்டு. மூணாவது முடிக்க வயசு பதினஞ்சு ஆகிப்போச்சு. முழுப்பரிட்சை லீவுல வயசுக்கு வந்திருச்சு பிள்ள. தலைக்கும் பள்ளிக்கூடத்துக்கும் தண்ணி ஊத்தி முழுகிவிட்டுட்டாக.

இன்னைக்கி எழுத்துக் கூட்டிப் படிச்சதெல்லாம் மறந்து போனாலும் கையெழுத்துப் போடறத மறக்கல பிள்ள. பொழைக்கத் தெரிஞ்ச பொண்ணாப் போனா. ரெங்கசமுத்திரம் நாயக்கருக்குச் சாணிவித்துச் சாணிவித்தே சங்கிலி வாங்கிப்புட்டா. தோள்பட்டை சதை வைக்காமத் தொத்தலாக் கெடந்தாலும் காரியம் பாக்குறதுல வீரியமா இருந்தா செந்துருக்கம்.

அவுக வீட்ல ஒரு சல்லிக்கட்டுக்காள வளத்தாக. சும்மா ஆயிரங்கால் மண்டபத்துல நாலு காலக் களவாண்டு வந்த மாதிரி காலு நாலு. ஒரு திண்ணையத் தூக்கி முதுகுல வச்சமாதிரி திமிலு. கருப்பணசாமி கத்திகள வாங்கித் தலையில நட்டுவச்சமாதிரி ரெண்டு கொம்பு. அலங்காநல்லூர் சல்லிக்கட்ல அந்தக் கொம்புல சுத்திவிடுவாக தங்கச் சங்கிலிய; அணஞ்சவன் எடுத்துக்கன்னு. இதுவரைக்கும் வாடிவாசல்லயிருந்து வாரபோதே கொம்புல கொடலச் சுத்தி வந்திருக்கே தவிர சங்கிலிய விட்டுட்டு வந்ததில்ல. அப்பேர்ப்பட்ட காளைய தன் இடுப்புல கயிறு கட்டி மேய்க்கிறவ இவ.

இப்பேர்ப்பட்டவ அழகுசிங்கத்துக்கு வாக்கப்பட்டுப் போறேன்னு வாக்கும் கொடுத்துட்டா. சொந்தபந்தத்த அனுசரிச்சு வீட்டாளுகளும் சரி சொல்லிட்டாக.

மொதலக்கம்பட்டிக்கு நடையா நடந்து வெள்ளிக்கிழம மாப்ள வீடு பாக்க வாங்கன்னு சொல்லிட்டு வந்துட்டா கருவாச்சி.

●

வியாழக்கிழமை ராத்திரி.

தட்டுலவிழுந்த கேப்பக்களியத் தலயப்பிச்சு, கடைஞ்ச மகிழிக் கீரையில முக்கி முழுங்கிக்கிட்டே மொனகுறான் அழகுசிங்கம்.

''இன்னைக்கும் கீரையும் கேப்பக் களியும் தானா? சாணியத் தொட்டு மண்ணத் திங்கற மாதிரி இருக்கு. என்னைக்கு நல்லசோறு திங்கப் போறனோ?''

''எத்தன நாளைக்குடா மகனே எங் கைக்கஞ்சி குடிக்கப் போற? ஒனக்குன்னு ஒல வைக்க ஒருத்தி வராமலா போயிரப் போறா?''

''வாரப்ப வரட்டும். அதுவரைக்கும் ஒழுங்காக் கஞ்சி காச்சி ஊத்து.''

''என்னைக்கோ எதுக்கு வரணும்? நாளைக்கே வந்தா ஆகாதா?''

''விட்டா நாளைக்கே பொண்ணு வீடு பாக்கப் போகலாம்ன்னு சொல்லுவ போலிருக்கே...''

''பொண்ணு வீடு பாத்தாச்சு மகனே. நாளைக்கு மாப்ள வீடு பாக்கத்தான் வாராக.''

அவ சொல்லி முடிக்கல - வாய்க்குக் கொண்டுபோன களியத் தட்ல அடிச்சான்; தட்ல இருந்த களியத் தூக்கிச் சுவத்துல அடிச்சான். களி ஒட்டிக்கிருச்சு சுவத்துல; கீரை ஒழுகுது தரையில. அதத் தின்ன வந்த பூனமேல அவன் தண்ணிச் சொம்ப எடுத்து எறியவும், நான் இன்னிக்கிருந்து விரதம்ன்னு ஒரே ஓட்டமா ஓடிப் போயிருச்சு பூன.

''எனக்குச் சொத்துச் சேத்து வச்சிருக்கியா? தோப்பு துரவு இருக்கா? இல்ல வேல வெட்டி பாக்குறேனா? ஒழக்குக்கே தானியமில்லாத வீட்ல மரக்கா எதுக்கு மரக்கா? ''

''சொன்னாக் கேளப்பா. ஒனக்கு மாலையும் வேலையும் ஒண்ணா வரப் போகுதுடா மகனே. ஒனக்குப் பொண்ணும் கொடுத்து கட்டவண்டியும் ஒருசோடி மாடும் தாராக மொதலக்கம்பட்டி ஆளுக. விடிய்ய வீடுபாக்க வாராக; சரி சொல்றா தங்கம்.''

''என்னா அவசரம் கல்யாணத்துக்கு? ஏன் கால்ல வெந்நி ஊத்தி அலையறவ?''

''மகனே ஒன்ன வச்சுத்தாண்டா உசுர வச்சிருக்கேன். தீப்புடிச்ச வீட்ல வெடக்கோழி சிக்குன மாதிரி எதிரிக்கு மத்தியில பொழைச்சுக் கிட்டிருக்கோம்டா. ஒலகத்த செயிச்சு ஒன்கிட்டக் குடுக்க சக்தி யில்லடா. ஒன்னவச்சு உலகத்த செயிக்க சக்தி இருக்குடா. நீயும் எம்பேச்சக் கேக்காமத் தெரிஞ்சதப் பாருன்னு திரும்பிட்டேன்னு வச்சுக்க ஒன்னியப் பெத்தும் பிரயோசனமில்லடா.''

'பெத்ததுதான் என்னியக் கேக்காமப் பெத்த. கல்யாணமாவது என்னியக் கேட்டுச் பண்ணலாமில்ல...?''

அவன் கேட்ட அந்த ஒத்தக் கேள்வியில இத்து இடுப்பொடிஞ்சு புத்தியில கத்தி குத்தித் தத்தித் தடுமாறித் தலசுத்திக் குத்தவச்சு நெஞ்சப் புடிச்சு நெலப்படியில உக்காந்து போனா கருவாச்சி.

என்னியக் கேக்காம ஏன் பெத்தேன்னு கேட்டுப்புட்டானே பெத்த பய.

அவனப் பெத்துப் போட்ட காவக் குடிசை ஞாபகம் வந்திருச்சு.

சீலயத் தெரச்சுக்கிட்டுப் பிள்ளையப் பெத்தெடுக்க அத்துவானக் காட்ல அனாதையா மண்டியிட்டது- வலிதாங்காமத் தொங்கி அந்து விழுந்த சொரக்குடுக்க- பிள்ள பிதுங்கி வெளிய வந்து விழுகவும் ஆணா பெண்ணான்னு எட்டிப்பாத்த ஆச - தொப்பூழ்க் கொடி அறுத்த பண்ணருவா - எல்லாம் படபடபடன்னு ஞாபகம் வரவும் பொல பொல பொலன்னு அழுதுட்டா கருவாச்சி.

ஆத்தா கண்ணீரப் பாத்ததும் கல்லுமனசு கரையுது மகனுக்கு.

''சரி... என்னிய என்ன செய்யச் சொல்ற சொல்லு'' உணர்ச்சி யில்லாம எல்லா வார்த்தையையும் ஒரே தொனியில சொல்றான் அழகுசிங்கம்.

கண்ணத் தொடச்சுக்கிட்டா கருவாச்சி.

பூட்டுனாத் தொறக்க முடியாதுன்னு தொறந்தே கெடக்கிற பழைய தகரப்பொட்டியிலருந்து, சந்தையில தச்சு வாங்கிட்டு வந்த கட்டம்போட்ட சட்டையையும் புது வேட்டியையும் எடுத்து நீட்டுனா.

''நாளைக்கிப் புதுசு கட்டிப் புதுமாப்பிளையா இருடா மகனே.''

இங்கிட்டுத் திரும்பிக்கிட்டு எடது கையில வாங்கிக்கிட்டான் ஆத்தா குடுத்தத.

விடியுது வெள்ளிக்கிழமை.

●

இம்புட்டு ஆளுக கூடி வருவாகன்னு எதிர்பார்க்கல கருவாச்சி.

செந்துருக்கமும் அவ மேய்க்கிற ஆடுமாடுகளும் தவிர எல்லாம் வந்துட்டாக.

பவளம், கனகம், வைத்தியச்சி, உருமாப்பெருமாத் தேவரு, காவக்காரச் சக்கணன் இப்படி உள்ளூருச் சனம் வேற ஒண்ணுகூடிப் போச்சு.

மாப்ளையமட்டும் காணோம்.

''எங்க... எங்க''ங்கிறாக எல்லாரும்; எங்கயும் காணோம்.

எல்லாருக்கும் பலகாரம் காப்பித்தண்ணி குடுக்கச் சொல்லிட்டு இழுத்து முந்தானைய இடுப்புல சொருகிக்கிட்டு, தெருவுல எறங்கித் தேடுறா பாவம்.

padippakam

''யாத்தா! எம் பிள்ளையப் பாத்த?''

''இல்லையே''

''யண்ணே! அழகுசிங்கத்தப் பாத்தியா?''

''பாக்கலையே தாயி.''

சந்தையில சாமான் வாங்கித் தலச் சொமயோட வாரான் முத்துக்கருப்பு.

''யப்பா முத்துக்கருப்பு! எம் மகன் அழகுசிங்கத்தப் பாத்த?''

தலச் சொமையோட கழுத்த வேறபக்கம் திருப்பி, ''பாத்தேன்''னு சொன்னான் முத்துக்கருப்பு.

''எங்கப்பா பாத்த எம்பிள்ளைய?''

''சொன்னா வருத்தப்படுவ மதினி.''

''சொல்லப்பா.''

''அம்புலிப்புத்தூர் ஓடைமேட்டுல''

''அம்புலிப்புத்தூரா?''

கண்ணு பஞ்சடைஞ்சு, நெஞ்சப்புடிச்சு இத்த மண்சொவரு இடிவிழுந்து சரியிற மாதிரி மண்தரையில மட்டமல்லாக்கா விழுந்து போனா கருவாச்சி.



படிப்பகம்

padippakam



# 32

அம்புலிப்புத்தூர் இருக்கே... அந்தக் காலத்துல அது ஒரு விவகாரமான ஊரு. சுத்துவட்டாரத்துல இருக்கிற மைனர்களுக்கெல்லாம் அது மாமியார் ஊரு. மதுரை ராமநாதபுரம் வரைக்கும் அம்புலிப்புத்தூர் பேரச் சொன்னா எளந்தாரிக சிலுத்துக்கிருவாக; கெழடுக சிரிச்சுக்கிருவாக.

அந்த ஊர்ல ரெண்டு மூணு தெருவுக்கு ‘அது’ மட்டும்தான் தொழிலு. கோடீஸ்வர சமீன்தார்லயிருந்து கூலிக்காரன் வரைக்கும் ‘கொடுப்பினை’ உள்ள ஆளுக்குக் குடுத்துவச்சிருக்கு துட்டுக்குத் தக்கன. அங்கபோன ஆளுகள்ல பலபேரு வீடோ வேட்டியோ தொலைக்காம வந்ததில்ல.

படிப்பகம்

padippakam

அம்புலிப்புத்தூருக்குப் போயிட்டான் அழகு சிங்கம்ன்னு கேள்விப்பட்டதும் குடிகெட்டுப் போச்சேன்னு கும்பி கருகிப்போனா கருவாச்சி. மாப்ளவீடு பாக்க வந்தவுக போயிட்டு வாரோம்ன்னு போயிட்டாலும் விடிய விடிய ஒறக்கம் வரல; விடிஞ்சும் அவன் வரல.

கஞ்சிப் பொழுதுக்கு வெளியேறிட்டா கருவாச்சி வெயிலேற. அம்புலிப்புத்தூர் போகணும்னா அஞ்சாறு மைலுக்கு ஒரு முள்ளுக்காடு கடந்தாகணும். காடு வங்காடு; கையில ஈரப்பசை காஞ்சுபோன அன்னைக்கிக் கடவுள் படைச்சது. வைகாசி வெயிலு தகதகதகன்னு தகிக்குது; நேரம் போகப் போக விரியன்பாம்புவெசம் மாதிரி ஏறுது. எட்டுமாத்தி எட்டு வைக்கிறதுக்குள்ள குதிகால் கொதிக்குது. கண்ணுக்கு எட்டுன மட்டும் காஞ்ச காடு. சின்னப்புள்ள சீப்பெடுத்து ஆத்தாளுக்கு வகிடெடுத்து விட்டமாதிரி கோணல் மாணலா ஒரு ஒத்தையடிப்பாதை. ஒத்தையடிப்பாதை முடியிற தூரத்துல வெயில்ல உருகி ஒழுகுது அடிவானம்.

சல்லிக்கல்லு - சரளக்கல்லு - கத்திக்கல்லு - கருங்கல்லு - குண்டாங்கல்லு - கூழாங்கல்லுமாக் கெடக்குற ஒத்தையடிப் பாதையில ஒத்தையில போறாளய்யா கருவாச்சி- சீதையைத்தேடி அனுமாரு போறமாதிரி தாசி வீட்டுக்கு மகனத்தேடி.

பாதையோரமா வளைஞ்சு வளந்திருந்த வேலாங்கொப்பு முள்ளொண்ணு அவ மூஞ்சியில ரத்தப்பசை இருக்கான்னு மோந்து பாத்துட்டுப்போகுது. ஒத்தையடிப் பாதை ரெண்டுபக்கமும் அரைமைல் நீளத்துக்கு அடச்சு நிக்கிது சில்லிமுள்ளு. மீனுகளை யெல்லாம் படைச்சுக் குடும்பத்தோட சமுத்திரத்துல விட்ட மாதிரி முள்ளுகளையெல்லாம் படைச்சு இங்கயே கெடங்கன்னு விட்டுட்டாருபோலருக்கு கடவுளு.

ஒருமுள்ளா... ரெண்டு முள்ளா...

காரா முள்ளு - சூரா முள்ளு - எலந்த முள்ளு -இண்ட முள்ளு - கருவேல முள்ளு - வேலா முள்ளு -மதுக்கார முள்ளு- முக்குறுணி முள்ளு- கிளுவ முள்ளு - ஒடசாலி முள்ளு -நெருஞ்சி முள்ளு - சில்லி முள்ளு- கள்ளி முள்ளு -எலக் கத்தாழை - சிவனார்வேம்பு

இந்த முள்ளுகளுக்கு மத்தியில ஒத்தையடிப்பாதை போறமாதிரி, கருமாயங்களுக்கு மத்தியில எம் பொழப்பு போகுதேன்னு பொலம்பிக்கிட்டே போறா கருவாச்சி.

ஆவாரஞ்செடியும் எருக்கிலையும் மட்டும்தான் இந்த வெப்பல்லயும் உசுர் புடிச்சுப் பச்சகட்டி நிக்கிதுக.

பொறுக்கல சூடு; பொசுங்குது உள்ளங்காலு. வழியில ஆவாரஞ்செடியப் பாத்தா; அதுல அஞ்சாறு கௌைய ஒடிச்சா. அதத் தரையில போட்டா. அதுல ஏறி நின்டுக்கிட்டா. ஆவாரங்கொழையில இருந்த குளிச்சி அவ உள்ளங்கால்ல பட்டுப் பாதத்துப் பள்ளத்துல பரவி அதுலருந்து ஏறிக் கெண்டைக்கால் சதையக் கிளுகிளுப்புப் பண்ணித் தொடைவழியாத் தொடுத்து எலும்புகளுக்குள்ள எளங்காத்து வீசி, இருதயக் கூட்டுக்குள்ள எளந்தூரல்போட்டு மூளக்குள்ள போயி முணு முணுன்னு மழை பெய்யுது.



படிப்பகம்

padippakam

குனிஞ்சா; கொழையையெடுத்துக் கக்கத்துல வச்சுக்கிட்டா; நடந்தா. எங்கெங்க தவிப்பாறணுமோ அங்கங்க ஆவாரங் கொழையக் கீழபோட்டு அதுமேல ஏறி நின்னுக்கிடவேண்டியது. ஆட்டுத்தோல் மாட்டுத்தோல்ல பண்றதெல்லாம் அசைவச்செருப்பு; ஆவாரங் கொழையில பண்றது சைவச் செருப்பு. கண்டுபுடிச்சது யாரோ? கையெடுத்துக்கும்புடணும் அந்தக் கடவுள.

எங்கயோ கத்துது ஒரு கதுவாலி; சத்தம் சரியில்ல. அதுக்கோ தொணைக்கோ ஆபத்து போலருக்கு.

நரிக அப்பப்ப நாட்டாமை பண்ற காடு அது. அஞ்சாறு நரி சேந்தா ஒரு ஆள அடிச்சுப்புடுமாம். சங்கக்கடிச்சு ரத்தம் குடிச்சு வெலாவக் கீறி ஈரல மட்டும் எடுத்துக்கிட்டுப் போதும் போதும்ன்னு போட்டுட்டுப் போயிருமாம்.

நரி முகத்துல முழிச்சா நல்லதாம்! முழிச்சவுகளுக்கா... நரிக்கான்னு முழுவெவரம் சொல்லாம விட்டுட்டாக.

மத்தியானக் கஞ்சி குடிக்க நிழல்தேடி அலையுதுக ஆடுமாடு மேய்க்கிற ஆணும் பொண்ணும். நாக்க நனைக்கத் தண்ணி தேடி அலையுதுக ஆடுமாடுக. மாடு நடக்க நடக்க அது கவுட்டு நெழல்லயே தவ்வி தவ்விப் போகுது ஒரு கரிச்சான் குருவி.

காத்தோட சேந்து காடு பூரா மெதந்து மெதந்து வருது கானல் அல. விசுக்கு விசுக்குன்னு எட்டுவச்சுப் போற கருவாச்சிக்கு வேர்வை ஊற ஊற, இதுக்குமேல ஊற என்னால ஆகாதாத்தான்னு நின்னுபோச்சு எச்சி. மயக்கமாக் கெடக்கேன் தண்ணிதெளிச்சு எழுப்பிக்கன்னு ஒட்டிக்கிருச்சு உள்நாக்கு.

ஆவாரங்கொழையக் கீழ போட்டு நின்டுக்கிட்டு, வலதுகையத் தூக்கி நெத்தியில சாரங்கட்டி, தட்டுப்படுதா தண்ணின்னு பலபக்கமும் பாக்குறா. கண்ணுக் கெட்டினமட்டும் காஞ்சபூமியாத்தான் தெரியுது.

ஆவாரங்கொழையக் கக்கத்துல அணைச்சுக்கிட்டே நடையில கூடி வாரா.

ஒத்த ஆலமரம் கடந்தா சுழியாம்பாறை, சுழியாம்பாறைமேல ஒரு கல்லுக் குழி. கல்லுக்குழியில கரேர்ன்னு கெடக்கு எப்பவோ பேஞ்ச மழைத்தண்ணி.

தண்ணியக் காணாதவரைக்கும் நாக்குல மட்டும்தான் தாகம் எடுக்கும்; தண்ணியக் கண்டதும் திரேகமெல்லாம் தாகம் எடுக்கும்.

கக்கத்துல இருந்த கொழையத் தரையில போட்டுட்டு முக்காடெடுத்து மூஞ்சி தொடச்சுக்கிட்டே கல்லுக்குழிப் பாறையில உக்காந்து கை ரெண்டையுஞ் செலுத்தி அள்ளுனா தண்ணிய.

அள்ளுன தண்ணியில வாய்வைக்கப் போக தஸ்ஸ¬ புஸ்ஸ¬ன்னு கேக்குது ஒரு சத்தம்.

மோசமான சத்தமாயிருக்கேன்னு மூஞ்சிதூக்கிப் பாத்தா வாலத் தண்ணிக்குள்ள தொங்கவிட்டு, தலையத் தரையில போட்டு வேலா மரத்து நெழல்ல பாறை மேல படுத்திருக்கய்யா ஆறடிக்குக் கொறையாத ஒரு பெரும் பாம்பு.



படிப்பகம்

padippakam

பயத்துல வெல வெலத்துப் பித்துப் பிடிச்சுப்போனவ, கைத் தண்ணியத் தண்ணியிலவிட்டா சத்தங் கேக்குமின்னு பாறையில பதறாம வடியவிட்டு அசங்காம எந்திருச்சு, நெஞ்சப் புடிச்சுக்கிட்டே பின்னெட்டு வச்சுப் போறா. நல்லவேள! பாக்கல பாம்பு அவள. தொவச்சுப் போட்ட துணிமாதிரி அசையாமக் கெடக்கே! இது என்னா கூத்துடியாத்தான்னு பம்மி நிக்கிறா சூராம் புதர் ஓரமா. புதருக்குப் பின்னால நின்னு தன்ன ஒளிச்சுக்கிட்டுக் கண்ணமட்டும் மேயவிடுறா. அசையல பாம்பு; அப்படியே கெடக்கு. செத்துக் கித்துப் போச்சா. தலைக்கு மேல ஒரு பெராந்து அங்கனக்குள்ளயே வட்டம்போட்டு அலையுது. செத்த பாம்பாயிருந்தா பெராந்து வந்து செந்தூக்காத் தூக்கிட்டுப் போயிருக்குமே! சாகல. இம்புட்டு நீளம் சாரப் பாம்புக்குத் தவிர வேற பாம்புக்கு இல்லையே! சாரைதானோ? சாரைக்கு அடிவகுறு மஞ்சப் பூத்து இருக்குமே! இது சாரையுமில்ல. புதருக்கு வெளிய இவ லேசாத் தலையத்தூக்கவும் பாம்பும் தலையத் தூக்குச்சு. சிமிட்டாமப்பாக்குறா. விரியம் பாம்போ? இல்லையே! விரியனுக்கும் சாரைக்கும் மொனையாத்தான இருக்கும் மூக்கு. இது சப்பட்டையா இருக்கே.

இன்னுங் கொஞ்சம் உத்துப் பாத்தா. ரெண்டு சக்கரம் தெரியுது தலையில. நல்ல பாம்பேதான்! நல்ல பாம்பேதான்!

என்னா பண்ணுது பாம்பு? ஏன் இப்படிக் கடப்பாரை மாதிரி நேராப் படுத்திருக்கு? எரையுண்ட மயக்கத்துல எளப்பாறிக் கெடக்கோ?இல்லையே! வயிறு எங்கயும் புடைக்கலையே! ஒரே சீரா இருக்கே. என்னதான் பண்ணுதுன்னு இருந்து பாத்திருவோம். என்னதான் தகிரியத்த ஏத்தி நெஞ்ச நிமித்திக்கிட்டாலும் நல்லபாம்பு வெறியெடுத்துத் தன்ன வெரட்னா என்ன ஆகும்ன்னு நெனைக்கிறப்ப கர்ப்பப்பைக்குள்ள கலக்கமாகுது கருவாச்சிக்கு. பாம்பு வெரட்னா மட்டும் நேரா ஓடப்படாதுடி. வளஞ்சு வளஞ்சு ஓடுனாத்தான் தப்பிக்கலாம். ஆத்தா பெரியமூக்கி எப்பவோ சொன்னது இப்ப நெஞ்சுக்குழியில வந்து நிக்கிது.

அவ பாத்துக்கிட்டேயிருக்க, தலைய லேசாத் தூக்கித் தரையில மூக்கத் தேய்க்குது பாம்பு. செத்தவடத்துல 'சிட் சிட்'ன்னு சின்னதா ரெண்டு சத்தங் கேட்டுச்சு. தலப்பக்கம் வாய்ப் பூட்டு வெடிச்சு, பஞ்சுமாதிரி ஒரு பொருளு பட்டீர்ன்னு வெளிய வந்துச்சு. ஓடம்புலயிருந்து வெடிச்சு வந்த பஞ்சில தலையும் கண்ணும் படமும் அச்சடிச்ச மாதிரி அப்படியே இருக்கு.

''யாத்தே! பாம்பு சட்டை உரிக்குது சாமி'' கருவாச்சி நெஞ்ச இறுக்கிப்புடிச்சு நின்னுபோனா.

இருதயம் கூட்டுக்குள்ள அடிக்கிற சத்தமும் மூக்குவழி காத்து போக்குவரத்து நடத்துற சத்தமும் மட்டும்தான் அவ காதுக்குக் கேக்குது இப்ப.

பாம்பு சட்டை உரிக்கிறதப் பாக்கணும்; பாம்பு சட்டை உரிக்கிறதப் பாக்கணும்ன்னு சின்னவயசுலருந்து நான் சேத்துவச்ச ஆசை, எம்பிள்ளைய நான் தேடிப்போற இந்த அத்துவானக் காட்லதான் பலிக்கணுமா?

தலச் சட்ட கழத்துறவரைக்கும் தவிச்சுப்போய்க் கெடந்த பாம்பு அப்பறம் சுறுசுறுப்பாயிருச்சு.



படிப்பகம்

தலைய ஒரு ஆட்டு ஆட்டித் தலச்சட்டையக் கழுத்துக்குக் கீழ தள்ளிட்டு, தன் சக்தியெல்லாம் ஒண்ணு கூட்டித் தலைய முன்னுக்க நீட்டி முன்னேறுது.

படுத்த எடத்துல படுத்த மேனிக்குப் பாறையோட சட்டை ஒட்டிக்கெடக்க, சட்டைய விட்டு வெளியேறுது பாம்பு சரசரன்னு. பாம்பு மேல்பக்கம் அகலமாவும் கீழ்ப்பக்கம் குறுகலாகவும் இருப்பதனால கீழ்ச்சட்ட உரிக்கிறது லேசா இருக்கு பாம்புக்கு. காணக் கெடைக்காத இந்தக் கண்காட்சியக் கண்ட கருவாச்சி திகில் புடிச்சுத் திக்குமுக்காடிப் போனா. ஆறடிநீளச் சட்டையக் கீழ போட்டுட்டு அதுலயிருந்து பாம்பு விறுவிறுன்னு வெளியேறிப் போறதக் கண்ணால பாக்குறா. பயமாத்தான் கெடக்கு; ஆனா பயத்துமேல சந்தோசம் நுரைகட்டியிருக்கு. குகைய இருந்த எடத்துல விட்டுட்டு, ரயிலு மட்டும் குகைய விட்டு வெளிய வார மாதிரி சட்டையக் கழட்டி அங்கேயே போட்டுட்டு முன்னுக்கப் போயிருச்சு பாம்பு.

தங்கச் சங்கிலி நெளிஞ்சு நெளிஞ்சு தரையில போகுதா இல்ல மின்னலு பாறையில விழுந்து மினுக்கி மறையுதா?சட்டை கழத்துன பாம்பு மேனி தகதகப்பு இருக்கே. காணக் கண்ணாயிரம் காணாது. கொஞ்சதூரம் ஓடுன பாம்பு ஒரு ஓரமா ஒதுங்கித் தன்னச் சுருட்டிச் சும்மாடு ஆக்கிக்கிட்டுத் தம்பாயமில்லாமக் கெடந்துச்சு. சட்ட கழத்துன அலுப்போ ? இல்ல இது எனக்கு இன்னொரு பெறவிங்கிற நெனப்போ? கொஞ்சநேரம் கழிச்சுப் பாத்தா அது இருந்த எடத்துல இல்ல; கண்காணாமப் போயிருச்சு.

இப்பப் பயம் தெளிஞ்சு போச்சு. பொதரவிட்டுப் பொத்துனாப்புல வெளிய வந்தா கருவாச்சி. கல்லுக் குழி தாண்டிப் போயிப் பாம்புச் சட்டையத் தொட்டுப்பாத்தா; சுட்டுச்சு. இப்பத்தான் கழட்டிப் போட்டுச்சு; இது வெயில் தாக்குன சூடா இருக்காது. சட்டைக்கு உள்ளயிருந்த பாம்போட ஒடம்புச்சூடுதான் போலருக்கு. நுரைமாதிரி இருந்த சட்டைக்குள்ள வெரலவிட்டுத் தொட்டுப்பாத்தா; என்னமோ ஒட்டுச்சு. உரிக்கிற சட்டை உரிஞ்சுவரத் தோதா பாம்பு ஒடம்புலேருந்து ஊறிவார எண்ணெயோ பசையோ என்னமோ?

பாறையத் தொட்டுக் கும்புட்டுக்கிட்டா; தண்ணிகுடிச்சா; ஆவாரங்கொழையக் கக்கத்துல வச்சுக்கிட்டா; பாதையில கூடிட்டா.

எங்கேயோ ஒரு மரங்கொத்தி பட்டுப்போன ஒரு மரத்த லொட்டு லொட்டுன்னு தட்டிக்கிட்டேயிருந்துச்சு.

காடுபூரா ஒரு நூறு பேரு கருங்கல்லுச்சல்லிகள வச்சு ஒரசிக்கிட்டேயிருக்கிறமாதிரி ''கரிச்...கரிச்...கரிச்''ன்னு கத்திக்கிட்டே திரியுதுக கரிச்சான் குருவிக.

●

அந்தா தெரியுது பாரு... உப்பம் பொட்டல். அதைத் தாண்டிப் போனா ஓணான்கரடு. ஓணான்கரடு எறங்க ஓடைவரும். ஓடை மேட்டேற அம்புலிப்புத்தூர் வந்திரும்.

அந்த ஊர்ப்பேரச் சொன்னாலே நையாண்டி பண்ணி நசுக்கி நசுக்கிச் சிரிக்குது ஒலகம். ஊரு என்ன பண்ணும் ஊரு? மனுசன் பண்ண கூத்துக்கு!

padippakam

அந்தக் காலத்துல நெலம் வச்சிருந்தவுக ராசாக்கமாரும் சமீந்தாரும் மேல்சாதி ஆளுகளும்தான். கோயில்ல ஆட வார பொம்பளைக்குச் சொந்த நெலத்துல கொஞ்ச நெலம் குடுத்து, 'மண்ண நீ வச்சுக்க ஒன்ன நான் வச்சுக்கிறேன்'னு ஒப்பந்தம் போட்டுக்கிட்டாக. கோயில் கதவு மூடுற நேரத்துல ஒங் கதவ எனக்குத் தொறக்கணும்னு உத்தரவும் போட்டுவிட்டாக.

இது என்னடா மானங்கெட்ட பொழப்பாயிருக்குன்னு ஆட்டக்காரிகளெல்லாம் ஒண்ணுகூடி ''அய்யா எங்களுக்கு மண்ணும் வேணாம் பொன்னும் வேணாம். ஒரு மஞ்சக்கயிறு போதும்''ன்னு கேட்ருக்காக. கழுத்துல தாலிஏறக் கால்ல சலங்கைய அவுத்துடறோம்ன்னும் சொல்லியிருக்காக.

''இதென்னடா இது... கொழுந்து வெத்தல ஒண்ணு குடுன்னா - கொடிக்காலையே எழுதிக்கேக்குறாளுக'' பதறிப்போனாக ராசாக்கமாரும் சமீந்தாரும்.

படிச்சபுத்தி வேல செய்யுமா இல்லையா? செஞ்சிருச்சு.

''அம்மணிகளா ஒங்களுக்கும் வேணாம்; எங்களுக்கும் வேணாம். ஆண்டவனக் கல்யாணம் பண்ணிக்குங்க நீங்க; ஆண்டு அனுபவிச்சுக்கிர்றோம் நாங்க''ன்னு கடவுளுக்கு அவகளக் கல்யாணம் பண்ணி வச்சுப் பொட்டுக்கட்டி விட்டுட்டாக.

இதுதான் பாவம் எளிய பொம்பளைகள வலிய சாதி ஆளுக ஏச்சு எச்சிஎல ஆக்குன கதை.

காலம்மாறி, கருத்துமாறி, ஆட்சிமாறி, அரசாங்கம்மாறி, கோயிலும் வருமானமும் கொலஞ்சு போகவும் அந்தப் பொம்பளைக தலைமொறை பொழப்பத்துப் போச்சு. வக்கத்த பயலுகளுக்கெல்லாம் வடிகாலாகிப்போச்சு. பத்துப் பதினஞ்சு தலமொறையாப் பலிகடாவாகிப் போனாக அந்தப் பாவி மக்க. அதுல எச்சமும் சொச்சமும்தான் அன்னைக்கிருந்தது அம்புலிப்புத்தூர்ல.

●

பொழுது மேற்க சாய அம்புலிப்புத்தூர்ல நொழஞ்சிட்டா கருவாச்சி.

அந்த ஊர்ல இருக்கிறதே ஏழெட்டுத் தெருவுதான். அதுல மூணுதெருவுதான் 'அந்த'த் தெருங்கிறாக. ''இதுல எந்தத் தெரு அந்தத் தெருன்னு பாப்பேன்? எந்த வீட்ல எம் மகன்னு கேப்பேன்?''

அரசமரத்துப் பிள்ளையார் கோயில்ல முந்தானைய ஒதறிவிரிச்சுக் கல்திட்டுல உக்காந்துட்டா.

வாடிவாசல் வழியாத்தான காள வரணும். எங்கிட்டிருந்தாலும் எம்பிள்ள இங்கிட்டுத்தான வந்தாகணும்.

கண்ண முழிச்சு முழிச்சுப் பாத்து ஒக்காந்திருக்கா. புத்துப்பாம்பு மாதிரி அவ அங்கிட்டும் இங்கிட்டும்தலையத் தூக்கிப் பாத்ததுல மூணாம்தெரு மொனையில காட்டாமணக்கு வேலியில காயுது -

மகனுக்கு அவ வாங்கிக் குடுத்த கட்டம்போட்ட சட்ட.



படிப்பகம்

padippakam



# 33

**நே**த்து இந்நேரம் அம்புலிப்புத்தூருக்குள்ள அழகுசிங்கம் நுழைய, நனைஞ்ச கருப்பட்டியில ஈ மொய்க்கிறமாதிரி நாலஞ்சு தரகனுங்க மொய்ச்சிட்டாங்க மொய்ச்சு. வெத்தல பாக்கு வைக்கல; மேளம் அடிக்கல. மத்தபடி புதுமாப்பிள்ளைய மச்சினங்க வரவேற்புப் பண்ற மாதிரி 'வா வா வா'ன்னு பிச்சு எடுத்துட்டாங்க பிச்சு.

படிப்பகம்

அம்புட்டுப் போட்டியிலயும் அழகுசிங்கத்த அணச்சு ஓரங்கட்டிட்டான் ஒரு ஒத்தக்காலன். ஒரு கால் வெளங்கல பாவம் அவனுக்கு. ஆனா ஒத்தக்கால அமுத்திக்கிட்டு ஒத்தக்கால இழுத்துக்கிட்டு ரெண்டாளு நடை நடந்தான்.

''கோழிதான வேணும். வாங்கித்தாரேன் வா. குஞ்சுக் கோழி இருக்கா - பிஞ்சுக்கோழி இருக்கா - வெடக்கோழி இருக்கா - முழுக் கோழி இருக்கான்னு விசாரிச்சுக்கிட்டேயிருந்தாக் கதையாகுமா? கோழிப் பண்ணைக்கே ஒன்னக் கூட்டிட்டுப் போயிட்டா நெனச்ச கோழியப் பிடிச்சுக்கிடலாமா இல்லையா?''

மூணாந்தெரு மொனவீட்ல விட்டுட்டு இவங்கிட்ட எட்டணா, கதவு தொறந்த கெழவிகிட்ட எட்டணா வாங்கிக்கிட்டு நாலுகால் பாய்ச்சல்ல ஓடிப்போனான் ஒத்தக்காலன்.

வீட்டுக்குள்ள போன பய முழிக்கிறான். நான் வேட்டைக்கு வந்த நாயா? வெட்டுப்பட வந்த கெடாயா? பக்குப் பக்குன்னு அடிக்குது கண்ணு; திக்குத் திக்குன்னு அடிக்குது நெஞ்சு.

வந்த வாலிபப்பயல உத்துப்பாத்தா கெழவி.

மொன வளைஞ்சாலும் நிமிந்து நிக்கிற அருவா மாதிரி கூனு விழுந்தாலும் குண்டாங்கல்லு மாதிரி கிண்ணுன்னு இருக்கா கெழவி. ஆயுசுல எத்தன ஆம்பளைகளப் பாத்த கெழவி. ஒரு 'அட்டப் பார்வ'பாத்தாலே போதும்; வந்தவன் வயசு என்ன, வகிசி என்ன, வெளிப்பையில காசு இம்புட்டிருந்தா உள்பையில எம்புட்டிருக்கும், அவன் ஆஸ்திபாஸ்தி என்ன? அகல நீளம் என்னன்னு குத்துமதிப்பாக் கணக்குப் போட்டாள்னா பத்துக்கு ஏழு பழுதாகாது.

பாத்தவுடனே அவ கணக்குப் போட்டுட்டா, கன்னுக்குட்டி புதுசு இந்தப் பால் குடிக்க இப்பத்தான் வந்திருக்கு. 'உக்காரு ராசா'ன்னா உள்வீட்டுத் திண்ணையக் காமிச்சு.

உக்காரல அவன். மேயவிட்டான் கண்ண வீட்டுக்குள்ள.

போதப்புல் போட்ட கூரை வீடு. சாணி மொழுகிக் குத்துமதிப்பாக் கோலம்போட்ட தரை. அவன் நிக்கிற எடம் நடுவீடு. ஆக்குப்பாரை இல்லாம மூணு அறையாத் தடுத்திருக்கு உள்வீடு. அதுல ரெண்டுக்குக் கதவா சாக்குக தொங்குது. ஒரு அறைக்குக் கதவு 'டண்டணக்கம்' பலக. ஆக்குப்பாரைய ஒட்டியிருக்கிற கதவத் தொறந்தாக் கொல்லப்புறம். அது தொறந்தவெளி. அதுக்குக் காட்டாமணக்கு உயிர்வேலிதான் இடுப்பளவு மறைப்பு. அதுல தண்ணிநெப்பிக் குளிக்க ஒரு அண்டா. குளிகல்லுமேல ஒரு பித்தளச் செம்பு.

தெறிச்ச வெத்தல எச்சியா... நசுக்குன மூட்டைப் பூச்சியான்னு கண்டுபுடிக்க முடியாதபடிக்கு- சுண்ணாம்புச் செவத்துல தாறுமாறாச் செவப்புக்கோடு.

padippakam

‘இங்கயும் நாங்க காவல் இருப்பமில்ல...’ - சிரிக்குதுக சாமிக - சுவத்துல படத்துல.

சாக்குக் கதவுக்குப் பின்னாலயிருந்து வளவி, கொலுசு, சிரிப்பு, செல்லச்சேட்டைன்னு விதவிதமான சத்தங்க வந்து கலவரம் பண்ணுதுக காதுக்குள்ள.

‘‘அடியே பொண்டுகளா! ராசா வீட்டுக் கன்னுக்குக்குட்டி ஒண்ணு வந்திருக்குடி. புடிக்குச் சிக்காத புதுக் கன்னுக்குட்டி. மேய்க்கிற யோகம் யாருக்குன்னு பாப்பம். போடி மூத்தவளே! போயி பாயெடுத்துப் போடு; போ.’’

கோரம் பாயோட வந்தா மூத்தவ. கிளிப்பச்சை லவுக்கயும் கோவம்பழச் சீலையுமா; கோடாலிக் கொண்ட போட்டு அதுல வலையடிச்சுப் பிரிமணை சுத்தின மரிக்கொழுந்துமா, கழுத்துல பொட்டுமணியும் கால்ல தண்டையுமா. ஒடம்பு எளசா, மூஞ்சி முத்தலுமா.

‘உக்காருங்க’ன்னு சொல்லிட்டு விரிச்ச கோரம் பாய ஓரம் சரி செய்ற மாதிரி ஒரசி நின்னுக்கிட்டுக் குதிகாலத் தரையில ஊனித் தன் கட்ட வெரலத் தூக்கி அவன் கட்ட வெரல மெதுவா மிதிச்சு எதமா நசுக்கி ஒரு இன்ப இம்சை பண்ணிட்டு ஓடியேபோனா.

இப்ப ஒத்தக்காலன் சொன்னது ஒலிக்குது காதுல. இந்த முத்தல் தான் முழுக்கோழி போலிருக்கு. முதல்ல தெரியல; இப்ப வலிக்குது நசுக்குன கட்ட வெரலு.

‘‘தாகமா வந்திருக்கும் தம்பி. அடியே அடுத்தவளே. நீர்மோரு குடுடி நீ போயி.’’

நீர் மோர் கொண்டு வந்தவ நெறம் கம்மி. ஆனா பாத்ததும் நெஞ்சுல பச்ச குத்துற லட்சணமான மூஞ்சி. என்னியப் பிச்சித் தின்னுக்கன்னு சொல்லுது கன்னம். அதுக்குள்ள ஒன்னியத் தின்னு புடுவேன்னு மெரட்டுது கண்ணு. வந்த ரெண்டுபேர்லயும் இவதான் பெருந் ‘தனக்’காரி. முழுப் பூசணிக்காயச் சோத்துலயும் மறைக்க முடியாது; முந்தானையிலயும் மறைக்க முடியாது இல்லையா...

உக்காந்திருந்தவன் மூஞ்சிக்கு நேரா நெஞ்சக் கொண்டாந்து நிப்பாட்டி ‘குடிங்க’ன்னா மோர. பித்துப் பிடிச்சுப் பேதலிச்சுப் போனவன் மோர அண்ணாக்காக் குடிச்சுட்டுச் சொம்ப அவகிட்ட நீட்ட, ஒழுகின வாய் தொடச்சுவிடுற சாக்குல முழுசா எடுத்துட்டா முந்தானைய. அவன் இறுக்க மூடிக்கிட்டான் கண்ண. மல்லியப்பூ வாசன நடந்து கடந்து போற வரைக்கும் தொறக்கல கண்ண. இது தான் வெடக்கோழியோ? இருந்தாலும் இருக்கும்.

அடுத்து வருது பிஞ்சுக்கோழி; அரிசிப்பொரி, வறுத்தகடல, அச்சு வெல்லம் எடுத்துக்கிட்டு.





படிப்பகம்

padippakam

இது முக்காக் கை லவுக்க போட்டிருக்கு. லவுக்க முடியிற எடத்துலருந்து வளவிய அள்ளி அப்பியிருக்கு. என்னைப்பார், என் கொலுசைப் பார்ன்னு கொஞ்சம் ஏத்தியும் கட்டியிருக்கு சீலய. கழுத்துல பவளம் பாசி, காதுல சிமிக்கி, ஒரு முத்தம் குடுத்தாக் கரைஞ்சாலும் கரைஞ்சிருவேன்னு சொல்ற பிஞ்சு உதடு. என் எதிர்காலம் இன்னும் நல்லாயிருக்கும்ன்னு சொல்லாமச் சொல்ற சோடி மாதுளங்கா. அப்பத்தான் குளிச்சு முடிச்சுத் தொவைச்சுத் தோள்ல காயப் போட்ட கனத்த முடி. ஆளு குட்டை; ஆனாலும் அழகு. குள்ளமயிலு.

அரிசிப்பொரித்தட்டப் பாயில வச்சவ படக்குன்னு அஞ்சு வெரலயும் அவன் தல முடிக்குள்ள செலுத்திக் கோதிவிட்டுக் கோலம் போட்டு நகத்துலயே கீறிக் கிண்டிக் கெழங்கெடுத்து அவன் கண்ணு சொக்குதுன்னு தெரிஞ்சு ஒரு சுத்து சுத்திவிட்டுச் சொல்லாமப் போயிட்டா.

பித்தம் தெளிய அவனுக்குச் செத்தவடமாச்சு. ஆசையில பயலுக்கு முதுகுத்தண்டுல மினுக்கிட்டான் பூச்சிகளாப் பறக்குது. ஆனா பயத்துல வயித்துல மின்னல் வெட்டி ஒடைஞ்சு ஒடைஞ்சு உள்ள விழுகுது.

இனி குஞ்சுக் கோழிதான் பாக்கி. அதையும் பாத்துருவோம்ன்னு பாத்தா, கெழட்டுக் கோழி வந்து நிக்குது எதுக்க.

''பாத்துக்கிட்டியா ராசா. மூணு கனிக(ள்) மாதிரி வச்சிருக்கேன் மூணு பொட்டைகள. அத்தினி... சங்கிணி... சித்தினி... எவ வேணுமோ எடுத்துக்க.''

பய நிதானம் தப்பிப் போனான். பூன பிறாண்டுது அவனுக்குப் புத்திக்குள்ள. ஆசநண்டு தோண்டுது அடிமனச. ஆனா கண்ண மூடுனா அடிக்கடி வந்துபோகுது ஆத்தா மூஞ்சி. ஒடம்பு இங்க இருக்கு; மனசு அங்க கெடக்கு.

கெழவிக்கு ஒண்ணும் புடிபடல. வில்லும் அம்புமா வந்த பய ஏன் தொவண்டு தொங்கிப் போனான். பயலுக்குத் துட்டுப் பத்தலையா; தகிரியம் பத்தலையா?

கிட்ட வந்தா. ரெண்டு கையிலயும் அவன் ரெண்டு கன்னத்தையும் தொட்டு வழிச்சு, தன் நெத்திப் பொட்டுல வெரல்கள மடக்கி நெட்டி முறிச்சா. சட சட சடன்னு வெடிச்சுச் சத்தம் போடுது வெரலு.

''யாத்தே! கண்ணுபட்ருக்கே என் கன்னுக்குட்டிக்கு.''

அவன் நெளிய நெளியத் தடவிக் குடுத்தவ அவன் பைக்குள்ள கண்ணவிட்டுக் கணக்குப் பாத்துட்டா. கட்டம் போட்ட அவன் சட்டைப் பையில ஒண்ணுக்கு மேல ஒண்ணு ஏறி மூணு பச்சநோட்டுக எட்டி எட்டிப் பாக்குதுக. பயல ராத்தங்கல் தங்க வச்சே அனுப்பலாம். முடிவெடுத்துட்டா கெழவி.



படிப்பகம்

padippakam

'சீ! வராத எடத்துக்கு வந்துட்டமே. ஒண்ணும் சொல்லாம ஓடிப்போகலாமா'ன்னு அவன் நெனைக்க...

''ஏய்! தவிச்சு வந்த பிள்ளைக்குத் தலைக்குத் தண்ணி ஊத்துங்கடி... ''- சொல்லி முடிக்கு முன்ன மூத்தவ கட கட கடன்னு கழட்டிப்புட்டா அவன் சட்டைய. அள்ளையில குத்தி அவன அல்லாட விட்டு உள்ள இழுத்த வயிறு வெளிய வாரதுக்குள்ள அவன் வேட்டிய உருவிப்புட்டா எளையவ.

என்னா நடக்குது அங்கன்னு அவன் புத்திக்கு எட்டுறதுக்குள்ள எண்ணெ காய வச்சு எடுத்துட்டு வந்துட்டா அடுத்தவ.

எளஞ்சூட்டு எண்ணெய உள்ளங்கையில ஊத்தி அவன் உச்சந்தலையில வச்சு, சப்புச் சப்புச் சப்புன்னு நாலு அடி அடிச்சுக் கரகரகரன்னு கைய வச்சுத் தேச்சு அவனப் பித்து ஏத்துறா பெருந்தனக்காரி.

வீட்டத் தூக்கி வெளிய வைக்குதய்யா எண்ணெவாசன. சித்தகத்திப் பூவும் பழுத்த பட்ட மொளகாயும் சாதிக்காயும் போட்டுச் சிவீர்ன்னு செவக்கக் காய்ச்சி எடுத்த செக்கெண்ணையாச்சே.

எண்ணெ தேய்க்கிறபோதே வெந்நி கொதிக்குது அடுப்புல.

தலயில வச்ச எண்ணெ கண்ல ஒழுகிவிழுந்தப்பக் கண்ண மூடுனவன்தான்; தெறக்கவேயில்ல. மூஞ்சில தேச்சு, நெஞ்சில தேச்சு, கை கால் உருவி விட்டு, கண்ணில்லாத கபோதியக் கைத்தாங்கலாக் கூட்டிட்டுப் போறமாதிரி கொண்டு போறாக குளிப்பாட்ட.

புண்ணாக்குத் திங்க வந்தவன் செக்குல தலயக்குடுத்த கதையாகிப் போச்சு அவன் கத.

வளவிக்காரி ஆசதீரக் குளிப்பாட்டி விடுறா அழகுசிங்கத்த. தலைக்கொரு சொம்பு தண்ணி ஊத்தி அள்ளி எடுத்தா அரப்புப் பொடிய சும்மா காத்துல கமகம் பாடுது அரப்புப் பொடி. நயம்பொடி அரப்புப் பொடி. உசிலைஎலை - மஞ்சள் - பூலாங்கெழங்கு - வெந்தயம் - மருதாணி- மருக்கொழுந்து எல்லாம் ஒண்ணாப் போட்டு எளங்குமரிகளாக் கூடி இடிச்சது.

'ஓங் குடுமி எங்கையில'ன்னு அவ இழுத்துப் புடிச்சு அழுத்தித் தேய்க்கத் தேய்க்க அங்க தேயி இங்க தேயின்னு அவளுக்கே உத்தரவு போட்டு உசுப்பிவிடுது அவ வளவி.

தலைக்குத் தண்ணி ஊத்த அவ மொதச் சொம்ப மோந்தாளோ இல்லையோ; ''யாத்தே! தீ''யின்னு அவ ஆத்தாகாரி ஆக்குப்பாரையில சத்தம்போட, என்னமோ ஏதோன்னு அங்க ஓடிப்போனாளுக எல்லாரும். ஒரு கரித்துணி தீப்புடிச்சதுக்கே கத்திக் குமிச்சுப்பட்டா ஆத்தாகாரி.



படிப்பகம்

padippakam

இங்க பாவம்... ஒத்தப் பிள்ளையார் மாதிரி உக்காந்திருக்கவனுக்குக் கண்ணுல அரப்புப்பொடி விழுந்து காந்துது. கண்ணத் தெறக்காம அவன் தடவித்தடவிச் சொம்பத் தேடுறான்.

இப்ப ஒரு கொலுசுச் சத்தம் வந்து அவன் முன்னுக்க நின்னு குளிப்பாட்டுதய்யா அவன. அவன் உச்சந்தலையில தவ்வணிவிட்டு அஞ்சுவெரல் நொழஞ்சு ஆஞ்சு அலசிவிட கண்ணு தெறக்காம இருக்கிற பயலுக்குக் கபாலத்துக்குள்ள பூப்பூக்குது. கண்ணத் தெறந்து பாக்கிறான். பாவாட தாவணியோட தலைக்குத் தண்ணி ஊத்திக்கிட் டிருக்கிறா ஒரு தங்கச் செல. யாத்தே! இது கனாவா? செடி ஒயரத்துக்கு ஒரு செம்பருத்திப் பூவா? குத்தவச்சதும் குடிசு பிரிக்குமுன்ன ஓடிவந்த கொமரிப்புள்ளயா?

முழிச்சகண்ணு மூடாமப் பாக்கிறான்.

நனைஞ்சிரும்ன்னு சுருட்டி நடுத்தொடையில வச்சிருக்கியே... அந்தப் பாவாடையாகக் கூடாதா நானு? தண்ணியில நனஞ்சு உன் கொலுசுமணிக்குள்ள மாட்டி நீட்டிக்கிட்டிருக்கே ஒரு குறுமுடி... அது செஞ்ச புண்ணியம் நான் பண்ணலையே பாவிமகளே!

தலைக்கு அவ தண்ணி ஊத்த ஊத்த முக்காலடி தூரத்துல முட்ட முட்டவந்து முட்டாமப்போற மொசக் குட்டிக தண்ணி ஊத்திக் குளிக்கிறவன் தலையில தணல வாரி எறியுதுக.

''ஓ! இவதான் இந்தக் கோழிப்பண்ணையில குஞ்சுக் கோழியோ?''

''ஏண்டி சின்னவளே! கொல்லப்புறத்துல என்ன வேல? கொமட்டுல குத்து அவள. ஓடிப் போடி உள்ள.''

இவள ஏன் காமிக்கல? பிஞ்சுக்கோழிய இன்னம் சந்தையில எறக்கல.

வீட்டுக்குள்ள போன கொலுசு தேஞ்சு ஓஞ்சு போன எடத்தில இத்து விழுந்து போச்சு இவன் உசுரு.

அன்னைக்கு ராத்திரி அக்கா தங்கச்சிக மூணுபேரும் மாத்தி மாத்தி உள்ளபோயி வந்தாக; ஒண்ணும் வேலைக்காகல.

என்னா எவடம்ன்னு விடியவிடியக் கெழவி விசாரிச்சும் பாத்தா.

ரெண்டு தொடைகளையும் இறுக்கிப் பூட்டிக்கிட்டுப் பய படுத்துக்கிட்டானாம்; முத்தம் குடுக்கப்போனா மூஞ்சியத் திருப்பிக் கவுந்துக்கிட்டானாம்.

''ஏண்டி! நம்ம சுத்தபத்தம் புடிக்கலையா சொறிப்பயலுக்கு. எங்க பாக்குறது சுத்தம்? எர புடிக்கிற வேட்டை நாய்வாயி - பழங்கொத்துற பறவ வாயி-பால் குடிக்கிற கன்னுக்குட்டி வாயி - முத்தங்குடுக்குற பொம்பள வாயி



படிப்பகம்

- இதுலயெல்லாம் சுத்தம் பாக்கப்படாதுன்னு சொல்லுவாகளே... எவ எடுத்துச் சொல்றது அந்த எடுபட்ட பயலுக்கு?

ராவெல்லாம் கண்ணுறங்காத பயலுக்குக் கண்ணுக்கு முன்னுக்க வந்துபோறது ரெண்டே மூஞ்சிதான். அந்தக் குஞ்சுக்கோழி மூஞ்சி வந்து வந்து போகுது. ஆத்தா மூஞ்சி அப்பப்ப வருது; லேசுல போகமாட்டேங்குது.

விடிய்ய வாசத் தெளிக்க ஒறங்கிப்போனவன் பகலெல்லாம் ஒறங்கிக் கண்ணு முழிக்கையில பொழுது மசங்கிப்போச்சு. போகணும் ஊருக்குன்னு புத்திக்குள்ள கவுளி கத்துது.

கெழவி கணக்குப் பாத்தா.

தேச்ச எண்ணெய்க்கு - தின்ன சோத்துக்கு - தொவைச்ச துணிக்கு - இருந்த இருப்புக்கு 'அஞ்சரை' எடுத்துக்கிட்டு ஒம்போதரையக் கையில குடுத்துப் 'போயிட்டுவா ராசா போ'ன்னுட்டா கெழவி.

அவன் சுத்தியும் முத்தியும் பாத்துட்டு ஒரே தவ்வாத் தவ்வி உள்ளபோயி சின்னவ கையில அஞ்சுரூவாய வச்சு அமுக்கிட்டு, தும்பு திரிச்ச கன்னுக்குட்டி மாதிரி மடார்ன்னு கதவத் தெறந்து சடார்ன்னு தெருவுக்கு வந்துட்டான்.

வெளிய வந்துபாத்தா-

முக்காட்டுக்குள்ள மூஞ்சிபொத்தி, தெருத்திண்ணையில குத்த வச்சு,காவக்காக்கிறவ மாதிரி உக்காந்திருக்காய்யா கருவாச்சி.

பேயடிச்சவன் மாதிரி பேச்சு மூச்சில்லாமப் போச்சு பயலுக்கு.

பிள்ளையப் பாத்ததும் அழுகையா ஊத்துது அவளுக்கு.

அவன் அழுகல. அழுகை வார வழியப் பாறாங்கல்லு வச்சு அடைச்சுப்புடுச்சு வெக்கம்.

முன்ன அவ நடக்க -

பின்ன அவன் நடக்க -

ஒரு வார்த்தையும் பேசிக்கிரல தாயும் மகனும்.

மாப்பள வீடு பாக்க ஆளுகள வரச்சொல்லிட்டுப் பொம்பள வீடுதேடிப் போயிட்டானே புத்திகெட்ட பய. அம்புலிப்புத்தூர் ஓடைதாண்டி ஆலமரம் கடக்க ஆத்தா அழுதுக்கிட்டே கேட்டா:

''ஏண்டா தங்கம்! ஏதுடா ஒனக்கு இம்புட்டுத்துட்டு?''

அங்கிட்டுப் பாத்துக்கிட்டே சொன்னான் அழகுசிங்கம்-

padippakam

''நல்லத்தா குடுத்துச்சு.''

''நல்லத்தான்னா..?''

''அதான்... திம்சு.''

புழுதியில கெடந்த ஒரு முள்ளு 'சுருக்'குன்னு கால்ல குத்த, அவன் சொன்ன சொல்லு 'நறுக்கு'ன்னு நெஞ்சுல குத்த, ரெண்டு வலியில எந்த வலி பெருங்கொண்ட வலின்னு தெரியாம நின்ட எடத்துல நின்டு போனா கருவாச்சி ஒத்தக்கால மட்டும் ஒசக்கத் தூக்கி.



படிப்பகம்

padippakam



# 34

சிலபேரப் பாத்தாலே தெரிஞ்சுபோயிரும் நல்லவுகன்னு. அவுகளுக்கு மறைக்கத் தெரியாது; இருதயக்கூடு என்னா நெனைக்குதுன்னு கண்ணாடி மாதிரி காட்டிக் குடுத்திரும் கண்ணு.

சிலபேரப் பாத்தவுடன தெரிஞ்சு போயிரும் சீ! சீர் கெட்ட ஆளு - கோளாறா இல்லாட்டிக் குடிகெட்டுப் போயிரும்ன்னு. வெசமும் வெனயமும் அவுக கண்ணுலயே திட்டுத்திட்டாத் தெரியும். ஒதுங்கிப் போயிரலாம்; ஒரு தொந்தரவு இல்ல.

படிப்பகம்

padippakam

ஆனா இருதயம் நெனைக்கிறது என்னான்னு கண்ணுல துப்புக் காமிக்காத ஆளுக இருக்காகளே அவுகதான் ஆபத்தான ஆளுக. அவுகள ஆழங்காண முடியாது. அழுக்குத்தண்ணி ஆழங் காமிக்குமா? காமிக்காதில்ல.

திம்சு... அப்படியாப்பட்ட ஆளு. இன்னது நெனைக்கிறாங்கிறதக் கண்ல காமிக்கமாட்டா. அப்படியே காமிச்சாலும் பொய்ய நெசமாக் காமிப்பா; நெசத்தப் பொய்யாக் காமிப்பா. அவளத்தான் மத்தவுக கண்டுபுடிக்க முடியாதே தவிர அவ எல்லாரையும் கண்டுபுடிச்சு வச்சிருப்பா.

இன்னாருக்கு இன்னது புடிக்கும்ங்கிறதக் கண்டறியவே ஒரு பெரும்புத்தி வேணுமா இல்லையா?

அழுதபுள்ளைக்குப் பாலும் புள்ளத்தாச்சிக்குப் புளியங்காயும் புடிக்கும்னு எல்லாருக்கும் தெரியும். குடிகாரனுக்குக் காரக்கறி புடிக்கும்; கூலிக்காரனுக்கு எச்சாக்காசு குடுத்தாப் புடிக்கும்; கொமரிப்புள்ளைக்கு நொறுக்குத்தீனி புடிக்கும்; சாகப்போற கெழவனுக்கு சொந்தபந்தம் வந்து நெத்திதொட்டாப் புடிக்குங்கறதெல்லாம் திம்சுக்குத்தான் தெரியும்.

அத்தனையும் தெரிஞ்சுக்கிட்டு அவுகளுக்குப் புடிச்சத மடிப்பிச்சை போட்டு விட்டுட்டுத், தன் போக்குல போயித் தன் காரியம் முடிக்கிறவ திம்சு.

கெழட்டுமாமனுக்கு என்ன கொறைங்கிறதத் துருவித் துருவித் துப்பறிஞ்சுக்கிட்டா. தனக்கு வெவரம் தெரிஞ்ச நாள்லயிருந்து தன்ன யாரும் மதிக்கிறதில்லங்கறதுதான் கெழவனுக்கு இருக்கிற பெருங்கொண்ட கவலை - பெறவிக் கவலைன்னு அன்னைக்கே கண்டுக்கிட்டா; அதுக்குத் தக்கன காய் நகத்திட்டா.

வெள்ளி செவ்வாயில தலைக்கு முழுகி சாம்பிராணி காமிச்சு மடார்ன்னு போயி விழுந்தா கெழவன் கால்ல.

''எந்திரி தாயி எந்திரி''ன்னு பதறிப் போச்சு பெருசு. ஆனாலும் வறண்ட கெணத்துல திடீர்ன்னு ஊத்தடிச்ச மாதிரி ஊத்துது கண்ணீரு. அப்பறம்... எப்படா வரும் வெள்ளி செவ்வாய்ன்னு ஏங்கி வீங்கிப் போச்சு பெருசு மனசு.

ரெண்டு மூணு வருசத்துலயே கெழவனக் கிறுக்குப் புடிக்க வச்சுப்பிட்டா.

குழைய வடிச்ச சோறு - வெந்து மலந்த ஈரலு; மாறாத வெத்தல - மங்காத வெள்ளை; தலமாட்ல வெந்நி- எச்சி துப்ப ஏனம்; கம்பளி மேல கண்டாங்கிச் சீல; அவிச்ச மொச்ச - இடிச்ச தொக்கு (வேணுங்கிற வெல்லம் போட்டு)

இப்படியெல்லாம் உச்சிகுளிர உபசாரம் பண்றதுமில்லாம, பேச்சுத் தொணைக்கு அப்பப்ப சில பெருசுகளையும் கூட்டிவிட்ருவா.

சடையத்தேவருக்கு அந்தச் சுத்து வட்டாரத்துலேயே தான்தான் மெத்தப் படிச்ச மேதாவின்னு நெனப்பு. ஆடு குட்டிபோட்டாலும் ஆள் செத்துப்போனாலும் அதுஅதுக்குன்னு ஒரு சொலவம் சொல்லி அலையிற ஆளு. தானும் வெவரங்கெட்ட சிறுக்கி இல்ல வெவரமான பொம்பளதான்னு தன் அறிவு மூட்டைய ஒரு ஓரமா ஒருநாள் அவுத்துவுட்டா திம்சு.

''ஊருக்கெல்லாம் சொலவம் சொல்றீகளே... நான் ஒரு சொலவம்



படிப்பகம்

சொல்றேன். அதுக்கு அர்த்தம் சொல்றீகளா பெரிய மாமா?''

''சொல்லு தாயி சொல்லு.''

''ஊரான் பிள்ளைய ஊட்டி வளத்தா, தம்பிள்ள தானே வளரும்னு சொலவம் சொல்லுதே... என்னா அர்த்தம்?''

வரமாட்டேன்னு சொன்ன மீசைமேல வம்படியாக் கைபோட்டு மேல தூக்கிவிட்டுத் தொண்டையச் செருமிக்கிட்டே சொல்றாரு சடையத்தேவரு.

''குடுத்து வாழ்றவனுக்குத்தான் கொலம் தழைக்கும். அதான் தாயி அர்த்தம்.''

இழுத்து அம்மியரைச்சுக்கிட்டிருந்தவ அத நிறுத்திட்டு, ''இல்லே''ன்னா. ''ஊரான் பிள்ளைன்னா நானு. ஒங்க வீட்டுக்கு வாக்கப்பட்டு வந்தவ. என்னிய நீங்க ஊட்டிவளத்து உருப்படியா வச்சிருந்தா ஒங்க பிள்ளைய நான் ஒழுங்கு மரியாதையா வச்சுக்குவேன். அதான் அதுக்கு அர்த்தம்.''

ஒடம்புல ஒருபாதி மட்டும் ஓடுற கொஞ்சநஞ்ச நாடியும் ஒரேடியா ஒடுங்கிப்போச்சு சடையத்தேவருக்கு.

''யாத்தே! அந்த சரஸ்வதியே வாக்கப்பட்டு வந்து சாணியள்ளி சமையல்பண்ணிப் போடுறாளா சடையத்தேவன் குடும்பத்துக்கு.'' மெரண்டு போனாரு கெழவன்.

வெளஞ்சு வளஞ்ச கட்டைகளுக்கெல்லாம் அப்பப்ப ஒரு சந்தேகம் வந்திரும்: ஏஞ் சொத்தும் அதிகாரமும் ஏங்கிட்டயேதான் இன்னும் இருக்கா? இல்ல விழுந்த பல்லு மாதிரியே அதுவும் கழண்டு போயிருச்சா.? அப்படியெல்லாம் சந்தேகப்படாதீக. நீங்க நீங்கதான்னு கண்ணாடி புடிச்சுக் காமிச்சுக்கிட்டேயிருக்கணும் அப்பப்ப அவுக மூஞ்சிய.

திம்சு அதைச் செஞ்சா; கெழவனுக்கு ஒரு கதையும் சொன்னா - கால அமுக்கிவிட்டுக்கிட்டே.

''ஒரு காட்ல சிங்கமும் நரியும் சிநேகமா இருந்திச்சுக மாமா. நரி சொல்லுச்சு காட்டுராசா! காட்டுராசா! நீங்க வேட்டைக்குப் போனா ஒங்களப் பாத்து மாடும் மானும் யானையும் புலியும் ஓடி ஒளிஞ்சு போகுதுக; பலநாள் பட்டினியும் கெடக்கீக. எங்க எது மேயுதுன்னு நான் உள்காடு போயி வந்து ஒளவு சொல்றேன். நீங்க அரவமில்லாமப் போயி அடிச்சுத் தின்னுங்க. மிச்சம் மீதி எனக்கு.''

'நல்லதுடா நரிப்பயலே; அப்படியே செய்'ன்னு சொல்லிருச்சு சிங்கம். நரி ஒளவு பாக்க, சிங்கம் அடிக்க,சிங்கம் காட்ல ஒரே எலும்புமழைதான்.

நாள் ஆகஆக நரிக்கு மப்பு ஏறுது. ஒரு நாள் நரி சொல்லுது; ''காட்டுராசா! நித்தம் நீ என்னாலதான் எலும்பு கடிக்கிற. நான் இல்லாம நடக்குமா காரியம்? அதனால இன்னைக்கிருந்து என்னிய நரிப்பயலேன்னு கூப்பிடாத. கால் சிங்கம்ன்னு கூப்பிடு. போனாப் போகுதுன்னு சிங்கமும் நரியக் 'கால்சிங்கம்'ன்னு கூப்புட ஆரம்பிச்சிருச்சு.இப்படியே காலம் போகப் போக; 'கால் சிங்கம்' அரைச்சிங்கமாகிப் போச்சு; அரைச்சிங்கம் முக்காச் சிங்கமாகிப் போச்சு. சிங்கத்துக்கு வயசாகவும் நரி நாட்டாம பண்ணப் பாக்குது. ஒருநாள் இனிமே என்னிய முழுச் சிங்கம்ன்னு கூப்பிட்டாத்தான்

நான் ஔவுபாக்கப் போவேன்னு ஒக்காந்திருச்சு நரி. சரி! அறிவுகெட்ட நரி ஆசைப்படுது... ''இன்னிக்கிருந்து நீ முழுச்சிங்கந்தானப்பா.'' சொல்லிருச்சு சிங்கம்.

கொஞ்சநாள்ல சிங்கம் சீக்கு விழுந்து போச்சு. நான்தான் முழுச்சிங்கமாச்சேன்னு நரி கௌம்பிருச்சு வேட்டைக்கு. கூட ஒரு நொண்டி நரியத் தொணைக்குச் சேத்துக்கிருச்சு. யானக்கூட்டம் மேயற எடத்துக்குப்போயி சிங்கம் மாதிரியே பதி போடுது நரி. வம்படியாத் தரையில வால அடிக்குது.

''சிங்கம் மாதிரியே எனக்கும் கண்ணு செவக்குதா பார்றா.''

''கோவப்பழமா செவந்திருக்குது ராசா.''-பொய் சொல்லுது நொண்டி நரி.

இப்ப நரி பாயுது யானமேல. சிங்கம் பாஞ்சா யான முதுகுல ஏறி உக்காந்து தலையில அடிச்சுத் தரையில போட்டுரும். இது சிங்கம்ன்னு பேருவச்ச நரிதானே... இது யானத் துதிக்கையில போயி அடிக்கப்போச்சு. கடைசியில அது கொம்புல மாட்டிக் கொடல் அந்து செத்துப்போச்சு.

பெரிய மாமா! கால்சிங்கம் அரைச்சிங்கம்ன்னு பேரு வச்சுக்கிட் டாலும் சிங்கம் மாதிரி நாட்டாம பண்ண முடியுமா நரி? ஒங்க மகன் நரிதான். சீக்காக் கெடந்தாலும் நீங்க சிங்கம்தான்.''

காலப்புடிச்சு விட்டது சொகமா? இல்ல அவ கத சொன்னது சொகமா? சடையத்தேவரு கெறங்கிக் கிறுகிறுத்துக் கெடந்தப்ப அடிச்சு எறக்குறா இன்னொரு ஆப்ப.

''பெரிய மாமா! ஒங்க மகன் குடிகாரராப் போயிட்டாரு. போற எடம் வார எடம் சரியில்ல. எத வித்து எதத் திம்பாருன்னு தெரியாது: சொத்து எம்பேர்லயிருந்தா என்னைக்கும் அழியாது. எழுதிவையுங்க எம்பேர்ல சொத்த''ன்னு சொன்னா.

பெரியகுளத்துக்கு வைத்தியத்துக்குப் போறமாதிரி குதிரை வண்டியிலேயே கூட்டிட்டுப் போயிப் பத்திரமும் தன்பேர்ல பதிவு பண்ணிப்புட்டா.

பத்திரத்துலதான் தெரியுது அவ பேரு - பேயம்மா.

அடுத்து...

புருசனயும் போட்டுத் தள்ளிப்புட்டா.

சிங்கத்தையே கழுதையா மாத்துனவளுக்கு நரிய நாயா மாத்த எம்புட்டு நேரமாகும்? மாத்திப்புட்டா; தன் சவுரிமுடிங்கிற சாட்டையில சும்மா பம்பரமாச் சுத்திச் சுழட்டிவிட்டுட்டா கட்டையன.

சாராயங் குடிச்சுக் குடிச்சுச் சிறுகச் சிறுகச் செத்துப் போன நாக்குக்கு ஒறப்பா உப்புக்கண்டம் வறுத்துக் குடுத்தா. பானையில ஒளிச்சு வச்சிருந்த கஞ்சாவ எடுத்து இந்தான்னு நீட்டுனா. ஒறக்கம் வராமப் பெரண்டு பெரண்டு படுக்கிற குடிகாரப் பயலுக்குக் காதுக்குள்ள கோழி எறக விட்டு எளம் குடைசல் கொடஞ்சு கொடஞ்சு ஒறக்கத்த உண்டு பண்ணினா. அவன் ஊர்மேஞ்சு ஒலகம் சுத்தி நடுச்சாமத்துல வந்து கதவத்தட்னாலும் சுடுசோறு

போட்டு விசிறி விட்டா. அது என்ன எழவோ தெரியல... அவன் எப்பவும் கோழி கூப்பிடத்தான் காலத்தூக்கிப் போடறது; அதுக்கும் எனக்காச்சு ஒனக்காச்சுன்னு எப்பவும் ஈடுகுடுத்தா. பல சகதி பெரண்ட பன்னிமாதிரி ராத்திரிக்கு அவன் வீட்டுக்கு வந்தாலும் விடிய்ய கொக்குமாதிரி வெளியேற நித்தம் ஒரு வெள்ளவேட்டி வெளுத்து வச்சா. இதுலயெல்லாம் சொகங்கண்ட கட்டையன அவ உக்கிபோட்டு உக்கார வச்சுப்பிட்டா. அப்பன்கிட்டயிருந்து மகனப் பிரிச்சிட்டா அவளுக்கு ஆடுபுலி ஆட்டம் லேசு.

அப்பனுக்கொரு கத சொன்னமாதிரி மகனுக்கும் ஒரு கத சொன்னா. இது வேற கத; அப்பன் மகனப் பிரிக்கிற கத.

ஒரு காதுல கோழிஎறகு வச்சுக் கொடஞ்சுக்கிட்டே மறுகாதுல ஆணியடிக்கிறா.

''ஒரு ஊர்ல ஒரு கெழவன். மக்கமாரு மூணு பேரு. கெழவி செத்ததும் மூணுபேருமே கஞ்சி ஊத்தல. தெரிஞ்சதப் பாருன்னு தெருவுல விட்டுட்டாக. கெழவன் கஞ்சிகுடிக்கணுமே... என்னடா வழின்னு யோசிச்சாரு. உள்ளூர் நாட்டாம. ஒரு பெரிய காரீய உருண்ட வாங்கினாரு. அதை முடிஞ்சு கெழவன் பையில போட்டாரு. ''இந்தாப்பா இத வச்சுக்க; எக்காரணம் கொண்டும் தெறந்து காட்டிராத; தெறக்க விட்றாத. நான் செத்தா மூணு பேருமாப் பங்கு போட்டுக்கங்கன்னு சொல்லிப்புடு''ன்னு சொல்லிக் குடுத்தாரு.

கெழவன் என்னமோ பெரும்பொருள் வச்சிருக்கான்னு மகன்களும் மருமகள்களும் தாங்கு தாங்குன்னு தாங்குறாக. திண்ணையில கெழவன் உக்காந்தாலும் எந்திரின்னு எழுப்பித் திண்ணையும் தொடைச்சு விடுறாக; வேட்டியையும் கட்டி விடுறாக.

தீவாளி பொங்கலுக்குக்கூடக் கெழவனுக்குக் கறித்தண்ணி காமிக்காத பொம்பளைக வெள்ளி செவ்வாயிலகூட ஆடு கோழின்னு அடிச்சுப் போடுறாளுக.

என்னாப்பா உம் பிள்ளைகளுக்குப் பாசம் பொத்துக்கிட்டுப் பொங்குதுன்னு கேக்குது ஊரு. 'எல்லாம் ஒரு காரியத்துக்குத்தான்'கிறான் கெழவன்.

ஒறங்கினாலும் ஒக்காந்தாலும் நடந்தாலும் பையை விடுறதில்ல கெழவன். ஒண்ணுக்கு ரெண்டுக்குப் போனாலும் தொங்குது பை தோள்லயே.

'என்னாதான் இருக்கு பையில'ன்னு கேட்டா 'அதுல ஒரு காரியமிருக்கப்பா'ன்னு கண்ணச் சிமிட்டுறான் கெழவன்.

இப்படி ஏகபோகமா இருக்கையில தான் சாகப்போறது தெரிஞ்சுபோச்சு கெழவனுக்கு. மக்கமாரு மருமக்கமாரக் கூப்பிட்டு நான் யார் வீட்ல சாகுறனோ அவுகளுக்குத்தான் பெரிய பங்குன்னுட்டான் கெழவன். உடனே மூணுபேரும் 'என் வீட்ல சா... என் வீட்ல சா...'ன்னு இழுக்கிறாக கையப் புடிச்சு. நாஞ் செத்தா முப்பதாம் நாளு காரியம் முடியாம அவுத்திராதீகன்னு சொல்லிட்டு, நாட்டாமையக் கூப்பிட்டுக் குடுத்திட்டாரு பைய.

ஒரு நாள் தெருவுல சுருண்டு விழுந்து மண்டையப் போட்டுட்டாரு கெழவன். இப்ப மூணு தேரு கட்டுறானுங்க மூணு பேரும். 'எந் தேர்லதான்

padippakam

அப்பன் போகணும்...' 'எந் தேர்லதான் அப்பன் போகணும்...' அண்ணந்தம்பிகளுக்குள்ள அடிதடியாகிப் போகுது. கடைசியா மூணு தேர்லயும் மாத்தி மாத்திப் பொணத்தக் கொண்டு போயிப் பொதச்சிட்டு வந்தாங்க.

முப்பது நாள் காரியமும் முடிஞ்சது. அண்ணந்தம்பிக கூடி அவுத்தாக பைய. பாத்தா. உள்ள பெரிய காரீயம் இருக்கு. எல்லார் மூஞ்சியிலயும் இருளடிச்சுப் போச்சு.

''காரியமிருக்கப்பா காரியமிருக்கப்பான்னு எல்லாரையும் ஏய்க்காம ஏய்ச்சுட்டுப் போயிட்டானப்பா. '' அப்பத்தான் அது நெசமாவே எழவு வீடாப் போச்சு. ''

கத சொல்றதையும் காது குடையறதையும் ஒரே நேரத்துல நிறுத்துனா திம்சு.

''இந்தக் கதைய ஏன் எனக்குச் சொல்றவ?''

''அந்தக் கெழவனுக்கு ஒரு காரீயமாவது இருந்திச்சு. ஒங்க கெழவனுக்கு ஒரு ஒட்டுக்கோமணமாச்சும் இருக்கா? ''

''ஏன் இந்த வீடும் காடும் இல்லையா?''

''ஆமாம். இந்த வௌங்காத வீடும் வெளையாத காடும் உப்புக் கல்லுக்கு ஆகுமா? ஏதோ ஒன் தாட்டியத்துல ஓடிக்கிருக்கு வண்டி. நீ வட்டிவாசிக்குக் குடுத்து வாங்குற காசிலதான மாமன் மஞ்சக் குளிச்சுக்கிட்டிருக்கு.''

''என்னடி சொல்ற?''

''வைத்தியம் பண்ண - வாங்கித் தின்னன்னு வார காசெல்லாம் கெழவனுக்கே போயிட்டா நாளப்பின்ன நம்மளுக்குன்னு என்ன இருக்கு? நாளக்கி நீயும் விழுந்திட்டன்னு வச்சுக்க ஒன்னையும் நாந்தான தூக்கிச் சுமக்கணும்? எம் முந்தானையில முடிஞ்சு வைக்க என்ன இருக்கு என் புருசனத் தவிர?''

இப்படி எத்தனையோ தடவ எறும்பா ஊரி ஊரி அந்தக் கல்லத்தேய்ச்சிட்டா.

தானியம் வித்த பணத்தையும் வட்டி வாசிக்கு வார காசையும் பொண்டாட்டி பொறுப்புல விட்டுட்டான் கட்டையன்.

போகப் போகத் தகப்பனுக்கும் மகனுக்கும் பேச்சு வார்த்தை இல்லாமப் பிரிச்சேபுட்டா திம்சு.

ஒரு கோட்டைச் சுவர் இருக்கு. எங்கிருந்தோ ஒரு பறவை பறந்து வந்து அதுல உக்காருது. எச்சமிடுது. அதுலருந்து ஒரு வெத விழுகுது. விழுந்த வெத மொளைக்குது. அது வேர்விட வேர்விட விரிசல் கண்டு போகுது சுவரு.

தெரியாமச் செய்யுது பறவை;

தெரிஞ்சே செய்றா திம்சு.





படிப்பகம்

padippakam



# 35

அம்புலிப்புத்தூர விட்டு அழகுசிங்கத்த மீட்டு வந்தன்னைக்கிருந்து கண்ணுல ஒறக்கம் தங்கல கருவாச்சிக்கு. நெஞ்சாங்கூட்ல கத்தி குத்தி முதுகுப்பக்கம் முள்ளுத்தச்ச கதையாகிப்போச்சு கருவாச்சி கதை.

அழகுசிங்கத்த நெனச்சா அவளுக்கு அழுகையா வருது. எதிரிகள விலாவுல குத்தி விழுத்தாட்டிட்டுக் கொம்புல குடல்மால சுத்தி வரவேண்டிய என் வீட்டுக் காரிக்காள, இப்படி எச்சி எல மேயப்போயி ஈனப்பட்டு நிக்குதே... இது நெஞ்சாங்கூட்டுல பாஞ்சு நட்டுக்குத்தலா நிக்கிற கத்தி.

படிப்பகம்

யாருக்கும் தெரியாமக் காசு குடுத்து அவனத் தேவடியா வீட்டுக்கு ஏவி விட்ருக்காளே ஒரு எழவெடுத்த சிறுக்கி... அது முதுகுல குத்தி முனையொடிஞ்சு நிக்கிற முள்ளு.

ஏதோ லவுக்க போட்ட லம்பாடி பொழச்சுப் போகட்டும்ன்னு கண்டுங்காணாம இருந்த கருவாச்சி இப்பப் பளிச்சின்னு முழிச்சுக்கிட்டா.

இவ யாரு?

எந்தக் காட்டுச் சிறுக்கி?

ஒழுங்கு மொறையான பொம்பளதானா?

ஒண்டவந்த பிடாரியா?

''மேட்டு நெலத்துல நட்டவனும் கெட்டான்; மேனாமினுக்கியக் கட்டுனவனும் கெட்டான்''னு சொல்லுவாகளே... இவ நல்ல சிறுக்கியா? மேனா மினுக்கியா?

இவளக் கண் கொத்திப்பாம்பு மாதிரி கவனிச்சே ஆகணும்ன்னு பொட்டுல பொறிதட்டுது கருவாச்சிக்கு.

நான் பொத்திவளத்த மகனக் காப்பாத்தணுமே இந்தப் பொட்டநரி கடிக்காம.

''ஆம்பளச்சாமிகளா! பொம்பளச் சாமிகளா! எல்லாம் தொலஞ்சு எல்லாம் கழிஞ்சு ஏம் பொழப்புல ஈவுன்னு நான் மிச்சம் வச்சிருக்கிறது ஒத்தையில பெத்த ஏம் பிள்ள ஒண்ணுதான். ஏம் பிள்ளையப் பெராந்து தூக்கிட்டுப் போயிராமக் காபந்து பண்ணிக் கரைசேத்துருங்க.''

குத்துக் கல்லக் கண்டாலும் கும்புட்டுக் கும்புட்டுக் காலுக்கு விழுந்திர்றா கருவாச்சி.

ஆனா ஆத்தாள ஆத்துல விட்டுட்டு அவன் போக்குல போயிக்கிட்டிருக்கான் மகன்காரன்.

பெரும்பாதையைவிட்டுப் பிரிஞ்சு ஓடி ஒதுங்கி ஒடுங்கிக் கண்காணாத காட்டுக்குள்ள காணாமப் போகுதா இல்லையா ஒத்தையடிப்பாதை... அப்படி ஆத்தா பிடிய விட்டு வெலகி வெலகி வெளிய வெகுதூரம் போறான் பய. ஆத்தா என்ன செஞ்சாலும் அது சொத்த இது சொத்தைங்குறான்.

இல்லாத நொட்டச் சொல்லெல்லாஞ் சொல்லி ஆத்தாளக் கிறுக்குக் குத்துறான்.

அன்னைக்குக் களிக்கிண்டிக் கருவாட்டுக் குழம்பு வச்சதுல ஒரு கூத்தாகிப் போச்சு.மீனாட்சின்னா மூக்குத்தி; கண்ணகின்னா செலம்பு; வேலுநாச்சின்னா கத்தி; ஆண்டாள்ன்னா மால; பாஞ்சாலின்னா சீலங்கிறமாதிரி கருவாச்சின்னா ஞாபகம் வாரது கருவாட்டுக் குழம்பு தான். கருவாட்டுக் குழம்பு வைக்கிறதுல சில்லாவுல அவள அடிக்க ஆள்

padippakam

கெடையாது. அவ கைப்பதம் யாருக்கும் வராது. பாதகத்தி குழம்பு வச்சா கருவாடு மீனாப் போகும்; கத்திரிக்கா தேனாப் போகும்.

அம்மியில மஞ்சமொளகா வச்சு அரச்சு, தேங்காயில ஒரு எளஞ்சில்லு எடுத்து நச்சுன்னு நசுக்கி சின்ன வெங்காயம் ரெண்டெடுத்து மேல்தோலச் செல்லமா ஒரு உரி உரிச்சு, பெத்த பிள்ளைய அடிக்கிறமாதிரி பொத்துனாப்புல ரெண்டு தட்டுத்தட்டிக் கொழவிய இழுத்து அரைச்சு அரைச்சத ஒண்ணு தெரட்டி, அதுல அறுத்து வச்ச கத்திரிக்காயையும் கருவாட்டையும் உப்பையும் போட்டு அஞ்சு வெரலையும் விட்டுப் ★பெசறி, அளந்து தண்ணிவச்சு அடுப்புக்கூட்டி, அங்கிட்டும் இங்கிட்டும் போகாம அங்கேயே இருந்து அளவாத் தீ எரிச்சு, ஒருகொதி ரெண்டுகொதிவிட்டு மூணாங்கொதி கொதிச்சு அடங்கப் பொருந்தப் புளியக் கரைச்சு ஊத்தி, நாலாங் கொதி கொதிக்க நறுக்கா எறக்கி வைக்கிறதுதான் ஊர்நாட்ல கருவாட்டுக் குழம்புக்குண்டான கம்பசூத்திரம். இப்படித்தான் வைப்பாக எல்லாரும்.

இதுக்கெல்லாம் மேல கருவாட்டுக் குழம்புக்கு யாரும் பாக்காத ஒரு பண்டுதம் பாப்பா கருவாச்சி. மூணாங்கொதியில புளிகரைச்சு ஊத்தி நாலாங்கொதியில எறக்குறதுக்கு முன்னால கரண்டியில சுடவச்ச நல்லெண்ணயக் கருவாட்டுக் குழம்புச் சட்டிக்குள்ள எறக்கி, சாமிக்குச் சூடம் காமிக்கிற மாதிரி ஒரு அளாவு அளாவி மினு மினு மினுன்னு எண்ணெ மெதக்க எறக்கி வப்பா பாருங்க... அந்தவாசன அடுத்த தெரு வரைக்கும் அடிக்கும்; நாக்குச் செத்த ஆளுக்கும் நமநமங்கும்.

அன்னைக்கி வச்ச கருவாட்டுக் குழம்புல ரெண்டு ஒச்சமாகிப் போச்சு. அங்க இங்க தேடியும் கத்திரிக்கா சிக்கல; பாவப்பட்ட பொம்பளைக்குப் பாகக்காயிதான் சிக்குச்சு. தாளிக்கலாம்ன்னு சீசாவ எடுத்துப் பாத்தா, சரீரத்துக்குள்ள ஆத்மாவக்கண்டு புடிச்சுப்புடலாம் போலிருக்கு; சீசாவுக்குள்ள நல்லெண்ணையக் கண்டுபுடிக்க முடியல.

அடித் தூர்ல மஞ்சளாத் தெரியுதே... அது எண்ணெயாத்தான் இருக்கும்ங்கற ஒரு தெய்வ நம்பிக்கையில கவுத்தா, இருந்த ஒண்ணு ரெண்டு சொட்டும் தாய் வீட்லருந்து மாமியா வீட்டுக்குப் போற புள்ளத்தாச்சி மாதிரி நிதானமா வேண்டா வெறுப்பா எறங்கி வந்துச்சு. மூதாக்கமாரு செஞ்ச தர்மம்... வருது நல்லெண்ணன்னு அவ சாமியக் கும்பிட்டுப் பாத்துக்கிட்டே இருக்க, சிவபெருமான் தொண்டையோட நின்னுபோன நஞ்சுமாதிரி, இறங்கி வந்த எண்ணெ சீசாவோட கழுத்துலயே சீவன விட்டிருச்சு.

கேப்பக்களிய மூணு வெரல்ல பட்டும் படாமப் பிச்சுக் கருவாட்டுக் குழம்புல ஒரு முக்கு முக்கி என்னமோ நாவப் பழத்த வாய்க்குள்ள எறியிறமாதிரி களித் துண்ட நாக்குல எறிஞ்சவன், கண்ண இறுக்கி மூடிக் களியத் 'த்தூ'ன்னு துப்புனான் பாருங்க...

பசுமாட்டுக்குச் சோளத்தட்ட வெட்டிக்கிட்டிருந்த கொண்ண வாயன்

---

★ பிசைதல்



படிப்பகம்

padippakam

மூஞ்சியில களிமண் அடிச்சமாதிரி ஒடி ஒட்டிக்கிருச்சு களி.

''அய்யா ராசா! என்னாச்சய்யா... என்னாச்சு?''

''ராசாவாம் ராசா... கருவாட்டுச் சாறுக்குக் கத்திரிக்கா வாங்க வக்கில்லாத சிறுக்கி... நீ பெத்த மகன் மட்டும் ராசா எங்கிட்டு ஆகிறது ராசா...?''

அடிச்சான் தட்டத் தூக்கித் தலகீழா.

நெளிஞ்சு போச்சு தட்டு; செதறிப் போச்சு களி; தெறிச்சு ஓடி வெறச்சு விழுந்ததுல ரெண்டாஞ் சாவு செத்துப் போச்சு கருவாடு.

●

ஊர் ஒடுங்கிருச்சு.

அரசமரத்துக் கல்திட்டுல வேட்டிய இழுத்துப் பொத்தி ஒரு கையத் தலைக்கும் ஒரு கையத் தொடை இடுக்குலயும் வச்சு அழுதுக்கிட்டே படுத்துக்கெடந்த அழகுசிங்கத்த, கையில தூக்குவாளியோட எழுப்புறா சலவைக்காரி.

''எம் மகன் பட்டினி கெடந்தா எனக்கு ஒறக்கம் வராதுன்னு ஒங்க நல்லத்தா குடுத்து விட்டுச்சு. சாப்பிட்டுச் சட்டியக்குடு; நான் இங்கயே இருக்கேன்.''

தெறந்து பாத்தா சட்டி கொள்ளாம அமுக்கி அடச்ச நெல்லுச் சோறு; அது மேல ரெண்டு அவிச்ச முட்ட. அவன் ஆவலாதியாக் கைவிட்டு அள்ளப் போனா கால்சட்டிச் சோத்துக்குச் கீழ கறியா அடைஞ்சு வச்சிருக்கா திம்சு.

அவன் அள்ளித் திங்கத் திங்க -

சோறு மாதிரி நெஞ்சுக்குள்ள போறா திம்சு; அவன் விட்ட ஏப்பம் மாதிரி அவனுக்குள்ளயிருந்து வெளியேர்றா கருவாச்சி.

●

லட்சுமிபுரத்துல பத்திரகாளியம்மன் கோயில் திருவிழா. இந்த வருசம் கரகாட்டமாம். அம்புலிப்புத்தூர் கனகு ஆடவாராளாம். பத்துப் பதினஞ்சு பஞ்சாயத்து எல்லைக்குள்ள அம்புலிப்புத்தூர் கனகு பேரச் சொன்னா வளஞ்ச வாழத்தண்டும் பத்திக்கிரும்; அவ கரகம் சுத்துனான்னா பல பேருக்கு ஒலகம் சுத்தும்.

'அம்புலிப்புத்தூர் அண்டா'ன்னு வயசுப்பயக அவளுக்குச் செல்லமா வச்சபேரு செல்லுபடியாகிப் போச்சு. தலையில தூக்கிவச்சதையும் சேத்து மொத்தம் அவளுக்கு மூணு கரகம்ன்னு சீட்டுக் கிழிஞ்ச சில பெருசுக சிரிச்சுச் சிரிச்சுப் பேசிக்கிருவாக.

அம்புலிப்புத்தூர்க்காரி கரகம் பாக்கணும்ன்னு ஆச வந்திருச்சு அழகுசிங்கத்துக்கு.



படிப்பகம்

padippakam

சும்மா வெறுங்கைய வீசிப் போய் வந்திர முடியுமா? வழிச் செலவுக்கும் வாங்கித் திங்கவும் காசுவேணாமா? அடுக்குப் பானைய உருட்டிப் பாத்தான்; அஞ்சறைப் பெட்டியப் புரட்டிப் பாத்தான்; கொண்ணவாயன உருட்டிப் பாத்தான்; ஒண்ணும் கதைக்காகல.

மலட்டுப் பொம்பள அரசமரத்தச் சுத்திச்சுத்தி வாரமாதிரி ஆத்தாளச் சுத்திச் சுத்தி வாரான்.

காய்ச்சல்ன்னு நெத்தியில பத்துப்போட்டுக் கட்டில்ல படுத்துக் கெடக்கா கருவாச்சி.

எப்பிடிக் கேக்குறது?

கையேந்தி நின்னாக் கேவலம்; களவாண்டுட்டுப் போனா வீரம்ன்னு அவன் புத்தி சொல்லுது. அவ முந்தானையில எப்பவும் காசு முடிஞ்சு வச்சிருப்பா. முந்தான எங்க இருக்குன்னு மோப்பம் புடிச்சுப் புடிச்சுப் பாக்குறான்; கண்ணுக்குச் சிக்கல. புத்துக்குள்ள இருக்கிற புதையலப் பாம்பு பாதுகாத்துப் படுத்துக் கெடக்கிற மாதிரி முந்தானையச் சுருட்டித் தலயணைக்குக் கீழவச்சு அதுக்கு மேல தலய வச்சுப் படுத்திருக்கா கருவாச்சி. கண்ணுக்குச் சிக்காதது கைக்கு எங்க சிக்கப் போகுது? இப்பப் பெரண்டு படுப்பா அப்பறம் பெரண்டு படுப்பான்னு பய மருகி மருகி நிக்கிறான்.

சீரங்கத்துல ரங்கநாதரு ஒருக்களிச்சுப் படுத்தமாதிரி படுத்தவதான்; ஆடல; அசையல. முந்தானையில முடிஞ்ச காச முழுசா எனக்குக் குடுத்திரு; பாதிய உண்டியல்ல போடுறேன்னு பத்திரகாளியம்மனுக்கும் நேந்துக்கிட்டான்.

அது மூணு தலமொற கண்ட கயித்துக் கட்டிலு. உரிச்ச ஆட்டுக் கொடலு சரியும் பாருங்க... அப்படிக் கயிறு ஒழுகி நிக்கிற கட்டிலு அது. அவன் நேந்தது வீண்போகல; பத்திரகாளியம்மன் பார்வை பட்டிருச்சு. தலகாணிய விட்டுத் தப்பிச்சுக் கயித்துக்கட்டில் ஓட்ட வழி இப்பத் தொங்குதய்யா முந்தான முடிச்சு. அது ஆட ஆட அழகுசிங்கம் ஆவியே ஊசலாடுது.

கட்டிலுக்குக் கீழ தலையக் குடுத்து, கத்திய வச்சு ஆத்தா முந்தானைய அறுத்துப்பாத்தா ரெண்டே ரெண்டு கால்ரூவா ஈன்னு இளிக்குது. ரெண்டு ஒரு ரூவாய எதிர்பார்த்த பய ரெண்டுகால்ரூவாயக் கண்டதும் 'சீ! பிச்சக்காரச் சிறுக்கி'ன்னு கத்துனானோ இல்லையோ, கண்ணுமுழிச்சு எந்திரிச்சுட்டா கருவாச்சி.

''பொழப்பா பொழைக்கிற பொழப்பு... இந்தா இத நீயே வச்சுக்க. நீ செத்தா ஒனக்கு ஒரு நெத்திக்காசு. நான் செத்தா எனக்கு ஒரு நெத்திக்காசு.'' அவ மூஞ்சியிலயே விட்டெறிஞ்சிட்டு விறுவிறுவிறுன்னு வெளியேறிட்டான் அழகுசிங்கம்.

நேரா சலவைக்காரி வீட்டுக்குப் போனான். கழுதை கத்துனா நல்ல சகுனம்ன்னு நெனச்சானோ என்னமோ அத ஓங்கி ஒரு எத்து எத்திக் கத்தவிட்டான்.

10



படிப்பகம்

padippakam

''கரகாட்டம் பாக்கப் போறேன். நல்லத்தாகிட்டக் காசு வாங்கிட்டு வா'' அவள ஏவிவிட்டுட்டுத் திண்ணையில அவ வாங்கி வச்சிருந்த ஊர்ச்சோறு தின்டு உக்காந்திட்டான்.

தெள்ளக் கடஞ்சவ திம்சு. இந்த மொரட்டு முட்டாப்பயலக் கவுட்டுக்குள்ள நொழைக்கக் காலம் பாத்துக்கிட்டிருந்தா; காலம் அவ காலுக்குள்ள வந்து நிக்குது இப்ப.

ஒரு தீக்குச்சி இருந்தாக் கரடிக்கிட்டத் தப்பிச்சுக்கிரலாம். மரமேறத் தெரிஞ்சா புலிகிட்டத் தப்பிச்சுக்கிரலாம். பள்ளத்துல எறங்கிக்கிட்டா யானகிட்டத் தப்பிச்சுக்கிரலாம். ஓடாமத் திரும்பிப் பாக்காம நின்னு நிதானமாப் போனா நாய்கிட்டத் தப்பிச்சுக்கிரலாம். இப்படி எல்லாம் தெரிஞ்சவளுக்கு, காசும் கறித்தண்ணியும் குடுத்தாத்தான் இந்த மொரட்டு முட்டாப் பயகிட்டயிருந்து தப்பிக்க முடியும்ன்னு தெரியாதா?

பச்ச அஞ்சுரூவாயப் பாத்தா பகவானப் பாக்குறமாதிரியிருந்த காலத்துல முழு ரெண்டு ரூவாயத் தூக்கிக் ''கரகாட்டம் பார்ரா மகனே''ன்னு குடுத்துவிட்டுட்டா.

சோத்துல பள்ளம் வெட்டிக் காசுல மூடிப்புட்டா.

●

காலம் நகர நகர அவ காயும் நகருது.

கட்டையன் கூட்டாளிகள வேரோட வெட்டிவிடத் திட்டம் போட்டா திம்சு.

ரெண்டு மூணு வருசத்துல சாதிச்சும்புட்டா.

கட்டையன் கண்ணுல எப்பப்பக் கங்கு தெரியுதோ அப்பப்ப எண்ணெய ஊத்தி எரியவிட்டா.

''மாமா! கூட்டாளியப் பத்திக் குறை சொல்றாளே சிறுக்கின்னு கோவிச்சுக்கிராதிக. ஒங்க பாண்டிப்பய பார்வை சரியில்ல. எப்பவும் என்னியக் கண்ணப் பாத்துப் பேசாமக் கழுத்துக்குக் கீழேயே பாத்து வெறிச்சு நிக்கிறான் பய'' அவன் சீட்டக் கிழிச்சா அன்னைக்கிருந்து.

''ஒங்க ஒலக்கையன் ஒரு கடன்காரப்பய. நீ இல்லாத நேரம் பாத்து வந்து 'காசு குடு காசு குடு'ன்னு குரும்பைய அணில் கடிக்கிற மாதிரி காதோரம் வந்து கறிச் கறிச்சுங்கிறான்.'' அன்னைக்கிருந்து வீட்டுக்குள்ள சேக்கவிடாம ஒலக்கையன வெலக்குனா.

''மாமோய்! எப்பத் தண்ணிமோந்து குடுத்தாலும் இந்தப் பன்னியாம்பேரன் செம்புக்குள்ள கைவிட்டு என் விரலக் கிள்ளாம வாங்குறான் இல்ல.'' அன்னைக்கிருந்து ஓஞ்சு போச்சு அவன் கதையும்.

நடை தளந்து போனாரு சடையத்தேவரு. சாராயமும் ஈரலும் போதும்ன்னு சாஞ்சு கெடக்கான் கட்டையன். அவ 'தோ தோ தோ'ன்னு



படிப்பகம்

கூப்பிட்டதும் அவ கால மோந்து பாக்குற கறுப்பு நாயாகிப்போனான் அழகுசிங்கம்.

அவ வாக்கப்பட்டு வந்து வருசம் ஏழாகியும் பிள்ளை இல்ல; என்னா எவடம்ன்னு கேட்கவும் நாதியில்ல.

●

நல்ல வெயிலு.

சுட்டுக்கெடக்கு சொக்கத்தேவன்பட்டி.

ஈ ஆடல; எறும்பாடல; வேப்ப மரத்துல எல ஆடல.

அகமலையில கட்டிக் குடுத்த மக வீட்டுக்கு, சொக்கத் தேவன்பட்டி வழியாப் போற குப்பணம்பட்டிக் கெழவி ஒருத்தி, கருவாச்சி வீட்டு வேப்பமரத்து நெழல்ல ஒதுங்கி வேர்வையத் தொடச்சு அதே முந்தானையில விசிறிக்கிட்டிருக்கா.

வாழப்பழம் ஒரு கையிலயும் வடை ஒரு கையிலயுமா வாங்கி, இந்த ஊர ஆளவந்த மகாராணி நாந்தானாக்கும்ன்னு திடும் திடும்ன்னு அந்த வழியா எட்டுவச்சுப் போறா திம்சு. குறுகுறுகுறுன்னு அவளையே பாத்தா கெழவி; திரும்பித் திரும்பிக் கெழவியையே பாத்தா திம்சு. படக்குன்னு தலையக் கவுந்து விசுக்குன்னு எட்டுவச்சு வெரசா ஓடி ஒளிஞ்சு போனா. முதுகுத்தண்டுல சிலீர்ன்னு தண்ணியடிச்சமாதிரி வளஞ்ச கூனு நிமிந்து ஒக்காந்துட்டா கெழவி.

யாரோ அசலூர்க் கெழவி... வீட்டுவாசல்ல வேர்த்து உக்காந்திருக்கா. தவிச்ச வாய்க்குத் தண்ணி குடும்போம்ன்னு புளிச்ச தண்ணியக் கொண்டாந்து குடுத்தா கருவாச்சி.

புளிச்சதண்ணிச் சொம்ப வலது கையில வாங்கி வச்சுக்கிட்டு, ''அந்தா போறா பாரு லவுக்க போட்டு... அவ யாரு தாயி''ன்னு கேட்டா கெழவி.

''திம்சு''

''இல்ல ஆத்தா. அவ பேரு பேயம்மா. இந்த ஊர்ல அவளுக்கு என்னா சோலி?''

''ரெண்டாந் தாரமா வாக்கப்பட்டு வந்திருக்கா.''

''ரெண்டாந்தாரமாவா?''

''ஆமா. பிள்ளையில்லாத ஒரு பெரிய வீட்டுக்கு வாரிசு குடுக்க வந்திருக்கா!''

''வாரிசா? கூமுட்டை எப்பிடிக் குஞ்சு பொரிக்கும்?''

''என்னாத்தா சொல்ற?''

padippakam

''ஆமாதாயி! கர்ப்பப்பை இல்லாதவ எப்பிடிப் பிள்ள பெற முடியும்?''

''கர்ப்பப்பை இல்லையா? நெசமாவா?''

''பொய்யா சொல்றேன். அவளுக்குக் கருக்கலச்சவ நானு; கர்ப்பப்பை எரிஞ்சுபோச்சுன்னு சொன்னவ நானு. நான் கும்புடுற மூணுசாமி மேல சத்தியம்''

''நெஞ்சப் புடிச்சு நின்னுபோன கருவாச்சி கெழவியக் கையப் புடிச்சு இழுத்து வீட்டுக்குள்ள கூட்டிட்டுப் போனா.''

கெழவி உள்ளபோனதும் -

அடைக்குது கருவாச்சி கதவு;

அரவமில்லாமக் கமுக்கமாத் தொறக்குது
திம்சோட கடந்த காலக் கதவு.



படிப்பகம்

padippakam



# 36

திம்சு கதைய மருத்துவச்சி சொல்லச் சொல்ல 'திக்குதிக்கு'ன்னு நெஞ்சடைச்சுக் 'குப்பு குப்பு'ன்னு வேர்த்துப் போச்சு கருவாச்சிக்கு.

'யாத்தே' இப்படி ஒரு பொம்பளையா? இவளும் ஒரு பொம்பளையா? ரெண்டு கையிலயும் மார்ல அடிச்சு மல்லாந்து விழுந்துபோனா கருவாச்சி.

படிப்பகம்

புத்தி தெளிஞ்சு எந்திரிச்சுப் பொறுமையா யோசிச்சா. பந்தல்ல தொங்குறது புடலங்காயில்ல பச்சப் பாம்புன்னு பளிச்சுன்னு தெரிஞ்சுபோச்சு அவளுக்கு; பொம்பள வேசம் போட்டு எமராசா புகுந்திருச்சு சடையத்தேவன் வீட்டுக்குள்ளன்னு புரிஞ்சுபோச்சு.

இதுவரைக்கும் இவ என்னென்னா கூத்து நடத்தியிருக்கா? என்னா நடக்குது என்னியச் சுத்தி? நெனைக்க நெனைக்கப் பொறி பறக்குது புத்திக்குள்ள.

ஆமா இந்த அஞ்சாறு மாசமாவே அழகுசிங்கம் பய சரிவர வாரதில்லயே! புத்துல பாம்புமாதிரி எப்பவாச்சும் தலையக்காமிச்சுட்டுப் பொசுக் பொசுக்குன்னு ஓடி ஒளிஞ்சுபோறானே... எங்கபோறான்... எங்க வாரான்? இவ மருந்து மாயம் வச்சிருப்பாளோ மகனுக்கு? ஒண்ணும் புடிபடல.

அப்பப்ப வெள்ளையுஞ் சொள்ளையுமா வாரான். உள்பையில கையவிட்டு ஒண்ணு ரெண்டு தாரான். இந்தாடா ராசா சாப்பிடுன்னா எட்டி மிதிச்சிட்டுப் போறான்.

''அய்யா தங்கம்... புலிவாயில குடியிருக்கிறமாதிரி எதிரிகளோட இருக்கறமடா. ஒன்னிய அடிச்சாக் கேக்க ஆளில்லடா மகனே! ஆளத்தேடிச் சீரத்தேடு. தாய்வழிச் சொந்தத்துல பொண்ணக் கட்டு. மொதலக்கம்பட்டி மொறைப் பொண்ணு செந்துருக்கம் கட்னா மாமனத்தான் கட்டுவேன்னு கட்னசீல அவுக்காமக் கண்ணொழுக நிக்கிறாளாம். அவளக் கட்டிக்க. ஆள்கட்டு உள்ள வம்சமடா. ஒம்மேல எல விழுந்தாலும் தல விழுகுமடா.''

சொல்லித்தான் பாத்தேன். 'சொன்னதுல தப்புமில்ல; சொரக்காய்க்கு உப்புமில்ல'ன்னு ஓடி ஒளிஞ்சுபோனான் பய.

ஏழெட்டு ஊர்கள்ல அலையறனாம்; ஏவாரம் பண்றானாம். எங்கதான் போறானோ? என்ன ஏவாரம் பண்றானோ?

நண்டு கொழுத்தா வளையவிட்டு வெளியேறியாகணுமில்ல. வராமலா போயிருவான்?

பாப்பம்.

ஆனா ஒண்ணு; இனிமே கோளாறாத்தான் பொழைக்கணும் இந்தக் குடிகெடுக்கவந்த சிறுக்கிகிட்ட.

●

கிராமத்து ஊருணிக்கரை இருக்கு பாருங்க, அதப் பொழுது விடிஞ்சும் விடியாம இருள் பிரியிற நேரம் பாக்கணும். இல்ல, பொழுது மசங்கியும் மசங்காம வெயில் அடங்கற நேரம் பாக்கணும்.

padippakam

ஒரு ஊருணியில ஒரு ஊருக்குப் பொழப்பும் இருக்கு; பொழுதுபோக்கும் இருக்கு. எல்லா எடத்தையும் கண்ணு ஓடி ஓடித்தான் பாக்குது; கண்ணு ஒக்காந்து பாக்குறதுக்கு ஒண்ணு ரெண்டு எடம்தான் இருக்கும் ஒரு கிராமத்துல.

ஊருணிங்கறது கண்ணு ஒக்காந்து ஒக்காந்து போற எடம்.

வெயில்தாழ ஒரு ஊருணிக்கரையில நடக்கிற கண்காட்சி இருக்கே... காணக் காணாது கண்ணு ரெண்டும்.

காயப்போட்ட ஒரு வெள்ளச்சீல கொடிய அத்துக்கிட்டு ஆகாய மார்க்கமா வாரமாதிரி கூட்டங் கூட்டமாப் பறந்து வருதுக கொக்குக.

கொளத்த விட்டுக் கோவிச்சுட்டு வார மீனுக்காகப் பட்டாக்கத்தி மூக்க நீட்டிக்கிட்டு அலையுதுக நாரைக.

நான் தின்டது போக மிச்சந்தான் உங்களுக்கின்னு முங்கி முங்கி ஒரு மீனோட எந்திரிக்குது ஒரு ★முக்குளிச்சான்.

ஊருணிக்குள்ளயிருக்கிற கருவேலந்தோப்புல அடைய வந்த குருவிக, குஞ்சுக எண்ணிக்கை கூட்டுல கொறையாம இருக்கக்கண்டு கும்மாளங் கொட்டிக் கூத்தடிக்குதுக.

இன்னைக்கி ★மருக்கைய ஒரு போடு போட்றணும்னு அது பின்பக்கம் மோந்துபாத்துக்கிட்டே தொடுத்துப் போயிக் கெடையில கலகம் பண்ணுது ஒரு கெடா.

நான் சரளக்கல்லுவழி போயிக்கிட்டிருக்கேன்னு சாராங்கத்துக் கெல்லாம் தடதடதடன்னு தகவல் சொல்லுது எங்கேயோ தூரத்துல ஒரு வண்டிச்சட்டம்.

காத்து தன்மேல பறிச்சுப்போற பள்ளத்துலயெல்லாம் மஞ்ச வெளிச்சத்த வாங்கி ஊத்தி ஊத்தி நெப்பிக்கிட்டிருக்கு ஊருணிச் செந்தண்ணி.

ஒத்த ஆளுமட்டும் நடந்து போற ஊருணிக்கரை மேல, அகமலையில வெறகெடுத்து சொக்கத்தேவன்பட்டிபாத்துப் போயிக்கிட்டிருக்கா கருவாச்சி. கையில ரெண்டு வெறும் பையப்புடிச்சு சாமான்சட்டு வாங்க அன்னஞ்சியப்பாத்து எதுக்க வந்துக்கிட்டிருக்கா திம்சு.

வாக்கப்பட்டு வந்த ஏழு வருசத்துக்கப்பறம் மூஞ்சிக்கு மூஞ்சி பாக்கப்போறாக கட்டையன் கட்டித் தீத்தவளும் கட்டையன் கட்டிக்கிட்டு வந்தவளும்.

---

★ தண்ணீர்க்கோழி
★ பெட்டை ஆடு



படிப்பகம்

padippakam

'இதென்னடா இது கடுவன்பூன வருது கரையில'ன்னு நெனச்ச கருவாச்சி ஒதுங்கிரலாம்ன்னு ஓரங்கட்னா. வாரவ கடந்துபோக வசதியும் பண்ணிக்குடுத்தா. தலச்சொம வெறக நட்டுக்குத்தலா எறக்கி அதைக் கருவேல மரத்துல சாச்சு வச்சிட்டு, போற பிடாரி போகட்டுமின்னு மூஞ்சி திருப்பி வழிவிட்டா.

அவளா போவா? தவ்வி ஓடி வந்து வெறகுக்கட்டத் தாங்கிப் புடிச்சுக்கிட்டா.

வாழாவெட்டியாப் போனவளும் வாழவந்தவளும் இப்ப மூஞ்சிக்கு மூஞ்சி கண்ணுக்குக் கண்ணு பாத்து நிக்கிறாக.

கையில இருந்த பையைக் கரையில போட்டுட்டு, வாயில இருந்த வெத்தலையத் 'த்தூ'ன்னு துப்பிட்டு, 'யக்கா'ன்னு கட்டிப்புடிச்சுச் சத்தம்போட்டு அழுக ஆரம்பிச்சா திம்சு.

கருவேல மரத்துல காரியம் பாத்துக்கிட்டிருந்த ரெண்டு கரிச்சான்குருவிக என்னமோ ஒரு அசம்பாவிதம் ஆகப்போகுதுன்னு விசுக்குன்னு பறந்து வெளியேறிருச்சுக.

''யக்கா! ஒன்னிய இத்தன வருசம் கழிச்சு இங்கயா பாப்பேன்? வீடாள வேண்டிய ராசா மகள வெறகு சொமக்க வச்சிருச்சே விதி. ஆனமாதிரி ஒரு புருசன் இருந்தும், புலிமாதிரி ஒரு பிள்ள இருந்தும் வேகாதகாட்ல வெந்து சாகிறதே ஒம் பொழப்பாப்போச்சே. நான் குடிக்கிறது ஓங் கஞ்சி; உடுத்துறது ஒஞ் சேல; படுக்கறது ஓம் பாயி. சக்களத்தி ஆனாலும் நீதான்டி ஏந் தாயி.''

ஒப்பாரிக்கு உண்டான ராகத்த வசனத்துக்கு எசகூட்டி வாங்கு வாங்குன்னு வாங்குறா திம்சு.

வாயத் தொறந்தா அவளுக்குப் பாட்டு வந்திருது . ஆனா வரச்சொன்னாக் கண்ணீரும் வந்திருதே... இவ நீலிக்கு அக்காதான்னு நெஞ்சுக்குள்ள சொல்லிக்கிட்டா கருவாச்சி. அவள லேசா வெலக்கி வெலக்கித் தன்ன விடுவிச்சுக்கிட்டா.

தன்னப்பத்தி எனக்கு ஒண்ணுந் தெரியாதுன்னு இவ இந்த வேசங்கட்டி ஆடுறா. 'எனக்கு ஒன் சரித்திரமே தெரியுமடி சக்களத்தி'ன்னு இவளுக்கு நான் எப்பிடிச் சொல்றது?

பட்டுன்னு ஒரு மின்னலு அவ பொட்டுல அடிச்சு ஓடுச்சு; பளிச்சின்னு கேட்டுப்புட்டா கருவாச்சி.

''நெறைஞ்ச வீட்டுக்காரி அழுகலாமா? கண்ணத் தொடச்சுக்க பேயம்மா''

காதுக்குள்ள பாம்பு கொத்துன மாதிரி கபாலம் செதறிப் போச்சு




படிப்பகம்

அவளுக்கு. கண்ணீரு ஒழுகி இன்னும் காயாத கண்ணுல இப்பத் தீ எரியுது. ஒரு எட்டு பின்னுக்கு வச்சு, சடார்ன்னு சாயப்போனவ தைரியத்தக் கூப்பிட்டுத் தன்னத் தாங்கிப் புடிக்கச் சொன்னா. ஒம் மொத்தப் பொழப்பும் தெரியும்டீ ஆத்தான்னு ஒரே வார்த்தையில அடிச்செறிஞ்சுட்டாளே; இவ கெட்ட சாதிச் சிறுக்கின்னு முடிவுக்கு வந்துட்டா. வெத்தல போட்ட வாயி இப்ப வெளுத்துப்போச்சு; வெத்தல போடாத கண்ணு செவந்துபோச்சு.

''ஏம் பேரு...''

''ஒம் பேருமட்டும் இல்லடியம்மா... ஒன் வம்சமும் தெரியும்; ஒன் வகிசியும் தெரியும்.''

''என்னா தெரியும் ஒனக்கு'' -இப்ப தொனி மாறிப்போச்சு திம்சுக்கு.

''சொன்னாத் தாங்கமாட்ட. வாழ வந்துட்ட... - வாழ்ந்துட்டுப்போ''

''வாழாம...? ஒன்னிய மாதிரி வாழாவெட்டியாப் போயிருவேன்னு பாத்தியா?''

''என்னிய மாதிரி வாழாவெட்டி ஆகமாட்ட. ஆனா வம்சவிருத்தியும் பண்ணமாட்ட.''

''அக்கா நாக்கு என்ன அனுமார் வாலா நீளுது? புருசன் அத்துவிட்ட பெறகு பிள்ள பெத்தவளுக்கு மப்பு எதுக்கு மப்பு?''

''அடியே பேயம்மா. நான் ஒருத்தனுக்கு முந்தி விரிச்சு ஒரு பிள்ள பெத்தவ. நீ மூணு பேருக்கு முந்தி விரிச்சு ஒரு பிள்ளையும் பெறாதவ.''

ஆவிஒடுங்கி நாடி அடங்கிப்போச்சு திம்சுக்கு. காக்கா ஒக்காந்துபோன வேப்பங்கொப்பு மாதிரி திரேகம் ஆடுது.

''இந்தாத்தா கருவாச்சி. மரியாதையக் கெடுத்துக்கிராத. நீயும் நானும் ஒருத்தனுக்கு ஒருபாயில படுத்தவுக; மறந்துராத.

''நிறுத்துடி... ஏலா நிறுத்துடி. நீயும் நானும் ஒண்ணுன்னா சாமி குத்தமாகிப் போயிருமடி. நீ உள்ள இருந்தாலும் கட்டுச்சோத்துல கட்டுன எலி. நான் வெளிய இருந்தாலும் வேப்பமரத்து நெழலு. தாய்ப்பாலும் எருக்கிலம்பாலும் ஒண்ணாயிருமா பேயம்மா?''

எருக்கிலம்பாலுன்னு சொன்னதும் திம்சுக்கு வீரியம் கொறைஞ்சு போச்சு; வெறைச்சுப்போச்சு கைகால் எல்லாம்.

''சொல்லட்டுமா. ஒன் எருக்கிலம்பால் கதையச் சொல்லட்டுமா? ஒன் கர்ப்பப்பைய அழிச்சதும் எருக்கிலம்பால்தான்; நீ ஓம் முதல் புருசன ஊத்திக் கொன்னதும் எருக்கிலம்பால்தான்.''

padippakam

கால் ரெண்டும் கரையில நிக்கல திம்சுக்கு. கருவேல மரத்த முதுகுக்கு முட்டுக் குடுத்துச் சாஞ்சு நிக்கிறா சரிஞ்சு. கருவாச்சி சொல்லச் சொல்லப் படம் படமா ஓடுது அவ பழைய கதை.

●

குப்பணம்பட்டி.

பச்சைச் சீலய விரிச்சுக் காயப்போட்ட மாதிரி கண்ணுக்கு எட்டுனமட்டும் சோளக்காடு.

பேச்சுத் தொணைக்கு ஆளில்லாத கெழவி தானாப் பொலம்பித் தானாச் சிரிச்சுக்கிட்டுப் போறமாதிரி சலசலசலன்னு ஓடுது ஓடைத்தண்ணி.

தாவணி சுத்துன தலவாழ எல மாதிரி ஊரையே பித்துப்பிடிக்க வைக்கிற பதினாறு வயசுப் பேயம்மா, அய்த்தமகன் ஆரியபட்டி சின்னவீரன் மேல ஆசப்பட்டது... ரெட்ட ஆலமர அடித்தண்டுப் பொந்துக்குள்ள ரெண்டுபேருமாப் புகுந்து பகல்பூராக் கதைபேசிப் பாம்பு வெரட்டவும் பயந்து ஓடிவந்தது...

துணி தொவைக்க வந்தவள நீச்சல் பழகித்தாரேன் வாடீன்னு கம்மாக்குள்ள இழுத்து அவளத் தண்ணியில மெதக்கவிட்டுத் தாங்கிப்புடிக்கிறேன்னு அவ தங்க வயித்துல கைவச்சது...

அடிவயித்துல வச்ச கையி அங்கயே நிக்காம மேலயும் கீழயும் போயி வேவு பாத்தது...

அவ 'சீ'ன்னு செல்லக்கோபம் கோவிச்சு ஓடிப் போனது - மறுநாள் தொவைக்க அழுக்குத்துணி இல்லாமப் போகவும் தொவைச்சுக் காய்ஞ்ச துணிகளையே கொடத்துக்குள்ள அமுக்கிக் கம்மாக்கரைக்கு ஓடிவந்து அவன் வலதுகைய எடுத்துத் தன் வயித்துக்கடியில வச்சுக்கிட்டது...

அப்பறம் குளிக்கையில ரெண்டுபேரும் அழுக்காப்போனது...

'இவ அப்பன் ஆத்தா இல்லாதவ, கஞ்சிக்கில்லாத அண்ணன் ஆதரவுல காலந்தள்ளுறவ, இவ வெத்துச்சிறுக்கி - வெறுஞ்சிறுக்கி - 'இவள மறந்துர்றா மகனே'ன்னு கொளத்தடி வயக்காட்ட எழுதி வாங்கிட்டுச் சின்னவீரனுக்கு அவுக அப்பன் தும்மக்குண்டுக்காரியக் கட்டிவச்சது...

அப்பறம் பேயம்மா வாயும் வயிறுமா நின்னது...

பொட்டுலுபட்டிக் கம்மாக்குள்ள எருக்கிலம்பால் வச்சு மருத்துவச்சி முனியம்மா அவ கருவக் கலச்சது...

அந்த வேக்காடு தாங்காமக் கர்ப்பப்பையும் வெந்துபோனது...



படிப்பகம்

padippakam

ஆம்பள வர்க்கத்துமேலயே அன்னைக்கிருந்து அவ வம்மம் வச்சது...

காசுதாண்டா கேட்டீக காசு... சம்பாரிச்சுக் காமிக்கிறன்டான்னு தீட்டுச் சீல மேல அவ சத்தியம் பண்ணுனது...

அப்பறம் கீழக்குடி மிராசுதார் சொட்டையத்தேவருக்கு மூணாந்தாரமா வாக்கப்பட்டது...

மேல் வெளையாட்டோட கெழவன் கவுந்தடிச்சுப்படுத்துக்கிர இவ அப்பப்ப லேசா அத்துமீறப் பாத்தது...

ஒன்னியக் காணாப் பொணமாக்கிப்புடுவேன்னு மிராசுதார் அவளக் கண்டிச்சது...

கிழவனக் காலிபண்ண இவ காலம் பாத்து நின்னது...

சோழவந்தான் வயக்காட்டை வித்து வீட்ல பெரும்பணம் வச்சிருந்த அன்னைக்கு அவரு காதுல எருக்கிலம்பால் ஊத்திக் கொன்னுபுட்டு, தானும் மாரடிச்சு அழுதுட்டுப் பணத்தோட வெளியேறி அண்ணன்வீட்ல அதக் குடுத்து வச்சிட்டு, பின்னத்தேவன்பட்டிப் பெரியத்தா வீட்டுக்கு ஓடி ஒளிஞ்சுபோனது...

அங்க கட்டையன் அவளப்பாத்து ஆசப்பட்டுக் கல்யாணம் பண்ணிக்கிட்டது...

இந்த ஏழு வருசத்துல நான்தான் கண்ணகின்னு ஊரையே நம்ப வச்சது...

எல்லாம் அவ கண்ணுக்கு முன்னுக்க ஒண்ணொண்ணா ஓடி மறையுது; அவ கனாக்கண்டு நிக்கிறது கருவாச்சிக்கும் தெரியுது.

''யாத்தா பேயம்மா! கருவேலமரத்துல கட்டையச் சாச்சு நிக்கிறவளே! இதெல்லாம் இந்த ஊர்ல எனக்குமட்டும்தான் தெரியும். என்னிய வரிவரியா வகுந்தாலும் ஒரு ஆளுக்கும் இந்த உண்ம சொல்லமாட்டேன்; பயப்படாத. பொழைக்க வந்தவ. பொழைச்சுட்டுப் போ. ஆனா ஒன்னியக் கையெடுத்துக் கும்பிடறேன் தாயி... பொழைக்க விடு. கெழவனக் கட்டிலோட சேத்துக் கட்டிப்புட்ட. புருசன முந்தானையில முடிஞ்சு மூலையில வச்சுக்கிட்ட. சடையத்தேவன் வீட்டுத் தானியத்த விட்டெறிஞ்சு உள்ளூருக் கோழிகள எல்லாம் உன் வீட்டு வாசல்ல குமிச்சிட்ட. போ; பொழச்சுப்போ. ஆனா எம் பிள்ளயமட்டும் எங்கிட்டயிருந்து பிரிச்சிராத.''

கையெடுத்துக் கும்பிட்டா கருவாச்சி. கலங்கி ஒழுகுது கண்ணு அவளுக்கு. முந்தானைய எடுத்துக் கண்ணத் தொடைக்கப்போனா... அதுல ஒட்டியிருந்த இண்டம் முள்ளு ஒண்ணு கிழிச்சிருச்சு இடது கண்ணுக்குக் கீழ.





படிப்பகம்

padippakam

ஒரு பேச்சும் பேசாம வெறிச்ச பார்வை வெறிச்ச மேனிக்கு நிக்கிறா திம்சுங்கிற பேயம்மா.

கத தெரிஞ்சு போச்சு இவளுக்கு. என்னைக்கிருந்தாலும் காட்டிக்குடுத்திருவா. கருவறுக்க வேண்டிய கணக்குல இவளையும் சேத்துக்கிர வேண்டியதுதான். தீரயோசிச்சு முடிவுபண்ணிட்டா திம்சு.

''என் கத எல்லாமே தெரியுமா உனக்கு.'' உடம்பு அசையாம ஒதடு மட்டும் அசையுது அவளுக்கு.

''தெரியும் ''கண்ணத் தொடச்சுக்கிட்டே சொல்றா கருவாச்சி.

''ஒனக்குத் தெரியாத ஒரு கதையும் சொல்லட்டுமா?''

பதறிப்போன கருவாச்சி ''என்னா கதையடி ஆத்தா''ன்னு கேட்டா வெறகுக்கட்டத் தாங்கிக்கிட்டே.

''அழகுசிங்கம் பொண்டாட்டி இப்ப முழுகாம இருக்கா.''

வெறகுக் கட்ட விட்டுட்டு ரெண்டு கையையும் நெஞ்சிலடிச்சு 'யாத்தே'ன்னு அலறினா கருவாச்சி.

ஓடி உருண்டு ஊருணியில விழுந்து போச்சு வெறகுக்கட்டு.

சத்தம் கேட்டுக் 'கர்ர புர்ர கர்ர புர்ர'ன்னு கத்திக்கிட்டே பறக்குதுக கரையோரத்து நாரைக.

பயத்தில தவ்வி ஓடி ஒரு தண்ணிப்பாம்பு வாயில விழுந்து போச்சு தவக்கா.



படிப்பகம்



# 37

**கா**ட்டாறு மாதிரி கட்டுக்கடங்காமத் திரிஞ்ச அழகுசிங்கம் திம்சு வெட்டுன பள்ளத்துல போய் விழுந்ததுல ஆச்சரியமில்ல.

அனாதி காலந்தொட்டுப் பள்ளத்துக்கும் வெள்ளத்துக்குமான ஒப்பந்தம் இயற்கையாப் பாத்து ஏற்படுத்துனதா இல்லையா?

ஒரு கிராமத்துல வெள்ளிந்தியா அலஞ்சு திரியிற வெடலப் பயலுக்கு லட்சியம்ன்னு என்ன பெரிசா இருந்திரப் போகுது?

வெள்ளிக்காசு - நெல்லுச்சோறு - மல்லிகப்பூவு - இந்த மூணும் பத்தாதா?

அழகுசிங்கத்துக்கு இந்த மூணுக்கும் பஞ்சமில்லாதபடிக்கு ஒரு ஏற்பாடு பண்ணிப்புட்டா திம்சு.

சித்தெறும்பக் கொண்டுபோயிச் சீனிப்பொட்டிக்குள்ள ஒளிச்ச மாதிரி அவனுக்கு வசதிஉண்டாக்கி வளச்சுப் போட்டுட்டா.

கடந்த ரெண்டு மூணு மாசமாவே அந்திமசங்க ஆடுமாடு தொழுவடைய சலவைக்காரி வீட்ல சந்திச்சுக்கிட்டாக நல்லத்தாளும் மகனும்.

வெல்லம் போட்டு இடிச்ச எள்ளுத் தொக்குன்னா வீட்ட அடகு வச்சிருவான் பய. அது தெரியும் அவளுக்கு. இடிச்சுக் கொண்டாந்த எள்ளுத் தொக்க உருட்டி உருட்டி உருண்ட புடிச்சு ஊட்டிவிட்டுக்கிட்டே ஒருநாள் சொன்னா...

''அய்யா அழகுசிங்கம்! எம் புருசன் மகனே! நல்ல கோளாறு நாலு சொல்றேன் கேளப்பா. கருவாச்சி ஒன்னியப் பெத்தெடுத்தவப்பா. நான் ஒன்னியத் தத்தெடுத்தவப்பா. கோட்டையில கொடிகட்டி ஆளப் பெறந்த மகராசன் நீயி; குண்டித் துணிக்கு அலையலாமா...? அப்படி ஒன்னிய அனாதிக் காட்ல விட்ருவனா...? விட்டுரமாட்டேன். நீ இருக்க வேண்டிய ஊரு சுண்டெலிக்குக்கூட சோளக்கருது இல்லாத இந்தச் சொக்கத்தேவன்பட்டியா? கெழக்குச்சீமைக்குப் போ. குப்பணம்பட்டியில ஓம் மாமன் வீட்டுல-அதான்டா மகனே என் அண்ணன் வீட்ல - போயிஇரு. அப்பறம் பாரு ஓம் பொழப்ப. பருத்தி வேட்டியாக் காய்க்கும். பாறாங்கல்லு பூவாப்பூக்கும்.''

எள்ளுருண்டைய ஊட்டிவிட்டுக்கிட்டேயிருந்தவ செத்தவடம் அவன் வாயில வச்ச வெரல வெளிய எடுக்கல. அவ வச்ச காரியம் பலிச்சிருச்சு; கறிச்சுன்னு கடிச்சுப்பட்டான் பய.

அவ 'விசுக்'குன்னு வெரல எடுத்து ஒதற 'யாத்தே'ன்னு அவன் பதறிப் போனான்.

''ஒண்ணும் ஆகாதுடா மகனே. நீ கடிச்சாலும் வலிக்காது; அடிச்சாலும் ஒறைக்காது ஆத்தாளுக்கு.

நான் போகச் சொல்ற எடத்துக்குப் போவியா?''

''எங்க போகச் சொன்னாலும் போவேன்''னான் இன்னொரு உருண்டைய முழுங்கிக்கிட்டே.

அவனுக்கு ஊட்டிவிட்டே உசுர வாங்குறா; எள்ளுருண்டைக்குள்ளயே பொதைக்கிறா.

''கைகால் வெளங்காமக் கட்டில்லயே கெடக்குறான் எங்க அண்ணன்;அதான் ஒன் மாமன். எங்க மதினி பாவம் ஒரு அரைக் கிறுக்கி. கஞ்சிகாச்சி ஊத்தவே பெறந்தவ. அடுப்பாங்கரையில சமைஞ்சு கரிச்சட்டிக்கு வாக்கப்பட்டவ. அவளுக்கு ஒரே ஒரு மக இருக்கா மகனே. பேரு

padippakam

பட்டுக்குஞ்சம். அவ வயசுல நானு அவ மாதிரி இருந்தேன். என் வயசுல அவ என்னமாதிரி இருப்பா. செந்துருக்கம் வச்ச செவ்வந்திப் பூவு அவ. மொறைன்னு பாத்தா ஒனக்கு மொறப்பொண்ணு மாதிரிதான். ஒத்த மாட்டு வண்டி ஒண்ணு வச்சிருக்கான் ஒம் மாமன். பட்டிதொட்டியெல்லாம் போ. பருத்தி, கடல, தக்காளி, கெழங்கு வாங்கு. சந்தை பெருத்த தேசமடா மகனே கெழக்குச்சீமை. திங்கக்கிழமை தும்மக்குண்டுச் சந்தை - செவ்வாக்கிழமை பெருங்காம நல்லூர்ச் சந்தை - புதங்கிழமை உசிலம்பட்டிச் சந்தை - வியாழக்கிழமை வாலாந்தூர்ச் சந்தை - வெள்ளிக்கிழமை விக்கிரமங்கலம் சந்தை - அஞ்சுநாள் சந்தையிலயே அள்ளிக்குமிச்சுப்புடு காசை. வாலாந்தூர்ச் சீமைக்கு வலதுகால எடுத்து எட்டு வையி. இந்தா! என் காணிக்கையா இந்தத் துட்ட வையி.''

நூறு வெள்ளிக்காசை அவுத்து அவன் கையில 'கல கல கல'ன்னு கொட்டவும் 'பொல பொல பொல'ன்னு அழுது பூரிச்சுப்போனான் பய.

போனான் - பட்டுக்குஞ்சத்தப் பாத்ததும் சித்தப்பிரமையாகி வாய்பௌந்து நின்னான். வாய் வழியா ஈ போகுது. அவன் கண்ணு வழியா உயிர் போகுது. ஆத்தா மாதிரி பொண்ணு வேணும்ன்னு வினாயகன் தேடினான்; கெடைக்கல; ஆத்தோரமா உக்காந்து போனான். சின்னத்தா மாதிரி பொண்ணு வேணும்ன்னு இவன் நெனச்சான்; சிக்கிருச்சு.

மூணேமாசத்துல ஆனையூர் மீனாட்சியம்மன்கோயில்ல மேள தாளமில்லாமத் தாலிகட்டிப்புட்டான். 'வீட்டோட மருமகனாயிருந்து சா...' விதியெழுதிருச்சு அவன் தலையில.

கல்யாணமாகிப் பட்டுக்குஞ்சத்துக்கு மொதத் தீட்டே வரல; முழுகாமப் போனா.

எல்லா ஆம்பளைகளையும் செலவுகணக்குல எழுதிட்டு அழகுசிங்கத்த மட்டும் வரவு கணக்குல எழுதணுங்கிற திம்சு கணக்கு தப்பல. ஒரு நாய் திங்கிற சோத்தத் தின்னுட்டு நாலாளு வேல செய்யிற சீவாத்தி இவனப்போல வாய்க்குமா? ஒரே அமுக்கா அமுக்கிப்புட்டா.

●

அழுதே வத்திப்போனா கருவாச்சி. அன்னந்தண்ணி செல்லல; அழுதகண்ணு மூடல. இவள நெனச்சே கொல பட்டினியாக் கெடக்கான் கொண்ணவாயன். கனகமும் பவளமும் அவ தலமாட்ல வச்சுட்டுப்போன கஞ்சியில பூன நக்கித் தின்டது போக மிச்சத்தக் கோழி கொத்தித் தின்டுக்கிட்டிருக்கு.

''ஏண்டா ராசா இப்படிப் பண்ணின? என்னடா கொற வச்சேன் ஒனக்கு? ஓம்மேல என் சுண்டு வெரல் பட்டிருக்குமா? ஒரு சுடுசொல் சொல்லியிருப்பனா? புழுக்கச்சோளம் வாங்கி நான் கஞ்சிகாய்ச்சிக்கிட்டு ஒனக்கு அரிசி வாங்கி ஆக்கிப் போடலையா? களை யெடுக்கப்போயி



படிப்பகம்

padippakam

செம்புழுதியில பெரண்ட சீலய நான் கட்டிக்கிட்டு ஒந் துணிய வெள்ளாவிக்குப் போட்டு வெளுத்து வாங்கி வைக்கலையா? கூலிக்கு வந்த கேப்பையில அரைமரக்கா வித்து ஒனக்கு அதிரசம் வாங்கித் தரலையா? நான் இத்த சிறுக்கிதான்; எலும்பு தேஞ்சு போனவதான். பிச்சக்காரியா இருந்தாலும் ஒன்ன ராசா மாதிரி வளத்தனடா. களையெடுக்கப் போனாலும் ஒங்கிட்டச் சொல்லிட்டுப் போவேனடா… நீ கல்யாணம் முடிச்சதையே சொல்லாமப் போயிட்டியேடா.''

மகனையும் மருமகளயும் 'போயிப் பாரு'ன்னு பெத்தமனசு கழுத்தப் புடிச்சுத் தள்ளுது. அவன் வந்தாலும் 'சேக்காதடி'ன்னு வைராக்கியம் காலப்புடிச்சு இழுக்குது.

நெனச்சு நெனச்சு அழுதா; நெத்தியச் சுவர்ல தேச்சுத் தேச்சு அழுதா. கஞ்சி தண்ணி குடிக்காம, காயப்போட்ட மூங்கி மாதிரி ஒட்டி ஒலந்து போனா. அவ கழுத்தாங்குழியில இருந்த நெஞ்செலும்பு ரெண்டும் துருத்தி நிக்கிதுக தோலு சுருங்கி; சதை எறங்கி. ஒறங்குன்னு சொல்லுது ஒடம்பு; ஒத்துழைக்க மாட்டேங்குது கண்ணு. ஒறக்கம் வராம உருண்டு பெரண்டு கெடந்தவ நடுச்சாமத்துல எந்திரிச்சு உக்காந்துட்டா இத்த போர்வைய எறிஞ்சுட்டு.

உள் வீட்டுக்குள்ள போனா. அடுக்குப்பானைய ஒவ்வொண்ணா எறக்கி மூணாம்பானையத் தெறந்தா. அதுலயிருந்து ஒரு பொருள் எடுத்தா. எடுத்த கை நடுங்க அதைத் தொட்டுத் தொட்டுப் பாத்தா. பெறகு மூக்குக்கிட்ட வச்சு மோந்து மோந்து பாத்தா. அவ நெனச்ச வாசன அடிச்சிருச்சு. எடுத்த எடத்துல அந்தப் பொருள வச்சுட்டு ஆனந்தமா அழுதிட்டு வந்து படுத்துக்கிட்டா.

அது வேறொண்ணுமில்ல. அனாதிக் குடிசையில அழகுசிங்கத்த பெத்துப் போட்ட அன்னைக்கு அவன் தொப்பூழ்க்கொடிய அறுத்திட்டு அவ பத்திரமா வச்சிருக்காளே…

அந்தப் பண்ணருவா.

●

விடிய்ய எந்திரிச்சா. சாணிகரைச்சு வாசத் தெளிச்சா. வெளக்கமார எடுத்தா. சல்லுச் சல்லுன்னு கூட்டிப் பெருக்கிக் குப்பை தள்ளுனா. காடி ஒழுங்குபண்ணிக் கட்டுத்தொறை கழுவுனா. கொடமெடுத்துக் கழுவிக்குடுத்துக் கொண்ணவாயனத் தண்ணிக்கனுப்புனா.

பால் பீச்ச உக்காந்துட்டா. சட்டுச் சட்டுன்னு காம்புல தண்ணியடிச்சு, தண்ணியடி தாங்காம வெளியேறுன ஒரு உண்ணிய நசுக்கி, வெண்ணெ தடவி நாலு காம்ப உருவிவிட்டு, மொதப்பால் பாத்திரத் தூர்ல விழுகிற 'சொர் சொர்' சத்தத்துல அவ சொக்கி நிக்க, ''அழகுசிங்கம் வீடு இதானே''ன்னு கேக்குது அதிகாரமான ஒரு ஆம்பளக்குரல்.

பீச்சுன ஒரு கைப்பால அப்படியே ஒரு ஓரமா வச்சுட்டு தெரச்சுவிட்ட சீலய எறக்கிவிட்டு மாராப்ப ஒழுங்குபண்ணி, முந்தானைய எடுத்து மூஞ்சி துடைச்சுக்கிட்டே வாசப்பக்கம் வந்துபாத்தா.



படிப்பகம்

ஊர்ப்பெருசுகளோட ஆணும் பொண்ணுமா இருபது முப்பது தலைக கூடி நிக்கிதுக. அதுல ரெண்டே ரெண்டு பேர்தான் அசலூர் ஆளுக. ஒருத்தன் அன்னஞ்சித் தலையாரி அமாவாசி. இன்னொருத்தன் ஆளு அடையாளம் புடிபடல. அவ வாங்கன்னு வீட்டுக்குள்ள கூப்பிட்டும் வராம வாசல்லயே நிக்கிது வந்த சனம்.

''விடிய்ய என்னாப்பா இத்தன பேரு... வெவரம் சொல்லுங்க'' கருவாச்சி பதறி நிக்கிறா.

மருகிமருகி அன்னஞ்சித் தலையாரி ஆரம்பிச்சான்.

''யாத்தா! வந்திருக்கிறவரு வாலாந்தூர்த் தலையாரி மொக்கச்சாமி. ஒரு ★தாவா விசயமா நம்ம வீட்டுக்கு வந்திருக்காரு.''

''என்னாப்பா தாவா? சொன்னாத்தானே தெரியும்'' அடித் தொண்டையில கேக்குறாரு இருளப்பக் கோடாங்கி.

''இது சொக்கத்தேவன்பட்டிதான?'' வாலாந்தூர்த் தலையாரி வெறைப்பாக் கேக்குறாரு.

''சொல்லியா தெரியணும்... சொக்கத்தேவன்பட்டிதான்.''

''காளியம்மன்கோவில் தெருவு... கதவு எண் பன்னண்டு இதானே? ''

''ஆமா... அதுக்கென்ன...? ''

''இந்த வீடு குப்பணம்பட்டி சோலமலத்தேவருக்குக் கிரயமாயிருக்கு. உரியவுக வீட்டக் காலி பண்ணிக் குடுக்கணும். அனுப்ப வேண்டிய ஆளுக அனுப்பி அதிகாரத்தோட வந்திருக்கேன்.''

கருவாச்சி நெஞ்சுல கைவச்சு நிக்கமுடியாமாக் கதவுல சாஞ்சு சரிஞ்சுபோனா.

ஊருக்கே ஒண்ணும் புரியல. கசமுசகசமுசன்னு சாதி சனத்துக்குள்ளயே சலம்பலாகிப் போச்சு.

''இதென்னாப்பா இது. மொட்டைத் தலைக்கும் மொழங்காலுக்கும் முடிச்சுப் போட்ட கதையாவுல்ல இருக்கு: சொக்கத்தேவன்பட்டி எங்க இருக்கு? குப்பணம்பட்டி எங்க இருக்கு? எவ வீட்ட எவன் எழுதி வாங்கறது?''

வந்த தலையாரி மேல வள்ளுன்னு விழுந்தாரு காவக்காரச் சக்கணன்.

தலையாரி ஒரு பனங்காட்டு நரி. இந்தச் சலசலப்புக்கெல்லாம் அஞ்சல.

''அய்யா கோவிக்காதீக. அழகுசிங்கம்கிறது யாரு?''

''ஆமா எங்கூருப் பயதான். கருவாச்சி மகன்தான்.''

''கட்டையன் மகன்னு சொன்னாகளே...''

---

★விவகாரம்

padippakam

''ஆமா அப்படியும் சொல்லலாம்'' எரிச்சலா வந்துச்சு ஒரு சத்தம்.

''சிறுகச் சிறுக அப்பப்ப அழகுசிங்கம் வாங்குன கடனுக்காக இந்த வீட்ட, சோலைமலைத்தேவருக்கு அவரு கிரயம் பண்ணிக்குடுத்திட்டாரு.''

''மீனாட்சியம்மன் கோயில்கூட எம்பேர்ல இருக்குன்னு எந்தப் பிச்சைக்காரனும் சொல்லிக்கிரலாம். ஆதாரமிருக்காப்பா?''

''சிந்துவம்பட்டியில பதிஞ்ச பத்திரத்தோட வந்திருக்கேன்; படிக்கிறேன். கேளுங்க.''

''பிரமதூத வருசம் புரட்டாசி மாசம் 17ஆந் தேதி பெரியகுளம் தாலுகா அன்னஞ்சி கிராமம் சொக்கத்தேவன் பட்டி காளியம்மன் கோவில் தெருவில் கதவு எண் பன்னிரண்டில் குடியிருக்கும் கட்டையத்தேவர் மகன் அழகுசிங்கமாகிய நான், மதுரை ஜில்லா உசிலம்பட்டி தாலுகா வாலாந்தூர் கிராமம் குப்பணம்பட்டியில் குடியிருக்கும் பெரிய மாயத்தேவர் மகன் சோலைமலைத் தேவருக்கு எழுதிக் கொடுத்த கிரயப்பத்திரம். என் வியாபாரத்துக்காகவும் சொந்தச் சிலவுகள் மற்றும் சில்லறைக்கடன் தீர்ப்பதற்காகவும் தங்களிடம் நான் வாங்கிய மொத்தப்பணம் ரூ 240 (இருநூற்றி நாற்பது) க்காக எனக்குப் பூர்வீகப் பாத்தியப்பட்ட நான் அனுபவித்து வரும் அடியிற்கண்ட வீட்டை நான் தங்கள் பெயருக்குக் கிரயம் செய்து கொடுத்துவிட்டேன். இது முதல் அடியிற்கண்ட வீட்டை தாங்களே சர்வ சுதந்திரமாய் ஆண்டனுபவித்துக் கொள்வீர்களாகவும்.''

தலையாரி படிச்சு முடிச்சதும் ஒண்ணும் பேசல ஒருத்தரும்.

தரையோட சரிஞ்சு உரலக் கட்டிப்புடிச்சுத் தம்பாயமில்லாமக் கெடந்தவள ஓடிவந்து தூக்குறாக கனகமும் பவளமும்.

''நாளைக்கே காலிபண்ணுங்கன்னு நாங்க சொல்லல. கெடு கேட்டாக் குடுக்கச் சொல்லிக் கிரயதாரர் உத்தரவு.''

பத்திரத்த வாங்கி உத்து உத்துப் பாத்து உண்மைதானான்னு சோதிச்சாக ஊர்ப் பெருசுக.

அது அழகுசிங்கம் கையெழுத்துதான்னு உறுதி செஞ்சான் கூடப்படிச்ச ஒருத்தன்.

''வீட்ட விட்டு ஓடிப்போயிக் கல்யாணம் முடிச்ச பய வீட்டையும் வித்துப்புட்டானேப்பா.''

''கடைசிக்காலத்துல ஆத்தாளுக்குக் கஞ்சி ஊத்தலேன்னாலும் நெஞ்சுல ஏறி மிதிக்காம இருந்திருக்கலாமில்ல.''

அதெல்லாம் காலி பண்ண முடியாது. வாங்குனவனயும் வித்தவனயும் வரச் சொல்லுங்கப்பா.

''பத்துரூவாப் பத்திரத்துல பதிஞ்சதுக்கப்பறம் விடமாட்டேன் வீட்டன்னா விடுமா சட்டம்?''





படிப்பகம்

சிதறிக்கிடந்த ஊரு சேந்து குமிஞ்சுபோச்சு கருவாச்சி வீட்டு வாசல்ல.

''கருவாச்சி வீட்ட விட்டு வெளியேறப்படாது''ன்னு ஒரு கூட்டமும், ''வேற வழியில்லப்பா வெளியேறித்தான் ஆகணும்''ன்னு ஒரு கூட்டமும் முட்டிமோதி நிக்க - 'டங்கு டங்கு டங்கு'ன்னு எட்டுவச்சுக் கூட்டத்த வெலக்கி வாரா திம்சு.

அதுவரைக்கும் மொசப் புடிக்கிற நாய்க்காது மாதிரி வெடச்சு நின்ன வாலாந்தூர்த் தலையாரி அவளக் கண்டதும் தண்ணிக்கு அலையிற நாய் நாக்கு மாதிரி தொங்கிப்போனான்.

''யப்பா! வாலாந்தூர்த் தலையாரி... எந்த ஊர்க்காரன் எழுதி வாங்கறது எங்கக்கா வீட்ட? எம் மகன் வாங்குன கடன நான் அடைச்சுடுறேன். ஒங்க சோலமலத்தேவங்கிட்டச் சொல்லி எம்பேருக்கு எழுதிக் குடுக்கச் சொல்லு. காலம் போற கடைசிவரைக்கும் என் வீட்லயே இருந்துட்டுப் போறா எங்க அக்கா.''

கருவாச்சிய ஒரு கீழ்ப்பார்வ பாத்து உதடுகடிச்சு உசுப்பேத்துறா திம்சு. கொழுப்பெடுத்து நிக்கிறவளக் குறுகுறுன்னு பாத்தா கருவாச்சி. 'நீ குடியிருக்கிற வீடே ஒனக்கு நான் போட்ட மடிப்பிச்சைதானடி' கண்ணுல வந்து சொல்லுது திம்சு திமிரு. 'சுடுகாட்ல போயிக் குடியிருப்பாளே தவிர நீ போட்ட பிச்சையில எச்சிப் பொழப்புப் பொழைக்க மாட்டாடி கருவாச்சி' அவ நெனைக்கிறது வரிவரியா ஓடுது அவ கண்ணுமுழியில.

கொடத்துல தண்ணி சொமந்து வந்த கொண்ணவாயன் என்னமோ ஏதோன்னு பதறிக் கூட்டத்த வெலக்கி வீட்டுக்குள்ள வந்தான்.

எந்திரிச்சா கருவாச்சி.

புடுங்குனா கொண்ணவாயன் கொண்டுவந்த கொடத்த.

ஊத்துனா தண்ணியத் தலவழியா.

சடைசடையாத் தண்ணி ஒழுக தலையாரியப் பாத்துக் கேக்குறா: ''கிரயம் வீட்டுக்குமட்டுமா? நாங்க ஆண்டு அனுபவிச்ச பொருளுக்கும் சேத்தா?''

''வீட்டுக்கு மட்டுந்தானாத்தா.''

ஈரம் சொட்டச் சொட்ட வீட்டுக்குள்ள போனா. அம்மிக்கல்லு - குழவி - அடுக்குப்பான - அருவாமண ஒவ்வொண்ணாத் தூக்கித் தெருவுல வச்சா.

ஊர்ல பாதி 'ஓ'ன்னு அழுகுது.

''மாடுகளக் கழத்தி வெளியேத்துரா மகனே''

ஒண்ணும் புரியாமப் புத்தி மாறிப்போயி, பசுமாடு கன்டு ரெண்டையும் கையில புடிச்சு அழுதுவாரான் கொண்ணவாயன்.

padippakam

''ஓம்பொழப்பு இப்படி ஆகிப் போச்சே''ன்னு கத்திக் குமிக்கிறாக கனகமும் பவளமும்.

மகனுக்கு வீட்டக் காத்துக் குடுக்கணும்ன்னு சுடுகாட்டுக்கு ஓடிவந்து கொள்ளிவச்சா கருவாச்சி. ''ஆத்தாளுக்கு உசுரோட கொள்ளி வச்சுட்டானேப்பா ஓடிப்போன உதவாக்கரைப் பய.''

''ம்மா''

வாசப்படியக் கடந்து போற பசுமாடு கத்துது பாவம் கருவாச்சிக்கும் சேத்து.



படிப்பகம்

padippakam



# 38

"**வீ**டு பறிபோயிருச்சே; வெறுஞ் சிறுக்கி ஆயிட்டமே; ஒண்ட எட மில்லையே; ஒதுங்கக் குடுசு இல்லையே; இதுக்கு மேல இம்சப்பட இன்னும் எந்தலையில என்னென்ன எழுதியிருக்கியோ கடவுளே"ன்னு தலைய விரிச்சுப் போட்டு ஒப்பாரி வச்சு அழுது ஓஞ்சு போகல கருவாச்சி.

கனகம் வீட்டுல படுத்திருக்கிறவ மோட்டுவளையப் பாத்து மொனங்கிக் கிட்டே இருக்கா:

படிப்பகம்

padippakam

''எத்தன நாளைக்குச் சோதிப்பியோ சோதிச்சுக்க சாமி. வீட்டத்தான புடுங்கிக்கிட்ட; புடுங்கிக்க. கோயில் இல்லாட்டி சாமி இல்லேன்னு போயிருமா? வீடு இல்லாட்டி நான் இல்லேன்னு போயிருவேனா? வீடுன்னா என்னா? எல்லாரும் கடைசியா விட்டுட்டு வெளியேறப் போற ஒரு எடம். ஒடம்பக் காலிபண்ணிட்டு உசுரே போயிரப் போகுது ஒரு நாளைக்கு. ஒரு வீட்டைக் காலி பண்ணிட்டு வெளிய போறப்ப மட்டும் மசமசன்னு அழுது ஏன் மண்ட காயணும்? ''

இன்னொண்ணும் புத்தியில ஓங்கி ஒறைக்குது அவளுக்கு.

பூமியைத்தான் மனுசன் தம் பேர்ல எழுதிக்கிர்றானோ ஒழிய, பூமி தன்மேல மனுசன் பேர என்னைக்காச்சும் எழுதி வச்சிருக்கோ? இதுல என் வீடு என் காடுங்கிறதெல்லாம் முதல்போட்டு வாங்கி வச்ச முட்டாத்தனமா இல்லையா? இப்ப நீ இருக்கிற வீடு கொஞ்ச காலத்துக்கு முன்னுக்க ஒன்னதா? இல்ல, ஏழேழு தலமொறைக்கும் ஒனக்கோ ஒங் குடும்பத்துக்கோ இருக்கப் போகுதா? இது ஒரு சத்திரம். வந்து போற நாமெல்லாம் வழிப்போக்கருக. சத்திரம் சொந்தமாகுமா சாலையில போறவனுக்கு?

வீடு மாறி வீடு போறப்ப அது நல்ல வீடு இது கெட்ட வீடுங்கிறாகளே... நெசமா? எல்லா வீட்டுக்கு மேலயும் மழை விழுந்திருக்கு. எல்லா வீட்டுக்குக் கீழயும் ஒரு பொணம் கெடந்திருக்கு. வீடுகள்ல நல்லது - கெட்டது; ஒன்னது - என்னதுங்கிறதெல்லாம் வெறும் மனப்பெரட்டு.

●

ஊர் எல்லையில மடமடமடன்னு குடிசை ஒண்ணு தயாராகுது கருவாச்சிக்கு.

ஊரே ஒத்தாசை பண்ணக் குடிசை கட்டுறானய்யா கொண்ணவாயன். ஊர் மந்தையில எல்லா வீட்டு ஆளுகளுக்கும் சாணி கொட்ட எடம் ஒதுக்கியிருப்பாக. முக்கிமுக்கி அளந்தாலும் மூணு செண்டுதான் இருக்கும். அது பரம்பரை பரம்பரையா அவுகவுகளுக்குப் பாத்தியப்பட்டது.

அந்த மந்தையில கருவாச்சிக்குண்டான சாணிக்குழியில குடிசை போடுறதுன்னு முடிவாகிப்போச்சு.

மம்பட்டி எடுத்தான் கொண்ணவாயன். சரசரசரன்னு செடி செத்தையெல்லாம் செதுக்கி எறிஞ்சுட்டான். மம்பட்டி வச்சே சொரண்டிச் சொரண்டிப் பதினாறு மொழ நீளத்துல பத்தடி அகலத்துல அரைச்சாண் பள்ளத்துக்கு அஸ்திவாரமும் தோண்டிப்புட்டான். சல்லிக்கல்லும் சரளைக்கல்லுமாப் போட்டு அதை நெப்பி, கடப்பாரைக்கவுண்டரு குடுத்த நாலு குத்துக்கல்ல நட்டான் நாலு மூலையிலயும்.

கனகமும் பவளமும் தண்ணி சொமந்து ஊத்த - செம்மண்ணும்



படிப்பகம்

கெணத்துமண்ணுமாச் சேத்து மிதிச்சுச் சேறு கொழச்சான்.

கொழச்ச மண்ண உருண்ட தெரட்டி உருண்ட தெரட்டிக் கனகம் பவளம் கையில அவன் குடுக்க, காவக்காரச் சக்கணன் கோளாறு சொல்ல, அஸ்திவாரத்துமேல மண்ணுவைக்க மண்ணுவைக்க மதில் ஏறுது சர சரன்னு.

ஒரே நாள்ல வச்சாச்சு ஒன்றரை மொழச் சுவரு. அந்த ஈரச் சுவர் மேல மூணு விரல் கடைக்கு ஒண்ணுங்கற கணக்குல அளந்தளந்து நட்டான் அழிஞ்சிக் குச்சிகளை.

மறுநாளே தரைக்கு மண்ணடிச்சான். செம்மண்ணு மூணு வண்டி; கெணத்துமண்ணு பத்துவண்டி. கெணத்துமண்ணு இருக்கே... தரையில ஈரம் தங்கவிடாது. அதுல ஈ, எறும்பு, பூரான், பல்லி இருந்து வாழ முடியாது.

உருமாப்பெருமாத் தேவருகிட்ட பூவரசங்கால் ரெண்டு வாங்கி முன்னுக்க ஒண்ணும் பின்னுக்க ஒண்ணுமா நட்டு மூங்கிக் கம்புக ரெண்டு மாட்டினான் மோட்டுவளைக்கு. கல்லுக்கால் மேல பூவரசங்குச்சிகளப் போட்டான் அட்டவளைக்கு.

பூவரசம்பாச்சும் ஆமணக்கம் பாச்சும் வகைக்கு எட்டுவாங்கி கைமரமாப் போட்டான் மேல் கூரைக்கு.

இப்பக் கைமரத்துல கூரைய முடியணுமே.. கயித்துக்கு எங்க போறது கயித்துக்கு?

கத்தாழைய அறுத்தான்; நார் நாரா உரிச்சான். காயவச்சான் வெயில்ல; ஊறவச்சான் தண்ணியில.

ஆனையே இழுத்தாலும் அறுக்க முடியாது; அப்பேர்ப்பட்ட பலம் வந்திருச்சு கத்தாழங்கயித்துக்கு.

கைமரங்க மேல அழிஞ்சிக் குச்சியும் நொச்சிக் குச்சியுமா அடுக்கிவச்சு இறுக்கி முடிஞ்சிட்டான் கத்தாழங்கயித்துல.

அதுமேல பரபரபரன்னு பரப்புனான் பனை ஓலைய. பனை ஓலைக்கு மேல 'கடக் கடக்கு'ன்னு அடுக்குனான் கம்பந்தட்டைகள. ★ஆக்கை குடுத்து இழுத்து இறுக்கி முடி போட்டு எறக்கிட்டான்.

குடிசை கட்டியாச்சு. இப்பக் கதவு சேக்கணுமே கதவு.

மூணு பூவரசங்கம்பு வச்சு வேப்பங்குச்சிகள ஊடு குச்சிகளா நெருக்கியடிச்சுப் பட படபடன்னு உக்காந்து படல் பண்ணிப் புட்டான்.

மூணே நாள்ல முடிஞ்சு போச்சு.

---

★ கூர்செய்த மூங்கில் (கூரை குத்தி நார் முடியும் மூங்கில் ஊசி)

padippakam

அவன் நெஞ்சுல பரவுன சந்தோசம் கூன் வரைக்கும் புகுந்து குறுகுறுங்குது.

''என்னிய வளத்த கூலிக்கு என்னால ஆனது ஆத்தா... ஏதோ ஏழைக்கேத்த எள்ளுருண்டை.''

பத்தடி பின்னுக்க வந்து குடிசைய அழகுபாத்தான் கொண்ணவாயன்.

பஞ்சவடியில ராமனுக்கும் சீதைக்கும் கட்டிக் குடுத்த குடிசையை லட்சுமணன் நின்னு அழகு பாத்தானோ இல்லையோ, கருவாச்சிக்குக் கட்டிக் குடுத்த குடிசையைக் கொண்ணவாயன் கண்ணால கண்டு குளுந்துபோனான் குளுந்து.

குடிசைக்குக் குடிவந்த மொதநாளே கண்ணமூடுனதும் ஒறங்கிப் போனா கருவாச்சி. மானமில்லாம எலவம்பஞ்சுல படுக்கிறத விட மானத்தோட ஈரத்தரையில படுத்துக் கெடக்குறது சொகமில்லையா? கோட்டைக்குள்ள படுத்தும் ஒறக்கம் வராதவுக இருக்காக; குடிசக்குள்ள படுத்தும் கொறட்ட விடுறவுக இருக்காக. ஒறக்கத்த அவள் கட்டிப் புடிக்கிறதுக்குமுன்ன ஒறக்கம் அவளக் கட்டிப்புடிச்சுப் படுத்துருச்சு.

•

நாலு வருசமாவே மழை இல்ல. காத்து ஈரஞ்செத்துப் போச்சு. வேப்பமரத்து நெழலும் வெக்கையடிக்குது. கரடுகளுக்கு மேயப் போன ஆடுமாடுக, எங்கள ஏன் அலைய விடுறீக; போய் வார கூலிக்கே புல்லு இல்லையேன்னு பொலம்புதுக.

வாரமாதிரி இருக்கு; மழை வருதில்ல. என்னமோ கள்ளப் புருசனுக்கு உண்டானது மாதிரி மேகத்தைக் கலைச்சு விட்டுட்டுப் போயிருது காத்து. கொளத்துத் தண்ணி கொடத்துத் தண்ணியாப் போச்சு. கெணத்துத் தண்ணி சொம்புத் தண்ணியாப் போச்சு. காடு கரைஎல்லாம் காஞ்சு கெடக்குது. அங்க கரிச்சான் கத்தவுமில்ல; காடை முட்டை வைக்கவுமில்ல. வேலைக்குப் போனாத்தான் கஞ்சிங்கற ஆளுகளுக்கு வேளா வேளைக்குச் சாப்பாடு இல்ல.

அந்தப் பஞ்சத்திலயும் தெம்போட திரிஞ்சவ திம்சு ஒருத்திதான். கையில சில்லறைச் சத்தம்... காலுல கொலுசுச் சத்தம்... தெனாவெட்டாத் திரியிறா. அவ நெனச்சத நெருக்கி முடிச்சுட்டா. வரவு செலவு அவ கையில; வட்டி வாசி அவ கையில. பத்து நரி மூளையுஞ் சரி; இவ ஒரு மூளையும் சரி. சடையத்தேவர் அஞ்சாறு ஊர்ல குடுத்துவச்ச காசையெல்லாம் கழுத்துல வேட்டிபோட்டுக் கணக்கா வசூல் பண்ணிப்புட்டா. அழகுசிங்கத்துக்கு இவ குடுத்த காசைக் கடன்னு சொல்லித் தன் அண்ணன் பேர்ல வீட்ட எழுதி வாங்குனவளா இல்லையா? காடுகரைகள வெல பேசிட்டா. இப்ப வீடுகளையும் விக்கப் பாக்குறா.



படிப்பகம்

padippakam

கரையான்புத்துக்குள்ள புகுந்த கருநாகம் அதைக் காட்டெலிக்கு வித்துட்டுப் போற கதையாகிப்போச்சு; அதுக்குத் தோதா அது ஆம்பளைக அதிகாரம் செத்துப்போன வீடாகிப் போச்சு.

தொங்கித் தொட்டிலாகிப்போன கயித்துக் கட்டில்ல தானும் ஒரு கயிறாக் கெடக்காரு சடையத்தேவரு. மூச்சு வந்து வந்து போறத வச்சு உசுரோட இருக்கார்ன்னு ஒரு ஊகம் பண்ணிக்கிரலாம். என்னைக்குச் சாவி வாங்குனாளோ அன்னைக்கே சடையத் தேவன் பொழப்புக்குப் பூட்டும் போட்டுப்புட்டா திம்சு. கெடாய்க்குத் தண்ணிவைக்கிறதுல இருக்கிற ஆசை கெழவனுக்குக் கஞ்சிவைக்கிறதுல இல்ல அவளுக்கு. சும்மா சொல்லக்கூடாது... நானாக் கொல்லமாட்டேன்- தானாச்சாகட்டும்ன்னு விட்டுட்டா பெரிய மனசுக்காரி.

கெழவன் கதை இதுன்னா கட்டையன் கதையே வேற. ஊராளுக அவனப் பாத்து ஒரு வருசத்துக்கு மேல இருக்கும். நடமாட்டம் நின்னு போச்சு. வீட்டுக்குள்ளகூடக் கதவச் சாத்திக்கிர்றானாம்; படுத்தே கெடக்கானாம். நேக்கா மாதிரி இருந்த பய தார்க்குச்சியா ஒடுங்கிப் போனானாம். அன்னந்தண்ணி மட்டும் உள்ள போகுதாம். சாராயத்த நிறுத்துனா வெடவெட வெடன்னு வெரல் நடுங்குதாம். பச்சை மொளகாயக் கடிச்சாலும் பச்சமண்ணத் திங்கிற மாதிரி இருக்காம்; நாக்கு இருக்க நரம்பு செத்துப் போச்சாம்; ஒண்ணுக்கு ரெண்டுக்குப் போறதுக்குக் கூட உள்ளயே வசதி பண்ணிக் குடுத்திட்டாளாம் திம்சு.

''இது என்னப்பா இது கொடுமையா இருக்கு. வீட்டுக் குள்ளேயே வெளிக்குப் போற வீட்ல லச்சுமி இருக்குமா லச்சுமி?'' மூக்கப் புடிச்சுக்கிட்டே பேசுறாக அம்பலக் கல்லுல ஆளுக.

''புருசனயும் கெழவனயும் தூக்கி நெஞ்சுல சொமக்குறாளே... புண்ணியவதி நல்லாருக்கணும்.'' இப்படியும் பேசிக்கிறாக பாவம் வினயமில்லாத பொம்பளைக.

'மன்னன் என்னைக்குச் சாகுறது; திண்ண எப்பக் காலியாகுறது?' பொறுமையில்ல; ஆரம்பிச்சுட்டா ஏவாரத்த அவ.

பின்னத்தேவன்பட்டி அருவா மூக்கன் அந்தச் சாராங்கத்துல பெரிய ஆளு; கட்டப் பஞ்சாயத்துக் காரியக்காரன். ஆள்தாட்டியத்துலயே துட்டுச் சம்பாரிச்ச ஆளு. அஞ்சு ஆம்பளப்பய; ரெண்டு பொம்பளப்புள்ள அந்த ஆளுக்கு.

அடிக்கடி அடிதடி வந்திரும் அண்ணந்தம்பிகளுக்குள்ள. ஊருக்கு ஒரு பயலாக் குடிவச்சாத்தான் இவனுங்க உசுரக் காப்பாத்த முடியும்ன்னு முடிவு பண்ணிட்டான் அருவா மூக்கன்.

கருவாடுவிக்கப் பூன தேடிக்கிட்டிருந்த பொம்பளைக்கு அருவா மூக்கன் அகப்பட்டான்; ஆள் சொல்லி விட்டுட்டா; அஞ்சாறு ஆளோட



படிப்பகம்

padippakam

அவனும் வந்துட்டான். ரெண்டு வெடக்கோழியையும் ஒரு சேவலையும் ஒண்ணா அடிச்சுப் போட்டு ஒரே சட்டியில குழம்பு வச்சு அகப்பைய விட்டு அளாவி அள்ளிப்போட்டா ஈரலும் கறியும் எலும்புமா.

அருவா மூக்கன் எலும்பு கடிக்க இவ காது கடிக்கிறா.

''யண்ணே! சொத்து விக்கிறதாயிருந்தாக் காலம் செழிச்ச காலத்துல வித்துப்படணும்; வாங்குறதா இருந்தா, கஞ்சிக்கில்லாத பஞ்சகாலத்துல வாங்கணும். இது பத்துரூவாச் சொத்த ஒத்த ரூவாய்க்கு விக்கிற பஞ்சகாலம்ண்ணே. ஈனக் கிரயத்துக்கு எழுதித்தாரேன்; என்ன சொல்ற?''

''வீடு மட்டும் வாங்கி என்னா பண்றது தங்கச்சி? காடும் குடுப்பியா?''

'பசுவ விக்கிறவ கன்டுக்குட்டிய ஓட்டிவிட மாட்டனா? வாங்கிக்க.''

சட்டிக்குள்ள கையவிட்டு ரெண்டு மூணு அவிச்ச முட்டைய அவ அள்ளிவைக்க, அடுத்த வீட்லயிருந்து ஒத்தாசைக்கு வந்த முத்தாயி மக பயந்து பயந்து வந்து அவ காதுக்குள்ள என்னமோ சொல்றா.

''சாப்பிடுங்க வாரேன்''னு சாவகாசமா எந்திரிச்சவ நிதானமா எட்டுவச்சு உள்வீட்டுக்குள்ள போயிப் பாத்தா - வாயத் தொறந்தமேனிக்குச் செத்துக் கெடக்காரு சடையத்தேவரு.

மூங்கிக் கம்பு வெறைச்சமாதிரி கெடக்கு முழு ஒடம்பும்.

உத்துப் பாத்தா; ஒரு நிமிசம் யோசிச்சா. வாய்க்கரிசி இல்லாத காலத்துல வாயத் தொறந்து ஏன் கெடக்க? பொணத்த வஞ்சா. ரெண்டு இத்த சாக்கை எடுத்துப் பொணத்தப் பொத்துனா; கதவைப் பட்டும் படாமச் சாத்திட்டு வெளிய வந்துட்டா.

''வேறொண்ணுமில்ல; சோளமூட்டை அவுந்து போச்சு. கோழி கொத்திரக் கூடாதுன்னு கோணிச் சாக்கைப் போட்டுட்டு வந்திருக்கேன்; நீங்க தின்னுங்க.''

''எம் பொண்டாட்டியும் குழம்பு வைக்கிறாளே... போக்கத்த சிறுக்கி. இந்த ருசி வருமா? நீ அரைச்சு விட்ட மஞ்ச மொளகாப்பொடி மண்டைக்குள்ள போயி மசமசங்குதில்ல... ஊத்து தாயி ஊத்து''ன்னு உள்ளங்கையில சாறு வாங்கி அவன் 'உர்று உர்று'ன்னு உறிஞ்சிக் குடிக்க, அந்தப் பெருஞ்சத்தம் உள்ளசுத்தி, பொணத்துமேல ஒட்டுன ஈயப் 'போ'ன்னு வெரட்டுது.

''வெலையச் சொல்லு தாயி. ஆடி கழியப் பத்திரம் முடிச்சுக்கிரலாம்''

வெத்தல போட்டுத் துப்பிட்டு, சுண்ணாம்பத் தூண்ல தடவிட்டு, ஏப்பம் விட்டுக்கிட்டே போயிட்டாக வந்தவுக.

வழியனுப்பிவச்சு வாசக்கதவு சாத்திப் பதறாம உள்ள போனா திம்சு.



படிப்பகம்

தனக்குன்னு துண்டா ஆக்கிவச்ச தலக்கறிய எடுத்தா. சோத்துல போட்டுச் சொத சொதன்னு பெணஞ்சா. உருண்டை புடிச்சா; வாய்க்குள்ள பொத்துனாப்புல போட்டுக் கண்ண லேசா மூடி நிதானமா மென்னு தின்னா; கறியில இருந்த ஒறப்ப மூளைக்குள்ள செலுத்தி முழுசா அனுபவிச்சா. கோழிச்சட்டிக்குள்ள கையவிட்டு அப்பப்பக் கால் எலும்பும் கடிச்சுக்கிட்டா. கெழட்டுக் கோழி வேகலன்னு கடைவாய்ப் பல்லுல கடிச்சு இழுத்தா.

தான் தின்ட எலும்பையும் எச்சி எலயில போட்டு எடுத்தெறிஞ்சிட்டு, வாய் கொப்புளிச்சுக் கைகால் கழுவி, சீலய அவுத்துச் செவக்கிக் கட்டிக்கிட்டு, ஒரு எட்டு உள்ள போயிக் கண்ணாடியும் பாத்துட்டுக் கதவத் தொறந்து வச்சா; உள்ள வந்தா; பொணத்தப் பொத்துன சாக்க எடுத்து எறிஞ்சா.

''பெரிய மாமு... எங்கள ஏச்சுட்டுப் போயிட்டீகளே'' பெருங்கொடல நெஞ்சுக்கேத்தி ஒரு பெருஞ்சத்தம் போட்டா பாருங்க-

சடையத்தேவன் செத்துப் போயிட்டார்னு ஊருக்கே சங்கு ஊதிச் சொன்ன மாதிரி இருந்துச்சு.

ஆடு கோழி செத்தாலும் ஓடி வந்து விசாரிக்கிற ஊருச் சனம் 'பொணம் தூக்கட்டும் போவோம்'ன்னு பதறாம வருது.

ஊரக் காலிபண்ணிட்டுப் பல வீட்டாளுக பஞ்சம் பொழைக்கப் போயிட்டாக. எண்ணி எழுவது ஆளு தான் வந்திருக்கு எழவு வீட்டுக்கு.

''யப்பா! காலம் பஞ்சகாலமா இருக்கு. காக்கா உக்கார மரமில்ல; கன்டுக்குட்டி குடிக்கத் தண்ணியுமில்ல; அதனால கொட்டு வேணாம்; கொலவை வேணாம்; பட்டாசு வேணாம்; பாடை வேணாம். கட்டிலோட தூக்குங்கப்பா; காரியத்த முடிச்சுப்புட்டு வந்திரலாம்.''

''நியாயமான பேச்சு''ன்னாக எல்லாரும்.

''பெத்த அப்பன் செத்துக் கெடக்கான். கதவச் சாத்திட்டுப் படுத்துக் கெடக்கானே கட்டையன். கூப்பிடுங்கப்பா அவன.''

''வேணாமடா ஏலே! மப்புல கெடக்குறவன் நிக்க மாட்டான். அவக அப்பனத்தூக்க நாலாள் போதும்; அனைத் தூக்க எட்டாள் வேணும்; விடுங்கடா.''

''இடுகாட்ல கட்டிலோட எறக்குனாக பொணத்த. நாலடிக்குழி நல்லாத் தோண்டுங்கப்பா; நரி மண்ணப் பறிச்சு ஈரலப் புடுங்கித் தின்டாலும் தின்டுபுடும்''

''ஆமா! இருதயம் இல்லாத கெழவனுக்கு ஈரலா இருக்கப் போகுது? ரெண்டடிக் குழி போதுமப்பா''

padippakam

கால்ல ஒட்டுன இடுகாட்டுப்புழுதியைக் கழுவக்கூடத் தண்ணி இல்ல. ஆவாரங்குழையப் புடுங்கி அரைகொறையாக் கால் தொடச்சுக்கிட்டாக.

இடுகாட்டுலருந்து திரும்பிவந்த பெருசுக 'முப்பதாம் நாள் காரியம்'ன்னு தோட்டியக் கூப்பிட்டுச் சொல்லிக்கிட்டிருக்க - திம்சு, ஊர்மாடு மேய்க்கிறவன உள்ள கூட்டிட்டுப்போயி அருவா மூக்கனுக்குத் தகவல் சொல்லிவிடுறா:

''துட்டுச் சேத்து வைக்கச் சொல்லு அருவா மூக்கன. கட்டையன் வீடு, சடையத்தேவன் காடு கருவாச்சி வீடு மூணும் பத்திரம் முடிக்கிறோம் மூணே மாசத்துல''

மூணு மாசத்துக்கு மேல கட்டையன் தாங்கமாட்டான்; ஆளு அடியாகிப்போயிருவான்ங்கறது அவ கணக்கு.



படிப்பகம்

padippakam



# 39

**தா**து வருசப் பஞ்சத்துல சில்லாவே சீக்குல விழுந்துபோச்சு. ஐப்பசி மாசக் குளிரு. ராத்திரி ஒறஞ்சுபோச்சு;ஊர் ஒறங்கிப்போச்சு. வெடவெடங்குது ஒடம்பு; வெறச்சுப் போச்சு கைகாலெல்லாம்.

வருசா வருசம் குளிரு கூடுதா... இல்ல வயசாக ஆக திரேகத்துல ரத்தஞ்செத்துப் போறதால குளிரு கூடுதலா ஒறைக்குதா?

பழைய சீலக்குள்ள ஒடம்ப உருட்டி உள்ள போட்டு, அதுக்குமேல இத்த கம்பளியைப் பொத்திப் படுத்திருந்தா கருவாச்சி.

அவள அறியாம கண்ணோரமா உருண்டு தெரண்டு ஒடஞ்சு ஒழுகுது கண்ணீரு.

படிப்பகம்

padippakam

''சடையத்தேவரு பாவம் நல்லவரோ கெட்டவரோ, எனக்குப் புருசனா வந்தவனப் பெத்துக் குடுத்த பெருசில்லையா? எழவுக்குப் போக முடியாத பொழப்பாகிப் போச்சே எம் பொழப்பு.''

கெழவன் பண்ணுன கெடுதி மலமாதிரி இருக்கு மனசுக்குள்ள. ஆனா ஒரு சொட்டுக் கண்ணீரு இருக்கே... மலையைக் கூட இருந்த இடம் தெரியாம இழுத்தெறிஞ்சுட்டுப் போயிருதே.

''என்னியவிட்டு எல்லாம் போயிருச்சு. அப்பன் போயிருச்சு; ஆத்தா போயிருச்சு; புருசனும் பிள்ளையும் இருந்தும் இல்லேன்னு போயிருச்சு; வீடு வாச போயிருச்சு. இந்த உசுரு மட்டும் போகாம ஏன் ஒட்டிக்கிட்டிருக்கு? என் பெறவிக்குன்னு ஈசன் எழுதிவச்ச வேல இன்னும் முடியல போலருக்கு. அது முடியாம முடியாது போலருக்கு ஏம் பொழப்பும்.

இந்தச் சாவுங்கிற கழுதை எங்கிட்டிருந்து வரும்? எப்பவரும்? சாவு வந்தா மூச்சுப் போயிருமா? இல்ல மூச்சுப் போனாச் சாவு வந்திருமா? சும்மா சோதிச்சுப் பாப்பமா? '' செத்தவடம் தம் கட்டி நிறுத்திப்பாத்தா. சாவு வரல; மூச்சுதான் வந்துச்சு. ஓகோ! பொழைக்கிறது லேசு; சாகுறதுதான் கடுசோ? சிரிச்சுக்கிட்டா; சிரிச்சுக்கிட்டே ஒறங்கிட்டா.

●

நல்ல நடுச்சாமம்.

ஊரு ஒடுங்கிருச்சு. அரை வயித்துத் தீனியோட ஆடுமாடும் அடங்கிருச்சு. ஒழுங்கா என்னிய ஒறங்கவிடுன்னு வேப்பமரம் சொல்லுச்சோ என்னமோ? அதுல கூடுகட்டியிருந்த ஊர்க் குருவியும் கத்தி ஓஞ்சுபோச்சு. கடைசியா ஒரு கொலப்புக் கொலைச்சிட்டு இதுக்குமேல நம்ம கச்சேரி கேக்க நாதியில்லேன்னு நாயும் தூங்கிப்போச்சு. நெஞ்சுல கட்டுன கோழையும் தொண்டைக் குழியில சிக்குன உசுரும் வெளியேற முடியாம இருமிக்கிட்டே கெடந்த சீக்காளிகளும் இன்னைக்கு 'இது போதும்'ன்னு இருமல நிறுத்திக் கிட்டாக.

அப்ப...

கருவாச்சிக்கு மட்டும் கேக்குது ஒரு சத்தம்.

குடுசுக்கு வெளியே படலோரமா கல்லுமேல காசு விழுந்தமாதிரி சுத்தமாக் கேக்குது சத்தம்:

''யாத்தே! பணியாரம் சுட்டுக்குடு...

யாத்தே! பணியாரம் சுட்டுக்குடு...''

பழகுன சத்தம்... பாசமான சத்தம்... நெஞ்சாங்குலையைப் புடிச்சு இறுக்கிப் புழியிற சத்தம்.

பசக்குன்னு எந்திரிச்சு உக்காந்தா கருவாச்சி. இத்த கம்பளியத் தூக்கியெறிஞ்சா. படலத்தள்ளி விசுக்குன்னு வெளியவந்தா; சுத்தியும் முத்தியும் பாத்தா. இருட்டத்தவிர யாரையுங்காணோம்; கொண்ண வாயன்



படிப்பகம்

padippakam

மட்டும்தான் வாசல்ல படுத்துக்கெடக்கான் சாக்குல கட்டிவச்ச சொரைக்கா மாதிரி.

''எலேய் கொண்ணவாயா எந்திர்ரா. ஒந் தம்பி அழகுசிங்கம் கூப்பிட்டாண்டா; எங்கிட்டிருக்கான் பார்ரா.''

அலறியடிச்சு எந்திரிச்சு புத்தியில ஒண்ணும் புடிபடாம வேட்டிய விட்டுட்டுச் சாக்கக் கட்டிக்கிட்டு அங்கிட்டும் இங்கிட்டுமா ஒறங்கிக்கிட்டே ஓடுறான் கொண்ணவாயன்.

''கா...கா...காணமே ஆத்தா... இ..இ... இல்லையே''

''எலேய்... கண்ணத் தொறந்து பார்ரா. என்னிய வந்து கூப்பிட்டாண்டா எம் பிள்ள. பணியாரம் கேட்டாண்டா பாவிப்பய. நல்லாப் பார்ரா. ''

குடிசையை மூணுசுத்துச் சுத்திவந்தான் கொண்ணவாயன். கருவேல மரத்துல கட்டிக்கெடக்குற பசுமாட்டுக்குள்ளேயும் போயிப் பாத்துட்டு வந்தான்.

''ஒனக்குக் கி...கி...கிறுக்குப் புடிச்சிருச்சா? போ...போ... போ...போயிப் படு ஆத்தா.''

கெனாக் கண்டனா? எம் பிள்ள வரலையா? கண்கட்டி வித்தையா? குறளி வேலையா? ஆளுவராமப் பேச்சுமட்டும் வருமா? புத்திக்குள்ள புழுவாக் குடையுது கருவாச்சிக்கு; படபட படங்குது பால்குடுத்து வத்திப்போன பழைய மொல.

''எம் பிள்ளையப் பாக்கணும்; எத்தனையோ வருசமாச்சு அவன் என்னியவிட்டுப் போயி; பிள்ளையப் பாக்கணும்.''

அன்னைக்கு வரைக்கும் பொத்திவச்சிருந்த பாசம் பொத்துக்கிட்டு ஊத்தவும், தேஞ்சு கெடந்த திரேகத்துக்குள்ள ஒரு தெம்பு வந்திருச்சு.

''எப்பிடியும் பாத்தாகணும் எம்பிள்ளைய.''

வேர் புடிச்ச நாத்து தலையத் தூக்கி நிக்கிறமாதிரி விழுந்து கெடந்த மனசு எந்திரிச்சிருச்சு.

''வெறுங்கையோடயா போறது வீட்டுக்கு?''

மருமக இருக்கா. ரெண்டு பக்கிகள வேற பெத்து வச்சிருக்கானாம்.

நஞ்சுபோன துணிகளையாச்சும் மஞ்சப் பையில புதுசுன்னு புடிச்சுப் போகணும்; நமத்துப்போன பலகாரம் ரெண்டக் கையில புடிச்சுப் போகணும்; அதுக்குத் துட்டு வேணுமே துட்டு...

துட்டுச் சேக்குற ஆசை சிக்குப்புடிச்ச குடுமியப் புடிச்சு ஆட்டுது பாவம் அவள. எங்கிட்டுச் சேக்குறது துட்டு? காஞ்சு கருவாடாக் கெடக்கு ஊரு. மனுசங்களையும் மரம்மட்டைகளையும் தின்டு முழுங்கிப் பசியாறிக் கிட்டிருக்கு பஞ்சம்.



படிப்பகம்

padippakam

முந்திமாதிரி ஓடியாடி வேல செய்ய முடியல; உக்காந்து செய்யிற வேலையாப் பாத்தா. புளியம்பழம் தட்டுனா. துவரங்குச்சிய எடுத்துப் பொழுதுக்கும் புளியம்பழம் தட்டி அன்னாடம் அரைக்காரூவா சேத்தா. புளியம்பழ ஓடுமிச்சம்; அதை எருவு தட்ட எடுத்துக்கிட்டா. புளிய வெதையும் மிச்சம். கஞ்சியில்லாத பிள்ளைகளுக்கு அதை அவிச்சும் குடுத்துக்கிட்டா. 'இந்தா இந்தா'ன்னு இழுத்துப் புடிச்சு ஒம்போதுரூவா சேத்துட்டா.

கல்லுஒடைக்கப் போனா கரட்டுக்கு. கனகமும் பவளமும் அவளுக்குச் சுத்தியல் ஒண்ணு வாங்கிக் குடுத்தாக சொந்தத்துக்கு. மொத மூணு நாளு கல்லொடைக்க வரல. கல்லொடைக்கிறேன்னு விரல்ல நச்சுன்னு போட்டு நகத்தப் பேத்துக்கிட்டா. அடிபட்டா, நீங்களும் நானும் என்னாம்போம்...? அம்மாம்போம்; இல்ல -'அய்யோ'ம்போம். அவ 'அழகுசிங்கம்'ன்னா. கருவுலயிருந்து பிள்ள வெளியவந்து பல வருசமாச்சு; ஆனா நெஞ்சவிட்டு எறங்கல.

அடுத்த ஒரு மாசத்துல இன்னொரு பத்து ரூவா சேத்துட்டா. மொத்தம் பத்தொம்போது இருக்கு பையில. நாளைக்கு மகன் வீட்டுக்குப் போறதா முடிவு பண்ணிட்டா.

மகனுக்குப் பணியாரம் சுட்டெடுத்தா பாருங்க... தலைக்கு வேப்பெண்ண வைக்கவே வக்கில்லாமக் கெடக்கிறவ மகனுக் கின்னதும் பசுநெய்யில குளிப்பாட்டுறா பணியாரத்தை. ஏலமும் சுக்கும் போட்டுக் கருப்பட்டிப்பாலக் காய்ச்சி எடுத்தா. ஈயச்சட்டியில பணியாரத்த நெப்பிக் கருப்பட்டிப் பால ஊத்தி ஊத்தி ஊறவச்சா.

விடிய்ய...

தோள்ல ஒரு கோழி; கையில ஒரு வாளி. புடிச்சு நடந்துட்டா பொடி நடையா.

ஆண்டிபட்டிச் சந்தைக்கு வந்தா.

மகனுக்கு ஒரு வெள்ளவேட்டி மஞ்சச்சட்டை - கோவம்பழ நெறத்துல மருமகளுக்கொரு சீல - சட்டிபான நெறத்துல பேரனுக்கொரு சட்டை - வெள்ளாவியில இல்ல.. தீயில வச்சாலும் நெறம் மாறாதமாதிரி பச்சைப்பசேல்ன்னு பேத்திக்கொரு பாவாடை - மொத்தம் மூணேகால் ஆச்சு.

விசாரிச்சுக் ★கார் ஏறிட்டா.

'திருமங்கலம் வெலக்கு வந்தாச் சொல்லுங்கன்னு ஒருத்தர நம்பாம அஞ்சாறு பேருக்குச் சொல்லி வச்சா.

திருமங்கலம் வெலக்குல எறங்கி மேனியெல்லாம் சொமை சுமந்து மனசெல்லாம் பாசம் சுமந்து கள்ளிக்கட்டாப்பு வழி ஒத்தையடிப் பாதை புடிச்சு ஒத்தையில போறாய்யா கருவாச்சி.

இன்னும் ஒரு கல்லுத் தொலைவுதான் இருக்கு என் உசுரப்பாக்க. ''வாரண்டா மகனே! வாரேன். இந்தா வந்துட்டேன்.''

★ பஸ் – கார் என்றே அழைக்கப்பெற்றது வட்டார மொழியில்.



படிப்பகம்

padippakam

'ஒரு புது விருந்தாளு வருது' கரகரகரன்னு கத்தி ஊருக்குள்ள தகவல் சொல்லுது வாகை மரத்துக் காக்கா.

ஓடை கடந்து மேடேற, கொடிக்கள்ளிப் புதரோரம் கொட்டி வச்ச சாம்ப(ல்) மேட்டுல ஆடாம அசையாம ஒண்ண ஒண்ணு உர்ருன்னு பாத்துக்கிட்டே கழுதைக ரெண்டு நிக்கிதுக காது வெடைக்க.

புங்க மரத்தடியில லாடம் அடிக்க மாட்டத் தரையில சாச்சுக் கிட்டிருந்தாக ரெண்டு மூணு ஆளுக.

''அய்யா! இங்க அழகுசிங்கம் வீடு எது? மேற்க சொக்கத் தேவன்பட்டிக்காரன். இந்த ஊர்ல கல்யாணம் பண்ணவன். சோலமலத்தேவரு மருமகன்...''

கருவாச்சிய ஏற இறங்கப் பாத்துட்டு வாயில போட்டிருந்த வெத்தலைய முழுங்கவும் முழுங்காமத் துப்பவும் துப்பாமக் கொழ கொழங்கிற தமிழ்ல வழிகாட்டினான் ஒருத்தன்.

நடந்தா.

தோள்ல தொங்குற கோழிமாதிரியே செறகு தூக்குது மனசு. இந்தா இருக்கு அரசமரம். அந்தா தெரியுது தண்ணிக்கெணறு. அந்தா தெரியுதில்ல வெள்ளாட்டங்குட்டி கட்டிக்கெடக்குற வேப்பமரம்.

''அத்தத் திண்ண வீடா எம்மகன் வீடு?''

'படக் படக்கு'ன்னு நெஞ்சு துடிக்கப் படியேறி உள்ளபோனா.

உள்வீட்டுத் தாவாரத்துல திருகையில கேப்பை திரிச்சுக்கிட்டிருந்தா ஒருத்தி. அட்டத்துல பாத்தா வத்திப்போன திம்சு மாதிரியே இருந்தா. அவதான் மருமகளோ?

வீட்டுக்குள்ள நொழைஞ்சதும் இடதுபக்கமிருந்த உள் திண்ணையில 'தக்கிரி பிக்கிரி'ன்னு ஒளறிக்கிட்டு ஒரு உருவம் உக்காந்திருக்கு. ஒடம்பு சிறுத்துப்போனதுல மண்ட பெருத்துப் போச்சு அந்த உருவத்துக்கு. ஒரு காலத்துல நாங்களும் இங்க இருந்தமாக்கும்ன்னு சொல்றதுக்கு ரெண்டு மூணு முடியும் மிச்சமிருந்துச்சு தலையில. ஒழுகிக்கிட்டேயிருக்கு வாயில எச்சி. பொணத்துக்குக் கண் தெறந்தமாதிரி ஒரு பார்வை. சுட்ட கோழிமாதிரி வெறச்சு வெளங்காமக் கெடக்கிற கால்ல சங்கிலிகட்டி வச்சிருந்தாக தூண்ல. இவளப்பாத்து அது 'ஈ'ன்னு இளிக்கவும் பயந்து ஓடி ஒதுங்கி உள்ள போயிட்டா கருவாச்சி.

பத்தாத வெறகடுப்புல சீமத்தண்ணி ஊத்திப் பத்தவச்சுக்கிட்டிருந்தா ஒரு கெழவி. அவதான் சம்பந்தகாரியா இருக்கும்.

கம்பிக் கட்டில்ல துப்பட்டி பொத்திப் படுத்திருந்தான் ஒரு பக்கம் இழுத்த மூஞ்சியோட ஒரு கெழவன். மகனுக்கு மாமனார் போலருக்கு; திம்சு அண்ணன்.

11



படிப்பகம்

padippakam

உள் தாவாரத்துல போயி இவ எல்லாத்தையும் எறக்கி வைக்கிற வரைக்கும் இவள ஒருத்தரும் பாக்கல. 'கெக்கக் கெக்கக் கெக்கே'ன்னு கொண்டுவந்த கோழி சொல்லிருச்சு வந்திருக்கவ வரவ. திரும்பிப் பாத்த தாயும் மகளும் தெகச்சுப் போனாக.

யார்காட்டுச் சிறுக்கி இவ... வீட்டுக்குள்ள வந்திருக்கா?

''ஒங்க சம்பந்தகாரிதான் வந்திருக்கேன்; சம்பந்தகாரி. இத்தன வருசம் கழிச்சு வந்திருக்காளேன்னு எளக்காரமாப் பாக்காதீக ஆத்தா. இப்பத்தான் பாக்கணுமின்னு எழுதிருச்சு ஈசன் என் தலையில. நீதான் என் மருமகளா? வா தாயி! வா.''

இவளே தேடிப் போயி அவ தலையத் தடவுனா. அவ தலைய இழுத்துக்கிட்டா.முந்தானைய எடுத்துக் கண்ணத் தொடச்சுக்கிட்டே ''இந்தா மருமகளே!''ன்னு எடுத்துக் குடுத்தா துணிமணிய. அவ வாங்கல; இவ வச்சுட்டா.

பணியார வாளிய எடுத்து நீட்னா சம்பந்தகாரிகிட்ட. அவ இடது கையில வாங்கி அங்கனயே வச்சிட்டு அங்கிட்டுப் போயிட்டா.

வெளிய விளையாடப் போயிருந்த பேரனும் பேத்தியும் காச்சு மூச்சுன்னு கத்திக்கிட்டே உள்ள வரவும் 'தடார்'ன்னு அதுக மேல தட்டத் தூக்கி யெறிஞ்சான் திண்ணையிலிருந்த கிறுக்கன்.

பேத்தி 'வீல்'ன்னு கத்திக் கதறவும் ஓடிப்போயிப் பேத்தியக் கையடங்காம அள்ளிக்கிட்டா கருவாச்சி.

இந்தக் கொரங்க எதுக்கு இங்க கட்டிவச்சிருக்காகன்னு திட்டிக்கிட்டே பேரன் பேத்திக்குப் புதுச் சட்டையப் போட்டுப் அழுகைய அமத்தி அழகுபாக்குறா.

''ஓம் பேர் என்னா தங்கம்... நான் தான் ஒன் அப்பத்தா. எங்க ஒன் பேர் சொல்லு...''

புளிச்சதண்ணிச் சொம்பக் கொண்டுவந்து 'பட்டீர்'ன்னு அவ அட்டத்துல வச்சுட்டு அவ பாட்டுக்குப் போயிட்டா சம்பந்தகாரி. மகன்வீட்டுப் புளிச்சதண்ணி... ஆசை ஆசையாத் தூக்கிக் குடிச்சா ஆத்தா.

பிள்ளைகள அவ இடுப்புக்குடம் மாதிரி இறுக்கிப் புடிக்கிறா; அதுக எண்ணெக் குடம்மாதிரி வழுக்குதுக.

''யம்மா தாயி எம்மகன் அழகுசிங்கம் எப்ப வருவானாத்தா? ''

பொம்பளைக ரெண்டுபேரும் ஒரு பேச்சும் பேசல. அவுகவுக வேலையப் பாத்துக்கிட்டிருக்காக. கட்டில்ல கெடக்குற பெருசு அனத்திக் கிட்டே கெடக்கு.



படிப்பகம்

பிள்ள வரட்டும்; கண்ணக் கொண்டு பாத்துட்டுப் போயிருவோம்ன்னு காத்திருக்கா கருவாச்சி. பணியாரத்தப் பிச்சுப் பிச்சு ஊட்டிவிடவும் ஒருவாய் ரெண்டுவாய் தின்றுச்சுக பேரன்பேத்திக. ''மக்கா... ஒங்க அப்பன ஊட்டி ஊட்டி வளத்த கையி இது. ஒங்களுக்கு ஒரு வாய் ஊட்டிவிட விதியில்லாமப் போச்சே. '' குலுங்கிக் குலுங்கி அழுகிறா கருவாச்சி.

கால்ல கயிறுகட்டி அவ கொண்டுவந்த வெடக் கோழி தவ்வித் தவ்வித் திண்ணையிலிருந்த கிறுக்கன் மடியில போயி விழுந்து போச்சு.அவன் ஒரு கால்ல கோழிய மிதிச்சுக்கிட்டு இன்னொரு கையில இழுத்து இணுங்கப் பாக்குறான் றெக்கைய. சாவுகத்து கத்துது கோழி.

அடுப்பூதிக்கிட்டிருந்த மருமக ஊதுகுச்சியோட போயி அவன் தலையில ஓங்கி ஒரு போடு போட்டு 'விடு கோழிய'ன்னு விடுதல பண்ணிட்டு வாரா.

அடிவாங்குன கிறுக்கன் 'ஊ'ன்னு அழுதிட்டு அவ அங்கிட்டுப் போனதும் 'ஈ'ன்னு சிரிக்கிறான்.

''யாத்தா! நான் பொழுதிருக்க ஊருபோயிச் சேரணுமாத்தா; எங்க போயிருக்கான் என் மகன்... எப்ப வருவான் சொல்லு''

அதுவரைக்கும் ஒண்ணும் பேசாத மருமக ஊசிப்பட்டாசு வெடிச்சுட்டா.

''ஏ கெழவி! ஒன் மகனுக்குத்தான் ஒன்னிய அடையாளந் தெரியாது. ஒனக்குமா ஒன் மகன அடையாளம் தெரியல? அந்தா திண்ணையில கட்டிக் கெடக்குல்ல தேவாங்கு... அதான் ஓம் மகன். கஞ்சாக் குடிச்சுக் குடிச்சு மதிமயங்கி மூள கெட்டுப் போயி ஒரு மூலையில கெடக்கு. போ! போயிப் பாத்துட்டுப் போ ஒன் அழகு பெத்த மகன் அழகுசிங்கத்த.''

இடி விழுந்த மாதிரி நெஞ்சுல அடிச்சு எந்திரிச்சா கருவாச்சி.

ஓடிப்போயிக் கிறுக்கன உத்து உத்துப் பாக்குறா. ''இவனா எம்பிள்ள? இவனா என் வகுத்துல நான் செமந்த வருச நாட்டு வேங்கை?'' கண்ணச் சிமிட்டாமப் பாக்குறா.

காதுல மூக்குல மட்டும் இத்துனூண்டு இருக்கு அழகுசிங்கங்கிற அடையாளம்.

''நான் பெத்த மகனே''ன்னு விழுந்து கட்டிப் புடிச்சு அழுதவதான்.

இவ அழுதுகிட்டேயிருக்கா;

அவன் சிரிச்சுக்கிட்டேயிருக்கான்.

கண்ணீரா ஒழுகுது இவளுக்கு;

எச்சியா ஒழுகுது அவனுக்கு.

padippakam

ரெண்டு கையிலயும் இறுக்கிக் கொரங்கு புடிச்சமாதிரி புடிச்சுப்புட்டான் ஆத்தா குடுமிய.

''நீயாடா எம்பிள்ள? எம்பிள்ள நீயாடா? ஒன்னியப் பாக்காம நான் செத்திருக்கணுமடா; இல்ல நான் வருமுன்ன நீ செத்திருக்கணுமடா''

கருக்குழியில தீப்புடிக்கக் கத்துறா கருவாச்சி.

கும்பி கலங்கி நிக்குது குப்பணம்பட்டியே.

'கலீர்'ன்னு கழுத்துமணி சிலும்பத் தலையத் தூக்கிப் பாக்குது, ஊர் எல்லையில வாடம் அடிக்கப் படுக்கப் போட்ட மாடு.



படிப்பகம்

padippakam



# 40

**ம**னுசனுக்கும் பூமிக்கும் ஒரே மாதிரிதான் விதிச்சிருக்கு விதி. மூணு தலமொறையா வாழ்ந்தவனுமில்ல; மூணு தலைமொறையாக் கெட்டழிஞ்சு போனவனுமில்ல. இதான் நம்மூர்ல மனுசனுக்குப் பரம்பரையா விதிச்ச விதி. கிட்டத்தட்ட பூமிக்கும் இதே விதிதான் விதிச்சிருக்கு பாருங்க. அறுவது வருசம் அடிமாண்ட பூமியும் இல்லை; அறுவது வருசம் அரசாண்ட பூமியும் இல்லை. நூறுவருசத்துக்கு ஒரு பஞ்சம் வந்து பூமியப் பிச்சுத் தின்டுபுட்டு, எலும்புக்கூட்ட மட்டும் எறிஞ்சிட்டுப் போயிருது.

அஞ்சாறு வருசமா ஆகாயத்திலருந்து ஒரு சொட்டு விழுகல பூமியில. எந்தப் பஞ்சத்துக்கும் தாக்குப்புடிச்சுப் பச்சைப் பசேல்ன்னு இருக்கும்

படிப்பகம்

padippakam

கள்ளிமரம் ஒண்ணுமட்டும். இப்ப... காட்ல அந்தக் கள்ளியும் செத்துப் போச்சு. கத்தாழையும் கருகிப் போச்சு. பிச்சைக்காரன் வீட்டுக்கு வெறுங் கையோட வார விருந்தாளி மாதிரி வந்துட்டு வந்துட்டுப் போகுது மேகம். ஆனா அண்ணாந்து பாக்கிறவன் நெத்தியில ஒத்தச் சொட்டு விழுகணுமே; விழுகல. மலடி கெழவியாகிப் போன கதையாகிப் போச்சு மேகக் கதை.

மொதல்ல உசுர் வத்திப் போனது ஊருணிதான். ஒடைச்சு ஒடைச்சு அடுக்கி வச்ச ஓட்டாஞ்சட்டிச் சில்லுக மாதிரி வெடிச்சு வெடிச்சு விரிசல் கண்டு நிக்கிது ஊருணி வண்டலு.

ஈரப்பசை இல்லேங்கவும் ஓடிப்போக நாங்க ஒண்ணும் கொக்கு, நாரைக இல்ல; பிறந்த மண்ணுலயே செத்துக் கெடக்கோம் பாத்துக்கங்கன்னு அங்கங்க அடையாளம் காட்டிச் சொல்லுதுக நத்தைக் கூடுகளும் நண்டு ஓடுகளும்.

தோட்டந் துரவுக அருள் மாறி நிக்கிதுக. யானை பொதைக்க வெட்டுன குழிமாதிரி கெடக்குதுக கெணறுக.

கெணறு வெட்டுன அன்னைக்கு மேட்ல குவிச்சு வச்ச மண்ணுக காத்துல சரசரசரன்னு சரிஞ்சு கெணத்துக்குள்ள விழுந்ததுல, இருந்த ஈரப்பசையும் இல்லேன்னு போயிருச்சு.

கமலக்காலு உருளக்கட்டை ரெண்டையும் வெட்டி வெறகெரிக்கிறாக சம்சாரிக.

குடிதண்ணிக் கெணத்துல அடைபட்டுப் போச்சு ஊத்துக் கண்ணு.

எதிரிசெத்த வீட்டுக்கு எழவுக்குப் போனா வம்படியா வரும் பாருங்க கண்ணீரு, அப்படிக் கல்லக் கசக்கிக் கசியுது கெணத்துத் தண்ணி. மனுசன் குடிக்கிற தண்ணிக்கே இந்தப் பாடுன்னா ஆடுமாடுக என்ன செய்யும் பாவம்?

''செத்தாலும் செத்துருவோம்; தோலு வெலைக்காச்சும் எங்கள வித்திருங்க''ன்னு சொல்லுதுக மாடுக.

''எங்கள உரிச்சாலும் செத்துப்போவோம் உரிக்காட்டியும் செத்துப் போவோம்''ன்னு கண்ல உசுர ஒழுகவிட்டு அப்பிராணியாப் பாக்குதுக ஆடுக. குக்குநோவு வந்து குன்னிக் குன்னிச் செத்த கோழிகளையெல்லாம் குப்பைக்குள்ள பொதைச்சுக் குழிய மூடுறாக.

அஞ்சாறு மாசமாச்சு அந்த ஊர்ல காக்காயப் பாத்து. எச்சிச் சோறும் தண்ணியுமில்லாத ஊருக்குக் காக்கா வருமா? காக்கா கத்துனா அந்த வீட்டுக்கு விருந்தாளு வரும்ங்கிறது ஐதீகம். காக்காயே வராத ஊருக்கு எங்கிட்டிருந்து வர்றது விருந்தாளு?

மண்ட, வாலு ரெண்டத்தவிர அடையாளங் காங்க முடியாம நீண்டு நீத்துப் போய்த் திரியுதுக நாய்க. இந்தப் பஞ்சத்துல தாக்குப்புடிச்சு நிக்கிறது கொடிக்கள்ளியும் கழுதைகளும்தான்.

மனுசங்க படுற பாட்ட நெனச்சாலே நெஞ்சாங்குழியில சாவு வந்து



படிப்பகம்

நிமிண்டுது. தலைக்கு எண்ணெய் இல்ல; வீட்ல தானியமுமில்ல. கூலிவேலைக்குப் போகவும் கொடுப்பினை இல்ல. மழைதண்ணி இல்லாம சில்லாவே சீக்காக் கெடக்கு. பச்சத்தண்ணி மோந்து குடுக்க எந்தூர்லயும் ஆள் இல்ல.

எரியிற காட்ல எங்கபோயி ஒதுங்கறது ஈயி?

அரிசிச்சோத்துலயிருந்து இருங்கச்சோளத்துக்கு எறங்கி, இருங்கச் சோளத்துலயிருந்து சாமச்சோத்துக்கு மாறி, சாமச்சோத்துலயிருந்து கேப்பக் களிக்குச் சுருங்கி, எப்பவோ உழுத புழுதியில இப்பக் கோரங்கெழங்கு தேடியலையுது ஊருசனம்.

பெறக்கி வந்த கோரங்கெழங்க வாசல்ல போட்டுத் தலப்பலகைய வச்சு நசநசநசன்னு நசுக்கி, பருப்பா இருக்கிற பச்சக் கெழங்க உண்டு பசியாறுது ஊரு.

அகமலை, பண்ணக்காடு, மூணாறு, தாண்டிக்குடின்னு பஞ்சம் பொழைக்கப் போயிருச்சுக பல குடும்பங்க.

விட்டா ஊரே சுத்தச் சுடுகாடா ஆகிப்போயிரும் போலருக்கே?

கனகம் - பவளம் - வைத்தியச்சி - உருமாப்பெருமாத்தேவரு - காவக்காரச் சக்கணன்- கடப்பாரைக்கவுண்டரு - நாயக்கரு - எல்லாரையும் ஒண்ணுகூட்டி ஒக்காரவச்சா கருவாச்சி.

''யப்பா! பொழைக்கத் தெம்புள்ள சனம் போயிருச்சு ஊரவிட்டு. கெழடு கெட்டைகளும் நண்டானுஞ் சுண்டானுந்தான் உசுரக் கையில புடிச்சு உக்காந்திருக்கு ஊருக்குள்ள. இருக்கிற ஆளுக பொழைக்க வழியப் பாப்பம். பொழைச்சா ஒரே ஊர்ல எல்லாரும் ஒண்ணாப் பொழைப்போம். செத்தா ஒரே குழியில எல்லாரும் ஒண்ணாச் சாவோம்.''

''யாத்தா கருவாச்சி! எண்ணம் இருக்கு எங்களுக்கும். இடுப்புச் செத்துப்போன கெழடு கெட்டையாகிப்போனோம் நாங்க. சொல்லு என்ன செய்யலாம்?'' உருமாப்பெருமாத் தேவரு பல்லுப்போன வார்த்தையாப் பேசுறாரு.

''மொதல்ல மழைக்கு ஒரு வழி பண்ணனுமப்பா!'' பெருமூச்சு விட்டாரு கடப்பாரைக்கவுண்டரு.

''மழைக்கு எங்கிட்டு வழி பண்றது?'' நாயக்கரு சலிச்சுக் கிட்டாரு.

''கழுதைக்கும் கழுதைக்கும் கல்யாணம் பண்ணி வச்சா எப்பவும் மழை வரும்ங்கிறாக ஏடு பிடிச்சவுக.'' பெரும்போக்கா ஒரு பேச்சுப் பேசிப்புட்டா வைத்தியச்சி.

கழுதைக்கும் கழுதைக்கும் கல்யாணம் பண்ணிவச்சா மழை வராது. இன்னொரு கழுதக் குட்டிதான் வரும். பேசாம இரு ஆத்தா. சாகப் போற உசுர்களுக்குக் கஞ்சிக்கும் தண்ணிக்கும் வழி பண்ணுவியா... அதை விட்டுப்புட்டு...'' வைத்தியச்சிய வாயடைச்சுப்புட்டா கருவாச்சி.

padippakam

ஆளுக்கொரு கோளாறு சொல்லிச் சட் சட் சட்ன்னு முடிவெடுத்தாக.

''ஏலே கொண்ணவாயா... எளந்தாரிப் பயகளாச் சேந்து கத்தாழங் கெழங்கு வெட்டிட்டு வாங்கப்பா ஓடையில. நானும் பொம்பளைகளும் பளிங்காம்பாறைக் கல்லுக்குழியில போயி ஊர்குடிக்கத் தண்ணி கொண்டாந்துடுறோம்.''

ஆளுக்கொரு பானசட்டி மொடாவத் தூக்கிக்கிட்டுப் பளிங்காம்பாறை தேடிப்போறாக கருவாச்சியும் பொம்பளைகளும் வெயில் வெக்கை தாங்காமக் காத்து செத்துக் கெடக்குற கரட்டுவழி.

ஊருக்குக் குடிதண்ணி எடுக்கப் போன பொம்பளைக பளிங்காம் பாறையில கெடந்த தண்ணியக் கண்டதும் பயந்து போனாக.

எருமைச் சாணியக் கரைச்சுவிட்டது மாதிரி பசேல்ன்னு கெடக்கு பச்சைத் தண்ணி.

''தாயைப் பழிச்சாலும் தண்ணியப் பழிக்கப்படாதுன்னு சொல்லுமடி எங்க ஆத்தா. வடிகட்டிப் புடிச்சுட்டுப் போயிருவோம்; வாங்க.''

ஒத்த ஒத்தக் காலா எட்டுவச்சுப் பள்ளத்துல பதறாம எறங்கி ரெண்டு கையிலயும் தண்ணிய ஆசையா அள்ளுனா கருவாச்சி.

அள்ளிப் பாத்தா -

தண்ணியில என்னென்னமோ மெதக்குது. தண்ணி ஒழுகவும் உத்துப் பாத்தா ரெண்டு கையிலயும் சடைசடையா ஒட்டிக்கிட்டு நெளிநெளிநெளின்னு நெளியுதுக புழுவுக. 'யாத்தே'ன்னு அலறி ரெண்டு கையும் ஒதறினாலும் போக மாட்டேங்குதுக புழுவுக.

தண்ணி தேங்குற எடத்துக்குப் புழுவு வந்து சேந்துச்சா... இல்ல புழுவு கெடந்த பள்ளத்துக்குத் தண்ணி வந்து சேந்துச்சான்னு கண்டுபடிக்க முடியாதபடிக்கு அடை அடையா அப்பிக் கெடக்கு தண்ணியும் புழுவும்.

வந்தது வந்தாச்சு. வெறுங் கொடத்தோடயா போறது? ஊரே உள்நாக்கு ஒட்டிக் கெடக்கே.

பாறைப்பள்ளத்துல நின்னவ அண்ணாந்து பாத்தா.

ராசா மக தலைக்குத் தண்ணி ஊத்திட்டுக் காத்தாடக் காய வைக்கிற மாதிரி கொடியோடிப்படந்து நிக்கிது ஒரு கொடிக்கள்ளி. வயசாச்சுல்ல... ஏற முடியல. இடுப்பப்புடிச்சு இந்தா இந்தான்னு மேல வந்து அஞ்சாறு கொடிக்கள்ளியப் பால் ஒழுக இணுங்குனா. கொண்டு வந்த கொடிக்கள்ளியத் தண்ணியில போட்டா. பால் காட்டத்துக்கும் அதுக்கும் ஒட்டிக் கெடந்த புழுவுக ஓடி ஓடி ஒதுங்குதுக. கொடிக்கள்ளி விழுந்த பாகத்துக்கு இப்பப் புழுவில்லாம இருக்கு தண்ணி. இடுப்புச் சீலய அவுத்து முந்தானைய வீசியெறிஞ்சா தண்ணியில. இப்ப சீல சல்லடையாகிப் போச்சு. எல்லா மொடாவுலயும் கொடத்துலயும் நெப்பிக்கிட்டு இறங்கி வாராக பொம்பளைக.



படிப்பகம்

padippakam

இவுக தண்ணி சொமந்து ஊருக்குள்ள நொழைய, கத்தாழங் கெழங்க வெட்டிக் கையில புடிச்சு நிக்கிறான் கொண்ணவாயன்.

மஞ்சத் தண்ணியில உப்புப்போட்டு ஊறவச்சா கெழங்க. கள்ளியும் கத்தாழைமட்டையும் புளியம்பொட்டும் போட்டு அடுப்பெரிச்சா. குழைய அவிச்சா. அருவாள எடுத்துச் சின்னச் சின்னதா வகுந்து, தின்னுங்க மக்கா தின்னுங்கன்னு வந்தசனம் போனசனத்தையெல்லாம் கூப்பிட்டுக் கூப்பிட்டுக் குடுத்தா. ஆணும் பொண்ணும் அம்புட்டுச் சனமும் கையெடுத்துக் கும்புடுதுக கருவாச்சிய.

மொடாத் தண்ணியக் கொதிக்க வச்சுக் குளிரவச்சுத் தண்ணிப் பந்தலும் போட்டுப்புட்டா ஊர் மந்தையில.

'இந்த மகராசிக்காகவாவது மழைபேஞ்சா என்ன'ன்னு கண்ணமூடி யோசிக்குது மேகக்கூட்டம்.

●

''திம்சு ஊரவிட்டுப் போயிட்டாளாம்...
திம்சு ஊரவிட்டு போயிட்டாளாம்...''

விடிஞ்சு இதே பேச்சாயிருக்கு வீட்டு வீட்டுக்கு.

தெருவுல கயித்துக்கட்டில் போட்டுப் படுத்திருந்த கழுவன் கெழவன் சொல்றாரு: ''தலக்கோழி கூப்பிட ரெண்டு வண்டிக வந்துச்சு ஊருக்குள்ள. ஒரு வண்டி கட்டை வண்டி; இன்னொண்ணு வில் வண்டி. அண்டா, குண்டா, அம்மிக்கல்லு, சாமான் சட்டெல்லாம் கட்டை வண்டியில போச்சு. பொட்டி படுக்கை தலகாணியோட வில் வண்டியில ஏறிப் போனா திம்சு. சத்தில்லாத நாய்க ரெண்டு குலைக்கத் தெரியாமக் கொலச்சுக்கிட்டே வண்டியத் தொடுத்துப் போச்சுக. அப்பறம் படுத்துக்கிருச்சுக பாதியிலயே.''

''திம்சு மட்டும்தான் போனாளா... கட்டையனையும் கையோட கூட்டிட்டிப் போயிட்டாளா?''

''நீ வேற... கொரங்க மடியில கட்டிக்கிட்டா அவ கூத்துப் பாக்கப் போவா? இத்தமொறம், பிஞ்சபிரம்புக்கூடை, கட்டையன் இந்த மூண மட்டும் வீட்ல விட்டுட்டு வெளியேறிட்டாப்பா ''

''பின்னத்தேவன்பட்டி அருவா மூக்கனுக்கு வீட்ட வித்துப்புட்டாளே!''

''வெள்ளிக்கிழமைக்குள்ள வெளியேறிக்கன்னு கெடு வச்சிட்டானாம் அந்தக் கெட்ட சாதிப்பய. அப்பவும் வெளிய வராம உள்ளயே கெடந்திருக்கான் கட்டையன். அருவா மூக்குல கதவுல கொத்திக் கொத்திச் சொல்லிட்டுப் போயிட்டானாம் வெளியேறிக்க வெள்ளிக்கெழமைன்னு''

''காலம் பண்ற கூத்தப் பாத்தியாப்பா. அப்பனும் செத்துப் போனான்; சொந்தபந்தம் இல்ல. சுத்தி ஒரு நாதி இல்ல. கட்னவள விட்டுட்டான்; கட்னவ விட்டுட்டா; பொழப்பு சிக்கலாப் போச்சு; உடம்பு சீக்காப் போச்சு. நம்பவச்சுக் கழுத்தறுத்திட்டுப் போய்ட்டாளேப்பா ஒரு கசவாடச் சிறுக்கி.''




படிப்பகம்

''தங்கம்ன்னு ஊரையே நம்பவச்சு இளிச்சிட்டுப் போயிருச்சே ஈயம், கடைசியில கட்டையன அனாதியாக்கிருச்சே காலம்.''

●

ஊர்ல பட்டினியாக் கெடக்கு பாதி சனம். மாடுகள வித்துத் தின்னாச்சு. ஆடுகள அடிச்சுத் தின்னாச்சு. நடக்கமாட்டாத கெழவன்களும் கண்ணு தெரியாத கெழவிகளும் இப்பவோ பெறகோன்னு இழுக்க ஆரம்பிச்சிருச்சுக.

பசுமாட்டையும் கன்டையும் வித்துக்கூட கருவாச்சி ஊருக்குக் கஞ்சி ஊத்திப் பாத்தா. சுட்ட பாறை மேல விழுந்த சொட்டுத்தண்ணி மாதிரி அது ஒண்ணுக்கும் ஆகல.

எப்பவோ முடிஞ்சுவச்ச கல்லுப்பயறும் தட்டாம்பயறும் காப்படி அரைக்காப்படி இருந்துச்சு வீட்ல. அரைப்படி சோளஅரிசி இருந்தாப் போதும். மூணையும் ஒண்ணாப் போட்டுக் காய்ச்சிக் கஞ்சித் தண்ணிய மட்டும் எடுத்துக் குடிச்சுக்கிட்டேயிருந்தா ஒரு வாரத்துக்கு ஊறவச்சுக்கிரலாம் உசுர.

எங்க போறது சோளஅரிசிக்கு?

''எ...எ...எலிப் பொந்து எதாச்சும் தோ... தோ... தோண்டி தா... தா... தானியமிருந்தாக் கொண்டாரேன்.''

கடப்பாரை கையில புடிச்சு, மம்பட்டியையும் தோள்ல போட்டுக் கௌம்பிட்டான் கொண்ணவாயன்.

தோள்ல போட்ட மம்பட்டி முதுகுல ஒக்காராமக் கூன்ல ஒரு ஓரமா இடிச்சு இடிச்சு இம்ச பண்ணிக்கிட்டே போகுது.

எலியும் எறும்பும் மழைக்காலத்துக்குச் சேத்துவச்ச இருங்கச் சோளம், வரகு, விருவிட்டான்பயறு ரெண்டு மூணு வருசத்துக்கு ஒண்ணும் ஆகாது. மனுசன் வெதச்சதக் களவாண்டுட்டுப் போயி எலி தின்னப்பாக்குது. மனுசப்பய கெட்டசாதிப் பய. எலி களவான்டுட்டுப் போனதையும் எடுத்துத்தின்டுபுட்டு, அந்த எலியையும் சேத்துத் தின்னுபுடுறான்.

வங்காடுகள்ல அலஞ்சு அலஞ்சு கொண்ணவாயன் கடைசியாக் கண்டே புடிச்சுப்புட்டான் ஒரு எலிச்செலவ.

இத்த வேட்டியப் பொத்துனாப்புல ஒதறி இடுப்புல கட்டி, அக்கினி குண்டத்துல போட்டாலும் எரிய மாட்டேன்னு அழுக்குப் புடிச்சு நிக்கிற துண்டத் தலையில உருமாக் கட்டி, போட்டான் கடப்பாரையப் பொந்துல. பொது பொது பொதுன்னு எறங்குது கடப்பாரை. போயிக்கிட்டேயிருக்கு பொந்து.

''எ...எ...எங்க போனாலும் வி...வி...வி.. விடமாட் டேண்டி...''

மம்பட்டி கடப்பாரையை மாத்தி மாத்திப் போட்டு பத்துப் பதினோரு பாகம் கடந்து போனா பொந்தாங் குழியில பளிச்சுன்னு தெரியுது அஞ்சாறு இருங்கச்சோளக் கருது. இன்ன அளவுன்னு இல்ல கொண்ணவாயனுக்கு வந்த சந்தோசம். புதையலக்கண்டவன் மாதிரி பூரிச்சுப் போனான் பூரிச்சு.

padippakam

''போ... போ... போங்கடி பிள்ளா''ன்னு கடப்பாரையையும் மண்வெட்டியையும் வெறுந்தரையில வீசிட்டு ரெண்டு கையையும் நீட்டி அள்ளுனான் மண்ணோட மண்ணாக் கெடந்த இருங்கச்சோளக் கருத. கருதையும் அள்ளிப்பிடலாம்; களவாண்ட எலியையும் அமுக்கிப்படலாங்கற வெறியில வெரசு வெரசாப் பள்ளம் பறிச்சு உள்ளவிட்டான் கைய.

அம்புட்டுத்தான்!

எலியை முழுங்கிட்டுப் பொந்துக்குள்ள சுருண்டு கெடந்த கருநாகம் பொட்டுன்னு போட்டுத் தள்ளிருச்சய்யா கொண்ணவாயன.

''யா... யா... யாத்தே''ன்னு தெறிச்சு விழுந்தான் கொண்ணவாயன். கடிவாயிலிருந்து விறுவிறுன்னு ஏறுது வெசம். 'வாடி வெளிய'ன்னு வலி உள்ள போயி உசுர இழுக்குது. செத்தவடத்துல வலது கண்ணு தெரியாமப்போச்சு. குழிவெட்டுன புழுதிமண்ணுல கெடந்து உருளுது இத்து எலும்பாப்போன ஒத்தநாடி ஒடம்பு. ஓங்கிக் கத்தவும் முடியல. கத்துனாலும் சத்தம் போயி முடியிற எடத்துல ஒரு ஆளுமில்ல. வெசம் ஏற ஏறப் பச்சத்தண்ணியாச் சில்லுன்னு போச்சு மேனி; இன்னொரு கண்ணும் மங்குது; எதைப் பாத்தாலும் வெளேர்ன்னு தெரியுது.

கடிவாயில கட்டலாமின்னு அத்துப்பாத்தான் அன்னாக்கயிற; அது அக்க வரல. வகுறு பொருமுது; நெஞ்ச அடைக்குது; கைகால் வேற வீங்குது; உடம்புல பச்சநீலம் பாயுது.

'பாம்பு கடிச்சா மூத்திரம் குடி' எப்பவோ யாரோ சொன்னது அவன் மண்டக்குள்ள பளிச் பளிச்ன்னு தெறிக்குது. முக்கிமுக்கிப் பாத்தான். ஒண்ணுக்கு வாரமாதிரி இருக்கு; வரல. ரெண்டுக்கு வாரமாதிரி இருக்கு; வரல.

செத்தவடத்துல வாயில நொர வந்திருச்சு; அப்பறம் மூக்கு வழியாவும் முட்ட ஆரம்பிச்சிருச்சு.

''அய்... அய்... அய்... '' மொனங்கிக்கிட்டே இருந்தான்; தல தொங்கிப் போச்சு; அனாதிக் காட்ல உசுரும் போயிருச்சு. பாவிப்பய 'அய்யோ'ன்னு சொல்ல வந்தானோ? 'அய்யக்கா'ன்னு சொல்ல வந்தானோ? அது அவனோடய அடங்கிப்போச்சு.

சேதி தெரிஞ்சதும் ''மகனே கொண்ணவாயா''ன்னு கதறுனா பாருங்க கருவாச்சி... ஆத்தா செத்தன்னக்கிக் கூட அவ அந்தக் கத்துக் கத்தல.

''என்னியத் தூக்கிப் போடத் தானடா ஒன்னிய நான் வளத்து வச்சேன்; ஒன்னியத் தூக்கிப்போட விதிவச்சிருச்சே என்னிய.''

கொண்ணவாயனப் பொதச்சுட்டு ஊரே பட்டினி கெடந்துச்சு ஒரு நாள் முழுக்க. பாதி வீட்ல ஒல வைக்கல; பாதி வீட்ல ஒல வைக்க ஒண்ணுமே இல்ல.

அஞ்சாறு நாளா அழுதழுது கண்ணுவீங்கிப் போன கருவாச்சி லேசா இடுப்பப் புடிச்சு எந்திரிச்சா.

கொண்ணவாயன் கடைசியாத் தோண்டிக் குடுத்த இருங்கச்சோளத்த ஒரல்ல போட்டுக் குத்துனா.



படிப்பகம்

அவ குத்தக் குத்த நெஞ்சில இருந்த பாரமெல்லாம் ஒலக்கையில எறங்குது; ஒரல்ல விழுகுது ஒரு சொட்டுக் கண்ணீரு. சோள அரிசியையும் பயறையும் ஒரு மொடாவுல போட்டுக் காய்ச்சினா.

மொடாவத் தூக்கித் தெருவுல வச்சுக்கிட்டு வந்தசனம் போன சனத்தையெல்லாம் கூப்பிட்டுக் கூப்பிட்டுச் சொல்றா: ''குடிங்க மக்கா குடிங்க... எம்பிள்ள கொண்ணவாயன் குடுத்த கஞ்சி. ''

அழுத கண்ணு அடங்காம, மோந்து மோந்து ஆளுக்கொரு அகப்பையா ஊத்திக்கிட்டேயிருக்கா கருவாச்சி. வகுறு வெறும் வகுறாத்தான் கெடக்கு. ஆனா அவளுக்கு மட்டும் பசிக்கல. நெஞ்ச அடைச்ச துக்கம் இறங்கி இறங்கி வயித்தையும் நெப்பிருச்சு பாவம்.

அப்பத்தான்...

வெயில்ல வேர்த்து விறுவிறுத்து முதுகுல ஒரு கோணிப்பையும் சொமந்து ஒரு சடாமுடிச் சாமியாரு விசாரிச்சுக்கிட்டே சொக்கத் தேவன்பட்டிக்குள்ள வாராரு:

''இந்த ஊரில் கருவாச்சி என்பாளின் குடில் எது காட்டுங்கள்''

padippakam



# 41

கருவாச்சியத் தேடிவந்த சாமியாரு ஏதோ பஞ்சத்துக்கு ஆண்டியான பரதேசி இல்ல; சம்சாரத்தக் கட்டிமேய்க்க முடியாம சந்நியாசி ஆனவரும் இல்ல. பழுத்த படிப்பாளி; சகல மொழிகள்லயும் சடுகுடுபாடி வெளையாடுவாரு; வெளிவேசங்கட்டாத அறிவாளி. சுருளிமலையிலருந்து இமயமல வரைக்கும் நடந்தே கடந்த ஆளு.

படிப்பகம்

பொறப்புன்னா என்னா? பொழப்புன்னா என்னா? நான்னா என்னா? பூமி சுத்துற பூர்வீகம் என்னா? பிரிஞ்சு போற ஆத்மா இன்னொரு சரீரம் சேருமா?

உண்மையான ஞானகுரு யாரு? எல்லாக் கேள்விக்கும் பதில 'இந்தா இந்தா'ன்னு எட்டிப்புடிச்சிட்டாரு.

ஒரே ஒரு கேள்விக்கான பதில் மட்டுந்தான் அம்பத்தாறு தேசம் அலஞ்சும் அகப்படல.

'ஞானம்ங்றது அறிவா? அனுபவமா?'

''இதுக்கான பதில் சிக்குமா... இல்ல கடவுள் மாதிரியே கடைசி வரைக்கும் காணக் கெடைக்காமலே போயிருமா''ன்னு அனாதியா அலையிறாரு சாமியாரு. தேசாந்தரம் போயித் தெக்க திரும்பிவரவும் காத்து வாக்குல சொன்னாக கருவாச்சி கதைய. ''வாழ்வே தவமாய் வலிகளே வரமாய் இப்படியும் ஒரு பெண்மகளா?'' அவள நெனைக்க நெனைக்க சாமியாருக்கு நெத்தியில வெளக்கு எரியுது. படிக்காத பாமரச்சி பொழச்ச பொழப்புல இவர் கேள்விக்குண்டான பதில் இருக்கிறதா அவர் புத்திக்குள்ள கெளலி கத்துச்சு போலருக்கு. பொடிநடையாப் புறப்பட்டு வந்துட்டாரு சொக்கத்தேவன் பட்டிக்கு.

''எனக்கும் ஒரு கவளம் தருவாயா தாயே? ''

மொடாவுல அகப்பைய விட்டு மோந்து மோந்து போட்டுக் கிட்டிருந்த கருவாச்சி கேக்காத ஒரு குரலும் கேக்காத ஒரு மொழியும் கேட்டதும் தன்ன மறந்து அண்ணாந்துபாத்தா.

சும்மா ஊறப்போட்ட தேங்காநாரு மாதிரி சடையோட, நெஞ்சுல எறங்கிச் சம்மணங்கால் போட்டு உக்காந்திருக்கிற எலவம் பஞ்சுத் தாடியோட ஒரு சாமியார் கையேந்தி நிக்கக் கண்டதும் அகப்பைய மொடாவுல விட்டுட்டு அவரையே பாக்குறா கருவாச்சி.

கெடையில கெடந்த செம்பிலியாடு மாதிரி புழுதியடிச்சுக் கெடக்குற திரேகத்துல கண்ணுக ரெண்டுமட்டும் பளிங்காங் குண்டுகமாதிரி 'பளிச் பளிச்சு'ன்னு மின்னுதுக. இருதயத்த அராவி உசுர்க்கூட்ட அறுக்குது அந்தக் கெட்டியான பார்வ.

கையேந்தி நிக்கிற சாமியாரக் கையெடுத்துக் கும்புடுறா கருவாச்சி.

காத்தில்லாத எடத்துல நின்டு எரியிற தீபம் மாதிரி சிமிட்டாமக் கருவாச்சியப்ப ந்து நிக்கிது சாமியார் கண்ணு. கெடச்சுப் போச்சு கேள்விக்கு பதில்ன்னு நிம்மதியில நெறஞ்சு நிக்குது அவர் மனசு.

இத்துப்போன நெஞ்சுக் கூட்ல ஏகப்பட்ட நெனப்பு ஓடுது சாமியாருக்கு:

''நீதான் கருவாச்சி என்னும் பெயரிய ஞானமணித் திருவிளக்கோ? என் தத்துவத் தேடல்களின் பூரணமையம் நீயோ? எம் பெருமான் வள்ளுவரும்

padippakam

திருமூலரும் ஞானமுனிகளும் வேதரிஷி களும் அந்தரத்தில் தேடியலைந்த அறப்பொருள் நீதானோ? உன்னைக் கண்டதும் நாபிக்கிழங்கிலிருந்து புறப்படும் ஞானவாசனையால் என் இருதயம் கமழ்ந்து வழிகிறது பெண்ணே! புதிர்கொண்ட வாழ்வை எப்படி நீ எதிர்கொண்டாய் என்று காற்றின் நாவுகள் என் காதில் கிசுகிசுத்தன தாயே! நீயே கர்மயோகி! நீயே தவம்! நீயே ஞானம். சரீரம் - மனம் - ஆத்மம் - பிரும்மம் என்ற நான்கையும் நான்காகக் கருதி வாழும் நாங்கள் ஆஷாட பூதிகள். எந்தக் கல்வியறிவுமில்லாமல் இந்த நான்கும் ஒன்றென்று கருதி வாழும் நீயல்லோ ஞானகுலமாதரசி!''

ஏந்தி நின்ன சாமியார் கையி ரெண்டும் ஒண்ணுசொன்னாப்புல குமிஞ்சு கும்புடுது கருவாச்சிய.

சாமியாரு கண்ணுலயே நிலகுத்தி நின்ன பார்வைய விருட்டுன்னு வெளிய எடுத்து, வெளக்கமாத்த வச்சு வெளித்திண்ணையச் சல்லு சல்லுன்னு நாலு தள்ளுத் தள்ளிட்டு அதுல இத்த சாக்க விரிச்சு 'உக்காரு சாமி'ன்னு ஓடிவந்து கூப்பிட்டா.

ஒரு சொல்லும் சொல்லாமத் திண்ணையில மேருதண்டாசனம் போட்டமாதிரி முதுகுத் தண்ட நிமித்தி நட்டுக் குத்தலா உக்காந்தாரு சாமியாரு.

அவ ஈயத்தட்டக் கழுவி முந்தியில தொடச்சு நீட்டவும் சாமியார் ரெண்டு கையையும் குமிச்சு மறுபடியும் ஏந்துனாரு:

''உன்கரம் அட்சய பாத்திரம்; என்கரம் பிச்சைப் பாத்திரம். உன் திருக்கரம் பட்ட திருவமுது பரிமாறு மகளே.''

அவ தண்ணிக்குள்ள கையவிட்டுக் கஞ்சியமட்டும் புழிஞ்சு புழிஞ்சு போட்டா.

பருக்கையெல்லாம் தாடிமீசைக்குள்ள சிக்கிச் செதறி விழுக, தேவாமிர்தமா நெனச்சு, நின்னு நிதானமா மென்னு மென்னு திங்கிறாரு சாமியாரு.

''அண்டங்கடக்க முடிந்த மாமுனிகளும் அன்னம் கடக்க முடியவில்லையே தாயே. ''

''நம்ம பேச்ச மனசு கேட்டாலும் கேக்கும்; ஒடம்பு கேக்குமா? இருக்கட்டும்... இந்தப் பஞ்சகாலத்துல காக்கா பறக்காத காடு தேடி வந்திருக்கீகளே... நீங்க யாரு சாமி?''

''நான் யாரென்று காணத்தான் உன்னைச் சரணடைந்தேன் மகளே. ஆதியோடந்தம் அறிவேன் உன் வாழ்வை. உன் அனுபவத்தோடு என் அறிவைச் சோதிக்க வந்தேன். வெற்றி பெறுகிறேனோ இல்லையோ தோற்றுப்போகமாட்டேனென்று தொடங்கினாயே உன் வாழ்வை. இப்போது சொல்! வெற்றியா தோல்வியா உன் வாழ்வு?''



படிப்பகம்

கஞ்சிப்பானக்குள்ள கையவிட்டு உதுந்த சோத்த ஒண்ணு தெரட்டிக்கிட்டே கருவாச்சி யோசிச்சா.

''சாமி! செயிக்கறது தோக்கறது எப்ப வருது? சண்டைக்குப் போனாத்தான வருது? நாந்தான் சண்டைக்கே வரலன்னு தள்ளி நின்னு போனேனே. நான் எங்கிட்டுத் தோக்கறது?''

''வா யுத்தத்திற்கு என்று வாழ்க்கை உன்னை அழைக்கும் பொழுது களங்காண மறுப்பது கோழைத்தனமாகாதா?''

''எப்பிடி சாமி ஆகும் ...? இத்துனூண்டு பலம் போதும் அடிக்கிற ஆளுக்கு. அடியைத் தாங்குற ஆளுக்குத்தான் பெரும்பலம் வேணும். எது பெருசு? அடிக்கிற சித்துளியா? அடிதாங்குற பாறையா?''

உச்சி மண்டையில சாமியாருக்குப் பட்டுன்னு வெட்டிட்டுப் போச்சு ஒரு மின்னலு.

ஆகா! 'பொறுமை கொள்வதும் குற்றங்களை மன்னிப்பதுமே உறுதிமிக்க வீரச்செயலாகும்' என்ற திருக்குர்ஆன் மொழியை இவள் வாசித்திருக்க வாய்ப்பில்லை; ஆனால் வாழ்ந்திருக்கிறாளே!

தண்டித்தல் என்பதும் ஒரு சமூகதர்மம்தானே! நீ ஏன் தண்டிக்கத் தலைப்படவில்லை?''

''சாமி! பல்லுக்குப் பல்லுன்னா ஒலகமே பொக்கவாயாப் போயிரும். கண்ணுக்குக் கண்ணுன்னா ஒலகமே குருடாப் போயிரும். யாராச்சும் ஒருத்தர் நிறுத்தியாகணுமில்ல; நான் நிறுத்திட்டேன்.''

அப்படியே கண்ண மூடி நெத்தியில நெருப்பெரிய விட்டாரு சாமியாரு. ''ஞானமார்க்கங்களின் சாரமாயிற்றே இந்த வார்த்தை! எப்படிக் கற்றாள் இந்த ஏடறியாப் பாமரச்சி?''

''கண்ணுக்குக் கண் பல்லுக்குப் பல் என்று கூறப்பட்டிருப்பதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள் ஆனால் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் தீமை செய்பவரை எதிர்க்க வேண்டாம். உங்களை வலக்கன்னத்தில் அறைபவருக்கு மறுகன்னத்தையும் திருப்பிக் காட்டுங்கள்.''

மத்தேயு நற்செய்தி இந்த மாதரசிக்கு எப்படிப் பரிச்சயமாயிற்று?

சாமியார் கண்ணத் தொறக்க, கையில இன்னொரு கவளம் புழிஞ்சு வச்சிருந்தா கருவாச்சி.

''உன் வாழ்வில் நீ தோற்றுப் போனதாய் உன்னை வாழவிடாதவர்கள் சொல்லலாமில்லையா?''

''எப்பிடி சாமி சொல்லுவாக? நான் ஊருக்கெல்லாம் முந்தி விரிச்சு அவுசாரியாப் போயிருந்தாத் தோத்துப் போயிருப்பேன். எம் புருசன அருவாள எடுத்து வெட்டிட்டுத் தூக்குக்குப் போயிருந்தாத் தோத்துப் போயிருப்பேன்.

padippakam

என் வழிக்கு வராத மகனக் கொல்ல எலி மருந்து வச்சிருந்தா நான் தோத்துப் போயிருப்பேன். இல்ல ஆத்துல கெணத்துல விழுந்து செத்திருந்தா நான் தோத்துப் போயிருப்பேன். செயிக்கிறதுன்னா என்னா சாமி? எல்லாரையும் அழிச்சிட்டு ஒருஆளுமட்டும் பொழைக்கிறதா செயிக்கிறது? எல்லாரையும் பொழைக்கவிட்டுத் தானும் பொழைக்கிறதுதானே செயிக்கிறது?''

''ஆமாம் ஆமாம்'' சன்னமாத் தலையாட்டிக்கிட்டாரு சாமியாரு.

''இளம்வயதில் கணவனால் வீசியெறிப்பட்டவள் தபசிகளும் யோகிகளும் கடக்கமுடியாத இந்திரியங்களை எப்பிடி வென்றெடுத்தாய் மகளே?''

''நானும் மனுசிதானே சாமி. கெட்ட ஆசைக அப்பப்ப வந்து எம் முந்தானையில முள்ளுப் போட்டு இழுத்திருக்குக. 'ஏய் பக்கிகளா! சும்மா கெடங்க'ன்னு அப்பப்ப அதுகள அமட்டி வச்சிருக்கேன். இன்னொண்ணு சாமி எதை மறக்காம இருக்கப் பாக்கிறீகளோ அதுல நல்லதையே நெனச்சு வாங்க; லேசுல மறக்காது. எதை மறக்க நெனைக்கிறீகளோ அதுல கெட்டதையே நெனச்சு வாங்க; பொட்டுன்னு மறந்து போயிரும். ஒரு நாள் நெனச்சேன் சாமி. இந்த ஆம்பள பொம்பள சொகம் இருக்கே, இது நல்ல கழுதையா இருக்க முடியாதுன்னு நெனச்சேன். கடவுள் வார வழியும் கழிவுத்தண்ணி வார வழியும் ஒரே வழியாவா இருக்க முடியும்? இருக்காதுன்னு நெனச்சேன். அன்னைக்கிப் படுத்ததுதான் என் ஆசையெல்லாம்; ஆயுசுக்கும் எந்திரிக்கல.''

''இவள் யோகிகளின் யோகி. பர்த்ருஹரிக்கே இவள்தான் ஞானத்தாய்.'' கண்ணப் பொத்துனாப்புல மூடிச் சத்தமில்லாம மொனகிக்கிட்டாரு சாமியாரு.

''உன் கணவன் என்ற ஆணுக்கும் உன் மகன் என்ற ஆணுக்கும் இடையே என்ன வேறுபாடு கண்டாய் பெண்ணே?''

''பெருசா வித்தியாசம் தெரியல சாமி. புருசன் என் வழியில வந்துட்டுப் போன ஆம்பள. பிள்ள என் வழியா வந்த ஆம்பள. ஆம்பளைக ஆம்பளைகதான். ரெண்டு சொந்தமும் என்னியக் கேட்டு வரவுமில்ல; என்னியக் கேட்டுப் போகவுமில்ல. அதனால வருத்தமில்ல.''

''வருத்தமில்லாதிருந்திருக்கலாம். வாழ்வின் வழியெங்கும் துரோகங் களையே சந்தித்த நீ கடுஞ்சினம் கொண்டிருக்கக்கூடும். யார் மீது?''

''என் பொழப்பு - பொறப்பு ரெண்டுமே எம்மேல கோவமாயிருக்கிறப்ப நான் யாரக் கோவிக்கிறது சாமி? அப்படியே கோவிச்சாலும் ஒரு கோவத்தத் தீத்திருமா இன்னொரு கோவம்? தீய வச்சா அணைப்பீக தீய? முடிஞ்சமட்டுக்கும் தண்ணியா இருந்து பாப்பம்ன்னு இருந்துட்டேன். கோவம்ங்கிறது புத்தி மாறாட்டமா இல்லையா? கிறுக்கன எப்பவும் கிறுக்குப் புடிச்சிருக்கு; கோவக்காரன அப்பப்பக் கிறுக்கு புடிச்சுட்டுப் புடிச்சுட்டுப்





படிப்பகம்

போகுது. ஒரு குடும்பம் என் குடும்பத்து மேல வச்சிருந்த கோவத்துலதான சாமி என் பொழப்புல நெருப்பு விழுந்துச்சு. நானும் கையில நெருப்பெடுத்தேன்னு வச்சுக்குங்க, எல்லாமே அழிஞ்சு போயிருக்கும் சாமி!''

கபால ஓட்டுக்குள்ள மின்னுட்டாம் பூச்சிகளாப் பறக்குது சாமியாருக்கு. கண்ணு ரெண்டையும் இறுக்க மூடிக்கிட்டு, சத்தமா ஒரு மூச்ச உள்ளுக் கிழுத்துச் சத்தமில்லாம வெளியவிடுறாரு சாமியாரு.

'இவள் ஞானி. கல்லாதாள் என்று இவளைச் சொல்லுதல் பாவம். இந்தப் புழுதிமண்ணின் புத்திரிக்குக் காலமே கலாசாலை; அனுபவமே ஆசான்; வாழ்வே கல்வி.

சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப் புணையைச் சுடும்.

குறளை இவள் எங்கு சென்று ஓதினாள்?

பொருளே பற்றுறுத்தும்;
பற்று ஆசையாய் முற்றும்;
அவ்வாசை தடைப்படின்
சினமே தீயாய்ப் பற்றும்;
சினம் சித்தம் குழப்பும்;
சித்தக் குழப்பம் புத்தியழிக்கும்;
புத்தி அழிவுறின் சரீரம் ஆத்மம் சரியும்;

கீதையின் சாரத்தைப் பேதை இவள் பெற்றதெங்ஙனம்? பூமிக்கும் மழைக்கும் நேரடித் தொடர்புபோல் இறைக்கும் இவளுக்கும் நேரடித் தொடர்போ?''

நீ வாழ்ந்த வாழ்வளவில் மனிதர்களின் பலம் எது? பலவீனம் எது மகளே?'' அடுத்த கேள்விய விட்டாரு சாமியாரு.

கருவாச்சி சிரிச்சுக்கிட்டா. அழுக்கு முந்தியை எடுத்து மூஞ்சியும் தொடச்சுக்கிட்டா. வெள்ளமுழி மேல போக மோட்டப் பாத்து யோசிச்சா. பிறகு சொன்னா:

''பேச்சுதான் சாமி. மனுசன் பண்ண நல்லதும் அதான்; கெட்டதும் அதான். இன்னைக்கி வரைக்கும் நாயும் நரியும் சிங்கமும் புலியும் காட்டுக்குள்ள அடிச்சுக்கிட்டே அலையுதுக. ஏன்னா அதுகளுக்குள்ள பேச்சு வார்த்தை இல்ல. மனுசன், பிச்சுப்புடுங்கலத் தீக்கத்தான் பேச்சுவார்த்தை கண்டுபுடிச்சான். பெறகு பேச்சு வார்த்தையே பிச்சுப்புடுங்கலாகிப் போச்சு. ஒரு சொல்லுல இருக்கு சாமி மனுசப் பெறப்பு மண்ணாகுறதும்; பொன்னாகிறதும்.''

லேசாக் கூன்போட்டு உக்காந்திருந்த சாமியாரு 'குபுக்'குன்னு நிமிந்து உக்காந்திட்டாரு.சிவபெருமான் வாங்குன பிரம்படி சீவராசிக

padippakam

முதுகையெல்லாம் பதம்பாத்துச்சுன்னு சொல்ற மாதிரி கருவாச்சி சொன்ன சொல்லுல கண்ணுமுழி பிதுங்கி உக்காந்திருக்காரு சாமியாரு.

''அகோ சங்கரா! ஆதிசங்கரா! உன் ஞான போதத்தை எந்த அலைவரிசையில் இவளுக்கு அறிவித்தாய்? ஆயுதம் என்பது ஒருவரை ஒருவர் அழிப்பதற்கு. சப்தம் (மொழி) என்பது ஒருவரை ஒருவர் இணைப்பதற்கு என்றாயே -

**சஸ்திர பூதோ மர்தபாவே**
**சாஸ்திர பூதோ சப்தபாவே**

உன் மந்திர மொழியை இந்த மாதரசி எவ்வழி அறிவாள்? தத்துவங்களோடு எமக்கு வெறும் எழுத்தறிவு மட்டும்தான்; இவளோ தத்துவமாகவே வாழ்கிறாளே.''

இன்னொருவினா. சாவு குறித்து உன் அனுபவம் என்ன கற்பிக்கிறது மகளே?''

கடைவாய்க்குள்ள சிரிப்ப அதக்கிக்கிட்டே சொல்றா கருவாச்சி:

''பெறப்பப் பெரட்டிப் போட்ட மாதிரி இருக்கணும்சாமி சாவு. பெறக்கறப்ப பெறக்குற உசுரு அழுதுக்கிட்டே வருது; இருக்கிற உசுருக சிரிக்குது. சாகிறப்ப சாகிற உசுரு சிரிச்சுக்கிட்டே போகணும்; இருக்கிற உசுருக அழுகணும். அதான் சாமி நல்லசாவு. எத்தன உசுருக்கு இது வாய்க்குது?''

''அய்யோ! இந்தக் கல்லாச் சிறுமகளின் கனத்த ஞானப் பொருளை வேத விசாரங்களும் பேசவில்லையே!'' அவ சொன்னதக் கண்ணமூடி அசைபோட்டுப் பாக்குறாரு சாமியாரு.

நிறைவாக ஒரு கேள்வி

''ஞானமென்பது அறிவா? அனுபவமா?''

''எல்லாம் தெரிஞ்சவுக நீங்க. இந்தக் கேணச் சிறுக்கியப் போயிக் கேக்குறீகளே! அடுத்தவுக சொல்லிட்டுப் போனது அறிவு. அனுபவிச்சு அறியிறது ஞானம். ரெண்டும் ஒண்ணோட ஒண்ணு ஒட்டித்தான் இருக்கு. காத்துங்கறது உசுர் இல்ல; ஆனா, காத்து இல்லாம உசுரே இல்ல. அப்படித்தான் சாமி அந்தக் கழுதையும்.''

உக்காந்தமேனிக்கு 'மடார்'ன்னு கவுந்து கையி ரெண்டையும் அவள் கால்மாட்ல நீட்டி அவளக் கும்பிட்டு ஒடம்பு குலுங்கினாரு சாமியாரு. உள்ளுக்குள்ள அழுதிருப்பாரோ என்னமோ?

''வாழ்வுக்கு வெளியே ஞானம் தேடியலைந்தேன் நட்சத்திரங்களில் தேனெடுக்கப் பறந்தலைந்த வண்டைப்போல. இதோ என் கண்ணெதிரே ஞானத்தேன் சுமந்திருக்கும் நந்தவனமாய் நீ. குண்டலினி கிளப்ப, புருவ




படிப்பகம்

padippakam

மத்தியில் சுடர்கொளுத்திச் சுகித்தாடும் எனக்கு உன் வாழ்வியலின் ஞானசாரம் வாய்க்கவில்லையே தாயே.

'பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மைஉண் டாகப்பெறின்.'

- என்ற வள்ளுவ வேதத்துக்கு வாழ்வுரு நீ மகளே! 'அர்த்தம் தெரியாமல் வேதம் படித்தவன் சந்தனம் சுமக்கும் கழுதையைப் போன்றவன்' என்று உத்தரகீதையில் கண்ணன் சொன்னானே... அந்த உயர்மொழிக்கு உதாரணம் நான் மகளே.''

கருவாச்சி கால்ல சாமியார் விழுந்து கெடக்குறத ஊரே வேடிக்கை பாக்குது.

''அய்யா சாமி நீங்க கடவுளு. நான் ஒண்ணுக்குமத்த சிறுக்கி. எந்திரிங்கய்யா... எந்திரிங்க. ''

வாயிலயும் வயித்துலயும் அடிச்சு நாலு எட்டுப் பின்னுக்கு வச்சுப் பதறிப்போய் நிக்கிறா கருவாச்சி.

நிதானமா எந்திரிச்சு, சோத்தாங்கையச் சாக்குல தொடச்சிட்டு, அவளக் கடைசியாக் கண்ல பாத்துட்டுத் திரும்பிப் பாக்காம நிதானமா எட்டு வச்சு, செம்புழுதி கெடந்த தெருவழியா நடந்து நடந்து சின்னப் புள்ளியாத் தேஞ்சு கரைஞ்சு காணாமப் போனாரு சாமியாரு.

●

பொழுதடங்குற நேரம். உண்டியலுக்குள்ள விழுகப்போற காசு விரலுக்கு வெளிய மட்டும் தெரியிறமாதிரி அகமலைக்கு அங்கிட்டுத் தெரியுது அரைக்காவாசிச் சூரியன்.

ஒரு காலத்துல இந்நேரமானா மாட்டுமணிச் சத்தம் வீதி யெல்லாம் பெருகி வெள்ளமா ஓடும்; என்னமோ படைவரிசை நடந்துபோற மாதிரி கெடைவரிசை போகும். பஞ்சாரத்துல கவுக்கப் புடிக்கிற கோழிக 'கெக்கக் கெக்கக் கெக்கே'ன்னு கத்திக் குமிக்கிறது காது படைச்ச பெறவிகளுக்கு இன்பமாயிருக்கும். 'ஒங்க வீட்ல நெல்லுக்கஞ்சியாக்கும்; அதான் நெஞ்சத் தூக்கி அலையிறவ.' அந்தமாதிரிப் பொலம்பலும் பொறணியும்தான சத்துக் கெட்ட பொழப்புல அங்கங்க சங்கீதம். ஒரு சத்தமுங் கேக்கல இன்னைக்கு. பஞ்சம் கெட்ட கழுதை; சத்தங்களையும் கொன்டுபுட்டுப் போயிருச்சு.

எழவுவீடு பாத்திருக்கோம்... ஊரே எழவு வீடா ஆகிப் போயிருச்சே. இன்னைக்கு அடுப்புப் பத்தவைக்கவும் ஒண்ணுமில்ல; ஒலையில போடவும் ஒண்ணுமில்லையேன்னு அவ வறட்டுச் சிரிப்பொண்ணு சிரிச்சுக்கிட்டிருந்தப்ப, தலையச் சொரண்டிக்கிட்டே வாசல்ல வந்து நின்னா சலவைக்கார வீட்டுப் பொம்பள.

''என்னா தாயி! எதுக்கு வந்திருக்கவ?''



படிப்பகம்

padippakam

''ஆத்தாளுக்கொரு தகவல் சொல்லணும். ''

''ஏமன் சொல்லியனுப்புனாலொழிய எனக்கென்னாடி தகவல் இருக்கப்போகுது? சொல்லுடி.''

இழுத்து இழுத்து, சொல்லுகளைச் தேச்சுத் தேச்சுச் சொன்னா ஒரு தகவலு.

''அப்பன் பாக்கணுமாம்.. வரச்சொல்லுச்சு ஒன்னிய.''

''யார்றி அப்பன்?''

''அவருதான்... அழகுசிங்கம் அவுக அப்பன் - கட்டையத் தேவரு.''

தப்புன தானியம் ஏதாச்சும் இருக்குமான்னு அடுக்குப்பானைய எறக்கி எறக்கி அடிச்சட்டியில கையவிட்டுத் தடவிக்கிட்டிருந்தவ அதை அப்படியே போட்டுட்டுத் திரும்புனா.

''நெசமாவா?''

''எங்க ஆத்தா மேல சத்தியமாத்தா. அழுக்கெடுக்கப் போனேன்; ஆனா ஆளப்பாக்கல. கதவுக்குள்ளருந்து சத்தம் மட்டும் கேட்டுச்சு. ஒன்னியப் பாக்கணுமாம். ஆனா நீ ஒத்தஆளாத்தான் வரணுமாம்; ஒத்தையில வரணுமாம். ஊருச் சத்தம் ஒடுங்கிப்போன சாமத்துலதான் வரணுமாம். வராம இருந்திரவேணாம்; வரச்சொல்லுன்னு சொல்லி விட்டாரு.''

ஒண்ணும் பேசல கருவாச்சி; குத்துக்கல்லு மாதிரி நின்ட எடத்துலயே நின்டு போனா. ஆயிரம் கரிச்சான்குருவிக அவ மூளைக்குள்ள 'கரிச் கரிச் கரிச்'ன்னு கத்துதுக. எப்பவோ வெந்துபோன முதுகுத்தோலு இப்பச் சுடுது; என்னைக்கோ குத்துன முள்ளு இன்னைக்கு வலிக்குது. தீட்டு நின்னுபோன வயசுல கர்ப்பப்பைக்குள்ள என்னமோ பெரண்டு படுக்கிற மாதிரி இருந்துச்சு.

●

இருட்டிருச்சு; ஊரு ஒடுங்கிருச்சு.

போறதா? வேணாமா?

யோசிச்சா; மூள சுட்டுச் சுண்ணாம்பாகிறவரைக்கும் யோசிச்சா;

நடுச்சாமம் ஆயிருச்சு.

போயித்தான் பாப்பமே

அவுந்த சீலய அவுத்து ஒதறிக் கட்னா. ரெண்டு கையும் தூக்கி நரைச்ச தலைய அழுத்தி வாரிக்கிட்டா. மூஞ்சியில இருந்த வேர்வைப் பசைய முந்தானைய எடுத்துக் கடுசாத் தொடச்சா.

படல்வரைக்கும் போனவ திடீர்ன்னு உள்ள வந்து காடா வெளக்கத் தூக்கிக் கண்ணாடி பாத்துக்கிட்டா.கண்ணுக்குக் கீழயிருந்த கருவளையத்த ஆள்காட்டி விரல்ல அழுந்த நீவிவிட்டா.

ரெம்ப நாளாச்சு குங்குமம் வச்சு; மறந்துகூடப் போச்சு. காடா வெளக்கத்



படிப்பகம்

padippakam

தூண்டிவிட்டுக் குங்கும டப்பியத் தேடுனா. ஒறஞ்சுபோன ஆட்டு ரத்தம் மாதிரி கருஞ்செவப்பா இத்துனூண்டு இருந்துச்சு குங்குமம்; எடுத்து இழுகிக்கிட்டா.

நடந்துட்டா.

முப்பத்தேழு வருசத்துக்கப்புறம் வாக்கப்பட்ட வீடு தேடி எட்டுவச்சுப் போறா.

'வள்வள்'ன்னு ஒரு பட்டினிக்கத்துக் கத்தி அடங்கிருச்சு சொகமில்லாத ஒரு சொறிநாயி.

எலையில்லாத மரத்துல 'உய் உய்'ன்னு அடிக்குது ஊதக்காத்து.

தேசாந்தரம் போயிருந்த மேகங்க எல்லாம் வந்து குமியுதுக மந்தை மந்தையா.

இன்னைக்கு என்னமோ நடக்கப்போகுது இந்த பூமியிலன்னு மேகச்சந்துவழி உத்துஉத்துப் பாக்குது ஓரம் தேஞ்சு ஒச்சமாகிப்போன உச்சி நெலா.



படிப்பகம்

padippakam



# 42

அஞ்சதடியார்த்தா ஓங்கதை... ஓடிப்போன்னு எந்த வீடு வீதியில தள்ளி வெளியேத்துச்சோ அதே வீடு தேடி முப்பத்தேழு வருசத்துக்கு அப்பறம் நடுங்குற காலோட நடந்து போறாய்யா கருவாச்சி.

'பக் பக்'ங்குது மனசு. நெஞ்சாங்கூட்டுக்கும் தொண்டைக் குழிக்குமா தார் போட்ட மாதிரி கெட்டியா என்னமோ கட்டி நிக்குது.

போகலாமா? வேணாமா?

இது நல்லதுக்கா? கெட்டதுக்கா?

பாப்பம்.

படிப்பகம்

நல்லெண்ணத்தோடதான் நான் போறேன்; அப்பறம் விதிவிட்ட வழி.

தொட்டா வெரல்ல ஒட்டிக்கிற்ற கெட்டி ராத்திரி. ஆள் இல்ல; அரவமில்ல. வெறிச்சோன்னு கெடக்கு வீதி. வெதச்ச வெதையெல்லாம் மொளைச்சமாதிரி வெள்ளி பூத்துக் கெடக்கு ஆகாயம். தும்பறுத்த கன்னுக்குட்டிக மாதிரி அதுகபாட்டுக்கு அலையுதுக மேகங்க. தன்ன யாராச்சும் பாக்குறாகளான்னு சுத்தியும் முத்தியும் பாத்தா; ஒரு நாதி இல்ல. கண்ணு முழிச்சிருந்தா கடவுள்தான் பாக்கணும்.

நெஞ்சுல வைராக்கியம் கட்டிநிக்குது; கண்ணுல கண்ணீரு முட்டி நிக்குது. வந்து நிக்கிறா கட்டையன் வீட்டு வாசல்ல. அவ வாக்கப்பட்ட வீடு; இத்துனூண்டு வாழ்ந்த வீடு; அவ கன்னிகழிஞ்ச வீடு; அவ கர்ப்பத்துக்குள்ள காறித் துப்புன வீடு.

கண்ணும் மூக்கும் போன மண்பொம்மை மாதிரி இன்னைக்குக் கண்றாவியா நிக்கிற வீடு.

தலவாசக்கதவு வரைக்கும் வந்து தடுமாறி நிக்கிறா கருவாச்சி. அவ உள்ளங்கால் பள்ளத்துல குறுகுறுன்னு என்னமோ ஊருது.

பயமா? கூச்சமா? புடிபடல ஒண்ணும்.

''வா தாயி! வலதுகால எடுத்து எட்டு வச்சு வா.''

''யாத்தே! இது சடையத்தேவன் குரலா?'' பித்துப்புடிச்சு நிக்கிறவ காதுல முப்பத்தேழு வருசத்துக்கு முன்ன கேட்ட குரல் கேக்குது. மனுசனோ மனுசியோ மறந்தாலும் மனசு மறக்குதா?

தலைவாசக் கதவத் தள்ளுனா.

'க்றீச்'

துருப்பிடிச்சு இறுகிப்போன கதவு எண்ணெய்க்குக் கத்துது.

தலவாசப் படிக்கல்லத் தாண்டி உச்சுனாப்புல ஒரு கால எடுத்து உள்ளவச்சுப் போனா - இங்க நான்தான் இருக்கேங்குது இருட்டு. இந்த வீட்ல மிச்சமிருக்கிற சீவராசி நான்தான்ங்குது வலங் கத்துன ஒரு பல்லி.

''வாக்கப்பட்ட வீட்டுக்கே வந்துட்டியா... வா...''ன்னு அவ மூஞ்சிய ஒரசிப் படக்குன்னு றெக்கையடிச்சுக் கடக்குன்னு கடந்து போகுது ஒரு வெளவால்.

ஒரு தடவை கண்ண இறுக்கி மூடிப் பளிச்சுன்னு முழிச்சா எப்பிடியாப்பட்ட இருட்டும் பழகிப்போயிரும். ரெண்டு தடவ கண்ண மூடிமூடி முழிச்சா; கண்ணு தெரியாத இருட்டு இப்பக் கால் வெளிச்சமாகிப் போச்சு.

நெறஞ்ச வீடு இப்ப நெறங் கொலஞ்சு கெடக்கு.

பிஞ்சுபோன பஞ்சாரம் - ஓட்டச்சாலு - இத்ததோலு - கட்டு அவுந்து குச்சிகுச்சியாக் கெடக்குற வெளக்கமாறு - எல்லாம் திண்ணையில கெடக்கு. கிறுக்குப்பய பிச்சுப்போட்ட தலகாணி மாதிரி உள்வாசல் பூரா குப்பை கூளம்-ஆட்டுப் புழுக்கை - மாட்டுச் சாணி.

padippakam

இதுவீடா? வெட்டியான் மட்டும் குடியிருக்கிற இடுகாடா?

கட்டையன வெளிய காங்கல. தரையத் தடவித் தடவி எட்டு வச்சா. 'யாத்தே'ன்னு காலத் தூக்கிக்கிட்டா. ஈக்கி ஒண்ணு கிழிச்சிருச்சு பெருவிரல் இடுக்குல.

என்னமோ ஒரு வீச்சம் கொடலப் பெரட்டுது. மனுசக் கழிவும் மாட்டுக்கழிவும் ஒண்ணாச்சேந்த மாதிரி ஒரு நாத்தம் உள்ளபோயி மூச்சு முட்டுது.

தடவித்தடவி வந்து சேந்துட்டா கட்டையன் சாத்தியிருந்த உள்வீட்டுக் கதவுப்படிக்கு.

தொறக்குமா? தொறக்கணுமா?

தள்ளிப்பாத்தா; தொறக்கல.

உள்தாப்பாப் போட்டிருக்கு; ஒண்ணும் அசையல.

முப்பத்தேழு வருசமா நெஞ்சாங்குழியில செத்துக்கெடந்த சொல்லு இப்ப உசுர்புடிச்சு ஓடிவருது தொண்டைக்கு.

''மாமா..! மாமா...!''

ஒரு மூச்சுப்பேச்சு இல்ல உள்ள.

''கருவாச்சி வந்திருக்கேன் மாமா... கதவத் தொற.''

ஒரு பதிலும் இல்ல. உள்ள ஆளு இருக்கா இல்லையா? ஒரு துப்பும் துலங்கல.

கொஞ்சநேரம் கழிச்சு உள்ள ஒரு ஆளு எந்திரிக்கிற மாதிரி தெரிஞ்சுச்சு.

ஏதோ ஒரு பொருளக் கையில எடுத்திருக்கணும்; இல்ல கை தவறியிருக்கணும்; 'கடமுடகடமுட'ன்னு சத்தம் கேட்டுச்சு.

கதவு இடுக்கு வழியாத் தெரிஞ்ச இத்துனூண்டு வெளிச்சம் ஏறி ஏறி இறங்குறதுல ஆளும்பொருளும் இடம் மாறுதுன்னு அனுமானம் பண்ண முடியுது.

இப்ப... சுத்தமா நின்னு போச்சு சத்தமெல்லாம்.

வெளிய... ஊதக்காத்து எங்கயோ ஒரு ஓலப்பனையோட 'படபடபட'ன்னு பங்காளிச் சண்டை போட்டுக்கிட்டேயிருக்கு.

''வரச் சொன்னியே மாமா. கருவாச்சி வந்திருக்கேன்... கதவத் தொற''

உள்ள முக்கி முக்கி அழுகுற சத்தம் கேட்டுச்சு. மொனங்கி மொனங்கிப் பொலம்புற சத்தமும் கேட்டுச்சு.

''மாமா... நான் கருவா...''

'தடக்...'

கதவு 'படக்'குன்னு தெறக்கவும் பொசுக்குன்னு அணஞ்சு போச்சு தீபம்.

தெகச்சுத் திக்கு முக்காகி நின்னுபோனா கருவாச்சி;





படிப்பகம்

padippakam

கதவு தொறந்தும் கண்ணு தெரியல.

இருட்டுன்னா இருட்டு... கறுப்பக் கரைச்சு மூஞ்சியில ஊத்துன மாதிரி ஒரு இருட்டு.

உள்ள இருந்து - வீச்சம்ன்னா வீச்சம்... பெருவீச்சம்; வகுத்தப் பொரட்டிப்போட்டு வாந்தி வர்ற வீச்சம். இருட்டு அழுகி இந்த வீச்சம் வீசுதா?

''வா... ''

அதே சத்தம்; அதிகாரச் சத்தம்.

வருசம் இத்தன கழிஞ்சும் நடுங்காத சத்தம்; நரைக்காத சத்தம்.

ஒரு கையில மூக்கப் புடிச்சு உள்ள எட்டு வச்சா.

ஒரு சத்தமுமில்ல; ஒறைஞ்சு ஒசரமா நிக்கிது இருட்டு. கண்ணுமண்ணு தெரியல. அவ இருட்டு வீட்டுக்குள்ள திக்குத் தெரியாமத் திகில் புடிச்சு நிக்க, 'மடார்'ன்னு அவ காலக் கெட்டியாப் புடிச்சு அமுக்குது ரெண்டு கையி.

''என்னிய மன்னிச்சிரு தாயி... என்னிய மன்னிச்சிரு. எம் பாவத்தச் சொல்லியழுக சாமியக் கூப்பிட்டழுதேன்; வரமாட்டேன்ருச்சு; நீ வந்துட்ட. ஒன்னிய நான் படுத்துன கருமாயத்துக்கு என் ரத்தத்தை ஊத்தி ஒன் கால் ரெண்டையும் கழுவணுமடியாத்தா. இப்ப என் ரத்தமும் சுத்தமில்லயே! நான் என்னா பண்ணுவேன்?'' அழுது கத்துறான் கட்டையன்.

நிதானம் தப்பி நின்னவ நிலகுலஞ்சு போனா. அவன் போட்ட சத்தத்துல என்னா நடக்குது ஏது நடக்குதுன்னே அவ புத்திக்குள்ள போய் ஒறைக்கல. காலப் புடிச்ச கைய ஒதறிப் பாக்குறா; மிசுங்க முடியல.

''எந்திரி மாமா எந்திரி. எங் கால விடு. நீ சீர் கெட்ட ஆளாயிருந்தாலும் சிங்கமில்லையா. சிங்கம் விழுகலாமா சிறுக்கி கால்ல...? எந்திரி.''

அவ குனிஞ்சு அவனத் தூக்கப் போனா; அவன் ஒதறி ஓடி ஒதுங்கிப்போனான்.

என்ன நடக்குது... எங்கயிருக்கான்...? ஒரு எழவும் தெரியல இருட்டுல.

இவ எங்க நிக்கிறா? அவன் எங்க இருக்கான்? ஒண்ணும் புடிபடல.''மாமா நீ எங்க இருக்க? தீபம் எங்க இருக்கு? ''

ஒரு பதிலும் காணோம்; அவன் உருவத்தையும் காணோம். 'திக்திக்திக்கு'ன்னு துண்டாத் துடிக்குது இருதயக் கூடு. ''இந்தத் தீப்பெட்டிய எங்கன்னு தேடுவேன்?''

முப்பத்தேழு வருசத்துக்கு முன்னுக்க அவ பொழங்குன வீடுதானே! எடதுபக்கச் சுவத்துல இருக்கு மாடக்குழி. அங்கதான் வழக்கமா வைக்கிறது தீப்பெட்டிய. கைய வீசிவீசிச் சுவரத் தடவுறா.

இப்ப கட்டையன் குரல் கேக்குது; அது அழுது நனஞ்சிருக்கு.

''வந்த வேல முடிஞ்சிருச்சு ஆத்தா. நீ போயிரு. காலம் போன கடைசியில உன் காலப்புடிச்சு அழுகணும்ன்னு நெனச்சேன்; அழுதுட்டேன். போயிரு.''



படிப்பகம்

padippakam

தீப்பெட்டி தேடிச் சுவரத் தடவித் தடவிப் போன வெரலு மாடக்குழியில விழுந்திருச்சு.

தீப்பெட்டியும் தட்டுப்பட்ருச்சு; குச்சிகமட்டும் ஒண்ணோ ரெண்டோதான் இருக்கும் போலருக்கு.

ஒரு குச்சிய ஒரசி உள்ளங்கைக் கூட்ல அணவு பண்ணி அது அணையுமுன்ன காடா வெளக்கு எங்கன்னு கண்டுபுடிச்சா. திரிகிட்டப் போக அணைஞ்சு போச்சு தீக்குச்சி. ஊர்லயிருக்கிற சாமிகளை யெல்லாம் கும்புட்டு, குலதெய்வத்தக் கூப்பிட்டு ''என்னியக் கைவிட்றாதீக சாமிகளா''ன்னு ஏத்தினா ரெண்டாங் குச்சிய. இருட்ட எரிச்சிட்டுத் திரியில போயி உக்காந்திருச்சு தீக்குச்சி. இப்பக் காடா வெளக்கக் கையில எடுத்திட்டா. வெளிச்சத்தையும் கண்ணையும் அங்கங்க அலைய விடுறா.

ஒத்தக்கால் ஒடைஞ்சு கெடக்கு அவ படுத்த பழைய கட்டிலு; அந்தக் கட்டிலுக்குள்ள அடங்காம மொனையில தொங்குது பல்லுப்போன பாயி. மூலையில பிரிமணமேல கெடக்கு அட்டஞ் சாச்ச ஒரு மஞ்சட்டி. குலுக்கமேல சாத்தி வச்சிருக்கு ஒரு பழைய அருவா; அவுக பரம்பரை அருவா.

'ஏ! விட்டமே! என்னிய நீ தாங்குறியா... ஒன்னிய நான் தாங்குறனா'ன்னு அப்பிக் கெடக்கு அடை அடையா நூலாம்படை. தரையெல்லாம் செதறிக் கெடக்குதுக உருட்டி உருட்டியெறிஞ்ச சின்னச் சின்னப் பருத்திப் பஞ்சுக. ஒரு காலத்துல நான் வட்டமாத்தான் இருந்தேன்னு நெளிஞ்சு சொல்லுது வளைஞ்சு வடிவம் மாறிப்போன ஒரு ஈயத்தட்டு. அதுக்குப் பக்கத்துல இருக்கு வாக்கப்பட்டு வந்த காலத்துல அவ தண்ணிகுடிச்ச ஒரு பித்தளச் செம்பு.

கண்டதெல்லாம் கெடக்கே; கட்டையன மட்டும் காணமே!

திருப்பித் திருப்பி அலையவிடுறா தீபத்த.

''வேணாம். என்னியப் பாக்காத. வெளியேறிக்க.'' கட்டில் மறைப்புல ஒரு கம்பளிமூட்ட பேசுது.

''யாத்தே! இங்கயா இருக்க... நீதானா அது?'' கட்டில ஒட்டிப் போறா.

சீலய இழுத்து இடுப்புல சொருகிக்கிட்டுத் தரையில குத்தவச்சா.

எடதுகைத் தீபத்த எறக்கிப் புடிச்சுக்கிட்டு, வலது கையில இழுத்தா கம்பளிய; அது வரல.

''வேணாமடியாத்தா; வெளிய போயிரு. விடிஞ்சா இந்த வீடு என்னதில்ல. விடியுமுன்ன நான் இந்த ஊர்ல இருக்கப் போறதுமில்ல. எங் குலதெய்வம் கால்ல விழுந்து கும்புட்டாச்சு; நான் போறேன்; நீயும் போயிரு; போ!''

''என்னாச்சு மாமா ஒனக்கு? ஏன் ஒவ்வாமப் பேசுற. தேஞ்சாலும் தேயுமே தவிர பாறாங்கல்லு துருப்புடிக்குமா? எந்திரி. எம் மூஞ்சி பாத்துப் பேசு.''

மூட்டை நகந்து நகந்து மூலைக்குப் போச்சு. அவளும் விடுறதா இல்ல; குத்த வச்ச காலு மாறாம எட்டு வச்சுப்போறா. இதுக்கு மேல போக எடமில்லேன்னதும் மூலையில முட்டி நின்னுபோச்சு மூட்டை.





படிப்பகம்

செத்தவடம் சும்மா விட்டுட்டு மூட்டை இறுக்கம் கொறைஞ்சு தளர்ந்த நேரமாப் பாத்து இருக்கிற பலத்தையெல்லாம் கூட்டி இழுத்தெறிஞ்சா கம்பளிய.

கம்பளிய எழந்த கட்டையன் கத்துனான்.

''வேணாம்! வேணாம்! வெளிய போயிரு''

எடதுகையில தூக்கிப் பிடிச்சிருந்த தீபத்தை 'விசுக்கு'ன்னு எறக்கிப் 'பசக்கு'ன்னு அவன் மூஞ்சிபாத்தா.

''யப்பே!''

அரண்டுபோன கருவாச்சி வலதுகையெடுத்து அறைஞ்சுக் கிட்டா நெஞ்சுல.

அடிச்ச அடியில தெறிச்சுவிழுந்திருச்சு நெஞ்ச மூடியிருந்த முந்தான.

தெறந்து கெடக்குற நெஞ்சும் தெரியாம நிக்கிறா.

மூஞ்சியில வெளிச்சம் பட்ட மொசக்குட்டி மாதிரி, பம்மிப் பதுங்கி ஒதுங்குறான் கட்டையன்.

''என்னியப் பாக்காத! என்னியப் பாக்காத.'' கையெடுத்து மூஞ்சியிலடிச்சுச் கத்திக் குமிக்கிறான்.

அவன் மூஞ்சியில அடிச்சு அழுகிற போது கண்டுபுட்டா அவன் பத்துவெரல்ல ஒத்தவெரலும் முழுசா இல்ல. அதுல ஒண்ணு ரெண்டு அழுகி ஒழுகுது. அவன் சின்ன மூக்கு இன்னும் சப்பட்டையாகி மூஞ்சியிலேயே தன்னத் தேய்ச்சுக்கிருச்சு. கட்டான மீச அங்கங்க சொட்ட விழுந்திருக்கு. மடங்கி மடங்கிக் காதுக பாதியா சூம்பிக் கெடக்குதுக. மண்டையில பாதிமுடியக் காணோம்; மிச்ச முடியும் செம்பட்டைபூத்து நிக்குது.

கண்ணுக்குக் கீழ கறுப்புக் கறுப்பா காயம் மாதிரி தழும்புக; தழும்புமாதிரி காயங்க. திரேகம் கொறஞ்சு, தோலு சுருங்கி நாந்தான் கட்டையன்னு சொன்னாலும் நம்பமுடியாதபடிக்கு ஆளு அடையாளம் மாறி, ★குட்டநோவு வந்து கூனிக்குறுகிக் கெடக்கானய்யா கட்டையன். பேயடிச்சமாதிரி புத்திமாறி உக்காந்த கருவாச்சிக்குப் பேச்சும் வரல; அழுகையும் வரல.

கனாக் கண்ட பிள்ள கையமட்டும் தூக்குறமாதிரி வலதுகைய நீட்டித் தொடப்போனா கட்டையன.

''தொடாதடியாத்தா... என்னியத் தொடாத. தொட்டா நான் செத்தே போயிருவேன்; தொடாத.''

தொட்டுப்புட்டா. அவன் தரையில கவுந்தடிச்சுக் கூனிக் குறுகிப் படுத்துக்கிட்டான்; அவ தலையத் தடவி விட்டா.

உதுந்து போனது போக ஒட்டியிருக்கிற முடியக் கோதிவிட்டா. காச்சுப்போன தன் வெரலால காயங்கள நீவிவிட்டா.

★ தொழுநோய்

padippakam

உருத்துள்ள விருந்தாளி மாதிரி சொல்லாம வாரதுதான கண்ணீரு...? வந்திருச்சு.

அழுகிப்போன கையெடுத்துக் கும்புட்டுக்கிட்டே கட்டையன் பொலம்புறான்:

''ரத்தத்துல திமிர் இருக்கிறவரைக்கும்தானடியாத்தா ஆட்டமும் பாட்டமும் அதிகாரமும். ஒடம்பு விழுந்தா மனசு விழுந்திருது; மனசு விழுந்தாத் திமிர் விழுந்திருது. ஒனக்கு நான் பண்ணுன பாவத்துக்கு இந்த வியாதி வரலடியாத்தா. எனக்கு நானே பண்ணுன பாவத்துக்குத்தான் இந்த வியாதி வந்திருக்கு. திமிரா இருக்கறப்ப மனுசன் தன்னப்பத்தியே நெனச்சுத் தலப்பெரட்டுப் பண்றான். மத்தவுகளயும் நெனச்சுப் பார்றா மகனேன்னுதான் காலம் அவன இழுத்துக் கட்டில்ல போட்டுருது.கைகால் விழுந்த காலத்துல மனுசனுக்கு உண்டாகிற நல்லபுத்தி,கைகால் வெளங்குற காலத்துலயே வந்துட்டா யார் குடிக்கிற கஞ்சியிலயும் மண்ணு விழுந்திருக்காது. இப்பப் புத்திவந்துருச்சுன்னு சொல்லி அழுது பொலம்ப ஆளு இல்ல எனக்கு. அப்பன் இல்ல; ஆத்தா இல்ல; சொந்தபந்தம் இல்ல. ஒண்ட வந்தவளும் ஓடிப்போனா. அத்துவிட்டவ நீ ஒருத்திதாண்டி இருக்க நான் அழுது பொலம்ப. திமிராப் பொழச்ச ஊர்ல நான் இப்பிடிச் சீரழிஞ்சு சாகப்படாது. போறேன்; கண்காணாத எடத்துல காணாப் பொணமாப் போயிர்றேன்.''

''எங்க போற.''

''தெரியல''

''எப்பிடிப் பொழப்ப?''

''தெரியல''

''எங்கூட வா. நான் இருக்கிறவரைக்கும் கல்லப் புழிஞ்சாச்சும் ஒனக்குக் கஞ்சி ஊத்துறேன். ''

''மாட்டேன் மாட்டேன்''னு மண்டையக் குலுக்கி முட்டியில மூஞ்சி பொதைச்சுக் கட்டையன் குலுங்கிக் குலுங்கி அழுதான்.

''எந்திரி மாமா. திரேகம் நல்லாருந்தப்ப மனசு அழுகிக் கெடந்த. இப்ப திரேகம் அழுகிப்போன பெறகு மனசு நல்லாயிட்ட''

''ஏண்டியம்மா! ஒனக்குக் கெடுதல் பண்ணியே கெட்டுக் கெழவனாகிப்போனேனே. இந்த நாசமாப் போன பயமேல நம்பிக்கை வச்சிருந்தியா?''

''நம்புனேன் மாமா. நீ என்னைக்கும் எனக்குப் புருசனாக முடியாது. ஆனா என்னைக்காச்சும் மனுசனாக முடியும்ன்னு நம்புனேன் மாமா''

ரெண்டு கையும் கோர்த்து அவன அள்ளித் தூக்குனா. அவன் கையெடுத்துக் கும்புட்டான்; அவ புடிய விட்டு வழுகி வழுகி ஒழுகுனான். ஒழுகி விழுந்தவன ஒண்ணுசேத்துத் தூக்குனா. நிக்கத் தம்பாயமில்லாமப் போனவனத் தாங்கி நிறுத்துனா; அவுந்த வேட்டியக் கட்டிவிட்டா. அவன் கையத் தன்தோள்ல போட்டு, தன்கைய அவன் இடுப்புல போட்டுப் பொடி நடையாக் கூட்டிட்டுப் போறா.



படிப்பகம்

ஊதக் காத்து அடிச்சுக்கிட்டேயிருக்கு; ஒறங்குன ஊரு ஒறங்கிக்கிட்டேயிருக்கு. ஒரு நாயும் குலைக்கல; ஒரு சத்தமும் கேக்கல. இந்த ரெண்டு சீவனும் போறத பூமியில யாரும் பாக்கல.

ஊனப்பட்ட நிலா மட்டும் உச்சியிலருந்து பாத்து சந்தோசத்துல ஒரு கீத்து வளர்ந்து மேகத்துக்குள்ள ஓடி ஒளிஞ்சுபோச்சு. கட்டையனக் கைத்தாங்கலாக் கூட்டிட்டு வந்துட்டா குடிசைக்கு. தீபத்துல கொழுச்சுவச்ச திரியத் திருகிவிட்டா. சுக்குத்தண்ணி வச்சுக்குடுத்தா; இத்த சீலைய ஒரங்கிழிச்சு ஊத்த ஒடம்பத் தொடச்சுவிட்டா.

கோரப்பாய ஒதறிவிரிச்சா; தலகாணி போட்டா; கட்டையனப் படுக்கவச்சா.

செத்தவடத்துல அழுதகண்ணோட ஒறங்கிப் போனான் கட்டையன்.

அடிச்சட்டியில தானியம் ஏதாச்சும் கெடக்குமான்னு அடுக்குப் பானைகள அவ ஒண்ணொண்ணா எறக்கிக் கவுத்துக் கவுத்துப் பாத்தா ஒரு குண்டுமணித் தானியம்கூட இல்ல. கஞ்சியில்லாமக் கெடக்கிறவனுக்குக் களிக்கிண்டியாச்சும் போடணுமே! பளிச்சின்னு கண்ணுல ஒரு பொறிதட்டுச்சு கருவாச்சிக்கு. கட்டையன் தலையத் தூக்கிப் பழையசீலயச் சுருட்டி அணவு குடுத்துக்கிட்டே, தலகாணிய உருவுனா. தலகாணிய அருவாமணைய வச்சுக் கரகரகரன்னு அறுத்தா. உள்ள அடைச்சுவச்சிருந்த கேப்பம்பொட்டு முழுசையும் சட்டியில கொட்டிப் பொடச்சுப் பொடச்சு முக்காப்படி கேப்பை எடுத்துப்புட்டா. அதைத் திருகையில போட்டுத் திரிக்கப் போறப்ப...

குடிசைக் கூரைமேல படபடபடன்னு என்னமோ சத்தம் கேட்டுச்சு.

''யாத்தே மழையா! ஏழு வருசத்துக்கப்பறம் மழையா? ''

ஒரு தூத்த ரெண்டு தூத்தலா விழுந்த மழை இப்ப லேசா ஒறைக்க ஆரம்பிச்சிருச்சு.

படலத் தொறந்து வெளிய வந்துபாத்தா - 'சடசடசட'ன்னு சவட்டுது மழை.

கைய வெளிய நீட்டுனா. 'பிசு பிசு பிசு'ன்னு பசை ஒட்டியிருந்த கையக் கழுவுனா மழையில.

ஒத்தமழை அவ நெத்தியில விழுந்ததுல உசுர்குளுந்து போனா.

ஓட்ட ஓட்டமா ஓடிச் சட்டிபானையெல்லாம் தூக்கி வெட்ட வெளியில வச்சா.

வந்திருச்சே! வராத மழை வந்திருச்சே!

தப்பியும் வரலாம்; தள்ளியும் வரலாம். ஆனா - எப்பவும் மழை இல்லேன்னு போயிராது.

□□□

padippakam

தமிழில் சிலப்பதிகாரமும்
மணிமேகலையும்
இரட்டைக் காப்பியங்கள் என்று
இலக்கிய வரலாறு பேசுகிறது.

‘கள்ளிக்காட்டு இதிகாசம்’
‘கருவாச்சி காவியம்’
இரண்டும் என்னளவில்
இரட்டைக்காப்பியங்கள்
என்றுதான் என் இதயம்
வலித்துக்கொண்டே நினைக்கின்றது.



படிப்பகம்